பதினெண் சித்தர்

அருளிய

ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம்

(ஆத்மரட்சாமிர்த வயித்திய சாரசங்கிரகம்)

(பாகம் - 1)

ஆசிரியர் :
சித்த மருத்தவ மேதை
திரு. **வே. கந்தசாமி முதலியார்** அவர்கள்

வெளியீடு
சித்த மருத்துவநூல் வெளியீட்டுப் பிரிவு
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை
சென்னை - 600 106.

2011

பதினெண் சித்தர்

அருளிய

ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம்

(ஆத்மரட்சாமிர்த வயித்திய சாரசங்கிரகம்)

(பாகம் - 1)

ஆசிரியர்:

சித்த மருத்துவ மேதை

வே. கந்தசாமி முதலியார் அவர்கள்

வெளியீடு

சித்த மருத்துவநூல் வெளியீட்டுப் பிரிவு

இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை

சென்னை-600 106

201(

பதிப்புத் தகவல்

- நூல் பெயர் : ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம் (பாகம்-1)
- ஆசிரியர் : வே. கந்தசாமி முதலியார்
- பொருள் : சித்த மருத்துவ முறைகள்

- பதிப்பு : சித்த மருத்துவநூல் வெளியீட்டுப் பிரிவு,
  இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
  சென்னை - 600 106.
- பதிப்புரிமை : தமிழ்நாட்டரசு

- பதிப்பு : முதல் பதிப்பு 1905
  இரண்டாம் பதிப்பு 1975
  மூன்றாம் பதிப்பு 201(

- பக்கங்கள் : XLVIII + 404 = 452
- படிகள் : 1000
- தாள் : டி.என்.பி.எல். கிரீம்வோவ்
- தாள் அளவு : டெமி 1 × 8
- அச்சுப்புள்ளி : 11 புள்ளி
- கட்டமைப்பு : அட்டை பைண்டிங்

- விலை : ரூ.

அச்சிட்டோர் : வெங்கடேஸ்வரா எண்டர்பிரைசஸ்,
3/13, பிளாகர்ஸ் ரோடு, அண்ணா சலை
சென்னை-600 002.
தொலைபேசி: 2851 4648

இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை

சென்னை - 600 106.

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

நூலாக்கப் பணிக்குழு

ஆய்வு மருத்துவ அலுவலர் (பொ)

மரு. சி. இராமலட்சுமி அம்மாள், பி.ஐ.எம்.,

பதிப்பாசிரியர்கள்

திரு. த. அழகப்பராசு, M.A., M.A., M.L.I.S., M.Phil., B.Ed.,

சிறப்பு அலுவலர் - மொழிபெயர்ப்பு (பொ)

திருமதி. செ.இரா. பிரசன்னா, M.A., M.Phil., B.Ed.,

தமிழ்ப்புலவர்

சுவடி நகலெடுப்போர்

திரு. தி. சுபாஷ் சந்திரபோஸ்

திரு. வெ. சாரங்கபாணி

திருமதி. த. லெட்சுமி

திருமதி. நா. பாக்கியசுந்தரி, B.A.,

பதிப்புரை

'ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம்' எனும் இந்நூல் மூன்றாம் பதிப்பு கண்டு தற்போது உங்கள் கைகளில் தவழ்கிறது. பதினெண் சித்தர்கள் கூறிய மருத்துவச் செய்திகளைத் தொகுத்து மரு.வே. கந்தசாமி முதலியார் அவர்கள் எழுதிய 'ஆத்ம ரட்சாமிர்த வயித்த சாரசங்கிரகம்' எனும் நூல் 'ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம்' எனும் பெயரில் 1905ஆம் ஆண்டு வெளியானது. அதுவே, இந்நூலின் முதல் அச்சுப் பதிப்பாகும்.

70 ஆண்டுகள் சென்றபின் 1975ஆம் அண்டு அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழுவினரால் இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது.

தற்போதைய மூன்றாம் பதிப்பான இந்நூல் நமது துறையின் சார்பில் பதிப்பித்து வெளியிடப்படுகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். முந்தைய இரண்டு பதிப்புகளில் ஒரே நூலாகப் பதிப்பு கண்ட இந்நூல், தற்போது பாகம்-1, பாகம்-2 என இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் நமது **இந்திய அரசின் ஆயுஷ் துறையின் நிதியுதவி பெற்று வெளியிடப்பட்டுள்ளது.**

சித்த மருத்துவ முன்னோடிகளான பதினெண் சித்தர்கள் சொல்லிச் சென்ற பாடல்கள் இந்நூலில் தொகுத்து வரைமுறைப்படுத்தப்பட்டு படிப்பவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும்வண்ணம் சிறுசிறு தலைப்புகளின்கீழ் தரப்பட்டுள்ளது. அரிதின் முயன்று தொகுத்த இந்நூல், மாணவர்கள், மருத்துவர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினருக்கும் பயன்படும் வகையில் உள்ளது. இந்நூலைச் சிறப்பாகத் தொகுத்தளித்த மருத்துவ மேதை வே. கந்தசாமி முதலியார் அவர்கள் பாராட்டுதலுக்குரியவர். பொதுமக்களும் மாணவர்களும் இந்நூலைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்வர் என்பது எங்களது நம்பிக்கை.

நூலாக்கப் பணிக்கு உதவிய அனைவருக்கும் எங்களது பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகட்டும்.

பதிப்பாசிரியர்கள்

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
பேராசிரியர் க. அன்பழகன், எம்.ஏ. அவர்கள்
அளித்த

இரண்டாம் பதிப்பின் அணிந்துரை

முன்தோன்றிய மூவா-முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த- சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்துவிடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென்மாநிலங்களான திராவிடத்திலும் சித்தமருத்துவம் இன்றும் பலரால்- வழிவழியாகவும் கற்றறிந்தும்- கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலை பெறுவதற்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்- இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்- மருத்துவமுறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலை நிறுத்தப்பட்டாகவேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு -ஓலைச் சுவடிகளாகவும்- ஒரு காலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்தமருத்துவ நூல்கள் - உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளிவந்தால்தான், இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும், இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன்பெற இயலும். மருந்து செய்முறைகளை

ஒப்புநோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காதவிடத்து மாற்று மூலப்பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடுகொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவிவேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும்– அதன் முன்னாள் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும் இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்து செயல்படுத்தலாயினர்.

இக்குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்– பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணிபுரியும் – இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு.மு. வேணு கோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுதலுக்குரியனவாகும்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும் அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியனவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப் பெற்று, முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையில் 17–வது நூலாகப் பதினெண்சித்தர் அருளிய ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம் வெளிவருகிறது.

இன்று கிட்டாத பதிப்பாக உள்ள இந்நூல் வெளிவருவது மிகுந்த பயன்தரவல்லதாகும்.

இந்நூலைத் தொகுத்தருளியவர், போற்றுதலுக்குரிய சித்த மருத்துவமேதை வே. கந்தசாமி முதலியார் என்பவராவர்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள் – இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு– ஒளி காண்பதற்கு வழிகண்ட வல்லுநர்களில் சித்த மருத்துவமேதை வே. கந்தசாமி முதலியார் ஒருவராவார்.

மிகக் கொடியநோய்களையும், அறந்தீர்க்கும் பற்பம் செந் தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பது போல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கின்றார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது:

> "அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கிலமுறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது. ஆனால், நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய் களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத்தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை" என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும், உத்தமமானதெனவும், அதிகம் வாய்மையானதெனவும், சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழு மனத்தோடு ஏற்றுக்கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீனக் கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்திக் காண்பிக்கும்

வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்கவேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு– இந்த அரிய நூலைப் பதிப்பித்து வழங்கிச்சென்ற சித்த மருத்துவ மேதை வே. கந்தசாமி முதலியார் அவர்களின் தொண்டு.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்னும் குறள் பெரியோருக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு, மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர் தம் முயற்சி வளர வாழ்த்துகிறேன்.

சென்னை
20-3-1975

க. அன்பழகன்

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; அது போல் தமிழ் மருத்துவமுறையும் அத்தகைத்தே. இம்மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருத்துவத்திற்கு சித்த மருத்துவமென்ற பெயர் அமையலாயிற்று. அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மை களையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும், உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின் நிலநடுக்கம், கடற்கோள் போன்ற சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவை களில், சில மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப் பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும், எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம்மருத்துவக்கலையைத் தொன்றுதொட்டுக் கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை தனித் தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிகாலத்தில் சித்த, ஆயுர்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவமும் செய்முறையும், பிணித்தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில், வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக் கட்சிச் சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர், 1924-ல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்துப் பல கிராம மருத்துவமனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினார். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத் திட்டப்படி கற்பிக்கப் போதிய பாடப் புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக் குறையை ஓர்ந்து பாடப்புத்தக ஆக்கக் குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத் துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட் வைத்திய ரத்னம்– மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க.ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும் குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சுநூல், பாலவாகடம் என்ற நூல்களைப் பார்வையிட்டும் உதவினார். அக்குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து, ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம.ர. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950-ல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்துவந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப்பெற்றன.

அக்கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங் கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூடப் பாடநூல்களும் துணைநூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும் கையேடுகளையும் ஒரு முறை அச்சாகிப் பின் விற்பனைக்குக்

கிட்டாத புத்தகங்களைச் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopiea committee 1966 G.O. MS 2163 Dt. 23-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக்கல்வி மற்றும் பாடநூற் குழு என்று (G.O.MS.No.1060 health Dt. 13-6-1966) ஒரு குழுவும் திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுசுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும், விரைவில் பயன்காண வேண்டி 1973ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்துச் சித்தமருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு என்னும் ஒரு குழுவைத் (G.O.MS No. 2571 of 23-10-1973) தோற்றுவித்தார்கள். அக்குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சுயேற்றி வெளியிடல்; ஒரு முறை அச்சில் வெளிவந்து விற்பனைக்கு கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப்பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர், இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் படிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர், தாம்மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவருக்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சுயேற்றத் தக்கவகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து

வெகுவிரைவில் வெளியிட, மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் தற்போது 17–வது நூலாகப் பதினெண் சித்தர் அருளிய 'ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம்' என்னும் இந்நூல் இடம் பெறுகின்றது.

ஆகவே, "ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம்" என்னும் நூலின் முன் பதிப்பிலிருந்து தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி, பழைய எடுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து வெளியிடப்படுகிறது. இந்த நூலின்கண் உள்ள மருத்துவ முறைகளைக் கற்ற மருந்துழைச் செல்வர்க்கு மிக நன்றாக விளங்கும். அவ்வந் நூல்களின் பழைய முகவுரைகள் வாயிலாக அவற்றின் மேன்மை தெரிய வரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப்பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு க. அன்பழகன் எம்.ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற டாக்டர் ஜி.டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற டி.வி. சாம்பசிவம்

பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதி யின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்தமருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் உயர்திரு பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகளுக்கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்குகொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப் பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்கு தடை யின்றி நூல்கள் வெளிவர மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுமத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்துவரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரி அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்தவரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத்தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் இக் குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெறவேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத் துறை இயக்குநர்

டாக்டர் பு.மு. வேணுகோபால், எச்.பி., ஐ.எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடக்க விலையில் அச்சடிக்கும் தாள்கள் திருவாளர்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து மிக விரைவில் கிடைக்கும்படிச் செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளது.

மற்றும், இந்நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப் படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக்குழுவுக்குத் துணைபுரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன், எல்.ஐ.எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் புலவர்கள் மு. சௌரி ராஜன், வி.செ. விநாயகம், வை. முரு. முத்துக்குமாரசாமி ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூலைக் கொடுத்துதவிய சித்த மருத்துவர் திரு. சிவப்பிரகாசம், சென்னை– 12 அவர் களுக்கு இக்குழுவினர் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

இந்நூலைக் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய மேகலா அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூலில் காணும் குற்றங்கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந்நூலை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.,
தலைவர்,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை– 600 029.

முதற்பதிப்பின் முகவுரை

மாட்சிமை தங்கிய சிநேகிதர்களே! இவ்வுலகத்தின் கண் மகா மகத்துவம் பொருந்திய பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய மூன்று இலட்சம் கிரந்தங்களில் வைத்திய கிரந்தங்கள் இரண்டு இலட்சமென்றும், வாதக் கிரந்தங்கள் ஒரு இலட்சமென்றும் முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்களல்லவா? அதில், வாதக் கிரந்தங்களை நீக்கி, வைத்திய கிரந்தங்களை மாத்திரம் தேர்ந்தெடுத்து, கைமுறை அட்டவணையாக இருந்ததையும் பற்பல மருத்துவநூல் கோவையிலிருந்து எடுத்தும் சில அச்சுப்பிரதிகளிலிருந்து பெயர்த்தெடுத்தும் இதனுடன் பிணி வகுப்புகளுக்குத் தொகுப்புடன் பாடல்களும், மத்திய பாகங்களும் பிணியாளர்களுக்கு நோயின் சாரமறிந்து செய்யும் மருத்துவவிதிகளும் சாத்திய அசாத்தியங்களும், நோய் பிறக்கும், வரன் முறைத் தொகுப்பும், பாலவாகடமும், கருப்பக்கோள் இலக்கணமும் அந்தந்த நோயின் குறிகுண இயல்புகளும் அவைகட்கு மருந்து கொடுக்கும் அளவுகளும், பாலக்கிரகதோட பரிகாரங்களும் இன்னும் பற்பல மருத்துவ விதிகளும், சுரவகுப்பு தொடங்கி நோய் வகுப்பு முடிவிலும் அந்தந்தப் பிணிகளுக்கு அட்டவணைப் படலமும், மருத்துவர் சகுனங்களும் நோயாளிக் குணமும், மருத்துவர் அணியும், ஆடையலங்கார பரிமளவருக்கத் திட்டமும் இதனுடன் சூரணம், இரசாயனம், இளகம், நெய்பாகம், நெய், கிருதம், எண்ணெய், கட்டுவகைகள், மெழுகு வகைகள், செந்தூரம், பற்பம், திராவகம், செயநீர்போக்கு, மாத்திரைகள், புகைகள், கபாடம், அஞ்சனம், தைலம், பிளாஸ்திரி, மணப்பாகு முதலிய மகா மகத்துவம் பொருந்திய பதினெண் சித்தர்கள் பாட்டும், சகலவித மருந்துகளுக்கும் வயது அளவுகளும், எந்தெந்த வயதுகளில் எந்தெந்த மருந்துகள் பயன்படுத்த வேண்டுமோ அந்தந்த வகைவிவரத் தொகுப்புகளும், மருந்து கொடுக்கக்கூடாத

நோய்க்குறிப்பும் மருத்துவருக்கு மருந்து வாங்கத் தொகுப்பும், கைபாகம், செய்பாகம், புடபாகம், எரிப்புப் பாகம் இவைகளின் நிர்ணயமும், நோயாளிக்குத் தலைமுழுக்குப் பரிகாரம், நித்திரைப் பரிகாரம், சையோகப் பரிகாரம் முதலியவை நடத்தும் முறைமையும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோய் களுக்கும் எளிதிலுணரும்படியான மணிக்கடை நூலும் நாடி நிதானத் தொகுப்புகளும், நீர்க்குறி, மலக்குறி என்ற எண்வித நோயறி முறையும் ஒன்றாய்த் திரட்டி இந்த ஆத்மரட்சாமிர்த வைத்திய சாரசங்கிரகம் என்னும் இயற்பெயர் அமைத்துப் பெரும்பாலும் வெளிப்படையாக்கி சித்த மருத்துவர்களும், பிரமுகர்களும், கற்றோரும், பிள்ளைகளைப் பெற்றோரும் மயங்காமல் எளிதில் உணரும்பொருட்டு "கற்கலந்துண் சோற்றிலும் கல்லாராய்ந்துண் கூழ் நன்மை" என்று சொல்லி இருப்பதால் சகல சமர்த்தவரும் கொலை மறுத்த புருடோத்தமரும் என்பேரில் கோபஞ் செய்யாமல் ஞானிகள் சொல்லிய நூற்களில் நாம் குற்றம் சொல்லக்கூடாதென மன்னிப்பதுவுமன்றி, சித்தமருத்துவர்கள் பெரும்பாலும் எழுத்துச் சொற்பொருள் பிறழ்ந்திருப்பினும் சிக்கறுத்து அடியேனை இகழாமலும் புகழாமலும் காரியா காரணத்தை மாத்திரம் தெரிந்துகொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு

வேதகிரி முதலியார் குமாரன்

சித்த மருத்துவ மேதை

வே. கந்தசாமி முதலியார்

பொருளடக்கம்

		பக்கம்
அக்கரம்புழு வெட்டிற்கு மருந்து	...	238
அச்சரத்தின் பொது இயல்பு	...	183
அச்சரநோய் வகுப்பு	...	181
அச்சரமாந்த நோயின் இயல்பு	...	115
அசாத்திய அதிசாரத்தின் இயல்பு	...	375
அசாத்தியக் காய்ச்சலுக்கு மருந்து	...	298
அடித்தள்ளினதற்கு மருந்து	...	141
அதிசாரக் காய்ச்சலுக்குக் குளிகை	...	298
அதிசாரத் தோடத்தின் இயல்பு	...	374
அதிசார நோய்ப் படலம்	...	374
அந்தகக் கணத்தின் இயல்பு	...	130
அந்தகக் (குருடு) கண்ணிற்கு மருந்து	...	239
அந்தகன் சன்னியின் இயல்பு	...	319
அந்திப்புள் தோட இயல்பு	...	98
அபானநோய் மேற்படி முளைக்கு மருந்து	...	368
அபான வேருக்கும் அபானக் கடுப்புக்கும் மருந்து	...	367
அபானன், வியானன், உதானன், சமானன் வாயுக்கள்	...	15
அபினியாசச் சன்னியின் இயல்பு	...	322
அம்மை நோய் அதிகப்படாதிருக்க மருத்துவம்	...	201
அமரம், பிரிதல் கண்ணிற்கு மருந்து	...	239
அமிர்த சஞ்சீவி இலிங்கக் குழம்பு	...	197
அமிர்த முண்டும் சாதல்	...	42
அரிகரப்பன் இயல்பு	...	150
அருத்த நாரீசுவரம்	...	315
அலகை மலட்டு இயல்பு	...	58
அழி கண்ணிற்கு மருந்து	...	233

அறைவீட்டில் குழந்தைக்குக் கழுத்து வீங்கி முழங்கால், முழங்கை குளிர்ந்து, வயிற்று வலி காணலுக்கு மருந்து ... 93
அனைத்துத் தோடங்களுக்கும் பொது மருந்து ... 100
அனைத்துத் தோடமும் தீர்க்கும் மூலமந்திரம் ... 101
அன்னகோபமென்னும் அனல் கோபத்தின் இயல்பு ... 214
அன்னபானாதி சுரத்தின் இயல்பு ... 161

ஆ

ஆசனக் கடுப்புக்கு மருந்து ... 395
ஆடவர்க்கு நாடி நடக்கும் விதம் ... 32
ஆணிப்பூவுக்கு மருத்துவம் ... 230
ஆமக்கடுப்புக்கு மருந்து ... 141
ஆமக் கணத்தின் இயல்பு (இதுவே சீதகணம்) ... 131
ஆமக் கழிச்சலின் இயல்பு ... 179
ஆம சன்னியின் இயல்பு ... 171
ஆம சுரத்தின் இயல்பு ... 159
ஆம சுரம், மாறல் சுரத்திற்கு மருந்து ... 166
ஆறாத வைசூரிப் புண்ணுக்கு மருந்து ... 206
ஆறு திங்களிலும் உடனேயும் சாகுங்குறி ... 41

இ

இந்நான்கு வகைகளும் அறியாமல் மருத்துவம் செய்பவர்களுக்கு நரகம் வரும் ... 3
இமைத்துடிப்புக்குக் களிம்பு ... 235
இரண்டாம் முறை, மூன்றாம் முறை, குளிர்ச்சுரம் முதலான சகல சுரத்திற்கும் கண் மை அஞ்சனம் ... 317
இரத்த அபானத்திற்கும் அபான வேர்க்கும் எண்ணெய் ... 369
இரத்தக் கடுப்பு, அடிபுறப்பட்டதற்கு மருந்து ... 140
இரத்தக் கடுப்புக்கு மருந்து ... 141
இரத்தக் கணத்தின் இயல்பு ... 143
இரத்தக் கண மூலத்திற்கு மருந்து ... 164
இரத்தக் கழிச்சலுக்கு மருந்து ... 179

இரத்தக்கிராணி, நீர்க்கிராணி, அடித்தள்ளல், மூலச்சூடு,
வயிறு இரைதல், வாயு, அன்னம் செரியாமை, பொருமல்,
நச்சு நீர் தொப்புள் சுற்றி வலித்தலுக்கு மருந்து ... 386
இரத்தக் கிராணியின் இயல்பு ... 384
இரத்தச் சூலை நோய் இயல்பு ... 69
இரத்த சுரத்தின் இயல்பு ... 160
இரத்தத்தைப் பற்றின சுரத்தின் இயல்பு ... 292
இரத்தப் பாய்ச்சலுக்கு மருந்து ... 227
இரத்தப் பீனச இயல்பு ... 268
இரத்தப் பீனசம், சிராய்ப் பீனசத்திற்குத்தைலம் ... 272
இரத்தம், சீதக்கடுப்பு, நீர்ச்சுளுக்கு மருந்து ... 140
இரத்தம், சீதக்கடுப்பு, பலவிதக் கழிச்சலுக்கு மருந்து ... 140
இரத்தமூலம், வறட்கண ஊது மாந்தத்திற்கு மருந்து ... 141
இரவில் காணும் சுரத்திற்கு மருந்து ... 295
இருண்ட விழிக்கு மருந்து ... 226
இழிகண்ணுக்கும், புழுவெட்டுக்கும் மருந்து ... 238
இளைப்பு, இருமல், சுழிகண வலிப்புக்கு மருந்து ... 192
இளைப்பு, இருமலுக்கு மருந்து ... 190
இறக்கும் நாள் அறிதல் ... 49
இறப்புக்குறி, இறவாக்குறி ... 42, 43
இறப்புக் குறிப்புகள் ... 43
இன்னின்னவர்க்குப் பிணி தீராதெனக்கூறுதல் ... 11
இன்னின்னவர்க்கு மருந்துவஞ் செய்யெனல் ... 11
இன்னின்னவனுக்கு மருந்து பலிக்காதென விளம்பல் ... 10
இனிப்புள்ள சுகக் கழிச்சல் குழம்பு ... 198

உ

உட்காய்ச்சல், கால் எரிவிற்குத் தைலம் ... 306
உட்காய்ச்சலின் இயல்பு ... 159
உட்குத்து நோயின் இயல்பு ... 337
உட்குத்து, புறவீச்சு, அடைப்பு, இருமல்,
இளைப்புக்கு மருந்து ... 338
உட்குத்து, புறவீச்சு, உடல்புகுந்து உடம்பு கடுப்புக்கும்
சர்வாங்க வாதத்திற்கு மருந்து ... 336

உட்குத்து, புறவீச்சு, காக்கைவலிப்பு, குமரக கண்டம், முயல்கண்டம், குதிரைவலிப்பு முதலான வலிப்புகளுக்கும் சன்னிகட்கும் தைலம் ... 350-351
உட்சுரத்தின் இயல்பு ... 290
உட்டிணைக் காய்ச்சலுக்குச் சீரக மாத்திரை ... 312
உட்புற வீச்சுக்கு மருந்து மேல் பூச்சுத் தைலம் ... 337
உடம்பு நோய், காய்ச்சலின் இயல்பு ... 158
உடல் அமைப்பு விவரம் ... 23
உடல் உள்ளூறுப்பு எரிவு, பித்தத்திற்குத் தைலம் ... 264
உடலின் வண்ணத்தாலும் தொட்டுணர்வதலாலும் நோய்வருங் குறியறிதல் ... 17
உண்ணாக்கு வளர்ந்தது சுருங்க மருந்து ... 192
உப்புதிரி அம்மையின் இயல்பு ... 200
உருத்திராங்கச் சன்னியின் இயல்பு ... 323
உலகில் நோயாளிகள் நடந்து கொள்ளுந்தன்மை ... 6
உள் அச்சரத்தின் இயல்பு ... 183
உள் அபானம், இரத்த அபானம் நிணக் கழிச்சலுக்கு மருந்து ... 367
உள் எருவாய்நோய், புற எருவாய் நோய்க்கு மருந்து (உள்புறமூலம்) ... 368
உள்எருவாய் நோயின் இயல்பு (உள்மூலம்) ... 353
உள்மூலம், புறமூலம், வெப்புப்பாவை முதலான நோய்களுக்குச் சூரணம் (கலப்புத் தூள்) ... 368
உள்மூலம், புறமூலம், விஷப்பாண்டு, காமாலை, வீக்கங்களுக்கு மருந்து ... 368
உளைமாந்த நோயின் இயல்பு ... 114
உளைவு நேரத்தின் இயல்பு ... 224

ஊ

ஊது கரப்பன் இயல்பு ... 150
ஊது காமாலை நோயின் இயல்பு ... 184
ஊது மாந்த கணத்தின் இயல்பு ... 124
ஊது மாந்த கணத்தின் இயல்பு (வேறு) ... 125
ஊது மாந்த நோயின் இயல்பு ... 106

எ

எட்சி தோட இயல்பு ... 96
எண்ணெய் தொங்கலுக்கு மருந்து ... 194
எரிகணத்தின் இயல்பு ... 131
எருவாய் நோய்ப் படலம் ... 353
எருவாய் நோய்வரும் (மூலம்) காரணம் ... 353
எருவாய் நோயின் விவரம் ... 353
எருவாய்ப் பாண்டு மந்தாக்கினிக்கு மருந்து ... 369
எருவாய் முளை நோய்க்கு மருந்து (மூலமுளை) ... 358
எலும்பைப் பற்றின காய்ச்சலின் இயல்பு ... 292
என்பு (அஸ்தி) சுரத்தின் இயல்பு ... 161

ஒ

ஒட்டுக் கண்ணின் இயல்பு ... 225
ஒரு தலைவலி, மண்டைவலி கபால வாய்வுக்குத்தைலம் ... 279
ஒரு நிமிடத்தில் நாடிநடக்கும் அளவு ... 28
ஒலியால் நோயறிதல் ... 17
ஒளி மயக்கம், வெளிமயக்கத்திற்கு மருந்து ... 234
ஒன்று விட்டொருநாள் வரும் மாறல் சுரத்திற்கு மருந்து ... 293

ஓ

ஓராண்டிலும், ஈராண்டிலும் சாகும் குறி ... 40

க

கக்கல் கழிச்சல் (வாந்திபேதி) மருந்து ... 178
கக்கல் விக்கலுக்கு மருந்து ... 187
கக்கலுக்கு மருந்து ... 187
கக்குவான் நோய்க்கு மருந்து ... 192
கக்குவானுக்கு வேறு பொது மருந்து ... 194
கட்டு மாந்த நோயின் இயல்பு ... 111
கடுகம்மையின் இயல்பு ... 199
கண் அமரத்திற்கு மருந்து ... 188
கண் கட்டிக்கு மருத்துவம் ... 226

கண்கள் 3, தலைகள் 4, முகங்கள் 5, கைகள் 6, சீரங்கள் 8, கால்கள் 10, இந்த ஆறுவிதக் குணங்களறியார் நோயாளிகளைக் கொல்வார் அதனால் நரகமடைவார். ... 3
கண்களால் நோயறிதல் ... 18
கண் கூச்சத்திற்கு மருந்து ... 235
கண்சிவப்பு, கடுப்பு, படலத்திற்கு மருந்து ... 235
கண்டகச் சன்னிக்கு, மாத்திரை ... 344
கண்டகுச்ச சன்னியின் இயல்பு ... 321
கண்ணில் சதை வளர்ச்சிக்கு மருந்து ... 246
கண்ணில் நீரேத்தத்திற்கு மருந்து ... 234
கண்ணில் நெருப்புப்பட்ட புண்ணுக்கு மருத்துவம் ... 238
கண்ணில் மருந்திட்டபின் நடக்க வேண்டிய ஒழுக்கமுறை... 255
கண்ணில் மருந்திடப் பொருந்தாக் காலம் ... 255
கண்ணுளைவு, கண் சுருங்கல், ஒட்டுக்கண், மலக்குக்கண் முதலான நோய்களுக்கு மாத்திரை ... 224
கண்ணெரிவிற்கு மருந்து ... 227
கண்ணோய்க்கு மருந்து ... 188
கண்ணோய், செவிநோய், தலை நோய்களுக்குத் தைலம்... 265
கண், தலை, கை, உடல், கால், பிண்டநிலை விவரங்கள்... 4
கண்நோய் உடையவர்களுக்குக் காலில் தேய்க்கத் தைலம்... 254
கண்நோய் உடையவர்களுக்குத் தலைக்குப் பற்றிட குங்குமப்பூத் தைலம் ... 254
கண்நோய்களுக்கு இளநீர்க் குழம்பு ... 250
கண் நோய்களுக்குத் தைலம் ... 256
கண் நோய்களுக்குப் பொடி ... 248
கண் நோய்களுக்கு மாத்திரை ... 246
கண் நோய்களுக்கு மை ... 250
கண் நோய்களுக்கு விழியில் கட்டநெய் ... 252
கண் நோய் தொண்ணூற்றாறுக்குத் தைலம் ... 266
கண் நோய்கள் தோன்றும் இடம் ... 210
கண் நோய் வருவதற்குக் காரணம் ... 210
கண் பிரிதல், புழுவெட்டு, பூவிற்கு மருத்துவம் ... 238
கண் புண்ணுக்கு மருந்து ... 233
கண் புழுவெட்டுப் புண்ணுக்கு மருந்து ... 228

கண் பூவுக்கு மருந்து ... 229
கண் மந்தம், நீர்ப்பாய்ச்சல்,
மங்கல பித்தத்திற்கு மருத்துவம் ... 225
கண் மந்தம், பித்தம், நீர்ப்பாய்ச்சலுக்கு மருந்து ... 218
கண் மயக்கத்துக்கு மருந்து ... 215
கண் மருத்துவப் படலம் ... 209
கண் வலிக்கு மருத்துவம் ... 237
கண்வலி, சிவப்பு, கடுப்பு, தினவு, நீர்வடிதலுக்கு மருந்து ... 242
கண்வலி, மணிவளர், ஆணிக்கு மருந்து ... 236
கண்வலி, கடுப்பு நேத்திர வாயுவிற்கு மருந்து ... 244
கண இருமல், வாய் நாற்றத்திற்கு மருந்து ... 138
கணக் கடுப்புக்கு மருந்து ... 139
கணக் கழிச்சலின் இயல்பு ... 178
கணக் காய்ச்சல் மயக்கத்திற்கு மருந்து ... 165
கணக் காய்ச்சல், மாறல் சுரத்திற்கு மருந்து ... 165
கணக் காய்ச்சலின் இயல்பு ... 157
கணக் காய்ச்சலுக்குக் குடிநீர் ... 168
கணக் காய்ச்சலுக்கு மருந்து ... 164
கணங்களுக்குப் பொது மருந்து ... 134
கணச் சூடு தணிய மருந்து ... 138
கணசுரம், தோடம், வயிற்றுக் கழிச்சல், பித்தம்
இருமல், வாந்திக்கு மருந்து ... 164
கணத்தினால் இரத்தம் விழுதலுக்கு மருந்து ... 138
கணப்பாண்டு, கணசுரம், என்புவெட்டை, இருமல்,
இரத்த வெட்டை இவைகட்கு மருந்து ... 165
கணமாந்த நோயின் இயல்பு ... 122
கணமாந்தம், வயிற்றுளைவு, பொருமலுக்குப்
பால சஞ்சீவி மாத்திரை ... 139
கண வகுப்பு ... 120
கணையத்தி, கழிச்சல், இருமல்பிணி,
தாகம், வறட்சிக்கு மருந்து 193
கபநோய் நரக்கு, சன்னிநோய் நாக்கு, தொந்தநோய் நாக்கு... 19
கபவாத பித்த நாடிப் பகுப்பால் பிணிகளைக் குறித்தறிதல்... 8
கபாலக் கரப்பனுக்குத் தைலம் ... 155
கபால சன்னியின் இயல்பு ... 334

கபால வலி, கபால சன்னி, கண் நோய்களுக்குச்
சம்பீரத் தைலம் ... 265
கபாலவலி, சூலை, பீனசம், நேத்திர நீர்க்கடுப்பு,
மேகச் சூட்டுக்குத் தைலம் ... 275
கபாலவலி, பீனசத்திற்குத் தைலம் ... 275
கபாலி அச்சரத்தின் இயல்பு ... 182
கயவர்களுக்கு இம்மூன்றுஞ் சொல்லக்கூடாதெனல் ... 2
கரப்பன் வகுப்பு ... 145
கரப்பனுக்கு எண்ணெய் ... 155
கரப்பனுக்கு மேற்பூச்சுத்தைலம் ... 156
கருக்குழியில் இரத்தம் மூடிய ஐந்தாம் நோயின் குணமும்
அதற்கு மருந்தும் விளம்பல் ... 55
கருக்குழியில் தசை வளர்ந்த மூன்றாம் நோயின் குணமும்
அதற்கு மருந்தும் விளம்பல் ... 54
கருக்குழியில் புழு சேர்ந்த நான்காம் நோயின் குணமும்
அதற்கு மருந்தும் விளம்பல் ... 55
கருக்குழியில், வாயுவினாலாகிய இரண்டாம் நோயின் குணமும்
அதற்கு மருந்தும் விளம்பல் ... 54
கருக்குழியின் ஆறுவகை நோய் கூறுதல் ... 52
கருக்குழியில் நோய்க்கு அல்குலில் பூசு மருந்தும்
கருக்குழி மதத்திருக்கும் ஆறாம் நோயின்
குணமும் கூறல் ... 56
கருக்குழி விளக்கமற்று பாசி பற்றிய
முதல் நோயின் குணமும்
அதற்கு அவிழ்தமும் சாற்றுதல் ... 53
கருக்கோள் இலக்கணப் படலம் ... 52
கருங்கரப்பன் இயல்பு ... 148
கருங்கு கண்ணின் இயல்பு ... 225
கருநியாச் சன்னியின் இயல்பு ... 327
கருப்பக் காலத்தில் காணும் காய்ச்சலுக்கு மருந்து ... 299
கருப்பம் சிதைந்த தோட இயல்பு அல்லது
கருச்சிதைவு கண்ட
பெண்ணால் ஏற்பட்ட தோட இயல்பு ... 99

கருப்பைக் கிரந்திக்கு மருந்து ...82,84
கருப்பைக் கிருமிகட்குப் பொது மருந்து ... 61
கருப்பைச் சூலை இயல்பு ...67,68
கருப்பை நோய்களுக்குப் பொது மருந்து ... 74
கருப்பைப் புழுக்குணம் (வேறு) ... 61
கருப்பை விப்புருதி இயல்பு ... 70
கரும்பனிச்சை அம்மையின் இயல்பு ... 200
கரு வளர்க்கும் எண்ணெய் ... 81
கருவுற்ற காலத்தில் வரும் சுரத்திற்கு மருந்து ... 85
கருவுற்றவர்களுக்குக் காணும் நீர்ச்சுருக்கு
நீர்ப்பிணைப்பிற்கு மருந்து ... 85
கல்லுதிரி அம்மையின் இயல்பு ... 199
கலப்புற்ற நாடி தொந்திப்பு ... 36
கழிச்சல், இருமல், வாந்திக்கு மருந்து ... 178
கழிச்சல் இருமலுக்கு மருந்து ... 178
கழிச்சல் சுரத்திற்கு அபின் மாத்திரை ... 389
கழிச்சல் சுரத்திற்கு மருந்து ... 177
கழிச்சல் சுரம், காய்ச்சல், இரைப்பு, கக்கல், சுரதாபம்,
விக்கல், தாபத்திற்கு மருந்து ... 168
கழிச்சல் தோடத்திற்கு மருந்து ...165,176
கழிச்சல் நோய் வகுப்பு ... 175
கழிச்சல் வகுப்பு பூபதி மாத்திரை ... 197
கழிச்சலுக்கு மருந்து ... 176,389

கா

காக்கை வலிப்பு, முயல் வலிப்பு, குமரகண்ட வலிப்பு, முகவாத
சன்னி, சன்னிதோடம், உட்குத்து, புறவீச்சு வாதம், வாயு,
பாரிசவாயு பக்கவாதம், இளம்பிள்ளைவாதம், அண்டவாதம்,
மண்டைகுத்து வடி, பீனசத்திற்கு மருந்து ... 351
காக்கை வலிப்புக்கு மருந்து ... 174

காக்கை வலிப்பு நோயின் இயல்பு ... 347
காதில் ஈ புகுந்தால் பரிகாரம் ... 189
காந்தாரி, அத்தி, சிங்குவை,
அலம்புடை புருடன், குருநாடிகள் ... 16
காய்ச்சல், பெருங்கழிச்சல் சுரத்திற்குமருந்து ... 166
காய்ச்சல் முதலியவற்றிற்கு ஏலாதிமாத்திரை ... 312
காய்ச்சலுக்கு ஆகாத உணவுப் பண்டங்கள் ... 169
காய்ச்சலுக்கு இரச கற்பூர மாத்திரை ... 313
காய்ச்சலுக்கு இரச பற்ப மாத்திரை ... 314
காய்ச்சலுக்கு இலிங்க மாத்திரை ... 314
காய்ச்சலுக்கு சஞ்சீவி மாத்திரை ... 313
காய்ச்சலுக்குக் குங்குமக் குளிகை ... 313
காய்ச்சலுக்குக்கொடுக்கும் கழிச்சல் மருந்து ... 296
காய்ச்சலுக்குக் கோரோசனைக் குளிகை ... 313
காய்ச்சலுக்கு நசியம் (மூக்குறிஞ்சல்) ... 312
காற்கடுவன், மண்டைக் கடுவனுக்கு மருந்து ... 154

கி

கிரந்தி 18க்கும், சூலை 18க்கும் மருந்து ... 93
கிரந்திப்புண், செவ்வாப்புக்கு மருந்து ... 83
கிராணிக் கடுப்புக்கு மருந்து ... 140
கிராணிக்கழிச்சல், அபானக்கடுப்பு, எரிப்பு, இளைப்பு,
ஈளை, தாகம், பிரமியம், எலும்புருக்கி, உள்ளுருக்கி
இவைகளுக்கு மருந்து ... 387
கிராணி நோய்ப்படலம் ... 378
கிராணியின் பேரில் காணும்
பாண்டு, விடபாக வீக்கத்திற்கு மருந்து ... 384

கு

குடிலை, சூக்குமவாயு சன்னிபாதம், சங்கினி, காந்தாரி
ஆகிய நாடிகளின் நடைகளறிய ... 21
குண்டியச்சரத்தின் இயல்பு ...182, 183
குதிரை வலிப்பின் இயல்பு ... 348
குந்தத்திற்கு மருந்து ... 231
குந்தம் அமரத்திற்கு மருந்து ... 232

குந்தம் பூவிற்கு மருந்து ... 232
குமரகண்ட வலிப்பின் இயல்பு ... 349
குமரி அச்சரத்தின் இயல்பு ... 182
குமரி காசத்தின் இயல்பு ... 212
குருதி எருவாய் (இரத்தமூலம்) நோய் இயல்பு ... 356
குருநாடி இருக்குமிடம் ... 33
குருநாடியின் இயல்பு ... 34
குழந்தைகட்கு மேலில் வெள்ளைக்கொப்பளம் வெடித்தலுக்கு மருந்து ... 193
குழந்தைகளின் விதை வாதத்திற்கு மருந்து ... 194
குழந்தைகளுக்கு வரும் நோயின் விவரமும் அதற்கு மருந்துகளும் சாற்றுதல் ... 91
குழந்தைகளுக்குக் காணும் வாயு, குமர கண்ட வலிப்புக்கு எண்ணெய் ... 352
குழந்தையின் சிறுநீர்க் கட்டுக்கு மருந்து ... 93
குழந்தை வயிற்றுவலிக்கு மலங்கட்டலுக்கு மருந்து ... 93
குழிதோட இயல்பு ... 99
குளிர்க் காய்ச்சலுக்கு மருந்து ... 169
குளிர் சுரத்திற்கு மருந்து ... 165

கூ

கூர்மன், நாகன், கிருகரன் தேவதத்தன் தனஞ்செயன் வாயுக்கள் ... 15

கெ

கெந்தாளி நோயின் இயல்பு ... 190

கை

கைவிடுங் குறி முதலியன ... 42

கொ

கொதிப்புக் கணத்தின் இயல்பு ... 130
கொம்மட்டி பட்டகண் வேதனைக்கும் கோரை பட்டதற்கும் மருந்து ... 227
கொள்ளம்மையின் இயல்பு ... 199
கொள்ளிக் கரப்பனுக்கு குடித்தைலம் ... 156

கோ

கோர சன்னியின் இயல்பு ... 171

ச

சகல எருவாய் நோய்க்கும் பொதுமருந்து (மூலம்) ... 362
சகலகணம் பிரளிக்குச் சஞ்சீவி எண்ணெய் ... 145
சகல கரப்பன், சிரங்கு முதலியவற்றிற்கு
மேல் பூச்சுத் தைலம் ... 153
சகல கழிச்சலுக்கும் காந்த செந்தூரம் ... 390
சகல கழிச்சலுக்கும் மருந்து ...181, 388
சகல காய்ச்சலுக்கும் பச்சைக்கற்பூர மாத்திரை ... 169
சகல காய்ச்சலுக்கு மாத்திரை ... 169
சகலக்கிராணி, அதிசாரம், வயிற்று இரைச்சல்,
கழிச்சல், சீதம், இரத்தம் விழுதல், மூலக்கடுப்பு,
வயிற்றுக் கடுப்புக்கு மருந்து ... 395
சகலக்கிராணி, கழிச்சல், வயிற்றுக்கடுப்பு,
உணவு செரியாமை, பித்தம், நீர்ச்சுருக்கு,
பிரமேகத்திற்கும் மருந்து ... 387
சகல சன்னிக்கு பொது மருந்து ... 331
சகல சன்னி சுரம், தோடம், வலிப்பு, இளைப்பு,
பூபதி மாத்திரை ... 346
சகல சுரத்திற்கும் கண் குளிர்ச்சிக்கும் நெய் ... 305
சகல சுரத்திற்கும் பொது மருந்து ... 303
சகல பழஞ்சுரத்திற்கும் நெய் ... 304
சகல மாந்த சன்னிக்கு மருந்து ... 172
சகல முறைச் சுரத்திற்கும் மருந்து ... 293
சங்கிராணியின் இயல்பு ... 333
சங்கினி நாடி விடயம் ஐந்தின் பெயர்கள் ... 16
சண்பகப்பூ மாத்திரை ... 198
சத்திக்காய்ச்சல், நடுக்கல் தனத்திற்கும் மருந்து ... 296
சந்தி சன்னியின் இயல்பு ... 331
சலக்கழிச்சலுக்கு மருந்து ... 389
சலகும்ப நோயின் இயல்பு ... 218
சளி இருமல், கக்கல், காய்ச்சல், நச்சு சுரம், விக்கல், வலிப்பு,
சன்னிதோடம், வயிற்றுப் பொருமலுக்கு மருந்து ... 175

சளி, காய்ச்சல், மந்தத்திற்கு மருந்து ... 296
சன்னிக்குப் புகை ... 343
சன்னி சுரத்திற்கு மதுராதித்தத் தைலம் ... 341
சன்னி சுரத்திற்கு மருந்து ... 302
சன்னி சுரதோடத்திற்கு இரச செந்தூரம் ... 346
சன்னி சுரம் கபத்திற்கு மருந்து ... 173
சன்னி தலை வலிக்குப் புகை ... 343
சன்னி தோட சுரத்திற்கு மருந்து ... 302
சன்னி தோடம் வாதத்திற்கும் குடிநீர் ... 336
சன்னி நோய்கட்கு கண்ணிலிடும் மருந்துகள் ... 341
சன்னி நோய்ப்படலம் ... 319
சன்னி பதின் மூன்றுக்கும், புறவீச்சு உட்குத்துக்கும்
இலிங்க மாத்திரை ... 343
சன்னி புறவீச்சுக்குத் தைலம் ... 340
சன்னி முதலானதற்கு ஆனந்த வயிரவன் ... 345
சன்னி மேல் பூச்சு மருந்து ... 330
சன்னி வகுப்பு (கலப்பு நோய்) ... 170
சன்னிவலிப்புக்கு மூக்குறிஞ்சல் மருந்து (ஆக்கிராணம்) ... 342
சன்னி வலிப்பு, சயித்தியம், வாதசூலைக்கு
ஐந்தெண்ணெய்த் தைலம் ... 339
சன்னி, வலிப்புத் தோடம், பக்கவாதம், நரம்புத் திமிர்வாதம்,
வாய்வுக்கு விடமுட்டித்தைலம் ... 340
சன்னி வாதசுரத்தின் இயல்பு ... 290
சன்னி வாதத்திற்கு ஒற்றடம் ... 343
சன்னி 10க்கும் தைலம் பிடிநெய் ... 331
சன்னி 13க்கும் காலனந்த வயிரவன் ... 345
சன்னி 13க்கும் நச்சு சன்னிக்கும் தோடத்திற்கும்,
கௌரி மாத்திரை ... 344
சன்னி 13க்கும் வலிப்பு, உட்குத்து புறவீச்சுக்குத் தைலம் ... 335
சன்னி 13க்கும் வாதம் 70க்கும் மேல் தடவ
விடமுட்டித் தைலம் (பிடிநெய்) ... 339
சன்னி 13க்கும் மாத்திரை ... 346

சா

சாகாக் குறியும் சாகும் குறியும் ... 41
சாந்தி கூறுகின்றார் ... 62
சாம்பல், மண்தின்றதற்கு மருந்து ... 194

சி

சிங்கி மாந்தக் கணம் இதுவே நச்சு மாந்தக் கணம் ... 125
சிங்கிச் சன்னியின் இயல்பு ... 328
சித்த விப்பிரம சன்னியின் இயல்பு ... 325
சிரங்கு, சொறி கரப்பன், ஆறாப்புண்களுக்கு மருந்து ... 155
சிரங்கு புண்ணுக்குக்களிம்பு ... 153
சிராய்ப் பீனச இயல்பு ... 268
சிலேத்தும அதிசாரத்தின் இயல்பு ... 374
சிலேத்தும ஐய சுரத்தின் இயல்பு ... 287
சிலேத்தும உடற்குறிகள் ... 24
சிலேத்தும (ஐயக்) கூறு ... 36
சிலேத்தும சன்னியின் இயல்பு ... 330
சிலேத்துமப் பீனச இயல்பு ... 268
சிலேத்தும மாந்த நோயின் இயல்பு ... 103
சிலேத்தும மூலக்கிராணியின் இயல்பு ... 378
சிறுசிரங்கு, சொறிசிரங்கு இவைகட்கு மருந்து ... 154

சீ

சீத சன்னிக்கு அறிவானந்த வயிர மாத்திரை ... 344
சீதசுரம், குளிர் காய்ச்சலுக்கு உட்கொள்ளும் எண்ணெய்... 305
சீதம் விழுவது நிற்க மருந்து ... 384
சீத ரத்தக் கடுப்புக் கழிச்சலுக்கு மருந்து ... 180
சீதள சுரத்திற்கு மருந்து ... 166
சீதளம் விடாச் சுரத்திற்கு மருந்து ... 167
சீதாங்கச் சன்னியின் இயல்பு ... 320
சீழ் எருவாய் நோயின் இயல்பு (சீழ் மூலம்) ... 355
சீழ்ப் பீனச இயல்பு ... 268
சீழ் மூலத்திற்கு மருந்து ... 141

சு

சுக்கிரப்படுவெனுக்கு மருந்து ... 237
சுகக் கழிச்சல் எண்ணெய் ... 198
சுக சன்னியின் இயல்பு ...330,333
சுண்டைப் பீனசத்தின் இயல்பு ... 271
சுர அதிசாரத்தின் இயல்பு ... 375
சுரக் கோடாலி ... 316
சுரங்கட்கு முடித்தைலம் ... 306
சுரங்களின் பெயர்கள் ... 157
சுரத்தில் காணும் கடுப்புக்கு மருந்து ... 395
சுரத்திற்குப் பச்சைக் கற்பூர உருண்டை ... 317
சுரத்திற்கு மேல் பூச்சுத் தைலம் ... 309
சுர நோயின் நட்சத்திரப் பலனறிய விவரம் ... 318
சுரத்திற்கு ஏலாதி மாத்திரை ... 167
சுரத்தின் பேரில் உடல் வீக்கம் கண்டால் மருந்து ... 295
சுர நோய்ப் படலம் ... 283
சுரம், இருமல், சீதள சுரத்திற்கு மருந்து ... 166
சுரம் குளிர்ச்சுரம், வயிற்றுவலி, பொருமல்,
முதலான நோய்களுக்கும் கழிச்சல் மாத்திரை ... 317
சுரம், வறட்கணம், இரத்தகணம்,
குழி தோடம் சவலைக்கு மருந்து ... 167
சுரம், விக்கல், தாகம், சுவையின்மை,
தலைநோய், பிரமேகத்திற்கு நெய் ... 304
சுர வகுப்பு ... 157
சுருங்கு கண்ணின் இயல்பு ... 225
சுழிக் கணத்திற்குக் குடிநீர் ... 145
சுழிக் கணத்தின் இயல்பு ... 126
சுழிக் கணம், சுரம், வறட்சிக்கு மருந்து ... 177
சுழிக்கணம், வறட்கணம், ஊதுமாந்த கணம்,
இரத்த கணம் ஆகிய நோய்க்கு எண்ணெய் ... 144
சுழி மாந்த கணத்தின் இயல்பு (வேறு) ... 126
சுழி மாந்த நோயின் இயல்பு (வேறு) ... 113
சுளுக்குக் காய்ச்சலுக்கு மருந்து ... 299

சூ

சூடு வளர்த்திக்கு மருந்து ... 235
சூதக வாயு நோய் இயல்பு ... 71
சூத வலிக்கு மருந்து ... 73
சூலி அச்சரத்தின் இயல்பு ... 182
சூலுற்ற காலத்தில் காணும் துவாலைக்கு மருந்து ... 84
சூலுற்ற காலத்தில் காணும் நோயால்
தாக மூர்ச்சை கண்டால் ... 84
சூலுற்ற பெண்களுக்குக் கல்லடைத்தல் ... 86
சூலுற்ற பெண்களுக்குப் பத்து மாதத்திற்கு வரும்
நோயும் அதற்கு மருந்தும் விளம்பல் ... 79
சூலுற்றவளுக்கு நீரடைத்தால் ... 85
சூலை கண இயல்பு ... 128
சூலை கரப்பன் இயல்பு ... 149

செ

செங்கண்புள் தோட இயல்பு ... 97
செங்கரப்பன் இயல்பு ... 149
செங்கரப்பன், கொள்ளிக்கரப்பனுக்கு மருந்து ... 81
செங்கிரந்தி நோய் (வேறு) ... 92
செங்கிரந்தி நோயின் இயல்பு ... 91
செரியாமாந்த நோயின் இயல்பு ... 111
செரியாமைக் காய்ச்சலின் இயல்பு ... 291
செரியாமைக் கிராணிக்கு மருந்து ... 384
செவ்வேர்க்குந்த நோய்க்கு மருந்து ... 219
செவி நோயின் இயல்பு ... 188
செவியில் சீழ் ஒழுகலுக்கு மருந்து ... 188

சே

சேத்தும கணத்தின் இயல்பு ... 121

சொ

சொறி, சிரங்கு மருத்துவம் ... 152

சோ

சோகை வகுப்பு : வாதசோகை இயல்பு ... 183

சோதி அச்சரத்தின் இயல்பு ... 182

த

தலைமாந்த நோயின் இயல்பு ... 112

தலையில் நீரேற்றம், மண்டை இடிக்கும் மருந்து ... 278

தலையில் நீரேற்றம், மண்டையிடி நோய்களுக்கு ஒற்றடம் ... 278

தலையில் நீரேற்றம், மண்டைஇடி நோய்க்குத் தைலம் (தலை முழுக்கு நெய்) ... 279

தலையில் நீரேற்றம், மண்டையிடி நோய்களுக்குப் புகை ... 279

தலை நோய்ப் படலம் ... 278

தலைவலி, மண்டைவலி, கபால வாய்வு நோய்க்கு நசியம் (மூக்குறிஞ்சல்) ... 280

தவளை அம்மையின் இயல்பு ... 201

தா

தாகத்திற்குக் கலைக் கொம்புத் தண்ணீர் செய்யும்முறை ... 205

தாகத்துக்கு மருந்து ... 192

தாந்திரிகச் சன்னியின் இயல்பு ... 172, 324, 325

தாபசுரம், நாவறட்சிக்கு மருந்து ... 294

தாய்க்குப் பால் சுரக்க மருந்து ... 94

தி

திரிதோட (முப்பிணி) சுரத்திற்கு மருந்து ... 301

தீ

தீராக் காய்ச்சலுக்கும் மாறல் காய்ச்சலுக்கும் மருந்து ... 298

து

துலைமாந்த நோயின் இயல்பு ... 112

தூ

தூங்கு புள் தோட இயல்பு ... 96

தெ

தெற்கத்திக் கணமாந்தம், பேரா மாந்தத்திற்கு மருந்து ... 139

தே

தேரைத் தோட இயல்பு ... 100

தை

தைலம் (தலைமுழுக்குநெய்) தேய்த்துக் கொள்ளும் முறை... 256

தொ

தொங்கல், ஆமம், மாந்தக் கழிச்சலுக்கு மருந்து ... 194
தொந்த (கலப்பு) நாடி ... 36

தோ

தோடசன்னி, மாந்தசன்னி, பித்தசுரம், வாந்திக்கு மருந்து... 172
தோட நிலக்குறி ... 39
தோடமாந்த நோய்க்கு மருந்து ... 115
தோட வகுப்பு ... 95

ந

நச்சுக் காய்ச்சலின் இயல்பு ... 298
நச்சுசன்னி, குளிர்சன்னி, சுரம் விக்கலுக்கு மருந்து ... 173
நஞ்சுக் கொடி விழ மருந்து ... 87
நடுக்கல், கக்கல், செரியாமைக்கு மருந்து ... 186
நலமாகா சன்னிகள் ... 319
நளிர்க்காய்ச்சல், நடுக்கல், காய்ச்சலுக்கு மருந்து ... 295
நறுமணப் பொருள்கள் அணிதலும்
நற்செயல்களுங்கூறுதல் ... 10

நா

நாடி உண்டாவதற்கு அடிப்படை ... 28
நாடிகள் கீழ்மேலும் மீறியோடும் வகை ... 34

நாடி நிதானம் ... 31
நாடிபார்க்கும் மாதவகை ... 30
நாடி பார்க்குமிடங்கள் ... 30
நாடியறியும் இடங்கள் ... 19
நாடியின் வேறுபாடுகள் ... 29
நாடியைப் பிடித்துப் பார்க்கும் முறை ... 31
நாடி விளக்கப் படலம் ... 25
நான்காம் முறைசுரத்திற்கு மனோசிலை மாத்திரை ... 316
நான்குவித மருத்துவர்க்கும் அறிவுறுத்தல் ... 10

நீ

நீங்காச் சன்னியின் இயல்பு ... 172
நீர் ஒளி காசத்தின் இயல்பு ... 213
நீர்க் கணத்தின் இயல்பு ... 126
நீர்க் கழிச்சலுக்கு மருந்து ... 388
நீர்க் குளுவான் அம்மையின் இயல்பு ... 201
நீர்ப் பாய்ச்சலின் இயல்பு ... 213
நீர்ப் பீனச இயல்பு ... 270
நீர்ப் பீனசத்திற்கு மருந்து ... 271
நீர்ப்புள் தோட இயல்பு ... 98
நீர்மாந்த நோயின் இயல்பு ... 107
நீர் வடிதலுக்கு மருந்து ... 238
நீராமக் கணத்தின் இயல்பு ... 132
நீல காசத்தின் இயல்பு ... 213
நீலகாசம் போன்றவற்றிற்கு மருந்து ... 242
நீலி அச்சுரத்தின் இயல்பு ... 182

நே

நேத்திரவாயு, மண்டையிடிக்குத் தைலம் ... 234
நேத்திர வாயுவுக்கு மருந்து ... 233

நோ

நோய்களை எட்டுவிதத் தேர்வுகளாலும் முடிவு செய்தல் ... 17
நோயாளிகளின் உடற்குறிகள் ... 46
நோயாளி மருத்துவரிடம் நடந்துகொள்ள
வேண்டிய முறை ... 5

ப

பச்சிலை போல் கழிவதற்கு மருந்து ... 181
பஞ்ச பூத நாடிகளிருக்குமிடம் ... 32
பட்சி தோட இயல்பு ... 95
படலத்தின் இயல்பு ... 220
பத்தியத்திற்கு ஆகாத உணவுப்பண்டங்கள் ... 208
பத்தியம் விளம்பல் ... 63
பத்து நாடிகளின் இருப்பிடம் ... 43
பத்து நாடிகளின் பெயர்கள் ... 15
பத்து வாயுக்களின் பெயரும் பிராண வாயு இருப்பிடமும் ... 14
பயித்திய சன்னியின் இயல்பு ... 330
பயித்தியநாடிநடை, சிலேத்துமநாடி நடை, வாதமும் பித்தமும், தொந்தித்த நாடி நடை ... 20
பயித்தியர் சிறுநீர், கபநீர், தொந்தநீர், வாத நோய்நீர், பித்தநோய், நாக்குவண்ணங்கள் ... 18
பருவநிகை நோயின் இயல்பு ... 219
பல் தூய்மை ... 255
பல்லீற்றில் இரத்தம் வடிதலுக்கு மருந்து ... 189
பழஞ் சுரத்திற்கு மருந்து ... 167
பழஞ்சுரம், விடாச்சுரம், நஞ்சுவீறு சன்னிக்கு மருந்து ... 168
பற்பல நோய்களின் வகுப்பு, நாமுள் தோட நோயின் இயல்பு ... 189
பற்பல நோயின் இயல்பு ... 218
பறவை தோட இயல்பு ... 95
பனைமுகரி அம்மையின் இயல்பு ... 199

பா

பால் உண்ணாக் குழந்தைகளுக்கு மருந்து ... 190
பால் கரப்பன் இயல்பு ... 150
பால் போல் கழிவதற்கு மருந்து ... 177
பால் மாந்த நோயின் இயல்பு ... 110

பாலம்மை நோயின் இயல்பு ... 199
பால வாகடப் படலம் ... 91

பி

பிடரிவலி, புறவீச்சு நோயின் இயல்பு ... 336
பிண்டத் தோற்றப் படலம் ... 22
பிண்டத் தோற்றம் விளம்பல் ... 13
பிணிதீர்த்த மருத்துவர்க்குப் பணங்கொடாத
கஞ்சர்கட்கு இன்னவை நேருமென்று கூறல் ... 6
பித்த அதிசாரத்தின் இயல்பு ... 374
பித்த உடற்குறிகள் ... 24
பித்த கணத்தின் இயல்பு ... 121
பித்த கரப்பன் இயல்பு ... 147
பித்த காசத்தின் இயல்பு ... 212
பித்த சன்னியின் இயல்பு ... 329
பித்த சிலேத்தும நாடி நடைகள் ... 19
பித்த சுரத்தின் இயல்பு ... 283
பித்தசுரம், தாபசுரம்,
பாத வெடிப்புக்கு மேல்பூசு, எண்ணெய் ... 168
பித்தசோகை, காமாலையின் இயல்பு ... 184
பித்தப் பீனச இயல்பு ... 268
பித்தபைத்தியம், சுகசன்னி, பித்தம், சுரம், வலி,
பிடிப்புகட்கு முசுமுசுக்கை நெய் ... 330
பித்த மலட்டு இயல்பு ... 57
பித்த மாந்த நோயின் இயல்பு ... 103
பித்த மூலக் கிராணியின் இயல்பு ... 378
பித்தம், விழிகாசம், காதடைப்பு, மந்தத்திற்குத் தைலம் ... 266
பிரலாப சன்னியின் இயல்பு ... 327
பிரளிக் கணத்தின் இயல்பு ... 129
பிரிதல் நேத்திரத்தின் இயல்பு ... 215
பில்ல நோயின் இயல்பு ... 219
பிள்ளைகளுக்கு உரம் (வர்மம்) விழுதலுக்கு மருந்து ... 94
பிள்ளை சீறிஅழுதல், விக்கலெடுத்தல்,
வயிறு பொருமலுக்கு மருந்து ... 94

பிள்ளை பெற்றதில் வயிறு பழுத்தால்
(கருப்பையுள் சீழ் பிடித்தல்) மருந்து ... 88
பிள்ளை பெற வருத்தப்பட்டால் மருந்து ... 87
பிள்ளையின் வயிறு வீங்குதல், குடித்த பால் வாந்தி எடுத்தல்,
அடிக்கடி கொட்டாவி விடுதலுக்கு மருந்து ... 94
பிறகணத்தின் இயல்பு ... 129

பீ

பீர்த்தட்டிச் சன்னியின் இயல்பு ... 323
பீனச நோய் பொது இயல்பு ... 267
பீனசப் படலம் ... 267
பீனசம், இரத்தப் பீனசம், சிராய் அழுகல் பீனசம்
பித்தப் பீனசத்திற்கு நசியம் (மூக்குறிஞ்சல்) ... 277
பீனசம் நச்சுத்தலை இடிக்குப் பற்று ... 277
பீனசம், நீர்வடிதல், எரிப்பு, தும்மலுக்குத் தைலம் ... 272
பீனசம், மண்டையிடி கபாலச்சூட்டுக்குத் தைலம் ... 273
பீனசம், மண்டையிடி தலைபாரத்திற்குத் தைலம் ... 276
பீனசம், மண்டையிடி நாசிகாபீடம், வறட்சிக்குத் தைலம் ... 274
பீனசம், மண்டையிடி வாதம் கடுப்புக்குத் தைலம் ... 274
பீனசம் விடாதவலி, கபாலச் சூலை நேத்திர
வாய்வுக்குத் தைலம் ... 275

பு

புகைச்சலின் இயல்பு ... 216
புழுமேல் மலட்டு இயல்பு ... 60
புள்தோட இயல்பு (வேறு) ... 98
புற இசிவுக்கு மருந்து ... 175
புற எருவாய் நோயின் இயல்பு (புற மூலம்) ... 354
புறவீக்க நோயின் இயல்பு ... 334

பூ

பூ, படலம் அதிமாங்கிச வளர்ச்சிக்கு மருந்து ... 231
பூ, படலம் காசத்திற்கு மருந்து ... 231
பூ வெள்ளெழுத்திற்கு மருந்து ... 230

பெ

பெண், ஆண்களுக்கு நாடி பார்க்கும் முறை ... 31
பெண்களுக்கு நாடி நடக்கும்விதம் ... 32
பெருங்கழிச்சலுக்கு மருந்து (அதிசாரம்) ... 180
பெருங்கழிச்சலோடு காய்ச்சலுக்கு மருந்து ... 297
பெரும்பாட்டின் குறிகள் ... 64
பெற்ற மலட்டு இயல்பு ... 58

பே

பேய்ச் சொறிக்கு மருந்து ... 152
பேராமக் கண நோயின் இயல்பு ... 132

பொ

பொகுக்க நேத்திர சன்னியின் இயல்பு ... 322
பொருமல் கழிச்சலுக்கு மருந்து ... 180
பொருமல், மாந்தக் கணத்திற்கு மருந்து ... 138

போ

போர்மாந்த நோயின் இயல்பு ... 109

ம

மக்கட் பிறப்பு வரலாறு கூறல் ... 22
மகப்பேற்றுக்குப் பின் பச்சை உடம்பில் எடுத்த
இரைப்பிருமலின் (சுவாசகாசம்) குணம் ... 88
மகப்பேற்றுக்குப்பின் பச்சையுடம்பில்
வயிறு பொருமி வலித்தால் மருந்து ... 88
மகாகண இயல்பு ... 128
மகாதோடக் குறி ... 43
மசரைப்பழு நோயின் இயல்பு ... 196
மஞ்சட் காமாலை நோயின் இயல்பு ... 185
மண்டையிடி, கபாலச்சூலை,
பீனசம், நாசி புண்ணுக்குத் தைலம் ... 275
மணிக்கடை நூல் ... 47
மணிவளர்த்தி நோயின் இயல்பு ... 223

மதிமந்த நோயின் இயல்பு	...	217
மந்த சன்னியின் இயல்பு	...	332
மந்த சுரத்தின் இயல்பு	...	291
மந்தம், அதிசாரம் கிராணிக்கு மருந்து	...	390
மந்தாரக் கணத்தின் இயல்பு	...	131
மந்தார காசத்தின் இயல்பு	...	223
மயக்கம் சோகம் நாவறட்சிக்குக் குடிநீர்	...	192
மருத்துவர் உடுத்தக் கூடிய உடைகள் உடுத்தக் கூடாத உடைகள் கூறுதல்	...	9
மருத்துவர் குறிப்பு	...	49
மருத்துவன் முறைமை	...	7
மருந்திற்கு முறிவான உணவுப் பண்டங்கள்	...	90
மருந்துகளுக்கு ஆகும் உணவுப் பண்டங்கள்	...	90
மருந்து கொடுக்கக் கூடாத பேர்கள்	...	2
மருந்து செய்யவும் உண்ணவும் இன்னின்ன கிழமை ஏற்றதெனல்	...	49
மருந்து செய்யவும் உண்ணவும் இன்னின்ன கிழமையாகும் இன்னின்ன கிழமை ஆகாதெனக் கூறல்	...	12
மலக்கழிச்சலுக்கு மருந்து	...	179
மலக்கு விழியின் இயல்பு	...	225
மலம், சிறுநீர்க் கட்டுக்கு மருந்து	...	197
மறு முள்ளியின் இயல்பு	...	207

மா

மாங்கிசச் சுரத்தின் இயல்பு	...	161
மாந்தக்கண சன்னிக்கு மருந்து	...	173
மாந்தக் கழிச்சல் மாந்தசன்னிக்கு மருந்து	...	176
மாந்தக் கழிச்சலின் இயல்பு	...	178
மாந்தங்களுக்குப் பொது மருந்து	...	117
மாந்தசுர தோடத்திற்கு மருந்து	...	164
மாந்தகணப் பொருமல், இருமல் கபத்திற்கு மருந்து	...	138
மாந்த சன்னிநோயின் இயல்பு	...	170
மாந்த சுரத்திற்கு மருந்து	...	162
மாந்த தோடம், வலிப்பு, மலட்டுக்கு மருந்து	...	116

மாந்த நோய் காணும் பொதுக் காரணமும்
மாந்த வகையும் ... 101
மாந்த நோய்க்குப் பொது மருத்துவம் ... 103
மாத பூப்பு வராத வர்களுக்கு ... 59
மாந்த செவ்வாப்பு கரப்பனுக்கு மருந்து ... 154
மாந்த நோயின் இயல்பு ... 101
மாந்தம் பாலர் இசிவுக்கு மருந்து ... 116
மாந்தம் பொருமல், வாந்தி, செரியாமாந்தத்திற்கு மருந்து ... 116
மாந்தம் வயிற்றுப் பொருமலுக்கு மருந்து ... 116
மாந்தவலிப்பு, காக்கை வலிப்புகளுக்கு மருந்து ... 174
மாமிசத்தைப் பற்றிய சுரத்தின் இயல்பு ... 292
மார்புச் சளி, கோழைக்கட்டுக்கு மருந்து ... 188
மாலைக்கண், வெள்ளெழுத்து, புகைச்சலுக்கு மருந்து ... 241
மாலைக்காச நோயின் இயல்பு ... 222
மாலை நேரத்தின் இயல்பு ... 221

மி

மிருத்துவாத சன்னி முதலான
வாதசன்னிகளுக்கு மாத்திரை ... 345

மு

முக்கல் வயிற்றுக் கடுப்பின் இயல்பு ... 142
முக்குக் கணத்தின் இயல்பு ... 133
முக்கு மாந்த நோயின் இயல்பு ... 113
முகவாத சன்னியின் இயல்பு ... 332
முட்டை உடைத்தாற் போலும் கெட்டபால் போலும்
கழிதலுக்கு மருந்து ... 181
முயல்கண்ட வலிப்பின் இயல்பு ... 349
முயல் கண்ட வலிப்பு, காக்கை வலிப்பு, குமரகண்ட
வலிப்புக்கு மருந்து ... 350
முளை ஆணிப்பூவுக்கு மருந்து ... 231
முன் சொன்ன சரக்குகளுக்கு எடைப்பாகம் கூறுகின்றார்... 63

முன்னேபணம் வாங்கிக் கொண்டு
பின்னே வைத்தியம் செய்யவும் ... 2

மூ

மூலக் கணத்தின் இயல்பு ... 133
மூலக் கடுப்பு இரத்த மூலத்திற்கு மருந்து ... 368
மூலக் கிராணி அதிசாரத்திற்கு மருந்து ... 381
மூலக் கிராணி, சீழ்க்கிராணி, நீலக்கிராணி
வாயுக்கிராணி, சூசிக்கிராணி, அசீரணக் கிராணி
ஆகியவற்றின் இயல்பு ... 378
மூலப் பீனசத்தின் இயல்பு ... 271
மூலமுளை, அபானக் கடுப்புக்குப் புகையும் ஒற்றடமும் ... 366
மூலரத்தகணம், நச்சுக்கணம் மாந்தத்திற்கு எண்ணெய் ... 143
மூலவாயு, அக்கினி மாந்தம், பத்தியவாயு,
ஆணந்த வாயுவுக்கு மருந்து ... 371
மூலவாயு, எருவாய், உதரநோய், இழுப்பு, குன்மம்,
பயித்தியம், சன்னிவாயு, உடம்புவியர்வை
பசி மந்தத்திற்கு மருந்து ... 372
மூலவாயு நோய்க்குத் தலைமுழுகத் தைலம் ... 371
மூலவாயு நோயால் நீர் அடைத்தல் ... 370
மூல வாயுவின் இயல்பு ... 369
மூலவாயு, மூலம், செரியாமை
தொடர்கழிச்சலுக்கு இளகம் ... 372
மூன்று நாளிலும் ஆறு திங்களிலும் சாகுங்குறி ... 40
மூன்று நாளிலும் பதினைந்திலும் சாகுங்குறி ... 40
மூன்றாம் முறைக் குளிர் சுரத்திற்கு மருந்து ... 293
மொழுக்கன் அம்மையின் இயல்பு ... 200

வ

வண்டு கடிக்கு மருந்து ... 193
வயிற்றிரைச்சல், நஞ்சு, மூலக்கடுப்புக்குக் கழிச்சல்,
கணத்திற்கு மருந்து ... 180
வயிற்றில் இறந்த குழந்தை வெளிவர மருந்து ... 86
வயிற்றுக் கடுப்பின் இயல்பு ... 390

வயிற்றுக் கடுப்பு கழிச்சலுக்கு மருந்து ... 394
வயிற்றுக்கடுப்பு, மூலமுளை, குன்மம்
கைகால் ஊறலுக்கு நாக பற்பம் ... 394
வயிற்றுக் கடுப்பு வாய்வுக்கு மருந்து ... 394
வயிற்று நோய், சீதக்கடுப்பு, தாகம், செரியாமை சன்னி
(கலப்புநோய்) சயித்தியம்,
கக்கல் பிராந்திகளுக்கு மருந்து ... 186
வயிற்று நுண்புழு விழுதலுக்கு மருந்து ... 196
வயிற்றுப் பொருமல் வலி மாந்தத்திற்கு மருந்து ... 193
வயிறு இரைந்து கழிதலுக்கு மருந்து ... 389
வரகு திரி அம்மையின் இயல்பு ... 199
வலிப்பு நோய் வகுப்பு ... 174
வளி அழல் ஐயக் கரப்பன் 18க்கும் எண்ணெய் ... 147
வறட்காமாலை நோயின் இயல்பு ... 185
வறட்சிக் கணத்தின் இயல்பு ... 129
வறட்சிக் கரப்பன் இயல்பு ... 151
வறட்சி மலட்டு இயல்பு ... 58
வறட்சுரம், மாந்த சுரத்திற்கு மருந்து ... 163
வறள் மாந்த நோயின் இயல்பு ... 114

வா

வாணம், சுக்கிலம், உளைவிற்கு மருத்துவம் ... 224
வாத அதிசாரத்தின் இயல்பு ... 374
வாத உடற்குறிப்புகள் ... 24
வாதக் கூறு ... 34
வாத கணத்தின் இயல்பு ... 121
வாத கரப்பன் இயல்பு ... 146
வாத கரப்பன் வீக்கத்திற்கு மருந்து ... 154
வாத காசத்தின் இயல்பு ... 211
வாத சன்னியின் இயல்பு ... 328
வாத சிலேத்தும (வளி ஐய) சுரத்தின் இயல்பு ... 289
வாத சிலேத்துமந் தொந்தித்த நாடி செரியாமை நாடி
அபத்தியத்தின் நாடி மகளிர் சங்கை நாடி, மலமந்த நாடி
சன்னிவாத நாடிகள் வருகை ... 20
வாதசுரத்தின் இயல்பு ... 283

வாதத்தில் எடுத்த சகல சன்னி தோடத்திற்கும்
வாதம் எண்பதற்கும் தைலம் ... 328
வாதப் பீனச இயல்பு ... 268
வாத, பித்த, சிலேத்தும உடற்குறிகள் ... 23
வாதபித்த சிலேத்தும காலம் ... 27
வாத பித்த சிலேத்தும சுரத்திற்கு மருந்து ... 162
வாத பித்த சிலேத்துமத்தின் இயல்பு ... 27
வாத பித்த சிலேத்தும நிலை ... 27
வாதமலம், பித்தமலம், கபமலம் தொந்தமலம்,
வாதச்சிறுநீர் நிறங்கள் ... 18
வாத மாந்த நோயின் இயல்பு ... 102
வாந்தி ஒக்காளத்திற்கு மருந்து ... 187
வாதமூலக் கிராணியின் இயல்பு ... 378
வாயு கிராணியின் இயல்பு ... 381
வாயுக்கிராணி, சூட்டுக் கழிச்சலுக்கு மருந்து ... 383
வாயு மலட்டு இயல்பு ... 57
வாரணம், சுக்கிலப்படலம் குந்தம்
இரத்த செம்மைக்கு மருந்து ... 239

வி

விக்க நாத சன்னியின் இயல்பு ... 328
விக்கல், கக்கல், சுரம், இருமலுக்கு மருந்து ... 166
விக்கலுக்கு மருந்து ... 187
விச்சிரிப்பன் அம்மையின் இயல்பு ... 200
விடமாந்த நோயின் இயல்பு ... 108
விட வாத கரப்பன் இயல்பு ... 145
விடாக் கழிச்சலுக்கு மருந்து ... 181
விடாக் குளிர்சுரத்திற்கு மருந்து ... 301
விடாச் சுரத்திற்கு மருந்து ... 293
விடாச்சுரம், வயிற்றெரிவு,
இருமல், சொறி சிரங்குக்கு நெய் ... 304
விரணத்திற்கு மருந்து ... 139
விழிக்கடுப்பு, குத்தல், அமரம், கண்வலிக்கு மருந்து ... 236
விழிக்கடுப்பு, தலை வலிக்குத்
தைலம் (தலை முழுக்கு நெய்) ... 264

விழிக்கண் குருடுக்கு மருந்து ... 236
விழிநோய், தலைநோய்க்குத் தைலம் ... 266
விழிநோய், தலைநோய் கற்பூரச் சந்தனாதித்தைலம் ... 265
விழி நோய்களுக்கும் கபாலக் குட்டத்திற்கும் குமரித் தைலம்... 264
விழி நோய்களுக்கு மருந்தரைக்கும் பாண்டம் ... 255
விழியில் நோய் வராதிருப்பதற்கும்
குளிர்ச்சிக்கும் வெண்ணெய் ... 255
விழியில் வைசூரி வராதிருக்க மருத்துவம் ... 206
விழி விழுங்கி நோயின் இயல்பு ... 222
விழிவீக்கம், எரிவு, தினவு, படல் சிவப்பு, கடுப்பு,
நீர் வடிதல் நோய்களுக்கு இமையின் மேலிடும் பஞ்சு... 245
விழிவீக்கம், எரிவு தினவு, படல் சிவப்பு, கடுப்பு,
நீர்வடிதல் நோய்களுக்கு ஒற்றடம் ... 245
விழிவீக்கம், எரிவு தினவு, படல் சிவப்பு, கடுப்பு
நீர்வடிதல் நோய்களுக்குத் தாரைப் புறவளையம் ... 245
விழி வீக்கம், எரிவு, தினவு, படல் சிவப்பு, கடுப்பு
நீர்வடிதலுக்குப் புற வளையம் ... 245
விழிவேதனை படலத்துக்குப் புற வளையம் ... 244
விளக்கொளிக் கண்புள் தோட இயல்பு ... 97

வீ

வீக்கத்திற்கு மருந்து ... 186
வீங்குபுள் தோட இயல்பு ... 96
வீழி அச்சரத்தின் இயல்பு ... 182

வெ

வெள்ளோக்காளம், பித்தம், விக்கல், கக்கலுக்கு மருந்து ... 188
வெளிறுக்கு மருத்துவம் ... 239
வெளுமைக் கழிச்சலுக்கு மருந்து ... 388
வெங்கண் புள் தோட இயல்பு ... 97
வெடி சன்னியின் இயல்பு ... 333
வெண் மாசுப் படலத்தின் இயல்பு ... 220
வெதுப்புக் கழிச்சலுக்கு மருந்து ... 179
வெள்ளெழுத்திற்கு வெண்ணெய் ... 240
வெள்ளெழுத்து குருட்டுக்கண் முதலான
கண் நோய்களுக்கும் உடம்பு வலிக்கும் தைலம் ... 241

வே

வேறுவகைக் கழிச்சலுக்கு மருந்து ... 197

வை

வைசூரி இறங்கின பின் நடப்பிக்கும் விதிமுறை ... 206
வைசூரி நூல் – வைசூரி விவரம் ... 198
வைசூரியில் கபம் நெஞ்சில் கட்டித்
தொண்டை கம்மினால் மருந்து ... 204
வைசூரியில் வாயால் இரத்தம் கக்குவதற்கும்
நீர்த்தாரையில் இரத்தம் காணுவதற்கும் மருந்து ... 206
வைசூரியின் பேரில், கடுப்பு, சீதம்,
இரத்தம் கண்டால் மருத்துவம் ... 203
வைசூரியின் பேரில் சுரம் கண்டால் மருந்து ... 205
வைசூரியின் பேரில் தொடர் கழிச்சல் கண்டால் மருந்து ... 204
வைசூரியின் பேரில் பெருங்கழிச்சல் கண்டால் பரிகாரம் ... 203
வைசூரியினால் கண்ணில் நோவு கண்டால் பரிகாரம் ... 205
வைசூரியினால் கண்ணில் பூ விழுந்தால் மருத்துவம் ... 207
வைசூரியினால் நேரிடும் சூலைகட்டு மருந்து ... 206
வைசூரியினால் மலம், சிறுநீர்கட்டி
வயிறு உப்பிசங்கண்டால் மருந்து ... 205
வைசூரியுடன் உள்ள கிரந்தியானால் மருந்து ... 202

மருத்துவர் இலக்கணம்

இறை வணக்கம்

(எண் சீர் ஆசிரியவிருத்தம்)

சீர்கொண்ட நிலவுபுயல் பரிதி தாரை
திகழுண்ட கோளமலை நதியு மடங்கல்
பார்கொண்ட கடலுலவை சராச ரங்கள்
படைத்துக்காத் தநவரதம் பரோட்ச மேலும்
பேர்கொண்ட வொருங்களிப்ப வரும்பி ரவாகப்
பீயூட முறழ்வுதரும் பேரா னந்தக்
கார்கொண்ட வியாசபக வான்னிர் விகாரச்
சாட்சாத்கா ரப்பொருளைத் சோத்தஞ் செய்வாம்

[அருஞ்சொற் பொருள்]

புயல் = மழை; பரிதி = ஞாயிறு; தாரை = (தாரகை) நட்சத்திரம் (கடைக்குறை); அடங்கல் = முழுதும்; உலவை = காற்று; அநவரதம் = எப்போதும்; பரோட்சம் = மறைவில்; அளிப்ப = காக்க; பிரவாக = பெருக்கு; பீயூடம் = அமுதம்; கார் = மேகம்; நிர்விகாரம் = மாறுபாடில்லாத; உறழ்வுதரும் = ஒத்திருக்கும்; சாட்சாத்காரப்பொருள் = மெய்ப்பொருள்; சோத்தம் = (ஸ்தோத்திரம்) துதிப்பது.

மருந்து கொடுக்கக்கூடாத பேர்கள்

அன்னியதா ரத்தாசை கொள்வோன் வஞ்ச
 கானகஞ்சா கள்ரொட்டி யுண்போன் றீமை
துன்னியசூ னியக்காரன் சண்டைக் காரன்
 துரும்புகிள்ளி விருந்துண்பான் திருடன் துட்டன்
குன்னியநித் திரைமிகுந்தோன் கொடா தலோபி
 குணமில்லான் மதியில்லான் மான மில்லான்
பன்னியபண் டிதர்பகைஞன் செவிட னூமை
 பாசுபத மறியானைப் பார்க்கொ ணாதே. 1

[அ. பொ.] *தாரம் = மனைவி; துன்னிய = நெருங்கிய; குன்னிய = கீழ்மையான; கொடா = ஈயாத (ஈறுகெட்ட எதிர் மறை) பாசுபதம் = ஈசன் அம்பு; (ஈசனது பெருமையைக் குறிக்க அவ்வாறு கூறப்பட்டது); ஒண்ணாது = தகாது.*

முன்னே பணம் வாங்கிக்கொண்டு பின்னே வைத்தியஞ் செய்யவும்

கைக்கூலி கையொப்புக் களவின் கூலி
 கபடமன முலைமாதர் வேசி கூலி
மெய்க்கூலி கண்கூலி வித்தைக் கூலி
 வியாபாரக் கூலிமிக வுடையான் கூலி
ஒப்பரிய பிணிதீர்க்கு மொருவன் கூலி
 யோதுவிக்கு முபாத்தியார் தத்தங் கூலி
அப்போதைக் கப்போதே வாங்கா ராகில்
 ஆர்பெறுவா ரார்தருவா ரவனி மீதே. 2

[அ. பொ.] *கைக்கூலி = இலஞ்சம்; கபடம் = வஞ்சனை; மெய்க்கூலி = பிணம்தூக்கியான்கூலி; உடையான் = குயவன்; அவனி = உலகு.*

கயவர்களுக்கு இம் மூன்றுஞ் சொல்லக் கூடாதெனல்

மந்திரமும் வாகடமும் பழைய நூலும்
 வருவிக்கும் பெரியோரே வளமை கேளீர்
தந்திரமாய்க் காந்தமுக மூசி பத்துந்
 தன்மையது போற்றொடர்ந்து தரிப்பா ராகில்

சுந்தரமாம் புகழுடைய குலமா னாலுந்
துட்டர்க ளுக்கிம்மூன்றுஞ் சொன்னா ராகில்
அந்தரமாம் பாழ்நரகி லழுந்திப் பின்னு
மறிவிலாச் சண்டாள ராவார் பாரே. 3

[அ. பொ.] *வாகடம் = மருத்துவம்; பழையநூல் = மறை; வளமை = பழக்கம்; பத்தும் = பற்றும் (பரவை வழக்கு); சண்டாளர் = தாழ் பிறப்போர்.*

இந்நான்கு வகைகளும் அறியாமல் மருத்துவம் செய்பவர்களுக்கு நரகம் வரும்

பார்க்கின்ற சோதிடம் பிராயங் காலம்
பகரும்வி வகாரமொடு பிராயச் சித்தம்
ஏற்கும்மருத் துவமிவைகள் நான்கும் வல்லோர்
இதன்வழியே சிகிச்சைரட்சை செய்வா ராகில்
ஆர்க்குமே தோட மில்லை யிவைகளையோ
அறியாதார் சாத்திரவல் லவர்கள் போலத்
தீர்க்கமடி பிடியாகச் செய்வா ராகில்
சீவபிர மத்திவதை சேர்வா ரன்றே. 4

[அ. பொ.] *பிராயம் = வயது; காலம் = சிறுபொழுது; பெரு பொழுது முதலியன; விவகாரம் = தகாச் செயலால் நேர்ந்த வழக்கு; பிராய்ச்சித்தம் = கழுவாய்; ரட்சை = காப்பு; தீர்க்கம் = பெருமையாக; அடிபிடியாய் = ஆரவாரத்தோடு விரைந்தும்; சீவபிரம்மத்திவதை = சீவவதை; (உயிர்க்கொலை) பிரம்மத்தி = பிரம்மத்தை உணர்ந்த பெரியோரைக் கொலை செய்தல் என்று கூட்டிப் பொருள் கொள்க.*

கண்கள் 3, தலைகள் 4, முகங்கள் 5, கைகள் 6, சரீரங்கள் 8, கால்கள் 10, இந்த ஆறுவிதக் குணங்களறியார் நோயாளிகளைக் கொல்வார்; அதனால் நரகமடைவார்.

வாதகுறி வைத்தியரே சொல்லக் கேளீர்
வாகாகக் கண்மூன்று தலைகள் நான்கு
நீதமுடன் முகங்களைந்து கைக ளாறு
நிலைசரீரங் களெட்டு கால்கள் பத்துவித
மிதன பயனறிந்தார் வியாதி தீர்ப்பார்
விதமறியார் மானிடரைப் பழியே செய்வார்

சேதமாஞ் செய்மருந்து பலித்தி டாது
செத்தபின்பு தீநரகிற் சேரு வாரே. 5

[*அ. பொ.*] *வாதகுறி = வேதையைக் குறித்து மருந்துகள் செய்துவைதுள்ள; நீதமுடன் = ஒழுங்காக; விதமறியார் = வகையறியாதவர்; பழி = தீங்கு (பழிக்கத்தக்கப் பணி) சேதம் = வீண்.*

கண், தலை, கை, உடல், கால் பிண்டநிலை விவரங்கள்

மருந்துசுத்தி குணமிரண்டு கண்கள் மூன்றாம்
வாதபித்த சிலேத்மதொந்தம் தலைகள் நான்காம்
அருந்துமறு சுவையறிதல் கைகள் ஆகும்
அட்டவிதக் குறியறிதல் சரீர மெட்டாம்
இருந்ததச நாடிதச வாய்வி ரண்டும்
இதமாகப் பார்த்திடிற் கால்கள் பத்தாம்
பொருந்தியதோர் பிண்டநிலை முகங்க ளைந்தாம்
பொதிகைமலை யகத்தியனார் புகன்ற வாறே. 6

[*அ. பொ.*] *குணமிரண்டு = நற்குணம்; தீக்குணம்; சுவைகள் ஆறு = இனிப்பு; உப்பு; கார்ப்பு; கைப்பு; துவர்ப்பு; புளிப்பு; **அட்டவிதக்குறி:**– தொடுகுறி; சொற்குறி; பார்வைக்குறி; கேட்டற் குறி; சுவைக்குறி; நிறக்குறி; நீர்க்குறி; மலக்குறி; **தசநாடி:**– இடகலை; பிங்கலை; சுழிமுனை; சிங்குவை; குகுதன்; காந்தாரி; அலம்புருடன்; அத்தி; சங்குனி; புருடன்; **தசவாயு:**– பிராணன்; அபானன்; வியானன்; சமானன்; உதானன்; நாகன்; கூர்மன்; கிரிகரன்; தேவதத்தன்; தனஞ்செயன்.*

வாகடத்தின் பயனறியார் நாடி காணார்
வளர்கையைப் பிடித்திழுத்து வார்த்தை சொல்வார்
ஆகடிய மாகவே நல்லோர் தம்மை
அசாத்திய நோயோரென் றறைந்து போவார்
பேர்கிடக்கப் பேர்சொல்வார் வியாதி கட்குப்
பிணிதீர்ப்போ மென்றுசொல்வார் தீர்க்க மாட்டார்
ஒகோகோ வைத்தியர்தா மென்று சொல்வார்
ஒருக்காலு மோட்சமில்லை நரகந் தானே. 7

[*அ.பொ.*] *ஆகடியம் = துனுக்குறுமாறு; அறைந்து = அழுத்தமாகக் கூறி ஓகோகோ = மிக்க உயர்வைக்காட்டும் சொற்றொடர்.*

அச்சமற வைத்தியரே நோயுள் ளார்க்கு
அசாத்தியமுஞ் சாத்தியமு மறிந்து நன்றாய்ப்
பட்சமறக் குறிகுணமெய்ப் பரிட்சை பார்த்துப்
பரிகாரமாய் மருந்து பகரா ராகில்
தச்சமறக் கிளைக்குலங்கள் வேரோ டற்றுத்
தரணிதனில் வெகுபாவந் தலைமேற் கொண்டு
இச்சைபெற எழுநரகி லழுந்திப் பின்னும்
ஈடேற்றும் இல்லாம லிருப்பர் தானே. 8

[அ. பொ.] *அச்சமற = பிணியாளரின் பயம்தீர; வைத்தியரே = பிரிநிலை ஏகாரம் (விளியன்று); பட்சமற = நடுநிலையிலிருந்து; பரிகாரம் = தீர்வுந தச்சமற = நிலைத்த தன்மை நீங்க; கிளை = உறவினர், ஈடேற்றம் = உயர்வு.*

தரணிதனி லவுடதத்தின் சுத்தி கண்டு
தகைமைபெற நோயாளி சரீரம் பார்த்துக்
கரநியாச வகையுங் கண்டு பின்னுங்
கைப்பரிட்சை மெய்ப்பரிட்சை கருதும் நாடி
திருநிகரும் குருமுகமாய்ப் புத்தி யாகித்
தெளிந்தோர்கள் யோசனையும் செய்தி கேட்டு
முரணியிடா திந்தவகைச் செய்யா ராகில்
மூவேழு சுற்றமும்வே ரற்றுப் போமே. 9

[அ. பொ.] *அவுடதம் = மருந்து; (ஔஷதம் என்னும் வட சொல்லின் தற்பவம்) கரநியாசம் = தானே தன் கையால் செய்து கொண்டவை (தீச்செயல்கள்); குருமுகமாய் = ஆசிரியர் நேரே பயிற்றுவித்த; புத்தியாகி = அறிவுத் தேர்ச்சி பெற்று; தெளிந்தோர் = ஆய்ந்துமிக்கத் தேர்ந்தோர்.*

நோயாளி மருத்துவரிடம் நடந்துகொள்ள வேண்டியமுறை

கருத்துறவே வாதிமகன் வைத்தியஞ் செய்யில்
கசடறவே நோயாளி குருவா யெண்ணிக்
கருத்துறவே மருந்துக்குப் பத்தியம் வேணுங்
கைகண்ட வைத்தியரை யறிந்து நன்றாய்க்
கருத்துறவே மனதுவர நடக்க வேணுங்
கழுதையைப்போ லிருந்தவர்க்குப் பலியா தொன்றுங்

கருத்துறவே அமையச் சித்தந் தானுங்
காட்டியவர் மனம்போல நடந்து கொள்ளே. 10

[அ. பொ.] *கருத்துறவே = மனம்வைத்து; கசடு = குற்றம்; மனதுவர = நல்லமருந்து தரும்படியான மனம் தோன்றும்படி; அமைய = பொருந்த.*

உலகில் நோயாளிகள் நடந்துகொள்ளும் தன்மை

நடந்துகொள்ளும் நோயாளி ராசா வாக
நாட்டினா லவர்க்கங்கே மருந்தா காது
தொடர்ந்துமேய வரிடத்திற் பத்தி வைத்தால்
துரும்பாகப் போகுமடா நோய்க ளேது
அடர்ந்துபோய வர்வாசற் காத்தா ரானால்
அக்கினியிற் பஞ்சதுபோல் நோய்கள் போகும்
சடந்தனக்கு நோய்வந்தால் குருவே யென்பார்
சாரியநோய்த் தீர்ந்தால் தம்பி யாமே. 11

[அ. பொ.] *நாட்டினால் = நடந்து கொண்டானானால்; அடர்ந்து = நெருங்கி; சடம் = உடல்; சாரிய = ஒட்டிய.*

தம்பியென்பார் நோயெல்லாந் தீர்ந்த பின்பு
தாய்தந்தை குருவென்பார் நீங்கு முன்னே
வெம்பியதோ ருரோகங்கள் தீர்ந்த பின்பு
வேணவுப சாரம்பின் னாகட் டென்பார்
கும்பியேகொ தித்துமிக வுள்ளம் வாடிக்
குருவான வைத்தியர்தன் மனது நொந்தால்
தம்பியேமு கம்வாடித் தான்வா ரார்கள்
சாற்றினேனி வையறிந்து மருந்து வாங்கே. 12

[அ. பொ.] *வெம்பிய = சூடுண்டு வாடிய; கும்பி = வயிறு; தான்வாரார்கள் = உற்றசமயத்தில் வரமாட்டார்கள்.*

பிணிதீர்த்த மருத்துவர்க்குப் பணங்கொடாத கஞ்சர்கட்கு இன்னவை நேருமென்று கூறல்

வஞ்சமற வுழன்றுபிணி யாளர் தங்கள்
மகவதினும் பதின்மடங்கு மருந்து பார்த்து
நெஞ்சுதனில் நோயாளிப் படிநி தானம்
நிறுத்துமந்த வைத்தியர்க்கு நிதிகொ டாமல்

பஞ்சைமொழி பகர்ந்துவரும் பாவி யோரைப்
பாழ்நகரில் வீழநமன் பாதத் தாலே
அஞ்சவிழத் தடித்துதைத் தாழ்ந்து வாரென்
றகத்தியரு மிந்நிலை யருள்செய் தாரே. 13

[அ. பொ.] *வஞ்சம் = கரவு; பஞ்சைமொழி = தரித்திரம் தோய்ந்த சொற்கள். (இன்மையின் ஏக்கமொழி).*

மருத்துவன் முறைமை
(வேறு)

பண்டிதன் முறைமை கேட்கில்
பழியிலான் சலிப்பி லானாய்க்
கொண்டதோர் அறுப்பி லுற்றங்
குறைவிலான் பொறை யுளானாய்
வண்டணி குழலார் நம்பி
மாதரைத்தாய் தந்தை போல.
மண்டல மொக்க வெண்ணில்
வைத்திய னாகுந் தானே. 14

[அ. பொ.] *சலிப்பு = வெறுப்பு; பொறை = பொறுமை.*

உத்தம குணத்தை யுள்ளோன்
உயர்பெருங் கீர்த்தி யுள்ளோன்
புத்தியா லாய்ந்து சொல்வோன்
பொருள்களை யாய வல்லோன்
சத்திய வார்த்தை யுள்ளோன்
தருமசிந் தனையே யுள்ளோன்
குத்திர வார்த்தை பேசாக்
குணன்பரி காரி யாமே. 15

[அ. பொ.] *ஆய்ந்து = ஆராய்ந்து; குத்திரம் = பொய்.*

மண்ணின் மேற்பெண் ணாணுக்கும்
மற்றுள பல்லு யிர்க்கும்
கண்ணினில் இமைபோற் காக்குங்
கடவுளான் கருணை யுள்ளோன்
நண்ணிய பெண்ணா ணெல்லாம்
நாடிய தந்தை தாயென்

றெண்ணியே மருந்து செய்யில்
இடர்ப் பிணி தீரு மன்றே. 16

[*அ. பொ.*] *இடர் = துன்பம், தடங்கல்கள்.*

(வேறு)

குணங்கள் குறிகள் நாடியினால்
குறித்து மனத்தின் திடமானால்
பிணங்கி யேறும் பிணிபலவும்
பிலமுங் கண்டு தானறிந்து
வணங்கு மருந்தால் மந்திரத்தால்
மகாதே வர்க டாட்சத்தால்
இணங்கு மாகில் மருந்துசெய்வீர்
என்றே முனிவ ரியம்பினரே 17

[*அ. பொ.*] *மனத்தில் திடமானால் = உள்ளத்தில் உறுதி யானால்; பிணங்கி = பிரகோபங்கொண்டு.*

கபவாதபித்த நாடிப் பகுப்பால் பிணிகளைக் குறித்தறிதல்

வாகட சாத்திர நாடிமுறை
மற்றுங் கருவி கரணாதி
பாகமி தஞ்சேர் பரிசனையும்
பருவம் மருந்தின் பதமுறையும்
வேக மருந்தின் சீர்முறையும்
விகடஞ் சேர்மருந் துமிகத்தள்ளி
மேகம் போலப் பொழியவல்லோன்
விதித்தார் பிடக னெனலாமே. 18

குறிப்பு:- மிக வீறுடைய மருந்தையும், நச்சுத்தன்மையுள்ள மருந்தையும் நீக்கி மருத்துவம் செய்யென்பது கருத்து.

[*அ. பொ.*] *பரிசனை = தொடுகுறி; பிடகன் = மருத்துவன்; விகடம் = மாறுபாடு.*

(வேறு)

குருவினை நினைத்துக் கொண்டு
குணங்கண்டு பிணியைத் தீர்க்க
மருவிய வியாதி கொண்டோன்
வாகு டனாடி கண்டால்

திருவினை வென்ற சோதி
தீருமே நாலி லொன்று
வெருவிடா மருந்து தன்னால்
வீழுமுக் கூறுந் தானே. 19

[அ. பொ.] வாகுடன் = இயல்பாக; வீழும் = விழுந்துவிடும்; கூறு = பங்கு.

பாயிர முழுதும் நூலின்
பாட்டிய லறிந்து கொண்டு
மாய்கிற மனிதர்க் கன்பாய்
மருந்து டனாடி பார்த்து
ஆயுறு சித்த நூல்தன்னை
யருங்கண் ணால்வடநூல் பார்த்துப்
போயுறும் பொதிகை வாழும்
புகழ்முனி யருள்செய் தாரே. 20

[அ. பொ.] மாய்கிற = இறக்கிற; போயுறு = போய்தங்கி; அருள்செய்தார் = இயற்றியருளினார்; புகழ்முனி = அகத்தியர்.

சித்தமருத்துவ நூல்

மருத்துவர் உடுத்தவேண்டிய உடைகள் உடுத்தக்கூடாத உடைகள் கூறுதல் (வேறு)

காங்கு சிவப்புப் பலபுள்ளிக்
கருப்புப் பட்டு மரவுரிகள்
நீங்கு மிவைகள் துகிலுடுக்க
நேரே யாக வைத்தியருக்
கோங்கும் வெள்ளைத் துகிலுடுத்தி
யுண்மை நினைந்து மருந்துசெய்யில்
பாங்கு பெறவே பிணிதீரும்
பாரிற் பகரும் மருத்துவரே.

[அ. பொ.] மரவுரி = மரப்பட்டை; துகில் = துணி

நறுமணப்பொருள்கள் அணிதலும் நற்செயல்களுங் கூறுதல் (வேறு)

சந்தனம் புனுகுப் பிச்சுச்
சடத்தினிற் பூசிப் பின்னர்
அந்தணர் கிரியைப் போல
ஆசிரிய னடிவ ணங்கி
சிந்தையிற் குருவை வாழ்த்திச்
சிவபதம் நெஞ்சி லுன்னில்
வந்ததோர் பிணிகள் தீரும்
வரிசைபண் டிதர்கட் காமே. 22

[அ. பொ.] *கிரியை = தொழில்; குரு = அகத்தியர்; உன்னில் = நினைத்தால்; அந்தணர் = முனிவர்; ஆசிரியன் – குரு.*

அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்: – (குறள்)

குறிப்பு:– ஆகையினால் அந்தணர் பார்ப்பாரெனக் கொள்ளாமல் எவ்வுயிருந் தன்னுயிர் போல நினைக்கும் புண்ணிய புருடோத்தமரெனக் கொள்க.

நான்குவித மருத்துவர்க்கும் அறிவுறுத்தல்

(*நிலமண்டில் ஆசிரியப்பா*)

சாத்திர மறிகிலார் சதுர்வித பண்டிதர்
வார்த்தையின் பலத்தினால் மருந்தை யீந்திடில்
கோத்திரங் கிளையொடு குலங்கள் வேரற
வீழ்ந்திடா நரகினில் வீழ்வது திண்ணமே. 23

[அ. பொ.] *சதுர்விதம் – நால்வகை; கோத்திரம் = மரபு; கிளை = சுற்றம்; வீழ்ந்திடா = விரும்பாத.*

இன்னின்னவனுக்கு மருந்து பலிக்காதென விளம்பல்

(*அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்*)

கன்னெஞ்சன் வழிப றிப்போன்
கண்டதன் பிறகே செல்வோன்
வன்னெடுங் கோப முள்ளோன்
மாதர் மேலாசை யுள்ளோன்

பொன்னையே புதைத்து வைத்துப்
பிடகர்க்குப் பொய்யைச் சொல்வோன்
இன்னெடுங் கொடிய பாவிக்
கிடுமருந் தேறா தென்னே. 24

[அ. பொ.] *நெடுங்கோபம் = தீராச்சினம்; பிடகர் = (பிஷக்) மருத்துவர்; ஏலாது = ஏற்றுக்கொள்ளாது.*

இன்னின்னவர்க்குப் பிணி தீராதெனக்கூறுதல்

பஞ்சமா பாத கர்க்கும்
பழிதனை நினைப்ப வர்க்கும்
கெஞ்சியே மருந்து செய்து
கேடுகள் நினைப்ப வர்க்கும்
அஞ்சிடா வாச கர்க்கும்
அனியா யக்கார ருக்கும்
நஞ்சினுங் கொடிய வர்க்கும்
நண்ணிய பிணிதீ ராதே. 25

[அ. பொ.] *பஞ்சமாபாதகர் = கள்குடியன்; பிறன்மனை சேர்வோன்; கொலைக்காரன்; சூதாடுபவன்; பொய்யன், பழி = குற்றம்; கெஞ்சியே... கேடுகள் நினைப்பவர் = இடுமருந்து கொடுத்துத் தீங்கு நினைப்பவர்; அஞ்சிடாவாசகர் = பழி பாவத்திற்குப் பயமின்றி வாய்ச்சாலக்காகப் பேசுபவர்கள்; நஞ்சு = விடம்; நண்ணிய = வந்தடைந்த.*

இன்னின்னவர்க்கு மருத்துவஞ் செய்யெனல்

தரித்திரப் பட்ட பேர்க்குந்
தருமத்தை யடைந்த பேர்க்கும்
கருத்துடன் பிணிதீ ரென்று
கபடின்றி மெய்சொல் வோர்க்கும்
பெருத்திடுந் தனங் கொடுத்துப்
பிணிதீ ருமென்ற பேர்க்கும்
உருக்கமா யுண்ணும் பேர்க்கும்
உடன்வயித் தியஞ்செய் வீரே. 26

[அ. பொ.] *கபடு = வஞ்சனை; தனம் = பொருள்.*

வேதிய வேடத் தோர்க்கும்
விளங்கிய குருக்கள் மார்க்கும்
நீதியா யுள்ள பேர்க்கும்
நெறிமுறை யுடைய பேர்க்கும்
சாதியா யுள்ள பேர்க்கும்
அறநெறி யுள்ள பேர்க்கும்
பேதியா மல்நீ மருந்து
செய்திடப் பிணிபோ மென்றார். 27

[அ. பொ.] *சாதியாய் = ஒழுங்காய்; பேதியாமல் = மனம் கோணாமல்.*

மருந்து செய்யவும், உண்ணவும் இன்னின்ன கிழமையாகும் இன்னின்ன கிழமை ஆகாதெனக் கூறல்

காரியும் புதனும் திங்கள்
கருதிடில் மருந்து தீதாம்
சீரிய வெள்ளி நோயாம்
செவ்வாய் வியாழம் பிணிபோம்
பாரினி லுள்ள பேர்க்குப்
பரிகாரஞ் செய்ய வேண்டில்
ஆரிய னருளி னாலே
அருக்கனில் மருந்து செய்யே. 28

[அ. பொ.] *காரி = சனி; ஆரியன் = ஆசான்; அருக்கன் = ஞாயிறு.*

(வேறு)

ஆதித்த னுதித்த மூன்றே முக்கால்
அறிந்து பிணிக்கு மருந்து செய்வீர்
ஆதித்த னுதித்த மூன்றே முக்கால்
அறிந்து பிணிக்கு மருந்து கொள்வீர்
ஆதித்தக் கிரண மிரண்டு போழ்தும்
அறிந்த வுடனே மருந்து செய்வீர்
ஆதித்தன் சாட்சியாய் நோய்த் தீரும்
அயனம் விருத்தம் வாராதே. 29

[அ. பொ.] *ஆதித்தன் = சூரியன்; கொள் = பருகு. அயனம் = பிறப்பு; விருத்தம் = மூப்பு.*

பிண்டத்தோற்றம் விளம்பல்

(வேறு)

கேளப்பா மனமான வாயு கூடிக்
கெடியான சித்தமா காசம் பொங்கி
வேளப்பா ஆங்கார சிகார மிஞ்சி
மேவுதற்குப் பெண்மேலே மோக மாகும்
நாளப்பா ஐந்தும் பலமே தென்றால்
நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
தாளப்பா மனதோடே வியானன் கூடும்
தள்ளியான் நாதத்தி லபானந் தானே. 30

[அ. பொ.] *ஆங்காரம் = தான்என்ற முனைப்பு; சிகாரம் = வெம்மை (நெறுப்பாறு என்று கூறப்படும் பீசாட்சரம்); மிஞ்சி = அதிகரித்து.*

தானென்ற விந்துவினிற் சமானன் கூடும்
தனியான சித்தத்தில் வியானன் சேரும்
தானென்ற ஆங்காரம் கர்ச்சிப் போடே
கலத்துநிற்கு உதானனப்பா கண்டு கொள்ளு
வேனென்ற பத்து மொன்றாய் மனஞ் சேர்ந்து
மேவியவன் கலந்துவந்து விழுகும் போது
மானென்ற மௌனபர வசமே யாவான்
மருவுகின்ற பெண்ணுக்கும் முறைதான் கேளே. 31

கரு தரிக்கும் விதம்

முறையான பெண்ணாணும் மௌன முற்றால்
மோசமில்லை கருவங்கே தரிக்கும் பாரு.
நிறையான வலத்தோடி லாணே யாகும்
நேராக இடத்தோடில் பெண்ணே யாகும்
உறையான கருப்பையில் சுக்கிலமாய்ப் போகு
முத்தமனே சுரோணிதத்தா னுறைந்து கொள்ளும்
கறையாகப் பாய்ந்தவெளி தமரு போலக்
கழற்கொடிக்காய் போற்றிரண்டு சிரசும் ஆமே. 32

[அ. பொ.] வலத்தோடில் = *சூரிய கலையானால்; இடத் தோடில் = சந்திரகலையானால். (இது சரநூல் மார்க்கம்);*

உறைந்து கொள்ளும் = திடப்படும்; கழற்கொடிக்காய் = சுழற்சிக் காய்; சிரசு = தலை.

ஆமப்பா சிரமோடே கையுங் காலும்
அப்பனே தத்துவங்கள் நரம்பு மூளை
ஓமப்பா அத்திமுத லுரோமத் தோடு
உத்தமனே பதினொருவர் சடமே காணும்
காமப்பால் விழுந்தவழி சிரசி னாலே
கைம்முறையாய்த் தாயுண்ட அன்னஞ் செல்லுஞ்
சேமப்பா னடுமையத் தொப்பு ளாலே
சென்றதெல்லா மலமாகக் கழியுந் தானே. 33

[அ. பொ.] *சிரம் = தலை; அத்தி = என்பு; சேமம் = சுகம்.*

தானென்ற பதினொன்றால் சடந்தான் முன்னே
சாங்கமா யெடுத்துவரும் மலடெவ் வாறு
ஊனென்ற பெண்ணுக்கு மனது வேறாய்
உருவமுற்று மௌனமுன்னாப் பாவத் தாலே
கானென்ற மலடாவாள் புருட னுக்குங்
கைம்முறையா யிப்படித்தான் கண்டு கொள்ளு
தேனென்ற மொழியாட்குப் பரனார் சொன்னார்
செகமெல்லாம் இப்படித்தான் செனித்த வாறே. 34

[அ. பொ.] *தேனென்ற மொழியாள் = உவமையாள்; பரனார் = சிவனார்; செனித்த = தோன்றிய.*

பத்து வாயுக்களின் பெயரும் பிராணவாயு இருப்பிடமும்

பிலத்துநிற்கும் பிராணனோட பானென்றும் வியானன்
பிரியாத உதானன்சமா னனொடு கூர்மன்
நலத்துகின்ற நாகனெழிற் கிருகரன் றானாம்
நற்றேவ தத்தனொடு தனஞ்சயன் பத்தாகும்
இலக்கமுடன் பிராணநிலை மூலமதிற்றான் றோன்றி
எழுந்துசிர சளவுமுட்டி யிருவிழியின் கீழாய்
கலக்கமற நாசிவழி யோடுமீ ராறு
கடுகியெட் டுட்புகுந்து கழியுமோர் நான்கே. 35

[அ. பொ.] *மூலம் = மூலாதாரம்.*

அபானன், வியானன், உதானன், சமானன் வாயுக்கள்

உந்தியெனுந் தலத்தின்கீ ழபானன் நின்று
உறுமிமலச் சலங்களையுங் கழலச் செய்யும்
விந்தையெழில் வியானன்றோ லதனில் நின்று
மிகக்களையும் வனப்புமுண் டாகச் செய்யும்
இந்தவுதா னன்செயலுண் டசனந் தன்னைப்
பெருநாடி நரம்புவழிப் பூட்டல் செய்யும்
இந்தவுடல் தனைவளர்க்குஞ் சமானன் தானு
மியாவையுமே மிஞ்சவொட்டா திருத்து மன்றே. 36

[அ. பொ.] *களை = நல்ல தோற்றம்; வனப்பு = அழகு; அசனம் = உணவு; பூட்டல் = ஏற்கும்படிச் செய்தல்; இருந்து = இருக்கச் செய்யும்.*

கூர்மன், நாகன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் வாயுக்கள்

கூர்மனிரு விழியிலமைந் திடுமே நாசன்
கொட்டாவி விக்கலெனுங் கொடுமை செய்யும்
தீர்மைகிரு கான்னீட்டி முடக்கி வைக்க
தேவதத்தன் விழித்துமே வசனஞ் செய்யும்
பேர்மன்னுந் தனஞ்சயன்மேற் சிரசி ரண்டாய்ப்
பிளந்திடும் போதோடிப் போவ தாகும்
நேர்மையறிந் திடுமெய்யினில் நாடி பத்தின்
நிலைமைதெரிந் திடவிவரம் உரைசெய் தோமே. 37

[அ. பொ.] *வசனஞ் செய்யும் = பேச வைக்கும்.*

பத்து நாடிகளின் பெயர்கள்

சுழிமுனை, இடகலை, பிங்கலை நாடிகள்

சுழிமுனையாம் இடகலைபிங் கலைகாந் தாரி
தூயத்தி சிங்குவயலம் புடைபுருடன் றானும்
நெழிகுகுதன் சங்கினியோ டீரைந் தாக
நின்றதச நாடிபத்தும் நிலைத்த நாமம்

மொழிவதுகேள் சுழிமுனைஎன் பதுமூ லத்தில்
முளைத்துநடு வெழுந்துசிர சளவு நிற்கும்
பிழிவழியச் சுழிமுனையிற் கலைகள் தோன்றிப்
பிறந்திரு நாசியிடம் ஓடி நிற்கும் 38

[அ. பொ.] *நாமம் = பெயர்.*

காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன் குருநாடிகள்

கண்டமதில் நின்றுகாந் தாரி நாவில்
கரைந்துநீர் பொசியவுபா யங்கள் செய்யும்
அண்டசெவி தனிலத்தி சிங்குவை நின்று
அவத்தையோர் நான்கினுக்கும் ஊஊ என்னும்
விண்டவலம் புடைபுருடன் இருவிழி யிலநின்று
மெய்மறந்த போதசை வாகி நிற்கும்
கொண்டகுகு நாடியீ ரடியைப் பற்றிக்
குடல்புரட்டி வாயில்நீர் சுழற்றி நிற்கும். 39

[அ. பொ.] *கண்டம் = கழுத்து; கரைந்து = ஒலிஎழுப்பி.*

சங்கினிநாடி - விடயம் ஐந்தின் பெயர்கள்

சங்கினியென் பதுநாபிக் குய்யம் பற்றித்
தானிற்கும் ஒன்றையுமே மிஞ்சொட் டாமல்
அங்குமதி காரியானோ னைம்பத் தொன்றும்
அறிவித்தோம் வசநாதி யைந்துங் கேளாய்
இங்குவச னங்கமனந் தானத்தோ டிருந்த
எழில்விச ர்னம் ஆனந்தம் ஐந்தில்
பொங்குவச னிபயிலும் வாக்கில் நின்று
பொருந்துவச னத்தையவண் பிறப்பிப் பானே. 40

[அ. பொ.] *குய்யம் = வயிற்றின் அடிப்பாகம்; அதிகாரி = எழுத்துகள்; வசனம் = பேச்சு; கமனம் = போக்குவரத்து; தானம் = கொடுத்தல் (விடல்) விசர்ச்சனம் = கழிவுப் பொருள் களைக் கழித்தல்; ஆனந்தம் = களிப்பு.*

நோய்களை எட்டுவிதத் தேர்வுகளாலும் முடிவு செய்தல்

தரணியுள்ள வியாதிகளை யட்டாங் கத்தால்
தானறிய வேண்டுமது ஏதே தென்றால்
திரணியதோர் நாடிகண்கள் சத்தத் தோடு
தேகத்தி னதுபரிசம் வண்ணம் நாக்கு
இரணமலம் மூத்திரமாம் இவைக ளெட்டாம்
இதம்படவே தான்பார்த்துக் குறிப்பாய்க் கண்டு
பரனருளாற் பெரியோர்கள் பாதம் போற்றிப்
பண்புதவ றாதபண்டி தஞ்செய் வீரே. 41

[அ. பொ.] *சத்தம் = ஒலி (இது பேச்சு; மூச்சு; இதயம் முதலானவைகளினது); பரிசம் = தொட்டறிதல்; வண்ணம் = நிறம் பதம்; பண்பு = குணம் (தன்மை); பண்டிதம் = மருத்துவம் (சிகிச்சை)*

உடலின் வண்ணத்தாலும் தொட்டுணர்தலாலும் நோய்வருங் குறியறிதல்

முனைகின்ற தேகபரி சத்தைப் பார்க்கில்
முன்வாத தேகிக்குச் சரீரஞ் சற்றே
அனைகின்ற உட்டிணமாம் பித்தத் தேகிக்
கதிகமுண்டாம் அப்பால்சீ தளமாய் நிற்கும்
நனைகின்ற சிலேட்டுமந்தான் சூழ்தே கிக்குத்
தொந்தகுணம் நால்விதமாம் நிறந்தான் கூறில்
பனைவாத தேகநிறங் கருத்து நிற்கும்
பயித்தியதே கநிறமஞ்சள் சிவப்ப தாமே. 42

[அ. பொ.] *தேகி = உடலை உடையவன்; பயித்தியம் = பித்தம்.*

ஒலியால் நோயறிதல்

தாமேசி லேட்டுமதே கநிறம் வெளுப்பு
தான்தொந்த தேகம்நால் விதமாய் நிற்கு
மாமயிலே சத்தமது அறிய வேண்டில்
வாதரோகி சமதொனியாய் வார்த்தை பேசும்

ஈமமுள்ள பித்தந்தான் உறக்கக் கூறும்
இயம்பிடும் சிலேத்மரோ கிக்கீன சத்தம்
நாமுரைத்தோம் தொந்தரோகிக் குத்தா னிந்த
நால்விதமாம் பொருந்துசத்தம் நயந்து காணே. 43

[அ. பொ.] *சமதொனி = நடுத்தரமான ஒலி; ஈனசத்தம் = மெலிந்த ஒலி.*

கண்களால் நோயறிதல்

காணுகின்ற வாதரோ கிக்குக் கண்கள்
கருநிறமாய் நொந்துமிகத் தண்ணீர் பாயும்
பூணுகின்ற பித்தரோ கிக்கு மஞ்சள்
போலிருக்குஞ் சிவப்புநிறப் பொலிவும் தோன்றும்
பேணுகின்ற சிலேட்டுமரோ கிக்குக் கண்கள்
பீளைகட்டி வெளுத்திருக்கும் சன்னி பாதம்
வாணுகின்ற சிவப்புடைத்தாய் வந்து வீங்கில்
வந்திடுங்கா மாலையென வகுத்துச் சொல்லே. 44

[அ. பொ.] *பொலிவு = சாயல்; பீளை = கண்ணின் கடைகளில் தங்கும் மாசு.*

வாதமலம், பித்தமலம், கபமலம், தொந்தமலம், வாதச் சிறுநீர் நிறங்கள்

மந்தவாத ரோகிக்குத் தானும் மலமி
றுகிக்கட் டுப்பட்டுக் கறுத்துத் தோன்றும்
சிந்துபித்த ரோகிமலம் மஞ்ச ளாகில்
சிவப்பாகில் சேர்ந்திருக்குஞ் சிலேத்மத் துக்குச்
சொந்தமலம் வெளுத்திருக்கும் மலக்கட் டாகத்
தொந்தமலம் நால்விதமாய்த் தோன்றிக் காணும்
விந்தமுள வாதரோகிச் சிறுநீர் தானும்
வெளுத்திருக்கும் பயித்தியநீர் விதம்சொல் வேனே. 45

[அ. பொ.] *மந்தம் = செரியாமை.*

பயித்தியர் சிறுநீர், கபநீர், தொந்தநீர், வாதநோய் நீர், பித்தநோய் நாக்கு வண்ணங்கள்

விதமுள்ள பயித்தியந்தான் சிறுநீர் மஞ்சள்
விதமுடைத்தா யிருக்குமல்லால் சிவப்புத் தோன்றும்

நுதையுள்ள சிலேட்டுமத்தோர் நீர்தான் மெத்த
நுரைகலங்குந் தொந்தநீர்நால் விதமாய்க் காணும்
கதையுள்ள நாக்குநிறஞ் சொல்லில் வாதந்
தோன்றிநிற்கும் வெடித்துமுள்போல் கறுத்தி ருக்கும்
கதையல்ல சிவந்தாலும் பசுத்தா லுந்தான்
கனமுள்ள பயித்தியர்நா கணக்குத் தானே. 46

[அ. பொ.] *பசுத்தாலும் = பசுமைநிறம் கொண்டதாலும்.*

கபநோய் நாக்கு, சன்னிநோய் நாக்கு, தொந்தநோய் நாக்கு

தானமொடு வாய்வெளுத்து நீருண்டாகிற்
றான்சிலேத்து மநாவாகும் ஈரம் அற்றே
ஆனைமுட்போல் கறுக்கில்சன் னிரோக நாவாம்
அதமதொந்த நாவுநிறம் நால்விதமாய்த் தோன்றும்
ஆனவல் வகையெட்டும் அறிந்த பேரை
அவனிதனிற் பண்டிதரா யறியச் சொல்வார்
ஈனமிலாப் பொறியடக்கும் பெரியோ ரன்றி
எய்தாது யாவருக்கு மியம்புங் காலே. 47

[அ. பொ.] *பொறி = ஐம்பொறிகள்; இயம்பு = கூறு.*

நாடியறியும் இடங்கள்

செய்கின்ற நாடிபெரு விரல்கள் மேலாம்
திருந்திழைமுன் றங்குலத்தி னடுவ தாகத்
தைகின்ற கோதுமை யரிசி போலச்
சர்வம்வி யாபித்திருக்கும் அதுதான் கூறில்
கையடியுங் காலடியும் நாடி நிற்குங்
கன்னியருக் கிடப்புறமாம் நம்பிக் கங்கே
மைகின்ற வலப்புறமாம் வாதநாடி வந்து
முன்னேந டக்கும்அப் பால்வகை சொல்வேனே. 48

[அ. பொ.] *அரிசி = தானியம்; சர்வம் = எல்லாம்; வியாபித்து = பரவி; நம்பி = ஆண்பால். (சிறப்புப் பெயர்)*

பித்தசிலேத்தும நாடி நடைகள்

சொல்லுகின்ற பித்தநாடி தோற்றும் அப்பால்
தொடர்ந்துசிலேட் டுமநாடி தோற்றும் அப்பால்

அல்லுகின்ற குழலாளே நாடி நின்றால்
ஆச்சரிய நாடியென்ற றிந்து சொல்லு
மல்லுகின்ற வாதத்தில் நாடி யங்கே
வக்கிரக தியாநடக்குந் தவளை போலத்
நல்லுகின்ற வாவியட்டை தொட்டி லாட்டல்
நல்லாயிப் படிநாடி நடக்குந் தானே. 49

[*அ. பொ.*] *அல்லுகின்ற = கறுக்கின்ற; குழல் = கூந்தல்; வக்கிரகதி = மாறுபட்ட போக்கு; வாவி = குளம்.*

பயித்தியநாடி நடை, சிலேத்துமநாடி நடை.
வாதமும் பித்தமும், தொந்தித்தநாடி நடை

நடக்கும் பயித்தியஞ்ச வலைப்பிள் ளைபோலும்
நடனமயில் அன்னம்போற் காகம் போலுந்
திடக்கும்சி லேட்டுமநாடி இலங்கும் பட்சி
செய்யபுறா ஊர்க்குருவி கோழி போல
அடக்கமாய்ந டக்குமது மயிலே சொன்னேன்
அவ்வளவே வாதபயித்தி யத்தின் தோற்றம்
மடக்கின்ற காடைபோல் நடந்துப் பின்னை
மஞ்ஞையென நடக்குமது மதித்துக் கூறே. 50

[*அ. பொ.*] *இலங்கும் = விளங்கும்; மஞ்ஞை = மயில்.*

வாதசிலேத்துமந் தொந்தித்தநாடி, செரியாமை நாடி, அபத்தியத்தின் நாடி, மகளிர்சங்கை நாடி, மலபந்த நாடி, சன்னிவாத நாடிகள் வருகை.

கூறுகின்ற வாதசிலேத்து மமுங் கூடில்
கோழிபட்சி யெனநடக்கும் அசீரண நாடி
தூறுகின்ற அபத்தி யத்தின் நாடி
தூங்குகின்ற காகநடை யென்று சொல்வார்
தேறுகின்ற ஸ்திரீசங் கையிப் படியாய் நின்று
தீவிரமாய் நடக்கும் மலபந்த நாடி
ஊறுமன்னம் போல்நடக்குஞ் சந்நி வாதம்
உயர்நாடி விதிகளையும் உரைக்கக் கேளே. 51

[*அ. பொ.*] *கோழிபட்சி = (இருபெயரொட்டு); ஸ்திரி சங்கை = பெண்களுடன் உடலுறவு கொள்வது; தீவிரம் = விரைவு.*

குடிலை, சூக்குமவாயு, சன்னிபாதம், சங்கினி, காந்தாரி ஆகிய நாடிகளின் நடைகளறிய.

உரைத்தவிற கின்கட்டுக் குள்முஞ் சூறு
உலவுதல் போலேநடக்குங் குடிலை வாயு
விரைத்தெழுந்தே மந்தமா யிருந்து பின்னும்
விதமாக நடக்குமது சூக்கும வாயு
புரைத்தருமை யிவ்வகையின் சன்னி வாதம்
பொறுப்பாகக் குவிந்தமுலை போலுங் கொங்கை
முரைத்தெழுந்த சங்கினிகாந் தாரி பின்னே
முறைமையதாம் நாடியென முனைவர் தாமே 52

[அ. பொ.] குடிலை = மறைந்து நடக்கும் வாததோடம்; சூக்கும = நுண்ணிய; முனைவர் = முயல்வார்.

(மருத்துவர் இலக்கணம் முற்றிற்று)

***

பிண்டத்தோற்றப் படலம்

மக்கட்பிறப்பு வரலாறு கூறுதல்

(விருத்தம்)

சீர் நிறைந்த மானிடர்கள் பிண்டோற் பத்தி
திறைந்துவரும் சுக்கிலமாம் சுரோணி தந்தான்
கார்நிறைந்த பிண்டமது தசமா தந்தான்
காட்டினார் கருவிகர ணாதி யெல்லாம்
பார்நிறைந்த தத்துவங்கள் வயது மார்க்கம்
பாடினாரிந் நூலின்மு தன்மை யாக
ஏர்நிறைந்த மான்மரட்சா மிருத மென்று
இயம்பினார் வயித்தியசங் கிரக மாமே. 53

பாடபேதம்:- ஏர்நிறைந்த ஆவியளிக் குமமு தமென்றே இயம்பினார்கா ணமுதமுறைச் சுருக்க மீதே.

[அ. பொ.] பிண்டம் = உயிருடம் கூடிய உடல்.

மங்கையர்கள் பூத்ததுமுதல் சிலநாள் வரைக்கும் கருக்குழி மலர்ந்திருக்கும். அக்காலத்தில் சுக்கிலந்தரித்தால் வாயுவன்னியில் சுக்கிலசுரோணிதம் சம்மந்தப்பட்டுக் கடுகுபோலும், நீர்க்குமுழி போலும், முட்டை போலும் திங்களொன்றில் வாழைப்பூ மொக்கு போல் இரண்டு பிண்டமாகி தலை உடலென்ற வேறுபாடுகள் தோன்றும். இரண்டில் உடலினின்று கை கால்களரும்பிக் கால்களுக்கிடையில் முள்ளந்தண்டு வாயல்போல நெடுகியிருக்கும். முகம், இரத்தாசயம், சுவாசப்பை, இரைப்பை, குடல்கள் முதலிய முகைக்கும், கண்களும் பின்பு வாய், நாசி, காதுத்துவாரங்களுந் தோன்றும். மூன்றாம், நான்காம் திங்களில் மூக்கு, உதடு, கண்டம், காது உண்டாகி கைகால் மரக்கொம்புபோல் வளர அவற்றின் நுனிகளிலே விரல்கள் தோன்றும். ஐந்தாறுமாதம் இறுதியில் சிக்கற்றே பூரணரூபமாய்விடும். ஆறுமாதம் முதல் மேற்படி உறுப்புகளும் எலும்பு, தலைமயிர், நாடி, நரம்பு ஏனைய அங்கங்களும்

பிராணாதி பஞ்சவாயுக்களும் உண்டாகும். ஏழாவது மாதத்தில் கருவுக்கு அங்கவுருவம் ஓடுவதும், பிடிப்பதும், அசைவதும், உணர்வும் உண்டாகும். எட்டாவது மாதத்தில், தாயுண்ட அன்ன சாரங்கள் சிசுவின் கெற்பத்தில் ஊறும். ஒன்பதாம் மாதத்தில், தன்னறிவு தோன்றும். பத்தில் பரமசிவத்தை நோக்கி தவஞ்செய்து தலை தோற்றமாகிப் பிறப்பு உண்டாகும்.

வயது 120–ல் முப்பதுக்குள் உடல் வளரும். அதற்குமேல் முகத்தின் ஒளி குன்றும். நாற்பதுக்குமேல் பொலிவுகெடும். ஐம்பதுக்குமேல் கண்ணொளி மயங்கும்; நடக்கிற் திகைப் புண்டாகும். புத்தி கோபாக்கினி அதிக சீறலுண்டாகும். 70–வயதுக்குமேல் அறிவு குறையும். 80–க்குமேல் சுவாசம் மேல்நோக்கி வெளியிற் பாயும். 90–க்குமேல் ஐம்பொறியும் புலனும் ஒடுங்கி இந்திரியமற்று நூற்றிருபதில் இறப்பு. ஆனாலிடையில் விதியினால் அவமிருத்து, தத்துப்பிணி முதலானவைகளால் இறப்புமுண்டு.

உடல் அமைப்பு விவரம்

பிருதிவி – நிலம் (மண்), அப்பு – நீர், தேயு – தீ, வாயு – வளி (காற்று), ஆகாயம் – விசும்பென்று (வெளி) சொல்லிய பஞ்ச பூதங்கள் உடலுக்கு ஆதாரமாயிருப்பதால் சுரோணிதத்துடன் சுக்கிலஞ் சேரும்போது வாத, பித்த, சிலேத்து மங்களில் எது அதிகரித்திருக்கின்றதோ அது சிசுவிற்குட்பற்றி வாதஉடல், பித்த உடல், சிலேத்தும உடலென்று மூவகை உடல் அமைப்பு உண்டாகும்.

வாத, பித்த, சிலேத்தும உடற் குறிகள்

(விருத்தம்)

சொல்லும் வாத தேகிகட்குந்
 தோற்றும் பித்த தேகிகட்கும்
வெல்லும் சேத்ம தேகிகட்கும்
 விளையுங் குணங்கு றிப்புமுதல்
கொல்லும் வியாதி செய்யும்விதம்
 குன்றும் நாடி நடக்கும்விதம்

புல்லு மாந்தர் தானறிய
புகன்றார் முனிவர் மடமயிலே. 54

(இ-ள்) வாத உடல், பித்த உடல், சேத்தும உடல் இம் மூவர்கள் உடல்குறிப்பும் நாடிநிதானமும் நோய்வளர் குறிப்பும் மானிடர்களெளிதில் அறியும்படி உரைக்கத் துணிந்தேன் பெண்ணே என்பதாகும்.

வாதஉடற் குறிப்புகள்

நாடி மெதுவாய் நடக்கும்; உடல்மெத்த அசதியுள்ளதாயும். புத்தி மந்தமாயுமிருக்கும். கொட்டாவி மேலிடும். மலத்தை இறுக்கும். அக்கினி மந்தமுண்டாகும். சுரோணிதங் குன்றும். போகங் குறையும். உற்ற காரியத்தை மெத்தவே எண்ணும். சற்றுஞ் சலியாம லுரைப்பதெல்லாம் உழல்வாயிருக்கும். வெற்றியும் புகழுமுண்டாக வேண்டிய பொய்யை மெய்யாகப் பேசும். உடல் குளிர்ந்து பருத்திருக்கும்.

பித்தஉடற் குறிகள்

நாடி விரைவாய் நடக்கும். திடமும் தீர்க்கமுங் கடினமான காரியங்களைச் சாதிக்கும் சத்தியுமுண்டாகும். இளமையில் நரைக்கும். கடைக்கண் சிவப்பாயிருக்கும். சொற்கள் அமிர்தமா யிருக்கும். காமவிகாரங்கள் அதிகரிக்கும். உடல் வெப்பமா யிருக்கும். மெய் பொய் அறியும்படி பல நூல்களை ஆராயும்.

சிலேத்துமஉடற் குறிகள்

நாடி அதிக மிறட்சியும் ஈனபலமுள்ளதாயுமிருக்கும். உடம்பு வியர்க்கும். சன்மார்க்கத்தில் இச்சையுண்டாகும். தோகையரின் இன்பமும் பொய்யும் களவும் விலகியிருக்கும். இடம் காலங்களில் சிலேத்துமத்துக்கதிக நிறை காட்டும். கண்ணாலாத்துமா பிரியும். தலைமயிர் நீண்டு காட்டும்படி கூறும். திருமாதணைந்து வாழ்வாள்.

(பிண்டத்தோற்றப் படலம் முற்றிற்று.)

நாடி விளக்கப் படலம்

அதாவது மானிடர்கள் நரம்புகளின் வாத பித்த சிலேத்துமத் தொகுப்புகளை எளிதிற் கூறுதலாம்.

கூறு மாந்தர்க் கிருக்கும் நரம்பினில்
தேறும் நாடி யெழுபத் தீராயிரம்
மீறும் பத்தின் இலங்குந் திருநாடி
மாறுங் கூர்வகை மாமுனி யுற்றதே. 55

(இ-ள்) மக்கள் 72000 தசநாடி நரம்புகள் உந்திச் சுழியிலிருந்தெழுந்து கீழ்மேலாய்ப் போய்ப் பீர்க்கங் கூடுபோல் ஆக்கையெல்லா மகற்றி நிற்கும் இவைகளில் இடகலை, பிங்கலை, சுழிமுனை, அலம்புடை, காந்தாரி, அத்தி, சிங்குவை, சங்கினி, இயம்புருடன், குரு, வென்றதசநாடி–10. இடகலை வலதுகாற் பெருவிரலிலிருந்து இடது நாசி வரையிலும் பிங்கலை யிடதுகாற் பெருவிரலிலிருந்து வலது நாசிவரையிலும் கத்தரிக்கோன் மாறலாக ஓடிநிற்கும். சுழிமுனை மூலாதாரத்திலிருந்து ஆக்கினைவரையோடி உச்சியில் அச்சுருவாணியால் நிற்கும். பொறியிற் சூடுண்டாகும். அலம்புடையும் இயம்புருடனும் இருசெவிகளைப் பற்றி நிற்கும். இரு கண்களைப் பற்றி நிற்கும். அப்போது கண்ணொளிர்வு தோன்றும். காந்தாரி நாபியிற்றோன்றி சிரமேல் நிற்கும். ஏழு நாடியாய்க் கண்டத்திலிருக்கும். சங்கினி, குரு குய்யத்தைப் பற்றி நிற்கும். உடலில் பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயனென்ற பத்துவாயுவும் வழங்கும். அப்போது உடல் சூத்திரப்பாவை போலாம்.

சொன்னார் நாடி தசநாடி தொகுக்கும் பதத்தில் மூன்றுதரம்
அன்னே வாத பித்தமென வறையுஞ் சேத்தும நாடியதாய்
பொன்னே மாதே பிணிக்குறிப்பும் புகலு மலமுஞ் சலக்குறிப்பும்
முன்னோர் முனிவர் மூலவகை மொழிந்தா ராயுள் வேதமிதே. 56

மேற்கண்ட நாடி 10-ல் ஏழு நீங்கி இடகலை, பிங்கலை, சுழி முனையென்ற மூன்று நாடியும் ஒரே நாடியை அமைத்து இட கலைவாத நாடியாகவும் நடக்கும். வாதம் மலத்திலும், பித்தம் நீரிலும், சிலேத்துமம் விந்திலும் அடங்கும்.

தசவாயு பத்தில் அபானன் வாதத்திலும், பிராணன் பித்தத்திலும், சமானன் சிலேத்துமத்திலும் இருக்கும்.

பிராணன், மூலாதாரத்திலிருந்து இருதயகமலத்தின் வழி ஊடுருவிக் கொண்டு இடகலை, பிங்கலைக்கு நடுவாய்க் கபாலம் வரை யோடிமுட்டி நாசியின் வழியாய் வெளியிற் பாய்ந்து போகும்போது கழிந்தது 4 அங்குலங்கள் போக மற்றவை திரும்பி உள்ளே புகும்.

சொல்லுவேன் மானிடர்க்கு நாழி யொன்றில்
சுவாசமது முந்நூற்றோ டறுப தாகும்
வெல்லுவே னிருபத்தோ ராயி ரந்தான்
விளங்கிநிற்கும் சுவாசமது அறுநூ றாகப்
புல்லுவேன் கலைமூன்று நாடி மூன்றால்
புகழான மாத்திரையுஞ் செப்ப லாகும்
மல்லுவேன் நாடியது சரியா யோடில்
மானிடற்குப் பிணியுமது மேவி டாதே. 57

நாழிகையொன்றுக்கு 360 சுவாசமாக நாளொன்றுக்கு 21600 சுவாசமும், இரேசக பூரக கும்பமாம் நாடிமூன்றும், இடகலை, பிங்கலை, சுழிமுனையாகிய வாதபித்தசிலேத்தும மென்பவைகளே. இடைகலை 14-அங்குல அளவு ஓடும். அதுவே பித்தநாடி மாத்திரை 1-பிங்கலை 12 அங்குல அளவு ஓடும். அதுவே பித்தநாடி மாத்திரை அரை, சுழிமுனை இரண்டு நாசியிலும் உபயமாகப் பிரிந்தோடும். அக்கினி அலியெனப்படும். அதுவே சிலேத்தும நாடி மாத்திரை 1/4 இவ்விதமாக நாடியோடிற் உடலில் பிணி இல்லை.

செப்பு முந்தி சிதையும் வாதநிலை
ஒப்பு மார்பு முதையும் பித்தநிலை
கப்பு முச்சிக் கழறு மையநிலை
மெய்ப்ப மாமுனி மீண்டு முரைத்தரே. 58

வாத பித்த சிலேத்தும நிலை

அபானம் முதல் உந்திவரை வாதநிலை. உந்தியின்மேல் மார்பு மட்டும் பித்தநிலை. மார்புமுத லுச்சிவரை ஐயநிலை.

வாத பித்த சிலேத்துமத்தின் இயல்பு

வாதம்: *வாயு – புளிப்பு – குளிர்ச்சி – நிறம் – மை, நீலம்.*
பித்தம்: *வன்னி – கசப்பு வெதுப்பு – நிறம் – பசுமை, பச்சை.*
ஐயம்: *அப்பு – தித்திப்பு – வியர்வை – நிறம் – வெண்மை.*

கூறவே வாதமது எழும்பிற் றானால்
கொப்பென வேபுளிப்பு மதுநா விலேறும்
சீறவே பித்தமது எழும்பிற் றானால்
சிறுசிறுத்துக் கசப்புமது நாவிலேறும்
மீறவே சேத்மமது எழும்பிற் றானால்
முனையான தித்திப்பு நாவி லேறும்
தூறவே இம்மூன்று குறிப்பு தன்னை
சூட்டினார் மலையமுனி தெரியத் தானே. 59

வாதம் எழும்பிடில் புளிப்பு நாவிலேறும். பித்தம் எழும்பிடில் கசப்பு நாவிலேறும். சிலேத்துமம் எழும்பினால் தித்திப்பு நாவிலேறும். மலையமுனி = அகத்தியர்.

உடல் குளிர்ந்தால் வாதம். உடல் சுட்டால் பித்தம். உடல் வியர்த்தால் சிலேத்துமம்.

வாத, பித்த, சிலேத்தும காலம்

காலையில் வாத நாடி கடிகையில் பத்த தாகும்
பாலையாம் பித்த நாடி பகருச்சி பத்த தாகும்
மாலையாம் சேத்தும நாடி மதிப்புடன் பத்த தாகும்
வாலையாம் மனோன்ம ணிக்கு வகுத்துமே தொகுத்த தாகும். 60

உதயத்தில் 10 கடிகை வாதம். உச்சியில் 10 கடிகை பித்தம். மாலையில் 10 கடிகைவரை சிலேத்துமம் நடக்கும். (கடிகை = நாழிகை = 24 நிமிடம்.)

மனிதர்களுக்கு வயது 120–ல் 10 வயதுவரை வாதகாலம். 40 முதல் 80 வரை பித்தகாலம். 80க்கு மேல் 120 வரை சிலேத்தும காலம்.

நாடி உண்டாவதற்கு அடிப்படை

இருதயத்தின் இடது சடலம் குவியும்போது, இரத்தங் கண்டரையின் வழியாகச் சென்று சகல நாடிகளுக்கும் பரவும். அப்போது நாடிகள் விரியும். மறுபடியும் விடாது சடலம் விரியும் போது நாடி நரம்பிலிருக்கும் இரத்தங் குறைந்து நாடி சுருங்கும். இவ்விதமாக இருதயம் விரியவும் சுருங்கவுமாக இருப்பதால் அதனுட்சேர்ந்த நாடி நரம்புகளுக்கும் விரிந்து சுருங்குந் தன்மை உண்டு. இந்தச் செய்கையைத் தான் நாடி நடையென்று சொல்லப்படும்.

நாடிநடையின் பண்பானது இதயத்தின் நடைக்கு ஒத்திருக்கும்

இருதயத்தினுடைய நடையின் பேதா பேதங்களை நாடி நமக்குத் தெரிவிக்கின்றது. உடலிலிருக்கும் உறுப்புகளில் இருதயமே முதன்மையான உறுப்பு. அதினுடைய நடை உடல்நிலைக்கு ஒத்திருக்கும். உடலில் நோய் கண்டால் இருதயத்தினுடைய இயல்பான நடை இழந்து போகும். உடலிலிருக்கும் நோயை இருதயந் தெரிந்து கொண்டு நாடி மூலமாக நமக்கு அறிவிக்கின்றது. ஆகையால், நாடி நடையின் வேறுபாடுகளை நன்றாய் அறியாவிட்டால் உடலில் இருக்கும் நோயின் கூறு செவ்வையாகத் தோன்றாது.

ஒரு நிமிடத்தில் நாடி நடக்கும் அளவு

குழந்தை பிறந்தவுடன் 10,040 நாடி நடக்கும். பாலியத்தில் 10,020 முதல் 10,030ம், யௌவன பருவத்தில் 9004ம் சம்பூர்வண பருவ புருடனில் எழுபது முதல் – எழுபத்தைந்து – சம்பூர்ண பருவ மங்கைக்கு எழுபத்தைந்து முதல் எண்பது. சீணப் பருவத்தில் எழுபது. முதுமைக் காலத்தில் எழுபத்தைந்து முதல் எண்பது. உட்கார்ந்திருக்கும்போது நாற்பது. நிற்கும் போதும் படுத்திருக்கும் போதும் எழுபத்தொன்பது. இவ்விதமாய் நாடி நடக்கும்.

நோயாளியைப் படுக்கவைத்தாவது உட்கார வைத்தாவது நாடி பரிட்சிக்கலாம்.

நாடியின் வேறுபாடுகள்

வெய்யிலிலே எப்போதும் நடக்கை யாலும்
வெம்பசியி லாகிரிக ளருந்த லாலும்
துய்யவெய்யில் புகையிலைகள் கொள்ள லாலும்
தொடர்ந்தசுர நித்திரைகள் கொள்ள லாலும்
நையவே கோபமது கொள்ள லாலும்
நாள்தோறு மபிர்தமது வடித லாலும்
துய்யவே நாடிநடை தீர்க்க மாக
துடிதுடித்து படபடத்து ஒடுந் தானே. 61

நடந்து உடல் சோர்வுற்றிருந்தாலும், சாப்பாடு, சுடு உணவுப் பண்டங்கள், சாராயம் முதலிய லாகிரி பொருள்கள், புகையிலை, வெய்யில், சுரம், உறக்கமின்மை, மனக்கவலை அதிக பலவீனம், இரத்தம் வடிதல் முதலானவைகளினாலும் நாடிநடை தீவிரமாய் படபடவென்றுமோடும். அசுரநித்திரை = மிகுதியான தூக்கம். (கும்பகன்ன தூக்கம்)

பசி, குளிர், அதிக நித்திரை முதலானவைகளினால் நாடி நடை குறையும்.

கொண்டிடவே சயரோகி காச ரோகி
குறிப்பாகச் சிற்றின்பஞ் செய்த பேர்கள்
அண்டிடவே தரித்திரர்கள் விருத்தர் பாலர்
அன்பாகத் தண்ணீரில் முழ்கி னோர்கள்
கொண்டிடவே யிவர்களது வுறுப்பின் றாது
கூறவே முடியாது யெவர்க்குக் கிட்டும்
பண்டிடவே யிப்பரிட்சை யார்தான் காண்பார்
பராபரத்தின் மகிமையிது பாரு பாரே. 62

தாது = நாடி

விருத்தர், பாலர், சயநோயாளி, தரித்திரர், சிற்றின்பஞ் செய்த பேர்கள், தண்ணீரில் மூழ்கின பேர்கள் இவர்களுடைய தாதுக்களின் உண்மை தெரியாது.

செப்பவே நாடி தானும் சிறப்புடன் பார்க்கும் போது
ஒப்புடன் பூமி யிற்கை யூன்றிக் கொண்டிருக் கும்போது
துப்பற காலைக் கட்டிச் சோர்வடைந் திருக்கும் போது
செப்பவே கட்டி ருந்தால் சிதையுடன் நாடி தோன்றா. 63

நாடி பார்க்கும் இடத்திற்கு மேல் யாதொரு கட்டிருந்தாலும், பூமியிற் கரத்தை ஊன்றிக் கொண்டிருந்தாலும், காலைக் கட்டிக் கொண்டிருந்தாலும் நாடிநடை தோற்றாது.

நாடி பார்க்கும் மாத வகை

சித்திரை வைகா சிக்குச் செழுங்க திருதயந் தன்னில்
அத்தமா மானி யாடி யைப்பசி கார்த்தி கைக்கும்
மத்தியா னத்திற் பார்க்க மார்கழி தையு மாசி
வித்தகக் கதிரோன் மேற்கில் விழுகின்ற நேரந் தானே. 64

தானது பங்கு னிக்குந் தனது நல்லா வணிக்கும்
மானமாம் புரட்டா சிக்கும் மற்றிராத் திரியிற் பார்த்
தேனென்ன மூன்று நாடித் தெளிவாகக் காணு மென்றுக்
கானமா முனிவர் சொன்ன கருத்தை நீகண்டு பார. 65

சித்திரை வைகாசிக்கும், காலைப்பொழுதில்; ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகைக்கும், மதியப் பொழுதில்; மார்கழி தை மாசிக்கும், மாலைப்பொழுதில்; பங்குனி ஆவணி புரட்டாசிக்கும் இரவுப் பொழுதில் பார்க்க நாடி தெளிவாய்த் தோன்றும்.

நாடி பார்க்குமிடங்கள்

கூர்ந்திடவே கன்னமது சுழியிற் றானும்
குறிப்பான கைகளிலும் தானந் தன்னில்
சார்ந்திடவே கணுக்காலி னுட்பு றத்தில்
சார்வாக பெருவிரல்கால் மேல தாக
தேர்ந்திடவே நாடிதனை யுபயோ கிக்கத்
தெளிவாக மாந்தருக்குச் செப்ப லாச்சே
பேர்ந்திடவே சகலருக்குங் கரத்தி னாடி
பேசினார் பிரமமுனி பேசி னாரே. 66

கைகளிலும் கன்னச் சுழிகளிலும் காற்பெருவிரல்களுக்கு மேலாகக் கணுக்காலிலுட் புறத்திலும் நாடி பார்க்கலாம். ஆனால் கைநாடி பார்ப்பதே அனைத்திற்கும் உத்தமம். மானிடர் களுக்குள் 72000 நரம்புகளில் நாடிகள் நடக்கின்றன. அதில் பிரதானமாய்க் கையைப் பிடித்து நாடி சொல்வதேனென்றால்

மணிக்கட்டுப் பரியந்தம் கையில் நாடிப் பெருநரம்பு ரத்தக் குழாய் சிறுத்திருப்பதால் வாதபித்த சேத்துமமாக நாடிகளை எளிதிலறியலாம். மற்ற இடங்களில் ரத்தக்குழாய் பருத்திருப்ப தால் எளிதில் அறிய இயலாது.

நாடியைப் பிடித்துப் பார்க்கும் முறை

பார்க்கவே கைபிடித்து நாடி தன்னைப்
பகர்ந்திடவே நெட்டையது வாங்கிப் பின்னுஞ்
சேர்க்கவே மணிக்கட்டு மேல தாகச்
சிறுப்புடனே நாடிதனை விரலாற் காண
தீர்க்கவே யழுத்தியுந்த ளர்த்தியே தான்
திறமுடனே நாடிதனை விரலாற் காண
ஆர்க்கவே நாடிதனைப் பார்ப்பா யானால்
அப்பனே நாடிநடை தெரியுந் தானே. 67

கையைப் பிடித்து நெட்டைவாங்கி அனல் பிறக்கத் தேய்த்துப் பெருவிரல் பக்கமாக இருக்கும் ஆரையெலும்பின் பேரிலோடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓரங்குலம் மேலாக மூன்று விரல்களால் சமமாக மெதுவாயழுத்தி நாடியைப் பார்த்த பின்பு விரல்களை மாறி மாறி அழுத்தியும் தளர்த்தியும் பார்த்தால் நாடி நடையைத் தெரிந்து கொள்ளலாம்.

பெண், ஆண்களுக்கு நாடி பார்க்கும் வகை

தானென வுலகத் துள்ளே தயங்கியே நாடி பார்க்கில்
வானெனு மின்னே கேளாய் வரும்புலன் சொல்லக் கேளு
நானெனும் புருடர்க் கெல்லாம் நாடிதான் வலக்கையாகுந்
தேனெனு மடவார்க் கெல்லாம் திடம்பெற விடக்கை சித்தே. 68

வலக்கையிலும் இடக்கையிலும் நாடி சோதிக்கலாம். ஆனால், ஆண்களுக்கு வலக்கையிலும், பெண்களுக்கு இடக்கையிலும் நாடு பார்ப்பது சிறப்பாகும்.

நாடி நிதானம்

மேற்சொல்லிய கிரமத்துள் (வரிசையில்) நாடியைப் பார்ப்பதில் முதல் விரற்கீழ் வாதநாடி, நடுவிரற்கீழ் பித்தநாடி, கடைவிரற்கீழ் சிலேத்துமநாடி நடை.

ஆகிய வாத நாடி யன்னம்போற் குயிலைப் போலும்
ஏகிய பித்த நாடி யெழிலா அட்டை போலும்
போகிய சிலேத்தும நாடி பொல்லாத பாம்பு போலும்
பாகுடன் முனிவர் தாமும் பாடினார் நாடி தானே. 69

வாதநாடி குயில் போலும், அன்னம் போலும் நடக்கும். பித்த நாடி ஆமைபோலும், அட்டை போலும், சிலேத்துமநாடி பாம்புபோல் நடக்கும்.

ஆடவர்க்கு நாடி நடக்கும் விதம்

வந்திடும் வாத நாடி மயில்போலும் அன்னம் போலும்
தொந்தமாங் கோழி போலும் தொகுப்புடன் பித்த நாடி
முந்திய வாமை போலும் முளைப்பட னட்டை போலும்
பிந்திய சிலேத்தும நாடி பேசொணா தவளை பாம்பே. 70

வாதநாடி: மயில், அன்னம், கோழி போலும்; பித்தநாடி: ஆமை அட்டை போலும், சிலேத்துமநாடி: பாம்பு, தவளை போலும் நடக்குமாம்.

பெண்களுக்கு நாடி நடக்கும் விதம்

பாம்பென வாத நாடி பகுப்புடன் சாப்பம் போலும்
வேம்பென பித்தந் தானும் விரும்பு மண்டுகம் போலும்
சாம்பென சிலேத்தும நாடி சடுதியி லன்னம் போலும்
நாய்பெணப் பெண்களுக்கு நாடிதா னடக்குந் தானே. 71

வாதம் பாம்பு போலும்; பித்தம் தவளை போலும்; சிலேத்துமம் அன்னம் போலும் நடக்கும்.

பஞ்சபூத நாடிகளிருக்குமிடம்

தூண்டிடவே பெருவிரல்தான் பூத நாடி
தொந்தமாம் ஆள்தோன்றி வாத நாடி
ஆண்டிடவே நடுவிரல்தான் பித்த நாடி
அணிவிரல் பௌத்திரந்தான் சிலேத்தும நாடி
பூண்டிடவே சிறுவிரல்தான் பூதநாடி
பூட்டினார் குருநாடி ஐந்து கோவை
நீண்டிடவே விப்பின்ன லார்தான் காண்பார்
நிறைந்தபரி பூரணத்தோர் காண்பார் பாரே. 72

பெருவிரல் பூதநாடி, ஆள்காட்டி விரல் வாதநாடி; நடுவிரல் பித்தநாடி, பவுத்திரவிரல் சிலேத்துமநாடி, சிறுவிரல் பூதநாடி, குருநாடி ஐந்துட் சேர்ந்து நிற்கும்.

குருநாடி இருக்குமிடம்

குருநாடி யெப்போதும் பித்தத்தின் முன்னே
குறிப்பாக நிற்குமது பாரு பாரு
தருநாடி தசநாடி திறமாய் நிற்கும்
தாக்குமுட லுயிராக நிற்கும் பாரு
திருநாடி வாதபித்த நடுவிற் பற்றி
தீவிரமாய் மூன்றுவிரல் தாண்டிப் பாயும்
வருநாடி விசைநரம்பி னூடே சேர்ந்து
வளர்சந்தர மண்டலம்போய்ச் சாரும் பாரே. 73

பாரேதான் பம்பரம்போற் கிருகி ருத்து
பகர்வாத பித்தமைய மென்ற நாடி
சேரவே மண்டலங்கள் மூன்றுஞ் சுற்றி
செழித்தகத்திரிக் கோன்மாற லெனவே சேர்ந்து.
வாரேதான் வாதபித்த நடுவி ருந்து
வாதத்திலும் கோயின்னம் மயில்போ லாகும்
கூரேதான் பித்தத்தி லாமை யட்டை
குறிப்பாகப் பாம்புபோல் தவளை யாமே. 74

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே நிற்கும். அது நாடிபத்திற்குந் திறமாய் நிற்கும். உடற்குயிராய் நின்ற குருநாடி; வாத பித்தத்தின் நடுவிலிருப்பதைப் பார்க்கில் அது மூவிரலுந்தாண்டி மூல முதலுருவிப் பாய்ந்து, விசை நரம்பூடே சேர்ந்து சந்திரமண்டலம் போய்ச் சார்ந்தபின்பு, பம்பரம்போல் கிறுகிறென்று வாதபித்தம் ஐயமென்ற நாடி முதலாடியோடி மண்டலங்கள் மூன்றுஞ்சுற்றில் கத்திரிக்கோல் மாறலெனக் கட்டிச் சேர்ந்து வாதபித்த நடுவிலிருந்து வாதத்தின் கோழி, அன்னம், மயில் போலும் நடக்கும். சிலேத்துமத்தில் பாம்பு போலும் தவளை போலும் இயல்பாய் நாடி நடக்கும்.

குருநாடியின் இயல்பு

குருநாடி வாதத்தில் அட்டைபோற் புரண்டு வரில் வாயு மிகும். இருமல் தினவு சொறி மிகுதியுண்டாகும்; தேகம் வாடும்; குருநாடி பித்தத்தில் ஆமை போல் நடந்தால் சுரங்காயும்; வாய்நீர் சுழற்றும் வியர்க்கும். சிலேத்துமத்திற்கு குருநாடி சிங்கம் போல் சீறி நிற்கில் சன்னி தோன்றும். குருநாடி சிலேத்துமத்தை ஊடுருவி அமருமாகில், அசாத்திய மரணக் குறிகளுண்டாகும். குருநாடி குன்றிப்போகில், வயிறு கழியும். கடுப்பெடுக்கும். கை, கால் வீங்கும். குருநாடி பக்கம் பாயிற், சிலேத்துமம் எதிரே போகும். குருநாடி நேரே நிற்கில் வாதபித்தம் இரண்டும் சேரும். குருநாடி பின் வாங்கில் அசாத்தியங்களுண்டாகும். குருநாடி ஐயத்தில் விட்டிலைப் போல் துடிக்கில் மரணம்.

நாடிகள் கீழ்மேலும் மீறியோடும் வகை

சந்திரன் வாதநாடி; சூரியன் பித்த நாடி; சுழிமுனை சிலேத்துமநாடி; வியாழனில் சேத்துமநாடி; சனி, செவ்வாய் ஞாயிறு இந்தக் கிழமைகளிற் பித்தநாடி; திங்கள், புதன், வெள்ளி இந்தக் கிழமைகளில் வாதநாடி மீறியோடும்.

ஞாயிற்றில் வாதமோடில்; சளி, இருமல், இரைப்பு உண்டாகும். செவ்வாயில் வாதமோடில் சுரமுண்டாகும். சனியில் வாதமோடில்; சீதளமும் சன்னியுமுண்டாகும். வியாழனில் பாதமோடில்; விலா முதல் உடலெல்லாம் வலியுண்டாகும். திங்களில் பித்தம் மீறில்; சலதோசம் உடனே காணும், புதனில் பித்த மோடில், நீரேத்தந் தலைக்குத்துண்டாகும். வெளியிற் பித்த மோடில்; கண்ணோய், காது நோயாம். வியாழனில் பித்த மோடில்; தாப சுரம் தலைவலியுங்காணும்.

வாதக் கூறு

சொல்லவே வாதமது மீறிற் றானால்
சோர்வடைந்து வாயுவினால் தேக மெங்கும்
மெல்லவே கைகால்க ளசதி யுண்டாம்
மெய்முடங்கு நிமிரவொண்ணா திமிருண் டாகும்

வெல்லவே வுடல்பொருமும் வயிறு ளைக்கும்
விரும்பியன்னஞ் செல்லாது விந்து நட்டம்
சொல்லவே நாப்புளிக்கும் கழிச்ச லுண்டாம்
கூறினார் மலையமுனி கூறி னாரே. 75

வாத மீறினால்: வாயுவினால் உடலெல்லாம் குத்தும்; கால் கை அசந்து பொருத்துக்கள் உளையும்; கால், கை ஒரு பக்கத்தில் முடங்கும்; குனிந்தால் நிமிரவொட்டாது திமிருண்டாகும்; உடல் பொருமும்; குடல் புரட்டும்; அன்னஞ் சுருங்கும்; வயிறு மந்திக்கும்; பொருமும்; மலசலங் கட்டும்; அபானஞ் சுருங்கும்; நாவு புளிக்கும்; தாது நட்டமாகும்; கழிச்சலுண்டாகும்.

கூறிடவே பித்தமது சீறிற் றானால்
குடல்கால் வறட்சியுமே நடுக்க முண்டாய்
மீறிடவே வரோசியந்தா னாவ றட்சி
மேலான சோபமது விக்கல் மூர்ச்சை
தூறிடவே கிறுகிறுப்புக் காத டைப்பு
தொந்தமாங் கசப்புடனே மண்டை குத்து
மாறிடவே நெஞ்செரிவு அக்கினி மந்தம்
மகத்தான குளிர்காமங் காத்த லாமே. 76

ஆமேதான் அஸ்திசுரம் பாண்டு சோகை
அழலான விடாச்சுரமும் பிரமே கந்தான்
போமேதான் காமாலை பித்த வெட்டை
பொல்லாத பாண்டுடனே சிவந்தா ரீராம்
தேமேதான் சிவப்பாயு மீஞ்ச ளாயும்
சிறுசிறுத்து இரண்டுவருங் குழுவி முந்து
நாமேதான் சொன்னோமே பித்தங் கூறு
நவின்றிட்டார் வானமுனி நவின்றிட் டாரே. 77

பித்தம் மீறினால்: உடலிற் காந்தலும் வறட்சியும் எரிவும் நடுக்கமும் உண்டாகும்; மண்டைக்குத்து, நா வறட்சி, கசப்பு, சுவையின்மை, தாகம், கக்கல், விக்கல், மூர்ச்சை, கிறுகிறுப்பு, காது அடைப்பு, அயர்வு, சோம்பல், வயிற்றுக்காந்தல், நெஞ் செரிவு, அக்கினிமந்தம், குளிர்சுரம், என்புசுரம், விடாச்சுரம், பாண்டு, காமாலை, சோகை, மயக்கம், பிரமேகம், பித்தவெட்டை

உண்டாகும். விழிசுழன்று குழிவிழுந்து இருண்டு வரும். நீர் மஞ்சளாயும் சிவப்பாயும் இறங்கும்.

சிலேத்துமக் (ஐயக்) கூறு

மன்னிய சேத்மம் மீறில்மெய் காயம் வெளுக்கும் வற்றும்
பன்னியே அன்னஞ் செல்லாப் பருவிக் கலிருமல் சத்தி
உன்னிய மூர்ச்சை யீளை உமிழ்நீர் வழுவ முத்துக்
கன்னியே நெஞ்சும் விலாவுங் கடுப்புட னோகு மாமே. 78

தொந்த (கலப்பு) நாடி

பார்த்திட நாடி தானும் பகருவேன் தொந்திப் பாக
ஏர்த்திட வாத பித்த மேற்றதோர் சேத்மம் மூன்றுங்
கோத்துமே வகுப்புச் சொல்லக் குறிப்புட னிந்த நாடி
சேர்த்துமே சாத்திய வசாத்தியந் தெளிவுறச் சொன்னோம் மாதே. 79

சிலேத்துமம் மீறினால்: உடல் காயும்; வற்றும் வெளுக்கும்; குளிர்ந்து நடுங்கும்; அன்னஞ் செல்லாது; விக்கல், கக்கல், இருமல், மேல்மூச்சு, திகைப்பு, வியர்வை, சயம், ஈளை உண்டாகும்; நெஞ்சும் விலாவும் நோகும்; இரத்தங்கக்கும்; நாவு வழுவழுத்து நிற்கும் வாய் நீரூரும்; நீர் சிறுத்திறங்கும்.

வாதமொரு பங்கு, பித்தம் அரை பங்கு, ஐயங் கால்பங்கு அல்லது, வாதம் ஒரு மாத்திரை, பித்தம் அரை மாத்திரை, ஐயங்கால்மாத்திரையுமாக ஓடினால் உடலில் பிணியில்லை.

கலப்புற்ற நாடி தொந்திப்பு

வாதத்தில் வாதமாகில்; *உடல் நொந்து நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும்; வாங்கும், உடல் பதறும்; அன்னஞ் செல்லாது.*

வாதத்தில் பித்தமாகில்: *வாய் குளறிப்பேசும்; கால்களிலும் வீக்கமுண்டாம்.*

வாதத்தில் சிலேத்துமமாகில்: *உடல் வீங்கும்; தலை யிடிக்கும்; குணங்கள் வெவ்வேறாகத் தோன்றும்; மெய் வெளுக்கும்; அன்னஞ் செல்லாது; நாளுக்கு நாள் வீக்கம் அதிகப்படும்.*

பித்தத்திற் பித்தமாகில்: *பிதற்றும்; கிறுகிறுக்கும்; கக்கலாக்கும்; இளைக்கும்; மேனி அத்திபோல உலர்ந்து வற்றி வெளுக்கும்; பின்பு வீக்கமுண்டாகும்.*

' த்தத்தில் வாதமாகில்: *பிடரி, கால், கையில் குத்தும்; வாய்குளறும்; பதறும்; அத்தி போலுலரும்; சுரங்காயும்; புத்தி மடியும்; பெருமை நீங்கிக் கோபமுண்டாகும்.*

பித்தத்தில் சிலேத்துமமாகில்: *வாய் குளறும்; பிதற்றும்; கக்கலாக்கும்; வாய் நீரொழுகும்; தலை சுற்றும்; வயிறு நோவும்; பித்தமொடுங்கும்; பிடரி வலிக்கும்.*

சிலேத்துமத்தில் வாதமாகில்: *நரம்பெல்லாம் வலித்து நிற்கும்; பிடரி குன்றி வலிக்கும்; விழிமேலாடும்; வாய் குளறும்;*

சிலேத்துமத்தில் பித்தமாகில்; *நாவு கசக்கும்; இனிக்கும்; பேச்சுத் தடுமாறிக் கபங்கட்டும்; குரல் வேறுபடும்; கண்ணிற் பீளைசாடும்.*

சிலேத்துமத்தில் சிலேத்துமமாகில்: *விழிவட்டம் கொள்ளும்; உயிர் பிரியும்.*

வாதத்தில் ஐயஞ்சேரில்: *சன்னி தோடம், மெய் மயக்கஞ் சோம்பல்; மூர்ச்சை; சோகை; பாண்டு உண்டாகும்.*

பித்தத்தில் வாதஞ்சேரில்: *பீனசம் மண்டைக்குத்து; வலிபவுத்திரம்; அரையாப்பு; வாதமூலங்களுண்டாகும்.*

பித்தம் வாதத்தேறில்: *பாண்டு, மஞ்சள்நோய், நீராம்பல், மகோதரம், சூதக்கட்டி, மகவை, வெப்புப்பாவை உண்டாகும்.*

ஐயம் பித்தத்திற் சேரில்: *வாயூறல், சுரம், கழிச்சல், கக்கலுண்டாகும்.*

வாதம் இரண்டு பங்கிலும் பித்தம் ஒரு பங்கிலும் ஓடில்; *வாதபித்த தொந்த நோய் வாய்வு அதிகரித்து வயிறு விம்மும்; வலிக்கும்; மாதரை இச்சிக்கும்; கக்கல் அதிகமாகும்.*

பித்தமிரண்டுபங்கும் வாதமொரு பங்கும் ஓடில்: *பித்தவாத தொந்த (கலப்பு) நோய், உட்டிணம் மிகுந்து உடல், கண்ணெரியும்: பசி, தாகம் உண்டாகும்; வாய் கசக்கும்; நினைவு மாறும்.*

வாதம் இரண்டு பங்கும் சிலேத்தும மொருபங்குமாகில்: *வாத சிலேத்தும தொந்த நோய்; வயிறு பொருமி வலிக்கும்; பசியாது.*

பித்தம் இரண்டு பங்கு சிலேத்துமம் ஒரு பங்குமோடில்; *பித்த சிலேத்துமக் கலப்பு (தொந்த) நோய்; தலைவறண்டு பிடரி நோகும். உடம்பெல்லாம் தினவுண்டாகும்; வயிறெரியும்; மந்தித்துப் பொருமும்.*

சிலேத்துமம் இரண்டு பங்கும் பித்தம் ஒரு பங்குமோடினால்: *சிலேத்தும வாத தொந்த (கலப்பு) நோய்; சன்னியுண்டாகும், தலை நோகும், வாய் தித்திக்கும், உணவு செரிக்காது.*

சிலேத்துமம் இரண்டு பங்கும் பித்தமொரு பங்குமோடினால்; *சிலேத்தும் பித்த கலப்பு நோய்; உடல் குளிர்ந்து கூசும்; தாகிக்கும்.*

வாதமிரண்டு மாத்திரையும் பித்தமொரு மாத்திரையுமாகில்; *கொடுஞ் சுமை சிரமேற்கொண்டு தாளுற நடப்பதுபோல நாடி நடக்கும்; உணவு செல்லாது.*

பித்தம் இரண்டு மாத்திரையும் சிலேத்துமம் ஒரு மாத்திரையுமாகில்: *பிள்ளை தொட்டில் நடுவிலசைவதுபோல நாடி நடக்கும்; பித்த சிலேத்துமக் கலப்பு நோய்; பசியிராது; அடிக்கடி வயிறு விம்மும்; பிதற்றும். அன்னமெரியும்; மஞ்சள் போலிருக்கும்.*

சிலேத்துமம் இரண்டு மாத்திரையும் வாதமொரு மாத்திரையுமாகில்: *புணர்ச்சிபோல நாடி ஓடும். சிலேத்தும் வாதக் கலப்பு நோய்; கபமேலாடும்; இனிப்பை விரும்பும்; பசி, தாகமதிக மாகும்.*

வாதம் இரண்டு மாத்திரையும் சிலேத்துமம் ஒரு மாத்திரையுமாகில்: *முறிந்த அரணைவால் துடிப்பதுபோல நாடி துடிக்கும்; வாத சிலேத்துமக் கலப்பு நோய்; உடல் வலிக்கும்; கை, கால் திமிராயிருக்கும்; வயிறு பொருமும்.*

பித்தம் இரண்டு மாத்திரையும் வாதம் ஒரு மாத்திரையுமாகில்: வீணை *யடித்தாற்போல் நாடி அடிக்கும்; பித்த வாதக் கலப்பு நோய்; உடல் வலிக்கும்; எரியும்; நெஞ்சும் நாவும் வறளும்; நீர் சிறுத்திறங்கும்.*

சிலேத்துமம் இரண்டு மாத்திரையும் பித்தம் ஒரு மாத்திரையுமாகில்: வண்டி சக்கரம் போல நாடி சுழலும்; சிலேத்தும் பித்தக் கலப்பு நோய; சன்னியுண்டாகும்; உச்சி வலிக்கும்; செவி கேளாது; நாவு இனிக்கும்; வயிறு மந்திக்கும்.

வாயுவுக்கும் மந்தத்திற்கும், மூன்று நாடியும் அமர்ந்து தளர்வாயோடும். பசித்திருக்கும்போது, மூன்று நாடியும் தூங்கி ஓடும். பாம்பு நஞ்சிற்கு, மூன்று நாடியும் அடங்கி நிற்கும். வயிறு வலிக்கு, மூன்று நாடியும் உள்ளுவாய் வாங்கியோடும். கிரந்தி நோய்க்கு, கரையுடைந்த அருவியைப் போலோடும். புண்புரை நீங்கிடில் வாதபித்தம்; பீனசத்துக்குப் பித்த சிலேத்துமமும் பித்தம் சுழன்றும். கருப்பவதிக்கு வாதமும் பித்தமும் கலங்கிக் காணும். தொடர்ந்த பெருங்கழிச்சலுக்கு வாதமும் பித்தமும் தளர்ந்து காணும். நீர்மேகத்திற்கு, நாடியெல்லாம் பலம் குறைந்து ஏரியின் மேற்புரண்டு விழும். புழுபோற்புரட்டிக் காணும். குருநாடி சிறிநிற்கும். மேகமதிகப்பட்டால் வாதமும் பித்தமும் பின்னித்துடிக்கும். சன்னிக்கு, திரிநாடியும் படபடத்தோடும்; விக்கலுக்கு சிலேத்துமமும், சுரத்துக்கு, வாதமும் பித்தமும்; கணைக்காய்ச்சலுக்குப் பித்தவாதமும் கலங்கிக்காணும். நச்சுநீர் சோகை பாண்டுவுக்கு; திரிநாடியுமே களைப்போடு ஈண்டும். தலை இடிக்கும். சய நோய்க்கு, பித்தம் கலங்கிக் காணும். இளநீர், நெய், பால், இறைச்சி, கனிகளுக்கு வாதம் கூடும். கோழி மாமிசத்திற்கும், கோபத்திற்கும், புணர்ச்சிக்கும் பித்தம் அதிகரிக்கும். சுரதோடத்திற்குப் பித்தம் வாதத்தைத் தாண்டும், சீதவறட்சிக்குப் பித்தத்தில் சிலேத்துமம் சேரும். புணர்ச்சிக்கு நாடி புழுபோல் நிமிர்த்தி வலித்து நின்று வாங்கும். பித்த சன்னிக்கு: வாதம் மிஞ்சி சிலேத்துமமும் அமர்ந்து பித்தம் வெடுவெடுத்து மீறி நிற்கும். மரணசன்னி, உட்குத்து, புறவீச்சு இசிவுக்கு: வாதமும் சிலேத்துமமும் அழுத்திக் காணும்.

தோட நிலக்குறி

பேரான தோடம் பிறக்கும் முறைகேளு
வாரான வாதமும் வன்னி கழிந்தாடும்
தாறான பித்தமுந் தழலூடில் வெண்மையாம்
யேறான ஐயமுஞ் சிவப்பேறும் வாய்விலே. 80

வாயு அடங்கினால் வளமான தோடம்போம்

வாயு வெழும்பினால் மண்ணுநீ ரொன்றாகும்
வாயு நீரானால் வழங்கிய வன்னியாம்
வாயு வாகாச மண்டல வோசையாமே. 81

ஓசையி லேழு மொளியினி லோரைந்தும்
நாசியின் மூன்று நாவினி லிரண்டும்
தேகியுந் தேகனுஞ் சேர்ந்து பிரிந்திட
மாசிலா நந்தி மகிழ்ந்து ரைத்தாரே. 82

ஓராண்டிலும் ஈராண்டிலும் சாகுங்குறி

உரைத்து நாசி யுறுதிக் கருதிக்கேள்
விரைத்திடப் பிங்கலை விடாதோடின் மூன்றுநாள்
இரைத்த சடமாண்டி லெய்திடு மாகாசம்
மாதத்தி லிரண்டுநாட் பாரிலீ ராண்டென்னே. 83

[அ. பொ.] *நாசி = மூக்கு; உறுதி = மிக்க விறைத்துக் கடின மாகி; கருதி = கருத்துடன்; பிங்கலை = இடது மூக்குத் துவாரம் வழியாக மூச்சு உள்ளும் வெளியும் நடந்தால் அது பிங்கலை நாடி எனப்படும். இரைத்த = வேகமாக மூச்சு ஓடிய; சடம் = உடல்; ஆகாசம் = விண். (இறப்பன் என்னாது இவ்வண்ணம் கூறுதல் கவி மரபு); பாரில் = இம்மண்ணுலகில்.*

மூன்று நாளிலும் ஆறு திங்களிலும் சாகுங்குறி

எண்ணி யொருநா ளியங்கிடிற் பிங்கலை
தண்ணிய திரியாண்டிற் றப்பாது மரணம்
ஒன்றியு பயத்தி லோடிற் பத்துநாள்
மண்ணின் மதியாறின் மரிப்பான் குறியிதே. 84

[அ. பொ.] *திரியாண்டு = மூன்றாண்டு; இயங்கிடில் = ஓடினால்; உபயத்தில் = இட, பிங்கலை என்னும் இரண்டிலும்; மதி = மாதம்; மரிப்பான் = சாவான்.*

மூன்று நாளிலும் பதினைந்திலும் சாகுங்குறி

குறிகேளு நாக்கன்றிக் குலவிவாய் வழியோடில்
மறிகேளு திரிநாளில் மரித்திடுவன் றப்பாது
தெரிகேளு மும்மலந் திரண்டுமிகக் குறைந்துவரில்
பரிவாகும் பட்சத்திற் பாருயிர்தான் தப்பாதே. 85

[அ. பொ.] நாகன்றி = நாவானது கருநிறமடைந்து; வாய் வழியோடில் = மூச்சு வாயின்வழியாக நடந்தால்; மும்மலம் = மலம், மூத்திரம், வியர்வை; பரிவாகும் = இரங்கத்தக்க நிலைகாணும்; தப்பாது = சாவிலிருந்து மீளாது.

ஆறு திங்களிலும் உடனேயும் சாகுங்குறி

தப்பாது வாய்நீர்தான் றாங்கிற்றன் மேல்வீழில்
ஒப்பாகத் தனுமறைய வொழிந்திடுவன் மதியாறில்
செப்பாகத் தானிருக்கச் சேர்ந்தநி மூலலைந்திடினும்
அப்பாகேள் சாவுநிச மறிந்துகற்பங் கொண்டிடே. 86

[அ. பொ.] தனு = உடல்; ஒழிந்திடுவன் = இறப்பன்; அலைந் திடினும் = நிழலாட்டம் தருவதுபோல் தோற்றங்காணில்; நிசம் = உண்மை.

கொண்டிடுந் தோடக் குறிசொன்னா ரெந்நந்தி
தண்டு தடுத்தனிப் பல்லுநாக் கொன்றாம்
மண்டிடுந் தாது வளமாய்க் கருப்பேறில்
ஒண்டிடு மாறாநா ளுறுதியாய்ச் சாவாரே. 87

[அ. பொ.] தண்டு = மூக்குத்தண்டு; வளமாய் = மிகவாக; தாது = விந்து; கருப்பேறில் = கருநிறங் கொண்டால்; உறுதி = நிச்சயம்.

உறுதியாம் பித்தவுடம் பிளைப்ப தாகும்
பொறையாகத் தூலிக்கிற் போவான் மதியொன்றில்
அறுதியா யைய நல்லத்தீ யுலர்ந்தால்
உறுதியோ மதியிலொ டுங்கிடுஞ் சீவனே. 88

[அ. பொ.] பித்த உடம்பு = பித்த தேகம்; தூலிக்கில் = மிக்கப்பருத்தால் (வீங்கினால்); போவான் = இறப்பான்; அறுதியால் = முடிவாக; நல்லத்தீ = நல்லபசி (த்தீ); ஐயம் = சிலேத்தும உடலானது; உலர்ந்தால் = வற்றி இளைத்தால்; ஒடுங்கிடும் = சேர்ந்திடும்; சீவன் = உயிர்.

சாகாக் குறியும் சாகும் குறியும்

சீவ களையாய்ச் சேர்ந்திடு நாடியில்
ஆவக் கரம்வைத் தழுத்திடின் மேலேறும்

தாவொத்து மேசணாக்கிற் சாகானொரு நாளும்
பாவொத்து கீழ்நோக்கிற் பகையாமற் சாவானே. 89

[அ. பொ.] *கரம் = கை; தாவொத்து = தாவுதல் போல் பாவொத்து = பரவுதலைப்போல். பகையாமல் = (தடையின்றி) விரோதமில்லாமல்.*

அமிர்தமுண்டும் சாதல்

பதைக்கின்ற மூவரும் பக்குவந் தப்பியே
நிறைக்கின்ற வாதமும் பித்தமு நீங்கிடில்
கதைக்கொண் டிருந்தாலுந் தோற்றியு யிர்விடும்
சுதைக்கொண் டவாதபித் தமும்பெ லனாமே 90

[அ. பொ.] *பதைக்கின்ற = துடிக்கின்ற; மூவர் = வாதபித்த கபநாடி; நீங்கிடில் = ஒடுங்கிவிட்டால்; சுதை = அமுதம் உயிர்விடும் = உயிர் உடலைவிட்டு நீங்கிவிடும்; பெலன் = உறுதியாம்.*

கைவிடுங் குறி முதலியன

பித்த மடங்கினாற் பேசாதே போய்விடும்
எத்திய வைய மெழும்பிடிற் கிட்டாதே
எத்திய வாத மெழும்பின் மருந்துசெய்
எத்திய மூன்றி னியல்பை யறிந்திடே 91

[அ. பொ.] *பேசாதே = சாத்தியா சாத்தியம் கூறாமல் போய் விடவேண்டும் (சாவது திண்ணமென்பது குறிப்பு); எழும்பிடில் = மேலோங்கிடில்; கிட்டாதே = (மருந்து செய்ய) நெருங்காதே.*

இறப்புக் குறி இறவாக் குறி

அறிந்திடிம் மூன்று மடங்கியே முட்டிலும்
எறிந்துமிக வோடிலு மெய்தாதே சாவுதான்
பறிந்து நற்றாது பற்றற்றுக் கீழ்நோக்கில்
மறிந்தே யுயிர்சென்று மறலிகைப் புக்குமே. 92

[அ. பொ.] *தாது = நாடி; முட்டில் = மேல் நோக்கி தாக்கினால்; மறலி = இயமன்.*

மகாதோடக் குறி

புக்கியுத் தியற்கை பொருந்த வொருவிரல்
எக்கியுய ரவெழுதும் பின்மகா தோடம்
அக்கிய வுந்திதா னாதாரம் வாய்விற்கு
வைக்குந் தலமென வகுத்தனர் தாதிதே. 93

[அ. பொ.] *உந்தி = நாபி; தலம் = இடம்.*

பத்து நாடிகளின் இருப்பிடம்

தாதுமு றைதேடனித் தகுதிச் சந்தோ
டோதுறு காமிய முந்தி நெடுமார்பு
காதுநெ டுநாசிக் கண்டங் கரும்புருவம்
போதுமுச் சிபுகழ் பத்துப் பார்த்திடே. 94

[அ. பொ.] *சந்து = மூட்டுகள் (என்பு, என்புடன் இணையும் இடம்); கண்டம் = கழுத்து.*

இறப்புக் குறி இறவாக் குறி

பார்க்கிற் றநாடி பதைப்புண்டாய் நின்றிடில்
ஏக்கிற் சிலநாளி ருப்பா னிறந்திடான்
காக்கிடு நாடியங் கழன்று கழித்தோடி
ஆர்க்கிலெ மனில டைவதுண் மையே. 95

[அ. பொ.] *அழன்று = வெப்பங்கொண்டு; சுழித்தோடி = சுழல்வதுபோல் நடந்தால்; எமன் இல் அடைவது = இறப்பது.*

இறப்புக் குறிகள்

இரண்டு நாள் பிங்கலைபாயில், மூவாண்டிலும்; மூன்று நாள் இடைகலைபாயில், இரண்டு பருவத்தினும்; பத்து நாள் உபயத்திற்பாயில், திங்களொன்றிலும்; நாசிவிட்டு வாய்வழி சுவாசம்பாயில், 3–நாளிலும்; ஐயநோயாலிளைத்தவுடல் வீங்கிடில், மதி ஆறிலும்; சிலேத்துமம் வெள்ளம்போல் மடமடெனச் சுருக்காயோடில், மறு நாளிலும்; பித்தஞ் சிதறி யோடில் 3 நாளிலும்; வாதஞ் சிதறி யோடில், எட்டு நாளிலும்; வாத பித்த மிரண்டும் கூடி நிலைதப்பிச் சிதறில் 5– நாளிலும்; வாத பித்த சிலேத்துமம் மூன்றுங்கூடி நிலை தப்பிச் சிதறி

யோடினால், மண்டலத்திலும்; மூன்றும் ஒன்றாய்க்கூடி அரணைவால் துடிகாணில், ஒரு தினத்திலும்; வாத பித்த சிலேத்தும் மொன்றாய்க்கூடி தேள்கொடுக்குப்போலாடி ஓடம்போல் நடந்தால், திங்களொன்றிலும்; நாடி வாத்துப் போற் புறந்துடித்திடில், திங்களொன்றில் பிணிநீங்காவிடில் திங்கள் பத்திலும்; காலையில் சிலேத்தும நாடியும் உச்சியிற் பித்த நாடியும் மாலையில் வாத நாடியும் வகை தப்பியோடிடில், நாலைந்து தினத்திலும்; சிலேத்தும நாடி ஈ போலும் அட்டை போலும் பதறி நின்றிடில், ஏழு தினத்திலும்; நோயாளி உமிழ்நீர் அண்மையில் விழுந்திடினும் இறப்பான்.

பாளமாகக் கிழிந்த துணியை நெய்யில் நனைத்து மணிக்கட்டையிற்சுற்றி முன்றேழுக்கால் நாழிகை சென்றளவில் ஆழ்ந்துப் பார்க்கில், வாதநாடி கிஞ்சித்து வாங்கினால் அப் போழ்திலும்; நல்லரவுபோல் நெளிந்தோடினால், இருபத்திரண்டு நாளிலும்; உதைத்துவாங்கினால், ஒன்பது நாளிலும்; அட்டை போல் நடந்தால், மூன்று நாளிலும்; தவளைபோற் துள்ளினால் அன்று பொழுதிலும்; பக்கஞ் சென்றெதிர்த்து வாங்கினால் முப்பது நாளிலும் இறப்புண்டாம்.

நாடி, புழுப்போல் நெளிந்தாலும் சூடுகொண்டாலும் பஞ்சுபோல் மெதுவாயிருந்தாலும் அன்னம்போல் நடந்தாலும் பிணி இடது உள்ளங்கால் குளிர்ந்தும் வலது உள்ளங்கால் சுட்டும் குழச்சு குளிர்ந்திடில், பத்து நாள்களிலும்; குழச்சுகளிரண்டும் (மூட்டுகள்) குளிர்ந்து உச்சி வியர்த்து நாசிவிறைத்து இளைப்பு விக்கல்தோன்றி உடம்பெல்லாம் குளிர்ந்து விழியிருண்டால், மூன்று நாள்களிலும்; பிடறிநெற்றி கழுத்தினுட் புறங்குளிர்ந்துவிழி நீலநிறமாகி நெஞ்சிற் கபங்கட்டில், மூன்று நாள்களிலும்; நாசியும் முழங்கைப்பள்ளமுங் குளிர்ந்திட உள்ளங்கால் சூடாய்த் தொண்டை கரகரத்தால், ஐந்து நாள்களிலும்; அடித்தொடையும் இரண்டுள்ளங்காலுங் குளிர்ந்து இரு செவியும் விரைந்து நின்றால், இரண்டு தினத்திலும் இறப்புண்டாகும்.

வலது உள்ளங்கால் சுட்டு இடது உள்ளங்கால் குளிர்ந்து உச்சி வியர்த்து உடம்பெல்லாம் கனலாயிருந்தாலும், புருவம் நெற்றி இட உள்ளங்கை சுட்டு உச்சிகுளிர்ந்தாலும், வல

உள்ளங்காலும் வெதும்பி இடதுநாசி தேய்க்கும்போது சிவந்தாலும், உடலாதியந்தமுஞ் சூடேறினாலும் பிணி தீரும்.

விழி-நாசி-காது-உச்சி-உள்ளங்கால்-கைகள் வெளுத்துப் பாதங் குளிர்ந்தால், ஐந்து நாழிகையிலும்; வாதமும் பித்தமும் அடங்கி சிலேத்துமங்கதித்து உடல்வெளுத்து மார்பு குளிர்ந்திடிற், தொண்ணூறு கடிகையிலுஞ்; சிலேத்தும நாடி எழுந்து வீழ்ந்திடில், இரண்டு கடிகையிலும்; பித்த மடங்கி வாதமும் சிலேத்துமமு மேலிட்டுக் கண்டத்திற் கபமடைந்து இளைத்து விழிமயங்கிச் சுழன்று கண்ணில் நீர் வடிந்தால், ஐந்து நாழிகையிலும்; முகம் நீண்டு உடம்பெல்லாம் நரம்பு தோன்றி பாசிபோற் கண்பஞ்சடைந்து இருள் சூழ்ந்து விசை நரம்பு குளிர்ந்து தளர்ந்து விறைத்து வாங்கிப் பொறிகளும் மிகுதியாய்த் தளர்ந்து நெறுநெறெனப் பற்கடித்து நடுக்கமுண்டானாலும்; வாதபித்த சிலேத்துமம் விட்டிலைப்போல் துடித்திடில் இறப்பு உண்டாம்.

வாத, பித்த, சிலேத்துமம் வெட்டுபட்ட அரணைவால் போல் துடிக்கும்; உடல் வேறுபட்டு குளிர்காணும்; கையால் முகத்தைத் தடவும்; மனிதரை ஆவலாய் நோக்கிப் பார்க்கும்; ஏங்கிப் பெருஞ் சுவாச மெய்தும்; இரண்டு விலாவும் இளைக்கும்; தொண்டையிற் கபங்கட்டி இரையும்; கண்களில் நீர்வடியும்; எடுபிடியென்றெழுந்து விழும்; உடல் மயங்கும்; நாசி நீளும்; வியர்வை காணும்; விழியும் பல்லும் கறுக்கும்; கபமோடி முடிச்சுவிழும்; கண் சுழன்று பல பேச்சாகும்; சீவன் மயங்கும்.

முதலாவது அவத்தை; பிணவெடி நாறும்; இரண்டாவது அவத்தை; நாபேசும்; வேற்றுமை கூறும்; 3–வது அவத்தை: சித்தங் கலங்கும்; 4–வது அவத்தை: இளைத்து மேல்சுவாசம் வாங்கும்; 5–வது அவத்தை, முகடு பார்க்கும்; 6–வது அவத்தை, உடல் குளிரும்; 7–வது அவத்தை, அன்னம் விரும்பும்; 8–வது அவத்தை, கண் பஞ்சடையும்; 9–வது அவத்தை, உடல்வெளுக்கும்; பத்தில் இறப்புண்டாகும்.

முகடு = மேலிடம்.

நோயாளிகளின் உடற்குறிகள்

அறைந்தோம் வாத ரோகியுடல் அலர்ந்த முகம்விழி பல்மலமும்
நிறைந்த விழியில் நீர்வடியும் நீண்ட நாக்கறுத் துலர்ந்துவரும்
திறைந்த முள்ளாய்த் தானிருக்கும் சிறுநீர்ப் பொருமியும் கறுத்து வரும்
முறைந்த நீருங் கடுகடுத்து முறையாய் ரோகமும் உண்டாமே. 96

வாத நோயாளியின் உடல்: குளிர்ந்தும் முகம், விழி, பல், மலம் கறுத்திருக்கும்; விழியில் நீர்வடியும்; நாக்கு கறுத்து வறண்டு முள் முள்ளாயிருக்கும்; சிறுநீர் பொருமிக்கருமையாய்க் கடுத்துச் சிறுத்துவிழும்.

பித்த ரோகி பெறுமுடல் சூடாகும்
நித்த மாகும் நேர்விழி நாக்குப்பல்
உத்த நீரும் உயர்ந்தது சிவப்பாகும்
சுத்த மஞ்ச ளாகவுந் தோன்றுமாங்காண். 97

பித்த நோயாளியின் உடல்; சூடாகவும், முகம், விழி, நாக்கு, பல், மலம் ஆகியவை சிவப்பாயும் இருக்கும்; நீர் மஞ்சளாகவும் சிவப்பாகவும் வடியும்.

விண்ணில் ரோகி விளங்குஞ் சேத்துமம்
வெண்மை யாம்பல் விழிநா முகம்மலம்
தண்ணீராம் வேர்த் துடலம் பீளைசார்
கண்ணும் காட்டும் கபநோய் கணித்திடே. 98

சிலேத்தும நோயாளியின் உடல்: வியர்க்கும்; முகம், விழி, பல், நாக்கு, மலம், நீர் வெளுப்பாயிருக்கும்; கண்ணில் பீளை கட்டும்.

வெட்டுந் தொந்தநோய் மெய்ப்பல் நாமுகம்
கிட்டுந் தேர்விழி கிளர்நீ ருடன்மலம்
மட்டில் பற்பல வண்ணந் தோன்றிடும்
கட்டுண் ரோகி காண்பாய் மாண்பிதே. 99

தொந்த நோயாளியின் உடல்: முகம், விழி, பல், நாக்கு, நீர், மலம் பலவிதமாய்த் தோன்றும்.

(நாடி விளக்கப் படலம் முற்றிற்று.)

மணிக்கடை நூல்

அதாவது மானிடர்களுக்கு நோய் பிறக்கும் தொகுப்பையும் பிணிகளின் குறிப்பும் சூத்திரத்தினால் (கயிறு) அளந்து கணித மிடுதலாம்.

மணிக்கடைக்குமேல் நான்கு விரல் தள்ளிக் கைச் சுற்றளவைக் கயிற்றினால் அளந்துகண்ட நீளம் அவரவர் கையினால் பத்து விரற் கடையிருந்தால், உடல் வெதும்பும்; வாயு வரல் நெஞ்சு, கால், கையில் குத்து உளையும்; வாயுத்திரட்சியின் குணம் உண்டாகும்.

ஒன்பதேமுக்காலுக்கு: அரையாப்பு, பிளவை, வறட்சி, இரும்பல் உண்டாகும்.

ஒன்பதரைக்கு: உடல் வெதும்பி வீங்கும்; சூடுண்டாகும்; விழிகாந்தும், உட்சுரமும், மேகமும் உண்டாகும்; அன்னத்தைத் தள்ளும்.

ஒன்பதேகாலுக்கு: விழிகாந்தும்; சலம்கடுத்து சிறுத் திறங்கும்; நித்திரை வராது; பீனசமுண்டாகும்.

ஒன்பதுக்கு: செவி மந்தமாகும்; கண் புகைச்சலாயிருக்கும்; குதத்தில் வாயு இறங்கி வலிக்கும்; இரு தொடையும் அயரும்; நடக்க ஒட்டாது.

எட்டேமுக்காலுக்கு: உடல்காயும்; சில நஞ்சுகளால் குட்டம் போலுண்டாகும்; மூல வாயுவினால் வயிறு பொருமும். கண்காசம், பீனசம் உண்டாகும்.

எட்டரைக்கு: உடல் வெதுப்பு, வெட்டை, கிரந்தி, குட்டம், சொறி, குடல்வாதம், தாது நட்டம் உண்டாகும்.

எட்டேகாலுக்கு: உடல் பொருத்துகள் வலித்து உளையும்; தலைவறட்சி, வலி, பீனசம், வியர்வை, நஞ்சானதினால் இளைப்பிருமல் உண்டாகும்.

எட்டுக்கு: காங்கை, வயிற்றில் மந்தம், பொருமல், வாயுத் திரட்சியுண்டாகும்; அன்னத்தை ஒதுக்கும்; சுகமிராது வேறுபடும்.

ஏழேமுக்காலுக்கு: மூலமெழும்; பின்கை, கால் காய்ந்தும் தலை இடிக்கும்; வாதத்திலிருந்து இரண்டு ஆண்டுகளில் கண்டமாலை ஏற்பட்டு நாள் செல்லச்செல்ல நாசியில் இரத்தம் உண்டாகும்.

ஏழரைக்கு: எலும்புருக்கி; மேகம்; வயிற்றுப்பொருமல்; கண்ணெரிவு; ஆறுநாளில் உடம்பிற் காந்தல் கால் கை சந்துளைவு விப்புருதி உண்டாகும்.

ஏழேகாலுக்கு: இடுப்பில் வாயு, குத்துவலி, பிடிப்பு, சிரிசிற் பித்தம், கண்வலி, பாண்டு, சோகை, கைகால் அசதி, அதிக நித்திரை உண்டாகும்.

ஏழுக்கு: பித்தம் சிரசிலேறும்; வாயினால் இரத்தம் விழும்; சயம், கால் கை காந்தல், சிலந்தி, புண்ணுமாம்; உட்டினமிகும். மலந்தீயும்.

ஆறேமுக்காலுக்கு: அண்டவாயு, கண்வலி, மயக்கம், மூன்று வருடத்தில் நீரடைப்பு, கல்லடைப்பு. கை கால் காந்தல், வலி உளைவு, முகத்தில் வியர்வை உண்டாகும்.

ஆரறைக்கு: உடல் வெதுப்பு, குத்தல், தாகம், அன்னத்து வேஷம், குடல் வாதம் உண்டாகும்.

ஆறேகாலுக்கு: மூலக்கிராணி, புளித்த ஏப்பம், சத்தி, தொடை வாழை உண்டாகும்; அரைச் சோறுபோல் கழிச்சல் ஏற்படும்.

ஆறுக்கு: இளைப்பும், நெஞ்சில் கபமும் உண்டாகும்; இரு நாளில் இறக்க நேரிடும்.

ஐந்தேமுக்கால் முதல் நான்கு விரல் கடைவரை: உடலில் கண்ட பிணிகள் அதிகமாகி சீவன்பிரியும்.

(மணிக்கடை நூல் முற்றிற்று)

மருத்துவர் குறிப்பு

மருத்துவர்கள் மருந்தைப் பயன்படுத்த வேண்டிய முறைமையும் தாங்கள் நடந்து கொள்ளவேண்டிய ஒழுகலாலும் கூறுதல்.

மருந்து செய்யவும், உண்ணவும் இன்னின்ன கிழமை ஏற்றதெனல்

ஆமப்பா திங்கள்புதன் சனிவா ரத்தில்
அருந்தலொரு மருந்தினாற் றீதுண் டாகும்
சோமப்பா வெள்ளியிலே மருந்து தின்றால்
சுகமேது பிணியுமது அதிக மாகும்
காமப்பா அருக்கனிலே மருந்து செய்து
கருதுசெவ்வாய் வியாழத்திற் கொள்ளத் தீரும்
தாமப்பா யிந்தமொழி பொய்யா தையா
சாற்றினார் தன்வந்திரி சாற்றி னாரே. 100

[அ. பொ.] அருக்கண் = சூரியன் = ஞாயிறு.

திங்கள், புதன், சனி இந்தக் கிழமைகளில் மருந்து அருந்திடில் தீம்பாம்; வெள்ளியில் நோய்மிகும்; அருக்கனில் மருந்து செய்து செவ்வாய் வியாழத்திலுட் கொள்ள பிணிதீரும்.

இறக்கும் நாள் அறிதல்

ஆமேநீ புலத்தியனே மச்ச கேந்திரா
அடைவான மரணமென்ற நாள்தான் சொல்வேன்
வாமேநீ அருக்கனாள் பரணி யாகா
வளமான திங்கள்சித் திரையு மாகா
தாமேநீ செவ்வாய்க்கு வுத்தி ராடந்
தமதான புதனுக்கு அத்த மாகா
நாமேநீ குருநாள்தான் கேட்டை யாகா
நலமான புகர்நாள்பூ ராடந் தீதே. 101

[அ. பொ.] குருநாள் = வியாழன்; புகர் = வெள்ளி.

தீதான சனிநாள் ரேவதியு மாகா
தீங்குவரும் இந்நாளில் நோய்கள் கண்டால்
வாதான நமனுக்கு அறுதி யாகும்
வந்தநோய் தீராது கொல்லுங் கொல்லுந்
தானான வயித்தியரே நூலைப் பார்த்து
தயவாக வைத்தியங்கள் செய்ய வேணும்
கோனான போகருட கடாட்சத் தாலே
கொற்றவனே புலிப்பாணி சொன்னேன் பாரே. 102

அருக்கனிற்பரணியும், திங்களில் சித்திரையும், செவ்வாயில் உத்திராடமும், புதனில் அஸ்தமும், வியாழத்திற் கேட்டையும், வெள்ளியிற் பூராடமும், சனியில் ரேவதியும் கூடின இந்த நாள்களில் பிணி கண்டால் தீராது.

குறிப்பு:- ஓர் நோயாளிக்கு மருந்து கொடுக்குமுன் அவர் வயதையும் வாத பித்த சிலேத்துமம் என்னும் உடல் வேறுபாட்டையும், உடல் வலுவையும், நடவடிக்கையையும், தொழிலையும், கொண்டாடிய காலத்தையும், தீபனசக்தியையும் (செரிக்கும் தன்மையையும்) கவனிக்க வேண்டியது.

வயதுக்குத் தக்கபடி மருந்தின் அளவை விகற்பித்துக் (மாறு படுத்தி) கொடுக்கவேண்டியது. வாலிபர்களைப் பார்க்கிலும் பிள்ளைகளில் மருந்து அதிக விரைவாகப் பிடிப்பதால் பிள்ளைகளுக்குக் குறைந்த அளவில் கொடுக்கவும்.

வாதபித்த சிலேத்தும குணங்களால் உடற் கட்டு வேறு படுவதுபோல் மருந்துகளும் அந்த உடற் கட்டுக்குத் தக்கப்படி வித்தியாச குணங்களை உபயோகிக்கவும். பெண்களுக்கு மாதவிடாய்க் கிரமமாய்க் காணுகிறதும் காணாததும் தெரிந்து கொள்ளவும். கருப்பவதிகளுக்கும் மாதவிடாயான பெண் களுக்கும் நேர்வாளம் முதலிய வெப்புடைய கழிச்சல் மருந்துகளைக் கொடுக்கலாகாது. இரத்தத்தில் கலந்து தீய குணங்களை உண்டாக்கும்.

கடினவேலை செய்து பக்குவமில்லாத புசிப்பு(ஊண்) உடையவர்கள் வலிய மருந்துகளைச் சகிப்பார்கள். அதிக செல்வத்துடன் உடலுழைப்பில்லாமல் காலத்தைக் கழிக்கும்

சோம்பர்களுக்கு அநேக நோய்கள் சம்பவிக்கும். அவர் வலிய மருந்துகளைத் தாங்க மாட்டார்கள். சில மருந்தை விடாமல் சாப்பிடவேண்டிய நிலையிருந்தால் படிப்படியாய் அதன் அளவை அதிகப்படுத்தினால் ஒழிய குணத்தைத் தரமாட்டாது. ஆனால், இக்கிரமம் சில மருந்துகளில் வேறுபடும். இரசம், அயம், பாடாணம் முதலியவை சேர்த்த சில மருந்துகள் சாப்பிட்டு வரவர குணத்தில் அதிகமாகுமாதலால் அவற்றின் அளவை குறைத்துக்கொண்டே வரவேண்டியது. இரத பாடாண முதலிய மருந்துகள் உடம்பினுள் சிலநாள் தங்கி ஒரே தடவையாக குணத்தைக் காட்டும். அவைகளின் குணம் முழுமையும் நீங்காமுன் காலக்கிரமமில்லாமல் மற்ற மருந்துகளைத் தாறுமாறாய்க் கொடுத்தால் பிணிநீங்காது.

(மருத்துவர் குறிப்பு முற்றிற்று)

கருக்கோள் இலக்கணப் படலம்

அதாவது பெண்களுக்கு பிள்ளையில்லாமையும் அவர்களின் பிணிக் குறிப்புங் கூறுதலாம்.

பாரப்பா பெண்மலடாங் கருப்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
ஆரப்பா ஆண்மலடே யாகு மல்லால்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
நேரப்பா தவமிருந்தும் பொருளை யீந்தும்
நேராக வில்லையது சூலை யாலே
வேரப்பா தேவதையோ டேழாங் கருப்பம்
விரித்து நன்றாய்ப் புகலுகிறேன் விரும்பிக் கேளே. 103

[அ. பொ.] பொருளை ஈந்தும் = தானம் செய்தும்; விரித்து = விவரித்து; புகல் = கூறு.

கருப்பப்புழு வாழும், சூலையாலும், கலவியில்பூ ஓதுங்கிப் போவதாலும், கருக்குழி பாசி பற்றி விளக்க மற்றிருப்பதாலும், மறத்துக் கொழுத்திருப்பதாலும், கருக்குழியில் தசை வளர்ந்திருப்பதாலும், சோரி (இரத்தம்) கட்டியிருப்பதாலும், பேயாலும், பித்தத்தாலும் வாயுவாலும், மேகம், வைசூரியாலும், மற்ற பிணிகளாலும், கிரகத்தாலும், உவராலும் பெண்கள் மலடாகிறார்கள்.

கருக்குழியின் ஆறுவகை நோய் கூறுதல்

புகலுகிறேன் முதல்தரந்தான் மலடி யென்ற
பூவைக்குக் கருக்குழிதான் விளக்க மற்று
அகலுகிறேன் அகலாமல் பாசம் பற்றி
அடைத்திருந்தால் விந்தங்கே யணுகா தப்பா
நிகலுகிறேன் மறுதரந்தான் கருக்குழி யில்வாயு
நிறைந்திருந்தால் விந்தங்கே நேரா தப்பா
தகலுகினே் பின்னுமங்கு கருக்குழி யைமூடி
தசைவளர்ந்தால் விந்தங்கே தான்செல் லாது. 104

[அ. பொ.] பூவை = பெண்; பாசம் = பாசி (பச்சை நிறமாகக் கருக்குழியில் படர்ந்திருத்தல்)

கருக்குழியில் பாசிபற்றி இருந்தாலும், வாயு சேர்ந்திருந்தாலும், சதைமூடி இருந்தாலும் கருவுண்டாகாது, விந்து பாழாகும்.

செல்லாது நாலான தப்பா கேளு
சீறியவள் கருக்குழியில் புழுதான்சேரில்
செல்லாது ஐந்தாவ தப்பா கேளு
செறிந்தங்கே கருக்குழியில் சோரி கட்டி
செல்லாது ஆறாவ தப்பா கேளு
செப்புகிறேன் கருக்குழிதான் மதர்த்தி ருந்தால்
செல்லாது இவைஆறு வியாதி யாகுஞ்
சென்றபின் விரோதமே மூாகுங் காணே. 105

கருக்குழியில் புழுக்கள் நிறைந்திருந்தாலும்; குருதி திரண்டு கட்டி இருந்தாலும், உவர்த்தோடமிருந்தாலும், கொழுத்திருத்தலாலும் விந்து செல்லாது.

மகளிர் ஆடவர் புணரும்போது, கருக்குழியில் பாசி பற்றி இருந்தால் அப்பெண்ணுக்குத் தலைநோகும்; வாயு நிறைந்திருந்தால் உடல்வலிக்கும்; தசை வளர்ந்திருந்தால் நெஞ்சில் குத்தி வலிக்கும்; சோரிகட்டி இருந்தால் கெண்டை வலிக்கும்; கருக்குழி கொழுத்திருந்தால் ஏப்பமிடும்; கிருமி நிறைந்திருந்தால் முதுகு நோகும்.

கருக்குழி விளக்கமற்று பாசி பற்றியமுதல் நோயின் குணமும் அதற்கு அவிழ்தமும் சாற்றுதல்

காணப்பா இவ்விதமாய் விரித்துச் சொல்வேன்
காரிகைக்குப் புணர்வேளை தலையே நொந்தால்
தோணப்பா கருக்குழியிற் பாசி பற்றிக்
கொண்டுதென்று தானதற்குச் சாந்தி செய்வாய்
பூணப்பா கோழியுட பித்து தானும்
புகழான பருத்திவிதைப் பருப்போ டொக்கத்
தோணப்பா அவள்குளித்த அன்று தொட்டுச்
சொல்லுகிறேன் மூன்றுநாள் தவிர்த்துக் கேளே. 106

[அ. பொ.] *புணர்வேளை = ஆண் பெண் சேரும்போது; தவிர்த்து = நீக்கி.*

கோழிப்பித்து, பருத்தி விதைப்பருப்பும் ஒக்கக்கூட்டி அரைத்து, வீட்டுக்கு விலக்கமாக இருந்து குளித்த முதல் மூன்று நாள்வரையிலும் இம்மருந்தை காமத்துவாரத்துள் தேய்த்து புணரச்சொல்லப் பாசி அற்றுக் கருப்பமுண்டாகும்.

கருக்குழியில் வாயுவினாலாகிய இரண்டாம் நோயின் குணமும் அதற்கு மருந்தும் விளம்பல்

கேளப்பா யிம்மருந்தை யோனிக்குள் தேய்த்துக்
கெடியான புருடனையும் புணரச் சொல்லி
நாளப்பா இப்படியே மூன்று நாட்செய்
நலமான பாசியற்றுக் கருப்ப முண்டாம்
ஆளப்பா புணர்வேளை யுடம்பு நொந்தால்
அப்பனே வாயுநிறைந் திருக்கு தென்று
வாளப்பா பெருங்காயம் நல்லெண்ணெய் வார்த்து
மத்தித்து யோனிக்குட் பூசச் சொல்லே. 107

[அ. பொ.] *மத்தித்து = நன்றாய் அரைத்து*

பெருங்காயத்தை நல்லெண்ணெய் வார்த்து அரைத்து அல்குலுக்குள் பூசி 3 நாள் புணர்ந்தால் வாயு நீங்கும்.

கருக்குழியில் தசைவளர்ந்த மூன்றாம் நோயின் குணமும் அதற்கு மருந்தும் விளம்பல்

பூசியே மூன்றுநாள் புணர்ந்தா னாகிற்
புதல்வருண்டு மூன்றாவ தப்பா கேளு
கூசியே புணர்வேளை யவட்குத் தானுங்
குறையாமல் நெஞ்சுவலி பிடித்து தானால்
தாசியே யோனியெல்லாஞ் சுருக்கிக் கொள்ளுந்
தசைவளர்ந்தி ருக்குதென்றுத் திப்பிலி பூரம்
மாசியே கோழியுட பித்துஞ் சேர்த்தே
ஆட்டியே யோனிக்குள் தடவச் சொல்லே. 108

[அ. பொ.] *புதல்வர் = பிள்ளைகள்*

திப்பிலி, சூடன், கோழிப்பித்துச் சேர்த்து அரைத்து 3 நாள் அல்குலுக்குள் பூசிப் புணர்ந்தால் தசை வளர்ந்திருப்பது மாறும்.

கருக்குழியில்புழு சேர்ந்த நான்காம் நோயின் குணமும் அதற்கு மருந்தும் விளம்பல்

தடவியே மூன்றுநாட் புணர்ந்தா னாகில்
தப்பாது பிள்ளையுண்டாம் நாலாங் காட்சி
அடவியே புணர்வேளை முதுகு நொந்தால்
அவட்கங்கே கிருமிநிறைந் திருக்கு தென்று
விடவியே யிந்துப்பு அரிதாரங் காயம்
வெந்நீரில் மூன்றுதினந் தூக்கி யாட்டி
படவியே மூன்றுதினம் யோனிக்குள் தேய்த்துப்
படுத்திடவே பிள்ளையுண்டாம் பண்பு தானே. 109

[அ. பொ.] அரிதாரம் = தாளகம்; காயம் = பெருங்காயம்; தூக்கி = எடைபோட்டு.

இந்துப்பு, அரிதாரம், பெருங்காயம் வகைக்கு மூன்று பண வெடை வெந்நீரிலாட்டி மூன்றுநாள் அல்குலுக்குள் பூசிப் புணர்ந்தால் கிருமி (நுண்புழு) விலகும்.

கருக்குழியில் இரத்தம் மூடிய ஐந்தாம் நோயின் குணமும் அதற்கு மருந்தும் விளம்பல்

தானென்ற ஐந்தாவ தப்பா கேளு
தழுவையிலே கெண்டைக்கால் வலித்து தானால்
வானென்ற சோரியவள் கருக்குழி யைமூடி
மறைத்திருக்கு தென்றறிந்து மைந்தா நீயும்
பானென்ற கடுக்காயும் பஞ்ச சாரை
பச்சைப்பூ ரம்புழுகு மாட்டி வாங்கி
மானென்ற அவள்குளித்த மூன்று நாளும்
மாதுண்ண உள்ளுக்குங் கொடுத் திடாயே. 110

[அ. பொ.] தழுவையில் = கூடும்போது; சொரி = குருதி; பஞ்ச சாரை = சர்க்கரை; பச்சைப்பூரம் = பச்சைக்கற்பூரம்; புழுகு = புனுகு.

மேற்படி நோய்க்கு அல்குலில் பூசுமருந்தும், கருக்குழி மதத்திருக்கும் ஆறாம் நோயின் குணமும் கூறல்

கொடுத்திடவே பிள்ளையுண்டாங் குறைதா னில்லை
கூறக்கேள் யோனிக்கு மருந்துக் கூட்டு
நடுத்திடவே குங்குமப்பூ அதிமது ரந்தானும்
நற்சீர கத்துடனே மூன்றுங் கூட்டி
படுத்திடவே யோனிக்குட் பூசிக் கொண்டு
பாயலில் புணர்ந்திடவே கருப்ப முண்டாம்
எடுத்திடவே ஆறாவ தப்பா கேளு
ஏப்பமிட்டால் புணர்வேளை மதர்த்த தென்னே. 111

[அ. பொ.] *படுத்திட = புணர; பாயலில் = படுக்கையில்.*

குங்குமப்பூ, அதிமதுரம், நற்சீரகம் வெந்நீர் விட்டரைத்து 3 நாள் அல்குலுக்குள் பூசச்சொல்லி புணர்ந்தால் கருக்குழி சோரிக்கட்டி இருத்தல் தீரும். மேற்சொல்லிய மருந்து வகையொன்றுக்கு பணவெடையொன்று வீதம் அரைத்து, ஆண் பிள்ளைகட்கு லிங்கத்திற் பூசி, ஐந்து பணவெடையரைத்துப் பெண்களுக்கு அல்குலிற் பூசியும் புணர்ந்திடில் கருப்பக்கோளாறு விலகிக் கருவுண்டாகும்.

மதர்த்துமே கொழுத்திருக்கு தென்று தானும்
வாகான சவர்க்காரங் கடுக்காய் காரம்
சிதைத்திவைகள் சமனாக அரைத்து வாங்கி
தடவியே புணர்ந்திடவு மூன்று நாளும்
பிதர்த்துமெத்த கெர்ப்பமுண்டாம் யேழாம் காட்சி
பேயாலும் பிதிராலும் பிழைதா னுண்டு
சதத்துமினி சாந்தியொன்று சூட்ச மாகச்
சொல்லுகிறே னன்றாகக் கேளு கேளே. 112

[அ. பொ.] *சிதைத்து = இடித்து, நசுக்கித் தூளாக்கி; காரம் = வெங்காரம்.*

(அ) *சவர்க்காரம், கடுக்காய், வெங்காரம் இம் மூன்றையும் சமமாக எடுத்துச் சிதைத்து நன்றாக அரைத்துத் தசைப்பிளப்பில் தடவிப்புணர மதர்த்திருத்தல் என்னும்நோய் தீர்ந்து கருவுண்டாகும்.*

(ஆ) ஏழாந்தோடமாகப் பேயாலும் பித்ரு சாபத்தாலும் (தென் புலத்தார்) உண்டாகும் மலட்டுப்பிணிகளுக்குச் சாந்தி செய்யக் கருவுண்டாகும்.

பித்தமலட்டு இயல்பு

சிறுநீர் மஞ்சளைக் கரைத்ததுபோல இறங்கும்.

மருத்துவம்:- வேப்பலகு, சீந்தில்தண்டு, முத்தக்காசு ஓர் நிறையாயிடித்துப் பிழிந்த சாறு அரைப்படி பசுவின் நெய் ¼ படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் குளித்ததுமுதல் மூன்று நாள் உட்கொள்ளத் தீரும்.

பத்தியம்: நீர்க்கஞ்சி.

மஞ்சிட்டிவேர், ஆடாதோடை, அமுதவல்லி (சீந்தில் தண்டு) தூதுவளை, வேளை, பிரமி(சாம்பிராணிப் பூண்டு), வேப்பலகு, சிறு குறிஞ்சான், சுக்கு இவை ஒன்பதும் பசுநெய்யில் வேக வைத்துக் குளித்தது முதல் 3 நாள் சாப்பிடத் தீரும்.

வாயுமலட்டு இயல்பு

நீர் இரத்தம் போலிறங்கும்

மருத்துவம்:- இந்துப்பு, பெருங்காயம், புளியம்புறணி, கூட்டிக் கற்றாழை வேரின் சாற்றாலரைத்துப் புன்னைக்காய் போலுருட்டிக் குளித்ததுமுதல் மூன்றுநாள் அருந்த வாயு மலடும் கிருமி மலடும் தீரும்.

மருத்துணவு: பாலும் அன்னமும்(சோறு) உண்ணவும்.

புளியின் வேர்க்குடிநீர் செய்து இந்துப்பு, பெருங்காயம் கூட்டிப் பழங்காடி விட்டிக் கலக்கிக் கொடுக்கப் பிணி தீரும்.

விஷப்பாலை, வெப்பாலை, வாலுழுவை, நெல்லி, தான்றி, கொன்றைப்பட்டை, கொடிவேலி, இந்துப்பு, சுக்கு வகைக்கு மூன்று சுழஞ்சு, அரைத்துப் பிரமிச்சாறு இருநாழி, நெய்நாழி இவையெல்லாம் ஒன்றாய்க் கலந்து காய்ச்சிப் பக்குவத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுக்க வாயுகிருமி தீரும்.

மருத்துணவு: பாலும் அன்னமும் உண்ணவும்.

[அ. பொ.] ஒரு கழஞ்சு = 1 ¼ வராகன் எடை (4.37 கிராம்.)

அலகைமலட்டு இயல்பு

அரிவையர்கள் பூத்த நாளில் இட்டு பக்கத்தில் வயிறு நோகும்; நீர் கடுத்து வெளுப்பாயும் கறுப்பாயும் சிவப்பாயும் இறங்கும்.

மருத்துவம்:- *நானாங்கள்ளிவேர் அரைத்துப் புன்னைக் காயளவு, பசுவின் வெண்ணெய்ப் பாக்களவு கலந்துகொண்டு குளித்தது முதல் மூன்று நாள்கள் அருந்தவும்.*

மருத்துணவு: *பசுவின் பால் சோறு உண்ணவும்.*

பெற்றமலட்டு இயல்பு

உடல்பருத்து உட்டிணமாய் வலிக்கும்; காலெரியும்; நீர் கழுதைக்கத்தம் (சிறுநீர்) போலும் கழுநீர் போலுமிறங்கும்.

மருத்துவம்:- *சருகெள்ளெண்ணெய் முக்கால்படி, நற்சீரகம் ஒரு காசு எடை, சீந்தில் தண்டு ஒரு கழஞ்சு, பூலாக்கொழுந்து பாக்களவு, அரைத்து எண்ணெயிற்போட்டுக் காய்ச்சிச் சூதகமான முதற் பதினைந்து நாள் வரைக்கும் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுக் கடும் பத்தியமாயிருக்கவும்.*

வறட்சிமலட்டு இயல்பு

எவ்வளவு உணவு உட்கொண்டாலும் உடல் உலர்ந்து போகும். அடிக்கடி கொட்டாவியுண்டாகும். கனவு பலகால் காண்பிக்கும்.

மருத்துவம்:- *பெரும்பூசினிப் பழத்தைத் தலையிற் தேய்த்து மூன்று நாள் நீராட்டி காற்படி பசுவின் பாலில் எலுமிச்சம்பழம் பிழிந்து சிறு அம்மான்பச்சரிசிச் சமூலமரைத்துக் கொட்டைப்பாக் களவு போட்டுக் கலக்கிக் காலை 3 நாளும் கொடுத்து அப்பால் மேற்படி எண்ணெய் செய்து 4–5 நாள்வரையிலும் சாப்பிட்டு வரவும். இச்சாபத்தியம் இருக்கவும்.*

வாயுமலட்டு இயல்பு

கருக்குழியைச் சுற்றி வாயுநிற்கும், உண்ட அசனம் (உணவு) நன்றாய்ச் செரியாது. பொருமி ஏப்பமிடும்

மருத்துவம்:-

1. மஞ்சிட்டிக்கிழங்கு, திரிபலை, கீழ்க்காய்நெல்லி ஓமம், பெருங்காயம், மஞ்சள், மரமஞ்சள், கடுகுரோகணி, கரிப்பாலைவேர், திருநாமப்பாலைவேர், தேள்கொடுக்குவேர், அமுக்கிறாக் கிழங்கு, நீர்வள்ளிக்கிழங்கு வகைக்கு 2 ¼ வராகன் எடை, பசுவின் பாலில் அரைத்து ஒருபடி நெய்யில்போட்டு 4 படி பால்விட்டு தீபம் போல் 3 நாள் எரித்து நாலாம் நாள் பதமாய்க் காய்ச்சி வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம், சூதகமானது முதல் 15-நாள் வரை, இருபோது உட்கொள்ளவும். பத்தியமாயிருக்கவும். வாயுமலடு தீரும். (ஒரு வராகன் எடை = 3.5 கிராம்)

2. பேய்க்குமட்டிக்காய்ச் சாறு, பசுவின்பால் 4 படி தேங்காய்ப்பால் 1 படி, சிற்றாமணக்கெண்ணை, ஈருள்ளிச் சாறு (வெங்காயம்) வகைக்கு 3 படி, கடுகு, வெள்ளுள்ளி, மஞ்சள், இந்துப்பு, கடுக்காய், கடுகுரோகணி, மதுரம், திரிகடுகு, ஓமம், வாய் விளங்கம், சீரகம், அரத்தை, கோட்டம், சிறுநாகப்பூ, சன்ன இலவங்கப்பட்டை வகைக்கு 3 கழஞ்சு அரைத்து எண்ணெயில் கரைத்துக் காய்ச்சி காலை, மாலை ஒரு தேக்கரண்டி வீதம் உட்கொண்டுவர கருப்பைவாயு, கிருமி, நீர்க்கட்டு, வயிற்றுநோய், பெருவாயிறு, கெண்டை தீரும். (1 கழஞ்சு = 1 ¼ வராகன் எடை)

   சிற்றாமணக்கெண்ணெய், பசு நெய், வீழிச்சாறு வகைக்கு 1 படி; ஈருள்ளி, கடுகு, ஏலம், வெள்ளுள்ளி (பூண்டு), வசம்பு, கோட்டம், இலவங்கம் வகைக்கு ¼ பலம் பசுவின் பாலாலாட்டிக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து காலையில் 1/4 சேர் வீதம் 3 நாள் சாப்பிட்டு ஆறு நாள் பத்தியமாயிருக்க கருப்பைவாயு, கிருமி முதலானவை தீரும். தேகம் குளிரும்.

மாத பூப்பு வராதவர்களுக்கு

வேலிப்பருத்திச் சாறருந்தினாலும்; தூதுவளை, குப்பைமேனி, உருண்டையாகக் கிடக்கிற குளத்துப்பாசி வஸ்க்குக் கொட்டைப்

பாக்களவு அரைத்து சர்க்கரை கலந்து மூன்று நாளருந்தினாலும்; காட்டுக் கருணைக்கிழங்கை அரைத்துப் பாலில் கலக்கி 3 நாள் அருந்தினாலும் பேய்க்குமட்டிவேர், புகையூரல், கார்போகரிசி, சமநிறையாய் அரைத்துக் கண்டங்கத்திரிப் பழச்சாற்றில் அருந்தினாலும்; நிலப்பனைக்கிழங்கு, பறங்கிப்பட்டை வகைக்கு 1 வராகன் எடை சூரணித்து ஒரு படி கொள்ளில் 4 படி தண்ணீர்விட்டு போட்டுக் கிண்டிஎடுத்து காலை, மாலை சாப்பிட்டு வந்தாலும்; மாவிலிங்கப்பட்டைத் தூள்செய்து தினைத் தவிடு கலந்து கொட்டைப்பாக்களவு மூன்று நாள் அருந்தினாலும்; எள்ளைக் கழுவின தண்ணீர் அரைப்படியில் ஒரு பலம் ஓமத்தைப்போட்டுக் கொடுத்தாலும்; கொடுவேலிவேர், எலுமிச்சங்காயளவு அரைத்துக் கொள்ளுத்தண்ணீரில் 3 நாளருந்தினாலும்; குருஞ்சாச்சாறு ஆவின்பால் வகைக்கு மாகாணி (1/4 ஆழாக்கு) ஒன்றாய்க் கலந்து 3 பொழுது உட் கொண்டாலும், சிவந்தநாயுருவியும் சிறுவிளாவும் அரைத்துத் தண்ணீரில் கலக்கிக் கொடுத்தாலும் சூதகக்கட்டுநீங்கி மாதமுழுக்கு உண்டாகும்.

புழுமேல் மலட்டு இயல்பு

மருத்துவம்:–

1. எண்ணெய் முக்கால் படி, முத்தக்காசு 2 கழஞ்சு, வறட்பூலாக் கொழுந்து, சாரணைக் கொழுந்து, வகைக்கொரு கொட்டைப் பாக்களவு அரைத்து எண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக்கொண்டு சூதகமான நாள்முதல் பதினைந்து நாள்வரைக்கும் ஒரு கரண்டிவீதம் உண்டுவரத் தீரும். பத்தியமாக இருக்கவும். வறட்சி மலடும் தீரும்.

   கருக்குழியில் புழுவிருந்தால் வாந்தி பண்ணும்; வயிறு நோகும்; இரண்டு மாதம், மூன்று மாத முழுக்கு நின்று நின்று உண்டாகும்; உடல் வெளுக்கும்; தினவுண்டாகும். அடிவயிற்றில் சுருக்கென்று வலிக்கும்.

2. ஆதண்டையிலைச்சாறு, கரும்புண்ணாக்கிலைச்சாறு, சிற்றாமணக்கெண்ணெய், கருப்புக்கட்டி இவையெல்லாம்

ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வீட்டுக்கு விலக்கமாயிருக்கிற மூன்று நாளும் உட்கொள்ள புழு விலகும்; கருத்தரிக்கும்.

3. பாகல் இலைச்சாறு, குமட்டிச்சாறு, எருக்கிலைச்சாறு, வீழி இலைச்சாறு வகைக்கு 1 படி, வேப்பெண்ணெய், ஆமணக்கு எண்ணெய் வகைக்கு 1/4 படி. ஒன்றாய்விட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி காசெடை கொள்ள மலசலக்கட்டு, கருப்பைப் புழு, கிருமி, வாயு தீரும்.

கருப்பைப் புழுக்குணம் (வேறு)

மாதவிடாய்க் காலத்தில் அடிவயிற்றில் சுருக்கென்று வலித்து சூதகம் இறைச்சி கழுவின தண்ணீர்போலக் காணும். கணவன் கூடுங்காலத்தில் அதுபோலவே அல்குல்வழி நீர் பொசிந்து சீலையில் கறைபடும்.

பரிகாரம்:- சீந்தில் வேர், நானாங்கள்ளி வேர், இலைக்கள்ளி, வேர்க்கியாழம் வடித்து பசுநெய்விட்டுக் குளித்ததுமுதல் மூன்றுநாளும் உண்ணத் தீரும். பத்தியம்: பாலும் அன்னமும் கொள்ளவும்.

மேற்படி கிருமிகட்குப் பொதுமருந்து

சித்திரமூலம், சாரணைவேர், பொன்னாங்கண்ணி வேர் சமனாய் தேங்காய்ப்பாலில் அரைத்துக் குளித்ததுமுதல் மூன்று நாள் அருந்த கருப்பைப் புழு விழும். விப்புருதி தீரும். முன்போல் பத்தியம்.

நந்தியாவட்டைவேரைத் தூள்செய்து சூதகமாயிருக்கும் போது வெருகடி அளவு பசும்பாலில் உட்கொள்ளவும்.

குறட்டைக் கிழங்கு 2 பலம் (70 கிராம்), ஆடு தீண்டாப் பாளை வேர் முக்கால் பலம், வசம்பு 1/4 பலம் (8 3/4 கிராம்), சிற்றாமணக்கெண்ணெயில் பதமாய்க் காய்ச்சி வடித்துச் சூதகமான 4 நாட்களுக்குக் கொடுக்க வயிறுகழியும். மோர் சாதம் உண்ணவும்.

தகரை இலையை அரைத்து அறுபது நாழிகைசென்ற மோரில் சூதகமாயிருக்கிற மூன்று நாளும் உட்கொள்க.

குருஞ்சாவேரைப் பாலில் அரைத்து இளவெந்நீரில் கொள்க.

ஆண் வசம்பு, வெள்ளுள்ளி வகைக்கு 1 பலம், பூநீற்றுச் சுண்ணம் அரைக் கழஞ்சு, அரைப்படி தேசி(கழுதை) நீரில் கலக்கிக் குழம்பாய்க் காய்ச்சி எலுமிச்சங்காய் அளவு மாத விடாய்க் காலத்தில் மூன்று நாள் கொடுத்து வாழை இலையை விரித்து அதில் உட்கார்ந்திருக்கச் செய்தால் கிருமிகள் கொழுந்து போல் விழும். இது போல் மூன்று மாதம் மூன்று முறை செய்யப் கருப்பமுண்டாகும்.

பச்சைக் கற்பூரம், மிருதார்சிங்கி, செண்பகப்பூ, மாசிக்காய், வெள்ளறுகின்வேர், சிறு குறிஞ்சாவேர், சாரணை வேர், வண்டோதரிவேர், கருப்புக் கட்டி வகைக்கு 2 பலம், தண்ணீர் விட்டரைத்து 4 உருண்டைசெய்து ஏழு நாள் உண்டு எட்டாம் நாள் அகத்திச்சாறு காற்படி குடிக்கக் கூட்டோடே புழு விழும்.

சூதகமாயிருக்கும்போது சீனி 1 பலம், அரைப்படி பசும் பாலில் போட்டுக் கரைத்துக் கொடுத்து மறு தினத்திலும் அப்படியே செய்து மூன்றாம் நாள் பூவரசம் விதையை எருமைச் சாணியில் புதைத்து மறு நாளெடுத்து தோல்நீக்கிப் பதமறிந்து இரண்டு மூன்று விதையை அரைத்துக் காற்படி ஆவின் பாலில் கொடுக்கக் கருப்பப் புழுவும் வயிற்றிலுள்ள மற்ற புழுக்களும் செத்து விழுந்து போகும்.

சாந்தி கூறுகின்றார்

கேளப்பா சீதாஇலை மாதளை இலையுங்
    கெடியான கஸ்தூரி மஞ்சள் தானும்
நாளப்பா அரைத்துநன்றாய்ப் பாதமுதல் சிரசு
    நலமாக மேல்நோக்கித் தடவச் சொல்லு
கேளப்பா புருடனைத்தான் நிற்க வைத்து
    விவரமுடன் கீழ்நோக்கிப் பார்க்கச் சொல்லி
வாளப்பா மருந்தெல்லாந் தூற்றி வாரி
    மாவிலையி லெல்லாந்தான் வாங்கிக் கொள்ளே. 113

[அ. பொ.] சீதா இலை = சீதா பலாவின் இலை; சிரசு = தலை

வாங்கியதோர் மருந்ததனை யவள்தான் காட்டி
மைந்தனே வாசலிலே புதைத்து வைத்து
பாங்கிதனைக் குளிப்பித்துப் புடவை நல்கி
பண்பான அகிலுடனே சாம்பிராணி சந்தம்
தேங்கியதோர் தேகமெல்லாம் புதைந்து நன்றாய்
தினமொன்று மூன்றுதரம் புதைத்த போது
ஏங்கியதோர் தேவதையும் பூதப் பிரேதம்
ஏவலொடு பிசாசுவகை யெல்லாம் போமே. 114

[அ. பொ.] *பாங்கி = தோழி; சந்தம் = சந்தனம்.*

முன்சொன்ன சரக்குகளுக்கு எடைப்பாகம் கூறுகின்றார்.

போகுமப்பா மருந்துவகை யோனிக்குட் பூசப்
பூட்டுகிறே னெடைப்பாகம் பிரித்துக் கேளு
ஆகுமப்பா வகையொன்று பணவெடைதா னொன்று
ஆண்பிள்ளைக் கவ்வண்ண மரைத்துப் பூச
ஏகுமப்பா பெண்ணுக்குப் பணவெடை தானைந்
தெடுபடுங்காண் வியாதிமுதல் விரோத மெல்லாம்
போகுமப்பா மலடில்லை பிள்ளை யுண்டாம்
பாடினேன் கருப்பத்தின் கோளைத் தானே. 115

[அ. பொ.] *எடுபடும் = விலகும்.*

பத்தியம் விளம்பல்

தானென்ற பத்தியஞ் சூட்சத்தில் சொல்வேன்
சாதகமாய்க் கட்டியதோர் உப்பு மாகும்
வேனென்ற புளியாரை சீயக் கொழுந்து
மேலான நெல்லிக்காய் அரிநெல் லிக்காய்
தேனென்ற வெள்ளாடு முயல்ஆமை யாகுந்
திறமான ஊர்க்குருவி காடை மானாம்
பானென்ற மரையாகும் சுறாமீ னாகும்
பண்பான கெளிற்றிமீன் மிளகு மாமே. 116

[அ. பொ.] *மரை = ஒரு வகைக் காட்டுப் பசு (அ) மான் என்பது.*

ஆமப்பா சர்க்கரைதேன் சிறுகீரை யாகும்
ஆவின்பால் நெய்யாகும் சிறுபயிறு மாகும்

ஆமப்பா துவரையொடு பொன்னாங் காணி
அவரைக்காய் தூதுவேளை சமூல மாகும்
ஆமப்பா தித்தித்த தெல்லா மாகும்
ஆகாத கைப்பாகா புளிதுவர்ப் பாகா
ஆமப்பா பழவகைக ளெல்லா மாகும்
ஆத்தாட்குப் பூசித்த மதுவு மாமே.

[அ. பொ.] *ஆத்தாள் = உலக மாதா (காளி)*

மதுவாகுங் குளிர்ந்தசலங் கிட்ட லாகா
மைந்தனே கொதித்ததண்ணீர் மிகவு நன்று
சதுர்வாகும் வேதமுறை கண்டு சொன்னேன்
சத்தியந்தான் இந்தநூல் சார்ந்து நீபார்
அதுவாகு மிதுவாகு மென்றே யெண்ணி
அலைந்தலைந்து திரியாம லருளை நோக்கில்
பொதுவாகும் நினைவுகொண்டு இருப்பா ராகில்
புத்திசித்தி முதல்முதல் புனித மாமே. 118

பெரும்பாட்டின் குறிகள்

சையோக வெம்மை சார்ந்துமே வெட்டையாகும்
மெய்யாக விந்து வீழ்ந்திடம் வெந்து புண்ணாம்
மையூரும் கண்ணாட் காம்பெரும் பாடுதானும்
கொய்யூருங் குய்யங் கொப்பளிக் குங்குருதி 119

[அ. பொ.] *சையோகம் = உடலுறவு; குய்யம் = பெண் குறி; குருதி = இரத்தம்.*

மருத்துவம்:- *நாவறப்பட்டையை புளித்த எருமை மோரில் ஊறவைத்து இடித்துப் பிழிந்து அதில் ஐந்து வராகன் எடை சந்தனம் கலக்கி மூன்று நாள்கள் உட்கொள்ளத் தீரும்.*

நெல்லிக்காய்ச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, கருப்பஞ்சாறு, பசும்நெய் வகைக்கு முக்கால் படி, தாளிசப்பத்திரி முக்கால் பலம், சாதிக்காய், ஏலம், கிராம்பு, அரத்தை, அதிமதுரம், நிலப்பனைக்கிழங்கு, வகைகு 1/4 பலம் (8 3/4 கிராம்) தேங்காய்ப் பாலில் அரைத்துப்போட்டு பதமாய்க் காச்சி வடித்து வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் உட்கொள்ள பெரும்பாடு, வெள்ளை, நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டு, சதையடைப்பு நீங்கும்.

நீர்வள்ளிக்கிழங்குச்சாறு, துத்திவேர்ப்பட்டை, முசுமுசுக்கை, நன்னாரிவேர், பூமிசர்க்கரைக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு இவைகளைப் பாலிலரைத்து நெய்விட்டு லேகியமாய்க் கிண்டி அருந்தத் தீரும்.

குறிப்பு:- மேற்படி மருந்தில் சர்க்கரையைப்பற்றிக் கூறா விடினும் லேகியம் செய்து உட்கொள்க என்றமையால் மருத்துவர் கைபாகம்போல சர்க்கரை சேர்த்து லேகியம் செய்ய வேண்டுவது முறையாகும்.

கஞ்சா இலை, ஏலம், ஆவின் நெய்யில் அரைத்து வாளை மீனில் கவசிக்கவும். ஆவாரைவேர்க்கியாழஞ்செய்து ஒரு சட்டியிலிட்டு வாயில் கவசித்து சீலைவேடு கட்டி அதன்மேல் மேற்படி கவசித்த மீனை வைத்து இரண்டு நாழிகை பிட்டவியலாய் வெந்தபின் எடுத்துக் கவசமும் சிலாம்பு முள்ளும் நீக்கிப் பத்துநாள் சாப்பிட்டு அந்தி சந்தி ஆவாரை வேர்க் கியாழங் குடித்துவரத் தீராப் பெரும்பாடும் தீரும்.

ஏலம், சன்னலவங்கப்பட்டை, ஆவாரம்பூ, நெல்லிமுள்ளி, கற்கண்டு வகைக்கு 3 வராகன் எடை பொடித்து வடிகட்டி மூன்று பங்கு செய்து, மூன்று இளநீரை மேல்தோல் நீக்கிக் கண்திறந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பங்கிட்டு அரைத்துத் தண்ணீரில் இருபது நாழிகை வைத்திருந்து எடுத்து, இளநீரை ஊற்றி அதில் கொஞ்சம் தேன் வீட்டு அருந்தவும். இப்படி மூன்று நாள் செய்யத் தீரும்.

தேங்காய்ப்பால், ஒதியம்பட்டைச்சாறு, பசுவின் பால் வகைக்கு கால் படி, முருங்கைப்பிஞ்சு, ஒதியம்விதை நெல்லிக்காய் அளவு அரைத்து அதில் கலக்கிக் குடிக்கத் தீரும்.

முருங்கைப்பூவை அரைத்து, தேங்காய்ப் பாலிலாவது வெல்லங் கூட்டியாவது சாப்பிடத் தீரும்.

கருங்குருவை அரிசிமாவில் கவுதும்பைச் சாறிட்டுக் களி கிண்டி சாப்பிடவும்.

வாலுளுவை அரிசிமாவில் பிரண்டைச் சாறிட்டு, பிசறி பிட்டு சுட்டு எருமைநெய், கருப்புக்கட்டி கூட்டியுண்ணத் தீரும்.

அதிமதுரம், கெந்தி வகைகு 4 வராகன் எடை (14 கிராம்) ஆடாதோடைச் சாற்றாலாட்டி நெய்யில் வேகவைத்து மூன்று நாள் உண்ணத் தீரும்.

சுடலையில் வெந்த எலும்பை இடித்தத் தூள் 3 வராகன் எடை, அபின் 4 வராகன் எடை, சாதிக்காய் 10 வராகன் எடை, சாதிபத்திரி 9 வராகன் எடை இவைகளைக் கல்லுரலில் இட்டுக் கட்டப்பாறையால் இடித்து வெள்ளாட்டுநெய்யில் வெருகடி சூரணம் காலை, மாலை கொள்ளத் தீரும்.

சிறுசெருப்படைச் சாறு, ஆவின் பால் சமன் கலந்து காலையில் நான்குநாள் கொள்ளத் தீரும்.

சிவந்த புது செங்கல்லைப் பொடித்து வடிகட்டி அதற்கு நிகர் வெள்ளைச் சர்க்கரைக்கூட்டி வெருகடித் தூள் ஐந்து நாள்கள் காலை, மாலை உட்கொள்ளத் தீரும். புகை நீக்கவும்.

தேங்காய்ப்பால், பசுவின்பால் வகைக்கு அரை படி, முருங்கைப்பூ அரைத்துத் தேங்காய் அளவு, பனைவெல்லம் மூன்று பலம் கூட்டி இளகம்செய்து வேளை ஒன்றிற்கு எலுமிச்சங்காய் அளவு கால்மண்டலம் கொள்ள பெரும்பாடு தீரும்.

ஆயிலியப்பட்டையை நீர்விட்டு அரைத்து எலுமிச்சங் காய் அளவெடுத்து பச்சரிசிமாவில் பிசைந்துருட்டி கருகாமல் அடைசுட்டு மூன்று நாள்கள் ஆறு பொழுது உண்ணத் தீரும்.

இலந்தைப்பட்டை, ஒதியம்பட்டை, அத்திப்பட்டை, அரசம் பட்டை, மாம்பட்டை, வேலம்பட்டை வகைக்கு 1 பலம், உலர்த்தித் தூள்செய்த இதற்குச் சம எடை பச்சரிசி மாவு கலந்து பனைவெல்லம் சேர்த்துப் பிட்டுசெய்து வெண்ணெய் சேர்த்து ஆறு நாள் உண்ண நாள்பட்ட பெரும்பாடு தீரும். இச்சா பத்தியம்.

ஒரு படி நல்ல தண்ணீரில் பூங்காவி 5 பலம் பொடித்துப் போட்டு மூன்று நாள்கள் ஊறினபின் தெளிவிறுத்துக் காலை, மாலை ஒரு வராகன் எடை படிகாரம் பொரித்து அதில் கலந்து மூன்று நாளுண்ண நாள்பட்ட பெரும்பாடு தீரும்.

கருப்பைச்சூலை இயல்பு

கேளாய் பெண்ணே கர்ப்பசூலை கெடுதி செய்யும் வழிமார்க்கம்
மீளாக் கனலுங் கருக்குழியில் மிகுந்த வாயு வனுசரிக்கும்
நீளாச் சூதகம் தான்புரண்டு நிறைந்த சோரி சிசுபோலாம்
தாளா வயிறு தான்வலிக்கும் தனித்து சேரப் பலன்கெடுமே.

[அ. பொ.] சோரி = இரத்தம்; தாளா = தாங்க மாட்டாது.

உடம்பில் கனலேறிக் கருக்குழியில் வாயு அனுசரித்துச் சூதங்கட்டிக் திரண்டு உதிரமெங்கும் சிசுபோல் புரண்டு திரியும். வயிறு வலிக்கும்; தேகம் வற்றும்; பலம் கெடும்; கோபதாபமுண்டாகும்.

மருத்துவம்:- *பேய்க்குமட்டி, ஆடாதோடை, அவுரி, திருகுக்கள்ளி, வீழி, கரிசாலை, கழற்சி, முடக்கொத்தான், வேப்பம்பட்டை, ஆகிய சாறுகள், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 1 படி; வெள்ளாட்டுநீர், எருக்கிலைப்பழுப்புச் சாறு, சதுரக்கள்ளிச் சாறு, வகைக்கு அரை படி, திரிகடுகு, திரிபலை, வெண்காரம், பஞ்சலவணம், நவாச்சாரம், சத்திச்சாரம், எவாச்சாரம், வாய்விளங்கம், கடுகுரோகணி, ஆனைத்திப்பிலி, திப்பிலி, திப்பிலி மூலம், மரமஞ்சள், கருஞ்சீரகம் வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி கலசத்தில் வடித்து மூடி ஒரு மண்டலம் தானியப்புடம் வைத்தெடுத்து ஒரு கரண்டிவீதம் மூன்றுநாள் சாப்பிட்டு ஐந்தாம் நாள் தலை முழுகவும், கருப்பைச் சூலை, வாயு, விப்புருதி, சூலை முதலான கருப்பை நோய்கள் தீரும்.*

கொல்லங்கோவைக் கிழங்கு, குறட்டைக் கிழங்கு, மருட்கிழங்கு, வெருகங் கிழங்கு, புளியமடல் கிழங்கு வகைக்கு 10 பலம் இடித்துப் பதக்கு (இரண்டு மரக்கால்) நீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி அதில் சிற்றாமணக்கெண்ணெய் 2 படி, பசுவின் பால் 1 படி, கடுக்காய், சிவதை, பஞ்சலவணம், ஓமம், திரிகடுகு, வெள்ளுள்ளி, சீரகம், வகைக்கு 1/4 பலம் (8 3/4 கிராம்), கண்டங்கத்திரிப் பழச்சாறு 1 படி விட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்து வீட்டுக்கு விலக்கமாய் இருக்கிற மூன்றுநாளும் புளிதள்ளிச் சாப்பிட்டுத் தினைக்கஞ்சி

கொள்ளவும். கருப்பைச்சூலை முதலான அனைத்துக் கருப்பை நோய்களும் வாயு திரட்சியும் தீரும்.

பொரிகாரம், காயம், காந்தம், பஞ்சலவணம், தேங்காய்ப் பருப்பு வகைக்கு 3 வராகன் எடை, தோல், முளைநீக்கி வறுத்த வாளம் 12 வராகன் எடை, எலுமிச்சம்பழச் சாற்றால் மூன்று சாமம் அரைத்துப் பணவெடை வெல்லத்தில் கொடுக்க கழிச்ச லாகும். மோர்சாதம் (சோறு) கொள்ள மேற்படி நோய்கள் தீரும்.

கருப்பைச்சூலை இயல்பு

சொன்னே மாதே யடிவயிற்றில்
        தோற்று முதிரந் தான்திரண்டு
வன்னே வளையம் போற்கிடக்கும்
        மதர்த்து வலித்துத் தான்பரவும்
பின்னே பொருமும் பிறவலியும்
        பேசா முதுகைப் பற்றுளைக்கும்
சொன்னோ மிந்தக் குணமதனைச்
        சொகுசா யறிந்து மருந்துண்பீர்.

அடி வயிற்றில் உதிரம் திரண்டு வளையம்போல் கிடக்கும், வயிறு பெருத்துப் பொருமும். முதுகைப்பற்றி நோகும்.

மருத்துவம்:- கண்டங்கத்திரிப்பழச் சாறு 2 படி, சுக்கு, மிளகு, திப்பிலி, தேசாவரம், வகைக்கு 5 வராகன் எடை (17 1/2 கிராம்), ஓமம் 1 பலம், பூண்டு 2 பலம், பெருங்காயம், கடுகு ரோகணி, இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு வகைக்கு 3 வராகன் எடை (10 1/2 கிராம்). மேற்படிச் சாற்றால் அரைத்துக் கலக்கிக் கொதிக்கவைத்து குறுகிவரும் சமயத்தில் 50 வராகன் எடை (175 கிராம்) கருப்புக்கட்டியும் காற்படி நல்லெண்ணெயும் விட்டு இளகம் செய்துகொண்டு எலுமிச்சம் காய் அளவு ஏழுநாள் பத்தியமாய்ச் சாப்பிட்டுத் தலைக்குத் தண்ணீர் ஊற்றினபின் எஞ்சிய மருந்தை இச்சாபத்தியமாய்ச் சாப்பிட்டுவர கற்சூலை, கருப்பைச்சூலை, குருதிக்கட்டி, சூதக வாயு முதலான கருப்பை நோய்கள் தீரும்.

வேம்பு, வீழி, நிலாவாரைக்கள்ளி, பொற்கொன்றை, வேளை, உ·ர்ளி, பூவரசு, வாகை, சங்கு, வெள்ளறுகு, பசுவின் சாணி)வைகளின் சாறு வகைக்கு 1/4 படி, ஆமணக்கெண்ணெய் ı படி, திரிகடுகு, திரிபலை, வல்லாரை, தண்ணீர்விட்டான் கிழங்கு, கொடுவேலி, வால்மிளகு, கோரோசனை, இந்துப்பு, கிராம்பு, கருஞ்சீரகம், மஞ்சள், நேர்வாளம், வெண்காரம், அரத்தை, கார்கோல் அரிசி, கோழியெச்சம், கெந்தகம், லிங்கம், பிரப்பங்கிழங்கு, பறங்கிப்பட்டைவகைக்கு 1 கழஞ்சு (1 ¼ வராகன் எடை). மேற்படி சாறுகளில் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் குளித்தது முதல் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வரத் தீரும். உப்பு, புளி நீக்கி நீர்க்கஞ்சி உட்கொள்ள கருப்பைச் சூலை முதலான கருப்பை நோய்கள் தீரும்.

இரத்தசூலை நோய் இயல்பு

பார்த்திடவே மங்கையர்க் கிரத்த சூலை
பகருகிறே னடிவயிற்றில் பற்றி நிற்கும்
கோர்த்திடவே உதிரமது திரண்டு மேதான்
கொதிப்பெடுத்து மாதவிடாய்க் காலந் தன்னில்
சேர்த்திடவே சூதகமும் மிகுந்து காணும்
சிறுவழியாய்க் கருவழியும் புறண்டு ளைக்கும்
ஏர்த்துடனே தொடையிடுப்பு உளைச்ச லாகும்
இரத்தசூலைக் குணமிதுவே பாரு பாரே.

[அ.பொ.] உதிரம்= இரத்தம்; சூதகம் = மாதவிடாய் ஒழுக்கு; கருவழியும் = கருச்சிதைவு உண்டாகும்ந உளைச்சல் = வலி.

அடிவயிறு நாளாவட்டத்தில் உதிரம் திரண்டு மாதவிடாய்க் காலத்தில் புரண்டு வலிக்கும். சூதகமிகுந்து காணும். கருவழியும், இடுப்பும், தொடையும் உளையும்.

மருத்துவம்:- வெள்ளாட்டு நீர் 1 தூணி (மரக்கால்) பேய்க் குமட்டிக்காய்ச் சாறு 2 படி, கறியுப்பு, சவர்க்காரம், இந்துப்பு, வளையலுப்பு, பாறை உப்பு, வெடியுப்பு, சீனக்காரம், அன்னபேதி வகைக்கு 1 பலம் (35 கிராம்), கடுக்காய்ப் பொடி, மிளகுப்பொடி வகைக்கு அரைப்படி, இவையெல்லாம் ஒரு பாண்டத்தில் விட்டு கிண்டி, மூடி, ஏழு சீலைமண்செய்து

நாலுசாமம் சிறு தீயாய் எரித்துக் கருகினவாசம் கண்டவுடன் பானையை இறக்கி கல்வத்தில் மெழுகுபோல் அரைத்து சுண்டைக்காயளவு உட்கொள்ளவும்.

இரத்தசூலை, கற்சூலை, கருப்பைச்சூலை கொண்ட வாயு, திரட்சி, பெருவயிறு, நச்சுநீர் வீக்கம், மகோதரம், குன்மம் தீரும்.

முருங்கைச்சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி, பசுவின் பால் 2 படி, அதிமதுரம், கொல்லங்கோவைக் கிழங்கு வகைக்கு 1 பலம், கடுக்காய் அரை பலம், பால் விட்டரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு காசெடை சாப்பிட்டுவர ஆறுவகை கருப்பைச் சூலைகளும் தீரும். பத்தியமில்லை.

கருப்பை விப்புருதி இயல்பு

கூறிடவே கருப்ப விப்புருதி தானும்
குருதிபோல் வயிற்றிலே சூதகம் காட்டும்
மாறவே தலைவலிக்கும் வீட்டுவி லக்கம்
வயிற்றுவலி இருதொடையும் உளைச்சல் காணும்
சீறவே புழுதிரண்டு மலமி றுக்கும்
சிசுகருப்பம் தரியாது உடலு ளைக்கும்
ஆறவே இக்குணங்கள் தான றிந்து
அப்பனே மருந்துண்ணச் சித்தி யாமே.

வயிற்றில் சூதங்கட்டி வலி உண்டாகும். தலை வலிக்கும். வீட்டுக்கு விலக்கமானால் வயிற்றுவலி நீங்கும். இரு தொடையும் உளையும், மலம் இறுகித் திரண்டு புழுக்கைபோல் விழும். கர்ப்பம் தரியாது. உடல் மெலியும்.

மருத்துவம்:- சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, தைவேளை இலை, சிற்றாமணக்கிலை, வீழிப்பூண்டு, கடுகு வகைக்கு 3 பலம், (105 கிராம்) மைபோல் ஆட்டி எண்ணெயில் கலக்கிப் பதமாய்க் காய்ச்சி அதில் ஒரு கழஞ்சு கள்ளிப்பால் விட்டு வடித்துச் சூதகமான நான்காம் நாள் முதற்கொண்டு மூன்று நாள்வரை ஓர் கரண்டி வீதம் சாப்பிடவும். இப்படி மூன்று முறை உட்கொள்ள கருப்பைவிப்புருதி வாயு தீரும். பத்தியம்: நீர்க்கஞ்சி கொள்ளவும்.

நீர்வற்றின தேங்காயைக் கண்திறந்து அதற்குள் ஒருபிடி தூதுவளைப் பழத்தைப்போட்டு எருக்கம்பாலும் கள்ளிப்பாலும் சமன் கலந்து அதில்விட்டு மூடிக் கருகாமல் சுட்டு ஓடு நீக்கி மைபோல் அரைத்துக் கொட்டைப் பாக்கு அளவு குளித்தது முதல் ஐந்து தினம் கொள்ள கர்ப்ப விப்புருதி தீரும். பேதி அதிகப்பட்டால் குளிர்ந்த தண்ணீர் குடிக்கவும். பத்தியம் மோர் சாதம் கொள்ளவும்.

சூதகவாயு நோய் இயல்பு

கேளுமே சூதகத்தி லக்கினி வாயு
கெடுத்துவிடும் மாதவிடாய் கட்டிப் போகும்
ஆளுமே கருக்குழி தூர்ந்து தேகம்
அப்பனே உதிரமது அடிமூலத்தில்
நீளுமே சூதகத்தில் வாயு தோன்றி
நேரான அடிவயிறு வலிப்பு காணும்
பாளுமே தலைவலிக்கும் இடுப்பு ளைச்சல்
பக்குவமாய் மருந்துண்ண தீருந் தானே.

சூதகத்தில் வாயுவும் அக்கினியும் சேர்ந்து மாதவிடாய் கட்டிக் கருக்குழி தூர்ந்து சூதக வாயுதோன்றிச் சூதகம் மாறும்போது அடிவயிறு வலிக்கும். சூதகம் தடுத்துக் காணும். தலை வலிக்கும். வயிறும் உடலும் பெருத்திருக்கும்.

மருத்துவம்:- தோல்நீக்கின சுக்கு 20 பலம் (700 கிராம்) வில்லைவில்லையாய் வெட்டி அதைக் கண்டங்கத்திரி, துளசி, தூதுவளை, நுணா, நொச்சி, எருக்கு, கையாந்தகரை, மூக்கரைச் சாரணை, நிலவாகை இவைகளின் இலைச் சாற்றிலும் முருங்கைப் பட்டைச் சாற்றிலும், புங்கின் வேர்ப் பாலிலும், எலுமிச்சம்பழச் சாற்றிலும் வகை ஒன்றுக்கு ஒவ்வொரு நாள் ஊறப்போட்டுக் காயவைத்து இடித்துத் தூள்செய்துகொண்டு வாய்விளங்கம், திப்பிலிமூலம், திரிகடுகு, ஏலம், ஓமம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, தாளிசபத்திரி, திரிபலை, இருசீரகம் வகைக்கு1 பலம் (35 கிராம்) வெதுப்பித் தூள்செய்துகொண்டு இரு வகைத் தூளையும் ஒன்றாய் கலந்து அதுகண்ட எடைக்குப் பாதி சர்க்கரை கூட்டித் திரிகடி அளவு பத்தியமாய்ப் பத்துநாள் சாப்பிடச் சூதகவாயு தீரும்.

குப்பைமேனி, கரிப்பான், சிறு செருப்படை, நிலவாகைச் சமூலமும் தனித்தனியே இடித்துத் தூள்செய்து ஓர் நிறையாய் ஒன்றாய்க் கலந்து திரிகடியளவு தேனில் 2 நாள் உட்கொள்ள நீங்கும்.

கடுக்காய்ப் பொடி, மிளகு, கடுகுரோகணி, இந்துப்பு, கறியுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, வளையலுப்பு வகைக்கு 5 பலம் (175 கிராம்) சீனக்காரம், நவாச்சாரம், சத்திச்சாரம் வகைக்கு 3 பலம் (105 கிராம்), பெருங்காயம், வால்மிளகு, வாய்விளங்கம், கோட்டம், கருஞ்சீரகம் வகைக்கு 1 பலமாக (35 கிராம்) இவைகளைப் பொடித்து நீர்வற்றின கொப்பரைத் தேங்காய்க்குள் அடைத்துப் பூமியில் புதைத்து ஏழாம் நாள் எடுத்து ஓடுநீக்கி மெழுகுபோலாட்டிச் சிமிழினில் அடைத்துக் கொண்டு இச்சாபத்தியமாய் கழற்சிக்காய் அளவு இருபொழுது சாப்பிட்டு வந்தால் சோரிக்கட்டி குன்மம் (இரத்தக் கட்டி குன்மம்) தீரும்.

தோல்நீக்கிய வெள்ளைப் பூண்டு 6 பலம், செவ்வியம், மல்லி, வாய்விளங்கம், ஓமம், திப்பிலிமூலம், வெட்பாலையரிசி, வசம்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், சித்திரமூலம், அதிமதுரம், திரிகடுகு, கோட்டம், திரிபலை, அட்டுப்பு, இந்துப்பு, சிறுதேக்கு, சிவதை, பெருங்காயம், கடுகுரோகணி, கழற்பருப்பு வகைக்கு 3 வராகன் எடை. ரவியில் உலர்த்தித் தூள்செய்து சிற்றாமணக் கெண்ணெய், கருப்புக்கட்டி சேர்த்து இளகம் செய்து காலை, மாலை புன்னைக்காய் அளவு இருபதுநாள் கரப்பான் பதார்த்தம் தள்ளிச் சாப்பிட்டு வரச்சூலை தீரும்.

போக காலத்தில்யோனி மலரும்போது அதில் வாயுவடங்கி அதனால் இரத்தமும் நீரும் தடைப்பட்டு உடல் அடைப்பட்டு மூடிச் சவ்வுமுத்தி மூளைத் தேங்காய்ப்போல் யோனியில் தோன்றி நீர்பொசிந்து கொண்டிருக்கும். இடுப்பும் தொடையும் உளையும்.

மருத்துவம்:- வெள்ளைப்பூண்டு 20 பலத்திற்குப் பதக்கு 2 மரக்கால்) தண்ணீர்விட்டு இரண்டு படியாய்க் குடிநீர் செய்து வடித்து தேவதாரம், இந்துப்பு, கடுகு, நெல்லி, தான்றி,

கொடிவேலி, பெருங்காயம், திப்பிலி, சிவதைவேர் வகைக்கு ஒரு கழஞ்சு, மேற்படி குடிநீர் விட்டரைத்து சிற்றாமணக்கெண்ணெய் 2 படி, வெள்ளாட்டுப் பால் ¼ படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சித் தினம் மூன்று கழஞ்சு கொடுத்துவரத் தீரும். இச்சாபத்தியம்.

முடக்கொத்தான் சாறு அரைப் படி, நல்லெண்ணெய் அரைப்படி, வசம்பு, பூண்டு, பெருங்காயம், திரிகடுகு, இந்துப்பு, சீரகம், சதகுப்பை, பறங்கிப்பட்டை, தேவதாரம் வகைக்கு 1 கழஞ்சு அரைத்து விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி தினம் ஒரு காசளவு கொள்ளத் தீரும்.

முடக்கொத்தான், குறிஞ்சா வகைக்குச் சாறு 1 படி, சீரகம், கார்கோலரிசி, ஏலம், மஞ்சள், பறங்கிப்பட்டை, இந்துப்பு, பெருங்காயம், பூண்டு, திரிகடுகு, வசம்பு வகைக்கு 5 வராகன் எடை பொடித்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு ஐந்து நாள் கரண்டி நிறையக் கொள்ளத் தீரும்.

ஓமம், வெள்ளுள்ளி, கண்டங்கத்திரி, சுக்கு, மிளகு, சோமலுப்பு (இந்துப்பு) வசம்பு, குங்கிலியம் ஓர் நிறையாய்ப் பொடித்துத் துணியில் வைத்து உருட்டி அதில் வேப்பெண்ணெய் ஊற்றி வைத்து தீயில் கொளுத்தி யோனியில் புகையூட்டி புளியமடல் கிழங்கைக் கருங்குருவை மாவுடன் சேர்த்திடித்து அதில் மோர்விட்டுக் கூழ்காய்ச்சி மூன்று நாட்கள் உண்ணத் தீரும். கடும் பத்தியம்.

சூதவலிக்கு மருந்து

1. அகத்தியர் குழம்பில் பண எடை எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்க பேதி உண்டாகும். அதிகப்பட்டால் வசம்பைக் கருக்கி அதில் ஒரு படி தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்துக் கொடுக்க நிற்கும். உப்பு, புளி, நீக்கி பத்தியம் கொள்ளவும். மறு நாள் கரி உப்பை கொட்டைக்கரந்தைச் சாற்றால் ஆட்டிக் காயவைத்து ஐந்து புடமும் சிறுசெருப்படைச் சாற்றில் ஐந்து புடமும் போட்டால் செந்தூரம் ஆகும். அதில் நாள் ஒன்றுக்கு ஒரு வராகன்

எடை வீதம் வெள்ளுள்ளி தைலத்தில் மூன்று நாட்கள் உட்கொள்ளத் திரும்.

2. கல்லுப்பு 1 பலம், சூதம் 1 பலம், வில்வயிலைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்துக் கையில் வைத்து ஊத உருகி மணி போல் ஆகும். அதை அந்தரத் தாமரைச் சாற்றால் நாலு சாமம் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து முழப்புடம் போட்டு ஒரு பணவெடைவீதம் மூன்று தினம் தேனில் கொள்ளச் சூதகவலி, நெஞ்செரிவு, சூலை நோய், சூதக வாயு தீரும். இச்சாபத்தியம்.

3. துத்தி இலை, மிளகு, வெள்ளுள்ளி வகைக்கு 1 பலம் (35 கிராம்), வசம்பு 1 வராகன் எடை அரைத்துச் சூதகமாய் இருக்கிற மூன்று நாட்கள் உட்கொள்ள சூதகவலி நீக்கும். இச்சாபத்தியம்.

4. இந்துப்பு, திப்பிலி, பெருங்காயம் இளவறுப்பாய்ச் சூரணித்து வெந்நீரில் மூன்று நாள் கொள்ளத் தீரும்.

5. திரிகடுகு, கழற்சிப்பருப்பு, ஓமம், இந்துப்பு ஓர் நிறை யாய் வறுத்துப் பொடித்து நல்லெண்ணெயில் மத்தித்துக் கொள்ளத்தீரும்.

6. நிலவாகை சமூலமும் சுக்கும் தனித்தனியே இடித்துச் சூரணித்துச் சமனாய்க் கலந்து திரிகடி அளவு மூன்று நாட்கள் சாப்பிட்டு ஆறு நாட்கள் பத்தியமாய் இருக்க நீங்கும்.

கருப்பை நோய்களுக்குப் பொது மருந்து

1. ஆடாதோடை, பிரமி, சிவனார்வேம்பு, சீந்தில் வகைக்கு சாறு 1 படி; பசுவின் நெய் 1 படி, மரமஞ்சள் பொடி 1 பலம் ஒன்றாய்க் கலக்கிக் காய்ச்சி வீட்டுக்கு விலக்கமாய் இருக்கிற மூன்று நாட்களும் ஒரு கரண்டிவீதம் சாப்பிட்டுத் தலைமுழுகினதன் பேரில் இதனடியில் வருகிற இளகம் சுண்டைக்காய் அளவுகொள்ள கருப்பை நோய்கள் நீங்கும். உப்பு, புளி தள்ளி பத்தியம் கொள்ளவும்.

2. நாயுருவிச்சாம்பல் உப்பு, எள்ளுச்செடி சாம்பலுப்பு, வகைக்கு 1/4 பலம், திருகுகள்ளி, இலைக்கள்ளி, சித்திரமூலம், சாரணை, தைவேளை, நொச்சி, குறிஞ்சா, குப்பைமேனி, முடக்கொத்தான், இஞ்சி, வீழி, தேவதாரி, வெள்ளறுகு, தும்பை, சங்கங்குப்பி, வெண்ணாச்சி வகைக்குச் சாறு 1 படி, மஞ்சள், மரமஞ்சள், ஓமம், காயம், இந்துப்பு, வளையலுப்பு, நவாச்சாரம், சத்திச்சாரம், எவாச்சாரம், சீனக்காரம், சவுக்காரம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, வசம்பு, வெந்தயம், ஏலம், வால்மிளகு, கடுகு, கிராம்பு, வகைக்கு 1/2 பலம் இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து ஷ சாறுகளில் கரைத்து அதில் குமட்டிக்காய்ச்சாறு, வெள்ளுள்ளித் தைலம் வகைக்கு 1 படி கூடவிட்டு, சிவதை சமூலம் 1 பலம் அரைத்துப் போட்டு இளகமாகச் செய்துகொள்ள ஆறு வகைக் கருப்பைச் சூலைகளும் மற்ற கருப்பைப் பிணிகளும் தீரும்.

3. சிற்றாமணக்கெண்ணெய், பேய்க்குமட்டி, வேப்பம்பட்டை, கழற்சி, ஐவிரலி, முடக்கொத்தான், காட்டுக்கள்ளி, உழலாத்தி, பிரமிச்சாறு வகைக்கு 2 படி, கொடிவேலி, பங்கம்பாளை, கிளுவை, நிலவாகை, குருந்து, சங்கு தலைச்சுருளி, காக்கணத்தி, குமரி, வெள்ளைச்சாரடை இவைகளின் வேர் வகைக்கு 1 பலம் (35 கிராம்) மூங்கில் இலை, கஸ்தூரிப்பட்டை, வெள்ளறுகு, கடுகு, திப்பிலி, கடுக்காய், வால்மிளகு, குரோசாணிஓமம், கடுகுரோகணி, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், அரத்தை, சுக்கு, சிறுநாகப்பூ, இந்துப்பு, ஆனைத்திப்பிலி, பெருங்காயம், சாதிக்காய், தாளிசப்பத்திரி, சேராங்கொட்டை, இரசகற்பூரம், இஞ்சி, நவாச்சாரம் வகைக்கு 64 கழஞ்சு (280 கிராம்); இவைகளைக் காட்டாமணக்கின் சாற்றாலும், வெள்ளாட்டு நீராலும் அரைத்துக் கலக்கிப் பதமாய்க் காய்ச்சி புகையூரல், வெண்காரம் வகைக்கு 1 முதல் 2 கழஞ்சு (3 5/8 முதல் 8 3/4 கிராம்) பொடித்துக் கலசத்தில் வடித்துக்கொண்டு வீட்டுக்கு விலக்கமான நாள் முதல் மூன்று நாட்களும் காலையில் ஒரு கரண்டி வீதம்கொடுக்க ஆறுவகை

கருப்பைக் கிராணியும் தீரும். பத்தியம் வெள்ளாட்டுப் பாலும் சோறும் கொடுக்கவும். நான்காம் நாள் தலைக்கு வெந்நீர்விட்டு, அது முதல் மூன்று நாள் ஆரை இலை, கிளுவை இலை, ஐவிரலி இலை, சமனாய்ப் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக்கொள்ளவும். ஏழாம் நாள் எண்ணெய் தேய்த்துத் தலைமுழுகவும். பிள்ளை உண்டாகும்.

4. சிவதைவேர், நிலவாகைவேர் தனித்தனியே பாலில் அரைத்து உலர்த்தி இடித்துச் சலித்துகொண்ட பொடி வகைக்கு 150 வராகன் எடை (525 கிராம்); கோரைக்கிழங்கு மேல்தோல் நீக்கி நிழலில் உலர்த்திய பொடித்தூள் 2 முதல் 3 வராகன் எடை, திரிகடுகு, திரிபலை, கண்டந்திப்பிலி, இந்துப்பு, ஓமம், குரோசாணி ஓமம், வாய்விளங்கம், அதிவிடயம், மாசிக்காய் வகைக்கு 1 கழஞ்சு (3 5/8 கிராம்); தூள்செய்த கிராம்பு, சர்க்கரை 5 பலம், ஒருபடி தண்ணீரில் கரைத்து வடிகட்டிப் பாகுசெய்து அதில் தூள்களைப் போட்டு நன்றாய் ரேசித்து சிற்றாமணக்கெண்ணெய் 2 படி விட்டுக் கிளறி, மெழுகுபதத்தில் எடுத்துக் கொட்டைப்பாக்களவு உட்கொள்ள சூதகவாயுத் திரட்சி, கருப்ப வாயு, வயிற்றுவலி, சூலை முதலானவைகள் தீரும். கரப்பான் உணவுகளைத் தள்ளவும்.

5. 20 பேய்க்குமட்டிக் காயை விதை நீக்கி ஒவ்வொன்றிலும் ஒரு பலம் இந்துப்பைப் பொடித்துக் கொஞ்சம் கொஞ்சமாய் வைத்து ஒரு பாண்டத்தில் இட்டு மூடி, ஏழு சீலை மண்செய்து பூமியில் புதைத்து ஆறு நாட்கள் சென்றெடுத்துப் பிழிந்த சாறுடன் சித்திர மூலம், மாவிலிங்குக்காய், திருகுகள்ளி, தைவேளை, அழிஞ்சில் இவைகளின் வேரும், காட்டுத்திப்பிலியும் வகைக்கு 5 பலம் (175 கிராம்) இடித்து 4 மரக்கால் தண்ணீரில்போட்டு குருணியாய் (4 படி) காய்ச்சி சேர்த்து அதில் அரைப்படி கள்ளிப்பால்விட்டு, சுக்கு 1 பலம் (35 கிராம்), திப்பிலி, வெள்ளுள்ளி, இலுப்பைக் கட்டி, சவுக்காரம், கடுகு, கருத்த இந்துப்பு, நவாச்சாரம் வகைக்கு 2 பலம் (70 கிராம்), கடுக்காய், பெருங்காயம், பொரித்த வெங்காரம் வகைக்கு

½ பலம், சீரகம், வாலுளுவையரிசி வகைக்கு ¼ படி, ஓமம், கடுகுரோகணி, வெண்மையாய் வறுத்த துருசு வகைக்கு 1 பலம், அரைப்பொடி, 1 1/8 படி, கருப்புக்கட்டி 11 பலம் இவையெல்லாம் இடித்து வடிகட்டிப்போட்டு இளகஞ் செய்து கலசத்தில் வேடுகட்டி நெல்லுக்குள் புதைத்துப் பத்து நாட்கள் சென்றெடுத்து வைத்து தேற்றான்விதை அளவு கொடுக்க வயிற்றுப்போக்கு அதிகரித்தால் மோர் சாதம் உண்டு, கோழிச்சாற்றில் மஞ்சள் பொடித்துப் போட்டுக்கொடுக்க நிற்கும். இம் மருந்தை உடல் வலுவறிந்து ஒன்று விட்டு ஒரு நாளாக பத்திருபது நாட்கள் புளி, புகை, கரப்பன், உணவுகள் தள்ளிக்கொடுக்க, குன்மம் எட்டும் கருப்ப விப்புருதி, கெண்டை, கௌசி, மலட்டுப்புழு, ஊதுகாமாலை, பித்தபாண்டு, நச்சுப்பாண்டு, கருப்பைச் சூலைகளும் தீரும்.

6. சிற்றாமணக்கெண்ணெய், கருநொச்சி, கையாந்தகரை வகைக்குச் சாறு 1 படி, எலுமிச்சம்பழச் சாறு, நல்லெண் ணெய், பசுவின் நெய் வகைக்கு ½ படி, மிளகு ¼ படி, காயம், குழிமிட்டான், (நத்தைச்சூரி) செப்பு நெரிஞ்சி வகைக்கு 1 பலம் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துக் கொண்டு குளித்தது முதல் மூன்று நாட்கள் ஒரு கரண்டிவீதம் நாலு முறை உட்கொள்ள கருப்பை வாயு, புழுகிரந்தி தீரும்; இச்சாபத்தியம்.

7. விளக்கெண்ணெய் 8 படி, தும்பை, பொடுதலை, கற்றாழை வகைக்கு 1 பலம், (35 கிராம்) திரிகடுகு, திரிபலை, கோட்டம், ஏலம், கிராம்பு வகைக்கு 1 பலம் (35 கிராம்) அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துக்கொண்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு கரண்டி வீதம் 40 நாட்கள் உட்கொள்ள கருப்பை விப்புருதி, வயிற்றுக்கட்டி, நீராமை, கருப்பைச் சூலை, சூதகக்கட்டி, கிருமி தீரும்.

8. பேய்க்குமட்டி விதை, தூய்மை செய்த நேர்வாளம் சமன் கூட்டிக் குழித்தைலமிரக்கி ஒரு காசு எடை தைலத்தில் ஒரு காசு எடை மஞ்சள் பொடியைக் குழைத்துக் குளித்தது முதல் மூன்று நாள்கள் உட்கொள்ள கழிச்சலாகும்.

மருத்துணவு:- நீர்க்கஞ்சி உட்கொள்ள சகல கருப்பை நோய்களும் தீரும்.

9. பூண்டு 1 பலம் (35 கிராம்), கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, நவாச்சாரம், சவுக்காரம், வெண்காரம், பெருங்காயம் வகைக்கு 3 வராகன் எடை (10 ½ கிராம்); தூய்மைசெய்த வாளம் 10 வராகன் எடை (35 கிராம்). இவைகளெல்லாவற்றையும் தூள் செய்து மூன்று முத்தின தேங்காய்ப்பூவின் மத்தியில் வைத்துப் பிட்டவியலாய் அவித்துப் பால்பிழிந்து அதில் வெந்தமருந்துகளும் அரைத்துப் போட்டுக் காய்ச்சி, ஒரு காசு எடை நெய் உட்கொள்ளக் கழிச்சலாகும்.

மருத்துணவு:- மோர்ச்சோறு உட்கொள்ள எல்லாவித கருப்பைப் பிணிகளும் தீரும்.

10. பேய்க்குமட்டிப் பழம் முப்பதைத் தண்ணீர் விடாமலிடித்துப் பிழிந்து வடித்துக்கொண்டு இந்துப்பு, நேர்வாளம் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), பெருங்காயம் ¼ பலம் (8 ¾ கிராம்,) பசுவின் வெண்ணெய், புளி வகைக்கு நாரத்தங்காய் அளவு. இவை எல்லாம் அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி கண்ணாடி பாத்திரத்தில் அடைத்துக்கொண்டு ஒரு பாக்கு அளவு மூன்று முறை கொடுக்க வயிறு கழிச்சலாகும். அதிகப்பட்டால் குளிர்ந்த தண்ணீரில் குளித்துப் பால்சோறு உண்ண கருப்பைவிப்புருதி கிருமியும், சூதகக்கட்டியும், மேற்சொல்லிய கருப்பை நோய்களும் தீரும்.

11. தேங்காய்ப்பால், மஞ்சள்பால், சிற்றாமணக்கெண்ணெய், தை வேளைச்சாறு, நிலவாகைச்சாறு வகைக்கு 3 படி, திரிகடுகு, திரிபலை, காயம் வகைக்கு ½ பலம் (17 ½ கிராம்), இந்துப்பு 1 பலம் (35 கிராம்). இவை எல்லாம் அரைத்துக் கலக்கி மிதமாய்காய்ச்சி அதில் பூநீர்ச் சுண்ணங் குழைத்துச் சேர்த்து வடித்து அரைக்காற்படி வீதம், விலக்கமாயிருக்கிற மூன்று நாள்களும் உட்கொள்ள சீதம், மலக்கட்டு, சூதகவலி, வாயு முதலான கருக்கோள்கள் நீங்கி கருப்பமுண்டாகும்.

12. *அவுரி இலைச்சாறு 1 படி, சிவதை, கடுகுரோகணி, வசம்பு, உள்ளி, அக்கிராகாரம், இந்துப்பு, காரம் வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்) ஏரண்டத்தெண்ணெய் 2 படி. பதமாய்க் காய்ச்சி வடித்துக் குளித்ததுமுதல் ஒரு துட்டெடை பத்துநாள் சாப்பிடக் கருப்பை நோய்கள் நீங்கும். கடும் பத்தியம் அவசியம்.*

சூலுற்ற பெண்களுக்குப் பத்து மாதத்திற்கு வரும்நோயும் அதற்கு மருந்தும் விளம்பல்

அத்தியுரித் தோனிடத்தில் அமர்ந்தஉமை யாளீன்ற
சத்திக்க ணபதியின்தாள் போற்றி – எத்திசையுங்
கெர்ப்பமின் னாருக்கி ளைத்தபிணி தான்றீர
கற்பமதாங் கிரியைக்கண் டுரைப்பேன் – உற்பத்தி
திங்கள்முதல் கற்பஞ்சிறு வலியாய்தான் வலிக்கில்
எங்கள் மரைப்பூவிந் திலாமிச்சு – மங்கைநந்நீர்
வார்த்தரைத்து ஆப்பாலில் வாகாக வேகொடுக்க
சேர்த்திரண் டாமாதஞ் சிறுகினால் – மாற்றிக்கொள்
தக்கோலந் தாமரையின் தான்பூவும் நீரரைத்து
அக்கால மேகொடுநீ ஆவின்பாலில் – எக்காலம்
மூணுந்திங் கள்தன்னில் முறுக்கிவயி றுளைக்கில்
வாணிமலர் செங்கழுநீர் வனகிழங்கு – பேணி
பாலிலரைத் தேகொடுக்கப் பாவையற்குக் கெர்ப்பம்
நாலில்வ லித்துரத்தம் நாடினால் – சூரியற்கு
நெய்தல்கி ழங்குநொச்சில் நீர்வார்த்த ரைத்ததனை
உய்தபசுப் பாலில் உண்ணவே – ஐந்தாம்
மாதம் வலிக்கில் வரும்ஆம்ப லின்பூவும்
வேதமசை விலாமிச்சம் வேரும் – போதும்
நீர்வார்த் தரைத்துநிச் சயம்பாலிற் கொடுக்க
கூர்ஆறில் கெற்பக்கு டலழன்று – நேரே
சுற்றிக்கு டல்வலித்துச் சுழன்றுமே நீர்சுருக்கில்
பற்றியிதற் கிம்மருந்து பகரக்கேள் – உற்ற
திப்பிலியு முந்தியுகை சேர்ந்தநெய்தற் கிழங்கு
அப்பிலிகைத் தும்பாலி லேயருந்த – ஒப்பில்லா
ஏழில்வ லிக்கில்இ லாமிச்சச் சந்தனமும்
வாழுந்தக் கோலம்வ கைமூன்றும் – சூழும்

கோவின்று பாலிற்கொ டுக்கஎட்டா மாதம்
பாவகைக்கால் அயரும்பசிக் கன்னந் – தேவை
இல்லைதான் இன்மை இதற்குமாப் பூவும்
தொல்லைநெய் தற்கிழங்குந் தொந்தித்து – நல்லாவின்
பாலிலதைக் கொடுக்க பாவை மாதம்
சூலின்வ லிகாணில் அரசந்தோலும் – கோலி
மருதந்தோல் நீரில்வா காகவே யரைத்து
கருத்தாய் ஆவின்பாலிற் கண்டுகொடு – பருகப்
பத்தாகு மாதத்தில் பாவையி றுளைக்கில்
எத்தாகுஞ் சர்க்கரை யிலுப்பைப்பூ – சித்தாக
நீரில்அு ரைத்துப்பாலில் நினைவாகத் தானருந்த
பேருமத்தித் தோர்க்குப் பேசுவேன் – கூறும்
வயிற்றில்பிள் ளைமத்தித்துப் போனால்வீ ழமருந்து
அறிந்துநிலக் குமிழ்வேர் அரைத்துக் கரைத்து
விரைந்துகுடிக் கப்பிள்ளை வீழுமே – தரையில்
அரனார்உ ரைத்தத றிந்துமுனி தானுமிந்த
திரமா கும்என் றிதனைச் செப்பு.

சூலுற்ற பெண்களுக்கு முதல் திங்களில்: *கருப்பஞ் சிறு வலியாய் வலிக்கில் தாமரைப்பூ, சந்தனம், விலாமிச்சம் வேர் இவற்றை எல்லாம் நீர் விட்டு அரைத்துப் பாலில் கொடுத்தால் வலித் தீரும்.*

இரண்டாம் திங்களில்: *வலித்தால், தக்கோலமும் தாமரைப் பூவும் கரைத்துப் பசுவின் பாலில் கொடுத்தால் வலி தீரும்.*

மூன்றாவது திங்களில்: *வயிறு உளைந்தால், வெண்தாமரை மலரும் செங்கழுநீர்க் கிழங்கும் சேர்த்து அரைத்துப் பாலில் கொடுத்தால் வலி தீரும்.*

ஐந்தாம் திங்களில்: *வயிறு வலித்தால்; ஆம்பற் பூவும் விலா மிச்சம் வேரும் அரைத்துப் பாலில் கொடுக்க வலி நீங்கும்.*

ஆறாம் திங்களில்: *கருப்பை அகன்று சுற்றி வலித்துச் சுழன்று நீர்ச்சுருக்கில் திப்பிலி, முந்திரிப்பழம், நெய்தற்கிழங்கு இவற்றை எல்லாம் அரைத்துப் பாலில் கொடுக்க வலி போகும்.*

ஏழாம் திங்களில்: *வயிறு வலித்தால்; விலாமிச்சம் வேர், சந்தனம், தக்கோலமும் சேர்த்தரைத்துப் பாலில் கொடுக்க வலி தீரும்.*

எட்டாம் திங்களில்: கை, கால் ஓய்ந்து பசி எடுக்காமல் இருந்தால், தாமரைப்பூவும், நெய்தற் கிழங்கும் அரைத்துப்பாலில் கொடுக்க வலி தீரும்.

ஒன்பதாம் திங்களில்: சூல்வலிக்கு; அரசந்தோலும் மருதந் தோலும் அரைத்துப் பாலில் கொடுக்க வலி போகும்.

பத்தாம் திங்களில்: வயிறு உளைந்தால்; சர்க்கரையும், இலுப்பைப் பூவும் அரைத்துப் பாலில் கொடுக்க வலி நீங்கும்.

கருவளர்க்கும் எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் அரைப்படி, பசுவின்பால் ½ படி, தோல் நீக்கி அரிந்த ஈருள்ளி 1 ¼ படி, கருஞ்சீரகம் 2 வராகன் எடை, கழுதைப்பால் ¼ படி ஒன்றாய்க் கலந்து சிறு தீயில் எரித்து மெழுகு பதமாகும்போது அதில் கை வைத்தால் இளவெந்நீர் போலிருக்கும். அந்தப் பதத்தில் இறக்கி வடித்துக் கருப்பவதிகள் ஐந்தாம் மாதத்தில் 5 நாள் காலை, மாலை, சந்தி இரு கழஞ்சு 8 ¾ கிராம் வீதம் சாப்பிட்டு மறுபத்தியம் ஐந்து நாளிருக்கவும். இப்படி ஏழு திங்களிலும் சாப்பிட்டு உப்பு, புளி கடும் பத்தியமாய், இருந்தால் கருவை அழிக்கும் கிரந்தி, சூலை முதலான நோய்கள் நீங்கி குழந்தை நீண்ட ஆயுளுடன் பிறக்கும். இச்சாபத்தியம்.

செங்கரப்பன், கொள்ளிக்கரப்பனுக்கு மருந்து

1. மணத்தக்காளி, கற்பூரவள்ளி, பொடுதலை, கிரந்திநாயகம், கோழியவரை, சிறுசெருப்படை, துளசி, சங்கங்குப்பி, வல்லாரை இவைகளின் இலைச்சாறு வகைக்கு முக்கால் படி, ஆகாயக்கருடன் கிழங்கு, வெருகங்கிழங்கு இவை வகைக்கு 3 பலம் (105 கிராம்); பூதகரப்பன்பட்டை, செங் கத்தாரிப்பட்டை இவை வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்), செம்புளியம்பிரண்டைவேர் 1 பலம் (35 கிராம்). இவற்றைப் பால் விட்டு அரைத்துக் கற்றாழஞ்சோறு 8 பலம் (280 கிராம்), 40 கடுக்காய், சிற்றாமணக்கெண்ணெய் 3 படி, வெங்காயச்சாறு 1 படி; இவை எல்லாம் ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வடிகட்டி மேற்சொல்லிய முறையுடன்

கருவுற்றவர்கள் பத்தியமாய்ச் சாப்பிட்டால் 3 முதல் 4 மாதங்களில் கருப்பத்தை அழிக்கும் கிரந்திசூலையும் நீங்கிக் குழந்தை ஆயுளுடன் பிறக்கும். உடல் குளிரும்; கருப்பத்தில் கூடிய மற்றநோய்களும் குழந்தைக்கு நேரிடாது; பிள்ளை பிறந்தவுடன் நேரிடும் செங்கரப்பன், கொள்ளிக் கரப்பனுந் தீரும். இச்சாபத்தியம்.

2. விஷ்ணுகிரந்தி, செப்புநெரிஞ்சி, குழிமிட்டான், முருக்கிலை, சங்கிலை, சிறுசெருப்படி, வில்வபத்திரி, கருநொச்சி இலை இவைகளின் சாறு வகைக்கு 2 படி, ஈருள்ளிச்சாறு 2 படி, ஏரண்டத்தெண்ணெய் 1 படி, கருஞ்சீரகம் ஒரு கை அளவு, அதிமதுரம், திப்பிலி வகைக்கு ¼ பலம் (8¾ கிராம்) அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து ஐந்தாம் திங்கள் முதல் கொண்டு கரப்பான் உணவுகளை நீக்கிக் கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய நோய்கள் நீங்கி குழந்தைகட்கு நேரிடும் செங்கரப்பன், கொள்ளிக்கரப்பன் முதலிய கரப்பனுந் தீரும். இச்சாபத்தியம்.

3. பற்பாடகம், கரிப்பான் வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் நெய்யில் கலக்கிச் சிவக்க வெந்த பதத்தில் இறக்கி கருப்பம் தங்கின ஐந்தாம் மாதம் முதற்கொண்டு சிறு கரண்டி அளவாய் நெய் முழுமையும் சாப்பிட்டால் மேற்சொல்லிய பிணிகள் நீங்கி குழந்தை ஆயுளுடன் பிறக்கும்; பத்தியமில்லை.

கருப்பைக் கிரந்திக்கு மருந்து

ஆடுதீண்டாப்பாளை, அவுரி, தூதுவளை, கருஞ்சூரை, சங்கு சுண்டை இவைகளின்வேர், மூவிலை, மின்னிலை, அப்பைக் கிழங்கு, சுண்டையிலை, வெளிச்சிப்பிசின், சென்னகரப்பழம், சாதிக்காய், செஞ்சந்தனம்,. திப்பிலி, பீநாறிப்பட்டை, கடுக்காய், வெள்ளுள்ளி, தேற்றான்விதை, கருஞ்சீரகம், களிப்பாக்கு, வேம்பாடம்பட்டை, ஓமம் இவையெல்லாவற்றையும் மோர் விட்டு அரைத்து நல்லெண்ணெயில் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர கருப்பக்கிரந்தி தீரும்; பத்தியமில்லை.

கிரந்திப்புண், செவ்வாப்புக்கு மருந்து

1. கழற்கொடி, பிரமி, கரிசாலை, கிரந்திநாயகம், தூதுவளை, கோழியவரை, செம்முள்ளி, வெண்ணொச்சி, கருநொச்சி, வெதுப்படக்கி, சிறுசெருப்படை, சிறுபுள்ளடி, செப்பு நெருஞ்சில், சீந்தில், வல்லாரை, மிளகுதக்காளி, குருஞ்சா, பேய்மிரட்டி, சங்கு, தழுதாழை, முடக்கத்தான், பொடுதலை, பெரியசெருப்படை வகைக்கு அரைப்படி சாறு; பசுவின் பால் 2 படி, விளக்கெண்ணெய் 4 படி ஒன்றாய்க் கலந்து கடுக்காய் 3 பலம் (105 கிராம்), கடுகு ரோகணி 2 பலம் (70 கிராம்), செங்கத்தாரிப்பட்டை, நல்ல சீரகம், கருஞ்சீரகம், பூதக்கரப்பன் பட்டை, திரிகடுகு, வெட்பாலையரிசி, தான்றிக்காய், நெல்லி, அரத்தை, அமுக்கறாங்கிழங்கு, பூவரசம் பட்டை, நன்னாரி, கோட்டம், சிறுதேக்கு வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்), பசுவின் பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி 1 கழஞ்சி வீதம் 8 நாள்கள் சாப்பிட்டுப் பத்தியம் உப்பு, புளி நீக்கி நீர்க்கஞ்சி உட்கொள்ளவும். கருப்பவதிகளுக்குக் காணும் கிரந்திப்புண் தீரும். குழந்தைக்குக் காணும் செவ்வாப்பு முதலான பிணிகளும் இந்த எண்ணெயால் தீரும்; பத்தியமில்லை.

2. சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, சிறுசின்னி, சங்கங்குப்பி, சங்கு, பிரமி, கருநொச்சி, சிருசெருப்படை, ஆடாதோடை, வெதுப்படக்கி, கழற்கொடி, நிலவாகை, வெள்ளறுகு வகைக்கு 1 1/8 படி சாறு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், ஓமம், கோட்டம், அதிமதுரம், வால்மிளகு, மல்லி, ஏலம், இலவங்கப்பட்டை, குரோசாணிஓமம் வகைக்கு 1 வராகன் எடை; சாதிக்காய் 1 வராகன் எடை, கிராம்பு 2 வராகன் எடை, பூண்டு, கடுக்காய் வகைக்கு 1 பலம் (35 கிராம்), பறங்கிப்பட்டை 2 பலம் (70 கிராம்). இவையெல்லாம் இடித்துக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து சிறு கரண்டி வீதம் 7 நாள்கள் காலையில் ஒரு பொழுது உட்கொள்ள முந்தின பிரயோகத்திற்குச் சொல்லிய நோய்கள் நீங்கும்.

கருப்பைக் கிரந்திக்கு மருந்து

பாதாளமூலி, (ஆடுதீண்டாப்பாளை). நொச்சி, சங்கங்குப்பி, தேசிப்பால் இவைகளின் சாறு சிற்றாமணக் கெண்ணெய் வகைக்கு 1 படி, கருஞ்சீரகம், கடுகுரோகணி, கடுக்காய், பறங்கிப்பட்டை, கார்போக அரிசி, செங்கத்தாரிப் பட்டை, வகைக்கு 2 கழஞ்சி, கெந்தகம், இலிங்கம், தாரம் வகைக்கு 1 கழஞ்சி பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உட்கொள்ள கருப்பைக் கிரந்தி தீரும்; இச்சாபத்தியம்.

சூலுற்ற காலத்தில் காணும் துவாலைக்கு மருந்து

1. அதிமதுரம், மஞ்சிட்டிக் கிழங்கு, செங்கிழங்கு, காட்டாத்திப் பூ வகைக்கு ஒரு காசெடை அளவு அரைத்துப் பாலில் கலக்கி சர்க்கரை கலந்து மூன்று நாள் கொடுக்க வலி தீரும்; இச்சாபத்தியம்.
2. நெய்தற்கிழங்கு, அதிமதுரம், வெள்ளிலோத்திரம், சந்தனம், நன்னாரிவேர் சமமாக எடுத்து அரைத்து பச்சரிசியைக் கழுவின நீரில் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.
3. பற்பாடகமும் நெல்லிச்சாம்பலும் அரைத்துப் பாலில் கலந்து குடித்தால் வலி தீரும்; பத்தியம் புளி தள்ளவும்.

மேற்படி நோயால் தாகமூர்ச்சை கண்டால்

1. அத்தி, ஆல், மா, அரசு இவைகளின் கொழுந்தைச் சமமாக எடுத்துக் கியாழஞ்செய்து கொடுத்தால் வலி தீரும்.
2. குதிரை எலும்பு, பசுவின் பால் விட்டு அரைத்துக் கொட்டைப் பாக்கு அளவு எடுத்துக் கால் படி பாலில் கரைத்து 3 நாள்கள் உட்கொள்ளவும். 6 நாள்கள் வரை உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய் இருந்தால் வலி தீரும்.
3. காராகரந்தையிலை ஒரு தேங்காய் அளவு தோல் நீக்கி அரிந்து, ஈருள்ளி ¼ படி ஒன்றாய்ச் சேர்த்து இடித்துப் பிழிந்த சாற்றில் ஒரு காசு எடை எடுத்து நல்லெண்ணெய் விட்டு மூன்று நாள்கள் உட்கொண்டால் வலி தீரும்.

கருவுற்ற காலத்தில் வரும் சுரத்திற்கு மருந்து

பாருஞ் சிற்றா முட்டிவேர் பகருஞ் சீந்திற் கொடியுடனே
சேருஞ் சுக்கு திப்பிலியுஞ் சிறந்த பேரா முட்டியுடன்
நீரும் வேம்புளி லவேம்பு நேர்ப்பாய் கியாழந் தானருந்த
தீருங் கெற்ப சுரந்தானுந் திகைத்தே யோடுங் கண்டீரே.

சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், சீந்திற்கொடி, நிலவேம்பு, சுக்கு, திப்பிலி இவைகளை இடித்துக் குடிநீரிட்டுக் கொடுத்தால் வலி தீரும்; பத்தியம் இல்லை.

கருவுற்றவர்களுக்குக் காணும் நீர்ச்சுருக்கு நீர்ப்பிணைப்பிற்கு மருந்து

நீர் முள்ளியிலை, பசலையிலை, குப்பைமுள்ளியிலை இவைகளில் ஒன்றை அவித்துத் தின்றாலும், அல்லது நன்னாரி வேராவது, உலர்ந்த ரோஜாப் பூவையாவது குடிநீர் செய்து சாப்பிட்டால் நீர் சுரப்பு நீங்கும்; பத்தியமில்லை.

சூலுற்றவளுக்கு நீரடைத்தால்

மங்காத குழன்மடவீர் சொல்லக் கேளீர்
　　மாகெற்ப வதியாட்கு நீர டைத்தால்
தங்கிநின்ற இருவாயுங் கட்டிக் கொள்ளுந்
　　தாரணியில் மங்கையர்கள் சகிக்க மாட்டார்
வெங்காரம் சவர்க்காரஞ் சீனக் காரம்
　　வெண்மதியாம் இந்துப்பு வெதுப்பிக் கொண்டு
சிங்கார யிளநீரிற் கொள்ளும் போது
　　சிக்காது மலசலங்கள் திண்ணந் தானே.

1. *பூரணச்சந்திரனைப்போல் முகத்தை உடையவளே! சூலுற்ற பெண்களுக்கு நீர் தங்கினால் வெண்காரம், சவுக்காரம், படிகாரம், இந்துப்பு, வெடியுப்பு இவைகளைப் பொரித்து இளநீரில் அருந்த மலஞ்சிறுநீர் பிரியும் என்பதாம்; பத்திய மில்லை.*

2. *பொரித்த வெண்காரம் 2 வராகன் எடை, சங்கம் வேர்ப் பட்டை, இலவங்கப்பத்திரி, மிளகு, முள்ளிக்கீரைவேர், பொன்னாங்கண்ணி, சந்தனம் வகைக்கு 1 வராகன் எடை காடி விட்டு அரைத்துக் கொடுத்தால் வலி தீரும்.*

சூலுற்ற பெண்களுக்கு கல்லடைத்தால்

அன்னே மாதளம் பழத்தரிசி யாவின் பாலிற் றானரைத்து
மின்னே யருந்தத் தான்றீரும் மேலே தடவச் செந்தொட்டி
பன்னே வேரைத் தொப்புளின்மேல் பாங்காய்த் தடவத் தான்தீரும்
சொன்னோம் செப்பு நெருஞ்சில் முலைப்பா லரைத்துக் கொடுப்பீரே.

மாதுளம்பழத்தரிசியைப் பசுவின் பாலில் அரைத்து உண்ணத் தீரும். செந்தொட்டிவேரை அரைத்துத் தொப்புளைச் சுற்றித் தடவ வலிநீங்கும். செப்பு நெரிஞ்சியைத் தாய்ப்பாலில் அரைத்துக் கொடுக்க வலி நீங்கும்.

வயிற்றில் இறந்த குழந்தை வெளிவர மருந்து

1. *உகாயிலையைக் கறுக வறுத்து அதில் நாழித் தண்ணீர் விட்டு கால் படியாக வற்றினபிறகு மிளகு, பூண்டு, பெருங் காயம், ஓமம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி அரைக்கால் படி தண்ணீர் கொடுக்க குழந்தை வெளிவரும்; அதைக் கீழ் வயிற்றில் பூசப்பிள்ளை பிறக்கும்.*
2. *நிலக்குமிழம் வேரை அரைத்துக் கொடுக்க வெளிவரும்.*
3. *உத்தமதாளி வேரை அரைத்துக் கொடுக்க வெளிவரும்.*
4. *கள்ளிவேரைக் காடி தண்ணீரில் அரைத்துக் கொடுக்கவும்.*
5. *பிரண்டைவேரும் குருஞ்சாவேரும் அரைத்து வயிற்றில் பூச வெளிவரும்.*
6. *பெருங்காயமும் உப்பும் பழங்காடியில் அரைத்துக் கொடுக்க வெளிவரும்.*
7. *வெந்தோன்றிக் கிழங்கும் காட்டுமுல்லையும் வெறுங் காடியில் அரைத்து அடி வயிற்றில் தடவினால் வெளி வரும்.*
8. *துளசிச்சாறு அரைக்கால் படி, நல்லெண்ணெய் அரைக்கால் படி, புகையூரல் 1 பலம் (35 கிராம்), அதை கூடப் போட்டுக் கொடுத்தாலும் வயிற்றில் மரித்த பிள்ளை வெளிவரும்; பத்தியமில்லை.*

பிள்ளைபெற வருத்தப்பட்டால் மருந்து

நாய் மண்டையோடு கொஞ்சம் எடுத்துப் பொடி செய்து விளக்கெண்ணெயில் குழப்பி உட்கொண்டு வயிற்றிலும் பூச பிள்ளை பிறக்கும்.

1. *பசலையிலைச்சாறு அரைக்கால் படி, நல்லெண்ணெய் அரைக்கால்படி ஒன்றாய்க்கலந்து கொடுக்க பிள்ளை பிறக்கும்; நஞ்சுக்கொடி விழும்.*

2. *சிவனார்வேம்பைத் தாய்ப்பாலில் அரைத்துத் தொப்புளின் கீழ் தடவப் பிறக்கும்.*

3. *கௌதும்பை வடவேரைப் பிடுங்கி குளிசமாடி நெற்றிக்கு நேரே மயிற்கட்டியதைப் பார்க்கப் பிறக்கும்.*

மருத்துவம்:- *பிள்ளைபெற வருத்தப்பட்டு தாகமெடுத்தால், வயிற்றில் பசுவின் வெண்ணையைப் பூசி அது உருகினால் பிள்ளை பிறக்குமென்றும், உருகாவிட்டால் வயிற்றில் பிள்ளை செத்ததென்றும் அறியலாம். பச்சைப் புனுகும் கோரோசனையும் மத்தித்து வருத்தப்பட்டு பிறந்த குழந்தை நாக்கில் தடவ மயக்கம் நீங்கும்.*

நஞ்சுக்கொடி விழ மருந்து

1. *குடசப்பாலைவேர் எலுமிச்சங்காய் அளவு வெந்நீரில் அரைத்து எருமை வெண்ணையில் குழப்பிக் கொடுக்க விழும்.*

2. *வட்டத்துத்தி வேர், சீரகம், பழம்புளி சமமாய்க் குடிநீர் செய்து கொடுக்க விழும்.*

3. *கருவேப்பிலைக் கொழுந்து, வேப்பங்கொழுந்து, முருக்கன் கொழுந்து வகைக்கு ஒரு பிடி, கடுக்காய் ஒன்று இவை யெல்லாம் நொறுக்கி ஒரு படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க விழும். பத்திய மில்லை.*

பிள்ளை பெற்றதில் வயிறு பழுத்தால் (கருப்பையுள் சீழ்பிடித்தல்) மருந்து

1. வேலிப்பருத்தி இலை, சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு வகைக்கு 20 வராகன் எடை (70 கிராம்); தட்டிப்போட்டுக் குடிநீர் செய்து மூன்று நாள் கொடுக்க நோய் தீரும்.

2. மாவிலிங்கம்பட்டை, சிற்றரத்தை, அரிசித் திப்பிலி, மஞ்சள் வகைக்கு கால் பலம் (8 ¾ கிராம்), கருப்புக்கட்டி 1 பலம் (35 கிராம்) கியாழஞ் செய்து மூன்று நாள் சாப்பிட நோய் தீரும்.

3. கோவைத்தண்டை இடித்துக் காடியில் ஊறவைத்து அதில் சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி, அடுப்புக்கரி வகைக்கு 1 பலம் (35 கிராம்) அரைத்துக் கலக்கிக் காய்ச்சி அதில் நல்லெண்ணெய் அரைக்கால் படி விட்டு வெள்ளுள்ளி தட்டிப் போட்டு வெதுப்பித் தாளித்துக் கொடுக்க வலி தீரும்.

மகப்பேற்றுக்குப்பின் பச்சையுடம்பில் வயிறு பொருமி வலித்தால் மருந்து

பெருங்காயம் 1 வராகன் எடை (3 ½ கிராம்), வசம்பு 4 வராகன் எடை (14 கிராம்), ஓமம் 6 வராகன் எடை (21 கிராம்), கடுக்காய்ப் பொடி 1 வராகன் எடை (3 ½ கிராம்), திப்பிலி 7 வராகன் எடை (24 ½ கிராம்), கோட்டம் 8 வராகன் எடை (28 கிராம்), சிவதை 9 வராகன் எடை (31 ½ கிராம்) இவை களை வறுத்துச் சூரணித்துத் திரிகடி அளவு பசுவின் நெய்யில் உண்ண வலி தீரும்; இச்சாபத்தியம்.

மகப்பேற்றுக்குப்பின் பச்சை உடம்பிலெடுத்த இரைப்பிருமலின் (சுவாசகாசம்) குணம்

அறைந்திடவே சுவாசகா சத்தி னேர்மை
அப்பனே சுரங்காயுந் தலைவ லிக்கும்
நிறைந்திடவே வயிறுதான் பொருமிக் காணும்
நெடுமூச்சு இளைப்புடனே மயக்கங் காணும்

குறைந்திடவே தாகிக்கும் மேனி வேர்க்கும்
குடலிரைந்து தான்கழியும் ஐந்து ஏழில்
மறைந்திடவே யொன்பதினில் நவநா ளிரண்டில்
மரணமாந் தப்பினால் வியாதி போமே.

சுரங்காயுந் தலைவலிக்கும், வியர்க்கும், தாகிக்கும், வயிறு, பொருமி இரைந்து கழியும்; இளைப்பு, பெருமூச்சு, மயக்கங் காணும்; 5–7–9 அல்லது 18வது நாளில் இறப்புண்டாகும்; இந்தக் கெடு தப்பினால் நோய் நீங்கும்.

மருத்துவம்:–

1. *கழற்சிப்பருப்பும் பனைவெல்லமும் அரைத்துக் கொடுக்கவும். வேங்கையுப்புக் கண்டத்தையாவது அதன் தோலையாவது சாராயத்தில் அல்லது இளவெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும்; பத்தியமில்லை.*

2. *முருங்கைப் பட்டை, கழற்சிப்பருப்பு, பனைவெல்லம் வகைக்கு ஒரு கழஞ்சு அரைத்துக் கொடுக்கவும்; பத்தியமில்லை.*

3. *சந்தனம், கோட்டம், அதிமதுரம், சாத்திரபேதி, தக்கோலம், முல்லைவேர், கோரைக்கிழங்கு, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், நெல்லிப்பருப்பு ஆகியவற்றைச் சமமாய் எடுத்து இளநீர் விட்டு அரைத்து இலந்தைப் பழக் கொட்டை அளவு உருண்டை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு தொடர்ந்து 10 நாள்கள் இளவெந்நீரில் கொடுத்தால் வலி தீரும்; இச்சாபத்தியம்.*

4. *முத்தக்காசு (கோரைக்கிழங்கு), திப்பிலி, மிளகு, சுக்கு, கடுகுரோகிணி, சீரகம், ஏலம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், தக்கோலம், இலவங்கம், மல்லி, கோரோசனை, கோட்டம் ஆகியவற்றைச் சமமாக எடுத்து இளநீர்விட்டு அரைத்து, மிளகுபோல் உருட்டிக் கொண்டு இளவெந்நீரில் தொடர்ந்து 10 நாட்கள் கொடுத்தால் வலி நீங்கும்; இச்சாபத்தியம்.*

5. மல்லி, மதுரம், ஏலம், இலவங்கம், கோட்டம் சண்பகப்பூ கோரோசனை, முத்தக்காசு, மிளகு, இருவேலி, முந்திரிப் பழம், பேரீச்சம்பழம் ஆகியவற்றைச் சமமாய் எடுத்து இளநீரிலும், எலுமிச்சம் பழச்சாற்றிலும் அரைத்து இலந்தை பழக் கொட்டை அளவு உருண்டை செய்து உலர்த்திக் கொண்டு இள வெந்நீரில் கொடுத்தால் வலி போகும்; இச்சாபத்தியம்.

மருந்துகளுக்கு ஆகும் உணவுப் பண்டங்கள்

கட்டினஉப்பு, புளியாரை, சீயக்கொழுந்து, நெல்லிக்காய், அரிநெல்லிக்காய், வெள்ளாடு, முயல், ஆமை, ஊர்க்குருவி, காடை, கான்மரை, சுறாமீன், மயரை, குரவை, வரால்மீன், தேளி, கெளிறு, மிளகு, சர்க்கரை, தேன், சிறுகீரை, பசுவின்பால், நெய், சிறுபயிறு, துவரை, பொன்னாங்கண்ணி, அவரைப்பிஞ்சு, புடலம் பிஞ்சு, கதலி, வாழைப்பழம், கொதிக்கும் நீர், அத்திப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பரட்டைக்கீரை, முள்ளிப்பிஞ்சு, தூதுவளை சமூலம், வழுதுளம்பிஞ்சு, கண்டங்கத்திரிப்பிஞ்சு முதலான வகைகள் நோய்களைப் போக்கும்.

மருந்திற்கு முறிவான உணவுப் பண்டங்கள்

கொள்ளு, கொம்மட்டி, கோழி, பன்றி, கொக்கு, செவ்வாடு, சோம்பு, சீனி அவரை, கொத்தவரங்காய், சுரைக்காய், பாகற்காய், பழுபாகற்காய், மாங்காய், புளி, கடுகு, தேங்காய், மேதிப்பால், நெய், சாராயம், தென்னங்கள்ளு, உளுவைமீன், விலாங்கூனிமீன், கொடைகள், கயல்மீன், முதலான கரப்பான் உணவுப் பண்டங்களை எள்ளளவு தின்றாலும் மருந்து முறிந்து உடலில் உள்ள பிணியை வலுக்கச் செய்யும்.

(கருக்கோள் இலக்கணப் படலம் முற்றும்.)

பாலவாகடப் படலம்

குழந்தைகளுக்கு வரும் நோயின் விவரமும் அதற்கு மருந்துகளும் சாற்றுதல்

பாரே குழந்தைப் பிணிகுறிப்பும் பகரும் பட்சி தோடமுடன்
நேரே மாந்தம் பதினெட்டும் நேருங் கிரந்தி தன்குணமும்
சீரே புணர்ச்சி கரந்தலதுஞ் சிறந்த கருப்பஞ் சூடுமுதல்
நேரே மாந்த ரறிபவென்று நிரையா யுரைத்த திதுவாமே.

கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, பறவைத்தோடம், மாந்தகணம், பீளி, கரப்பான், செவ்வாப்பு, தொண்டைக்கட்டு, அட்சரம், வைசூரி முதலான அநேக நோய்கள் ஏற்படுகின்றன. மாந்தத்தாலும், தாய்ப்பாலாலும், கணம், கருப்புச் சூட்டினாலும், மற்ற பிணிகள், தாய்தந்தையின் புணர்ச்சியினால் ஏற்படும் சூட்டினாலும் குழந்தைகளுக்கு நோய் உண்டாகும்.

செங்கிரந்தி நோயின் இயல்பு

பிறந்த பிள்ளை பெறுவயி றூதீடும்
சிறந்த காளைக் குரல்போ லழுதிடும்
திறந்த நீரும் மலசலங் கட்டிடும்
தறந்த தொண்டை கட்டிக்கால் சிவப்பதே.

பிள்ளை பிறந்தவுடன், தொண்டைகட்டிப் பூனைக்குரல் போல அழும். மலமும் கட்டி வயிறு ஊதும்; கால் கை சிவப்பேறும்.

மருத்துவம்:

1. *கோரோசனையைத் தாய்ப்பாலில் அரைத்துக் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.*

2. *கற்பூரவள்ளியிலை, குன்றிமணியிலை, ஈருள்ளி சம நிறையாய்த் தட்டிச் சாறு பிழிந்து முறித்துக் கொடுத்தால் நோய் தீரும்; இச்சாபத்தியம்.*

3. முருங்கையிலைச் சாற்றை முறித்துக் கொடுத்தால் நோய் தீரும்.

4. செம்முள்ளி இலையை நீரில் போட்டுக் காய்ச்சிக் குளிப்பாட்டி வந்தால் தீரும்.

செங்கிரந்தி நோய் (வேறு)

பால னலறியழும் பாலுணாக்கு ரல்கம்மும்
சீல முடல்வெதும் முர்ச்சை ஞாலமதில்
நாவறட்சி காணும் நவில்வயிற்று நோகறுப்பாம்
கால விழிதிறவா காண்.

குழந்தை அலறி அழும்; குரல் கம்மலாகும்; தாய்ப்பால் குடிக்காது; மூர்ச்சை அடையும்; உடல் வெதும்பும்; கண் திறவாது; நாவறட்சி ஏற்படும்; கீழ்உதடு. கை, கால் கறுப்பேறும்; வயிறு ஊதி; வலி ஏற்படும்.

மருத்துவம்

1. கழுதைப்பாலில் ஒரு காசு எடை எடுத்து, ஓணானின் ரத்தம் விட்டுக் கொடுத்தால் குழந்தைக்கு நல்லது; கடும் பத்தியம்.

2. கருங்கழுதை லத்திச்சாறு, அவுரியிலைச்சாறு, சிற்றாமணக் கெண்ணெய் சமமாய்க் கலந்து அதில் வசம்பு, உள்ளி தட்டிப் போட்டுக் காய்ச்சிச் சங்களவு கொடுத்தால் தீரும்; பத்தியமில்லை. (சங்களவு ஒரு பாலாடை என்பர். அது சுமார் ½ அவுன்ஸ் ஆகும்.)

3. பசுவின் நெய், சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், சங்கிலிச்சாறு சமமாக எடுத்து; மிளகு, சுக்கு, திப்பிலி, அரைத்துப் போட்டு; சூரிய புடம்வைத்து, அந்தத் தைலத்தைத் தேய்த்து செம்முள்ளி, கிரந்திநாயகம் ஆகியவற்றை நீரில் போட்டுக் காய்ச்சி அந்த வெந்நீரில் குளிப்பாட்டி வந்தால் நல்லது; பத்தியமில்லை.

4. மூக்கரைச்சாரணை, முடக்கத்தான், செப்புநெருஞ்சில், முத்தெருக்கஞ்செவி, ஓரிதழ்த்தாமரை, வெங்காயம்,

மயிலிறகு இவை எல்லாம் ஒரே சமமாகத் தட்டி எடுத்துக் கொண்டு; சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி குழந்தைக்கு உள்ளுக்குக் கொடுத்துத் தாய்க்கு மேலே பூசினால், குழந்தைக்கு நோய் தீரும்; தாய் பத்தியமாய் இருக்கவேண்டும்.

கிரந்தி 18-க்கும் சூலை 18-க்கும் மருந்து

ஆமணக்கெண்ணெய், தேங்காய்ப்பால், செம்பருத்தி இலைச்சாறு வகைக்கு 1 படி ஒன்றாய் விட்டுக் காய்ச்சி வடித்து எடுத்துக்கொண்டு அதில் சுக்கு, கிராம்பு, ஏலம், திப்பிலி, பூரம், மிளகு ஆகிய ஒவ்வொன்றும் வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்), அளவு பொடித்துப் போட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் நோய் தீரும்; பத்தியமில்லை.

அறைவீட்டில் குழந்தைக்குக் கழுத்துவீங்கி முழங்கால், முழங்கை குளிர்ந்து, வயிற்றுவலி காணலுக்கு மருந்து.

1. மேற்படி பிணிகண்டவுடன் கஸ்தூரி, திப்பிலி இரண்டையும் பொடி செய்து கால் காசு எடை அளவு எடுத்து வெற்றிலைச் சாற்றில் கொடுத்தால் பிணி தீரும்.
2. கஸ்தூரியை கால் காசு எடை வெற்றிலைச் சாற்றில் கொடுத்தாலும் பிணி தீரும்; இச்சாபத்தியம்.

குழந்தை வயிற்றுவலிக்கு, மலங்கட்டலுக்கு மருந்து

புன்னை, சிறுதேக்கு, கோட்டம் ஒரே சமமாய் அரைத்துக் குழம்புபோல் காய்ச்சி குழந்தையின் வயிற்றில் பூச வயிற்றுவலி தீரும்.

மேற்படிவேறு:- அதிமதுரம், வேப்பங்கொழுந்து, சர்க்கரை இம் மூன்றும் அரைத்து நெய்யில் வேகவைத்துக் கொடுக்க மலக் கட்டால் வயிறு வலித்து அழுதலும் மலக்கட்டும் நீங்கும்.

குழந்தையின் சிறுநீர்கட்டுக்கு மருந்து

எலிபுழுக்கையும், வெள்ளரி விதையும் சமமாக அரைத்து; அடி வயிற்றில் பூசி; வெங்காரம் பொரித்துத் தாய்ப்பாலில்

கரைத்துக் குழந்தைக்குப் புகட்டினால் நீர் இறங்கும்; பத்திய மில்லை.

பிள்ளைகளுக்கு உரம் (வர்மம்) விழுதலுக்கு மருந்து

வெள்ளைப்பூண்டு 10 பலம் (350 கிராம்), கடுகு 10 பலம் (350 கிராம்) ஒன்றாய்க் கலந்து குழித்தயிலமிறக்கி உடம்பில்பூச குடல்வாதம், உரம் தீரும்; பத்தியமில்லை.

பிள்ளை சீறி அழுதல், விக்கல் எடுத்தல், வயிறுபொருமலுக்கு மருந்து

சிறுதேக்கும், திப்பிலியும் பொடி செய்து கொண்டாவது, அல்லது திப்பிலியும் கடுகுரோகிணியும் பொடி செய்து கொண்டு தேன் அல்லது பசுவின் நெய்யிலாவது கலந்து மார்பகங்களில் (நகில்) பூசிப் பிள்ளைக்குப் பால்கொடுத்தால் குழந்தைக்கு மேற் கூறிய பிணிசள் நீங்கும்; பத்தியமில்லை.

பிள்ளையின் வயிறு வீங்குதல், குடித்த பால் வாந்தி எடுத்தல், அடிக்கடி கொட்டாவி விடுதலுக்கு மருந்து

1. *அதிமதுரத்தைக் காடியில் அரைத்து வயிற்றில் பூச, வயிறு வீக்கம் தீரும்.*
2. *வெள்ளுள்ளியும் ஓமமும் வெதுப்பிக் குடிநீர் செய்து கொடுத்தால் பால் வாந்தி எடுப்பதும் கொட்டாவியும் நீங்கும்.*
3. *அதிமதுரத்தைத் தாய்ப் பாலில் அரைத்துக் கொடுக்கவும், மார்பகங்களில் (நகில்) பூசிக் குழந்தைக்குப் பால் கொடுக்கவும்; பத்தியம் இல்லை.*

தாய்க்குப் பால்சுரக்க மருந்து

1. *பூனாகத்தைப் பாலிற்போட்டு மண்களைந்து எலுமிச்சங்கா யளவு அரைத்துப் பசுவின் பாலில் 3 நாள் கொடுக்கவும்.*
2. *கற்றாழையிலை இள வெந்நீரில் போட்டுப் பிசைந்து மூன்று நாள் கொடுக்கவும்.*
3. *பாதிரி வேரையாவது கீழ்க்காய் நெல்லி வேரையாவது அரைத்துப் பாலில் கொடுக்கவும். பால் சுரக்கும்.*

தோட வகுப்பு

பணிந்திட்ட பிள்ளையது பாலுண் ணாது
பகர்சலமாய் வயிறுளையும் வாந்தி பண்ணும்
வணந்திட்ட கண்குழியுந் தலையெ டாது
வார்பீருளை சாருமுடன் பேதி யாகும்
அணிந்திட்டச் சீறியழு முடல்வெ துப்பும்
அலறியே கண்டமுகஞ் சிறுசி றுக்குந்,
துணிந்திட்ட பட்சிதோடக் குணத்தி னேர்மை
கூறினார் கும்பமுனி கூறி னாரே

பட்சி தோட இயல்பு

[அ. பொ.] வயிறுளையும் = வயிற்றில் வலியுண்டாகும்; வெதுப்பு = வெம்மை (சுரம்) உண்டாம்; கண்டம் = கழுத்து; கும்பமுனி = அகத்தியர்.

குழந்தை முலையுண்ணாது; நீராக வயிறுகழியும்; வாந்தி பண்ணும்; தலையெடாது; கண்குழியும்; பீளைசாறும்; உடல் பேதப்படும்; வெதும்பும்; அழும்; சீறிப் புலம்பும், கண்டமும் முகமும் சிறுக்கும்.

மருத்துவம்:- மணத்தக்காளிவேர், பிச்சிவேர், ஈருள்ளி இவைகளை நறுக்கி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு வெய்யிலில் வைத்துக் குழந்தைக்குக் கொடுத்து உச்சியிலுந்தேய்க்க நீங்கும்.

பறவை தோட இயல்பு

தலையில் கனலேறி உடல்நொந்து வெதும்பும்; நாவுலரும், கக்கல் செய்யும்; நெஞ்சை; நெஞ்சை சுழிவாங்கும்; வலிப்புங் காணும். இளைக்கும்; உச்சியுங்கண்ணுங்குழியும்; குழந்தை அடிக்கடி திடுக்கிட்டெழுந்து சீறியழும்; வயிறு போகும். (கழிச்சலாகும்)

மருத்துவம்:- சீரகம், ஈருள்ளி, வறட்பூலாவேர், இவைகளைச் சமமாய் எடுத்துக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

எட்சிதோட இயல்பு

குருதியில் கனலேறி உடம்பு தேயும்; நாறும், கண்ணிற்பீளை கட்டும்; சற்றே வயிறு கழியும்; குழந்தை முலையுண்ணாது; பதறியழும்; கண்ணைப் பிசையும்; மயங்கிப்புரளும்.

மருத்துவம்:- *வில்வயிலையுஞ் சீரகமும் குடிநீர் செய்து கொடுத்து மேற்படி இலையையாவது நிலவிளா இலையையாவது அரைத்து வெந்நீரில் கரைத்துக் குளிப்பாட்டத் தீரும்.*

வீங்குபுள் தோட இயல்பு

குழந்தை வாந்தி பண்ணும்; பசுமையாயும் பால் போலுங் கழியும்: பின்கையால் முகத்தைத் துடைக்கும்; உச்சிகுழியும்; நாவுலரும்.

மருத்துவம்:- *மதுரம், முத்தக்காசு, அதிவிடயம், கடுக்காய் வசம்பு, தேவதாரம், மஞ்சள் இவைகளைச் சமநிறையாய் எடுத்துப் பொடுதலைச் சாற்றாலரைத்து உருண்டை செய்து தாய்ப்பாலிலிட்டுக் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.*

தூங்குபுள் தோட இயல்பு

மங்கையே வயிறுகழியும் வாந்தி பண்ணும்
மயக்கமாம் நித்திரையு மதிக மாகும்,
அங்கமாய் வீறிட்டு எழுந்தி ருக்கும்
அன்னையின் முகம்பார்த்து தண்ணீர் கேட்கும்
துங்கமுகம் வேறுபட்டுக் கண்கள் சோரும்
துடிதுடித்து நெறுநெறெனப் பற்க டிக்கும்,
புங்கமாயுச் சிபள்ளம் விழுகும் பாரு
புத்திரற்குத் தூங்குபுள்ளின் தோட மாமே.

[அ. பொ.] நித்திரை=உறக்கம்; வீறிட்டு = அச்சத்தால் உரத்த குரலில் திடீரென்று அழுதல்; சோரும் = அயரும்; புங்கமாய் மிகுதியாக

வயிறுகழியும்; வாந்திபண்ணும்; மயக்கமாய்த் தூங்கிக் குழந்தை வீறிட்டலறி எழுந்திருக்கும்; முகத்தைப் பார்க்கும், அடிக்கடி தாகித்துத் தண்ணீர் விரும்பும்; முகம் வேறுபடும்; கண்களிரண்டுஞ் சோரும்; நெறுநெறெனப் பல் கடிக்கும்; உச்சி பள்ளம் விழும்.

மருத்துவம்:- மஞ்சள், வசம்பு, ஏலம், வேப்பீர்க்கு, ஓமம் குட்டிவிளா இவையெல்லாம் நறுக்கி வெதுப்பிக் குடிநீர் செய்து, அதில் கோராசனையையும் கரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேற்படி மருந்துகளை அரைத்து மேலிலும் பூசிக் குளிப்பாட்டத் தீரும்; பத்தியமில்லை.

விளக்கொளிக்கண்புள் தோட இயல்பு

பாலெதிரெடுக்கும்; உடலடிக்கடி சாயும்; குழந்தை முலையுண்ணாது; பெருவிடாய் கொண்டு சோரும்.

மருத்துவம்:- சின்னி, வசம்பு, குட்டிவிளா இவையெல்லாம் அரைத்துக் குழந்தைக்கு மேலிற்றேய்த்து, தலைமுழுக்காட்டி, அதுகளைத் துணியில் முடிந்து கழுத்திலுங், கையிலுங்கட்டத் தீரும்; பத்தியமில்லை.

வெங்கண்புள் தோட இயல்பு

வாய்நீர் வடியும்; வாந்தி (கக்கல்) பண்ணும்; உருவழியும், அழும்; பீளைகட்டும்.

மருத்துவம்:- கோரோசனை, அதிமதுரம், திப்பிலி இவைகளைச் சமமாக எடுத்து தாய்ப்பாலில் அரைத்து ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

செங்கண்புள் தோட இயல்பு

கண்சிவந்து நீர்வடியும்; தலை குளிரும்; குழந்தை தவழ்ந்து போய் நிலத்தில் விழும்; கையால் முகத்தைத் துடைக்கும்; சீறியழும்; வெப்பு காணும்; நீராய்க் கழியும்.

மருத்துவம்:- அதிமதுரம், சீரகம், முத்தக்காசு, ஏலம், பத்திரி, சாதிக்காய், கிராம்பு; செண்பகப்பூ, இலவங்கப்பட்டை வகைக்கு 1 வராகனெடை (3 ½ கிராம்), முசுமுசுக்கையிலை, பொன்னாங்காணி, சிறுகீரை, சீந்தில் வகைக்கு 1 பலம் (35 கிராம்), ஈருள்ளிச் சாறு கால்படி; ஆவாரை வேர் 1 பலம் இவைகளை அரைத்து இரண்டு படி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி கொடுக்க அனைத்துத் தோடமுந் தீரும்; பத்தியமில்லை.

அந்திப்புள் தோட இயல்பு

மேனிவெளுக்கும், காயும்; அதில் நரம்புதோன்றும்; கால் கை குளிரும்; பாலெதிரெடுக்கும்.

மருத்துவம்:- *சின்னி, குட்டிவிளா, நொச்சி, சீந்தில், வேம்பு, வசம்பு, உள்ளி இவைகளை அரைத்து மேலெங்கும் பூசி, மேற்படி மருந்துகளைத் தட்டி நசுக்கிச் சிறுபொட்டணமாய்க் கண்டத்திலுங் காலிலுங்கட்டத் தீரும்.*

நீர்ப்புள் தோட இயல்பு

நெஞ்சு வறளும் குளிர்ந்து நெடுமூச் செய்தும் பாலுண்ணாது
துஞ்சா திரவும் பகலுமழுந் துய்ய பாலன் முகம்வெளுக்கும்
மிஞ்சவு டலுந்தான் வெயர்க்கும் மீறி யழுகுந் தோடமதால்
கஞ்ச மலராள் சூழலாணை கழல்நீர்ப் புள்ளின் தோடமீதே.

[அ. பொ.] துஞ்சாது = தூங்காது; மீறி = அளவுக்கு மிஞ்சி; கஞ்சமலராள் = இலக்குமி.

நெஞ்சுவறண்டிடும்; கண்குளிர்ந்து வெளுக்கும்; குழந்தை பெருமூச்சிடும்; பாலுண்ணாது; இரவும்பகலும் அலறியழும்; உடல் வியர்க்கும்.

மருத்துவம்:- *விஷ்ணுகரந்தையும், சீரகமும் கூட்டிக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்; பத்தியமில்லை.*

புள் தோட இயல்பு

உச்சியுங்கண்ணுங் குழியும்; குடித்த பால் தங்காது; பச்சையாய் வயிறு கழியும்; பறவைக் குரல்போல் குழந்தை சீறியழும்; இளைக்கும், தண்ணீரை விரும்பும்; மெய்மறக்கும்.

மருத்துவம்:- *ஓரிதழ்த் தாமரை, வெந்தயம், விடத்தலை வேர், வால்மிளகு, ஓர் அளவாய்க் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்; பத்தியமில்லை.*

புள் தோட இயல்பு (வேறு)

மாதவிடாயானவர்கள் குழந்தையை எடுத்தால் மேனி வாடி வேறுபடும்; கக்கல் பண்ணும்; உச்சியுங் கண்ணுங் குழியும்; நாக்கு வாய் சுரக்கும்.

மருத்துவம்: - கோரோசனை, திரிகடுகு, சீரகம், குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

குழி தோட இயல்பு

உச்சியுங் கண்ணுங் குழியும்; வாந்தி, வியர்வைமிகும்; பல வண்ணமாய்க் கழியும்; உடல் தணல்போற் காய்ந்து வற்றும்; நெஞ்சுலர்ந்து தாகிக்கும்; கண்ணில் நீர் சொரியும்; கால் வீங்கும்; குய்யம் புண்ணாகும்.

மருத்துவம்:- குட்டிவிளா, வேம்பு, சோம்பு, மஞ்சள், வசம்பு இவையெல்லாம் அரைத்துத் தாய்க்கும் பிள்ளைக்கும் உடம்பில் தேய்த்து, நீரில் வாகையிலையைப் போட்டுக் காய்ச்சி நீராட்டி அப்பால், பசும்நெய் அரைபடி நல்லெண்ணெய் கால்படி நன்னாரி, தண்ணீர் விட்டான், கரந்தை, பொன்னாங்காணி வகைக்கு 1 பலம் (35 கிராம்), ஏலரிசி, சீரகம், வகைக்கு 3 கழஞ்சு இவைகளை எல்லாம் பால் விட்டரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிச் சிறு கரண்டி வீதம் கொடுக்க அனைத்துத் தோடமுந் தீரும்; இச்சாபத்தியம்.

வேப்பங்கொழுந்து ஒரு பிடி, மிளகு, வசம்பு, சுக்கு, மலைதாங்கி வேர் வகைக்கு 1 வராகனெடை (3 ½ கிராம்), விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்; இச்சா பத்தியம்.

கருப்பம் சிதைந்த தோட இயல்பு அல்லது கருச்சிதைவு கண்ட பெண்ணால் ஏற்பட்ட தோட இயல்பு

உடம்பு நொந்து தான்சிவக்கு முறையு மேனி தானாறும்
திடமா மசதி நெஞ்சுலருந் தேகமி ளைக்குங் கால்பின்னும்
படமாய்க் கழியும் விழிசொருகும் பாங்காய்க் கைகா லழுக்கேறும்
சடமாம் புத்தி தான்மயங்குஞ் சாற்றுங் கருப்ப நோயுமிதே.

உடம்பு நொந்து சிவக்கும்; இளைக்கும், நாறும் நெஞ்சுலரும்; கைகால் அழுக்கேறும்; கால்பின்னும்; கழியும் விழிசொருகி மயங்கும்.

மருத்துவம்:-

1. கழுதைலத்தியின் சாற்றில், பருத்தி வேரை உரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.
2. பனைவெல்லத்தை மேற்படி சாற்றில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

தேரைத் தோட இயல்பு

பாரப்பா வதிப்புலர்ந்து தேகம் வற்றும்
பதிவாக நெஞ்சுலர்ந்து கண்சி றுக்கும்,
நேரப்பா கைகால்கள் வற்றிப் போகும்
நேர்மையாய் நரம்பொடுங்கி வயிர் பொருமும்,
நீரப்பா மலந்தீயு நாவு லரும்
நெடுந்தாக மொடுவாடும் மேனி வெண்மை,
ஆரப்பா செவிதாழு மூச்சு வாங்கும்
மருங்குரற் படும்பிள்ளை தேறா தென்னே.

உடம்புலர்ந்து வற்றும்; வெளுக்கும், நெஞ்சுலர்ந்து கூடும்; கண் பொடித்திருக்கும்; கை கால்ற்றிச் சுருக்கி முடங்கும்; வயிறு பொருமும்; மலம் தீயும்; நாவுலரும்; தாகிக்கும்; முகம் வாடும்; செவிதாழும்; மூச்சு வாங்கும்; நெரிகுரறபடும்; பிள்ளை சற்றும் தேறாது.

மருத்துவம்:- சிறுபுள்ளடி, செருப்படி, சிறுகீரை, நீர் ஆரை, பொன்னாங்காணி, நீர்முள்ளி இவைளின் சமூலங்கள்; காட்டுமல்லி, அவுரி, கரிசலாங்கண்ணி, நிலக்குமிழ், முடக்கொத்தான் இவைகளின் வேர் சம நிறையாக இடித்து மூன்றுபடி நீரிற் போட்டு, நாலிலொன்றாய் வற்றவைத்தக் குடிநீரில், அதுமதுரம், திப்பிலி, ஏலம், மிளகு வகைக்கு கால் பலம் போட்டுப் பசுவின் பால் விட்டரைத்துப் பசுவின்நெய் இரு நாழி விட்டுப் பதமாய்க் காய்ச்சிச் சிறு கரண்டிவீதம் கொடுக்கத் தேரைத்தோடம் குழிதோடம் தீரும்; இச்சாபத்தியம்.

அனைத்துத் தோடங்களுக்கும் பொதுமருந்து

1. அதிமதுரம், மஞ்சள், முத்தக்காசு, அதிவிடயம், வசம்பு கடுக்காய், தேவதாரம் சம நிறையாய்ச் சேர்த்துப்

பொடுதலைச் சாறுவிட்டரைத்துக் குன்றிபோலுருண்டை செய்து முலைப்பாலிலாவது தேனிலாவது கொடுக்க அனைத்துத் தோடமுந் தீரும்; இச்சாபத்தியம்.

2. சின்னி, விளா, நொச்சி, சீந்தில், வேம்பு, வசம்பு, உள்ளி, இவைகளை அரைத்து உடல்மேல் தேய்த்து அவைகளைத் தட்டித் துணியில் முடிந்து கால்கையிற் கட்டி படுக்க அனைத்துத் தோடமும் தீரும்.

3. கீழ்க்காய்நெல்லி, முடக்கொத்தான், நாயுருவி, கஞ்சா, கோரை, விடத்தலை, நிலக்கடம்பு, சிறுபுள்ளடி, பேய்ச்சுரை இவைகளின் வேர்களைக் குளிசமாடித் தாய்க்கும் பிள்ளைக்குங் கட்டச்சகல தோடமுந் தீரும்.

அனைத்துத்தோடமும் தீர்க்கும் மூலமந்திரம்

வ–ந–சி–ம–ய வங்–சிங்–சிவய–ந–ம– என்ற இவ்வட்சரத்தைத் தியானித்து விபூதி, தண்ணீர், மருந்து, குளிச முதலான பரிகாரம் செய்ய அனைத்துத் தோடமும் தீரும்.

மாந்தநோய் காணும் பொதுக்காரணமும் மாந்த வகையும்

மேதிப்பால், நெய், கதலிப்பழம், தேங்காய், இளநீர், கடலை, வெல்லம், புளித்த மோர், மாமிசம், கனிகள், மலைத்துவரை, உளுந்து, மொச்சை, புளியங்கொட்டை, உளுவை, வாளை, கெண்டை மீன், பாகல், சுரை, முதலான வாயுப் பண்டங்களைக் குழந்தைகட்கு, பால்கொடுக்கும் மாதர்கள் மிகுதியாக அவைகளை உண்டால் அல்லது அவைகளைக் குழந்தைகள் தின்றாலும், வாதமாந்தம், பித்தமாந்தம், தலைமாந்தம், கணமாந்தம், வலிப்பு மாந்தம், சுழிமாந்தம், முக்குமாந்தம், சன்னிமாந்தம், ஊது மாந்தம், வீக்கமாந்தமென்று 20 வகை மாந்த நோய்கள் குழந்தைகட்கு நேரிடும்.

மாந்த நோயின் இயல்பு

சார்ந்திடவே பாலனுடல் வெதும்பி வேர்க்குஞ்
சற்றுமுலை யுண்ணாது வாந்தி பண்ணும்

கூர்ந்திடவே மதிமயங்குஞ் சீதம் வீழும்
குணங்கெட்டு மலவாயுங் கெட்ட பால்போல்
தேர்ந்திடவே தெளிந்துதண் ணீர்போல் கழியும்
தேகம்வெப்ப நாற்றமுங் கால்கை குளிர்ப்பாம்,
ஆர்ந்திடவே நாவுலருங் குரலுங் கம்மும்
அப்பனே கண்குளிர்ந்து சுழலு மாமே.

[அ. பொ.] வெதும்பி வேர்க்கும் = வெம்மையுள்ள போதே வியர்வை வரும்; சீதம் = மலம் சீழ்போல வருதல், வெப்பு நாற்றம் = ஓர் வகைக்கும்பி வாசனை, கை கால் குளிர்ப்பாம் = உடல்காயும் போது உள்ளங்காலும் உள்ளங்கையும் சில்லென்று காணும்.

ஆமே சுழன்ற கண்சிவக்கும் அடவாய்க் காலும் பின்னலுண்டாம்
தாமே முகமும் பளிங்காகுந் தங்கம் போல மேனிமின்னும்
போமே மாந்தத் தோடகுணம் பொருதும் பாலர் பிணிநோக்கி
நாமே சொன்னோ மிந்தமுறை நவின்றார் முனிவர் நவின்றாரே.

[அ. பொ.] பளிங்கு = படிகம்போல வெளிறும்; தங்கம்போல மேனி மின்னும் = இயல்பான நிறம் போய் உடல் மஞ்சளித்து மினுமினுப்புக் காணும்; பொருதும் = தாங்கும், நலிவு செய்யும்; பாலர் = குழந்தைகள்.

குழந்தையுடல் வெதும்பி வியர்க்கும்; முலையுண்ணாது; வாந்தி பண்ணி, மயக்கும்; சீதமும் மலமுமாயுங் கெட்ட பால் போலுந்தெளிந்த தண்ணீர் போலுங் கழியும்; உடல் வெப்பும். நாறும், கை கால் குளிரும்; நாவுலரும்; குரல் கம்மும்; கண்குழிந்து சுழன்று சிவக்கும்; கால் பின்னும்; முகம் பளிங்கு போல் மின்னும்.

வாதமாந்த நோயின் இயல்பு

பாலன் வயிறு பொருமியழும் பாங்கா முடலந் தான்வியர்க்கும்
கோல முடனே பலவிதமாய்க் குழியும் வலிக்குந் தான்றுடிக்குஞ்
சீல முடனே நாசிபுண்ணாஞ் சீறுங்கெட்டா வித்தானாகும்
ஆல விடமுண் டோன்றன்னாணை யறைந்த தோட மிதே.

[அ. பொ.] பொருமும் = காற்றுச் செறிந்து வயிறு ஊதும், துடிக்கும் = வலிதாங்காது அங்கமெல்லாம் பதறும்; நாசி = மூக்கு; சீறும் = சீறி வெறுப்புடன் அழும், ஆலவிடமுண்டோன் = சிவபெருமான்.

குழந்தை வயிறு பொருமியழும், உடல் வியர்க்கும்; பல விதமாய்க் குழிய வலிக்கும்; துடிக்கும், கொட்டாவி விடும், நாசி புண்ணாகும்.

பித்தமாந்த நோயின் இயல்பு

துடியாய் வாந்தி பேதிவரில் தூறு மூச்சை தான்காணும்
அடியக் குரலும் கம்மிவிடு மழகாய் மேனி சஞ்சலிக்கும்
படிய வியர்த்துத் தான்குளிரும் பகரும் பித்த மாந்தகுணம்
நெடிய மாந்தர் தானறிய நேரா யுரைத்தோஞ் செந்திருவே.

[அ. பொ.] துடியாய் = விரைவாய்; தூறும் = அடைக்கும்; மூர்ச்சை = வலியுடன் உணர்விழத்தல்; சஞ்சலிக்கும் = நிலை கொள்ளாது புரளும்.

வாந்திபேதி, வலிப்பு, மூச்சை காணும்; குரல்கம்மும்; மேனி மஞ்சளித்து வியர்த்துக் குளிரும்.

சிலேத்தும மாந்தநோயின் இயல்பு

உடம்பு சிலிர்த்துத் தான்குளிரும் உலர்ந்த நாவு தான்வெளுக்கும்,
யடர்ந்த நெஞ்சிற் கபங்கட்டு மலரும் வயிறு தான்பொங்கும்
சடமாங் குழந்தை தான்மயங்குஞ் சலமாய்க் கழியு மெந்நேரம்
திடமாஞ் சிலேத்தும் மாந்தகுணந் தெளிந்தார் முனிவர் தெளிந்தாரே.

[அ. பொ.] சிலிர்த்து = மயிர்க் கூச்செறிந்து, பொங்கும் = உப்பும், எந்நேரமும் = எந்த நேரத்திலும்.

உடம்புசிலிர்த்து நளிரும்; நாவெளுக்கும்; நெஞ்சிற் கபங் கட்டும்; வயிறு பொருமிக் கழியும்; குழந்தை மயங்கும்.

மாந்த நோய்க்குப் பொது மருத்துவம்

1. *நொச்சி, பொடுதலை, நுணா, வேலிப்பருத்தி இவைகளின் இலை வகைக்கு ஒருபிடி நறுக்கி வெதுப்பிச்சாறு பிழிந்து கொடுக்கத் தீரும்*
2. *வேலிப்பருத்தி, பெருந்தும்பை, சாணாக்கியிலை, வெதுப் படக்கி, வேளை, நொச்சி வகைக்கு ஒருபிடி இலையைவதக்கிச் சாறு பிழிந்து அதிற் சுட்டவசம்பு, சிறுதேக்கு, ஆமையோடு,*

சுட்டக்கரி சம நிறையாய் அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

3. பொடுதலை, கரியுப்பு வகைக்கு ஒருபிடி நன்றாயிடித்துப் பிழிந்து கொடுக்கத் தீரும்.

4. வெற்றிலைக்காம்பு, வசம்பு, உள்ளி, திப்பிலி சம நிறையாய் வெதுப்பி வெந்நீரில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

5. ஓமம், வெள்ளுள்ளி, மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளைத் துணியில் முடிந்து ஒருபடி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் வற்ற வைத்துக் கொடுக்க நீங்கும்.

6. விளா இலையை வதக்கிச் சாறு பிழிந்ததில் ஆமையோடு, வசம்பு, வட்டத்திருப்பி, திப்பிலி இவைகளை வெதுப்பி அரைத்துக் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

7. வேலிப்பருத்தி, மேனி, வேளைஇரண்டு, பொடுதலை, அகத்தி ஆகிய இவைகளின் இலைகளை வதக்கிச் சாறுபிழிந்து அதில் வசம்பு, ஆமையோடு, ஓமம், வெதுப்பியரைத்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் துவாலையிடத்தீரும். வேளைவேர், சுக்கு, வெந்தயம், பூண்டு, வசம்பு, ஓமம் ஆகிய இவைகளை ஒரு அளவாய் வறுத்துக் குடிநீர் செய்து கொடுக்க நோய்தீரும். (நுணா, நொச்சி, கழற்கொடி இவை களின் இலைகளை ஒவ்வொன்றையும் ஒரு பிடியைச் சட்டியி லிட்டுக் கருக வறுத்து எடுத்து ஒருபடி நீர்விட்டு அதில் ஓமம், வசம்பு, சுக்கு, மிளகு, பொடுதலைக்காய், திப்பிலி இவைகளை நல்லெண்ணெய் விட்டுச் சிவக்க வறுத்துத் துணியில் முடிந்துபோட்டு வற்றவைத்து ஒரு பாலாடை கொடுத்தால் நோய் தீரும்.

8. வேலிப்பருத்தியிலை, வேளைவேர், நொச்சி, பொடுதலை, நுணா, முருங்கை இவைகளின் ஈர்க்கைச் சமமாய் ஒருபிடி எடுத்துக் கருக வறுத்து ஒருபடி நீர் விட்டு ஓமம், வசம்பு, சுக்கு, மிளகு, பொடுதலைக்காய், திப்பிலி இவைகளை நல்லெண்ணெய் விட்டுச் சிவக்க வறுத்துத் துணியில் முடிந்து போட்டு வற்றவைத்து ஒரு பாலாடை கொடுத்தால் நோய் தீரும்.

9. வேலிப்பருத்தியிலை, வேளைவேர், நொச்சி, பொடுதலை, நுணா, முருங்கை இவைகளின் ஈர்க்கைச் சமமாக ஒருபிடி எடுத்து வறுத்துத் தண்ணீர் விட்டு ஓமம், திரிகடுகு, வசம்பு, வெதுப்பித் துணியில் முடிந்து போட்டு வற்றக் காய்ச்சிச் கொடுத்தால் நோய் தீரும்.

10. மாசிப்பத்திரி, பற்பாடகம், நாயுருவி, முக்காவேளை, கருஞ் சீரகம், கோழியெச்சம் இவையெல்லாம் சட்டியிலிட்டு மோர் நிறையவிட்டு பற்பித்து வெட்டிவேர், சங்கம்வேர், ஏலம், கடுகுரோகணி, பறங்கிப்பட்டை, கடுக்காய், மாசிக்காய், வசம்பு, முத்தக்காசு வகைக்கொரு வராகனெடை (3 ½ கிராம்) தட்டிப் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு வற்றக்காய்ச்சிக் கொடுக்க மாந்தம், சுழிமாந்தம், கழிச்சல் மாந்தம் தீரும்.

11. ஓமம், திப்பிலி, சுக்கு, நற்சீரகம், கருஞ்சீரகம், கொத்துமல்லி, ஆமைஓடு, குரோசாணிஓமம் வகைக்கு 1 வராகன் எடை, வெந்நீரில் மூன்று நாள் கொடுத்தால் தீரும்.

12. வாய்விளங்கம், ஆமையோடு, மிளகு, பொடுதலைக்காய், வசம்பு, திப்பிலி, கழற்சிப்பருப்பு ஆகியவற்றைச் சரிசமமாய்க் கூட்டி பொடுதலைச் சாற்றாலாட்டிச் சூரைக்காய் போல் உருண்டைசெய்து நிழலில் உலர்த்திக் கொண்டு வழுதலைக்கு குடிநீரில் கொடுக்க வாந்தி, பொருமல் நீங்கும். ஓமக்குடிநீரில் கொடுக்க வெகுவாய்ப் போகிற மாந்தக்கழிச்சல் தீரும்.

13. திரிகடுகு, உள்ளி, ஓமம், பெருங்காயம், கருஞ்சீரகம் வகைக்கு 4 வராகனெடை, வசம்பு 3 வராகனெடை, கடுக்காய் 19 வராகனெடை, சாரணைவேர் 5 வராகனெடை, பொடுதலைக் கொழுந்து, பெருந்தும்பைக் கொழுந்து, உத்தாமணியிலை வகைக்கு ஒருபிடி இவையெல்லாம் வெதுப்பிக்கொண்டு பெருந்தும்பைச் சாற்றால் அரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து உலர்த்திப் பிள்ளைகளின் வயதுக்குத் தக்கபடி கால், அரை, முக்கால், ஒரு குளிகையை வெந்நீரில் கொடுக்க மாந்தம், கட்டு மாந்தம், மாந்தக் கழிச்சல் வலிப்புத் தீரும்.

14. சண்பகப்பூ, விலாமிச்சவேர், கோட்டம், ஏலம், கோரோசனை, சாத்திரபேதி, அதிமதுரம், வெட்டிவேர் வகைக்கு 1 கழஞ்சு வெட்டிவேர்த்தண்டு சாற்றில் 6 நாழிகை ஆட்டிக் குன்றிமணிபோல் உருண்டை செய்து உலர்த்தித் தாய்ப்பாலில் அல்லது வெந்நீரிலாவது கலந்து கொடுத்தால் மாந்தங்கள் தீரும்.

15. தூய்மை செய்த பூரம் ½ பலம் (17 ½ கிராம்), இலவங்கம், ஏலம், வசம்பு, சீரகம், அதிமதுரம், விஷ்ணுகரந்தைச்சாற்றால் ஒரு சாமம் அரைத்துக் கொத்துமல்லிபோல் உருண்டை செய்து உலர்த்தி மேற்கூறிய குடிநீர்களில் எதிலாவது ஒரு உருண்டை அரைத்துக் கொடுக்க அனைத்து மாந்தங்களும் தீரும். இவைகளுக்கெல்லாம் இச்சாபத்தியம்.

ஊதுமாந்த நோயின் இயல்பு

குழந்தை உடல் ஊதிக்காணும்; வயிறு இரையும்; கழிச்சல், கடுப்பு, வாந்தி, தொண்டைவலி சுரந்தோன்றும்.

மருந்துவம்:-

1. வெண்காரம் அரை வராகனெடை, கடுகுரோகணி, கருஞ்சீரகம் வகைக்கு அரை வராகனெடை, தாய்ப் பாலில் அரைத்து மாத்திரை செய்து கொண்டு வெந்நீரில் கரைத்துக் கொடுக்க நீங்கும்.

2. பொடுதலை, வேம்பு, மா, புளி, நுணா, நொச்சி, வேலிப் பருத்தி இவைகளின் ஈர்க்கையும் ஓமம், உள்ளி, திப்பிலி இவைகளையும் சமமாக இது ஒரு படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் குடிநீர் செய்து பாலாடை அளவு கொடுக்க ஊதுமாந்தம், கக்கல் மாந்தம், செரியாமாந்தம், கட்டுமாந்தம் ஆகியவை தீரும். இச்சாபத்தியம்.

3. கோரோசனை, உள்ளி (வெள்ளைப்பூண்டு), திப்பிலி, அதி மதுரம் வகைக்கு ஒரு கழஞ்சு; சிற்றண்டத்தின் (கோழி முட்டையின்) வெண்கருவால் அரைத்துத் தாய்ப்பாலில் மூன்று நாள் கொடுக்க ஏழுவகை ஊதுமாந்தமும் தீரும்.

4. வேலிப்பருத்தி இலையை வதக்கிச் சாறுபிழிந்து அதில் சீரகமும், கடுகுரோகணியும் சமமாய்த் தாய்ப்பாலில் அரைத்துக் கலக்கிப் பாலாடை அளவு கொடுக்க ஊது மாந்தமும், மயக்கமும் தீரும்.

நீர்மாந்த நோயின் இயல்பு

பாரப்பா உடல்மெலிந்த குளிர்ந்து வாய்நீர்
பக்குவமாய் சுழற்றிசிசு வாந்தி பண்ணும்
நேரப்பா சிலிர்த்துவரு முலையுண் ணாது
நேர்பாகத் தூங்கிவிழித் துச்சி ரிக்கும்
பாரப்பா உடம்புகைகால் தினவெ டுக்கும்
சார்பாக வயிறுகழியும் வாந்தி பண்ணும்
நீரப்பா முகமினுக்குந் தலைவ லிக்கும்
நீர்க்கடுத்து மலஞ்சிறுத்து இறங்கும் பாரே.

[அ. பொ.] சிசு = குழந்தை; சிலிர்த்து = மயிர்க்கூச் செறிந்து; நீர்கடுத்து = நீர் இறங்கும்போது வலியுண்டாகி; சிறுத்து = குறைந்து.

உடல்மெலிந்து குளிர்ந்து சிலிர்க்கும்; வாய்நீர் சுழற்றிக் குழந்தை வாந்தி எடுக்கும்; தாய்ப்பால் குடிக்காது; தூங்கி விழித்துச் சிரிக்கும்; வயிறு பொருமிக் கழியும்; உடம்பு கைகாலில் தினவெடுக்கும்; வீங்கும், தலைவலிக்கும்; முகமினுக்கும்; மலஞ் சிறுத்து நீர் கருத்திறங்கும்.

மருத்துவம்:-

1. ஈருள்ளி, மூக்குரட்டை வகைக்குச் சாறு அரைப் படி - விளக்கெண்ணெய் கால் படி - ஒன்றாய்க் கரைத்துக் காய்ச்சிக் கொடுத்தால் நோய் தீரும்.

2. நொச்சி, வேளை, மேனி, நுணா பெருந்தும்மை இவைகளின் இலையை வெதுப்பிச் சாறு பிழிந்ததில் மிளகு, உள்ளி (வெள்ளிப் பூண்டு) வசம்பு, ஓமம் இவைகளை வறுத்து அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

3. நீலிவேரும், செவ்வியமும் சம நிறையாய்க் கட்டிப் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

4. வெதுப்படக்கி, அம்மான்பச்சரிசி, சங்கங்குப்பி, நுணா, சாணாக்கி வகைக்குச் சாறு கால் படி, விளக்கெண்ணெய் ஒரு படி, வசம்பு, உள்ளி, மஞ்சள் வகைக்கு அரைப்பலம் பொடித்து ஒன்றாய்க் கலந்து காய்ச்சி மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

5. சிற்றாமணக்கெண்ணெய் 10 பலம், அதிற் பூரம் 1 வராகன் எடை, வாளம், மிளகு, இலவங்கம், வகைக்கு 2 வராகன் எடை இவைகளை மைபோல அரைத்துப் போட்டுக் காய்ச்சி ஒரு வராகன் எடை மூன்று நாள் கொடுத்துப் பத்தியம் பெரியமிளகுநீருஞ் சாதமுங் கொடுக்கத் தீரும்.

விட மாந்த நோயின் இயல்பு

மலமுஞ் சிக்கி வயிறு வாகாய் இரைத்துத் தான்கழியும்
பலமாய் நின்று சுரங்காயும் பாங்கா யரையின் கீழ்க்குளிரும்
சலமா யுடலந் தான்வியர்க்குந் தங்காப் பிள்ளை வாந்திபண்ணும்
நலமா மேனி வாடிவரும் நவின்றார் விடமாந்தமிதே.

[அ. பொ.] இரைந்து = (அபான வாயு) மிக்க ஒலியுடன்; பலமாய் நின்று சுரங்காயும் = பலமான காய்ச்சல் நின்று நின்று மீண்டும் மீண்டும் காயும்; (இதுவே விஷமம் விடமம் எனப்படும்)

தங்கா = அமைதியாய் இராது; விடமம் = மாறி மாறி இருத்தல்; (சமம் = ஒரே நிறையால் இருத்தல்; விஷமம் = மாறி மாறி இருத்தல்)

மலம்சிக்கி வயிறு வலித்திரைந்து கழியும்; நின்று நின்று சுரங்காயும்; மேனி வாடும்; அரையின் கீழ் குளிர்ந்திருக்கும்; உடல் வியர்க்கும்; கையிற் பிள்ளை தங்காது; அடிக்கடி வாந்தி (கக்கல்) பண்ணும்.

மருத்துவம்:- நுணா, நொச்சி, வேளை இவைகளின் வேர், ஓமம் பொடுதலை, உள்ளி, வசம்பு, இவைகளைச் சமமாய்க் கூட்டி வெதுப்பிக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்கத் தீரும்.

போர்மாந்த நோயின் இயல்பு

பாலன் பாலுமுண்ணாது பண்பாய் மயங்கும் வாந்தி பண்ணும்
சீல நரம்பு தான்புடைக்குஞ் சிரசை யசைக்கு மார்துடிக்கும்
கோல மேனி வாடிவிழும் குறிப்பாய்த் தாக மிகவெடுக்கும்
மேலாய் நெஞ்சுதரு மேவும் விழியுங் குழைந்திடுமே.

[அ. பொ.] *பாலன் = குழந்தை; புடைக்கும் = வீங்கும்; தாகம் = நீர்வேட்கை; குழைந்திடும் = சுழலும்.*

குழந்தை பாலுண்ணாது; கக்கல் பண்ணும்; மயங்கும் தலையை அசைக்கும்; மார்புதுடிக்கும்; மேனிவாடும்; நெற்றி நரம்பு புடைக்கும்; கண் குழியும்; தாகமிகும்; வாயும் நெஞ்சும் உலரும்.

மருத்துவம்:

1. *ஓமத்தை வறுத்துப் பொடித்து வெந்நீரிலாவது தாய்ப் பாலிலாவது கொடுக்கத் தீரும்.*
2. *கோழியின் கல்லீரலில் இருக்கும் கல், நற்சீரகம், இலவங்கம் இவைகளைச் சமநிறையாய் அரைத்துத் தாய்ப்பாலில் கொடுக்கத் தீரும்.*
3. *உப்பைச் சட்டியில் வறுத்துக் கொட்டிப்போட்டு, அதில் வேலிப்பருத்தி, தும்பை, வெற்றிலை இவைகளைச் சமமாய் வெதுப்பிச் சாறுபிழிந்து அதில் ஆமையோடும், சுட்ட வசம்பும், உரைத்துக் கொடுக்கத் தீரும்.*
4. *சக்திச்சாரணைவேர், ஆமையோடு, பூண்டு, சுட்ட வசம்பு வகைக்கு 1 வராகனெடை அரைத்து அரைக்காற் படி விளக்கெண்ணெயில் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.*
5. *நுணா, வேலிப்பருத்தி, பொடுதலை, வெற்றிலை, [illegible] ஓடு, சுட்ட வசம்பு, பூண்டு, ஓமம், கிராம்பு ஆகியவை வகைக்கு 1 வராகன் எடை எடுத்து வெதுப்பிக் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.*
6. *மயிலிறகு சுட்டசாம்பல், கிராம்பு, சீரகம், நிம்பவிதை (வேம்பின் வித்து), பேய்பீர்க்கம் வேர் இவைகளைச் சமமாய்த் தாய்ப்பால் விட்டரைத்து தாய்ப்பாலில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.*

பால்மாந்த நோயின் இயல்பு

அறைகிறேன் பால்மாந்தம் வயிறும் ஊதும்
அப்பனே புண்போல நொந்து நாற்றம்
நிறைப்புளிப்பாம் வயிறுபோகும் செவியுந் தாழும்
நேர்விழியுங் குளிர்ந்துவிடும் தொண்டைக் கோழை
திறைக்கரமுங் கால்வெதுப்புங் குளிருங் காணுந்
திகைத்துமே குழந்தையது பரித விக்கும்,
முறைமையால் பால்மாந்த்த் தோடந் தன்னை
மொழிந்திட்டார் கமலமுனி மொழிந்திட் டாரே. 147

[அ. பொ.] நாற்றம் நிறைப்புளிப்பாம் = நிறைப் புளிப்பு நாற்றமாம் என்று மாற்றிப் பொருள் கொள்க. மிகுந்த புளிப்பு கணம் (மலத்தில்) காணும்; வயிறுபோகும் = பேதியாகும்; செவி = காது; தாழும் = தளர்ந்து தொஞ்சும்; பரதவிக்கும் = நோய் தாளாமல் துடிக்கும்.

வயிறூதிப் புண்போல் நொந்து புளித்த நாற்றமாய் வயிறு கழியும்; கண்குழியும்; செவிதாழும்; தொண்டையில் கோழை கட்டும்; கை கால் வெதும்பும்; குளிரும்; குழந்தை வாந்தி பண்ணும்; பரிதவிக்கும் நோய் தாளாமல் துடிக்கும்.

ஓதும் பொடுதலைக் காய்வசம்பு ஓங்கும் பூண்டு தன்னுடனே
மேது மிந்துப் போர்சமமாய் மேத வெதுப்பி யோர்நிறையாய்க்
கோதில் குடிநீர் செய்தேதான் கொடுக்கப் பிணிகள் தான்தீரும்
நீது வயித்திய சாரமீது நிறையாம் உரைத்தேன் மடமயிலே. 148

[அ. பொ.] மேத வெதுப்பி = மேன்மையுற வெம்மை அடையச் செய்து.

மருத்துவம்:

பொடுதலைக்காய், இந்துப்பு, பூண்டு, மிளகு, இவைகளைச் சம நிறையாய் வெதுப்பிக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

செரியாமாந்த நோயின் இயல்பு

சுரங்காயும்; தலைவலிக்கும்; வயிறு நொந்து குழந்தைசீறி அழும்; மாவு கரைத்ததுபோல் கழியும்; அரைக்கண்ணித் திரையாய்த் தூங்கல்; கீரைத் தண்டு போற்சோரும்.

மருத்துவம்:

1. *வசம்பு, சடாமஞ்சில், உள்ளி, திரிகடுகு, ஓமம், கருஞ்சீரகம், ஆமையோடு இவைகளைப் பொடித்துக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.*
2. *வேலிப்பருத்தி இலையை வதக்கிப் பிழிந்த சாற்றில் நெய் ஒரு துளிவிட்டுக் கொடுக்கத் தீரும்.*
3. *இஞ்சியும் பெருந்தும்பையும் தட்டி எருமை வெண்ணையில் வேகவைத்துக் கொடுக்கத் தீரும்.*
4. *ஓமம், கோட்டம், வசம்பு, வகைக்கு 1 வராகன் எடை குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.*

கட்டுமாந்த நோயின் இயல்பு

மத்தித்திரைத்து வலித்துக் குழந்தை அடிக்கடி அழும்; மலஞ்சிக்கி வயிறு கழியும்; சற்றே பாலுண்ணும்; திகைத்திருக்கும்; தூக்கம்போல் சோர்ந்து விழும்; சிற்றிருமல், சுரம், கொட்டாவி, தலைவலி, வியர்வையுண்டாகும்.

மருத்துவம்:

1. *சீந்தில்தண்டு, களிப்பாக்கு, சிவதைவேர், கடுக்காய், கடுகு ரோகணி இவையெல்லாம் சம நிறையாய்த் தட்டிப் போட்டுக் குடிநீர் செய்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.*
2. *சிற்றாமணக்கெண்ணெய் கால் படி, சிற்றகத்தி, துளசி, தகரை, கழற்கொடி, நொச்சி, செம்முள்ளி, மணித்தக்காளி இவைகளை இடித்துப் பிழிந்த சாறு கால்படி, சதுரக்கள்ளிப் பால் ஒரு கரண்டி, கடுகுரோகிணி, கடுக்காய், இருசீரகம்,*

உள்ளி, (வெள்ளைப்பூண்டு) வசம்பு, பூதகரப்பன்பட்டை, தைவேளை வகைக்கு 3 வராகன் எடை இடித்து ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையில் ஒரு காசெடை கொடுத்து மாலையில் மிளகுசாம்பலுடன் சுக்குக் குடிநீர் செய்து ஒரு சங்களவு கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

3. சதுரக்கள்ளிப்பால், வெள்ளாட்டுப் பால் வகைக்குக் கால் படி, விளக்கெண்ணெய் 1 படி, திரிபலை, வெள்ளுள்ளி வகைக்கு இரண்டு வராகன் எடை பொடித்துப் போட்டுக் காய்ச்சி ஒரு காசெடை கொடுத்து விலாவிலும் பூசத் தீரும். இச்சாபத்தியம்.

தலைமாந்த நோயின் இயல்பு

உடல் ஊதிபுண் போல் நோகும்; வயிறுபொருமி வலித்துக் குழந்தை துள்ளிவிழும்; ஏப்பம், கொட்டாவி விடும்; கை கால் குளிரும்; முகம் வியர்க்கும்; தலைகனத்து வலிக்கும்; நாசியில் நீர் வடியும்; குளிர்சுரம் காணும்.

மருத்துவம்:- வெதுப்படக்கி, பெருந்தும்பை, வேலிப்பருத்தி, வெள்ளறுகு இவைகளின் இலையை வதக்கிச் சாறு பிழிந்து அதில் பூண்டு, தேவதாரம், சதகுப்பை, திப்பிலி, சுட்ட வசம்பு இவைகளைச் சம நிறையாய் வறுத்து அரைத்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும்; பத்தியமில்லை.

துலைமாந்த நோயின் இயல்பு

அதிகமாய்க் குழந்தை வாந்தி பண்ணும்; அடிக்கடி முறுக்கிக் கொட்டாவிடும்; உடம்பு வியர்க்கும்; முகங்கடுப்பாயிருக்கும்; வலிப்பு கொண்டு கால்கை விறைக்கும்.

மருத்துவம்:

1. வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டையைப் பாக்களவு அரைத்துத் தாய்ப்பாலில் கலந்து கொடுக்கத் தீரும்.
2. வசம்பு, தைவேளை, முடக்கொத்தான், திரிகடுகு, திரிபலை, அழிஞ்சில் வேர் இவையெல்லாம் சம நிறையாய்த் தட்டி

விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு துட்டெடை உள்ளுக்குக் கொடுத்து உடல் மேலும் பூசத் தீரும். இச்சா பத்தியம்.

சுழிமாந்த நோயின் இயல்பு

சுரங்காயும்; இரைப்பு, சுவாசம், விக்கல், கக்கல் காணும்; குழந்தை முலையுண்ணாது; நித்திரை செய்யாது.

மருத்துவம்:-

கோடகசாலை, துழாய் (துளசி), ஆடாதோடை, தும்பை, முதியார்கூந்தல், சங்கிலை, சீந்தில், சிற்றிலைச்செடி, நறுந்தாளி இவைகளின் இலைச் சாறும், விளக்கெண்ணெயும் சமன்கலந்து அதில் சாதிக்காய், திப்பிலி, காயம், கடுகுரோகணி, கோரோசனை, உள்ளி வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துப் போட்டுக் காய்ச்சி ஒரு காசெடை கொடுக்கத் தீரும்.

சுழிமாந்த நோயின் இயல்பு (வேறு)

சுரங்காயும்; காதுங் கண்ணும் வீங்கிவற்றும்; நாக்குப் புண்ணாகும்; கை கால் நோவும்; அன்னஞ் செல்லாது.

மருத்துவம்:-

பூவரசம் பழுப்பு, சங்கன்பட்டை, சீந்திற்கொடி, துழாய் (துளசி), சுக்கு, ஓமம், குப்பைமேனி, முள்ளி, முருங்கை ஈர்க்கு, நீர்முள்ளிசமூலம், வேளைவேர், பிரமியிலை, மருட்கிழங்கு தூதுவளை, சிறுகுறிஞ்சா, சத்திச்சாரணைவேர், கருஞ்சீரகம் இவை எல்லாம் சம நிறையாய்த் தட்டிப் போட்டுக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்கத் தீரும்.

முக்குமாந்த நோயின் இயல்பு

குழந்தை முக்கிமுக்கிச் சீதமும் மலமுமாய்க் கழியும்; உடல் உருகி மெலியும்; சுரங்காயும்; தாகங்காணும்; பின் கால் வீங்கும்.

மருத்துவம்:

1. ஓமம், திப்பிலி, மிளகு, ஆமையோடு, இவைகளை ஓர் எடையாய்ச் சீலையில் முடிந்து ஒரு படி நீரிற்போட்டு

வற்றக்காய்ச்சி அதிலந்த மருந்தையரைத்து கலக்கிச் சங்களவு மூன்று வேளை கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

2. இந்த நோய்க்குக் கஸ்தூரி எண்ணெய் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வறள்மாந்த நோயின் இயல்பு

உடல் திரைந்து வெளுத்து வற்றிக் குழந்தை உருக் கெடும்; கடுப்பு, வலிப்பு முதலான பல குணங்கள் காணும்.

மருத்துவம்:

ஆடுதீண்டாப்பாளை, சாறுவேளை, மணத்தக்காளி, கழற்சி, கரிசாலை, துளசி, நீலி இவைகளின் இலைகளை ஓர் எடையாய் ஒன்றாய்ச் சேர்த்திடித்துப் பிழிந்த சாறு, ஆவின் நெய் இவை வகைக்கு 1/8 படி ஒன்றாய்க்கூட்டி அதில் கஸ்தூரிமஞ்சள், கோட்டம், கருஞ்சீரகம், கடுகுரோகணி வகைக்கு ½ வராகன் எடை பொடித்துப் போட்டுக் கலந்து பதமாய்க் காய்ச்சி காலை, மாலை துட்டெடை கொடுத்தால் பிணிநீங்கிப் பிள்ளையுடல் பருக்கும்.

உளைமாந்த நோயின் இயல்பு

மலஞ்சிறு நீர் கட்டி வயிறுவலித்துக் குழந்தை அலறியழும்; பாலுண்ணாது; மிரண்டு பார்க்கும்.

மருத்துவம்:

1. நாக்குப்பூச்சி (மண்புழு), வசம்பு, நிம்பவேர், உள்ளி, காயம் வகைக்கு 1 கழஞ்சு அரைத்து ஒரு படி சிற்றாமணக்கு எண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு காசெடை கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

2. நாக்குப்பூச்சி, ஈசுரமூலி, வசம்பு, இருசீரகம், நாரத்தம் வேர், பூண்டு, காயம், வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்), மணத்தக்காளிச் சாறு விட்டாட்டி ஒருபடி விளக்கெண்ணெயில் கலக்கிக் காய்ச்சி ஒரு சிறு கரண்டியளவு மூன்று நாள் கொடுக்கத் திரும், உப்பு, புளி தள்ளவும்.

3. சங்கு, கொடிவேலி, ஆடாதோடை, கொன்றை இவைகளின் வேர், இந்துப்பு, காயம், பறங்கிப்பட்டை ஓர் எடையாய் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு உழக்காய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

4. புல்ஊரி (புல்லுருவி), கருப்புக்கட்டி (பனைவெல்லம்) ஓர் எடையாயரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்க உளைமாந்தை, உட்சுரம், எலும்புருக்கி தீரும்.

அச்சரமாந்த நோயின் இயல்பு

எலும்பில் கனலேறி குளிர்ச்சுரம்; கழிச்சல் காணும்; உதடும் வாயும் வெடித்துப் புண்ணாகும்; குழந்தையுடல் மெலியும்.

மருத்துவம்:

1. மணத்தக்காளி, அகத்தி, கற்றாழை, ஈருள்ளி இவைகளின் சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி காரை, பூலா, துத்தி இவைகளின் வேர்த்தோல், வறுத்தவெந்தயம், வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து வாய்ப்புண்ணிலும், பூசத்தீரும்; இச்சாபத்தியம்.

2. துத்தியிலை, வெந்தயம், ஆடாதோடை, நுணாசர்க்கு குடிநீர் செய்து உட்கொள்ளவும்.

3. நுணாஇலை, வில்வஇலை, தைவேளை, பொடுதலை, செம்முள்ளி ஆடாதோடை வகைக்குச் சாறு 1 படி, அவுரிச்சாறு 1/8 படி, அரத்தை, கடுகுரோகணி, வகைக்கு 1 வராகன் எடை, கடுக்காய் 5 வராகன் எடை, அக்கிராகாரம் வெளிச்சிப்பிசின், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், வகைக்கு 2 வராகன் எடை; பேய்க்குமட்டிச் சாறு அரைக்கால் படி இவைகளை ஒன்றாய்க் கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி ஒரு சிறுகரண்டி வீதம் மூன்று நாள் உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய்க் கொடுக்கத் தீரும்.

தோடமாந்த நோய்க்கு மருந்து

1. முருங்கைப்பட்டை, கோழிமுட்டைவெள்ளைக்கரு, வெள்ளுள்ளி, வேப்பெண்ணெய் ஓர் எடை, ஒன்றாய்க்

கலந்து, காய்ச்சி உடம்பிலும் நாவிலும் தடவத் தீரும்; இச்சாபத்தியம்.

2. ஈருள்ளியும் முடக்கொத்தானும், வெதுப்பிப் பிழிந்த சாறு மூன்று காசெடை கொடுக்கத் தீரும்.

மாந்ததோடம், வலிப்பு, மலட்டுக்கு மருந்து

முடக்கொத்தானிலை, மூக்கரைச்சாரணைவேர், மேற்படி இலைக்கொழுந்து, குப்பைமேனியிலை இவைகளைச் சமமாயரைத்து விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி பிள்ளையின் வயதுக்குத் தகுந்தபடி கொடுக்கத் தீரும்.

மாந்தம், பாலர் இசிவுக்கு மருந்து

வேலிப்பருத்தி, ஒருபிடி, சுக்கு, சடாமாஞ்சில், விளாக் கொழுந்து, மிளகு, ஆமையோடு, ஓமம், சீரகம் சம நிறையாக ஒரு படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாக்கி ஒரு சங்களவு கொடுக்க மாந்தமும், சிறுவர்களுக்குக் காணும் இசிவும் தீரும்.

மாந்தம், வயிற்றுப் பொருமலுக்கு மருந்து

1. வேலிப்பருத்தி இலையை வதக்கிச் சாறுபிழிந்ததில் ஓமம், வசம்பு, சம நிறையாய் வெதுப்பிப் பொடித்துப் போட்டு ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

2. வறுத்த ஓமம் 1 வராகன் எடை (3 ½ கிராம்), குப்பைமேனி வேர்ப்பட்டை 2 பலம் (70 கிராம்), அரைப்படி தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றக்காய்ச்சி ஒரு சங்கு கொடுக்கத்தீரும்.

மாந்தம், பொருமல், வாந்தி, செரியாமாந்தத்திற்கு மருந்து

1. வேலிப்பருத்தியிலைச் சாறு 1/8 படி, வசம்பு, திரிகடுகு, கோரோசனை, வகைக்கு 2 வராகன் எடை, வேலிப்பருத்திக் கொழுந்து 4 வராகன் எடை இவைகளையரைத்துச் சாற்றில் கலக்கி முறித்துக் கொடுக்கத் தீரும்.

2. பெருந்தும்பை, வெதுப்படக்கி, பொடுதலை, வேலிப்பருத்தி, துளசி, துத்தி, அகத்தி, இவைகளின் இலைகளைச் சம

எடையாக இடித்துப் பிழிந்தசாறு ¼ படி, பச்சை மஞ்சள் சாறு 1/16 படி (மாகாணி), விளக்கெண்ணெய் ½ படி ஒன்றாய் விட்டு அதில் ஓமம், ஆமையோடு சுட்டசாம்பல் (பற்பம்), உள்ளி, வசம்பு, வகைக்கு ¼ வராகன் எடை போட்டுப் பதமாய்க் காய்ச்சி மேற்படி எண்ணெய் ஒரு துட்டெடையில், பொரித்த வெங்காரம், பெருங்காயம் வகைக்கொரு பணவெடை மத்தித்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

மாந்தங்களுக்குப் பொது மருந்து

1. சிறுதேக்கு, வாய் விளங்கம், வால்மிளகு, கடுகுரோகணி, சுக்கு, ஏலம், திப்பிலி, இலவங்கம், தான்றிக்காய்த் தோல், தக்கோலம், போஸ்தக்காய்த் தோல், வகைக்கு ¼ பலம் இடித்து இரண்டு படி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி மூன்று தினங்கொடுக்க கிராணி மாந்தம், சுரக்கட்டி, நஞ்சு, தோடங்கள், இசிவுமாந்தம், சோகை, காமாலை, சுரம், கோழை, கொட்டாவி, பொருமல், தும்மல், பித்தகணம், பாண்டு தீரும்; இச்சாபத்தியம்.

2. அவித்தூற்றின விளக்கெண்ணெய், தகரைச்சாறு வகைக்கு 1 படி, நாயுருவி, தைவேளை, நாய்வேளை, கொழிஞ்சி (கொள்ளுக்காய் வேளை), மூக்கரைச்சாரணை இவை களின் வேர் அரைத்த விழுது வகைக்கொரு எலுமிச்சங்காய் அளவு; வசம்பு, ஓமம், கஸ்தூரி மஞ்சள், வாய்விளங்கம், கடுகுரோகணி வகைக்கு 1 பலம் இவையெல்லாம் அரைத்துக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக்கொண்டு பிள்ளையின் வயதுக்குத் தகக் கொடுக்கக் கட்டுமாந்தம், கிருமி, கழிகணம், வாயு, காய்ச்சல், நளிர்மாந்தம், பிரளி தீரும், உப்பு, புளி, தள்ளிப் பத்தியமாயிருக்கவும்.

3. கோரோசனை, கோட்டம், அதிமதுரம், சீரகம், திப்பிலி, தேவதாரம், சந்தனம், ஏலம், மாசிக்காய், வெந்தயம், சுக்கு, வெள்ளுள்ளி, கஸ்தூரி, வசம்பு, கடுகு ரோகணி, பச்சை மூங்கிற்றோல் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), வெதுப்பிப் பொடித்துச் சங்கங்குப்பிச் சாற்றில் அரைத்து

ஒரு படி விளக்கெண்ணெயில் கலக்கி, மெழுகுபதமாய்க் காய்ச்சிக்கொடுக்க மாந்தம், வயிற்றுப்பிசம், சுழிமாந்தம், நாவறட்சி, கணம், குளிர்காய்ச்சல் முதலானவைகள் நீங்கும்; இச்சாபத்தியம்.

4. நன்னாரி, பழம்பாசி, சிறுபுள்ளடி, சிற்றாமுட்டி, சிற்றாமணக்கு, துத்தி, வட்டக்கிலுகிலுப்பை, கண்டங்கத்திரி, கண்ணுப்பீளை இவைகளின் வேரும், கோவைத்தண்டும் தனித்தனி அரைத்து வகைக்கு ஒரு பெருவிளாங்காய் அளவு; விளக்கெண்ணெய் 3 படி; கழுவி எடுத்த கற்றாழஞ் சோறு இரண்டு தேங்காய் அளவு, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், மதுரம், வெந்தயம் வகைக்கு 5 கழஞ்சு (6 ¼ வராகன் எடை), கோரோசனை, வெள்ளுள்ளி வகைக்கு 2 கழஞ்சு (8 ¾ கிராம்), இவைகளையிடித்துப் போட்டொன்றாய்க் கலந்து காய்ச்சிக் கற்றாழஞ்சோறு மொறுமொறு என்கிற பதத்தில் இறக்கி வடிகட்டி அளவுப்படிக் கொடுக்க கண மாந்தம், கணக்கழிச்சல், ஊதுகணம், காமாலை, சோகை நீங்கும்; இச்சாபத்தியம்.

5. பொடுதலை, மா, புளி, வேம்பு, நுணா, வேலிப்பருத்தி, நொச்சி இவைகளின் ஈர்க்கு வகைக்கு 1 பலம், வெள்ளுள்ளி, திப்பிலி, ஓமம் வகைக்கு 1 கழஞ்சு (4.37 கிராம்) இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டுக் கியாழஞ் செய்து 3 நாள் கொடுக்க ஊது மாந்தம், செரியாமாந்தம், கட்டுமாந்தம், கக்கல்மாந்தம், தீரும்; இச்சாபத்தியம்.

6. இஞ்சி, சங்கு, சின்னி, பொன்னாங்காணி, கரந்தை வகைக்குச் சாறு ¼ படி; சிற்றாமணக்கெண்ணெய் ¼ படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி அதில் கடுகுரோகணி ¼ வராகன் எடை (1 கிராம்), வறுத்துப் பொடித்துப் போட்டு ஒரு கரண்டி வீதம் கொடுக்க மாந்தம், உட் காய்ச்சல், கணக்காய்ச்சல், வாய்ப்புண், மூலச்சூடு, பலவகைக் கழிச்சல் தீரும்; இச்சாபத்தியம்.

7. கஞ்சாங்கோரை, பிரமதுளசி, பழம்பாசி, குட்டிவிளா, வல்லாரை, சீந்தில்தண்டு, வசம்பு, கடுகுரோகணி, வெள்ளுள்ளி வகைக்கு 1 வராகன் எடை இவையெல்லாம்

தட்டி அரைக்கால் படி விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க்காய்ச்சிக் கொடுக்க அனைத்து மாந்தங்களும் தீரும்; இச்சாபத்தியம்.

8. மணித்தக்காளி, ஓரிலைத்தாமரை, அவுரி, புங்கு இவைகளின் இலைச்சாறு, சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து, அதில் சங்கு, சிற்றாமணக்கு, நாவல், நன்னாரி, கருந்துளசி, சின்னி, பற்பாடகம், மேனி, கவுதும்பை இவைகளின் வேர் வகைக்கொருபிடி (ஒரு பிடி = 1 பலம்) கடுக்காய்ப்பூ, அதிமதுரம், சடாமாஞ்சில், செண்பகப்பூ, இலவங்கம், செவ்வியம், கடுக்காய், வால்மிளகு, கண்டுபரங்கி, இலிங்கம், மனோசிலை, வாளம், பூரம், கெந்தி வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்) இவையெல்லாம் இடித்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடிக்கும்போது அதில் புனுகும் கஸ்தூரியும் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டு வைத்துக் கொண்டு இரு கழஞ்சு (8 ¾ கிராம்) வீதம் குழந்தைக்கு ஏழு நாள் கொடுக்கவும்.

குறிப்பு:

தாய், உப்பு, புளி தள்ளிப் பத்தியமாயிருந்தபின்பு ஏழுநாள் தள்ளி பிள்ளைக்கும் தாய்க்கும் ஓமந்தேய்த்துத் தலைக்கு நீர்வார்க்க அனைத்து மாந்தங்களும் நீங்கும். அதிகக் கழிச்சல் கண்டு மூர்ச்சையானால் சுக்கைத் தட்டிப்போட்டுக் கியாழஞ் செய்து கொடுக்க நிற்கும்.

9. மணத்தக்காளி, துளசி, துத்தி, பிரமி, வில்வம், வல்லாரை, கையாந்தகரை, பொடுதலை, நுணா, புங்கு சங்கு இவைகளின் இலைச்சாறு விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கடுக்காய், தான்றிக்காய், சுக்கு, திப்பிலி, ஆமையோடு, அரத்தை, ஓமம், வசம்பு, கஸ்தூரிமஞ்சள், வகைக்கு ½ பலம், சாதிக்காய் 1 வராகன் எடை இவைகளைப் பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து வயதுக்குத்தக்கபடி கொடுக்க மாந்தம், அச்சரம், கணம், மேகம், வெட்டை தீரும்.

கணவகுப்பு

பாரப்பா கணவகுப்பு பதினெட் டாகும்
பாடினார் வாதகணம் பித்த கணமும்,
நேரப்பா சேத்மகணம் நீர்க்கண மாகும்
நேர்வான பிரளிகணம் சூலைக் கணந்தான்.
சாரப்பா ஊதுகணம் சுழிக ணந்தான்
சார்வான மகாகணம் வறட்சி கணந்தான்
கூரப்பா கொதிப்புகணம் பிறக ணந்தான்
குறிப்பான ஆமகணம் வீக்ககணந் தானே. 149

[அ. பொ.] *கொதிப்புக்கணம் = சுரத்துடன்கூடிய கணம்; ஆமம் = செரியாமல் உண்டது உண்டபடி நிற்றல்.*

தானான தேரைகணம் முக்குக ணந்தான்
தனியான மூலகணம் போர்க்க ணந்தான்
ஊனான ரத்தகணம் விடமாந் தகணமும்
ஊதுமாந்தக் கணமாம் மாந்தகணந் தானும்,
கோனான மந்தார கணமுந் தானும்
கூரான எரிகணமா மிருபத்து மூன்றும்,
பானான கணங்கள்பன் னிரண்டு மட்டும்
பாலகர்க்கு நேருமென்று பகர்ந்த தாமே. 150

[அ. பொ.] *மந்தார கணம் = கார்க்காலத்தில் மட்டும் தோன்றி பிறகாலங்களில் இயல்பாக இருப்பது போலக் காணும் ஒருவகைக் கணம். (மந்தாரம் = சஞ்சரிக்கும் மேகக் கூட்டம்.)*

மாந்தம் முதிர்ந்து வாதகணம், பித்தகணம், சிலேத்தும கணம், மாந்தகணம், நீர்க்கணம், பிரளிக்கணம், சூலைக்கணம், சுழிகணம், மகாகணம், ஊதுகணம், வறட்சிகணம், கொதிப்புக் கணம், வீக்ககணம், பிறக்கணம், ஆமக்கணம், வறட்சிக்கணம், முக்குக்கணம், போர்க்கணம், இரத்தகணம், நச்சு மாந்தக்கணம், ஊதுமாந்தக் கணம், மாந்தக்கணம், எரிகணம் என இருபத்து மூன்று கணங்கள் வயது பன்னிரண்டாகும் மட்டும் குழந்தைகளுக்கு வரும்.

குறிப்பு:- *கணங்கள் பதினெட்டு என்று முதல் பாடலில் கூறி இரண்டாம் பாடலில் கணங்கள் இருபத்து மூன்று என்கிறார்.*

தனியாகக் கணம் என்ற பாகுபாட்டில் உள்ளவை 18 என்றும் வேறு நோய் கலப்பு கொண்ட கணம் ஐந்து ஆக மொத்தம் 23 என்று அறியக்கிடக்கின்றது.

வாத கணத்தின் இயல்பு

உடல்கனத்து குழந்தை புகைந்து இருமும்; இரைப்பு, நாவறட்சி, தாகம், சுரம், பசிமந்தம், நீர்சுருக்குக் காணும்; மலங் கருகும்.

பித்த கணத்தின் இயல்பு

குழந்தை மஞ்சள் போல் கழியும்; நாக்கும் கடைவாயும் புண்ணாகும்; உடலெரிச்சல், சுரம், தலை கிறுகிறுப்பு, மயக்கங் காணும்.

சேத்தும கணத்தின் இயல்பு

உடம்பில் தினவு, சொறி, கைகால் வீக்கம், வாய் நாற்றம், வெப்பு, இருமல், கோழை, ஆராட்டங்காணும்; கீழ்வாயும் மேல் வாயும் வெடித்துப் புண்ணாகும்.

இவைகளுக்கு மருத்துவம்

1. ஈருள்ளி, எலுமிச்சம்பழம், கோவை, வல்லாரை, மாசிப்பத்திரி, வில்வம், குட்டிவிளா இவைகளின் சாறு; அத்திப்பால், ஆலம்பால், முலைப்பால், பசுவின்பால், வெள்ளாட்டின் பால், பசுவின் நெய், கொம்புத்தேன் வகைக்கு ½ படி; தேங்காய்ப்பால் 1 படி; சந்தனம், அறுகங் கட்டை, வெட்டி வேர், விலாமிச்சம்வேர், வகைக்கு 1 பலம் இடித்துக் காற்படி தண்ணீரிற் போட்டு அரைக்கால் படியாய் வற்ற வைத்து வடித்து ஒன்றாய்க்கலந்து நெய்ப்பதமாய்க் காய்ச்சி அதில் சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, திரிகடுகு, திரிபலா, சடாமாஞ்சில், அதிவிடயம், மாசிக்காய் வகைக்கு 1 பலம் இடித்து வடிகட்டின தூளைப் போட்டுக் கிண்டிப் பதமாய்க் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் கொள்ள 23 வகைக் கணங்களுந் தீரும். உடல் குளிர்ந்து பொன் போலாகும். புளி, உப்புந் தள்ளி தாயார் பத்தியம் காக்கவேண்டும்.

2. சீரகம், வில்வப்பத்திரி, வெங்காயம், வெந்தயம் இவைகளை சம நிறையாய் வெதுப்பிக் கியாழஞ் செய்து கொடுக்கக் கணங்கள் தீரும்; இச்சாபத்தியம்.

3. சிறுபுள்ளடி, கழற்கொழுந்து, அவுரி, சாணாக்கி, பொடுதலை வகைக்கு ஒருபிடியை நையநறுக்கி நல்லெண்ணெயிற் போட்டு வெய்யிலில் வைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

4. வில்வம், அவுரி, ஈருள்ளி, கடுக்காய் இவைகளைத் தட்டி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

5. பொன்னாங்காணிவேர், புளியீர்க்கு, வேப்பீர்க்கு வகைக்கு ஒருபிடி, கோழியவரை வேர் அரைப்பலம் நறுக்கி விளக்கெண்ணெயில் போட்டு சூரியபுடம் வைத்துக் கொடுக்கத் தீரும்; மேற்படி பத்தியம்.

குறிப்பு: திரிபலா என்பது கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய். இதனை முக்காய், முப்பலை, முத்துவர் என்றும் வழங்குவர்.

6. கடுக்காய், கருஞ்சீரகம், கடுகுரோகணி, காட்டுமல்லி இண்டிலை, ஈருள்ளி, உசியிலை இவைகளைத் தட்டி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி தாய்ப்பாலில் கலந்து கொடுக்கத் தீரும்.

7. கோட்டம், சண்பகப்பூ, வெண்காயம், அவுரி, நிலக்குமிழ், கடுகுரோகணி, விலாமிச்சு, கிராம்பு இவைகளை ஓர் எடையாய்த் தட்டி நல்லெண்ணெயும், நெய்யும் ஒன்றாய்க் கலந்து அதில் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

கணமாந்த நோயின் இயல்பு

சிறுவர் உடல் இளைக்கும்; பொருமல், கக்கல், வாய்நீர், தலைசுழற்றல், சோபதாபம், அசதி காணும்; வயிறு இரைந்து பாசிபோல் கழியும்; விழிசுழலும்; நாவுலரும்.

மருத்துவம்:- நொச்சி, துளசி, முசுமுசுக்கை வகைக்கு ஒரு பிடி இலையைப் பிட்டவித்துச் சாறு பிழிந்து ஒரு சங்கு கொடுக்கத்தீரும்; பத்தியமில்லை.

1. புங்கு, புளி, நொச்சி, மா, வேம்பு, வேலிப்பருத்தி, பொடுதலை, கருவேப்பிலை, நாரத்தை, சங்கு, அவுரி, பொன்னாவரை இவைகளின் இலை ஈர்க்கு வகைக்கு ஒருபிடி சட்டியில் போட்டு கடுகுரோகணி, இந்துப்பு, ஓமம் இவைகளைத் துணியில் முடிந்து போட்டு ஒருபடி தண்ணீர் விட்டு வற்றக் காய்ச்சி வடித்து அதில் மேற்படி மருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

2. புள்ளடி, பொடுதலை, தகரை, மிளகு தக்காளி, கருநொச்சி, பழம்பாசி, ஈருள்ளி இவைகளின் சாறு விளக்கெண்ணெய், பூண்டு, வசம்பு வகைக்கு ஓர் எடையாகக் கலந்து காய்ச்சி காலையில் கொடுத்து மாலையில் சுக்கு, ஓமம், பொன்முசுட்டை, வேளை, ஏலம், திப்பிலிமூலஞ் சமனெடையாய்த் தட்டிப் போட்டு குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

3. வல்லாரை, பிரமி, செருப்படை, நீர்முள்ளி, மணத்தக்காளி, முசுமுசுக்கை, துளசி, கோழியவரை, நெய்ச்சட்டி இவைகளின் இலை வகைக்கு ஒருபிடி இடித்துப் பிழிந்தசாறு வகைக்கு ஒரு சிரங்கை ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கடுகு பதத்தில் கார்கோலரிசி, பூண்டு, வசம்பு, கருஞ்சீரகம் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்; இந்நான்குக்கும் இச்சாபத்தியம்.

4. வேலிப்பருத்தி, வெள்ளைச்சாரணை, குமட்டி, விளாவேர், வசம்பு, பூண்டு இவைகளைத்தட்டி எருமை வெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தாய்ப்பாலில் சேர்த்துக் கொடுக்கத் தீரும். பத்தியமில்லை.

5. விளக்கெண்ணெய், நுணாயிலைச் சாறு, ஈருள்ளிச் சாறு வகைக்கு 1 படி, வில்வக்கொழுந்து இரண்டு பலம், கருஞ் சீரகம், பொரித்த வெண்காரம், வகை 2 வராகன் எடை,

கடுக்காய் 4 வராகன் எடை பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கடும் பத்தியமாய்க் கொடுக்கத் தீரும்.

6. வெள்ளாட்டின் பால் 2 படி, விளக்கெண்ணெய் 1 படி, திருகுகள்ளிப் பால் 1 பலம், இண்டங்கொழுந்து 1 படி, செண்பகப்பூ, அதிமதுரம், சாதிக்காய், இலவங்கம், ஏலம், வெள்ளுள்ளி, சாதிபத்திரி, ஈருள்ளி, சீரகம், கருஞ்சீரகம், வசம்பு, விலாமிச்சு, வெட்டி வேர், நன்னாரி, சிறுநாகப்பூ, பூலாங்கிழங்கு, கோரோசனை, கடுக்காய், கடுகுரோகணி, கோட்டம், பச்சை நாகேசுரம் வகைக்கு அரை வராகன் எடை இவைகளைப் பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி, வடித்துக் கொண்டு எண்ணெயையும் தாய்ப் பாலையும் கலந்து ஒரு சங்கு கொடுக்கத் தீரும். இச்சா பத்தியம்.

7. வால்மிளகு, பூண்டு, ஓமம், கிராம்பு, செண்பகப்பூ சம நிறையாய்த் தூக்கிப் பொடுதலைச்சாற்றால் நாலுசாம மரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரை செய்து கொண்டு மேற்படி சாற்றில் மூன்று நாள் கொடுக்கத் தீரும். இச்சா பத்தியம்.

ஊதுமாந்த கணத்தின் இயல்பு

குழந்தை உடல், கணுக்கால் வீங்கும்; நாவு புண்ணாகும்; சுரங்காயும்; அன்னம், தண்ணீர் செல்லாது; கால், கை சோரும்; சுவாசம் மிகுதியாகும்.

மருத்துவம்:- குப்பை (குப்பைமேனி, முள்ளி (முள்ளிக்கீரை), நீர்முள்ளி, கரிப்பான், கரந்தை, மாதுளம்பழம், வல்லாரை, வட்டத் திருப்பி, பற்பாடகம், ஓரிலைத்தாமரைக் கிழங்கு, செந்தாமரை, கண்டங்கத்திரி, செங்கழுநீர்க்கிழங்கு, நீர்க்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, சூரத்தாவரை (சூரத்து நிலாவாரை), முருக்கு இவைகளின் சாறு, தேங்காய்ப்பால் வகைக்கு ¼ படி, விளக்கெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் இண்டம் வேர், காயம் வசம்பு, ஏலம், வெட்பாலையரிசி, முத்தக்காசு,

விளாம்பிசின், வாகைப்பிசின், சதுக்காரைப்பிசின், இலவம்பிசின், செங்கத்தாரிப் பட்டை, மாசிக்காய், அதிவிடையம், வால்மிளகு, சாதிபத்திரி வகைக்கு ¼ பலம் இடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு ஒரு துட்டெடையாய் மூன்று வேளை உப்பு, புளி தள்ளிக்கொடுக்கத் தீரும்.

நாய்வேளை வேரைக் கரிப்பான் சாற்றிலரைத்து தாய்ப் பாலில் கலக்கிக் கொடுத்து, நீர்முள்ளி சுட்டசாம்பலை கரிப்பான் சாற்றில் கரைத்து மேலில் பூசி வைத்திருந்து மாலையில் வெந்நீரில் தலைமுழுக்குச் செய்விக்கத் தீரும், இச்சாபத்தியம்.

ஊதுமாந்த கணத்தின் இயல்பு (வேறு)

குழந்தை இருமும்; மூக்கில் நீர்வடியும்; இடையில் சுரம் காயும்; வயிறு பொருமி இரைந்து பலவிதமாய்க் கழிச்சலும், தலை புரட்டல், மயக்கங்காணும்; உடம்பு முகம், கண் சோரும்.

மருத்துவம்:– அதிமதுரம், செண்பகப்பூ, ஏலம், கோரோசனை, சாத்திரபேதி, வெட்டிவேர், கோட்டம், மாசிப் பச்சை, விலாமிச்சம் வேர் சமன்கூட்டி ஆதண்டைச் சாற்றால் ஒரு சாமம் அரைத்துக் குன்றியளவு உருண்டை செய்துகொண்டு ஒரு உருண்டையை தாய்ப்பாலில் கொடுக்க மாந்தமெட்டு, கடற்படுவன், நீர்ப்பாடு, கருப்பாடு, நாவறட்சி, சுரம், குலை யெரிவு, வெப்புகோட்டம் தீரும்; (சன்னிபாத சுரம்)

சிங்கி மாந்தக்கணம் (இதுவே நச்சு மாந்தக்கணம்)

உந்தியில் கனலேறி, ஈரல் வெந்துபுண்ணாகி, உடலாதியந்த மும், தீப்போல் காயும்; மூச்சு மேல் நோக்கி இளைக்கும்; குழந்தை திக்கு முக்காடி மயங்கும்.

மருத்துவம்: அதிமதுரம், கோட்டம், ஏலம், கோரோசனை, சாத்திரபேதி, செண்பகப்பூ, மாசிக்காய், இலவங்கப்பூ, வகைக்கு ¼ பலம் கல்வத்திலிட்டு வெட்டி வேர், மாசிப்பத்திரி, கருந் துளசி, விலாமிச்சு இந்த நால்வகை மூலிகைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்துக் குன்றிமணி போல் உருண்டை

செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு மாசிப்பத்திரிக் குடிநீரில் ஓர் உருண்டை கொடுக்கச் சிங்கிமாந்த கணம் தீரும்.

இலவங்கப்பூக் குடிநீரிலிட மாந்த சுரம், கக்கல், மந்தம் தீரும், தாய்ப்பாலிலிட குடற்படுவன், நீர்ப்பாடு, மாந்தம், கரப்பன், நாவறட்சி, வயிற்றெரிவு, அன்னவிடாய், சுரமாந்தம், உப்புசம், இருமல் தீரும்.

நீர்க்கணத்தின் இயல்பு

சுரம் விட்டு விட்டுக் காயும்; மிகுந்ததாகம்; வியர்வை காணும்; கண் குழியும்; நாக்கு, வாய் வெடித்துப் புண்ணாகி வறளும்; தண்ணீர் போல் கழியும்; தலை சுழலும்; வயிறு நோகும்; கைகால் சோர்ந்து குளிரும்; முகம், கால், புறங்கை மினுமினுப்பாயிருக்கும்.

மருத்துவம்: சாரணைக்காய், மூக்குரட்டைக்காய், பொடுதலைக் காய், திரிகடுகு, துளசி, சீரகம் ஒரு நிறையாய்த் தட்டிப் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

சுழி கணத்தின் இயல்பு

நளிர்சுரம், சுவாசங்காணும், கண் பஞ்சடையும், உச்சிகுழியும், நெஞ்சு எரியும்; உடல் நொந்து குழந்தை அலரும்.

சுழிமாந்த கணத்தின் இயல்பு (வேறு)

1. சுவாசம், இருமல் காணும்; முகம், மார்பு புடைத்துக்காணும்; வயிறு, ஈரல், நெஞ்சு, தொண்டை, நாவு வெந்து புண்ணாகும்; குழந்தை தாய்ப்பால் உண்ணாது, அலறியலறி யழும்; கால், கை, குளிரும்; வயிறு பொருமும்; சுரங்காயும்; கண்சொருகும்; நாவறளும்.

2. நெஞ்சில் கபங்கட்டி இருமல், இளைப்பு, மயக்கம் காணும்; மார்புகழியாய் வாங்கும்; வாயில் நுரை தள்ளும்; வாந்தி பண்ணும், சுரங்காயும்; குழியும்; முகம் மஞ்சள் போலிருக்கும்; நாவறளும்.

மருத்துவம்:

1. செண்பகப்பூ, ஒரு வராகன் எடை, சாதிபத்திரி கோரோசனை வகைக்கு அரை வராகன் எடை பொடித்து ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டு கொதிக்க வைத்து முறையாக அளவுப்படி ஒரு காசு எடை கொடுக்கத் தீரும்.
2. உள்ளி, வசம்பு, உசிலம் பட்டை ஓர் நிறையாய்த் தட்டி நீரில் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.
3. இண்டு, கண்டங்கத்திரி, இம்பூரல், இவைகளின் வேர், கடுக்காய் (கொட்டை நீக்கியது) ஒரு நிறையாய்த் தட்டி காற்படி விளக்கெண்ணெயில் போட்டுச் சூரிய புடம் வைத்துக் கொடுக்க நீங்கும்.
4. குன்றிமணி, கிலுகிலுப்பை, முசுமுசுக்கை, துளசி, கூவிளை (வில்வம்) இவைகளின் வேரைத் தட்டி விளக் கெண்ணெயில் போட்டுச் சூரிய புடம் வைத்துக் கொடுக்கத் தீரும்.
5. ஈருள்ளியும் சிவக்க வறுத்த துருசும் ஓர் எடையாய்த் தட்டிக் குடிநீர் செய்து வடித்ததில் இலுப்பைப் புண்ணாக்கைப் பொடித்துப் போட்டு வடிகட்டிக் கொடுக்கப்போகும்.
6. தூதுவேளை, துளசி, நுணா, சங்கு இண்டு, பொடுதலை, செம்முள்ளி, சீரகம், ஒரு நிறையாய்ப் பசுவின் நெய்யில் வேகவைத்துக் கொடுக்கத் தீரும், குப்பை மேனிச் சாறும், உப்பும் கலந்து வேப்பெண்ணெயில் மத்தித்து மூன்று நாட்கள் கொடுக்கவும்.
7. கடுக்காய், காட்டு மல்லிகை, கற்றாழை, வெந்தயம், சீரகம், சாரணை, ஈருள்ளி, ஒரு நிறையாய்த் தட்டி விளக்கெண் ணெயில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.
8. நுணா, சங்கு, இண்டு, பூண்டு, பொடுதலை, செம்முள்ளி இவைகளின் சாறும் நெய்யும் ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்க நீங்கும்.
9. நந்தியாவட்டம், நாய்த்துளசி, சிவதை, காட்டு மல்லிகை, தூதுவேளை, இவைகளின் வேரை அரைத்து வகைக்குப்

புன்னைக்காயளவு, கண்டங்கத்திரி, தூதுவேளை, சின்னி மணத்தக்காளி, கொட்டைக்கரந்தை, குப்பைமேனி, கோழியவரை, சமனாயிடித்துப் பிழிந்தசாறு அரைப்படி ஒருபடி விளக்கெண்ணெயிற் கலந்து மெழுகுபதமாய் வடித்து ஒரு துட்டெடை கொடுக்கத் தீரும்.

10. கற்கடகசிங்கி, சீந்தில், சீரகம், வில்வஓடு, அதிவிடயம், கடுகுரோகணி, கண்டங்கத்திரி, முசுமுசுக்கை, முள்ளி, தூதுவேளை, திப்பிலி ஒருநிறையாய்த்தட்டித் தண்ணீரில் போட்டு, குடிநீர்செய்து கொடுக்கத்தீரும், இச்சாபத்தியம்.

குறிப்பு:- கோரோசனை, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப் பூ, என்னும் சரக்குகளும் அதைப் போன்றவைகளும் தைலம், கிருதம், முதலானவைகளில் சேருமானால் தனியாய்ப் பொடித்து வடிகலத்தில் இட்டுக் கொள்க.

சூலைகண இயல்பு

நெஞ்சு, வாய், தொண்டை, நாவுவெந்து புண்ணாகி, இருமல், சுவாசம், வயிற்றுப் பொருமல்கண்டு குழந்தை முலையுண்ணாது; முகம் நாறும்.

மருத்துவம்:- துளசி, நிலத்துளசி, கஞ்சாங்கோரை, மாசிப்பத்திரி, வில்வம், உள்ளி இவைகளின் சாறு வகைக்கு அரைக்கால்படி, விளக்கெண்ணெய் ¼ படி, திரிகடுகு 2 வராகன் எடை அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து வேளைக்கு இரண்டு வராகன் எடை வீதம் கொடுக்கத் தீரும்.

மகாகண இயல்பு

முகம், புறங்கால், புறங்கை மினுமினுக்கும்; விழி வெளுக்கும்; உடல் வெதும்பும்; நா, உதடு புண்ணாகும்; குழந்தை மயங்கும்.

மருத்துவம்:- சிறுகீரைவேர், விஷ்ணுகிரந்தி, கீழ்க்காய் நெல்லி, சிறுபீளை, வெதுப்படக்கி, சீந்தில், ஆடாதோடை இவைகள் ஒருநிறையாய் நறுக்கிச் சட்டியில்போட்டு இளவறுப்பாய் வறுத்துத் தண்ணீர்விட்டுக் குடிநீர்செய்து கொடுக்கத்தீரும்.

பிரளிக்கணத்தின் இயல்பு

வயிறு பொருமி ஏப்பமுண்டாகும்; உடல் புண்போல் நொந்து குழந்தை துடித்து ஏங்கி அழுது அலறும்; மாப்போல் மலங்கழியும்.

மேற்படிவேறு:- மலங்கட்டி வயிறு பொருமி அடிக்கடி முக்கும்; குடலைப்பிரட்டி வலிக்கும்; முலையுண்ணாது; நாவுலரும்; மேல் மூச்சும் இளைப்பும் காணும்; முத்துப்போல மூக்கில் நீர் வடியும்; முகத்தில் மஞ்சள் மணக்கும்.

மருத்துவம்:- அவித்தூற்றின சிற்றாமணக்கெண்ணெய் படி ஒன்றில் 4 பேய்த்துமட்டிக்காயும் 2 பிடி வெங்காயமும் அரிந்து போட்டுக் கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு 1/16 பலம் (மாகாணி), குரோசாணி ஓமம் 1/8 பலம் இவைகளைப் பொடித்துச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி ஒரு துட்டெடை கொடுக்கவும். பத்தியம்: நீர்க்கஞ்சி உட்கொள்ளவும்.

பிறக் கணத்தின் இயல்பு

வயிறு பொருமும்; பசுமையாயும், தோய்ந்த தயிர்போலும் கழியும்; தூக்கமிகும்; பாலருந்தி கக்கல் (வாந்தி) பண்ணும்; சுரம் காயும்; விழி சொருகும்; குழந்தை கை, கால் சில்லென்றிருக்கும்; தலையைப் புரட்டும்.

மருத்துவம்:- வல்லாரை, கோழியவரை, கஞ்சாங்கோரை, சனகிப்பூடு (சீதா செங்கழுநீர்), வேளை, ஒற்றைப்பேய்மிரட்டி, இரட்டைப்பேய்மிரட்டி, தொடரி (புலித்தொடரி), சிறு புள்ளடி இவைகளை ஓரளவாய் இடித்துப்பிழிந்தசாறு 1 படி, விளக்கெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்ததில் காயம், வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், வசம்பு வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து மூன்று நாள் கொள்ளவும்.

வறட்சிக் கணத்தின் இயல்பு

உடலெல்லாம் வெம்பும்; நெஞ்சு துடிக்கும்; குழந்தை புகைந்திருக்கும்; நாவு கருகும்; வயிறு எரியும்.

மேற்படி வேறு:- மூன்று வெடிப்பும் தோன்றும்; இருமல் சளியும் மிகுந்து தூக்க மயக்கம் காணும்; முகம் மஞ்சள் பூத்திருக்கும்; உடல் வற்றும்.

மருத்துவம்:- ஆமணக்கெண்ணெய், ஆவின் பால் வகைக்கு 1 படி, கீழ்க்காய் நெல்லிச்சாறு அரைக்கால் படி, அதிமதுரம், கடுக்காய், தான்றி, சுக்கு, விஷ்ணுகரந்தைவேர், துளசி, தூதுவேளை வகைக்கு ¼ பலம் (8 3/4 கிராம்), இளநீர் விட்டரைத்துச் சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி இரவில் சோறுண்ட பின் ஒரு கரண்டி எண்ணெய் உண்டு உறங்கக் காலையில் வயிறு கழியும், அதுபோல் மேற்படி எண்ணெயைக் காசெடைவீதம் இரவில்மட்டும் சாப்பிட்டுவர வறட்கணம் நீங்கும்.

முள்ளிவேர், செவ்வள்ளிக்கிழங்கு, தண்ணீர்விட்டான், முசுமுசுக்கை, தூதுவேளை, கண்டங்கத்திரி, கருஞ்சீரகம், திருகுக் கள்ளிவேர், மணத்தக்காளி, பூண்டு, வசம்பு வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்), விளக்கெண்ணெயில்போட்டுப் பதமாய்க்காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூச மேற்படி நோய் தீரும்.

கொதிப்புக் கணத்தின் இயல்பு

நெஞ்சும் விலாவும் கொதிக்கும்; நெற்றி வியர்க்கும்; பஞ்சு போல் கண் வெளுக்கும்; இருமல், தலைவலி காணும்; குழந்தை குரல் கம்மும்.

மருத்துவம்:- ஆமணக்கெண்ணெய், எலுமிச்சம்பழம், இலந்தை, ஈருள்ளி வகைக்குச்சாறு ¼ படி, கருஞ்சீரகம் ¼ பலம், கற்றாழஞ்சாறு 1 பலம் யாவற்றையும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி கற்றாழஞ்சாறு சிவந்த பதத்தில் வடித்துக் காலை, மாலை கால் கரண்டிவீதம் கொள்ளவும், பதினெண்வகை என்புசுரம், என்புவெட்டை, மேகசுரம், பித்தவெட்டை தீரும். சிறுவர்க்கும் பெரியோருக்கும் உபயோகப்படும்.

அந்தகக் கணத்தின் இயல்பு

மூளையில் கனலேறி உடல் வெதும்பும்; நாவுலரும்; விழி வெளுக்கும்; முகம் மஞ்சள் நிறமாய் மினுக்கும்.

மருத்துவம்:- சிறுகீரை, நாணி (நாணாங்கள்ளி), பூலா (எறள் பூலா), அவுரி இவைகளின்வேர், தேற்றான்விதை, கடுக்காய் வகைக்கு 1 பலம் (35 கிராம்) அரைத்து ஆவின் வெண்ணையில் வேகவைத்து வடித்து மூன்றுநாள் கொடுத்து மேற்படி மருந்துகளைத் தாய்ப்பாலில் அரைத்துத் தலையில் பூசிவரத் தீரும்.

மந்தாரக் கணத்தின் இயல்பு

வயிறு ஊதி, சுரம், மயக்கம், மூச்சுவாங்கல் காணும்.

மருத்துவம்: நாயுருவி, கரிசலாங்கண்ணி, வல்லாரை, கவுதும்பை, கண்டங்கத்திரி, நொச்சி இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, விளக்கெண்ணெய் 1 படி, வெள்ளுள்ளி, திரிகடுகு, திரிபலை வகைக்கு 1 பலம், இலவங்கப்பூ, வசம்பு வகைக்கு 2 வராகன் எடை பொடித்துப்போட்டுச் சிவந்தபதமாய்ச் காய்ச்சி வடித்துக் கொடுக்கவும்.

எரிகணத்தின் இயல்பு

உடலாதியந்தமும் எரியும்; வாய்வழி சுவாசம் போகும்; வாய் நீர் வடியும்; குழந்தை அலறி அழும்; உறக்கம் கொள்ளாது.

மருத்துவம்: தென்னங்குரும்பை, தகரை வகைக்குச் சாறு ¼ படி, பழம்பாசி, குமரி, மஞ்சணத்தி (நுணா), ஈருள்ளி இவைகளின் சாறு விளக்கெண்ணெய் வகைக்கு அரைப்படி, இலவங்கப்பட்டை கோட்டம், நற்சீரகம், சந்தனம், அதிமதுரம் வகைக்கு அரைக்கழஞ்சு பொடித்து ஒன்றாய்க்கலந்து பதமாய்க் காய்ச்சி ஒரு காசெடை கொள்ளத்தீரும். மற்ற கணங்களும் தீரும். இச்சாபத்தியம்.

ஆமக்கணத்தின் இயல்பு (இதுவே சீதகணம்)

சாமந்தோறும் உடல் வெதும்பி நாளுக்குநாள் தேகம் வற்றும்; தாகம் மிகும்; பசி மந்திக்கும்; வயிறு பொருமி இரைந்து கழியும்; சுவாசம் மிகும்; கால் குளிரும்; குழந்தை கண்விழியாது; அலறித் திடுக்கிட்டெழுந்து சீறி அழும்; மூக்கு அரும்; புருவம் சுழிக்கும்.

மருத்துவம்:

1. இண்டம் வேர்த்தண்டுச்சாறு 1 படி; குமிழ், மாசிப்பத்திரி, புங்கு, நிலத்துளசி, உள்ளி, முடக்கொத்தான், தூதுளை, நுணா, வல்லாரை, கஞ்சாங்கோரை இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, விளக்கெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் சாதிக்காய், ஏலம், கிராம்பு, கடுகுரோகணி, கடுக்காய், வால்மிளகு, ஓமம், வசம்பு, சுக்கு வகைக்கு 1 பலம் வறுத்துப் பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒரு கரண்டிவீதம் ஐந்து நாள் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

2. வேலிப்பருத்தி, கோழியவரை, கிளுவை, பொடுதலை கள்ளி, சிவதை இவைகளின் வேர் வெளிச்சிப்பிசின், (விளாம்பிசின்) வசம்பு, உள்ளி, கடுகுரோகணி, சீரகம், கருஞ்சீரகம் வகைக்கொரு கழஞ்சுதட்டி ஆமணக் கெண்ணெயும் வெள்ளாட்டுப் பாலும் வகைக்கு ½ படி வீதம் ஒன்றாய்க்கலந்து அதில் போட்டுக் காய்ச்சி வடித்து முலைக்காம்பில் தடவிக் குழந்தைக்குப் பால் கொடுக்கத்தீரும். இச்சாபத்தியம்.

நீராமக் கணத்தின் இயல்பு

தண்ணீரும் சீதமுமாய்ப் பச்சை, மஞ்சள்போலக் குழந்தை கழியும்; கண்ணில் நீரும் பீளையும் வடியும்; மயக்கமும் கடுப்பும் காணும்.

மருத்துவம்:- எலுமிச்சங்காய் அளவு ஆவின் நெய்யைச் சட்டியில் உருக்கி மணத்தக்காளியைக் கொட்டைப் பாக்களவு அரைத்துப் போட்டெரித்துப் பதத்தில் இறக்கி ஒரு காசளவு ஐந்துநாள் கொடுக்கத்தீரும். பெரிய பிள்ளைகட்கொரு துட்டெடை கொடுக்கவும்.

பேராமக்கண நோயின் இயல்பு

கை, கால் குளிரும்; வளையமாகும்; சுரங்காயும்; குழந்தை வாந்தி பண்ணும்; திடுக்கிட்டு ஏங்கும்; வயிறு பொருமிக்கழியும்;

சோரும், முலையுண்ணாது; சிறிவெருவிப்பாயும், (வெருவி = அஞ்சி)

மருத்துவம்:- தும்பை, பொடுதலை, கொழுஞ்சி, இவைகளின் வேர், திப்பிலி, சீரகம், ஓமம், இந்துப்பு ஒருநிறையாய் ஒரு படி பசுமோரில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சிக்கொடுக்க வாயு போராமக் கணம் தீரும்.

முக்குக் கணத்தின் இயல்பு

குழந்தை அடிக்கடி வாந்திபண்ணும்; முலை உண்ணாது; சோரும்; மலத்தில் இரத்தமும் விழும்; நாக்கு வேகும்; சுரம், தலைவலி, நடுக்கம், கக்கல், நாவறட்சி, தாகம் காணும்; சந்துப் பொருத்துகள் உளையும்; முக்கில் சீதமும் மலமுமாய்க் கழியும்; ஆசனவாய் கடுத்துத் தீப்போலெரியும்; அடிதள்ளும்; மேனி கறுத்துவற்றும்.

மருத்துவம்:

1. குமரிச்சாறு, முலைப்பால் வகைக்கு ¼ படி, எலுமிச்சம் பழச்சாறு அரைக்கால் படி, விளக்கெண்ணெய் 1 படி, வில்வம், விலாமிச்சு, விஷ்ணுகாந்தி, முத்தக்காசு, ஓரிலைத் தாமரை, முருங்கைவித்து, துளசிவித்து, கோங்கிலவம் பிசின் ஆவாரைப் பிசின், கோட்டம், அதிமதுரம், அக்கிராகாரம், தாளிப்பத்திரி வகைக்கொரு பலம் வறுத்திடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு துட்டெடைவீதம் மூன்றுநாள் காலையில் கொடுத்து, மாலையில் இண்டந் தண்டைக் கண்டங்கண்டமாய் நறுக்கி ஊதிக் கால்படி தண்ணீர்வாங்கி அதில் சீரகத்தைப் பொடித்துப்போட்டு வற்றவைத்து மூன்றுநாள் கொடுக்கத்தீரும், இச்சாபத்தியம்.
2. ஏழு தடவை கழுவின கற்றாழுஞ்சோறு, வெந்தயம், எலுமிச்சம்பழச்சாறு ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

மூலக் கணத்தின் இயல்பு

வாதபித்தம் அதிகரித்து குழந்தை சீத இரத்தமாய்க் கழியும்; ஆசனம் கடுத்து உளையும்; காய்ச்சல். வயிற்றிரைச்சல், விடாத் தலைவலி காணும்; முகம் கருகும்; சிவக்கும், அடிதள்ளும்.

மருத்துவம்:

1. சீரகம், அதிவிடையம், கடுக்காய், சுக்கு, பறங்கிப்பட்டை, கசகசா, சந்தனத்தூள், சாதிபத்திரி, நெல்லிவற்றல், சிற்றாமுட்டி, செம்பருத்தி, வில்வம், விலாமிச்சு இவைகளின் வேர் வகைக்கு 1 பலம், கற்கண்டு 2 பலம் பொடித்து 5 பலம் பசுநெய்யில் போட்டு இளகஞ்செய்து பாக்களவு ஏழு நாள் கொடுக்க நீங்கும்.

2. பழம்பாசி சமூலம், வெள்ளாட்டுப் பாலில் போட்டுக் காய்ச்சி வெந்தபின்வடித்து அதிலொரு எலுமிச்சம்பழம் பிழிந்து கொடுக்கத் தீரும்.

3. அதிமதுரம், சீரகம், ஏலம், பெருமரத்துப்பட்டை இவை களைச் சமநிறையாய்க் கருவேலம்பட்டைக் கியாழத்தில் அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கத் தீரும். இம் மூன்றுக்கும் இச்சாபத்தியம்.

கணங்களுக்குப் பொது மருந்து

1. கல்நார், கிராம்பு, இலவங்கப்பத்திரி, செவ்வியம், (மிளகு வேர், மிளகுக்கொடி என்பர்) திப்பிலி, அதிவிடையம், தான்றி, கருஞ்சீரகம், அக்கிராகாரம், கடுகுரோகணி, சாதிக்காய், சாதிபத்திரி, கற்கடகசிங்கி (கடுக்காய்ப்பூ), குரோசாணி ஓமம், கஸ்தூரி, பூரம், சீரகம், கோரோசனை, குங்குமப்பூ இவைகளை ஒரு நிறையாய்க் கல்வத்திலிட்டு இஞ்சி, கையாந்தகரை இவைகளை ஒரு நிறையாய்க் கல்வத்திலிட்டு இஞ்சி, கையாந்தகரை இவைகளின் சாற்றால் வகைக்கொரு சாமமும் நாரத்தங்கனிச் சாற்றால் மூன்று சாமமும் அரைத்துப் பயறளவாய் உருண்டைசெய்து தாய்ப்பாலில் கொடுக்க எட்டு வகை நீர்ப்புள், பறவைத் தோடம், நளிர்சுரம், கழிச்சல், இருமல், ஈளை, கணை, மாந்தமும் நீங்கும்.

2. சாத்திரபேதி, கோட்டம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடுகு ரோகணி, இலுப்பைப்பூ, நன்னாரி, விலாமிச்சு, வெட்டிவேர், திப்பிலி, அதிமதுரம், முத்தக்காசு, கொடிமுந்திரிப்பழம்,

பேரீச்சம்பழம் ஒரு நிறையாய் கரிப்பான் சாற்றாலரைத்துக் கடலை அளவு உருண்டைசெய்து முலைப்பாலிலாவது வெந்நீரிலாவது கொடுக்க எண்வகைக் கணங்கள், மாந்தசுரம், தாகம் தீரும்.

3. சந்தனம், நன்னாரி, புளியவிதைத்தோல், சாத்திரபேதி, கோரைக்கிழங்கு, ஓரிலைத்தாமரை, சிறுகீரை, நாயுருவி, வல்லாரை, சாதிக்காய், சாதிபத்திரி, செண்பகப்பூ, கல்நார், திப்பிலி, இருவாட்சி, கருஞ்சீரகம், நற் சீரகம், ஏலம், இலவங்கப்பட்டை, உத்திராட்சம், கோரோசனை, பொன்னாங்காணி, குப்பைமேனி, கலைக்கொம்பு (மான்கொம்பு); இவைகளின் மூலிகை களுடைய வேர்த்தோல்களும் கடைச்சரக்குகளும் ஒரு நிறையாய்க் கல்வத்தில் இட்டு வல்லாரைச் சாற்றாலும், பொன்னாங்காணிச் சாற்றாலும் மை போலாட்டி தேற்றான் விதையளவு உருண்டைசெய்து முலைப் பாலிலாவது வெந்நீரிலாவது கொடுக்க எண்வகைக் கணங்களும் தீரும்.

4. விளக்கெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கிளுவைப்பட்டை, கருவேலம் பட்டை, ஈருள்ளி, இண்டங்கொழுந்து வகைக்கொருபடி, சீரகம் 1 பலம், காசுக்கட்டி 1 பலம் தட்டிப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி ஒரு கரண்டிவீதம் கொடுக்க எண்வகைக் கணமாந்த தோடம் தீரும்.

5. வல்லாரை 9 பலம், எட்டுப்படி தண்ணீரில்போட்டு ஒரு படியாய் வற்றவைத்து சுக்கு, ஏலம், கலைக்கொம்பு, சாதிக்காய், தாளிசபத்திரி, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், நற்சீரகம், தான்றி, தக்கோலம், பொரிகாரம் (பொரித்த வெங்காரம்), செண்பகப்பூ, குங்குமப்பூ, கத்தூரி மஞ்சள், இம்பூரல்வேர், மல்லி, கடுகுரோகணி வகைக்கு 1 வராகன் எடை, ஆவின் பாலில் ஆட்டிக் கியாழத்தில் கரைத்து ஆவின் நெய் 1 படி கூடவிட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கரண்டிநிறை கொடுத்துவர மாந்தம், போர்மாந்தம், மேகம், சுவாசம், நச்சுநோய், ஈளை, இருமல், சுவாசகாசம், இளைப்பு, மூலகண்டம், உட்சுரம், அட்டகணம் தீரும்.

6. ஏழுமுறை கழுவின கற்றாழஞ்சோறு ஒரு தேங்காய் அளவு, வெந்தயம் ஒரு துட்டெடை, ஈருள்ளி 1 பலம் இவைகளை ஒரு படி விளக்கெண்ணெயில்போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டிவீதம் கொடுக்க 18 வகைக் கணம், வெட்டைச் சுரம் தீரும்.

7. இண்டு, தூதுவேளை, சங்கங்குப்பி, வேலிப்பருத்தி, பூவரசு, குப்பைமேனி, ஆடாதோடை, சாரணை, பூலா, நரிப்பயற்றங் கொடி, பிரமி, தைவேளை, கற்றாழை இவைகளின் வேர்களை இடித்துப் பிழிந்தசாறு 1 படி, விளக்கெண்ணெய் 2 படி, கருஞ்சீரகம், ஓமம், பூண்டு, கோரோசனை, செண்பகப்பூ, வசம்பு, சாதிக்காய், தான்றிக்காய் வகைக்கு அரைப் பலம் அரைத்துக் கலந்து பதமாய்க்காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொடுக்க மாந்தம், தோடகணம், தேகத்துக் கணமும் தீரும்.

8. இம்பூரல், சிறுகீரை, முசுமுசுக்கை, கோவை, எலிச்செவி (எலிக்காதிலை), குரும்பை, காணி, இண்டு, குப்பைமேனி, அவுரி, பொடுதலை, ஆடாதோடை, வல்லாரை, துளசி, குதிரைவாலி, தூதுவேளை, கோழியவரை, கொன்றை, கரிப்பான், முருங்கையில், மேற்படிபட்டை, விஷ்ணுகரந்தை, ஓரிலைத்தாமரை, பற்பாடகம், நிம்பு வேம்பு, ஆனைநெருஞ் சில், நரிப்பயிறு, ஈருள்ளி, நறுவிலியிலை இவைகளின் சாறு வகைக்கு 1/16 படி (மாகாணி), விளக்கெண்ணெய் 1 படி, சுக்கு, செவ்வியம், பேரரத்தை, சித்திரமூலம், சிறுதேக்கு, சாதிக்காய், சாதிபத்திரி, கருஞ்சீரகம், ஏலம், சண்பகப்பூ, சீரகம், கிராம்பு, கோட்டம், உள்ளி, கோரோசனை, காசுக் கட்டி, கம்பிப்பிசின் (வேலன்பிசின்) வகைக்கு 1 கழஞ்சு (1 ¼ வராகன் எடை) இவைகளை அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சிப் பத்தியமாய்க் கொள்ள அச்சரங்கள், சுரம், கணம் 18-ம் நீங்கும்.

9. மாதுளம் சமூலம் அரைத்து ஒரு எலுமிச்சங்காய் அளவு, சீந்தில் சர்க்கரை ஒரு எலுமிச்சங்காய் அளவு, ஆவின் வெண்ணெய் நாலு எலுமிச்சங்காய் அளவு; சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம் வகைக்கு 1 வராகன் எடை

பொடித்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் கொடுக்கச் சகல கணைகள், தோடம் வயிற்றிரைச்சல் தீரும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

10. பொன்னாங்காணி, துளசி, தகரை, கீழ்க்காய்நெல்லி, வெண்ணொச்சி, நாயுருவி, அம்மான்பச்சரிசி, கருநொச்சி இவைகளின் இலை, ஓரிலைத்தாமரை, புளியாரை, வல்லாரை, சிறுபுள்ளடி, நரிபயற்றங்கொடி, இண்டந்தண்டு, முசுமுசுக்கை, அகத்திப் பழுப்பு, சீந்திற்கொடி, ஆடாதோடை, ஆடுதின்னாப்பாளை, விஷ்ணுகரந்தை, முட்காவேளை இவைகளின் கொழுந்து; ஆவாரை, விடத்தலை, நிலக்குமிழ், சிறுகீரை, வில்வம், உத்தாமணி, மிளகுதக்காளி, தைவேளை, சங்கு, கண்டங்கத்திரி, நாய்வேளை, குட்டிவிளா, சங்கங் குப்பி இவைகளின்வேர் வகைக்கொரு பிடி; வேர் வகைகளை நறுக்கிக் குடிநீர்செய்து கொண்டு, கொழுந்து வகைகளைச் சாறுவாங்கி ஒரு படி விளக்கெண்ணெயில் கலந்து, அதில் ஆமையோடு, ஓமம், கடல்நுரை, சீரகம், திப்பிலி, கடுகுரோகணி, கிராம்பு, கருஞ்சீரகம், பற்பாடகம், பூவந்திப்பழம், வசம்பு, பெருங்காயம், கத்தரிப்பட்டை வகைக்கு 1 கழஞ்சு இவைகளை மைபோலரைத்துப் போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சிக் காலை, மாலை துட்டெடை பத்து நாளைக்கு ஒவ்வொரு வேளை புளி, இறைச்சி, கரப்பான் பண்டங்களைத் தள்ளிக்கொடுக்க சகல கணங்களும் தீரும்.

11. நீர்முள்ளி, ஈருள்ளி, திரிபலை, சங்கம்வேர், ஒரு நிறையாய் ஒரு படி மோரில்போட்டு அரைக்கால் படியாய் வற்ற வைத்து இரும்புப் பாத்திரத்தில் ஊற்றி வைத்துக் கொண்டு ஒரு சங்கு இரண்டு தினங்கள் கொடுக்கத் தீராத கணமும் தீரும்.

12. செப்புநெருஞ்சில், சிறுபுள்ளடி, சிறுஅம்மான் பச்சரிசி, தகரைவேர், நரிப்பயற்றங்கொடி, அகத்திப்பட்டை, வெங்காயம், வகைக்குக் கழற்சிக்காய் அளவு அரைத்து அரைக்காற்படி விளக்கெண்ணெயில் போட்டுச் சூரியபுடம் வைத்து ஒரு துட்டெடை கொடுக்கச் சகல கணங்களும் தீரும்.

கணத்தினால் இரத்தம் விழுதலுக்கு மருந்து.

நிலக்குமிழ், எருக்கு, விஷ்ணுகரந்தை, ஆவாரை, கொன்றை இவைகளின் வேர்ப்பட்டை, கணப்பூண்டு, அம்மான் பச்சரிசி, வகைக்கு 1 பலம் மெழுகு போலரைத்து ஒருபடி விளக்கெண்ணெயில் கலந்து பதமாய்க்காய்ச்சி வடித்ததில் ஏலம், அதிமதுரம், சீரகம் வகைக்கு 1 பலம் வறுத்துப்பொடித்துப் போட்டு வேளைக்கு ஒரு காசெடை முலைப்பாலில் கலந்து மூன்று நாள் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

கணச்சூடு தணிய மருந்து

சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, வல்லாரைச்சாறு அரைப் படி, வெந்தயம் 2 பலம், பசுவின் பால் விட்டரைத்துக் கலக்கி பதமாய்க் காய்ச்சி வடித்துச் சர்க்கரை கலந்து கொடுக்கத் தீரும்.

கணஇருமல், வாய்நாற்றத்திற்கு மருந்து

மணித்தக்காளி ஒரு பிடி, வெந்தயம் 1 பலம், ஈருள்ளி மூன்று, ஏலம் ஒரு துட்டெடை, பொன்னிறமாய் வறுத்து இரண்டு படி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி மூன்று வேளைகொடுக்கத் தீரும்.

மாந்தகண பொருமல், இருமல் கபத்திற்கு மருந்து

தூதுவேளை, நாயுருவி, கரிப்பான், (கரிசலாங்கண்ணி) வல்லாரை, தும்பை, நொச்சி, கண்டங்கத்திரி வகைக்கு ¼ படி, சிற்றாமணக்கெண்ணெய் 1 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் திரிகடுகு, திரிபலை, வெள்ளுள்ளி, வசம்பு வகைக்கு 2 வராகன் எடை வீதம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி கொடுக்கத் தீரும்.

பொருமல், மாந்தக் கணத்திற்கு மருந்து

1. *துளசி, செம்முள்ளி, தும்பை, கஞ்சாங்கோரை, தைவேளை இவைகளின் இலை, நற்சீரகம் ஒரு நிறையாய் வெதுப்பிச் சாறுபிழிந்து கொடுக்கத்தீரும்.*

2. சாரணை வேர்ப்பட்டை, தேசாவரம் (கண்டந்திப்பிலி) ஒரு நிறையாய்க் குடிநீர் செய்துகொடுக்க தீரும்.

கணமாந்தம், வயிற்றுளைவு, பொருமலுக்குப் பாலசஞ்சீவி மாத்திரை

வெள்ளைத்துத்தம், வெண்காரம், கோரோசனை, கொழிஞ்சி, கடுகுரோகணி வகைக்கு 3 கழஞ்சு; அகத்தியிலைச் சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்துச் சிறுபயறு போலுருண்டை செய்து வெந்நீரிலாவது முலைப்பாலிலாவது ஒரு உருண்டை கொடுக்கத் தீரும்.

தெற்கத்திக் கணமாந்தம், போர் மாந்தத்திற்கு மருந்து

1. வசம்பு, ஓமம், வெள்ளுள்ளி, காயம், வகைக்கு ¼ பலம் தூள்செய்து அரைப்படி வேப்பண்ணெயில் போட்டு ஒரு நாழிகை கொதிக்க வைத்து ஆறு நாள் பரிதிப்புடம் (ரவிப்புடம்) வைத்துக் குழந்தைகள் நிதானங்கண்டு கொடுக்கத் தீரும்.
2. வேப்பெண்ணெய் அரைப்படி, வேலிப்பருத்தி, குப்பைமேனி, வெள்ளெருக்கம் பழுப்பு இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, வெள்ளெருக்கு, நொச்சி, முருங்கை, இவைகளின் பட்டை வகைக்கொருபிடி, ஒருதலைப்பூண்டு 1 பலம் வசம்பு, அரத்தை 1 வராகன் எடை இவைகளைத் தட்டி ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கரண்டி வீதம் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

விரணத்துக்கு மருந்து

உள்ளி, வசம்பு, ஓமம், அதிமதுரம், கோட்டம், கிராம்பு, சுக்கு, மிளகு, ஏலம், கூத்தங்குதம்பைவேர் வகைக்கு 1 வராகன் எடை பொடித்து விளக்கெண்ணெயில் போட்டுப் பரிதிப் புடம் வைத்துச் சிறு கரண்டி வீதம் கொள்ளத் தீரும்.

கணக்கடுப்புக்கு மருந்து

ஆமணக்கெண்ணெயும் நிம்பச்சாறும் சமன்கலந்து அதில் வெந்தயத்தை அரைத்துப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

இரத்தக்கடுப்பு, அடிபுறப்பட்டதற்கு மருந்து

1. கச்சந்திராய்வேர்,. பொன்னாங்காணிவேர், சாரணைவேர், துத்திவேர் வகைக்கு 1 வராகன் எடை பூண்டுத் தைலம் விட்டரைத்துக் கொட்டைப் பாக்களவு கொடுக்கத் தீரும்.

2. ஒரு படி ஆவின் பாலில் ஒரு பலம் வெந்தயம் போட்டு வேகவைத்திறக்கி வெல்லமும் நெய்யும் விட்டுக்கிண்டி காலை, மாலை கொடுக்க நீங்கும்.

இரத்தம், சீதக்கடுப்பு, பலவிதக்கழிச்சலுக்கு மருந்து

எருக்கம்பட்டை, ஈருள்ளி, பருத்திப்பிஞ்சு இவைகளை ஓரளவாய்ச் சாறுப்பிழிந்து அதிமதுரம், குப்பைக்கீரைவேர், வெள்ளைக்கருடன்கிழங்கு, மாதுளைப்பிஞ்சு, சீரகம், இவைகளைச் சமனாய் அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

இரத்தம், சீதக்கடுப்பு, நீர்ச்சுருக்குக்கு மருந்து

இளந்தென்னம் பூவை இடித்துப் பிழிந்தசாறு, தயிர் வகைக்கு 1/8 படி, எலுமிச்சம் பழச்சாறு ஒரு பலம் ஒன்றாய்க் கலந்து புளிதள்ளி மூன்று நாள் காலை, மாலை உட்கொள்ள நீங்கும்.

கிராணிக் கடுப்புக்கு மருந்து

1. எலுமிச்சம் பழச்சாற்றில் வெந்தயத்தை வேகவைத்து உண்ண நீங்கும்

2. கோரோசனை, செண்பகப்பூ, கோட்டம், வெட்டிவேர், ஏலம், அதிமதுரம், சாத்திரபேதி, மாசிப்பச்சை, தான்றிக்காய், வகைக்கு ¼ வராகன் எடை வெட்டிவேர்க்கியாழத்திலும் முலைப்பாலிலும் அரைத்து உருண்டை செய்து மேற்படி பாலில் கொடுக்க மேற்படி கடுப்புமாந்தம், சன்னிக்கழிச்சல், பிரளி, குடற்புரட்டல், வாதபித்தசுரம், உட்டிணம் நீங்கும். இதன் பேர் அமிர்தாதியுருண்டை.

ஆமக்கடுப்புக்கு மருந்து

பருத்திவிரைப்பருப்பு, சாதிக்காய், நன்னாரிவேர், வட்டத் திருப்பி, சீரகம், கிராம்பு, ஒரு நிறையாய் அரைத்துச் சிறு புள்ளடிச் சாற்றில் கலக்கிக் கொதிக்க வைத்துக் கொடுக்கத் தீரும்.

இரத்தக்கடுப்புக்கு மருந்து

விளாம்பிசினும் உள்ளியும், அரைத்துத் தயிரில் கொடுக்க நீங்கும்.

சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கப்பட்டை, கிராம்பு, மல்லி, கோட்டம், கோரோசனை, சண்பகப்பூ, கார்கோலரிசி, அதிமதுரம், சீரகம், இலவங்கப்பத்திரி, செங்கழுநீர்க்கிழங்கு, ஏலம், வகைக்கு ¼ பலம், விளக்கெண்ணெய் 18 பலம், ஆவின் நெய் 10 பலம், நல்லெண்ணெய் 3 பலம் முருங்கையிலைச் சாறு 16 பலம் மேற்படி மருந்துகளை அரைத்து ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து ஒரு சங்கு வீதம் மூன்று நாள் கொடுக்க உதிரகணமும் இரத்தக் கடுப்பும் தீரும்.

சீழ்மூலத்திற்கு மருந்து

செந்நாயுருவியிலை ஒரு பிடி, நல்லெண்ணெய் ¼ படி கற்றாழஞ் சோறு, சர்க்கரை இவையெல்லாம் ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக் கொடுக்க நிற்கும்.

இரத்தமூலம், வறட்கண ஊதுமாந்தத்திற்கு மருந்து

சாதிக்காய், மாசிக்காய், கிராம்பு, கோரோசனை, சீரகம், பூதிக்காய், (பூந்திக்கொட்டை) திப்பிலி இவைகளை ஒரு நிறையாய் முலைப்பால் விட்டரைத்து மிளகு அளவு உருண்டை செய்து உலர்த்தி மேற்படி பாலில் கொடுக்க நீங்கும்.

அடித் தள்ளினதற்கு மருந்து

1. கரிசலாங்கண்ணியும் பழம் புளியும் ஓர் எடையாய் அரைத்துப் புன்னைக்காய் அளவு எட்டு நாள் கொடுக்கத் தீரும்.

2. தூய்மைசெய்த கஞ்சா 1 துட்டெடை (21 மிளகு), 21 பூண்டு அரைத்துக் குன்றிபோல் உருட்டிப் பருத்தியிலைச் சாற்றிலாவது மாதுளம்பிஞ்சுச் சாற்றிலாவது இடத்தீரும்.

3. ஒருதலை வெள்ளைப்பூண்டு, வசம்பு, வகைக்கு 3 வராகன் எடை, வீழி, பொடுதலை, சிறுபுள்ளடி, வகைக்கொரு பிடி தட்டிக் கால்படி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி மூன்று போது கரண்டி வீதம்கொடுக்கத் தீரும்.

4. இஞ்சியை மேற்றோல் சீவித் துவாரமிட்டு அதில் ஒரு வராகன் எடை பெருங்காயத்தைப் பொதிந்து மூடி நூல்கட்டித் தயிரில் வேகவைத்து எடுத்துரைத்து வேறே தயிரில் கொடுக்கத் திரும்; இவைகளுக்கெல்லாம் இச்சாபத்தியம்.

முக்கல் வயிற்றுக்கடுப்பின் இயல்பு

முக்கலுடன் அபானங்கடுத்து சீதரத்தமும்விழும்; தாது வற்றும்; தாகங்காணும்; அன்னம் செல்லாது.

மருத்துவம்:

1. பருத்திப்பிஞ்சு, சாதிக்காய், கிராம்பு, அதிவிடையம், அரத்தை, அசமதாகம், இலந்தை, தம்பலம் ஒரு நிறையாய் அரைத்துக் கட்டித் தயிரில் கலந்துண்ணத் தீரும்.
2. ஒரு படி விளக்கெண்ணெயில் வெந்தயம், நிலக்குமிழ் வேர்ப்பட்டை வகைக்கு ஓர் பலம் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க உறுப்பு மூலக்கடுப்பு நீங்கும்.
3. புழுங்கலரிசி, வெல்லம், கவுதும்பை, வகைக்கொரு நாரத் தங்காய் அளவு அரைத்து நல்லெண்ணெயில் வேகவைத்து மூன்று நாள் சாப்பிட கடுப்புக் கிராணி, முக்கல் நீங்கும்.
4. ஒரு சிரங்கை எருமைத்தயிரில் ஒருகாசெடை வருடம் சென்ற அவரையிலைச்சாறாவது அல்லது மிளகு தக்காளி யிலைச் சாறாவது பிழிந்துகொடுக்க நீங்கும்.

5. பசுவின்பாலில் பருத்திப் பிஞ்சும் சீரகமும் அரைத்துக் கொடுக்க நீங்கும்.

6. ஓதியம்பட்டையைப் பசும்பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

7. ஆல், அத்தி, ஆவாரை, விடத்தலை, கருவேல், நாவல் இவைகளின் பட்டையும் கொழுந்தும் தென்னமொக்கும் ஒரு நிறையாய்க் கியாழம் வைத்துச் சீரகம், அதிவிடையம், மாசிக்காய், கிராம்பு, சாதிக்காய் இவைகளை இளவறுப்புச் செய்து விளாம்பிசினில் கூட்டிப் பொடித்துக் கியாழத்தில் போட்டுக் கொடுக்க நீங்கும். இவைகளுக்கு இச்சா பத்தியம்.

மூலரத்தகணம், நச்சுக்கணம், மாந்தத்திற்கு எண்ணெய்

விளக்கெண்ணெய் 1 படி, கற்றாழை, எலுமிச்சம்பழம் ஈருள்ளி இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, ஆவின் நெய் அரைப்படி, ஒன்றாய்க் கலந்ததில் கோட்டம், அதிமதுரம், செண்பகப்பூ, ஏலம், சன்னலவங்கப்பட்டை வகைக்கு ¼ பலம், வெந்தயம் 1 பலம் பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி நிறையக் கொடுக்க நீங்கும். இச்சாபத்தியம்.

இரத்த கணத்தின் இயல்பு

குழந்தை அடிக்கடி இருமும்; கழிச்சல், இரத்தக்கடுப்புக் காணும்; இடுப்பும் தொடையும் உளையும்; சுரம் காயும்; தாகிக்கும் படியயரும்; உடல் வாடும்; அன்னம் செல்லாது.

மருத்துவம்:-

1. வில்வவேர், கருவேலங்கொழுந்து, கிராம்பு, நிம்பவிதை, நற்சீரகம்பூ, ஆவாரம், ஏலரிசி, சாதிபத்திரி, சாதிக்காய், ஓரளவாய்க்கூட்டி அரைத்துச் சிறு கொட்டைப் பாக்களவு தாய்ப்பாலில் கொடுக்க இரத்தகணம் மூலகணம், பெருங் கழிச்சல் நீங்கும்.

2. செங்கழுநீர்க்கிழங்கு, சீரகம், ஏலம், சண்பகப்பூ, அதிமதுரம், கோட்டம், கோரோசனை, செண்பகப்பூ, கார்கோலரிசி, இலவங்கப்பத்திரி, சீரகம், செங்கழுநீர், ஏலம் வகைக்கு ¼ பலம் இவைகளைப்பொடித்து ஆமணக்கெண்ணெய் 1 ¼ பலம், பசுவின் வெண்ணெய் 3 பலம், நல்லெண்ணெய் 3 பலம், முருங்கையிலைச் சாறு 16 பலம் இவைகளை ஒன்றாய்கலந்து மெழுகுபதமாய் வடித்து ஒரு பலம் வீதம் மூன்று நாள் கொள்ள நீங்கும்.

3. விளக்கெண்ணெய் ¼ படி, கழுவினகற்றாழஞ்சோறு ஒரு விளாங்காய் அளவு, 2 பேய்க்குமட்டிக்காய், ஈருள்ளி 2 பலம் இவைகளைத் தட்டிப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து வாரத்தில் இரண்டு விசை ஒரு துட்டெடை கொடுக்க நீங்கும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

சுழிகணம், வறட்கணம், ஊதுமாந்தகணம், இரத்தகணம் ஆகிய நோய்க்கு எண்ணெய்

செப்புநெருஞ்சில், தகரை, பழம்பாசி (நிலத்துத்தி), ஓரிலைத் தாமரை, நன்னாரி, சங்கு, நொச்சி, சாரணை, ஆடாதோடை, சிறு வழுதலை, இம்பூரல், பற்பாடகம், கற்றாழை, நாயுருவி, சங்கங்குப்பி, வேலிப்பருத்தி, சீரகம், செங்கழு நீர், மூக்குரட்டி, சிற்றாமுட்டி, தூதுவேளை, கண்டங்கத்திரி, மிளகுதக்காளி இவைகளின் வேர்வகைக்கு ¼ பலம்; மிளகுதக்காளி, வல்லாரை, கரிப்பான், துளசி, செம்முள்ளி, வில்வப்பத்திரி, அகத்தி, முசுமுசுக்கை, முடக்கொத்தான், சங்கு, விஷ்ணுகரந்தை, கருவேல், தகரை, வெதுப்படக்கி, பேய்மருட்டி இவைகளின் சாறு வகைக்கு 1/16 படி (மாகாணி), திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், கடுகுரோகணி, வசம்பு, சீரகம், மாசிக்காய், அரத்தை வகைக்கு 3 வராகன் எடை; திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், தேசாவரம் (கண்டந்திப்பிலி), ஓமம், கருஞ்சீரகம், கடுக்காய், கிராம்பு, சாதிக்காய், வகைக்கு ஒரு வராகன் எடை, பூண்டு 5 வராகன் எடை, ஈருள்ளி 2 பலம், இவைகளை எல்லாம் அரைத்து ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு மேற்படி சாறு வகைகளையும் கலந்து பதமாய்க் காய்ச்சிக்

கொண்டு மாதமொன்றுக்கு மூன்று வேளை கொடுத்து உப்பு, புளி தள்ளிக் கடும் பத்தியமாயிருக்க நீங்கும்.

சகலகணம், பிரளிக்குச் சஞ்சீவி எண்ணெய்

விளக்கெண்ணெய் 1 படி, அவுரி, வேலிப்பருத்தி, முடக்கொத்தான், தும்பை, கவுதும்பை, சடைச்சி, பெருந்தும்பை, கிரந்தி நாயகம், செம்முள்ளி இவைகளின் சாறு வகைக்கு ¼ படி; புளியம் பிரண்டைக்கிழங்கு, கொல்லன்கோவைக் கிழங்கு (கருடன் கிழங்கு), பலபிள்ளைக்கிழங்கு (தண்ணீர் விட்டான் கிழங்கு), பூண்டு, ஈருள்ளி, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், சீரகம், வசம்பு இவைகளை வகைக்கொரு எலுமிச்சங்காய் அளவு அரைத்து போட்டு ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து ஒரு சங்கு கொடுக்க சகல பிரளிக்கணமும் நீங்கும். இச்சாபத்தியம்.

சுழிக் கணத்திற்குக் குடிநீர்

கற்கடகசிங்கி, சீந்திற்கொடி, நற்சீரகம், வில்வவேர், அதிவிடையம், கடுகுரோகணி, கண்டங்கத்திரிவேர், முசுமுசுக்கை, செம்முள்ளிவேர், தூதுவேளைவேர், திப்பிலி வகைக்கு 1/4 பலம் இடித்துப் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

கரப்பன் வகுப்பு

வாதபித்தசிலேத்தும கரப்பன், செங்கரப்பன், கருங் கரப்பன், மண்டைக் கரப்பன், அரி கரப்பன், சொறி கரப்பன், கிரந்திச்சூலைக் கரப்பன், ஊது கரப்பன், அரிசெவ்வாப்பு, வெள்ளிக் கரப்பன், கண்டியொடுவீங்கு கரப்பன், உதிர்கரப்பன், சட்டைதடி, வெடி கரப்பான், சிங்கமுக எரிகரப்பன் ஆக கரப்பன் 18 வகையாம்.

விடவாத கரப்பன் இயல்பு

உடல் வெதும்பும்; உளையும், பரபரென ஊரும்; கை, கால், அரை வயிறு வீங்கி வறண்டு வெடித்துப் புண்ணாகும்.

உத்தமத்தாளி, தழுதாழை, ஓலைத்தகரை, வெள்ளறுகு, நத்தைச்சூரி, நாயுருவி, நாய்க்கடுகு, நன்னாரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறியாநங்கை, தும்பை, வெள்ளெருக்கு, மாவிலிங்கு இவைகளின் வேர் வகைக்கு 5 பலம் (175 கிராம்) வீதம்

இடித்துப் பத்துப் படி தண்ணீரில்போட்டு எட்டுக் கொன்றாய் வற்ற வைத்ததில் தேங்காய்ப்பால், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 1 படி விட்டு கோரோசனை, பஞ்சலவணம், திரிகடுகு, திரிபலை, முத்தக்காசு, பேரீச்சங்காய்கொடி, முந்திரிப்பழம், கற்கண்டு வகைக்கு 3 வராகன் எடை (10 ½ கிராம்) பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து வேளைக்கொரு கரண்டி வீதம் கடும்பத்தியமாய் உட்கொள்ள நீங்கும்.

மேல்பூச்சுத் தைலம்:– மிளகு, பூண்டு, வசம்பு, வகைக்கு 2 வராகன் எடை; ஈருள்ளி ½ பலம், நெல்லிமுள்ளி, பூவரசம்பட்டை வகைக்கொருபிடி இவைகளை எல்லாம் ஆடுதீண்டாப்பாளைச் சாற்றிலாட்டி ¼ படி நல்லெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துப் புண்ணில்போட நீங்கும்.

வாத கரப்பன் இயல்பு

உடல்கனத்து வெளுத்துப் பிரண்டைபோல் தடித்துக் கட்டும்; கண் சிவக்கும்.

மருத்துவம்:–

1. பூதகரப்பன்பட்டை, பூவரசம்பட்டை, நுணாவேர்ப்பட்டை, இலுப்பைக்கட்டி, இவைகளை ஒரு நிறையாய்ச் சுட்டுச் சாம்பலாக்கி நல்லெண்ணெயில் குழைத்துத் தடிப்பின்மேல் தடவ மாறும்.
2. கொன்றைக் கொழுந்தை அரைத்துத் தடவ மாறும்.
3. புங்கு, ஆடாதோடை, நாய்வேளை, சங்கு இவைகளின் வேர் வகைக்கு ஒரு பிடி, வசம்பு, உள்ளி, கருஞ்சீரகம், நற்சீரகம், வெளிச்சிப்பிசின் (விளாம்பிசின்), கடுக்காய், பொடுதலைக்காய், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு வராகன் எடை, ஈருள்ளி 10 பலம் இவைகளைப் பொடித்து ஒரு படி விளக்கெண்ணெயில்போட்டுச் சங்கங்குப்பிச் சாறு 1 படி கூடவிட்டுப் பரிதிப்புடம் (ரவிப்புடம்) வைத்து ஒரு காசளவாய்க்கொடுக்கக் கரப்பன், கருப்பத்தில் ஒட்டிய கருங்கிரத்தி, செங்கிரந்தி நீங்கும்.

விளக்கெண்ணெய், பூவரசம்பூ, வெங்காயம் இடித்துப் பிழிந்தசாறு, மணத்தக்காளிச்சாறு வகைக்கு ¼ படி; குமரிச்

சாறு 1/8 படி இவைகளைக் கலந்ததில் கருவாப்பட்டை, ஏ ்ம், சிவதைவேர், பூதகரப்பன் பட்டை வகைக்கு 1 வராகன் டை (3 ½ கிராம்) அரைத்துப் போட்டுக் கடுகு பதமாய்க் ாய்ச்சி ஒரு துட்டெடை மூன்று வேளை கொடுத்து மேலெங்கும் கடுகைப்பூசிவர நீங்கும்; கரப்பன் பண்டந்தள்ளி இச்சாபத்தியம்.

பித்த கரப்பன் இயல்பு

உடம்பிற்றினவு, காய்ச்சல், தலைவலி, வாந்தி காணும்; நீர் சிவந்திறங்கும், மலம் சிக்கும்.

மருத்துவம்:- கொடிவேலி, குறிஞ்சா, குளப்பாலை, சிவனார்வேம்பு இவைகளின் வேர், பெருமரத்துப்பட்டை, வெள்ளறுகு, மிளகு, கருவேப்பீர்க்கு, செங்கத்தாரிப்பட்டை இவைகளை ஒரு நிறையாய் இடித்துத் தண்ணீரில் போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கத் தீரும்.

மேற்படி மருந்துகளை இடித்து வடிகட்டி அணுத்தூளாகச் செய்து திரிகடி அளவு வெந்நீரில் கொடுக்கத் தீரும்.

கருநொச்சியிலை, ஏறழிஞ்சிப்பட்டை, விஷ்ணுகரந்தை, சிறு சின்னியிலை, சாணாக்கிக்கீரை, சிற்றாமணக்கின்வேர், ஈருள்ளி, சுட்ட வசம்பு, கடுகுரோகணி இவைகளைச் சம எடையாகத் தட்டிக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

செங்கத்தாரிப்பட்டை, சின்னியிலை, சிறு குறிஞ்சாவேர், மிளகு இவைகளை ஒரு நிறையாய் விளக்கெண்ணெயில் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

வளி அழல் ஐயக் கரப்பன் 18-க்கும் எண்ணெய்

குமரி, கண்டங்கத்திரி, தூதுவேளை, செந்தொட்டி, செம்முள்ளி, கருநொச்சி, இரண்டு குட்டித்தக்காளி, நிலவாகை, கழற்சி, சங்கக்குப்பி, வில்வம், ஈருள்ளி இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, செங்கத்தாரிப்பட்டை, வாதமடக்கி வேர், கடுக்காய் வகைக்கு 2, பலம் கருஞ்சீரகம் 2 வராகன் எடை இவைகளை அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் கொடுக்கத் தீரும்.

சிறுகுறிஞ்சா, மிளகரணை, காட்டுமல்லி, கொடிப்பாலை, நிலவிளா இவைகளின்வேர்; வசம்பு, ஆகாசக்கருடன் கிழங்கு சமன்கூட்டித் தட்டி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சியருந்த சகல கரப்பான்களும் தீரும்.

கரிசாலை, சச்சந்திராய், வேர், கருடக்கொடி, பொரிகாரம், பூதகரப்பன்பட்டை, வசம்பு, உள்ளி ஒரு நிறையாய்த்தட்டி விளக் கெண்ணெயில் போட்டுக்காய்ச்சி அருந்த சகல கரப்பான்களும் தீரும்.

பூவரசு, செங்கத்தாரி, பூதகரப்பான்பட்டை, கண்டங் கத்திரி, நிலவாகை வகைக்கு 12 பலம் நறுக்கிக் கியாழம் இட்டு இறுத்ததில் ஆட்டுப்பால் 1 படி, சிற்றாமணக்கெண்ணெய் 1 படி விட்டு மிளகு, சதகுப்பை, வசம்பு, வலம்புரிக்காய், வெள்ளுள்ளி, பறங்கிப்பட்டை, கார்கோலரிசி, சீரகம் வகைக்கு 2 கழஞ்சு (8 ¾ கி) தாய்ப்பாலில் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்துப் பிள்ளைகட்கு உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கும் பூசிப்பத்தியமாயிருக்கச் சகலகரப்பனும் தீரும்.

வெள்ளைக்காக்கணான், பூதக்கரப்பன்பட்டை, வட்டக் கிலுகிலுப்பை, காட்டுப்பாகல், சங்கு, வெள்ளறுகு இவைகளின் வேர், கருஞ்சீரகம், ஈருள்ளி, சதகுப்பை, தேவதாரம், வசம்பு, சீனப்பட்டை (பறங்கிப்பட்டை) வகைக்கு ¼ பலம்; 200 நேர்வாளவிதை இவைகளை நன்றாய் அரைத்து ஒரு படி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு அதில் ஒரு படி சங்கங் குப்பிச் சாறு விட்டுப் பாகமாகக் காய்ச்சி ஒரு காசெடை உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசிவரச் சகல கரப்பனும் நீங்கும்.

சிற்றாமணக்கெண்ணெய் முக்கால் படி, சிறுசின்னி, முதியோர் கூந்தல், சவுரிக்கொடி, சிறுசெருப்படை, நொச்சி, கிரந்தி நாயகம், சங்கு, மூக்கரைச்சாரணை, வெள்ளறுகு, இவை களின் சாறு வகைக்கு ¼ படி வீதம் கலந்ததில் இருசீரகம், கடுகுரோகணி, பூத கரப்பன்பட்டை, கண்டங்கத்திரி, கஞ்சாங் கோரை, வேம்பாடம் பட்டை, அரத்தை, சுக்கு, பறங்கிப் பட்டை, குமிழ்வேர், வாளம் வகைக்கு அரைப் பலம் வீதம் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி சிறு கரண்டி வீதம் கொடுக்க நீங்கும்.

புங்கம்பூ, புளியமடல்கிழங்கு, நற்சீரகம், வசம்பு, உள்ளி, பாலை, நன்னாரி இவைகளை ஒரு நிறையாய் ஆவின் பாலில் அரைத்து விளக்கெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க நீங்கும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

செங்கரப்பன் இயல்பு

தேகம் மெலியும், சிவக்கும், வெடித்து நீரோடும்; தலைவலி காணும்; நீர் கட்டும்; மரணக்குறிகள் காணும்.

மருத்துவம்:- பசுவின் நெய் ¼ படி; ஆதண்டை, முதியோர் கூந்தல், முருக்கிலை, நெருஞ்சில், முடக்கொத்தான், பூவரசம் பட்டை, ஈருள்ளி வகைக்கு ¼ பலம் தட்டிப்போட்டுக் காய்ச்சிச் சிவந்த பதத்தில் வடித்து ஒரு கரண்டிவீதம் கொள்ள நீங்கும். இச்சாபத்தியம்.

கருங்கரப்பன் இயல்பு

உடல் வெதும்பும்; பசுநரம்பு தோன்றி நிறம் பேதப்படும், தேகம் பரபரத்து முறுக்கிக் குழந்தை துள்ளி அழும்; தாய்ப்பால் உண்ணாது, முகம், கால் ஊறும்.

மருத்துவம்:-மிளகு, துருசு, கடுக்காய், கோட்டம், திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், கஞ்சாங்கோரை, நத்தைசூரி, சிறு அவரை, பெரிய அவரை, சிவனார்வேம்பு, வேலிப்பருத்தி இவற்றின் வேரை ஒரு நிறையாய்த் தட்டி விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுத்தால் 18 கரப்பான்களும் நீங்கும்.

சூலைகரப்பன் இயல்பு

உடலெல்லாம் வெடித்து, முழங்கால் முழங்கையில் சூலை கட்டும்; முகம் வாடும்.

மருத்துவம்:- புங்கு, சங்கு, ஆதண்டை இவைகளின் வேர் அரைத்து வகைக்கொரு எலுமிச்சங்காய் அளவு எடுத்து ஈருள்ளி உழக்கு, கடுகுரோகணி ¼ பலம் முடக்கொத்தான் 1/8 பலம் இவைகளைத்தட்டி ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டுப் பரிதிப்புடம் (சூரியபுடம்) வைத்துண்ண முடக்குச் சூலையும், கரப்பன், சொரி, சிரங்கு நீங்கும். இச்சாபத்தியம்.

ஊது கரப்பன் இயல்பு

குளிர்காய்ச்சல், கழலைக்கட்டி காணும்; நாள்தோறும் பூதம் போல் உடல் வீங்கும்; புண்ணாகும், முகங்கரிக்கும்.

மருத்துவம்:- அகத்தி, கற்பூரவள்ளி, அவுரி, வெள்ளறுகு, ஆடாதோடை, மணத்தக்காளி, ஆவாரை, சங்கங்குப்பி, நிலக் கடம்பு, கிரந்திநாயகம்,நொச்சி முருக்கு, ஈருள்ளி வகைக்குச் சாறு ¼ படி, விளக்கெண்ணெய் 1 படி, மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சிவதை, கடுகுரோகணி, கருஞ்சீரகம், திரிகடுகு, திரிபாலை வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்) அரைத்து, கரைத்துப் பதமாய்க் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் மூன்று நாள் கொள்ள ஊதுகரப்பன் முதல் 18 கரப்பனும் தீரும்.

பால் கரப்பன் இயல்பு

உடல் மெலியும்; சந்து கால்கடுக்கும்; கண்டம் வெடித்துப் புண்ணாகிக் கடி நஞ்சு போல் நீர்பாய்ந்து நாறும்.

வேறு: உடல்மெலியும்; பரபரத்துச் சொறிமேலாகிச் சாரை உடல்போல் காணும்; புண்ணில் நச்சுநீர் உதிரம் (இரத்தம்) போல் வடியும்; குலை வற்றித் திருவழியும்.

மருத்துவம்:- பூவரசம்பட்டைச்சாறு விளக்கெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கடுகு பதத்தில் கருஞ்சீரகம், நற்சீரகம், கார்க்கோலரிசி, இலவங்கம், சடாமாஞ்சில், கரிசாலை, நுணாவேர் வகைக்கு ¼ பங்கு நிழலில் உலர்த்திப் பொடித்துப் போட்டுக் கிண்டி நெய் பதமாக்கி இறக்கி வடித்து ஒரு கரண்டி வீதம் கொடுத்துக் கடுகை மேலில் பூசத் தீரும். கரப்பன் பண்டம் தள்ளிப் பத்தியங் கொள்ளவும்.

அரிகரப்பன் இயல்பு

அல்குல், லிங்க முதலான உறுப்புகளில் பதைப்பாகி (வேர்க்காடு) புண்படரும்; ஆறாமல் தசையை அறுத்து உருவை அழிக்கும்.

மருத்துவம்:- ஆரை, கொட்டைக்கரந்தை, செருப்படை, கரிசாலை, பொன்னாங்காணி, பேய்மிரட்டி, சிறுகீரை, வட்டத்

திருப்பி, தொட்டி (இண்டங்கொழுந்து) இவைகளின் வேர், நீலி, கோடகசாலை, மிளகரணை, வேலிப்பருத்தி, பெருங்கிளா இவைகளின் வேர்ப்பட்டை, வசம்பு, பசரியிலை வகைக்கு ½ பலம் இவைகளை இடித்துக் கால்படி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் ஏழுநாள் கொள்ள அரிகரப்பன், செங்கரப்பன், கருங்கரப்பன் முதலான 12 வகைக் கரப்பனும் தீரும்.

எருக்கு, மருக்கு (மருக்கொழுந்து), மருக்காரை, வட்டக் கிலுகிலுப்பை, வேலிப்பருத்தி இவைகளின் வேர்ப்பட்டை; கடுக்காய், பூண்டு வகைக்கு ஒரு பலம் நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி மூன்றுநாள் புண்ணின்மேல் தடவத்தீரும். இச்சாபத்தியம் (மருக்கு என்பதை மிளகு என்பாரும் உண்டு).

வறட்சிக் கரப்பன் இயல்பு

உச்சி முதல் உள்ளங்கால் வரையில், சிரங்கு மிகுந்தும் வெடித்துத் தினவும் சொறியும் காணும்; நித்திரை வராது.

மருத்துவம்:–

1. தூதுளைவேர், இலைத்தாமரை (ஆகாசத் தாமரை), வெள்ளெருக்கு, கொடிவேலி, நீலி இவைகளின் வேர்; கருஞ்சீரகம், கந்தகம், கார்க்கோலரிசி, ஓமம், சீரகம் வகைக்கு கால் பலம் அரைத்து ஆமணக்கெண்ணெய் அரைப் படியில் கலக்கிக் காய்ச்சி வடிகட்டி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் தடவத் தீரும்.

2. புங்கங்கொட்டை, மரமஞ்சள், வேம்பாடம்பட்டை, அவுரி வேர், துருசு, கந்தகம், தாளகம், வகைக்குக் கால் பலமாகப் பொடித்துக் கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி உடம்பில் காலையில் தடவி, மாலையில் அரைப்பிட்டுக் குளிக்கத் தீரும்.

3. சிறுசின்னிச்சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி, ஒன்றாய்க் கலந்ததில் மிளகு, செங்கத்தாரிப்பட்டை, சிறு குறிஞ்சான்வேர்ப் பட்டை வகைக்கு 5 வராகன் எடை

(17 ½ கிராம்) அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி உள்ளுக்கு ½ தேக்கரண்டி அளவு கொடுக்கத் தீரும்.

4. அவித்தூற்றின சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, கற்பூர வள்ளி, சிறுசெருப்படை, நரிமிரட்டி, வெங்காயம், இவைகளின் சாறு வகைக்கு 1 படி, இவைகளை ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து ஒரு சங்கு வீதம் குழந்தைகளுக்கு உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசிவரத் தீரும்.

சொறிசிரங்குக்கு மருத்துவம்

பூவரசம்பட்டையில் நீராகாரத் தண்ணீர் விட்டு இடித்துச் சாறு பிழிந்து அதில் அரைக்கால்படி வீதம் காலையில் மட்டும் 3 நாள்கள் உப்பு, புளி நீக்கிச் சாப்பிட்டுக் கந்தகம், சித்திரமூல வேர்ப்பட்டை வகைக்குக் கால் பலம் வீதம் அரைத்துக் கால்படி நல்லெண்ணெயில் போட்டு வேகவைத்துக் காலையில் உடம்பில் தடவி மாலையில் அரைப்புத் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்ய நீங்கும்.

ஏலம், மிளகு, கார்க்கோலரிசி, கெந்தகம், சூடன், பிராய்ப் பட்டை வகைக்கு ஒரு வராகன் எடை வீதம் பொடித்து அரைக்கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி உடம்பில் காலையில் தடவி மாலையில் அரைப்பிட்டுக் குளிக்க நீங்கும்.

பேய்ச்சொறிக்கு மருந்து

இந்துப்பைப் பொடித்து நெய்யில் போட்டு வெய்யிலில் வைத்து உடம்பில் பூசிவைத்திருந்து மறுநாள் முழுக நீங்கும்.

சிந்தில்கொடி, வேப்பம்பட்டை, பேய்ப்புடல் வகைக்கு 10 பலம் இடித்து தூணி (எட்டுபடி), நீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து அதில் பசுவின் நெய் 1 படி கூட விட்டுத் திரிபலை, செஞ்சந்தனம், மரமஞ்சள், விலாமிச்சம் வேர், தக்கோலம், கோட்டம், தேவதாரம், மஞ்சள் வகைக்கு 2 வராகன் எடை அரைத்துப்போட்டு மூன்றுநாள் வரை உமிக் காந்தலில் வைத்து நான்காம் நாள் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒரு வேளைக்கு இரண்டு காசெடை நெய் வீதம் உட்கொள்ள நீங்கும். இச்சாபத்தியம்.

காட்டுச்சீரகம், கார்க்கோலரிசி, கத்தூரிமஞ்சள், ஏலம், கடுக்காய், நீரடிமுத்து, சமனெடையாய்ப் பொடித்து அதற்குச் சமன் மிளகுத்தூள் கூட்டி ஊமத்தங்காய்க்குள் அடைத்து ஒன்றரை எரு முட்டையில் புடம்போட்டெடுத்து ஒரு படி தேங்காய் எண்ணெயில் அரைத்துப் போட்டு மூன்றுநாள் சூரியபுடம் வைத்துச் சிரங்கின் மேல் தடவத் தினவு (நமைச்சல்) நீங்கும்.

நீர்வெட்டிமுத்தும், சந்தனமும் ஒரு நிறையாய் அரைத்துச் சிரங்கில் தடவ உதிர்ந்துவிடும்.

வெண்தோன்றிக்கிழங்கும் கெந்தகமும் வகைக்குக் காற்பலம் விகிதம் அரைத்துக் கால்படி நல்லெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையில் சிரங்கில் பூசி வைத்திருந்து மாலையில் இலுப்பை அரைப்பும் வேப்பிலையும் சமனாய் அரைத்து உடம்பில் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்ய நீங்கும்.

காத்தொட்டி (ஆதண்டை) இலைச்சாறும் நல்லெண்ணெயும் வகைக்குக் காற்படி வீதம்கலந்து அதில் தூய்மை செய்த கெவுரி 1 வராகன் எடை பொடித்துப் போட்டுத் தலைமுழுக்குச் செய்ய நீங்கும்.

சகல கரப்பன், சிரங்கு முதலியவற்றிற்கு மேல்பூச்சுத் தைலம்

விடத்தலை, (விடத்தேர்), இலைக்கள்ளி திருகுக்கள்ளி, சதுரகள்ளி, மாவிலங்கு, சங்கு, தாழை, கொம்மட்டி, குப்பை மேனி, அவுரி, பொடுதலை, நிலக்கடம்பு, ஆமணக்கு, இண்டு, எருமையின் ஆட்டாக்கொடி, நொச்சி இவைகளின் சாறு, நல்லெண்ணெய் வகைக்கு ¼ படி வீதம், கலந்ததில் சீரகம் 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் பூச நீங்கும்.

சிரங்கு புண்ணுக்குக் களிம்பு

துருசு, கெந்தகம், குங்கிலியம், இவைகளை ஒரு நிறையாய் விளக்கெண்ணெயில் அரைத்துப் போட நீங்கும்.

வாதகரப்பன் வீக்கத்துக்கு மருந்து

மூக்கரைச்சாரணைவேர், இந்துப்பு, கடுக்காய், மாச்சுக்கு ஒரு நிறையாய்த் தட்டிப்போட்டுக் குடிநீர் செய்து சங்களவு குடிக்க நீங்கும்.

தூதுளை, சங்கு, சுரைக்கொடி, சிறுநெருஞ்சில், நீர்முள்ளி, ஈருள்ளி, இவைகளை ஒரு நிறையாய்க் கியாழஞ்செய்து அதில் வெண்காரத்தைப் பொரித்துப் போட்டுக் கொடுக்க நீங்கும்.

ஈருள்ளியை இடித்துச் சாறுபிழிந்து அதில் நவாச்சாரம், இந்துப்பு, சீரகம், வெண்காரம் இவைகளைப் பொடித்துப் போட்டுக் கொடுக்க நீங்கும். மலசலம் வெளிப்பட்டு வீக்கம் வற்றும்.

மேற்படி மூவகை உப்பையும் (நவாச்சாரம், வெங்காரம், இந்துப்பு) பொடித்துக் கோசலத்தில் கலக்கி வடிகட்டிக் கொடுக்க நீங்கும்.

மாந்தம், செவ்வாப்பு கரப்பனுக்கு மருந்து

சாதிலிங்கம், கற்பூரம், ஏலம், பூங்காவி வகைக்கு ¼ பலம் கோதுமைக் கஞ்சிவார்த்து இரண்டுசாமம் மைபோலாட்டிப் பயறுபோல் உருண்டை செய்துகொண்டு இரண்டு வயதுப் பிள்ளைக்குச் சோற்றிலும் அதற்குட்பட்ட குழந்தைகட்கு மாசிப்பத்திரிக் கியாழத்திலும் கொடுக்க நீங்கும்.

சிறுசிரங்கு, சொறி சிரங்கு இவைகட்கு மருந்து

1. கொடிக்கள்ளியை வாட்டிச் சாறுபிழிந்து வயதுக்கும் பலத்துக்கும் தக்கபடி கொடுக்க நீங்கும்.
2. ஒரு படி தேங்காய்ப்பாலில் துருசு, அரிதாரம், கெந்தி வகைக்கு இரு கழஞ்சு அரைத்துப்போட்டு காய்ச்சி நெய் வடித்துக் காலையில் உடம்பில் பூசி மாலையில் அரைப்பிட்டுக் குளிக்க நீங்கும்.

காற்கடுவன், மண்டைக்கடுவனுக்கு மருந்து

1. மேற்படி வியாதி காலிலும் தலையிலும் கண்டிருந்தால் அதை முறையே காற்கடுவன், மண்டைக்கடுவன் என்பர்.

ஆமணக்கு இலையை இரவில் கட்டிக் காலையில் அவிழ்த்துச் சலத்தால் கழுவியபின் அப்புண்ணில் தேங்காய் எண்ணெயைத் தடவி அதன்மேல் சங்கிலையை (உலர்ந்தது) நசுக்கிப் பொடித்து இடத் தீரும்.

2. இலுப்பைப்பட்டை, பாவட்டை, சதுரக்கள்ளிப்பட்டை, வெங்காயம், வசம்பு நறுக்கி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி உட்கொள்ள நீங்கும்.

சிரங்கு, சொறிகரப்பன், ஆறாப்புண்களுக்கு மருந்து

1. அரிதாரம் ¼ பலம், 20 சேங்கொட்டை இவைகளை நறுக்கி ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிச் சேங்கொட்டைவெடிக்கும் பதத்தில் இறக்கி வடித்து உடம்பில் தேய்த்து மாலையில் அரைப்பிட்டுக் குளிக்க நீங்கும்.

2. கல்லுப்பு, இருமஞ்சள், மிளகு, கருஞ்சீரகம் வகைக்கு ¼ பலம் விகிதம்பொடித்து 2 படி தேங்காய்ப் பாலில்போட்டுக் காய்ச்சி நெய் வடித்து உடம்பில்பூசி மாலையில் அரைப்பிட்டுத் தலைமுழுக்கு செய்துவர நீங்கும்.

கரப்பனுக்கு எண்ணெய்

செங்கத்தாரி, கருநொச்சி, முடக்கொத்தான், கழற்சி, புங்கு, சங்கங்குப்பி, கிரந்திநாயகம், சிறுசெருப்படை, சிறுசின்னி, முதியோர்கூந்தல், உத்தாமணி, கொடிவேலி, வெள்ளறுக்கு, வேம்பாடம் பட்டை, சிவனார்வேம்பு, சிவதை, கண்டங்கத்திரி, பூதகரப்பன் பட்டை, சீரகம், கருஞ்சீரகம் இவையெல்லாம் ஒரு நிறையாய் விளக்கெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்க படை, கரப்பன், கொள்ளிக்கரப்பன், வீங்குகரப்பன், அரிகரப்பன் நீங்கும்.

கபாலக் கரப்பனுக்குத் தைலம்

முத்தக்காசு, தூதுவேளை, காணி, சீதாசெங்கழுநீர், ஓரிலைத் தாமரை, சிவனார்வேம்பு, குப்பைமேனி, சங்கு, மலைதாங்கி, கொன்றை இவைகளின் வேர் வகைக்கு 1 பலம்;

சுக்கு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கருஞ்சீரகம், வசம்பு, உள்ளி, சென்னகரப்பழம், கடுகுரோகணி, வெளிச்சிப்பிசின், அதிமதுரம் வகைக்கு 1 கழஞ்சு இவைகளை ஆவின் பாலில் அரைத்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து உள்ளுக்குச் சாப்பிட்டுத் தலையில் பதமிட்டு முழுகிவர நீங்கும்.

தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு 4 படி, குமரிச்சாறு 1 படி, தூதுளைவேர் 4 பலம், இடித்து 2 படி தண்ணீரில்போட்டு காய்ச்சி வடித்த கியாழம் ¼ படி, நல்லெண்ணெய் 1 படி இவைகளைக் கலந்து அதில் கொடிவேலி வேர்ப்பட்டை, கருஞ் சீரகம், வேம்பாடம்பட்டை வகைக்குக் கழஞ்சு ஒன்றுவீதம் அரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு முழுகிவர நீங்கும்.

கரப்பனுக்கு மேற்பூச்சுத் தைலம்

வெற்றிலை, மிளகுத்தக்காளி வகைக்குச்சாறு 1 படி; எருக்கிலை பழுப்பு, வேளை வகைக்குச்சாறு அரைப்படி, நல்லெண்ணெய் 1 படி இவைகளைக் கலந்ததில் சுக்கு, மிளகு, வசம்பு, திப்பிலி வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டு காய்ச்சிக் கரப்பன்பேரில் தடவிவரச் சகல கரப்பனும் நீங்கும்.

முருங்கைப்பூ, எருக்கம்பூ, முத்தெருக்கஞ்செவி, கார்த்திகைக் கிழங்கு தனித்தனி இரண்டு கழஞ்சு அரைத்து அரைப்படி ஆவின் நெய்யில்போட்டுச் சிவந்த பதத்தில் காய்ச்சி வடித்துக் கண்டத்திற்குக் கீழ்ப்பூசி மாலையில் அரைப்பிட்டுத் தலைமுழுக்குச் செய்ய எல்லாவகைக் கரப்பானும் நீங்கும்.

கொள்ளிக் கரப்பனுக்குக் குடித்தைலம்

வெள்ளறுகு, சிவனார்வேம்பு, சங்கங்குப்பி, பொடுதலை (வீழி), கோழியவரை, கரிப்பான், கருநொச்சி, கழற்சி, மஞ்சணாத்தி (நுணா), சிறுசெந்தொட்டி, (சடை சடாமாஞ்சி), தூதுவேளை இவைகளின் சாறு வகைக்கு 1 படி; விளக்கெண்ணெய் 1 நாழி ஒன்றாய்க் கலந்ததில் கருஞ்சீரகம் பலமரை, ஈருள்ளி 1 பலம்; அரைத்துப் போட்டுக் காய்ச்சிக்கொடுக்க நீங்கும். பத்தியமாய் இருக்கவேண்டும்.

சுர வகுப்பு

சுரங்களின் பெயர்கள்

உரைத்தோமே பாலருக்குச் சுரவ குப்பு
உடல்காயும் ஆமசுரம் உறுதி மெத்த,
நிறைந்ததொரு ரத்தசுரம் அன்ப னாகி
நேரான மாங்கிசச் சுரமு மாகும்.
திரைத்துமே அத்திசுரம் வாத பித்தஞ்
சிலேத்தும சுரமென்று செப்ப லாகும்.
மரைத்ததொரு மாந்தசுர முட்சு ரந்தான்
மகாதோட மாந்தசுர மென்ன லாமே
ஆமேதானி ரத்தகண சுரமு மாகும்
அறைத்தகணக் காய்ச்சல்குளிர் சுரமு மந்தம்,
சாமேதான் மால்சுரங் கணக்காச் சலாகுஞ்
சார்வான வாதசுரப் பழஞ்சுர முமாகும்,
தாமேதான் அதிகாரச் சுரமு மாகுங்
கழறினார் வாந்திசுரம் விக்கல் தாகம்,
நாமேதான் சுரவகுப்பு சொன்னோ மப்பா
நவின்றிட்டார் கும்பமுனி நவின்றிட் டாரே.

கணக்காய்ச்சலின் இயல்பு

பாரு முந்தி பகருமா திமுதல்
சாரு மீரல் சதுர்வரைப் புண்ணாகி
ஊரு மேசுர மோங்கித் திகைத்துமே
நேரும் மயக்கம் நிலையா யுரைத்ததே.

[அ. பொ.] *உந்தி = நாபி (கொப்பூழ்); ஈரல் = கல்லீரல் (வலப்புறம்); மண்ணீரல் (இடப்புறம்); ஓங்கி = மிகுத்து.*

உந்தி முதல் ஈரல்வரை புண்ணாகிச் சுரங்காயும், திகைத்து மயக்க முண்டாகும்.

மருத்துவம்:- *(வெண்) பூசணிக்காய், தண்ணீர்விட்டான் கிழங்கு இவற்றின்சாறு, இளநீர், பசும் நெய், பால் வகைக்கு கால் படி; கடுகுரோகணி, செண்பகப்பூ, வெட்டிவேர், பச்சை அதிமதுரம், இலவங்கம், சிற்றாமுட்டி, பேராமுட்டி,*

திப்பிலி, சந்தனம், ஏலம், விலாமிச்சுவேர், மாம்பருப்பு, கோட்டம், விளாம்பிசின், பொன்முசுட்டை வகைக்கொரு காசெடைவீதம், அரைத்துக் கலந்து பதமாய்க்காய்ச்சிக் கொடுக்கக் கணக்காய்ச்சல், உட்சுரம், தடுமன், இருமல் தீரும், உடல் பூரிக்கும்.

புள்ளடி (சிறுசெருப்படி), செப்புநெருஞ்சில், வல்லாரை, பூலா, கோழியவரை, இவைகளின் சாறு வகைக்கு ஒருபடி; ஆமணக்கெண்ணெய் 1 படி; குரோசாணி, கடுகுரோகணி, வெளிச்சிப் பிசின், மாவிலி, புல்லூர் (புல்லாஞ்சி), சடா மாஞ்சில் வகைக்குப பணவெடை பொடித்துக் கலந்து காய்ச்சி ஒரு துட்டெடை கொடுக்கத் தீரும்.

மாசிக்காய், திப்பிலி, ஏலம், கோரோசனை, கோட்டம், சடாமாஞ்சில், கருஞ்சீரகம், அக்கிராகாரம் வகைக்கு 1/4 பலம்; தாய்ப்பாலால் இருசாமம் அரைத்துக் கடலை அளவு உருட்டி மேற்படி பாலில் ஒரு மாத்திரை வீதம் கொடுக்கத் தீரும்.

சங்கு, செருப்படை, துளசி, வறட்பூலா, கழல் (கஜ்ஜக்காய்த் தழை), நரிப்பயறு இவைகளின் சாறு; பசுநெய் வகைக்கு 1 படி; அகப்பைக் கொவ்வை (அப்பக்கோவை), நெருஞ்சில், தூதுவேளை இவைகளைச் சம எடையாக எடுத்து முறைப்படி கியாழம் செய்து வடிகட்டி ½ படி மேற்படி கலவையில் கூட்டிக் கிராம்பு, திப்பிலி, சாதிக்காய், இம்பூரல், வசம்பு, உள்ளி, சுக்கு, கடுக்காய், சிறுதேக்கு வகைக்கு அரைக்கால் பலம் தட்டிப் போட்டுக் காய்ச்சி வடிகட்டி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

நாய்த்துளசி, பழம்பாசி, கணப்பூண்டு, பேய்மிரட்டி, வல்லாரை, தகரை வகைக்கொருபிடி குடிநீர் செய்து வடித்ததில் கருஞ்சீரகம், நற்சீரகம், கோரோசனை வகைக்குக் கால் வராகன் எடை பொடித்துப்போட்டு சங்களவு கொடுக்கக் கணவெப்புத் தீரும்.

உடம்பு நோய், காய்ச்சலின் இயல்பு

உடம்பு நொந்து காயும்; குழந்தை உதட்டைக் கடிக்கும்; கை முட்டியைப் புறக்கப்பிடிக்கும்; நட்டகண்ணை விழிக்கும்; பதட்டமுடன் கொங்கையைக் கடித்திழுக்கும்.

மருத்துவம்:- *சிதேவிப்பூண்டை இடித்துப் பிட்டவித்துச் சாறுபிழிந்ததில் கடுகுரோகணியை அரைத்துக் கலக்கி வெள்ளாட்டுப் பாலில் கடிகை அளவு கலந்துகொடுக்கத் தீரும்.*

உட்காய்ச்சலின் இயல்பு

உட்சுரங்காயும்; வயிறு அபானம் எரியும்; மயக்கம் காணும் மலசலம் தீரும்.

மருத்துவம்: *இளநீரில் அவித்தூற்றின சிற்றாமணக் கெண்ணெய் 1 படி, பசுவின் பால் 2 படி, குமரிச்சாறு ½ படி ஒன்றாய்க் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து அதனுடன் சீரகம், மாசிக்காய், கோட்டம், அதிமதுரம், கிராம்பு, ஏலம், சுக்கு வகைக்கு 1 வராகன் எடை, வெந்தயம் 1 பலம் இவைகளை வறுத்துக் கலந்து சூரியபுடம் வைத்து, கடிகையளவு தூள் கொடுக்கக் காய்ச்சல், உட்காய்ச்சல், மாந்தம், உடம்புவற்றல், நாவறட்சி, நடுக்கல், இருமல் தீரும்.*

கற்றாழஞ்சாறு, இளநீர், பசுவின்பால் வகைக்கு 1 படி, சிற்றாமணக்கெண்ணெய் 3 படி கலந்து காய்ச்சி கணப்பூண்டு, மான்கொம்பு, சந்தனம், ஆமையோடு வகைக்கு 1 பலம் இளநீரால் அரைத்துச் செண்பகப்பூ, சாதிக்காய், நற்சீரகம், அதிமதுரம், சிறுநாகப்பூ, கருஞ்சீரகம், வகைக்கு ½ பலம் இவைகளைப் பசுவின் பாலில் அரைத்து ஒன்றாய்க் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி காலை, மாலை ஒரு துட்டெடை வீதம் ஏழுநாள் கொடுக்க மாந்தகணம், தோடகணம், வறட் கணம், உடம்புமெலிவு, உட்சுரத்தின் காய்ச்சல், உட்சுரம் நீங்கும்.

ஆமசுரத்தின் இயல்பு

சாமந்தோறும் மட்டாய்ச் சுரங்காயும்; குழந்தை சீறியழும்; பால் உண்ணும்; உடல் சுருங்கும்; இளைக்கும், கடுக்கும், தண்ணீர்த்தாகம், தலைவலி காணும்; கை கால் குளிர்ந்திருக்கும்.

மருத்துவம்: *உத்தாமணி, பாவட்டை, சங்கு, நாவெட்டை, முருங்கை, நுணா, பொடுதலை இவைகளின் ஈர்க்கு ஒருபிடி நறுக்கிச் சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர்விட்டு ஓமம்,*

திப்பிலி, வசம்பு ஆமையோடு, கருஞ்சீரகம் ஒரு நிறையா யரைத்துத் துணியில் முடிந்து கூடப்போட்டு வற்றக் காய்ச்சியதில் மேற்படி மருந்துகளை அரைத்துக் கழற்சிக்காய் அளவு மூன்றுவேளை கொடுக்கத் தீரும்.

விளாங்காய் அளவு பசுவெண்ணெயில் உத்தாமணிக் கொழுந்து, வசம்பு, உள்ளி, விளாவோடு, ஓமம், ஆமையோடு வகைக்கு 1 கழஞ்சு வறுத்துப் பொடித்துப்போட்டுக் காய்ச்சிக் கரண்டிநிறை கொடுக்கத் தீரும்.

உத்தாமணி, சங்கு, தூதுவேளை, கொடுப்பை (பொன்னாங் காணி) இவைகளின் வேர் வகைக்கொருபிடி நறுக்கி ஒரு படி நீரில்போட்டு பொடுதலை, ஓமம், திப்பிலி, மிளகு, வசம்பு, உள்ளி, ஆமையோடு வகைக்கு 1 வராகன் எடை சீலையில் முடிந்துபோட்டு வற்றக்காய்ச்சி அதில் மேற்படி மருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

பாவட்டை, கொன்றை, சிற்றாமுட்டி, வேலிப்பருத்தி இவைகளின் வேர்; மிளகு வகைக்கு ½ பலம் தட்டிப் போட்டுக் கியாழஞ் செய்து சங்களவு கொடுக்கத் தீரும். இவைகளுக் கெல்லாம் இச்சாபத்தியம்.

இரத்த சுரத்தின் இயல்பு

வயிற்றுவலி, தாகம்; கழிச்சல்; தலைசுற்றல் காணும்; சுரம் விட்டு விட்டுக்காயும்; கண் தாழும்; நாவுலரும்; கை கால் சோர்ந்து தண்ணீர் போலிருக்கும்.

மருத்துவம்: நாபிக்கிழங்கு, திப்பிலி, வெண்காரம் வகைக்கு 15 வராகன் எடை, சாதிலிங்கம் 10 வராகன் எடை, நிம்பப் பழத்தின் (வேம்பின்பழம்) சாற்றால் இரு சாமமரைத்துக் கடலை அளவு உருண்டை செய்து சுக்குக் குடிநீரில் உட்கொள்ள வெதுப்புத் தீரும். சீரகம், கிராம்புக் கியாழத்தில் கலந்து கொடுக்க தலைச்சுற்றல், சுரம், நீங்கும். ஆல்விழுதின் குடிநீரில் கொள்ளப்பழைய சுரம் நீங்கும்.

அன்னபானாதி சுரத்தின் இயல்பு

வேர்க்கும், வெதுப்பும், கண்சிவக்கும்; பல்காலும் வெந்நீர் வேண்டும் பார்க்கப் பயமாயிருக்குதெனப் பதறி அலறிக் குழந்தை அழும்; வயிறு மங்கிவிடும்; தெருவில் புறப்பட்டோடும்.

மருத்துவம்:

1. கோரோசனை, அதிமதுரம், கோட்டம் விலாமிச்சம்வேர், வெட்டிவேர், ஏலம், செண்பகப்பூ, மாசிப்பச்சை, சாத்திர பேதி இவைகளை ஒரு நிறையாய் தாய்ப்பாலிலாவது வெட்டிவேர்த்தண்டுச் சாற்றிலாவது மைபோலரைத்துக் குன்றிபோல் உருண்டைசெய்து மேற்படி பாலில் உரைத்துக் கொடுக்கத் தீரும்.
2. கற்றாழஞ்சோறு, கடுக்காய், களிப்பாக்கு, கருவேல், பிரமி, சுக்கு, ஒரு படி தண்ணீர்விட்டு நாலிலொன்றாகக்காய்ச்சி அதை ஒரு கரண்டி வீதம் விளக்கெண்ணெயில் கலந்து கொடுக்கச் சீதம், குன்மம், இருமல், நிணக்கழிச்சல் முதலானவைகளுடன் கண்ட சுரங்கள் நீங்கும்.

மாங்கிசச் சுரத்தின் இயல்பு

அதிகமாய்ச் சுரங்காயும்; உடல் நடுங்கும்; மூச்சு மெத்தவோடும்; உதிரம்வற்றி உடல் வெளுத்துருகிக் கருகும்; மூர்ச்சை காணும்; உரோமங்கள் (மயிர்) சிலிர்க்கும்.

மருத்துவம்: பச்சைச்சூடன், கெந்தி, இந்துப்பு, இலவங்கம் சாதிக்காய், சாதிபத்திரி வகைக்கொரு கழஞ்சு; தேசிப்பழச் (எலுமிச்சை) சாற்றில் ஒரு சாமமரைத்து உளுந்தளவு உருண்டை செய்து இஞ்சி, சர்க்கரை கடிகை அளவு சுக்கில்ஊட்ட எச்சுரமும் மூன்றே முக்கால் நாழிகையில் ஓடும்.

என்பு (அஸ்தி) சுரத்தின் இயல்பு

அனல்போல வெதும்பும்; முலையுண்ணாது; புத்தி கலங்கும்; உள்ளுளையும்; வெள்ளோக்காளமிடும்: சத்திக்கும் (வாந்தி எடுக்கும்); நீர்சிவக்கும்; சாமத்திற் சுரங்காயும்; உடல் வற்றி ஊதும்; இருமல், சோகை கடுப்புக் காணும்.

மருத்துவம்: சாத்திரபேதி, கோட்டம், மதுரம், சந்தனம், ஏலம், சீரகம், கொன்றைப்பிசின், உருத்திராட்சம், கலைக்கொம்பு, நெல்லி, செண்பகம், கொத்தமல்லி, விலாமிச்சை வகைக்கொரு காசளவு அரைத்து ஒரு படி பசுவின் நெய்யில் போட்டுப் பருத்திக் காய், காணி* (பொன்னாங்காணி), வகைக்கு ¼ படி சாறு விட்டுப் பதமாய்க் காய்ச்சி அதில் கால் பலம் சர்க்கரை சேர்த்து ஒரு கரண்டி வீதம் சாப்பிட என்பு சுரம் (அஸ்தி), வாதகணம் நீங்கும்.

வாதபித்த சிலேத்தும சுரத்துக்கு மருந்து

கோரோசனை 2 வராகன் எடை, கடுகுரோகணி, நேர்வாளம் வகைக்கு 1 வராகன் எடை, தாய்ப்பாலில் மைபோலரைத்துப் பயறுபோல் உருண்டை செய்து வாத (வளி) சுரத்திற்கு இஞ்சிச் சாற்றில்; பித்த (அழல்) சுரத்திற்குத் தாய்ப்பாலில், சிலேத்தும (ஐய) சுரத்திற்கு; ஆடாதோடை, கண்டங்கத்திரி தூதுவளை இடித்துப் பிட்டவித்துப் பிழிந்த சாற்றிலிடத் தீரும். (வளி, அழல், ஐயச், சார்பான) மூவகைச்சன்னியும் நீங்கும்.

மாந்த சுரத்திற்கு மருந்து

1. சீந்திற்தண்டு, களிப்பாக்கு, பாலில் 10 முறை தூய்மை செய்த சிவதைவேர், கடுக்காய், சுக்கு, கடுகுரோகணி, ஒரு எடையாய்த் தட்டி ஒரு படி நீரில்போட்டு அரைக்கால் படியாய் வற்ற வைத்துச் சங்களவு கொடுக்கத் தீரும்.
2. விதைநீக்கிய 16 கடுக்காய், இந்த எடை கஸ்தூரி மஞ்சள், மருட்கிழங்கு இவைகளைப் பொடித்து ஒரு படி ஆமணக்கெண்ணெயில் போட்டுச் சூரியபுடம் வைத்து உள்ளுக்குக் கொடுத்து உச்சியிலும் தடவத் தீரும்.

* [காணி என்ற விடத்து பொன்னாங்காணி, கரிசலாங்காணி என்ற இரு மூலிகைகளையும் சேர்ப்பது சிலருடைய கருத்தாம். அதிகஸ்ய அதிகம் பலம்' என்ற பழமொழிக் கேற்ப அதுவும் மிக்க பலனைத் தரத்தக்கதேயாம்.]

3. சீரகம், கிராம்பு, திப்பிலி, நெல்லி, வேம்பு, புளி, விஷ்ணு கரந்தை, பேராமுட்டி, சிற்றாமுட்டி, ஓரிலைத் தாமரை, ஓர் எடையாய்க் கூட்டிக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

4. உள்ளி, அவுரி, குட்டிவிளா இலைகளை ஒரு எடையாய்ச் சிவக்க வறுத்துக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்கத் தீரும்.

5. புளி, நுணா, நெல்லி, வேம்பு, ஓதி, தகரை, பொடுதலை, அம்மான்பச்சரிசி இவைகளின் ஈர்க்கு; வில்வம், சிறுபுள்ளடி, கோழியவரை, நிலவிளா, பழம்பாசி (நிலத் துத்தி), இவைகளின் இலை, நரிப்பயற்றங்கொடி, விஷ்ணு கரந்தை, நன்னாரி, கோரைக்கிழங்கு, செருப்படை, மணத்தக்காளி, வல்லாரை, சீந்தில், பேய்ப்புடல், வில்வ ஓடு, வகைக்கு ஒரு பிடி அரிந்து பொன்னிறமாய் வறுத்து ஒரு படி தண்ணீரில்போட்டுக் கால் படியாய் வற்றவைத்து அதில் கோட்டம், விளாம்பிசின், இலவம்பிசின், மாசிக்காய், சாதிக்காய், வெந்தயம் வகைக்கு 1 வராகன் எடை வெதுப்பிப் பொடித்துப் போட்டு மூன்று நாள்கள் இரண்டு வேளையும் கொடுக்க நாட்பட்ட மாந்தசுரம், வாத, பித்த, சிலேத்தும் சுரம் நீங்கும்.

பச்சைக்கற்பூரம், இலவங்கம், வால்மிளகு, சிறுநாகப்பூ, கடுகுரோகணி, ஏலம், சடாமாஞ்சில், சுக்கு, சீரகம் வகைக்கு ¼ வராகன் எடை, நேர்வாளம் 2 ¼ வராகன் எடை, பொற்றலைக் கரிப்பான் சாற்றால் ஒன்பது நாட்களாட்டி மிளகு அளவு உருண்டை செய்து இஞ்சி, தேன், தாய்ப்பால் இவைகளில் கொடுக்க மாந்த சுரம் முதலான சகல சுரமும் நீங்கும்.

வறட்சுரம், மாந்தசுரத்திற்கு மருந்து

பூவரசிலை, கற்பூரம், சமனாயரைத்து 1 பலம் அடைபோல் தட்டி நாழி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வெந்தபதத்தில் அடையை எடுத்துப்போட்டு ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, வகைக்கு அரை வராகன் எடை பொடிசெய்து மேற்படி ஆழாக்கு எண்ணெயில் கலந்து ஒரு துட்டெடைவீதம் கொடுக்க நீங்கும்.

மாந்த கணசுரம், வயிற்றுப் பொருமல், வாந்திக்கு மருந்து

இரசச்செந்தூரம், திரிபலை, குங்குமப்பூ, கஸ்தூரி, ஏலம், திரிகடுகு, கோரோசனை வகைக்கு ¼ பலம், கிராம்பு (இலவங்கம்) 1 வராகன் எடை, கருநொச்சி சாற்றால் அரைத்துச் சிறுபயறுபோல் உருண்டைசெய்து துளசிச் சாற்றில் கொடுக்க நீங்கும்.

மாந்தசுர தோடத்திற்கு மருந்து

ஆமணக்கெண்ணெய் 1 படி, நுணாஇலைச்சாறு அரைப் படி, ஈருள்ளிச்சாறு ¼ படி, வெந்தயம் ½ பலம் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.

கணசுரம், தோடம், வயிற்றுக்கழிச்சல், பித்தம், இருமல், வாந்திக்கு மருந்து

கடையில் விற்கும் இரசசெந்தூரத்தைச் சம்பழச்சாற்றால் 1 சாமமரைத்துச் சிறுபயறுபோல் உருண்டைசெய்து துளசி, செம்முள்ளி, ஆடாதோடை, தூதுவேளை, விஷ்ணுகரந்தை, கண்டங்கத்திரி, வெதுப்படக்கி, பேய்ப்புடல், சங்கு, நொச்சி இவைகளின் இலைகளை இடித்துப் பிட்டவித்துச் சாறுபிழிந்ததில் மேற்படி, உருண்டையையும் கோரோசனையையும் அரைத்துத் திரிகடுகு வெதுப்பிப் பொடித்த தூளும் கலந்து கடிகை (வெருகடி) அளவு கொடுக்க நீங்கும். இச்சாபத்தியம்.

இரத்தகண மூலத்திற்கு மருந்து

திரிகடுகு, வெண்காரம், சாதிலிங்கம் வகைக்கு 1 பலம், எலுமிச்சங்காய், சாதிக்காயும், புளியம்வித்தின் மேற்றோலும் மேற்படி உருண்டையும் சம எடையாய்ப் பொடித்து வில்வப்பழச் சதைக்குள் வைத்து மூன்று நாள்கள் உட்கொள்ள நீங்கும்.

கணக்காய்ச்சலுக்கு மருந்து

தூதுவேளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை, செம்முள்ளி. விஷ்ணுகரந்தை, சங்கு, இண்டு, சடைச்சி, துளசி இவைகளின் இலைகளை வகைக்கு ஒருபிடி வீதம் இடித்ததற்குள் ஒரு வராகன் எடை ஓமத்தை முடித்து வைத்துப் பிட்டவியலாய் அவித்துச் சாறுபிழிந்து அதில் ஓமத்தைக் கரைத்துக் கொடுக்கத் தீரும்.

குளிர் சுரத்திற்கு மருந்து

அரசிலையையும் அதன் பட்டையையும் கற்றாழஞ் சோறும் தட்டிச் சாறுபிழிந்து ஒரு கரண்டி வீதம் கொடுக்க நீங்கும்.

கணக்காய்ச்சல், மாறல் சுரத்துக்கு மருந்து

அதிமதுரம், இலவங்கம், ஏலம், செண்பகமொக்கு, கோட்டம், சுக்கு, சீரகம், முத்தக்காசு வறுத்திடித்து வடிகட்டிச் சர்க்கரை கலந்து கடிகை அளவு அருந்த கணசுரம், மாறல் சுரம் தீரும்.

கணக்காய்ச்சல் மயக்கத்திற்கு மருந்து

புளி, வேம்பு, மா, நெல்லி, நாரத்தை, நுணா, தகரை, நிம்பன் இவைகளின் ஈர்க்கு, வல்லாரை, பழம்பாசி (நிலத்துத்தி), சிறு புள்ளடி, முத்தக்காசு, ஈருள்ளி, அத்தி, சிற்றாமுட்டி, மிளகு தக்காளி, முசுமுசுக்கை, விஷ்ணுகரந்தை, நரிப்பயற்றங்கொடி, பற்பாடகம், மூக்குரட்டை, அம்மான்பச்சரிசி, சீந்தில், நற்சீரகம், சுக்கு, வெந்தயம் வகைக்கு அரைப்பலம் வறுத்துக் குடிநீர் செய்து அதில் கோரோசனை, அக்கிராகாரம், அதிமதுரம், கலைக்கொம்பு, கோட்டம் வகைக்கு ஒரு பணவெடை அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

கணப்பாண்டு, கணசுரம், என்புவெட்டை, இருமல், இரத்தவெட்டை இவைகட்கு மருந்து

ஆவாரை, சரக்கொன்றை, விஷ்ணுகரந்தை, நிலக்குமிழ் இவைகளின் வேர்; சிறு அம்மான்பச்சரிசி, ஏலம், நற்சீரகம், நெருஞ்சில் வகைக்கு 1 ½ பலம் இடித்து அரைத்து ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க்காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.

கழிச்சல் தோடத்திற்கு மருந்து

உப்பிலிப்பூண்டை (உப்பிலாங்கொடி) நறுக்கி, பசுவின் நெய்யில் போட்டு வெய்யிலில் நாலுசாமம் வைத்துப் பின்பு குழந்தைகட்குக் கரண்டி (தேக்கரண்டி) நிறை கொடுக்க நீங்கும்.

காய்ச்சல், பெருங்கழிச்சல், சுரத்திற்கு மருந்து

அவுரிவேர், நெற்பொரி, சடாமாஞ்சில், அதிமதுரம், சமனாய்ப் பொடித்துக் கடிகை அளவு சர்க்கரை, தேன் விட்டுக் கலந்து கொடுக்கக் காய்ச்சல் நீங்கும்.

அதிவிடையத்தைப் பொடித்துத் தேனில் கொடுக்க பெருங்கழிச்சல், இருமல் நீங்கும்.

ஆம சுரம், மாறல் சுரத்திற்கு மருந்து

1. வேம்பு, இலுப்பை, மாவிலிங்கு, பாவட்டை, முருங்கை, நுணா இவைகளின் ஈர்க்கு; வேலிப்பருத்தி, தைவேளை, சாரணை இவைகளின் வேர்; பேய்ப்பாகல் வகைக்கொருபிடி வறுத்து இரு நாழி நீரில் போட்டுத் திப்பிலி, மிளகு, ஆமையோடு, சுக்கு, வசம்பு, ஓமம் வகைக்கு கால் பலம் முடிந்துபோட்டு வற்றக்காய்ச்சி அதில் மேற்படி மருந்தை அரைத்துக் கலக்கிச் சங்களவு கொடுக்க நீங்கும்.
2. கச்சந்திராய் (துரா இலை), பொன்னாங்காணி, சாரணை இவைகளின் வேர்களை ஒரு நிறையாய் உள்ளித் தைலத்தால் அரைத்து ஒரு கழஞ்சு வீதம் கொடுக்க நீங்கும்.

விக்கல், கக்கல், சுரம், இருமலுக்கு மருந்து

கண்டங்கத்திரிவித்து, அமுக்குரா, திப்பிலி இவை சமன் பொடித்துக் கடிகை (வெருகடி) அளவு கொடுக்க நீங்கும்.

சீதள சுரத்திற்கு மருந்து

1. கண்டங்கத்திரி, சீந்தில், தாமரைவளையம் இவைகளைக் குடிநீர் செய்து அதில் முத்தக்காசு ¼ பலம் பொடித்துத் தூவி சங்களவு கொடுக்க நீங்கும்.

சுரம், இருமல், சீதள சுரத்திற்கு மருந்து

சித்திரமூலம், தூதுவேளை, கண்டங்கத்திரிவேர், கோட்டம், கற்கடகசிங்கி, முசுமுசுக்கை, முள்ளி, அரத்தை, திரிகடுகு வகைக்கு 1 பலம் குடிநீர் வைத்து ஆறு முறை சங்களவு கொடுக்க நீங்கும்.

சீதளம், விடசுரத்திற்கு மருந்து

சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு ¼ பலம் வீதம் தட்டி ஒரு படி நீரில்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்துத் தேன்விட்டு உட்கொள்ள நீங்கும்.

சுரத்திற்கு ஏலாதி மாத்திரை

ஏலரிசி கால் பலம் (8 ¾ கிராம்), கோரோசனை 3 வராகன் எடை, அதிமதுரம், கோட்டம், இந்துப்பு, இலுப்பைக்கொட்டை, சாத்திரபேதி, பெருஞ்சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு 1 வராகன் எடை குமரிச்சாற்றிலும், தாய்ப்பாலிலும் மைபோலாட்டிக் குன்றி போலுருண்டை செய்து தாய்ப்பாலில் கொடுக்க சுரம் நீங்கும்.

சுரம், வறட்கணம், இரத்தகணம், குழிதோடம், சவலைக்கு மருந்து

கற்றாழைச்சாறு, விஷ்ணுகரந்தைச்சாறு, இளநீர், பசுவின் பால் வகைக்கு 1 படி, நிம்பச்சாறு அரைப்படி, சிற்றாமணக் கெண்ணெய் 3 படி ஒன்றாய்க் கலந்து சந்தனம், கணப்பூண்டு, சிங்கி வகைக்கு 1 பலம், செண்பகப்பூ அரைப்பலம், சாதிப்பச்சை, பூலாக்கிழங்கு, ஏலம், விலாமிச்சு, வெட்டிவேர், நன்னாரி, சாதிக்காய், சாதிபத்திரி, கொத்தமல்லி, அதிமதுரம், கோட்டம், கடுகுரோகணி, கிராம்பு, முத்தக்காசு, சன்னலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுநாகப்பூ வகைக்கு 1 வராகன் எடை அரைத்து எண்ணெயில் கலந்து பதமாய்க் காய்ச்சி காசெடை இருவேளை கொடுத்துவர நீங்கும்.

பழஞ்சுரத்திற்கு மருந்து

தூதுவேளை, சிறுகாஞ்சொறிவேர், சீந்தில், பற்பாடகம், நொச்சி, பேராமுட்டி, சிற்றாமுட்டி, கடுக்காய் வகைக்கு கால் பலம் நறுக்கிப் போட்டுக் குடிநீர் வைத்துத் திப்பிலியைப் பொடுத்துத் தூவி சங்களவு கொடுக்கத் தீரும்.

பழஞ்சுரம், விடாச்சுரம், நஞ்சுவீறு, சன்னிக்கு மருந்து

ஏலம், கிராம்பு, முத்தக்காசு, அதிமதுரம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கடுகு, சுக்கு, கொடிமுந்திரிகைப்பழம் (திராட்சை), கோரோசனை, நன்னாரி, நிலப்பனைக்கிழங்கு, தாளிசபத்திரி, சடாமாஞ்சில், சந்தனம், இலுப்பைப்பூ, தேவதாரம், திப்பிலி, கடுகுரோகணி வகைக்குக் கால் கழஞ்சு கல்வத்தில் பொடித்துச் செவ்விளநீரிலும் முலைப்பாலிலும் நாலு சாமம் அரைத்துக் குன்றிபோலுருண்டை செய்து நிழலில் உலர்த்தி முலைப்பாலில் கொடுக்கப் பழஞ்சுரம், விடாச்சுரம் நீங்கும். முதியோர் கூந்தல் குடிநீரில் கொடுக்க சன்னிதோடம் நஞ்சு, ஆமசுரம், கணச்சுரம் நீங்கும். இச்சாபத்தியம்.

கழிச்சல் சுரம், காய்ச்சல், இரைப்பு, கக்கல், சுரதாபம், விக்கல் தாபத்திற்கு மருந்து

1. மான்கொம்பு, திப்பிலி, அதிவிடையம், சமனாய்ப்பொடித்து கடிகை அளவு தேனிற்கொடுக்க சுரம் கக்கல் தீரும்.
2. ஆல், மா, நாவல் இவைகளின் தளிரை நறுக்கிக் குடிநீர் செய்து கொடுக்கச் சுரதாபம், விக்கல், பெருங்கழிச்சல் நீங்கும்.

பித்தசுரம், தாபசுரம், பாதவெடிப்புக்கு மேல்பூசு எண்ணெய்

பசுவின் நெய் 1 படி, பசுவின் பால் 3 படி, நல்லெண்ணெய் 6 படி, பெருங்குரும்பை, அதிமதுரம், நன்னாரி, கருவேலிஇலை, கடுகுரோகணி, செவ்வள்ளிக்கொடி, அமுக்கராவேர், மரமஞ்சள். சந்தனம், சுக்கு, காசுக்கட்டி, அரக்கு, கோட்டம் வகைக்கு 1 கழஞ்சு அரைத்து ஒன்றாய்க் கலந்து காய்ச்சித் தலையிலும் உடம்பிலும் பூச 'சூரியனைக்கண்ட பனிபோல்' பறந்திடும்.

கணக் காய்ச்சலுக்குக் குடிநீர்

வெட்பூலா. வில்வம், சிற்றாமுட்டி, விஷ்ணுகாந்தி, நன்னாரி இவைகளின் வேர் வகைக்கு 5 பலம்; மிளகு அரைப்பலம், இருபங்கு செய்து இரண்டு படி தண்ணீரில் ஒரு பங்குதூள் போட்டு வற்றவைத்து ஐந்து பொழுது கொடுக்க நீங்கும்.

சகல காய்ச்சலுக்கும் பச்சைக்கற்பூர மாத்திரை

பச்சைக்கற்பூரம், இலவங்கப்பட்டை, சாதிக்காய் வகைக்கு 2 கழஞ்சு, வாளம் ஆறு கழஞ்சு, குமரிச்சாற்றால் அரைத்து உளுந்து அளவு உருண்டை செய்து உலர்த்தி சர்க்கரையில் ஒரு குளிகையிட மூன்றே முக்கால் நாழிகையில் கழிச்சலாகி (பேதி), காய்ச்சல் தீரும்.

குளிர்க் காய்ச்சலுக்கு மருந்து

மேற்படி மாத்திரையை முன்னால்கொடுத்து அப்பால் குப்பைமேனியிலை, கொடிவேலியிலை, மிளகு சமனாய் நிறுத்தி விழுதுபட அரைத்துக் கொடுக்க நீங்கும்.

சகல காய்ச்சலுக்கும் மாத்திரை

1. ஆடுதின்னாப்பாளை வேர்ப்பட்டையை நிழலில் உலர்த்தி கருவாப்பட்டை (இலவங்கப் பட்டை) யைச் சமன் கூட்டிப் பொடித்துத் துணியில் சல்லித்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஆட்டி பருத்திக்கொட்டை அளவு உருண்டைசெய்து தக்க துணைமருந்தில் கொடுக்க சகலகாய்ச்சலும் நஞ்சும் நீங்கும்.

2. விஷ்ணுகாந்தி, சுக்கு, கடுக்காய், இண்டு, வாலுளுவை ஒரு நிறையாய்க் குடிநீர் செய்தாவது சூரணித்தாவது அதில் மேற்படி மாத்திரையைக் கொடுக்கச் சகல காய்ச்சலும் தீரும்.

காய்ச்சலுக்கு ஆகாத உணவுப் பண்டங்கள்

பாரும் பாலர் காய்ச்சலுக்குப் பகரும் பதார்த்தந் தள்ளுவகை
நேரு மிளநீர் நெய்பாலாம் நிறைந்த கடுகு தயிர்புளிப்பு
சாரும் பச்சை மீனிறைச்சி சாற்றுங் கோழி தேங்காயாம்
சோரு மாம்ப ருப்பண்டம் சொன்னார் புனுகு பருப்பாமே. 153

[அ. பொ.] தள்ளும் வகை = நீக்கும் விவரம்; மாம்பருப்பு = மாங்கொட்டைப்பருப்பு; அண்டம் = கோழிமுட்டை முதலான எல்லா முட்டைகளும்; புளிப்பு = புளி முதலான புளிப்புச் சுவையுள்ள பண்டங்கள்.

ஆமே சந்தம் பயறளவாம் அரிய மஞ்சள் பொரிகடலை
காமே யிரவுப் பழங்கறிகள் கழறும் முன்னாட் சோறு
சாமே புணர்ச்சி யிவைகொள்ளில் சாற்றுஞ் சன்னி தோடமதாம்.
நாமே சொன்னோம் மரணமப்பா நலமா யுரைத்து வரவாமே. 154

[அ. பொ.] *புணர்ச்சி = உடலுறவு.*

பால், நெய், இளநீர், தயிர், புளிப்பு, கடுகு, பச்சைமீன், இறைச்சி, கோழி, தேங்காய், மாங்காய், பருப்பு, முட்டை, சந்தனம் புனுகு, பயறு, புணர்ச்சி இவைகளை அனுசரித்தால் சன்னிதோன்றி மரணம் சம்பவிக்கும்.

சன்னி வகுப்பு (கலப்பு நோய்)

தூறும் நாவது துரட்டு முட்போலா
ஆறு மஞ்சதும் மாய்ந்து கலங்குமே. 155

[அ. பொ.] *தூறும் = (மொழியைச்) சொரிந்திடும்; துரட்டு முள் = வளைந்த முட்கள்; ஆறு = சுவையாறு அறிதல்; அஞ்சு = ஐந்து இந்திரியங்களின் தொழில்கள்; மாய்ந்து = ஒழிந்து.*

மாந்தசன்னி நோயின் இயல்பு

1. *மாந்தத்தின் பேரில் சன்னி தோன்றிடில், சுரம், மயக்கம் தாகம், காணும்; நாவு முள்ளுபோலிருக்கும்; கண்தாழும்; புத்தி கலங்கும்.*

2. *குழந்தை ஓயாது அலரும்; ஒரு கண்திறந்து ஒரு கண்ணை உருட்டி விழித்துப் பார்த்தழும்; ஊசிபோலக் கழுத்து நேர்ந்து உடம்பெல்லாம் நரம்பு தோன்றும்; பாசிபோல் விழிபசக்கும்.*

மருத்துவம்:

1. *கஞ்சா, ஊமத்தை, கச்சந்திராய் இவற்றின் வேர் கோரைக் கிழங்கு சமனாய் வேப்பெண்ணெய் விட்டு வறுத்துப் பொடித்து நெருப்பில் போட்டு, புகைகாட்டத் தீரும்.*

2. *வெள்ளைகாக்கணவேர், உத்தாமணியின்வேர், மாவிலிங்கப் பட்டை, முருங்கைப்பட்டை வகைக்கொரு பலம் ஒன்றாய் இடித்துச் சாறு பிழிந்து முறித்துச் சூடாற்றி அதில்*

திப்பிலி, மிளகு, சுக்கு பொடித்துப் போட்டுப் புவலோக பூபதி மாத்திரையை இழைத்துக் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

ஆம சன்னியின் இயல்பு

குழந்தை முலைஉண்ணாது அழும்; கண்விழியாது மயங்கும்; முகம் வேறுபடும்; பற்பல வலி உண்டாகும்; குரல்கம்மும்; மலங்கட்டி சுரங்காயும்; தாகிக்கும்; வயிறு ஊதும்; நெற்றி சுழிக்கும் மயக்கங்காணும்.

மருத்துவம்:

1. கடுக்காய், கடுகுரோகணி, சிவதை, திரிகடுகு ஒரு நிறையாய் இடித்துக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.
2. கன்னிக்கோழிமுட்டைத் தைலம், வேப்பெண்ணெய் சமன் கலந்து உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.
3. சாரணை, மூக்குரட்டை, பொடுதலை, திரிகடுகு, நாய்த் துளசி, சீரகம் சமனாய் நறுக்கிப்போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.
4. ஆமணக்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், நல்லெண் ணெய், வேப்பெண்ணெய் சமனாய்க் கலந்து அதில் கொடிவேலி (சித்திரமூலம்), சங்கு, எருக்கு, முடக்கொத்தான் இவைகளின் வேர்ப்பட்டைகளை ஒரு நிறையாய் நறுக்கிப் போட்டுக் காய்ச்சி அதற்கு நிகர் வெள்ளுள்ளித் தைலமும் கலந்து மேலே துவாலையிடத்தீரும்.

கோர சன்னியின் இயல்பு

வாயு மிகும்; உடம்பு தீப்போற் காயும்; சதை குலுங்கி வலிக்கும்; கால் கைகள் பதைக்கும்; வாதநீர் காலில் இறங்கும்.

மருத்துவம்:- குமட்டிக்காய்ச்சாறு, நூறாண்டு சென்ற வேப்பம்பட்டைக்குடிநீர், விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் வெண்தோன்றிக்கிழங்கு, கருடன் கிழங்கு, நீர்முள்ளி, சிவனார்வேம்பு, தவசுமுருங்கை, வெள்ளைச்சாரணை, முடக்கொத்தான் இவைகளின் வேர்;

ஏலம், சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, பெருங்காயம் வகைக்கு 2 பலம், தட்டிப்போட்டுக் கோழிமுட்டைத் தயிலம், முசுறுமுட்டை வகைக்கு 2 பலம் கூடச்சேர்த்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்துக் காசு எடை மூன்று நாள் பத்தியமாய்க் கொடுக்கத் தீரும்.

தாந்திரிக சன்னியின் இயல்பு

குழந்தை தாய்ப்பால் உண்ணாது; காய்ச்சல் காயும்; தாகம் காணும்; மேனி பதைக்கும்; அரைகுளிர்ந்து இருக்கும்; மூர்ச்சை காணும்.

மருத்துவம்:- வேளை, ஊமத்தை, கஞ்சா, முருங்கை, சீந்தில், இவைகளின் வேர், வெள்ளுள்ளி, வசம்பு, மயிலிறகு ஒரு நிறையாய் தட்டிக் கம்பளியில் கட்டி வேப்பெண்ணெயில் நனைத்துத் தீயில் கொளுத்தி அவித்துப் புகைகாட்டத் தீரும்.

நீங்காச் சன்னியின் இயல்பு

உடல் மஞ்சளிக்கும்; குழந்தை தாய்ப்பால் உண்ணாது; பெருமூச்சு விடும்; கண், நாக்கு, புருவம், கை கால் கோணி வலிக்கும்; விழி மேல்நோக்கும்.

சகல மாந்த சன்னிக்கு மருந்து

1. சின்னி இலை, கிளாயிலை, வெள்ளைப்பூண்டு, வசம்பு, ஓமம் சமனாக இடித்துச்சாறு பிழிந்து மூன்றுநாள் உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூச நீங்கும்.

2. நல்லெண்ணெய் அரைப்படி, முருங்கைப்பட்டைச்சாறு 1 படி இவைகளைக் கலந்ததில் வெள்ளைப்பூண்டு 1 பலம், வசம்பு கொளுத்திய கரி கால்பலம் கூடப்போட்டுக் காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.

தோடசன்னி, மாந்தசன்னி, பித்தசுரம், வாந்திக்கு மருந்து

கஸ்தூரி 1 வராகன் எடை (3 ½ கிராம்), குங்குமப்பூ 1 வராகன் எடை, கோரோசனை 3 வராகன் எடை (10 ½ கிராம்) தாய்ப்பால் விட்டரைத்துக் குன்றி எடை அளவு உருண்டை செய்து கொடுக்க நீங்கும்.

மாந்தகண சன்னிக்கு மருந்து

1. மாசிக்காய், திப்பிலி, கோரோசனை, கோட்டம், கருஞ் சீரகம், அக்கிராகாரம் சமனாய் தாய்ப்பால் விட்டரைத்துக் குன்றிபோல் உருண்டை செய்து தாய்ப்பாலில் கொடுக்க நீங்கும்.

2. ஏலம், இலவங்கம், அதிமதுரம், வெட்டிவேர், சுக்கு, நன்னாரி, முந்திரிப்பழம், (திராட்சை) பேரீச்சம்பழம், விலாமிச்சவேர், கோரோசனை, தாளிசபத்திரி, நிலப்பனைக் கிழங்கு, சடாமாஞ்சில், சந்தனம், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப்பூ, கடுகுரோகணி வகைக்கு 1 வராகன்எடை (3 ½ கிராம்) தண்ணீர் விட்டு நன்றாய் அரைத்துக் குன்றி அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி தாய்ப்பாலில் கொடுக்க மாந்தகணம் தீரும்.

சன்னிசுரம், கபத்திற்கு மருந்து

1. வேப்பெண்ணெய் ½ படி, சங்கிலைச்சாறு, கருவாப் பட்டைச் சாறு, முசுறுமுட்டை வகைக்கு, 1/8 படி ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, திப்பிலி, வசம்பு, மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், பூண்டு வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்) நறுக்கிப்போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொள்ள நீங்கும்.

2. வேப்பெண்ணெய் ½ படி, குட்டிவிளா, தூதுவேளை, நாய்வேளை இவைகளின் சாறு வகைக்கு ஒரு சேர், சீரகம், கஸ்தூரி மஞ்சள், வெங்காயம், சிற்றரத்தை, மரமஞ்சள் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்) நறுக்கிப் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொள்ள நீங்கும்.

நச்சுசன்னி, குளிர்சன்னி, சுரம், விக்கலுக்கு மருந்து

மஞ்சள், சாதிக்காய், திரிகடுகு, கிராம்பு, கடுகுரோகணி, ஏலம், நாபிக்கிழங்கு வகைக்கு 1 வராகன் எடை எலுமிச்சம்பழச் சாற்றால் ஒரு சாமம் அரைத்துப் பயறுபோல் உருண்டைசெய்து அரை ஆழாக்கு மாசிப்பத்திரிக் குடிநீரில் ஒருமாத்திரையிடத் தீரும்.

வலிப்புநோய் வகுப்பு

அருந்தும் பண்டத் தன்னாலே யரியா மந்தம் பற்றியேதான்
திருந்தும் வலிப்பு மயக்கமுந்தான் தீரா யிசிவு பற்கடிப்பாம்
குருந்து மன்னந் தண்ணீருங் குளிரச் சுத்தி செல்லாது
பருந்துஞ் சன்னி பற்கிட்டும் பகர்ந்தார் முனிவர் பகர்ந்தாரே. 156

[அ. பொ.] இசிவு = வலிப்பு; அன்னம் = சோறு (உணவு); பற்கிட்டும் = பல்லைக் கடித்துக்கொள்ளும்.

தின்பண்டங்களினால், மந்தம் பற்றிப் பலவித வலிப்பு, மயக்கம், இசிவு, பற்கடிப்பு, பற்கிட்டல் காணும்; அன்னந் தண்ணீர் செல்லாது.

மருத்துவம்:

1. *குதிரை நகம், மயிலிறகு, மிளகு, வசம்பு, சுக்கு, பேயத்தி, அழிஞ்சில், செம்மறியாட்டுக் கொம்பு சமனாய்ப்பொடித்துக் கம்பளியாற் சுற்றி வேப்பநெய்யிற் தோய்த்துக் கொளுத்திப் புகைக்கத் தீரும்.*

2. *குதிரைக்குளம்பு, கொடிவேலி, மூலம், சிறுபுள்ளடி சமூலம், தைவேளைச்சமூலம், வெள்வேல், விடத்தேர் இலை, முருங்கை இவைகளின் பட்டை வகைக்கு 2 பலம், ஆமையோடு, பூண்டு, வசம்பு வகைக்கு 1 பலம் இவைகளை நறுக்கி ஒரு படி விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி ஒரு துட்டெடை உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசத் தீரும்.*

மாந்த வலிப்பு, காக்கை வலிப்புகளுக்கு மருந்து

கொடிவேலி, சங்கு, எருக்கு இவைகளின் வேர்ப்பட்டை, குங்குமப்பூ வகைக்கு 1 வராகனெடை மைபோலரைத்து வெந்நீரில் கலக்கி வடிகட்டிக் கொடுக்கத்தீரும்.

காக்கை வலிப்புக்கு மருந்து

கொழிஞ்சி, தழுதாழை, நிலவேம்பு, மிளகரணை, இவைகளின் வேர், வசம்பு, திப்பிலி மூலம், காக்கையின் பித்து, கொழுப்பு முட்டை இவைகளைப் பொடித்து விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வறுத்துப் பொடித்த ஓமம், வெண்காரம்

உள்ளி வகைக்கு ¼ பலம் நறுக்கிப் போட்டிறக்கி ஒரு கரண்டி வீதம் ஆறு வேளை கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

சளி, இருமல், கக்கல், காய்ச்சல், நச்சு சுரம், விக்கல், வலிப்பு, சன்னிதோடம், வயிற்றுப் பொருமலுக்கு மருந்து

சாதிக்காய், கிராம்பு, ஓமம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், வசம்பு, காயம், வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டை சமன் கூட்டி வெந்நீராலரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்துலர்த்தி மேற்படி நீரில் குழந்தைகட்கு மூன்று நாள் கொடுக்கத் தீரும். கழிச்சல் அதிகப்பட்டால் வசம்பைச் சுட்டு நீரில் கலக்கிக் கொடுக்கவும்.

புற இசிவுக்கு மருந்து

தும்பை, துளசி, இஞ்சி இவைகளின் இலைகளைச் சரியெடையாய் நிறுத்தி அரைத்துக் கழற்சிக்காயளவு சிற்றா மணக்கிலையில் வைத்துச் சுருட்டி அதை வெதுப்பிச் சாறு பிழிந்து காசளவாய் மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

கழிச்சல்நோய் வகுப்பு

சொல்லுகிறேன் கழிச்சல்வகை தோடந் தன்னைச்
சுழிமந்தக் கழிச்சலெனச் செப்ப லாகும்
வெல்லுகிறேன் பாற்கழிச்சல் வறட்க ழிச்சல்
வீறான வாந்தியின்றன் கழிச்ச லாகும்
புல்லுகிறேன் கணக்கழிச்சல் மாந்தக் கழிச்சல்
புகழான ஆமத்தின் கழிச்ச லாகும்
கொல்லுகின்ற சலக்கழிச்சல் வெதுப்புக் கழிச்சல்
கூறான ரத்தத்தின் கழிச்ச லாமே.

ஆமேதான் அதிசாரக் கழிச்ச லாகும்
அப்பனே பொருமலின் கழிச்ச லாகும்
போமேதான் சீதரத்தக் கடுப்பு மாகும்
பொல்லாத கழிச்சலென்று நாம மெய்தும்

தாமேதான் பச்சிலைக் கழிச்ச லாகும்
சார்வான விடாக்கழிச் சல்சாற் றலாகும்
நாமேதான் சொன்னோமே கழிச்சல் மார்க்கம்
நவின்றிட்டார் பாலருக்கு நவின்றிட் டாரே. 157

சுழிமாந்தக் கழிச்சல், பால் கழிச்சல், வறள் கழிச்சல், வாந்திக் கழிச்சல், கணக் கழிச்சல், மாந்தக் கழிச்சல், ஆமக் கழிச்சல், வெதுப்புக் கழிச்சல், இரத்தக் கழிச்சல், அதிசாரக் கழிச்சல், பொருமல் கழிச்சல், சீதரத்தக் கடுப்பு, பச்சிலைக் கழிச்சல், விடாக் கழிச்சல் என்பன கழிச்சலின் வகைகளாம்.

கழிச்சல் தோடத்திற்கு மருந்து

உப்பிலியின் பூண்டை நறுக்கி ஆவின் நெய்யிற்போட்டு நாலு சாமம் வெய்யிலில் வைத்துக் கொடுக்க நீங்கும்.

மாந்தக் கழிச்சல், மாந்த சன்னிக்கு மருந்து

அனலில் சட்டியைக் காயவைத்து ஒரு சிரங்கை உப்பைப் போட்டுச் சாம்பலாக்கிக்கொட்டித் துடைத்துப்போட்டு நேர் வசம்பைப் போட்டுக் கருக்கித் தீப்பற்றி வேகும்போது ஒரு பிடி வேளையை மூன்று அறுப்பாகச் செய்து போட்டுப் பொன்னிறமாய் வறுத்துப் பின்னும் இந்தப்படி இரண்டுமுறை நீர் தெளித்துச் சுண்டமட்டும் வறுத்துப் பின்னும் இந்தப்படி இரண்டுமுறை நீர் தெளித்துச் சுண்ட வறுத்ததின்பேரில் ஒரு படி நீர்விட்டு எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி இறக்கி ஒரு சங்குகொடுக்க நீங்கும்.

கழிச்சலுக்கு மருந்து

1. கோரோசனை, களிப்பாக்கு, சீரகம், காசுக்கட்டி, இவைகளைச் சமமாய் எடுத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துப் பாக்கு அளவு தாய்ப்பாலில் கரைத்துக் கொடுக்கக் கழிச்சல் உடனே நிற்கும்.
2. தைவேளையிலை, வசம்பு, பூண்டு இவைகளைத் தட்டி வெதுப்பிச் சாறு பிழிந்து கொடுக்க நீங்கும்.

3. ஈருள்ளி, வேலிப்பருத்தியிலை, முடக்கொத்தானிலை இவைகளைச் சமமாய் வெதுப்பிச் சாறு பிழிந்து ஒரு துட்டெடை கொடுக்க நீங்கும், இச்சாபத்தியம்.

4. மாவிலிங்கு, சங்கு, செம்முள்ளி, வேலிப்பருத்தி, பொடுதலை, வேளை இவற்றை ஒரு நிறையாய் எடுத்து அரைத்து எலுமிச்சங்காய் அளவு எருமைவெண்ணெயில் வேகவைத்துக் கொடுக்க நீங்கும்.

5. கீழ்க்காய்நெல்லிவேரை ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்துத் தாய்ப்பாலிற் கொடுக்க நீங்கும்.

பால்போல் கழிவதற்கு மருந்து

பிரண்டையிலை, பெருந்தும்பையிலை, இவைகளைக் கரண்டியில் வெதுப்பி, தாய்ப்பால் விட்டுத் தட்டிச்சாறு பிழிந்து அதில் கோரோசனை, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், வகைக்கிரண்டு நெல்லெடை பொடித்துப் போட்டு மூன்று பொழுது கொடுக்க நீங்கும்.

கழிச்சல் சுரத்திற்கு மருந்து

அதிவிடையம், சாதிக்காய், சாதிபத்திரி, அபினி, கடுக்காய், தான்றிக்காய், மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு அரை வராகன்எடை, ஏலம் 1 வராகன் எடை, மாதுளந்தளிரும் அத்திப் பட்டையும் குடிநீர் செய்து அதனாலே மேற்படி மருந்துகளை அரைத்து அடைபோல்தட்டி அரசிலையிற்கட்டி சட்டியில் வைத்து மேற்படி குடிநீரைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு வேகவைத்து அப்பால் இந்தப்படியே பத்து முறை மேற்படி மருந்தை வேகவைத்துப்பின் மைபோலரைத்துக் குன்றியளவு உருண்டை செய்து வடிகட்டின எருமைத்தயிரில் கொடுக்கக் கழிச்சல் தீரும்; வெந்நீரில் கொடுக்கச்சுரம் தீரும்.

சுழிகணம், சுரம், வறட்சிக்கு மருந்து

இலந்தை, நாரத்தை, புளி, கணப்பூண்டு, இவைகளின் ஈர்க்குகளைச் சமனாய்க் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

கழிச்சல், இருமலுக்கு மருந்து

ஆடுதின்னாப்பாளை சமூலம், சிறுதேக்கு (கண்டுபாரங்கி,) அதிமதுரம், வசம்பு, சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிவிடயம், கோட்டம், முத்தக்காசு வகைக்கு 1 கழஞ்சு நறுக்கி இம்பூரல்சாறு, பசுவின் நெய் வகைக்கு 1 படி; ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்க தீரும்.

கக்கல், கழிச்சலுக்கு (வாந்திபேதி) மருந்து

நெல்லி, மா, அத்தி, அரசு, இவைகளின் பட்டை, பருத்திப் பருப்பு வகைக்குக்காற்படி, பிஞ்சு அத்தித்தளிர் 1 வராகன் எடை நறுக்கி குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

கழிச்சல், இருமல், வாந்திக்கு மருந்து

வேலிப்பருத்திச்சாறு, எருமை வெண்ணெய் வகைக்கு ¼ படி, கருஞ்சீரகம் 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

மாந்தக் கழிச்சலின் இயல்பு

வாந்தி, கிரந்தி, மூர்ச்சை, மேனியில்வெதுப்பு, கால்கையில் குளிர்ச்சி, வலிகாணல், பலவிதமாய் மலங்கழியும்; வாயு, இருமல், குரல் கம்மல் தோன்றும்.

மருத்துவம்:- வேளை, நாய்வேளை, வேலிப்பருத்தி, குப்பை மேனி, இவைகளின் இலை, அகத்திப்பழுப்பு, வசம்பு, வெள்ளுள்ளி, இவைகளைத் தட்டிச்சாறு வாங்கி துட்டெடை உள்ளுக்குக்கொடுத்து மேலுக்குத் துவாலையிடத் தீரும்.

கணக் கழிச்சலின் இயல்பு

சீதமாயும் மலமாயும் கெட்டபாலுங் கறித்தண்ணீர் போல் பிறவிர்த்தி (பேதி) யாகும், கைகால் குளிரும்; காதடைக்கும்; உடல் வெதும்பும்.

மருத்துவம்:

1. ஈருள்ளி 10, கருவேல் ஈர்க்கு ஒரு பிடி, சீரகம் 1 வராகன் எடை, வெந்தயம் 2 வராகன் எடை இவைகளை வறுத்துக் குடிநீர் வைத்துக் கொடுக்கத் தீரும்.

2. மூக்குரட்டை, சாரணை, முடக்கொத்தான், முத்தெருக்கஞ் செவி, ஓரிதழ்த்தாமரை இவைகளின் சாறு 1 படி, செப்பு நெருஞ்சிச்சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி, மயிலிறகு சுட்டசாம்பல் 1 பலம் இவைகளை ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

ஆமக் கழிச்சலின் இயல்பு

பாலெதிரெடுக்கும்; வயிறிரையும்; இரத்தம்விழும்; சுரங்காயும்; குரல்கம்மும்; கைகால் குளிர்ந்திருக்கும்.

மருத்துவம்: சோற்றில் அவித்துத் தூய்மை செய்த 1 சாதிக்காய், பூரம் 1 வராகன் எடை இவைகளை ஒரு பலம் சிற்றாமணக்கெண்ணெயில் அரைத்துக் கலக்கிக்கொண்டு வேளைக்கொரு கரண்டி வீதம் கொடுக்கத் தீரும்.

மலக்கழிச்சலுக்கு மருந்து

வெண்குன்றிப்பருப்பு, புளியன்விதைத்தோல், அத்திப்பால், எருமைவெண்ணெய் வகைக்கு 1 கழஞ்சு மைபோலரைத்துக் கொடுக்கத் தீரும்.

வெதுப்புக் கழிச்சலுக்கு மருந்து

அதிமதுரம், அதிவிடையம், சாதிக்காய், மாதளம்பூ, சீரகம் வகைக்குக் கழஞ்சு கூட்டிப் புளியாரைச் சாற்றிலரைத்துத் தூதுளங்காய்ப் போல் உருண்டை செய்து மாதுளம்பழச் சாற்றிற் கரைத்துக் கொடுக்கத் தீரும்.

இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

1. தாழைவிழுதின் சாறும், இளநீரும், எலுமிச்சம்பழச் சாறும் சமன்கலந்து அதில் சுக்கு, சீரகம் வெதுப்பிப் பொடித்த தூள் கலந்துகொடுக்கத் தீரும்.
2. சீரகம், கொத்தமல்லி, மாதுளையின் பிஞ்சு, கீழ்க்காய்நெல்லி வேர் சமனாய் வெந்நீர் விட்டரைத்துக் காலையில் கழஞ்சு அளவு கொடுத்துப் பத்தியம் தயிருஞ்சோறும் உண்ணத் தீரும்.

பொருமல், கழிச்சலுக்கு மருந்து

ஆமையோடு, அதிவிடையம், அசமதாகம் (ஓமம்), வட்டத் திருப்பி, பாவட்டை, மிளகு, சுக்கு சமனாய் வெந்நீர் விட்டரைத்துக் குன்றிபோல் உருண்டை செய்து கொதித்த தண்ணீரிலாவது தாய்ப்பாலிலாவது கொடுக்கத் தீரும்.

பெருங்கழிச்சலுக்கு மருந்து (அதிசாரம்)

1. கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, வில்வவேர், திப்பிலி, வில்வப்பட்டை, சிறுநாகப்பூ சமனாய் நறுக்கிக் குடிநீர் வைத்துத் தேன்விட்டுக் கொடுக்கத் தீரும்.
2. காட்டாத்திப்பூ, கருங்காலிவேர்த் தோல், திப்பிலி, வில்வம் சமனாய்க் குடிநீர் வைத்துத் தேன் விட்டு சங்களவு கொடுக்கத் தீரும்.
3. அத்திக்காயின் சாற்றால் ஓமத்தை அரைத்துத் தயிரிற் கலந்து கழற்சியளவு கொடுக்கத் தீரும்.

வயிற்றிரைச்சல், நஞ்சு, மூலக்கடுப்புக் கழிச்சல், கணத்திற்கு மருந்து.

அதிவிடையம், கோட்டம், கிராம்பு, மதுரம், இலவம்பிசின், விளாம்பிசின், சாதிக்காய், சாதிபத்திரி, சடாமாஞ்சில், சன்ன இலவங்கப்பட்டை, ஒரு நிறையாய் மாதுளம்பழத்தினுள் வைத்துத் துணிசுற்றி மேற் சாணம் பூசிக் காயவைத்துக் கருகாமற் புடமிட்டெடுத்து அதைக் கஞ்சா சாற்றாலரைத்துக் குன்றிபோலுருண்டை செய்துலர்த்தி கஞ்சா, தென்னங்குரும்பை, தென்னம்பூ, வாழைப்பூ இவைகளின் சாற்றிலாவது தேன், தயிரிலாவது கொடுக்கத் தீரும்.

சீத ரத்தக்கடுப்புக் கழிச்சலுக்கு மருந்து

புனல்தண்டுவேர், சீரகம், ஆவாரைப் பஞ்சாங்கம் வகைக்கு ஒரு பிடி இடித்துத் தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து குங்குமப்பூவும் கோரோசனையும் அரைத்துக் கலக்கி, ஒரு சங்கு வீதம் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

பச்சிலைபோல் கழிவதற்கு மருந்து

ஏலம், சாத்திரபேதி, மதுரம் வகைக்கு ½ வராகனெடை நீராகாரத்தண்ணீர்விட்டரைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

முட்டை உடைத்தாற் போலும் கெட்டபால் போலும் கழிதலுக்கு மருந்து

உத்தாமணியிலை 100, சிற்றவரை இலை 5, உள்ளிப்பூண்டு 1, எருமை வெண்ணெய் இவைகளை இலைமுறியக்காய்ச்சி இறுத்துத் தாய்ப்பாலோடு குலுக்கி மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

விடாக்கழிச்சலுக்கு மருந்து

சாதிக்காய், அதிவிடையம், சாதிபத்திரி, அபினி சமனாய் நல்லெண்ணெய் விட்டரைத்து நாளுக்கு ஒரு பணவெடை தாய்ப்பாலில் கொடுக்க நீங்கும்.

சகல கழிச்சலுக்கும் மருந்து

1. *சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம், ஏலம், அதிமதுரம், அதிவிடயம், அபின், கஞ்சா, குரோசாணி, முத்தக்காசு, வெந்தயம், சீரகம், சிறுநாகப்பூ, புளியாரை, காட்டாத்திப்பூ, மாதுளம்பிஞ்சு, வாழைப்பூச்சாற்றிலாவது அரைத்து மிளகு போல் உருண்டை செய்து சர்க்கரையில் கொடுக்கத் தீரும்.*
2. *புளியாரை, வாழைப்பூ சமனாய் இடித்துப் பிட்டவியலாக அவித்துச் சாறுபிழிந்து தேன் ஒருதுளி விட்டுக் கொடுக்கத் தீரும்.*

அச்சரநோய் வகுப்பு

சொன்னா ரட்சர வகுப்புதன்னைச் சூட்டும் நீதி சூலியென
மன்னே சோதி வீமியென வகுத்த சூலிகை பாலியெனப்
பொன்னே குமரி யுள்ளட்சரம் போற்றுந் தொகைய தெட்டாமே
அன்னே வகுப்பு நாமுரைத்தோ மறைந்தோ மாந்தற் கிதுவாமே.

நீதி, சூலி, சோதி, வீமி, குண்டி, கபாலி, குமரி, உள் அச்சரங்கள் என எண்வகையாம்.

1. சூலி அச்சரத்தின் இயல்பு

சுரங்காயும்; இடைநடுக்கும்; நாவு வெளுத்து வெந்து புண்ணாகி வெள்ளாவிபோல் நாறும்; வாய்நீர் மிகவொழுகும்; வாந்தி வெள்ளொக்காளங் காணும்; உடல் கறுக்கும்.

2. நீலி அச்சரத்தின் இயல்பு

உடல் குளிரும்; தலைவலிக்கும்; சுரங்காயும்; வாய் கசக்கும்; நா வறளும்; நாவு வெந்து மாப்போலிருக்கும்; நெஞ்சு கரிக்கும்.

3. சோதி அச்சரத்தின் இயல்பு

முதுகும் வயிறுமெரியும்; தலையிடிக்கும்; கணைக்கால் நோவும்; உடலும் நாக்கும் பல்லும் அழுக்கு நிறமாயிருக்கும்; வயிறு கழியும்; வாந்தி பண்ணும்.

4. வீழி அச்சரத்தின் இயல்பு

ஈரல் நொந்து காய்ச்சல், மயக்கம், குளிர், தலைவலி, தாகங்காணும்; உடல் கறுக்கும்.

5. குண்டி அச்சரத்தின் இயல்பு

உடல் நொந்து நடுங்கும்; வாய் கூசும்; நாவுநொந்துசிவக்கும்; வயிறு கழியும்; நெஞ்சுகரித்து வாந்தி பண்ணும்; இருமல், தாகம்; மிகும்; ஈரல் விலா நோகும்.

6. கபாலி அச்சரத்தின் இயல்பு

உடல் கனக்கும்; வலிப்பெடுக்கும்; காய்ச்சல்காயும்; நெஞ்சும் தலையும் வலிக்கும்; நாவு, தொண்டை, குடல், ஈரல் புண்ணாகும்.

7. குமரி அச்சரத்தின் இயல்பு

நாவு கசக்கும், கூசுந்தடிக்கும்; அழன்றுவெடித்து விசன முறும்; சுரங்காயும்; இரத்தமாய் வயிறுபோகும்; இருகண்ணும் நொந்துவிடும், வாந்தியெடுக்கும்; உண்ணாக்குவளரும்; பால் பசுமையாயிருக்கும்; மூக்கில் இரத்தம் வடியும்.

அச்சரத்தின் பொது இயல்பு

உடல்குளிரும்; தலைவலிக்கும்; காதுமிகுத்து நிற்கும்; குலையும் நாவும் தொடையும் வெந்து புண்ணாகும்; நாவு வெளுக்கும்; நாசியில் நீர்வடியும்.

மருத்துவம்:- கருஞ்சீரகம், கடுகுரோகணி, கடுக்காய், காட்டு மல்லிவேர், வகைக்கு 1 வராகன் எடை இண்டங்கொழுந்து ஒரு படி உள்ளி 2 பலம் தாய்ப்பால் 1/8 படி (மாகாணி), விளக் கெண்ணை 1/8 படி இவைகளை நறுக்கி எண்ணெயில் போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து அதில் கோரோசனை 2 வராகன் எடை பொடித்து போட்டுக் கடும்பத்தியமாய் கரண்டி நிறைய கொடுக்கத் தீரும்.

குண்டியச்சரத்தின் இயல்பு

அரைக்குமேல் சுரங்காயும்; மீன்போல் தேகம் வெளுக்கும்; மஞ்சள் நிறமாய் நீர்விழும்; ஆசனவாயில் சுருக்கென்று வலிக் கும்; உடம்பு இளைத்துக்கடுப்பாகும் தொண்டை வலிக்கும்.

மருத்துவம்:- சுண்டைவேர், நிம்பக்காய், (வேம்பு,) சமனாய் அரைத்து பசு வெண்ணையில் கலந்து கொடுத்தாலும் கரிப்பானும் சீரகமும் அரைத்துப் பாக்களவு கொடுத்தாலும் தீரும்.

உள் அச்சரத்தின் இயல்பு

மூக்கில் நீர்வடியும்; முகமும், நாக்கும் வெளுக்கும்; நாக்கில் ஆவி தோன்றும்; தூக்கம், சுரம், தண்ணீர் தாகமிகுந்து காணும்.

மருத்துவம்:- அதிமதுரம், பூவந்திப்பழம். வகைக்கு 1 வராகன் எடை, தாய்ப்பால் வார்த்தரைத்து ¼ படி பசுவின் நெய்கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி ஒரு வராகன் எடை நெய் கொடுக்கத்தீரும்; இச்சாபத்தியம்.

சோகை வகுப்பு; வாத சோகை இயல்பு

சோகையணுகும்போது சுரங்காயும்; தாகம் அதிகப்படும்; சிரசில் நீர் கொண்டு தலைவலி, களைப்பு, சோபம், கைகால்,

அசதி காணும், தேகம் தடிக்கும்; உதடு வெளுத்து வெடிக்கும்; முகம் வேறுபடும்; பசிமந்திக்கும்; மூலத்திற் கடுப்புக் காணும்.

மருத்துவம்:

1. விளக்கெண்ணெய் 1 படி, ஈருள்ளிச்சாறு, வெள்ளுள்ளிச் சாறு, கழுதைலத்திச்சாறு, கள்ளியை வாட்டிப் பிழிந்தசாறு வகைக்கு ½ படி ஒன்றாய்க்கலந்து அதில் வசம்பு, கருஞ் சீரகம், ஓமம், கஸ்தூரிமஞ்சள், கடுக்காய், கடுகுரோகணி, அரத்தை, சோமநாதப்பெருங்காயம், மிளகு, சிப்பி வகைக்கு 3 வராகன் எடை இவைகளை இடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒருகரண்டிவீதம் கொடுக்க நீங்கும்.

2. அரப்பொடி, கந்தம் வகைக்கு 10 வராகன் எடை, சாதிலிங்கம் 1 ¾ வராகன் எடை, 1 எலுமிச்சம் பழச்சாற்றாலும் நாவற் பட்டைச்சாற்றிலும் தனியே மூன்று நாளாட்டிக் கயிறு செய்து கொண்டு இரண்டு பணவிடை நல்லெண் ணெயில் அரைத்து உண்ணத் தீரும்.

பித்தசோகை, காமாலையின் இயல்பு

பித்தநீர் அதிகரித்து உடல் முழுதும் கண்களுக்கும் களைப்பு அசதிகாணும்.

மருத்துவம்: கையாந்தகரை, நீர்முள்ளி, நாயுருவி, இவைகளின் இலை, வேர், சுக்கு, மிளகு, சீரகம்,. பலம் வீதங்கியாழஞ் செய்து காலை, மாலை அரையாழாக்கு கொடுக்கத்திரும்.

வேறு: ஓமம், அரப்பொடி, ஒரு நிறையாய்க் கரிப்பான் சாற்றில் மூன்று நாளரைத்துத் தேற்றான்விரை அளவு உருண்டை செய்து மேற்படி கியாழத்திலாவது எலுமிச்சம்பழச் சாற்றிலாவது ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

ஊதுகாமாலை நோயின் இயல்பு

முழங்கால் அசைக்கும்; பசித்தவுடன் மந்திக்கும்; சுரம் காதடைப்பு இளைப்புக்காணும்; நாவு புண்ணாகும்; கை கால் சோரும்.

மருத்துவம்: சிட்டம் அரைப்படி, வெள்ளைப்பூண்டு, முருங்கை இலை, கரிப்பான், முற்றினதேங்காய்ப்பருப்பு இவை களைச் சமமாய் இளநீரில் அரைத்து அரைக்கழஞ்சு வீதம் இரண்டுநேரம் ½ ஆழாக்கு நீர்முள்ளிக் கியாழத்திலிடத் தீரும்.

மஞ்சட்காமாலை நோயின் இயல்பு

உடலில் இரத்தம் வயிற்று வெதுப்புக்குட்பாய்ந்து முகம் கால் வீங்கும்; மலஞ்சிக்கும்; மஞ்சள்போல் நீரிறங்கும்; கண் வெளுத்திருக்கும்.

மருத்துவம்: அதிமதுரம், சங்கம்வேர்ப்பட்டை ஒரு நிறையாய் எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாளாட்டித் தேற்றா விதை அளவு உருண்டைசெய்து தாய்ப்பாலிலாவது பசுவின் பாலிலாவது மூன்று நாட்கள் கொடுக்கத் தீரும்.

வறட்காமாலை நோயின் இயல்பு

கண் பசத்திருக்கும்; காலோயும்; உடம்புலரும்; தாகம்மிகும்.

மருத்துவம்:

1. மணத்தக்காளி, கீழ்க்காய்நெல்லி சமூலம் சமனாய் எலுமிச்சங்காய் அளவு அரைத்து அரை ஆழாக்கு எருமைத் தயிரில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.
2. தூய்மை செய்த மண்டூரம் 8 பலம், மாவிலிங்கிலை, நீர்முள்ளி, கீழ்க்காய்நெல்லி, கரிப்பான் வகைக்கு 5 பலம், சீரகம் எட்டுபடி, தண்ணீர் விட்டுக் காய்ச்சி அடைக்கியாழம் செய்து வைத்துக் கொண்டு கால் ஆழாக்கு காலை, மாலை கொடுக்க நீங்கும்.
3. குப்பைமேனி, முள்ளி, நீர்முள்ளி, தூதுவேளை, நாரத்தை, நொச்சி, குட்டிவிளா, பிரமி, சிறுசின்னி, கழற்சி இவைகளின் இலை; நன்னாரிவேர், வாழைக்கிழங்கு, கடுக்காய், சுக்கு இவையெல்லாம் பலம் நிறையாய்க் கியாழஞ் செய்து கால் ஆழாக்கு வீதம் மூன்று நாட்கள் கொடுக்கத்திரும்.

4. கடுக்காய் 4, மிளகு ¼ பலம், மாவிலிங்கப்பட்டை, கற்றாழஞ் சருகு அமுக்குரா வகைக்கு ½ பலம் இவைகளைச் சூரணித்து திரிகடி அளவு ½ ஆழாக்கு வீதம் ஆணுக்குப் பெண்நீரிலும் பெண்ணுக்கு ஆணீரிலுங் கொடுக்க நீங்கும்.

5. நீர்முள்ளியைச் சுட்டு சாம்பலாக்கி நீரில் குழைத்து வீக்கத்தில் பூச தீரும்.

வீக்கத்திற்கு மருந்து

1. தாளிசங்குரை, சிறுநெருஞ்சி, குறிஞ்சா, நீர்முள்ளி, வெண் காரம் சமனாய்பொடித்துக் கியாழம் வைத்து ஒயின்கிளாசு அளவு கொடுக்க நீங்கும்.

2. சங்கு, நொச்சி, சாரணை, கோரை, நீர்முள்ளிஇலை, நெல்லிசார்க்கு, வேப்பந்தோல், கிட்டம், கடுக்காய் அரைப்படி, மஞ்சள், நன்னாரி, வழுதலை, கொன்றை, விழுதி, குமரி, மணலி, சுரைக்கொடி, புங்கம், பாலை, செங்கத்தாரி, பதரி, குறிஞ்சா பலம்வீதம் இடித்து மருந்துக்குத் தக்க கோநீரும் காடியும் விட்டுக்கியாழஞ் செய்து ¼ ஆழாக்குப் பெரியோர்க்கும், சிறுவர்க்கும் கொடுக்கத்தீரும்.

வயிற்றுநோய், சீதக்கடுப்பு, தாகம், செரியாமைசன்னி (கலப்பு நோய்), சயித்தியம், கக்கல், பிராந்திகளுக்கு மருந்து.

வெற்றிலையில் நரம்பெடுத்து சுண்ணாம்புபூசி மடித்துச் சட்டியில் போட்டு நன்றாய் வறுத்துப் படி நீர்வார்த்து எட்டொன்றாக்கி சங்களவு கொடுக்க தீரும்.

நடுக்கல், கக்கல், செரியாமைக்கு மருந்து

அசமதாகம், காடிச்சோறு, வசம்பு, நுணாஇலை, மிளகு பலம் வீதம் பொடித்துத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி சங்களவு கொடுக்கத் திரும்.

விக்கலுக்கு மருந்து

1. தேற்றான்விதை, சந்தனம், கலைமான்கொம்பு, இம் மூன்றையும் தாய்ப்பாலில் அரைத்துக் கொட்டைப் பாக்களவு எடுத்து இளநீரில் கரைத்துப்பொரித்த வெண் காரமும் வெல்லமும் ½ வராகன் எடை சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

2. திப்பிலி 8 வராகன் எடை, சீரகம் 10 வராகன் எடை வெதுப்பிப் பொடித்து அதனுடன் மயிலிறகு சுட்ட சாம்பலும் சமன் கலந்து தேன் விட்டுக் குழைத்து கழற்சி அளவு கொடுக்கத் தீரும்.

3. திப்பிலி, கடுகுரோகணி, சமனாய் வறுத்து மயிலிறகு சுட்ட சாம்பற் கலந்து தேன் விட்டு மத்தித்து கழற்சி அளவு கொடுக்கத் தீரும்.

4. மாதுளை, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி பொடித்து கடிகை (வெருகடி) அளவு தேனில் குழைத்துக் கொடுக்க தீரும்.

கக்கலுக்கு மருந்து

கலைமான்கொம்பு, திப்பிலி, அதிவிடையம் சமனாய்ப் பொடித்து கடிகை அளவு தேனில் குழைத்துக் கொடுக்க தீரும்.

வாந்தி, ஓக்காளத்திற்கு மருந்து

வசம்பும், மிளகும் பற்பஞ்செய்து காடிச்சோறு கூட்டிக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்கத் தீரும். மீறினால் நன்னாரி வேர்ப்பட்டையைக் கொட்டைப்பாக்கு அளவு மேற்படி குடிநீரில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

கக்கல், விக்கலுக்கு மருந்து

இராம்பு, ஏலம், சீரகம், வெதுப்பிய மயிலிறகுச்சாம்பல் சமன் கூட்டிப் பொடித்துக் கடிகை அளவு தேனில் கொடுக்கத்தீரும்.

வெள்ளோக்காளம், பித்தம், விக்கல், கக்கலுக்கு மருந்து

ஏலம், திப்பிலி, நெற்பொரி, பருத்திவிதைப்பருப்பு சமனாய்ப் பொடித்துக் கடிகை அளவு சர்க்கரையிற் கலந்து கொடுக்கத் தீரும்.

மார்புச்சளி, கோழைக்கட்டுக்கு மருந்து

பிரண்டையை வெதுப்பிச்சாறு பிழிந்து ஐந்துநாள் சங்களவு இருபோதும் கொடுக்கத் தீரும்.

கண் அமரத்திற்கு மருந்து

கடுக்காயைத் தட்டித்துணியில் முடிந்து ஆமணக் கெண்ணையிற் போட்டுச் சூரியபுடம் வைத்து கண்ணிற் பிழியத் தீரும்.

கண்ணோய்க்கு மருந்து

கற்கண்டைப்பொடித்துத் துணியில்முடிந்து புளிப்பு மாதுளம் பழச்சாற்றில் ஊறவைத்துக் கண்ணில் பிழியத் தீரும்.

செவி நோயின் இயல்பு

குழந்தை கண்ணிற் பீளை சாரும்; கையினால் தலையைத் தேய்க்கும்; குரல் தாழும்; உடல் நொந்து வாடும்; புரண்டழும்.

மருத்துவம்:

1. சிதேவிசெங்கழுநீர்க்கிழங்கு, உள்ளி, வசம்பு சமனாய்த் தட்டி வேப்பெண்ணெயில் போட்டுக் கொதிக்க வைத்துக் காதிலடைக்க காது நோயெல்லாந் தீரும்.
2. சதுரக்கள்ளியை அனலில்வெதுப்பிச் சாறுபிழிந்து காதில் அடைக்கச் செவிநோய் தீரும்.

செவியில் சீழ் ஒழுகலுக்கு மருந்து

1. சுக்கு, திப்பிலி, கோட்டம், சயிந்தலவணம், முத்தக்காசு, உள்ளி, பேரீச்சங்காய், வசம்பு வகைக்கு ஒரு உளுந்தெடை

எருக்கிலைச்சாற்றால் அரைத்து வேப்பெண்ணெயில் கலந்து காய்ச்சி காதில் விட்டுத் திரியடைக்கத் தீரும்.

2. முருங்கைவேர், முத்தெருக்கஞ்செவியிலை, பூண்டு, வசம்பு இவைகளைச் சமநிறையாய்த் தக்காளி இலைப் பழுப்புச் சாற்றில் அரைத்து நல்லெண்ணெயில் எரித்துக் காதில் விட்டு அடைக்கமாறும்.

காதில் ஈ புகுந்தால் பரிகாரம்.

1. குப்பைமேனியிலையைச் சிறுநீர்விட்டு இடித்துக் காதிற் பிழிய ஈ செத்துவிழும்.
2. குப்பைமேனிச்சாறும் கோழியவரைச்சாறும் சமனாய்க் கலந்து காதில் விடில் ஈ சாகும்.

பல்லீற்றில் இரத்தம் வடிதலுக்கு மருந்து

பச்சைநன்னாரிவேரை வெந்நீர் விட்டுக் கொட்டைப் பாக்கு அளவு அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

முடிசாய்ந்துபோனதற்குக் குளிசமும் மருந்தும்

செவ்வலரிவேர் பிடுங்கிக் குளிசமாடி, ஆண்பிள்ளைக்கு வலது கையிலும் பெண்குழந்தைக்கு இடதுகையிலும் கட்டிப் பொன்னாங்காணிச் சாற்றை நல்லெண்ணெயில் கலந்து ஒரு சங்களவு கொடுக்க நீங்கும்.

பற்பல நோய்களின் வகுப்பு
நாமுள் தோட நோயின் இயல்பு

குழந்தை தாய்ப்பாலை உண்ணாது; சீறியழும்; அனல் போல் சுரங்காயும்; இருமல், கபம், தலைவலி, பொறிகலக்கம், தலைநடுக்கம், வாந்தி, வாயில்நாமுள் தோன்றும்; இருவிலாவும் இழுக்கும்: கண்மிரளவிழித்து நீர்வடியும், வேப்பம் பூப்போல் கழியும்.

மருத்துவம்:

1. கடுக்காய், சீரகம் 1 வராகன் எடை பொடித்துக் கற்றாழஞ் சாற்றில் கலக்கி ஒரு சங்கு வீதம் மூன்று நாள் கொடுக்க நீங்கும்.

2. சங்கங்கொழுந்து, நெருஞ்சிக்காய், மிளகுத் தக்காளியிலை, மஞ்சள், ஈருள்ளி சமனாய்த்தட்டிச் சாறுவாங்கி ஒரு சங்கு அளவு கொடுக்க நீங்கும். மணத்தக்காளிச்சாறு, அத்திப்பால், ஆமைப்பால் (பசுப்பால், ஆட்டுப்பால்) சமன்கலந்து துட்டெடை கொடுக்க நீங்கும்.

கெந்தாளி நோயின் இயல்பு

வாயும் தொண்டையும் புண்ணாகி நாறும்; உடல் வெதும்பி நீர் வெந்நீர் போலிருக்கும்; மலந்தீயும்; நித்திரை மிகும்.

மருத்துவம்:- பழம்பாசி, வல்லாரை, ஈருள்ளி சமனாயிடித்துச் சாறுவாங்கி சுரசஞ்செய்து வெள்ளாட்டுப்பாலில் கலந்து சீரகத்தை வெதுப்பிப் பொடித்துத் தூவிச் சங்களவு கொடுக்கத் தீரும்.

பால் உண்ணாக் குழந்தைகளுக்கு மருந்து

மூக்குரட்டை, அவுரி, சத்திச்சாரணை, அமுக்குரா, நிலப்பனை இவைகளின் வேர், கருங்காலியிலை, கஞ்சாங்கோரை, மிளகரணைப் பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, பறங்கிப்பட்டை, பேரரத்தை, கடுகு, சீரகம் வகைக்கு 1 வராகன் எடை, பசுவின் பால் விட்டு அரைத்து வடிகட்டி ஒரு சங்கு புகட்டக் குழந்தை பால் உண்ணும், மேற்படி மருந்தைச் சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு எரித்துப் பதத்தில் வடித்துக் குழந்தையின் வயதுக்குத் தக்கபடி கொடுக்கப் பால் உண்ணும்.

இளைப்பு, இருமலுக்கு மருந்து

1. இண்டு தூதுவேளை, கண்டங்கத்திரி வகைக்கு ஒரு பிடி இலை, திப்பிலி, வெள்ளைப்பூண்டு வகைக்கு ஒரு துட்டெடை ஒருபடி நீரில் தட்டிப்போட்டுக் காய்ச்சி சங்களவு காலை, மாலை பத்துநாள்கள் கொடுக்கத் தீரும்.
2. தூதுவேளை, கண்டங்கத்திரி, செம்முள்ளி, ஆடாதோடை, சங்கு இவைகளின் இலை வகைக்கு ஒரு பிடிவீதம் இடித்துப் பிட்டவித்துச் சாறு பிழிந்து அதில் கடுகு, மிளகு, இந்துப்பு,

சிறுதிப்பிலி வகைக்குக் கால் பலம் வெதுப்பிப் பொடித்துத் தூவிக் கொஞ்சம் தேன்விட்டு சங்களவு கொடுக்கத்திரும்.

3. பெருந்தும்பைக் கொழுந்து, சுக்கு, வெண்காரம், ஓமம், மிளகு, வசம்பு சுட்டசாம்பல் இவைகளை ஒருநிறையாய் எருமைமோரில் அரைத்துச் சங்களவு கொடுக்கத் தீரும்.

4. அதிமதுரம், கோட்டம், திரிகடுகு, இந்துப்பு, திரிசாதம், கடுகுரோகணி, அரத்தை, அக்கிராகாரம், தேற்றான்விதை, வெளிச்சிப்பிசின் வகைக்கு 1 கழஞ்சு, ஆடாதோடைச் சாற்றில் 3 சாமம் அரைத்துத் தூதுளங்காய் அளவு உருட்டி உலர்த்திக்கொண்டு தேனில் கொடுக்கத் தீரும் (திரிசாதம் = சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம்.)

5. திப்பிலி 1 வராகன் எடை, வெளிச்சிப்பிசின், கஸ்தூரிமஞ் சள், களிப்பாக்கு வகைக்கு அரைக்கால் வராகன் எடை, 1 மாதுளம்பழம், இண்டங்கொழுந்து எலுமிச்சங்காய் அளவு இவைகளை அரைத்து உழக்கு நெய்யில் வேகவைத்து கரண்டி நிறை இரண்டு நேரங்கொடுக்க நீங்கும். இருமல் உண்டாகும். வாந்தியும் தீரும்.

6. காற்படி ஆடாதோடை இலைச்சாற்றில், சுக்கு, திப்பிலி வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கி முறித்துத் துட்டெடை தேனில் கொடுக்க தீரும்.

7. கற்கடகசிங்கி, சிறுதேக்கு, திரிபலை, திரிகடுகு, சீதேவி செங்கழுநீர், கோட்டம், மரமஞ்சள், சிறுவழுதலைவேர் வகைக்கு 1 பலம் பொடித்துத் திரிகடி அளவு தேனிலாவது வெந்நீரிலாவது கொள்ள நீங்கும்.

8. வெளிச்சிப்பிசின், மிளகு, முத்தக்காசு, திப்பிலி, கருஞ்சீரகம் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை இளவறுப்பாய்த் தூள் செய்து திரிகடுகுத் தூளில் கடிகையளவும் துட்டெடை தேனும் வெள்ளுள்ளித் தைலமும் சமனாய் விட்டுக் கலந்து மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

9. இண்டு வேளை, தூதுவேளை இவைகளின்வேர் வகைக்கு 1 பலம், சுக்கு, திப்பிலி, வெந்தயம் ½ வராகன் எடை தட்டி ஒருபடி நீரில் போட்டுக் குடிநீர் செய்து 2 அவுன்ஸ் அளவு கொடுக்கத் தீரும்.

10. தேன், இஞ்சி, மாதுளம்பழம் இவைகளின் சாறுகளைச் சமமாகக் கலந்து துட்டெடை கொடுக்க நீங்கும்.

இளைப்பு, இருமல், சுழிகண வலிப்புக்கு மருந்து

அக்கிராகாரம், சிற்றரத்தை, கற்கடகச்சிங்கி, சடாமாஞ்சில், சிவதை, கஸ்தூரிமஞ்சள், சாதிக்காய், திப்பிலி, கிராம்பு, ஏலம், மாசிக்காய் வகைக்கு 1 வராகன் எடை; தூதுவேளை, செம்முள்ளி, வீழி இவைகளின் வேர் வகைக்கு ½ பலம்; துளசிஇலை, தேள் கொடுக்கிலை, சிறுகீரை வேர், வில்வவேர் வகைக்கு ¼ பலம் இவைகளைப் பசுவின் பாலில் அரைத்து, ஒரு படி பசுவின் நெய்யில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் காசெடை கொடுக்கத் தீரும்.

உண்ணாக்கு வளர்ந்தது சுருங்க மருந்து

நவச்சாரம், கற்சுண்ணம் இரண்டும் எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து உண்ணாக்கில் தடவ நீங்கும்.

கக்குவான் நோய்க்கு மருந்து

1. தூதுவேளைச் சாறும், பசுவின் நெய்யும் சமனாகக் கலந்து கோட்டம் 1 வராகன் எடை தட்டிப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி ஆழாக்கு வீதம் கொடுக்கத் தீரும்.
2. மயிலிறகுச் சாம்பலும் மிளகுச் சாம்பலும் சமனாய்ப் பொடித்து பசுவின் நெய்யில் கலந்து கழற்சிக்காயளவு கொடுக்கத் தீரும்.

மயக்கம், சோகம், நாவறட்சிக்குக் குடிநீர்

கோட்டம், சீரகம், ஏலம், சுக்கு, வில்வவேர், அதிமதுரம், ஆமையோடு, சந்தனம், கலைக்கொம்பு, வறட்பூலாவேர், நெற்பொரி ஆகியவை வகைக்கு ஒரு பலம் அளவு எடுத்துக் குடிநீர் செய்து காலாழாக்கு வீதம் கொடுக்கத் தீரும்.

தாகத்துக்கு மருந்து

1. ஏலம், அதிமதுரம், பற்பாடகம், சீந்தில், அறுகுவேர், சந்தனம், வில்வப்பழம், விலாமிச்சம், வேப்பீர்க்கு இவை

களைச் சமனாய் நறுக்கி இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் காற்படியாய் வற்றவைத்துச் சிறுவர்க்கும் பெரியோர்க்கும் கொடுக்கத் தீரும்.

2. புளியம்பட்டை, மிளகு, புங்கு, வேலிப்பருத்தி, நாயுருவி இவைகளின் இலைச்சாம்பல் சமனாய்க் கூட்டி ஓமம் ½ வராகன் எடை பொரித்து நீர்விட்டுக் காய்ச்சி இடித்து கால் ஆழாக்கு கொடுக்கத் தீரும். இவைகளெல்லாம் இச்சாபத்தியம்.

வண்டுகடிக்கு மருந்து

கம்பளி சுட்ட சாம்பலையும், புகையூரலையும் வேப்பெண் ணெயில் குழைத்து அபானத்தில் வைக்கத் தீரும்.

கணையத்தி கழிச்சல், இருமல் பிணி, தாகம், வறட்சிக்கு மருந்து

அதிமதுரம், கோட்டம், திப்பிலி, திரிசாதம், சந்தனம், சாத்திரபேதி, இலவங்கம், இலவங்கப்பத்திரி, பற்பாடகம், வசுவாசி 1 வராகன் எடை, கோரோசனை 4 வராகன் எடை இளநீரில் அரைத்துக் குன்றிபோல் உருட்டிக்கொண்டு சர்க்கரையில் கொடுக்கத் தீரும்.

குழந்தைகட்கு மேலில் வெள்ளைக்கொப்பளம் வெடித்தலுக்கு மருந்து

1. விலாமிச்சம் வேர், செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம் இவைகளைச் சமமாய் அரைத்துப் பூசத் தீரும்.
2. ஆவாரை இலையும், அல்லி இலையும் செங்கழுநீர்கட்டியில் அரைத்துப் பூச நீங்கும்.

வயிற்றுப் பொருமல், வலிமாந்தத்திற்கு மருந்து

ஒரு வசம்பைச் சட்டியிலிட்டுக் கருக்கி அதில் கோட்டம் 2 வராகன் எடை, ஓமம் 2 வராகன் எடை கூடப்போட்டு ஓமம் பொரியும்போது ஒரு படி தண்ணீர்விட்டு அரைத்துக் கால்படியாய் வற்றவைத்து கொடுக்கத்தீரும்.

சாம்பல், மண் தின்றதற்கு மருத்துவம்

கீழ்க்காய் நெல்லிவேர் 1 வராகன் எடை, கடுக்காய்த்தோல் 2 வராகன் எடை, மிளகு 3 வராகன் எடை புளித்த மோரில் அரைத்துக் கலக்கி சங்களவு மூன்று நாள் கொடுக்க தீரும்.

தொங்கல், ஆமம், மாந்தக் கழிச்சலுக்கு மருந்து

வெள்ளாட்டுப் புழுக்கை, முச்சந்திமண், ஆவாரங் கொழுந்து, வகைக்கு ஒரு பிடி; வசம்பு 1 வராகன் எடை இவை களைச் சட்டியில் போட்டுத் தீப்பிடித்து வெந்தபின் வெந்தயம், ஓமம் வகைக்கு 4 வராகன் எடை போட்டு ஓமம் எரியும்போது இரண்டுபடி தண்ணீர் விட்டுக் கால்படியாய் வற்றவைத்து சங்களவு மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

எண்ணெய் தொங்கலுக்கு மருந்து

1. மண்ணாங்கட்டியைச் சட்டியில் போட்டுப் பழுக்க வறுத்து ஒரு படி தண்ணீர் விட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து 3 வேளை கொடுக்க தீரும்.
2. ஒரு பலம் சிகைக்காயைத் தட்டித் தண்ணீரில் ஊற வைத்து ஒரு சங்கு தண்ணீரில் கொடுக்கத் தீரும்.

கக்குவானுக்கு வேறு பொதுமருந்து

வௌவாலையாவது வெள்ளெலியையாவது புலி உப்புக் கண்டத்தையாவது அதன் தோலையாவது நத்தைச் சதையாவது பசும்நெய்யில் வேகவைத்துக் கழற்சி அளவு கொடுக்கத் தீரும்.

குழந்தைகளின் விதைவாதத்திற்கு மருந்து

1. குழந்தைகட்கு விதையைப்பற்றிப் பக்கத்தில் உப்பிசமாய் கண்டதானால் அதன் தொண்டையைக் கையினால் நிமிட்டி நரம்புத் தடிப்பைப் பார்த்துக் கதிரை வெதுப்பிக் கொண்டு விதைக்கு 8 விரற்கடைக்குக்கீழ் சுட்டித்துப் பணவெடை பெருங்காயத்தை வெள்ளைப் பூண்டில் வைத்துச் சுட்டு மூன்றுநாள் கொடுத்து விளக்கெண்ணெயில்

மஞ்சள் பொடியைப் போட்டு கலந்து புண்ணில்போட்டுப் பொங்கிக் புண்ணாகி ஆறும்போது விதைவீக்கம், அண்டவாயு வாதம் தீரும்.

2. முடக்கொத்தான் சாறு, விளக்கெண்ணெய் வகைக்குப் படி; அதில் ஒரு கோழிமுட்டை வெள்ளைக்கருவை ஒன்றாய்க் கலந்து அரிந்த ஈருள்ளி ஒரு சிரங்கை, ஒரு கழற் பருப்பு அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி மூன்று நாள் கழற்சிக்காய் அளவு கடுகையும், கரண்டி அளவு எண்ணெயும் குடிக்கத் தீரும்.

3. சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, ஓமம், வெள்ளுள்ளி, கழற்சிப்பருப்பு, வேப்பங்கொழுந்து வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் அரைத்து ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு சிறு கரண்டி வீதம் இரு நேரம் உட்கொள்ளத்தீரும்.

4. சாரணைவேர், முடக்கொத்தான் வேர், சுக்கு, கழற்சி பருப்பு வகைக்கு 1 பலம் தட்டிப்போட்டுக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்க நீங்கும்.

5. சுக்கு, மிளகு வகைக்கு 1/8 பலம், நொச்சி இலை ¼ பலம், பூண்டு ½ பலம், கழற்சிப் பருப்பு 2 பலம் இவைகளை அரைத்து அரைப்படி சிற்றாமணக்கெண்ணெயில் சிவக்கக் காய்ச்சி ஒரு சங்கு வீதம் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

6. வசம்பு, கழற்சி இலை, உள்ளி வகைக்கு 1 பலம் தட்டி வெதுப்பி ஒற்றடமிடவும். குட்டித்தக்காளி இலையும், தைவேளை இலையும் வெதுப்பித் தட்டிக் கட்டத் தீரும்.

7. கோழிமுட்டையின், வெள்ளைக்கருவில், கழற்சிப்பருப்பு ஒரு வராகன் எடை, சிற்றாமுட்டி இலையும் அரைத்துப் போட்டுப் பொரித்து மூன்று நாள் உட்கொள்ள நீங்கும்.

8. தைவேளை, முடக்கொத்தான், மேனி, மூக்கரைச் சாரணை வேர், சவுரி வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்ற வைத்து இறுத்து அதில் இரண்டு முற்றினதேங்காயைத் திருகிப்போட்டுப் பால் பிழித்து ஒரு படி விளக்கெண்ணெயில் கலந்து

திரிகடுகு, வெள்ளுள்ளி, ஓமம், கழற்சிப்பருப்பு வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு சிறு கரண்டி வீதம் பத்தியமாய் மூன்று நாள் உட்கொள்ள நீங்கும். இச்சாபத்தியம்.

மசரைப்புழு நோயின் இயல்பு

1. சீதளமாகி தண்ணீர் போலும், கருத்த நிறமாயும், கத்திரிக் காயைக் கசக்கிப் பிழிந்த சாறுபோலும் பிரவிர்த்தி (கழிச்சல்) ஆகும்.
2. மலம் கருகி நின்று எருவாயில் குத்திக் குமுறிக் கருகி விழும். மலத்துடன் சீதஞ்சிதறிக் காணும். உதப்பைத் தள்ளும். கீழ் வயிறு உளைந்து காணும்.

மருத்துவம்:

1. மஞ்சள், ஈருள்ளி, திரிகடுகு, வசம்பு, ஏலம், சிறுபீளைவேர், சுரைமீன் தலைக்கல் வகைக்கு ஒரு பலம் வீதம் தூக்கிச் சிறுபீளை சாற்றாலாட்டி உழக்கு மேதி நெய்யில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி மெழுகு பதமாய் வடித்து ஒரு காசெடை கொடுக்கத் தீரும்.
2. உழக்கு பசுவின் நெய்யில் நாயுருவி, மேனி, கொழிஞ்சி தூதுவேளை, சுட்ட வசம்பு, சுக்கு, மஞ்சள் வகைக்கொரு பாக்களவு அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி கரண்டி நிறை கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வயிற்று நுண்புழு விழுதலுக்கு மருந்து

1. எலிச்செவிபச்சிலையும், முருங்கை வேரும், திரிபலையும் நறுக்கிக் குடிநீர் செய்து, சங்களவு கொடுக்க நாக்குப் பூச்சி விழும்.
2. பாகற்சாறு, கழற்சிச்சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு உழக்கு; ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, கரந்தை, இரச கற்பூரம், உள்ளி, வசம்பு வகைக்கு ஒரு வராகன் எடை அரைத்துப் போட்டு, எரித்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

3. ஓமம், புரசவிதை, பேய்ப்பீர்க்கு, பிரண்டை வகைக்கு 1 பலம் இடித்து அரைப்படி நீரில் போட்டு நாலில் ஒன்றாய் வற்றவைத்து மூன்று நாள் கொடுக்கப் பூச்சிகள் பந்து பந்தாய் விழும். இச்சாபத்தியம்.

மலம், சிறுநீர்க்கட்டுக்கு மருந்து

இலைக்கள்ளி வேர்ப்பட்டை 5 பலம்; மிளகு, உள்ளி, சுக்கு, கடுக்காய் வகைக்கு 1 ¼ பலம் வெய்யிலில் காய வைத்துப் பொடித்துத் துணியில் வடிகட்டி குழந்தைகளின் வலிமையறிந்து தாய்ப்பாலில் அல்லது வெந்நீரில் ஒரு காசெடை கொடுக்கத் தீரும்.

கழிச்சல் வகுப்பு பூபதி மாத்திரை

தூய்மை செய்த இரசம், சுக்கு, பொரித்த வெண்காரம், கெந்தகம் வகைக்கு 1 வராகன் எடை; நேர்வாளம் 4 வராகன் எடை இவைகளைக் கற்றாழைச் சாற்றில் 3 சாமமும், நெல்லிக் காய்ச் சாற்றில் ஒரு சாமமும் அரைத்துப் பயறளவு மாத்திரை (உருண்டை) செய்து ஒரு உருண்டை தண்ணீரில் கொடுக்க ஊதுமாந்தம், பொருமல், வாதம் நீங்கும், பத்தியமில்லை.

அமிர்த சஞ்சீவி இலிங்கக் குழம்பு

சாதிலிங்கம் ஒரு பங்கு, வெண்காரம் இரண்டு பங்கு, ஆமணக்கின் பருப்பு நாலுபங்கு, வாளம் எட்டு பங்கு இவைகளைத் தூய்மை செய்து அரைத்துக் குன்றி அளவு கொடுத்துக் குளிர்ந்த தண்ணீர் கொடுக்கக் கழிச்சலாகும். வெந்நீர் கொடுக்கக் கழிச்சல் கட்டும்.

வேறுவலகைக் கழிச்சலுக்கு மருந்து

வெள்ளைக்காக்கணான் வேர், திப்பிலி வகைக்கு 1 வராகன் எடை, மிளகு 2 வராகன் எடை தண்ணீர் விட்டரைத்து ஒரு வராகன் எடை மருந்தைக் குளிர்ந்த தண்ணீரில் கலந்து கொடுக்க வயிறு போகும். இச்சாபத்தியம்.

சண்பகப்பூ மாத்திரை

சண்பகப்பூ, ஏலம், இலவங்கம், கோட்டம், கடுகுரோகணி வகைக்கு 1 வராகன் எடை; தூய்மை செய்த வாளம் 5 வராகன் எடை; வெந்நீர்விட்டு அரைத்துக் கால் கழஞ்சு நிறையாய் உருண்டைசெய்து தேனிலாவது, சுக்குக் குடி நீரிலாவது கொடுக்கக் கழிச்சலாகும்.

இனிப்புள்ள சுகக்கழிச்சல் குழம்பு

2 ரஸ்தாளி வாழைப்பழம், திராட்சைப்பழம் 5 பலம், ஓமம், சுக்கு, மிளகு வகைக்கு 1 வராகன் எடை, கடுகுரோகணி 3 பலம், தூய்மை செய்த வாளம் 5 பலம் இவைகளைக் கல்வத்திலிட்டு நான்கு சாமம் ஆட்டி வழித்தெடுத்துக் கல்சாடியில் காற்றுப் போகாமல் அடைத்துக்கொண்டு காசளவு ஆப்பத்தில் தடவி அழுகிற குழந்தைக்குக் கொடுக்க, சப்பித்தின்னும். நல்ல சுகக் கழிச்சலாகும். கழிச்சல் அதிகமானால் வசம்பைச் சுட்டு இளவெந்நீரில் உரைத்துக் கொடுக்க கழிச்சல் நிற்கும். இச்சாபத்தியம்.

சுகக் கழிச்சல் எண்ணெய்

முருங்கைப்பட்டை, மூக்கரைச்சாரணைவேர், ஈருள்ளி இவைகளைச் சமமாய்த் தட்டிச் சாறு பிழிந்து அதற்கு நிகர் விளக்கெண்ணெய் விட்டு எரித்து கரண்டி, கொடுக்க மலபந்தம், கரப்பன், சிரங்கு தீரும். இச்சாபத்தியம்.

வைசூரி நூல் – வைசூரி விவரம்

பார்த்து வைசூரி நூல்தொகுப்பைப் பண்பாய் மாந்தர் தான்றிய
கோர்த்து தீபச் சூடனைத்துங் குறிப்புங் குணமும் சாத்தியமும்
தீர்த்துப் போக பண்டிதற்குத் திறமா யெடுத்த அட்டவணை
சேர்த்துப் பிணியுந் தானகலச் சிறக்க வறிந்து வுரைத்தோமே. 159

பனைமுகரி, பாலம்மை, வரகுதிரி, கொள்ளம்மை, கல்லுதிரி, கடுகம்மை, மொழுக்கன், உப்புதிரி, கரும்பனிச்சை, வெந்தயம்மை, பாசிப்பயறம்மை, விச்சிரிப்பன் நீர்க்குளுவான், தவளை என வைசூரி பதினான்காம்.

உடம்பில் வெம்மை மிஞ்சி, மூலத்தில் சூடுகொண்டு மூளையில் அதிகக் கொதிப்புண்டாகி, எலும்பில் கனலேறி மேற்படி நோய்தோன்றுகிறது. மேற்படி நோய் கண்டபேரைக் கண்டு பயந்து இதயங் கலங்கினாலும் மேற்படி நோய் உண்டாகுமெனச் சொல்லப்படுகிறது.

பனைமுகரி அம்மையின் இயல்பு

காய்ச்சல் மிதமாய்க் காய்ந்து உடல் கடுக்கும்; கண்டதுண்டம் வீங்கும்; பெரும்பாடு, பிதற்றல், சன்னி தோன்றும்.

பாலம்மை நோயின் இயல்பு

அகோரமாய் காய்ச்சலடிக்கும்; மூன்று நாளில் இரவில் தலையில் குரு தோன்றி உடம்பு கடுக்கும்; 8ஆம் நாள் நீர் கோர்த்து 9ஆம் நாள் இறங்கும். பதினைந்தாம் நாளில் தலைமுழுக்குச் செய்யவும்.

வரகுதிரி அம்மையின் இயல்பு

காய்ச்சல் அதிகமாய்க் காய்ந்து மூன்று நாளில் தலையில் குருதோன்றும்; வாயால் இரத்தம் விழும்; 7ஆம் நாளில் நீர்கட்டி 11–ஆம் நாளில் இறங்கும்; நீர்த்தாரையில் புண் காணும்.

கொள்ளம்மையின் இயல்பு

காய்ச்சல், பிதற்றல், சுரசன்னி வலிப்புத் தோன்றி, மூன்று நாளில் தலையில் குரு தோன்றி, பதிமூன்றாம் நாளில் இறங்கும்.

கல்லுதிரி அம்மையின் இயல்பு

அகோர காய்ச்சல், கழிச்சல் வாந்தி கண்டு மூன்றுநாளில் தலையில் குரு தோன்றி 7ஆம் நாளில் சங்கங்கனிபோல் நீர் கட்டி 10ஆம் நாளில் இறங்கும். 11ஆம் நாள் தலைமுழுக்குச் செய்விக்கவும்.

கடுகம்மையின் இயல்பு

காய்ச்சலடித்த மூன்று நாளில் தலையில் கடுகுபோல் குரு தோன்றி, உடம்பெல்லாம் அதிகமாய் தடிக்கும்; கண்ணைக் கட்டும்; குரல் கம்மும்; கழிச்சல் காணும்.

மொழுக்கன் அம்மையின் இயல்பு

காய்ச்சல் மட்டாய்க் காயும்; உடலெல்லாம் கடுக்கும்; இடுப்பு, முழங்கால், உடல் வீங்கும். காந்தல் காணும்; 7ஆம் நாளில் குரு தோன்றும். மருந்து செய்யக் குணமாகும்.

உப்புதிரி அம்மையின் இயல்பு

காய்ச்சல் கண்டு மூன்று நாளில் தலையில் குரு தோன்றி உடம்பெல்லாம் உப்பு போலிருக்கும்; ஐந்து நாளில் நீர்கட்டி 7–ஆம் நாள் இறங்கும். 11ஆம் நாளில் தலைமுழுகச்செய்து அவிழ்தங் கொடுக்கத் தீரும்.

கரும்பனிச்சை அம்மையின் இயல்பு

1. காய்ச்சலடித்து 7ஆம் நாளில் தலையில் குரு தோன்றும்; உடம்பெல்லாம் குத்தும்; கருக்கும், வைசூரியுள்ளே வாங்கும்; கழிச்சல் மூர்ச்சை காணும்; மலம் கட்டினால் பதின்மூன்று நாளில் இறங்கும்; உடம்பெல்லாம் விரிந்து கனமாகிக் கிருமி உண்டாக்கும்; நினைவற்று சுவாசம் மேல் நோக்கும்; 21ஆம் நாள் சென்றால் தலைமுழுக்குச் செய்து அவிழ்தம் கொள்ளவும். இந்த நோய் கண்டவர்கள் பிழைப்பதரிது.

2. காய்ச்சல் குத்து; மூன்றாம் நாளில் தலையில் குரு தோன்றி 7ஆம் நாளில் நீர்த்தல் காட்டி 9ஆம் நாள் இறங்கும்; பதினைந்தாம் நாள் தலைமுழுக்குச் செய்யவும்.

3. காய்ச்சலும் பிதற்றலுமுண்டாகி, 3ஆம் நாள் தலையில் குரு தோன்றும்; 7ஆம் நாள் நீர்கட்டி 9ஆம் நாள் இறங்கும்; பதினேழாம் நாள் தலைமுழுக்குச் செய்து உடல் வலிமைபெற நீர் மோர் உணவு உட்கொள்ளவும்.

விச்சிரிப்பன் அம்மையின் இயல்பு

காய்ச்சலடிக்கும்; கண்சிவக்கும்; வாந்தி (கக்கல்) யும் கழிச்சலும் காணும்; மூன்றாம் நாள் தலையில் தோன்றி உடலெல்லாம் உமிபோல் வாயிட்டு மறையும்; 10ஆம் நாள் தலைமுழுக்குச் செய்யவும்; வயிற்று உளைவு காணும்.

நீர்க்குளுவான் அம்மையின் இயல்பு

காய்ச்சலடித்து மூன்றாம் நாள் சங்கன் கூழ்போல் தோன்றி 7–ஆம் நாள் இறங்கும்; 9–ஆம் நாள் தலைமுழுக்கு செய்து உடலைத் தணியச் செய்யவும்.

தவளை அம்மையின் இயல்பு

காய்ச்சல் கண்டு நடக்க வொட்டாது; சூலையைப்போல் வலிக்கும்; உணவு செல்லாது; 3ஆம் நாள் தலையில் குரு தோன்றி 9–ஆம் நாள் இறங்கும். 11ஆம் நாள் தலைமுழுக்குச் செய்யவும்.

அம்மை நோய் அதிகப்படாதிருக்க மருத்துவம்

1. கஞ்சா, பரிச்சால்வேரை நரம்பு நீக்கி அரைத்துப் புன்னங்காய் அளவு வெந்நீரில் கலக்கிக் கொடுக்க கக்கலும், கழிச்சலும் காணும்; பத்தியத்திற்குச் சுடுகஞ்சி கொடுக்க அம்மை (வைசூரி) அதிகப்படாது..
2. விளாயிலை, துரா இலை, மூக்கிரட்டை வேர், தவசி முருங்கைச் சமூலம், ஈருள்ளி இவைகளை நீராகாரத் தண்ணீர் விட்டு இடித்துப்பிழிந்து சீரகம் ஒரு வராகன் எடை அரைத்துக் கலக்கிக் கால்படி வீதம் மூன்று நேரம் கொடுத்தால் வைசூரி வேகம் தணியும்.
3. புளியிலை, கோழியவரைஇலை, ஈருள்ளி இவைகளை ஓர் எடையாய் இடித்து நீராகாரத் தண்ணீர் விட்டுப் பிழிந்து வடிகட்டிக் கால்படி வீதம் மூன்று நேரம் கொடுத்தால் வைசூரியின் அளவு மட்டுப்படும்.
4. வெள்ளைக் குங்கிலியத்தை அவுரி இலைச்சாற்றால் 4 சாமம் அரைத்துச் சிறு சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து உலர்த்தி அதில் ஓர் உருண்டையை வெந்நீரில் கொடுத்தால் அல்லது அந்த உருண்டையை வைசூரி கண்டபின்பு கொடுத்தாலும் வைசூரி அதிகப்படாது.
5. ஆள்காட்டிக் குருவிமுட்டை பத்தெட்டு உடைத்துவிட்டு அதில் கொஞ்சம் புழுங்கலரிசியை நனையத்தக்க

அளவுபோட்டுக் கருக்காமல் பதமாய் பொரித்துச் சிமிழில் அடைத்துக் கொண்டு காய்ச்சல் கண்டவுடனே அந்த அரிசியை இடது கையில் கொட்டி வலது கையால் திரிகடி ஒருபொழுது கொடுத்தால் வைசூரி அம்மைநோய்க் கட்டுப்படும்.

6. பழைய தோல்செருப்பைச் சுட்டுச் சாம்பலாக்கி அந்த நீற்றைத் திரிகடி அளவு வெந்நீரில் மூன்றுபொழுது கொடுத்தால் வைசூரி மட்டுப்படும். மேற்கொள்ளாது.

வைசூரியுடன் உள்ள கிரந்தியானால் மருந்து

1. இளநீரை மேற்பட்டைச்சீவி வெந்நீரில் அவித்துக் கண் திறந்து அந்த நீரில் தேற்றான் விதை, முத்தக்காசு வகைக்கு 5 வராகன் எடை அரைத்துக் கலக்கிக் கொடுக்க வைசூரி பூரிக்கும்.

2. சீரகத்தை மட்டும் அரைத்து இளநீரில் கலக்கி மூன்று வேளை கொடுத்தால் அம்மை பூரிக்கும்.

3. மேக்கிடாரிச் சாணிப் பாலில் பூநாகம், நற்சீரகம் வகைக்கு 5 வராகன் எடை அரைத்து 3 பொழுது கொடுத்தால் அம்மை நோய் பூரிப்படையும்.

4. பளிங்காயிருக்கிற கருடப்பட்சி, கலைமான்கொம்பு, காண்டாமிருகத்தின் கொம்பு இம்மூன்றும் வகைக்கு 5 வராகன் எடை அரைத்து மான்கொம்பு ஊறின தண்ணீரில் கரைத்துக் கால்படி வீதம் கொடுத்தால் பூரிப்புநிலை எய்தும்.

5. பிராய் மரத்தின் இலையைப் (குட்டிப்பலா), புதுச்சட்டியி லிட்டு நீராகாரத் தண்ணீர் விட்டு நன்றாய் அலசி அரைக்கால்படி வீதம் 3 வேளை கொடுத்தாலும் வைசூரி பூரிக்கும்.

வைசூரியின் பேரில் பெருங்கழிச்சல் கண்டால் பரிகாரம்

1. பிச்சி இலையைப் புதுச்சட்டியில் இட்டு நீராகாரத் தண்ணீர் விட்டு நன்றாய்க் கழுவி அரைக்கால்படி நீர் வீதம் மூன்று வேளை கொடுத்தால் கழிச்சல் நிற்கும்.

2. சுக்கு, வேப்பீர்க்கு, எலுமிச்சம் வேர், கோரைக்கிழங்கு ஆகியவைகளை இள வறுப்பாய் வறுத்துக் குடிநீர் செய்து அரைக்கால்படி வீதம் கொடுத்தால் கழிச்சல் நிற்கும்.

3. ஆல், அத்தி, இத்தி, அரசு, மாம்பிஞ்சு, துத்தி, கசகசா இவ்வகைச் சருகுளைச் சேர்த்துக் குடிநீர் செய்து கொடுத்தால் கழிச்சல் நிற்கும்.

4. பொன்முசுட்டை, கிராம்பு, வேப்பீர்க்கு இவைகளை ஓர் எடையாய்க் குடிநீர் செய்து கொடுத்தாலும் பெருங் கழிச்சல் நிற்கும்.

வைசூரியின்பேரில் கடுப்பு, சீதம், இரத்தம் கண்டால் மருத்துவம்

1. முற்றின நாவற்பட்டையைப் பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்து வடிகட்டி அரைக்கால்படி வீதம் 3 வேளை கொடுத்தால் கடுப்பு, சீதம், இரத்தம் நிற்கும்.

2. ஆவாரைப் பஞ்சாங்கத்தை ஓர் எடையாய்ச் சட்டியிலிட்டு வறுத்து நீர்விட்டுக் குடிநீர் செய்து மூன்று பொழுது கொடுக்க வைசூரியில் தோன்றும் மேற்கண்ட பிணிகள் தீரும். பழைய மாங்கொட்டையைத் தட்டி இளவறுப்புச் செய்து அரைத்து நீராகார நீரிலாவது, தயிரிலாவது அரைத்துக்கொடுக்க மேற்கண்ட பிணிகள் தீரும்.

3. முற்றின கல்லத்திவேர்ப்பட்டை, ஈருள்ளி, சீரகம் வகைக்கு 5 வராகன் எடை, வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கலக்கி அரைக்கால் படி வீதம் மூன்று பொழுது கொடுக்க குறிப்பிட்ட பிணிகள் தீரும்.

4. நீர்க்குடங்களிலிருக்கும் அடிமண்டியைத் தேற்றான்விதை பற்றி தெளிவாய் இறுத்து அதில் கருவேப்பிலை ஈர்க்கு, கிராம்பு, மிளகு வகைக்கு 1 கழஞ்சு சேர்த்து வறுத்தரைத்துக் கொடுத்தால் தீரும்.

5. ஈருள்ளியைப் பசும் நெய்யில் வேகவைத்துக் கொடுத்தால் தீரும்.

6. இரண்டு வில்வப்பழத்தைச் சிதைத்து வறுத்து ஒரு படி நீர் விட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி அதில் அதிவிடையம், கிராம்பு வகைக்கு ஒரு காசெடை வறுத்துப் பொடித்துப் போட்டு மூன்று நாள்கள் உட்கொண்டால் மேற்படி பிணிகள் அகலும். ஈருள்ளிச்சாறு, பசும்நெய் இரண்டையும் சமமாகக் கலந்து அரைக்கால் படி வீதம் மூன்று பொழுது உட்கொள்ளக் கடுப்பு, இரத்தம், சீதம் நிற்கும்.

வைசூரியின்பேரில் தொடர்கழிச்சல் கண்டால் மருந்து

1. சீந்தில், கோரைக்கிழங்கு, மேல்தோல் நீக்கிய சுக்கு வகைக்கு 5 வராகன் எடை வெதுப்பிக் குடிநீர் செய்து கொடுத்தால் வைசூரி நோயில் தோன்றும் தொடர்கழிச்சல் தீரும்.

2. மான் கொம்பைக் கோவையிலைச் சாற்றில் மூன்று நாள் ஊறவைத்து அதற்கு மேற்படி இலையை அரைத்துக் கவசம் செய்து 21 நாள் எருவில் புடம் போட பற்பமாகும். அந்தப் பற்பம் 1 வராகன் எடை, மான் கொம்பு ஊறின நீரில் கலக்கிக் கொடுத்தாலும் தீரும்.

வைசூரியில் கபம் நெஞ்சில்கட்டித் தொண்டை கம்மினால் மருந்து

1. கற்பூரவள்ளிச் சாறு அரைக்கால் படியில், கோரோசனை 1 ¼ வராகன் எடையை உரைத்து உள்ளுக்குக் கொடுக்க கபம் நீங்கும்.

2. மாதுளம் பூவைக் குடிநீர் செய்து அதில் கொஞ்சம் தேனும், எலுமிச்சஞ்சாறும் கலந்து கொப்பளிக்கத் தொண்டை கம்மல் உடனே தீரும். இதை உட்கொள்ளலாகாது.

வைசூரியின்பேரில் சுரம் கண்டால் மருந்து

1. எலுமிச்சம் வேர்ப்பட்டை, ஏலம், சீந்தில், விலாமிச்சு, பற்பாடகம், சந்தனம், கோரைக்கிழங்கு வகைக்கு 5 வராகன் எடை நறுக்கிப்போட்டுக் குடிநீர் செய்து மூன்று பொழுது கொடுத்தால் வெப்பு நீங்கும்.
2. மகரப்பூ 5 வராகன் எடை குடிநீர் செய்து அதில் கோரோசனை ¼ வராகன் எடையை உரைத்து அரைக்கால் படி வீதம் மூன்று பொழுது கொடுக்க சுரம் நீங்கும்.

வைசூரியினால் மலம், சிறுநீர் கட்டி வயிறு உப்பிசங் கண்டால் மருந்து

ஈருள்ளி, கற்கண்டு வகைக்கு 5 வராகன் எடை, அரைத்து ஆமணக்கெண்ணெய் 1/8 படியில் கலக்கி உட்கொள்ள மலம், சிறுநீர் வெளியாகி உப்பிசமுந் தீரும்.

தாகத்திற்குக் கலைக்கொம்புத் தண்ணீர்செய்யும் முறை

கலைமான் கொம்பை ஊறவைத்து நன்றாய்க் கழுவி உராவின தூள் 2 பலம் சுடுநீரில் போட்டு ஊற வைத்துக்கொண்டு அந்தத் தண்ணீரைத் தாகத்துக்கு வைசூரி கண்டிருக்கும்போது கொடுத்துவர உடலுக்கு ஆரோக்கியமும், சுகத்தையும் தரும். சில மருந்து முறைகளில் கலைக்கொம்புகளைச் சேர்த்துக்கொள்ளும்படி சொல்லி இருப்பதால் அதற்கு இந்த முறைப்படி செய்து உபயோகப்படுத்தவும்.

வைசூரியினால் கண்ணில் நோவு கண்டால் பரிகாரம்

1. சீரகத்தைத் துணியில் பொட்டலம் கட்டி தாய்ப்பாலில் ஊற வைத்து நீரில் ஒற்றடம் செய்தால் கண்ணில் தோன்றிய வேதனை தீரும்.
2. சுடுசோற்றில் வெண்ணை கலந்து சீலையில் பொட்டலம் கட்டி நீராகார நீரில் தோய்த்துக் கண்ணில் ஒற்றடம் செய்ய கண்விதன நோய் தீரும்.

விழியில் வைசூரி வராதிருக்க மருத்துவம்

வைசூரிக் காய்ச்சலடிக்கும்போது ஈருள்ளியை வறுத்து மனிதன் வாயில் மென்று கண்ணில் ஊத வைசூரி கண்ணில் வராது.

வைசூரியில் வாயால் இரத்தம் கக்குவதற்கும், நீர்த்தாரையில் இரத்தம் காணுவதற்கும் மருந்து

நன்னாரி வேர்த்தோல், கலைக்கொம்பு வகைக்கு 2 வராகன் எடை, பூநாகம் (மண்புழு) ஐந்தெடுத்து நன்றாய்க் கழுவி அவைகளுடன் சேர்த்துச் சாந்துபோல் அரைத்துக் கொம்பு ஊறின தண்ணீரில் கரைத்து அரைக்கால்படி விகிதம் மூன்று பொழுது உட்கொள்ள வாயில் இரத்தம் கக்குவதும், நீர்த்தாரையில் இரத்தம் கசிவதும், நீர்த்தாரையில் இரத்தம் விழுவதும் சன்னி தோடம், வைசூரி கிராந்துதலும் தீரும்.

வைசூரியினால் நேரிடும் சூலைகட்கு மருந்து

பழங்கூரை வைக்கோலும், வேப்பிலையும் சேர்த்து அவித்து 3 நாள் வரை வேதுவிட்டு ஒற்றடம் இட்டுக் கட்ட சூலை நீங்கும்.

ஆறாத வைசூரி புண்ணுக்கு மருந்து

முற்றின தேங்காயைத் திருகி அதில் புளிய விதையின் மேல் தோலைப் பொடித்துப் போட்டுப் பிசைந்து பிழியத் தைலம் வரும்; அதைப் புண்ணில் போட ஆறும்; வீக்கத்தில் தடவ வற்றும்.

வைசூரி இறங்கினபின் நடப்பிக்கும் விதிமுறை

பருத்திப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, சாதிக்காய், நற்சீரகம் இவை ஓர் எடையாய் மோரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். அப்பால் வேப்பிலையும், மஞ்சளும், அறுகும் ஓர் எடையாய் அரைத்து உச்சி முதல் பாதம்வரை தேய்த்துக் குளிர்ந்த காலத்தில் ஒன்று விட்டொரு நாளாக மூன்று முறை தலைமுழுக்குச் செய்விக்க வேப்பிலையும், மஞ்சளும் அரைத்துப் புண்ணில்

பூசிய பின் தயிரைத் தேய்த்துக் குளிர்ந்த நீரில் முன்போல் மூன்று முறை தலைமுழுக்குச் செய்வித்து அதன் பேரில் அவரை இலையை மோரில் அரைத்துத் தலையிலும் உடலிலும் தேய்த்துக் குளிர்ந்தநீரில் மூன்று முறை தலைமுழுக்குச் செய்வித்து அப்பால் ஆமணக்கெண்ணெயைத் தேய்த்து உச்சியில் அரைப்பிட்டுத் தலைமுழுக்கு செய்வித்து நீர் மோர் சோறும், ஈருள்ளியும் உண்பிக்கச் செய்தால் உடல் குளிர்ந்து வலுவடையும். மேற்படி நோய் கண்டவர்களுக்கு உடலிலுள்ள உள்ளுறுப்புகள் வலிமை கெட்டிருப்பதால் ஆறுதிங்கள் செல்லும் வரை காரமான மருந்துகள் கொடுக்கலாகாது. கொடுத்தால் நோயை விளைவிக்கும்.

மறுமுள்ளின் இயல்பு

வைசூரி இறங்கு முன் தலைமுழுக்குச் செய்வித்தால் சுரம் காய்ந்து மறுமுள் புடைத்து இரணங்காணும்.

மருத்துவம்:- சாதிக்காய், நறுக்குமூலம், கிராம்பு, சீரகம் வகைக்கு 5 வராகன் எடை பொடித்துக் குடிநீர் செய்து அதற்குச் சமன் நிம்பச்சாறும், ஈருள்ளிச் சாறும் சேர்த்து முறித்துக் கொஞ்சம் தேன்விட்டு மத்தித்து அரைக்கால் படி வீதம் மூன்று பொழுது கொடுத்து வட்டத்துத்தி இலையும் சூடனும் சமன் சேர்த்து அரைத்து ஆமணக்கெண்ணெயால் குழைத்து மறுமுள் உள்ள இரணத்தின் பேரில் பூச ஆறும்.

வைசூரியினால் கண்ணில் பூ விழுந்தால் மருத்துவம்

1. பனங்குருத்தைத் தட்டிக் கண்ணில் பிழிந்தால் வைசூரியினால் உண்டான கண்பூ மாறும்.
2. முருங்கைப்பூ, நெருஞ்சிப்பூ, நந்தியாவட்டப்பூ, சீரகம் ஒன்றாய்ச் சேர்த்துத் தட்டிக் கண்ணில் பிழிந்தாலும் கண் பூ மாறும்.

மருத்துணவு (பத்திய உணவு) :- எலுமிச்சம்பழம், பழம்புளி, நெல்லிக்காய், பனங்கற்கண்டு, கெளுத்திக் கருவாடு, பாசிப் பயறு, குறவைக் கருவாடு, வெள்ளாட்டு உப்புக்கண்டம்,

காடை, வெள்ளெலி, உடுப்பு, ஊர்க்குருவி, வாழைக்கச்சல், அத்திப்பிஞ்சு, நீர் மோர், ஈருள்ளி முதலியன.

பத்தியத்திற்கு ஆகாத உணவுப் பண்டங்கள்

மருத்துணவு அல்லாத உணவுகள்:- *மாங்காய், தேங்காய், இலுப்பை எண்ணெய், நல்லெண்ணெய், சோற்றாவி, நெல்லாவி கொட்டை முத்தாவி, தாளிதவாடை இந்த வாடைகள் உடலில் பட்டால் கடுஞ்சூலை, கடுப்பு, கைகால் முடக்கல் உண்டாகும்.*

(பாலவாகடப் படலம் முற்றிற்று.)

கண் மருத்துவப் படலம்

கண்களில் தோன்றுகிற பலவித நோய்களும் அவை களுக்கான மருத்துவமும் கூறுதலாம் நயனநோய் விவரம்.

சொல்லு மனித ரானவர்க்குத் தொகுத்த ரோக நயனவிதி
புல்லுந் தொண்ணூற் றாறுவிதம் புகன்றார் முனிவ ரானவர்கள்
அல்லும் வியாதி தானகல அறைந்தார் மருந்து பலவிதமாய்
வல்ல வாயுள் மறைகண்டு வகுத்துச் செய்வோர் பண்டிதரே. 159

பாரும் வாதக் காசமெனப் பகர்ந்த பித்த காசமுமாம்
சேருஞ் சிலேத்ம வதிகாசஞ் சிவந்த நீல காசமுமாம்.
தீருங் குமரி காசமுடன் திரைநீ ரோடி காசமுமாம்
காரு மந்தார காசமுடன் கழறு மிரத்த காசமுமே. 160

மேவு முடஞ்ச லகும்பம் விளங்கும் படலம் பில்லமுடன்
தாவு மாலைக் கண்விழுங்கி தனியாம் வெண்மா சுப்படலம்
பாவு மணியா மளர்த்தியுடன் பகரு மந்த மதிமந்தம்
ஆவும் பருவணி சுற்றுங்கண் அறையிஞ் சுருங்கு கண்ணாமே. 161

ஆமே விளைவு காசலெறி யன்ன கோபம னல்கோபம்
தாமே புகைச்சல் பற்பரோகம் சாற்றும் ஒட்டுக் கண்பிணியாம்
போமே நேத்திர மலங்களுடன் புகலு பாய்ச்சல் நீரருகல்
நாமே சொன்னோங் கண்பிரிவு நவின்றார் செவ்வேர்க் குந்தமுமே. 162

குந்த மசுகர நமரமுடன் கூறு மரக்கம் கண்கட்டி
சந்தம் மிருகண் செவ்வரி சாறுங் கூச்சம் ஆணிப்பூ
பந்தம் நேத்திர வாயுவுடன் பகரும் புழுவெட் டாணியென
தந்தம் வலிப்பு வெள்ளெழுத்து சாரும் நேத்திர ரவிபாரே. 163

பாரே யழற்சி விழிநேத்ரப் பகருங் குருடு செஞ்சுடராம்
நேரே யெழுச்சி புளிச்சக்கண் ணிறைந்த யிளிகண் ணழிகண்ணாம்
கூரே முடமயிர்க் கண்ணிறைச்சி குறிக்குந் தொண்ணூற் றாறுபிணி
பாரே முனிவர் மாந்தர்கட்கு பகுத்தார் வியாதி தொகுத்தாரே. 164

[அ. பொ.] *புல்லும் = அணையும்; அல்லும்வியாதி = கண்களை இருட்டவைக்கும் நோய்கள்; அகல = நீங்க, தீர; ஒட்டுக் கண்பிணி = ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குத் தொற்றிக் கொள்ளும் கண்ணோய் வகைகள்; பகுத்தார் = பிரிவு காண்பித்தார்.*

வாதகாசம், பித்தகாசம், சிலேத்துமகாசம், நீலகாசம், நீரொளிகாசம், குமரிகாசம், மந்தாரகாசம், இரத்தகாசம், சலகும்பம், பில்லம், படலம், வெண்மாசுப்படலம், மாலைக்கண், விழிவிழுங்கி, மணிவளர்த்தி, மதிமந்தம், பருவணிகை, கற்றுக்கண், சுருங்குகண், உளைவுகாசம், எரி அன்னகோபம், அனல்கோபம், புகைச்சல், பற்பல நோய் ஓட்டுக்கண், கண்மலர்கள், கண்பிரிவு, நீர்ப்பாய்ச்சல், செவ்வேர்க்குந்தம், சுக்கிரன், அமரம், அக்கரமம், கண்கட்டி, இருடி கண், செவ்வரிப்படலம், கூச்சப்பூ, ஆணிப்பூ, புழுவெட்டு, நேத்திரவாயு, வெள்ளெழுத்து, கண்வலி, அழற்சிவிழி, கண்குருடு, செஞ்சுடர் எழுச்சி, புளித்தகண், இளிகண், அருகண்டமுடமயிர், கண்ணிறைச்சி முதலான கண்நோய்கள் 96 ஆகும்.

மேற்படி நோய்கள் தோன்றும் இடம்

வாதகோபத்தால் கருவிழியினில் நாற்பத்தைந்தும், ஐய கோபத்தால் வெள்ளை விழியினிடத்து 20, பித்தகோபத்தால் இமையோரத்தில் பதினாறும், கடைக்கண்ணில் பதினைந்தும் பிறக்கின்றன.

அவை வருவதற்குக் காரணம்

மாதர் மயக்கத்தாலும், மூலத்தில் அக்கினி அதிகரிப்பதாலும், மேகநீராலும், மலக்கட்டினாலும், தலைவறட்சியினாலும், எண்ணெய் முழுக்குத் தவறினாலும், அதிகக் கவலையினாலும், கடுவெய்யிலில் ஓயாது நடக்கிறதாலும், அதிக

சுமையெடுக்கிறதாலும், மழையிலும் காற்றிலும் அவதிப் படுவதாலும், தாம்பூலம் அடக்கி உறக்கம் செய்வதாலும், ஆழ்ந்த பார்வையினாலும் மேற்படி நோய்கள் தோன்றும்.

வாத காசத்தின் இயல்பு

வாத காசத்தில் கருவிழியின் நடுவிலுள்ள பாவையில் நீலநிறமாகத் தோன்றி கண்பார்வையை நாளுக்கு நாள் மறைத்து வந்து பின்னர் பார்வைகெடும். வாத காசம் அசாத்திய மென்பர் நாகமுனிவர்.

மருத்துவம்:

1. ஒரு படி பசுவின் நெய்யில் நற்சீரகம் ஒரு சிரங்கை, அரிந்த ஈருள்ளி ¼ படி, நத்தைச் சதை ஒரு எலுமிச்சங்காய் அளவு இவைகளைச் சிதைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு சிறு பீளைச்சாற்றை முன்னதாகக் கண்ணில் பிழிந்து பிறகு மேற்படி நெய்யைக் கண்ணில் கட்டிவர வாதகாசம் தீரும்.
2. முள்ளி, ஆரை, அல்லி, நீலி, முருங்கை இவைகளின் பூவை ஓர் அளவாய் பசும்பால் விட்டரைத்து அப்பால் மேற்படி நெய்யும் தேனும் கூட்டிக் களிம்புசெய்து விழியில் தீட்டிவரக் கண்ணின் வாதகாசம் கரையும்.
3. நல்லெண்ணெய் 2 படி, நெருஞ்சிச்சாறு, தாய்ப்பால், பசும் பால் வகைக்கு ½ படி வீதம் இவைகளை ஓர் எடையாய்க் கலந்ததில் கல்நார், சிற்றாமுட்டி வேர், கொன்றைப்பிசின், அதிமதுரம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், கொத்தமல்லி, சிறுகீரைவேர், செஞ்சந்தனம், கோட்டம், ஏலம் வகைக்கு 1 பலம் இடித்து எட்டுபடி தண்ணீரில் போட்டு 2 படியாய் வற்றவைத்துக் கூடவிட்டுச் சடாமாஞ்சில், சாத்திரபேதி வகைக்கு 1 பலம் பசுநெய்யில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

குறிப்பு:- எல்லாக் கண்காச நோய்களுக்கும் கண்ணுக்கு மருந்திடுவதுடன் தலைக்கும் தைலம் தேய்த்து முழுகிவருதல் மிகமிக முக்கியமென்பது கருத்து.

பித்த காசத்தின் இயல்பு

வெள்விழியில் வெண்சீரகம் போல் நீர்படர்ந்து, கருவிழியில் பாதி உளுந்து அளவு வெண்மையாய்த் தோன்றும்.

மருத்துவம்:

1. *சங்கு, திரிகடுகு, அரிதாரம், அதிமதுரம், புங்கவித்து, பீதரோகணி, துத்தம், மனோசிலை இவைகளை ஓர் எடையாய் நந்தியா வட்டப் பூச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து தேனில் உரைத்துக் கண்ணில் போடவும்.*
2. *சிற்றாமுட்டி, முசுமுசுக்கை, குரும்பை, சீந்திற்கொடி, உத்தாமணி, தாமரைவளையம் வகைக்குப் பத்துப்பிடி இடித்துப் பத்துபடி நீரில் போட்டு இரண்டு படியாய் வற்றவைத்து இறுத்து அதில் அதிமதுரம், சண்பகப்பூ, செவ்வியம், கோட்டம், மஞ்சிட்டி, ஏலம், இலவங்கம் வகைக்கு 3 வராகன் எடை பசுவின்பாலில் அரைத்துப் போட்டு ஒரு படி நல்லெண்ணெய் விட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து தலை முழுகிவரத் தீரும்.*

குமரி காசத்தின் இயல்பு

கண்வீங்கிக் கடுப்பும், வலியும் காணும்; பீளை கட்டும், இதனை வலியுங் காசம் என்று கூறுவர்.

மருத்துவம்:

1. *துருசு, துத்தம், புங்கம்வித்து, இந்துப்பு, சங்கு, மிளகு, மஞ்சள் இவைகளை ஓர் எடையாய் பசுவின் பால் விட்டு அரைத்து மேற்படி நெய்யில் போட்டுக்காய்ச்சி வடித்துக் கொண்டு விழியில் இடவும்.*
2. *பசுநெய், ஈருள்ளிச்சாறு வகைக்கு 1 படி நன்றாய்க் கலந்து அதில் செங்கழுநீர்க்கிழங்கு, சீந்தில்தண்டு, ஏலம், மல்லி, விலாமிச்சு, வெட்டிவேர், சண்பகப்பூ, நெல்லிமுள்ளி வகைக்கு ¼ பலம் பசும்பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.*

நீல காசத்தின் இயல்பு

கண்களில் இரத்தம் வெளிப்பட்டு சற்று உலர்ந்ததுபோல் வெளிறிக்காணும்; பாசி போல் நீர் படர்ந்து ஒளிமங்கும்.

மருத்துவம்:

1. வெண்காரம், துத்தம், துருசு, சாரணை வேர், பவழம், பீங்கானோடு, பச்சைக் கற்பூரம், சாத்திரபேதி இவைகளை ஓர் எடையாய் மாதுளம் பூச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து விழியில் போட்டுவரவும்.

2. பாதிரி, முசுமுசுக்கை, பருத்தி, கருங்குன்றி, முடக்கொத்தான், இவைகளின் சாறு வகைக்கு ¼ பலம், நல்லெண்ணெய் 1 படி, ஒன்றாய்க் கலந்து அதில் தகரம், சடாமாஞ்சில், ஏலம், மல்லி, தான்றி, கோட்டம் வகைக்கு ¼ பலம் வீதம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

நீர் ஒளி காசத்தின் இயல்பு

விழியில் நீர்க்கோர்த்துப் பிரண்டு ஒளி விழியிடையில் தீப்போல் தோன்றி அது தீப்பொறிபோல் ஒளி விடும்.

மருத்துவம்:

1. குங்குமப்பூவும், பச்சைக் கற்பூரமும் சமனாய் எலுமிச்சம்பழச் சாற்றிலும் தேனிலும் குழம்புபோல் அரைத்துக் கொண்டு விழியில் போட்டு வரவும்.

2. ஆனைத்திப்பிலி, அதிமதுரம், தக்கோலம், வெள்ளி லோத்திரம், சுக்கு, திரிபலை, வகைக்கு ஒருபலம் வீதம் பசும்பாலில் அரைத்து ஒரு படி நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத் தீரும்.

நீர்ப்பாய்ச்சலின் இயல்பு

விழி நொந்து சிவந்து அனல்போல் எரியும்; அருவிபோல் நீர் வடியும்; தினவெடுக்கும்.

மருத்துவம்:- குதிரைப்பல்லு, துருசு, துத்தம், குமரிவேர், சங்கு இவைகளை ஓர் எடையாய், தேனும் தாய்ப்பாலும் விட்டுக் குழம்புபோல் அரைத்துக் கொண்டு விழியில் தீட்டி வரவும்.

கையாந்தகரை, வாழைக்கிழங்கு, எலுமிச்சம்பழம், திராய், உத்தமதாளி, தைவேளை, மணத்தக்காளி, நந்தியாவட்டம் இவைகள் சாறு வகைக்கு ¼ படி, நல்லெண்ணெய் 1 படி, பசும் நெய், 1 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் வெட்டி வேர் வகைக்கு 1 பலம், அதிமதுரம், கோட்டம், சந்தனம், மஞ்சிட்டி, குரும்பை, கண்டில் (கண்டில் வெண்ணெய்), சடாமாஞ்சில், கார்க்கோலம், வசுவாசி (சாதிபத்திரி), இந்துப்பு, தான்றிக்காய் வகைக்கு 2 கழஞ்சு வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

அன்னகோபமென்னும் அனல்கோபத்தின் இயல்பு

கண் நொந்து சிவந்து வற்றிப்புடைத்துத் தீப்போல் எரிந்து நீர் வடியும்.

மருத்துவம்:

1. மாதுளம் பூவும், காயும், பச்சைக் கற்பூரமும் ஓர் எடையாய்க் கல்வத்திலிட்டு தாய்ப்பால் விட்டுச் சிதைத்துச் சீலையில் முடிந்து கண்ணில் பிழிந்து இதனடியில் வருகிற தைலங்களில் ஒன்றைத் தலை முழுகிவரத் தீரும்.
2. தாய்ப்பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 பலம் வீதம் கலந்து அதில் கோட்டம், சண்பகப்பூ, ஏலம், அதிமதுரம், முத்தக்காசு (கோரைக்கிழங்கு), விலாமிச்சம் வேர், வெட்டி வேர், சந்தனம் வகைக்கு ¼ பலம் வீதம் மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவரத் தீரும்.
3. கற்றாழஞ்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் குறுகி வருகையில் பச்சைக்கற்பூரம், புனுகுசட்டம், சந்தனம், சாதிக்காய் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு வடித்து தலை முழுகிவரத் தீரும்.

பிரிதல் நேத்திரத்தின் இயல்பு

எழுத்தைப் பார்த்து பின் மனிதரைப் பார்த்தால் இருள் போல் தோன்றும்.

மருத்துவம்:-

1. கருவளையல், காந்தம், செவ்வியம், வெள்ளைக்காக்கணான் வேர், துத்தம், துருசு, வெண்கலம் இவையெல்லாம் ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக்கயிறு செய்து பசுநெய்யாலும் தாய்ப்பாலாலும் அரைத்துக் கண்ணில் போட்டு வரத்தீரும்.

2. துத்தம், துருசு, கம்பிளிச் சுட்டசாம்பல், தலைமயிர் சுட்ட சாம்பல் வகைக்கு 1 வராகன் எடை வீதம் கல்வத்தில் இட்டுக் கழற்கொடிச் சாற்றில் 4 சாமம் அரைத்து உலர்த்திய பின்பு பசுவெண்ணெயைக் கூட்டிக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும்.

3. பசும்பாலும் நல்லெண்ணெயும் வகைக்கு ஒரு படி வீதம் கலந்ததில் திரிகடுகு, காந்தம், தென்னைவேர், அதிமதுரம், மட்டிப்பால், கோட்டம், சந்தனம், ஏலம், குரவாலிவேர், கலம்பம், சண்பகப்பூ, தகரம், சடாமாஞ்சில் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை இளநீரிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக்கொண்டு மேற்படி மருந்துகளில் ஒன்றைக் கண்ணில் போட்டும், இந்த எண்ணெயைத் தேய்த்துத் தலைமுழுகிவரத் தீரும்.

கண் மயக்கத்துக்கு மருந்து

வாலுளுவையரிசி, குங்குமப்பூ, கிராம்பு, பச்சைக் கற்பூரம், சந்தனம், செண்பகப்பூ, பீதரோகணி, இலவங்கப்பத்திரி, வெள்ளைச் சாரடைவேர் வகைக்கு 1 கழஞ்சு, வெள்ளிப்பொடி கால் கழஞ்சு இவைகளைக் கல்வத்தில் நாலு சாமமாட்டி 4 படி தண்ணீரில் போட்டு நல்லெண்ணெய், பசும்பால் வகைக்கு 4 படி கலந்து அதில் சந்தனம், தேவதாரம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், காட்டெருமைப்பால், தாமரைப்பூ, ஏலம்,

இலவங்கப்பத்திரி, மல்லி, நெல்லி முள்ளி வகைக்கு 8 பலம் இவைகளை மேற்படி பாலிலாட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரக் காசவெறி, கண் மயக்கம், பித்தநீர், தலையிடி நீங்கும்.

புகைச்சலின் இயல்பு

கண்மங்கலாயும் உருவம் பலவாகவும் தோன்றும்.

மருத்துவம்:

1. தலையோடு 4 கழஞ்சு, துத்தம் 2 கழஞ்சு, இந்துப்பு 1 கழஞ்சு இவைகளை பனைமட்டைச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றில் இழைத்துக் கண்ணிலிடத் தீரும்.

2. கடுக்காய்ப் பருப்பு 12, திப்பிலி 5, மிளகு 3 இவைகளை நெல்லிக்காய்ச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றிலாவது மேற்படி வற்றல் ஊறின தண்ணீரிலாவது இழைத்துக் கண்ணில் போட்டுவரத் தீரும்.

3. பலகறை 5 வராகன் எடை, துத்தம், துருசு வகைக்கு கால் வராகன் எடை இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் போட்டுவர நீங்கும்.

4. கடல்பாலை விதையை பசும்பாலில் அரைத்து உலர்த்திக் கொண்டு தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டுவர நீங்கும்.

5. வெள்ளைச்சாரணைவேர், மிளகு, சிறுதிப்பிலி இவை களை ஓர் எடையாய் உத்தாமணிச் சாற்றிலும், சிறு குறிஞ்சான் சாற்றிலும், நந்தியாவட்டைப் பூச் சாற்றிலும் அரைத்துக் கயிறு செய்து நீரில் உரைத்துக் கண்ணில் போடத் தீரும்.

6. நல்லெண்ணெய் கால்படி, தாய்ப்பால் கால் படி ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம், நற்சீரகம், மிளகு வகைக்கு 1 வராகன் எடை, கற்றாழஞ்சோறு பாக்களவு அரைத்துப்போட்டு

காய்ச்சி வடித்து ஒன்றை விட்டொரு நாள் தலைக்கிட்டு உசிலம் பொடியாவது பாசிப்பயறாவது அரைப்பிட்டுத் தேய்த்துச் சுடுநீரில் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

நல்லெண்ணெய் 2 படி, மிளகு, அதிமதுரம் வகைக்கு 1 பலம் இவைகளைப் பசும்பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

மதிமந்த நோயின் இயல்பு

கண் சிவந்து உறுத்தி வலிக்கும்; பீளிசாறும்; நீர்வடியும்; பார்வை மந்தமாயிருக்கும்.

மருத்துவம்:

1. கடல்நுரையும் கற்கண்டும் ஓர் எடையாய் தேனில் குழைத்துக் கண்ணிலிடத் தீரும்.
2. இதில் மாறாவிடில், இந்துப்பு, மரமஞ்சள், மனோசிலை, திரிகடுகு இவைகளைச் சமமாய்ப் பசுவின் பாலில் அரைத்துக் கயிறுசெய்து மேற்படி நீரிலுரைத்துக் கண்ணில் இட்டுவரத் தீரும்.
3. இந்துப்பு, சதகுப்பை, சங்கு, மனோசிலை, கடல்நுரை, மிளகு, செங்கற்பொடி ஓரளவாய் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து பசுநெய்யில் உரைத்துப் போட்டுவரத் தீரும்.
4. இதிலும் நீங்காவிட்டால், நெற்றியில் படர்ந்திருக்கும் நரம்பிலொன்றை ஊசியினால் குத்தி இந்துப்பு, திப்பிலி, பீதரோகணி இவைகளை ஓர் எடையாய் நந்தியாவட்டம் பூச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்துகொண்டு மேற்படி சாற்றில் உரைத்துக் கண்ணில் தீட்டிவரத்தீரும்.

குறிப்பு:- மேற்படி மருத்துவங்களைச் செய்யும்போது இதனடியிற் சொல்லியிருக்கிற மருந்தைத் தலையில்தேய்த்து அன்றாடம் தலை முழுக்குச்செய்து வந்தால் பகலில் அருந்ததி தோன்றும்.

கண் மந்தம், பித்தம், நீர்ப் பாய்ச்சலுக்கு மருந்து

சந்தனம், அதிமதுரம் வகைக்கு 1 பலம், குமரிச்சோறு ஒருபிடி இவைகளைப் பசுவின் பால் விட்டரைத்துக் கொதிக்க வைத்துத் தலையில் தளமாய்ப் போட்டு அமுக்கித் தேய்த்தும் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

பற்பல நோயின் இயல்பு

விழியின் இமையுள் இரத்தம்கட்டித் திரண்டு இள மாமிசம் போலிருக்கும்.

மருத்துவம்:- விழியின் இமையைப் பிதுக்கிக்கொண்டு அதில் சீரகப் பொடியைத் தூவிப் பேய்ப்பீர்க்கிலையால் தேய்த்து இரத்தம் போக்கி, புளியிலையை இடித்துச் சாறு பிழிந்து குழம்பாய்க் காய்ச்சி மூன்றுநாள் கண்ணில் புறவளையமிட்டுத் துத்தம், துருசு, இந்துப்பு இவைகளை ஓர் எடையாய் உப்பிலிச் சாற்றில் மைபோல் உலர்த்தி அப்பால் நெய்யும் தேனும்விட்டு களிம்புபோல் அரைத்துக் கொண்டு கண்ணில் போட்டுவரத் தீரும்.

சலகும்ப நோயின் இயல்பு

வெள்விழியில் நீர்கோர்த்து, இமை வீங்கிக் கடுத்து வலிக்கும்; பீளை கட்டும்.

மருத்துவம்:

1, வெண்குன்றிப் பருப்பும், அதன் வேரும், வெள்ளைக் காக்கணான் பூவும், அதன் விதையும், தாய்ப்பால் வார்த்து உருட்டிக் கயிறுசெய்து நீரில் உரைத்துக் கண்ணில் போட்டு வரவும்.

2. ஆடுதின்னாப்பாளை, ஆவாரை, மணத்தக்காளி, வரிக் கற்றாழை இவைகளின் சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி, கோட்டம், மட்டிப்பால், அதிமதுரம், விலாமிச்சம் வேர், வெட்டி வேர் வகைக்கு 1 பலம், வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

பில்ல நோயின் இயல்பு

விழியின் இமை, புருவம், முழுமையும் திரக்கட்டி, உருண்டு புடைத்து விம்மியிருக்கும்.

மருத்துவம்:

விழியின் இமையை உறுத்திப் பிடித்து, ஊசியால் குத்தி உரித்துப்போட்டு பசும்பால், நெய், நல்லெண்ணெய் மூன்றும் ஒன்றாய்க் கலந்து நெற்றி, புருவம், கன்னம் இவைகளில் ஒற்றடம் செய்து பச்சைக்கற்பூரத்தை நெய்யில் பொடித்துப் போட்டுச் சற்றுக் கொதிக்கவைத்து அதில் சீலையை நனைத்து இமையின் பேரில்போட்டுப் பெருங்காயமும் சீரகமும் பொடித்துத் தணலில் தூவிப் புகை காட்டிவரத் தீரும்.

செவ்வேர்க்குந்த நோய்க்கு மருந்து

மேல் மடிமாசை ஊசியால் திரட்டி, உரித்துவிட்டு, வெட்பூலாவேரை தாய்ப்பால் விட்டுத்தட்டி, கண்ணில் பிழியத் தீரும்.

பருவநிகை நோயின் இயல்பு

கடைக்கண்ணில் சதை வளர்ந்து படர்ந்து உறுத்தி வலிக்கும்.

மருத்துவம்:

1. ஊசியினால் சதையைத் திரட்டி, உரித்து விட்டு அதி மதுரத்தைத் தட்டிப் பசுநெய்யில் போட்டுச் சிவக்கக் காய்ச்சி விழியில் கட்டிவந்தால் தீரும்.
2. வெங்கலப்பொடி, தலையோடு, வெள்ளைக்கற்பொடி, துத்தம், இந்துப்பு இவைகளை ஓர் எடையாய்ப் பழச் சாற்றில் அரைத்து உலர்த்திப் பின்பு வெண்ணெய் கூட்டிக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் பருவநிகை சதை வளர்ச்சி நீங்கும்.

படலத்தின் இயல்பு

வெள்விழியிற் பாலாடைபோல் மாசு படர்ந்திருக்கும்.

மருத்துவம்:

1. மேற்படி மாசை ஊசியினால் திரட்டி, உரித்துப் போட்டு மேற்படி அதிமதுர நெய்யைக் கண்ணில் இடத் தீரும்.

2. திரிகடுகு, துத்தம், செஞ்சந்தனம், வெள்ளைச்சாரணைவேர், தாமரைக்கிழங்கு, பச்சைக்கற்பூரம் இவைகளை ஓர் எடையாய் தாய்ப்பால் விட்டரைத்துக் கயிறு செய்து மேற்படி பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் படலம் யாவும் தீரும்.

3. அஞ்சனக்கல், முட்டைத்தோல், சங்கு, திப்பிலி, சந்தனம், தலைஓடு இவைகளை ஓர் எடையாய்ப் பழச்சாற்றில் அரைத்துக் கண்ணில் தீட்டிவந்தாலும் சகல படலமும் நீங்கிக் குணமாகும்.

வெண்மாசுப் படலத்தின் இயல்பு

விழியில் வெண்மாசுப் படர்ந்து கரகரத்துக் குத்தலெடுக்கும்.

மருத்துவம்:–

1. பீதரோகணி, துத்தம், துருசு, பச்சைக்கற்பூரம், திரிகடுகு, நெல்லிப்பருப்பு, செம்புப்பொடி, பளிங்குக்கல், இரும்புப் பொடி, தலைஓடு, கடுக்காய், சிறுகீரைவேர், பொன்னாங்காணி வேர், வெண்பூலா வேர், ஓரிலைத் தாமரை வேர் வகைக்கு ஒரு வராகன் எடை வீதம் இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலும், காணிச்சாற்றிலும் மும்மூன்று நாள்கள் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் நீங்கும்.

2. சுக்கு, திப்பிலி, மிளகு, சங்கு, அரிதாரம், புங்கம்பருப்பு, அதிமதுரம், துத்தம், பீதரோகணி, மனோசிலை, பன்றிக் கொம்பு, ஆமையோடு, புலிநரம்பு, வெள்ளைச்சேவல் நெஞ் செலும்பு, இந்துப்பு இவைகளை ஓர் எடையாய் நந்தியா

வட்டப்பூச் சாற்றில் மூன்று நாள் அரைத்துக் கயிறு செய்துகொண்டு தேனிலாவது, தாய்ப்பாலிலாவது உரைத்துக் கண்ணில் இட வெண்மாசுப் படலம், ஆணிப்பூ நீங்கும்.

மாலை நேரத்தின் இயல்பு

மாலை நேரத்தில் இருள் பிடித்ததுபோல் காணும்.

மருத்துவம்:

1. புளியம்பூ, கிராம்பு, வெள்ளைக்காக்கணான் வேர், அதிமதுரம், துத்தம், துருசு, நீலரத்தினம், முத்து, பவழம் சமமாய் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறு செய்து கொண்டு மேற்படி சாற்றில் உரைத்துக் கண்ணில் தீட்ட மாறும்.
2. வேப்பிலையை மயனம்போல் அரைத்துக் கோழிப் பித்திற்குக் கவசஞ்செய்து உமிக்காந்தலில் சுட்டுக் கவசம் நீக்கி உள்ளுக்குக் கொடுத்தாலும் அல்லது மேற்படி பித்தை முன்போல் வெதுப்பிப் பொடித்து மூன்று நாள் விழியில் பிழிந்தாலும் தீரும்.
3. மருதம்பட்டை, நற்சீரகம், ஈருள்ளி இவைகளைச் சிதைத்துப் பிழிந்தாலும் தீரும்.
4. இலுப்பை நெய்யாவது, மகிழம் விழுதையாவது அல்லது காட்டாமணக்கின் முத்தையாவது தாய்ப்பாலில் உரைத்துப் போடத் தீரும்.
5. பொன்னாவரை விதையை வெள்ளாட்டுப் பிச்சில் உரைத்துப் போட்டால் தீரும்.
6. வெள்ளைச்சாரணை வேரைத் தாய்ப்பாலில் உரைத்துப் போட்டால் தீரும்.
7. மின்மினிப்பூச்சி, மயில்துத்தம், வெள்ளைச்சாரணைவேர் ஆகியவை ஓர் எடையாய் அரைத்துச் சிறுபீளைச்சாறு விட்டரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலில் உரைத் திட்டாலும் தீரும்.

விழி விழுங்கி நோயின் இயல்பு

ஒரு நேரம் காலை முதல் மதியம் வரை தலை மிகுதியாய் அதிர்த்துக் குடைந்த இடிபோல், ஒரு நேரம் உச்சிமயிரைப் பிடிப்பது போலிருக்கும்; அப்பால் நாள்செல்ல விழியிற் சதை ஓங்கி மூடும்.

மருத்துவம்:

1. மேற்படிகுணம் கண்டவுடன் மிளகு ஒரு வராகன் எடை, உப்புக்கல் ஒன்று, தவசுமுருங்கைஇலை ஒரு கொட்டைப் பாக்கு அளவு இவைகளைச் சிதைத்து துணியில் முடிந்து தாய்ப்பாலில் ஊறவைத்து இரு சாமத்திற்கு ஒரு முறை விழியில் பிழிந்து வந்தாலும் தீரும்.
2. பனைமட்டைச்சாறு, பசும்பால் வகைக்கு 1/8 படி வீதம் கலந்து அதில் சிறுகீரை வேரை ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் போட்டுக் குழம்பாய்க் காய்ச்சிக் காலையில் தலையில் தளமிட்டு மாலையில் தலை முழுக்குச் செய்தும் காலையில் பசும்பாலில் சர்க்கரை கலந்து குடிக்கவும். பசுவின் பாலும் தயிரும் சேர்த்து இச்சாபத்தியமாய் உணவு உட்கொண்டுவரத் தீரும்.

மாலைச் காச நோயின் இயல்பு

கண்ணுறுத்தி வலித்தெரியும்; கருவிழி சற்றே கலங்கி யிருக்கும்; தீபம் வேறாய்க்காட்டும்.

மருத்துவம்:–

இந்துப்பு, மஞ்சள், சாரணைவேர், துத்தம் இவைகளை ஓர் எடையாய்ப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

மணிவளர்த்தி நோயின் இயல்பு

கடைக்கண்ணில் பலகாலும் மணிபோல் எழும்புவதும் உடைவதுமாக இருக்கும்.

மருத்துவம்:-

1. மிளகு, செம்புப்பொடி, ஓரிலைத்தாமரை வேர், மண்டை ஓடு, பளிங்குக்கல் வகைக்கு கால் வராகன் எடை, வறுத்த துருசு 2 வராகன் எடை இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாள் அரைத்து 15 நாள்கள் செப்புச் சிமிழில் அடைத்த மருந்தை மறுபடியும் மேற்படி சாற்றாலரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலில் உரைத்து நேரத்தில் தீட்டி வந்தாலும் தீரும்.
2. சூதம் 1 வராகன் எடை, காரீயம் 2 வராகன் எடை, துத்தம் ஒரு வராகன் எடை, அதாம்பாய் 10 வராகன் எடை இவைகளைப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து பசு நெய்யில் உரைத்துக் கண்ணில் போட்டுவந்தாலும் தீரும்.
3. ஒரு பலம் சிற்றாமணக்கின் வேர்ப்பட்டையை இடித்து இரண்டு படி நீரில் போட்டு வற்ற வைத்திறுத்து வடித்துக் குழம்பாய்க் காய்ச்சிக் கல்வத்திலிட்டுக் காயத்தூளும் சர்க்கரையும் சமமாய்ச் சேர்த்து மைபோலரைத்துப் பின்பு தேன்விட்டுக் களிம்பு போல் அரைத்துக்கொண்டு விழியில் தீட்டி வந்தாலும் தீரும்.
4. துத்தத்தை (பால்துத்தம்) எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலிலுரைத்து விழியில் தீட்டி வந்தால் தீரும்.

மேற்படி மருந்து செய்யும் போது காலையில் தாய்ப் பாலில் புளியைக் கரைத்துக் கொதிக்க வைத்துச் சீலையில் தீட்டி கண்களை மூடிக் கொண்டு இரப்பையின் மேல் ஒற்றடம் செய்து வரவும்.

மந்தார காசத்தின் இயல்பு

கண் சுற்றெல்லாம் புரையுண்டாகி அரிப்பெடுக்கும்; கண்சிவந்து வலிக்கும்; விழி சிறுக்கும்.

மருத்துவம்:- துத்தம், துருசு வகைக்கு 1 வராகன் எடை, சிறுகீரை, பொன்னாங்காணி, ஓரிலைத் தாமரை இவை களின் வேர் வகைக்கு ஒரு பாக்களவு, எலுமிச்சம்பழச் சாற்றால்

மைபோல் அரைத்துக் காசுபோல் வில்லை தட்டிக் காயவைத்துப் புதுச்சட்டியில் பரப்பி மறுசட்டி கொண்டு மூடி நான்கு நாழிகை எரித்துப் பற்பமாக்கிச் சிமிழியில் அடைத்துக்கொண்டு எள்ளின் அளவு விழியிலிட்டு குமரிமணி (மணத்தக்காளி), வேலிப்பருத்தி, பொன்முசுட்டை இலைகளின் சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 2 படி, வெட்பூலா, நெருஞ்சில், விஷ்ணுகரந்தை, விலாமிச்சுவேர், வெட்டிவேர், கொத்தமல்லி, கோட்டம் வகைக்கு ஒரு பலம் வீதம் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து தலைமுழுகத் தீரும்.

உளைவு நேரத்தின் இயல்பு

கண்மணியினுள் எப்போதும் உளைந்து வலிக்கும்.

மருத்துவம்:- வெள்ளைக் காக்கணான் வேர் 1 வராகன் எடை, வெண்குன்றி வேர் 7 வராகன் எடை, வெள்ளைச் சாரணை வேர் 3 வராகன் எடை, மஞ்சள் 4 வராகன் எடை, துத்தம் 5 வராகன் எடை, துருசு 6 வராகன் எடை இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்து விழியிலிடத் தீரும். (வேர்ப்பட்டையைக் கொள்க.)

கண்ணுளைவு, கண் சுருங்கல், ஒட்டுக் கண், மலக்குக் கண் முதலான நோய்களுக்கு மாத்திரை

துத்தம், இரும்புப்பொடி, முத்து(நல்முத்து), முட்டைத் தோல், பச்சைக் கற்பூரம் வகைக்கு 1 கழஞ்சு, செம்புப்பொடி 7 கழஞ்சு, பொன்மஞ்சாடி, நற்பவழம், வெள்ளி வகைக்கு அரைக் கழஞ்சு பொடித்துப் போட்டு எலுமிச்சம்பழச்சாற்றிலும், முருங்கைப்பூச்சாற்றிலும், காடி நீரிலும் தனித்தனியே அரைத்துக் கயிறு செய்து தேனிலாவது, கோசலம், நெய், தாய்ப்பால் வகைக்கு 1/8 படி ஒன்றாய்க் கலந்து நீர் வற்றக் காய்ச்சி வடித்த நெய்யிலாவது உரைத்துப் போடத் தீரும்.

வாணம், சுக்கிலம், உளைவிற்கு மருத்துவம்

திரிபலை, தேற்றான் விதை, தாமரைமணி ஓர் எடையாய்க் குமரிச் சாற்றிலரைத்துத் தாய்ப்பாலில் உரைத்து 21 நாள்கள் கண்ணில் போட்டு வரத்தீரும்.

சுருங்கு கண்ணின் இயல்பு

குவளை புண்ணாகி நாளுக்கு நாள் கண் சுருங்கும்.

மருத்துவம்:- சங்கு, காந்தம், கடல்நுரை, நன்றாய்ச் சுட்ட செங்கல் பொடி, இந்துப்பு, மனோசிலை, கற்கண்டு, பீதரோகணி, பச்சைக்கற்பூரம் சமமாய் நந்தியாவட்டைப் பூச்சாற்றில் அரைத்து, உலர்த்திப் பின்பு வெண்ணையைக் கூட்டி மைபோல் அரைத்து விழியில் தீட்டிவரச் சுருங்கு கண் முதலான விழி நோய்களும் தீரும்.

ஒட்டுக் கண்ணின் இயல்பு

கண்ணில் எப்பொழுதும் பீளையும் நீரும் சொரியும்; இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளும்.

மருத்துவம்:- துத்தம், துருசு, புளியம்பொருக்குச் சுட்ட சாம்பல், கடுக்காய்க்கரி இவைகள் ஓர் எடையாய் பசுவின் வெண்ணையில் அரைத்துக் கண்ணில் போட நீங்கும்.

மலக்கு விழியின் இயல்பு

இராக்காலத்தில் விழியில் நீர் மல்கி செக்கச் சிவந்து பகலில் மயங்கும்.

மருத்துவம்:- சமுத்திராப் பழத்தைத் தூய்மைசெய்து கல்வத்தில் இட்டு பசுவின் வெண்ணெயைக் கூட்டிக் களிம்பு போல் அரைத்து விழியில் தீட்டி இதன் அடியில் கண்டிருக்கும் பக்குவத்தைச் செய்துவர நீங்கும்.

கண் மந்தம், நீர்ப்பாய்ச்சல், மங்கல் பித்தத்திற்கு மருத்துவம்

1. சந்தனம், குன்றிமணி, அதிமதுரம் வகைக்கு 1 பலம் இவைகளைக் கால்படி பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சித் தலையில் தளமிட்டு மாலையில் தலைமுழுக்குச் செய்துவர நீங்கும்.

2. இமை குழிந்து நீர் வடிந்து பரபரத்து வேதனை கண்டால் கதிரைக் காய்ச்சி நெற்றியில் சுட நீங்கும்.

கண் கட்டிக்கு மருந்து

1. நன்னாரி, விளா, சங்கு இவைகளின் வேரும் அதிமதுரமும் ஓர் எடையாய் மைபோல் அரைத்துக் காடியில் கலக்கிக் கரண்டியில் கொதிக்க வைத்து இரும்புத் தடியால் களிம்பு போல் தேய்த்து விழியில் கொஞ்சம் போட்டுக் கட்டியிலும் பூச நீங்கும்.
2. செண்பகப்பூ, சந்தனம், சிறுநாகப்பூ, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கற்கண்டு, சாதிக்காய், தக்கோலம், சீந்தில் தண்டு வகைக்கொரு கழஞ்சு வீதம் அரைத்து எட்டுப்படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து அதைப் பீச்சாங்குழலினால் விழியில் அடித்து மயிரை உதிர்த்து அரிதாரம், இந்துப்பு, செப்புப்பொடி இவைகளை ஓர் எடையாய் துளசிச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்து விழியிலிட்டு வரத்தீரும்.
3. சீனக்காரம், துத்தம், துருசு, மயில்முட்டைத்தோல், கோழி முட்டைத்தோல் வகைக்கொரு கழஞ்சு வீதம் பொடித்துக் கொண்டு எள்ளளவு விழியில் போட்டு வந்தாலும் தீரும்.

இருண்ட விழிக்கு மருந்து

1. நெல்லிமுள்ளி, புங்கவிதை, வெள்ளுள்ளி, சிறுகீரை இவற்றைச் சமமாய் மெழுகுபோல் அரைத்து உருண்டை செய்து தாய்ப்பாலில் உரைத்து விழியில் போட்டு வந்தால் தீரும்.
2. ஆவாரங்கரி, கடுக்காய்கரி, சவுக்காரம் வகைக்கு 1 வராகன் எடை, துருசு கால் வராகன் எடை, பன்றி எலும்பு 4 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் இட்டு மைபோல் அரைத்துக் குளிகை செய்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் தீட்டி வந்தால், தீரும்.
3. துத்தம், துருசு, வெண்சாரணைவேர், சோகி வகைக்கு 1 கழஞ்சு வீதம் எலுமிச்சம்பழச் சாற்றில் ஆட்டிக் கயிறு செய்து கொண்டு புளி இலைச்சாற்றிலாவது அவுரி இலைச் சாற்றிலாவது அரைத்துக் கண்ணில் போட்டு வந்தாலும் தீரும்.

இரத்தப் பாய்ச்சலுக்கு மருந்து

தேள் கொடுக்கிலையைக் கசக்கிக் கண்ணில் இட்டுவர ;ங்கும்

கண்ணெரிவிற்கு மருந்து

1. மாதுளம்பூ, நற்சீரகம், நெருஞ்சிக்காய் இவற்றை ஓர் எடையாய் பனைமட்டைச் சாற்றில் ஆட்டிக் கயிறாக்கிக் கொண்டு தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் தீரும்.
2. செஞ்சந்தனம், சாத்திரபேதி, தேற்றான் சேர்த்து மை செய்து இட்டு வந்தால் கண்ணெரிவு தீரும்.
3. ஒரு படி பசுவின் பால், ஒரு பலம் பொற்றலையின் வேரை ஆட்டிக் கலக்கிக் காய்ச்சி புறக்குத்திக் கடைந்த வெண்ணை திரட்டிக் கண்ணில் போட்டு வந்தாலும் தீரும்.

கொம்மட்டி பட்ட கண்வேதனைக்கும் கோரைபட்டதற்கும் மருந்து

1. மண்சட்டி காய்ந்தபின் அதில் முருக்கந் தழைச்சாறு (முள்முருக்கன்) விட்டு விழியில் ஆவி பிடித்து புளியந் தழை, துளசித் தழை வகைக்கொரு பிடி, 10 கடுக்காய் ஆகியவைகளை நறுக்கியிட்டு சுட்டு ஓட்டில் தட்டி ஒரு சொட்டுச் சாறு கண்ணில் வார்த்து வெதுப்பத்துடன் ஒற்றடம் செய்து அப்பால், அந்தச் சாற்றில் எலுமிச்சம் பழத்தோடு சுட்டதை அரைத்துக் கொதிக்க வைத்துப் புறவளையமிடத் தீரும்.
2. அண்டத்தோல், வெண்ணொச்சிஇலை, திப்பிலி, தேற்றான் விதை, மிளகு இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கொதிக்க வைத்துப் புறவளையமிடத் தீரும்.
3. கஞ்சாங் கோரை வேரை மேற்படிச் சாற்றில் அரைத்துப் புறவளையமிடத் தீரும்.
4. மண்ணாங்கட்டியைப் பழுக்கக் காய்ச்சி அதில் தாய்ப் பாலாவது முருங்கை இலைச்சாறாவது விட்டு ஆவிபிடித்து

மேற்படி கட்டியை அரைத்துக் கண்ணில் புறவளையமிடத் தீரும்.

5. பசுவின் நெய், சிற்றாமணக்கெண்ணெய், பொன்னாங்காணிச் சாறு இவைகளை ஓர் அளவாய்க் காய்ச்சித் தலையில் பதமிட்டு பொன்னாங்காணி, ஓரிலைத்தாமரை, வெள்ளைக் காக்கணான், சிறுகீரை இவைகளின் வேரைச் சமமாய் எலுமிச்சம்பழச் சாற்றில் மைபோல் ஆட்டி உலர்த்திப் பின்பு பசுவின் வெண்ணெய் கூட்டிக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் போட்டு வந்தாலும் தீரும்.

6. கீழ்க்காய்நெல்லிச்சமூலம், ஈருள்ளி ஓர் எடையாய்ச் சிதைத்துச் சீலையில் முடிந்து கண்ணில் விட்டு வந்தாலும் தீரும்.

கண் புழுவெட்டுப் புண்ணுக்கு மருந்து

1. துத்தம், துருசு, வெள்ளைப்பாடாணம் இவைகள் வகைக்கு 1 வராகன் எடை நிறையாய்ப் பொன்னாங்காணி இலைச் சாற்றிலும் சிறுகீரைச் சாற்றிலும் ஒரு நாள் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து மேற்படி மூலிகையின் வேர்களை விளாங்காய் அளவு அரைத்துக் குகைபிடித்து அதன் மேற்படி வில்லைகளை வைத்துப் பொதிந்து புளியம்பரணைக்குள் வைத்துப் புடம்போட்டு, பசுவின் வெண்ணெய் கூட்டிக் களிம்பாக்கிக்கொண்டு புருவத்திலிட்டுவரப் புழுசெத்து புண் ஆறி முடி வளரும்.

2. வெளுத்த சீலையில் எருக்கம்பாலை ஊட்டி நிழலில் உலர்த்தித் திரியுருட்டி விளக்கில் பசுவின் நெய் விட்டுத் தீபமேற்றிப் புதிய சட்டிமேல் ஊமத்தஞ்சாறுபூசி மைப்பற்ற வைத்து உதிர்த்து விளக்கெண்ணெயில் கலந்துகொண்டு கண் புருவத்தில் போட்டுவரத் தீரும்.

3. விரால் மீன், குடல் சிலாம்பு நீக்கிக் காயப்போட்டு மை போல் பொடித்துக்கொண்டு கண் இமையில் பனை வெல்லத்தைப் பூசி அதன்மேல் மெல்லிய வெளுத்த துணியில் வெண்ணையைத் தடவி மூடி அதன்மேல்

பொடியைப் பரப்பி ஓரிரவு மல்லாக்கப் படுத்திருக்கப் புழுவெல்லாம் துணியில் வந்து ஒட்டி இருக்கும். அப்புறம் மேற்படி துணியைத் தண்ணீரில் போட்டுப் பார்த்தால் புழுவெல்லாம் தண்ணீரில் மிதக்கும். இப்படி ன்று நாள்கள் செய்ய அப்பால், புற்றில் ஒட்டியிருக்கிற நா ட்ட எறும்பைத் தேனிலாகிலும் தாய்ப் பாலிலாகிலும் உ த்துப் புருவத்தில் போட்டுவரப் புழுவெட்டு மாறிப் பு ஆறி முடி வளரும்.

4. முத்தெருக்கஞ்செவி வேரைத் தாய்ப்பாலில் காய்ச்சிப் புருவத்தில் தடவிவரப் புழுவெட்டுமாறி முடி வளரும்.

கண் பூவுக்கு மருந்து

1. தேள் கொடுக்குப் பூ, நந்தியாவட்டப் பூ ஓர் எடையாய் எடுத்துக் கசக்கிக் கண்ணில்விடத் தீரும்.
2. சிறுகிளாவேர், கடுக்காய், இந்துப்பு, பழம்புளி இவைகளை ஓர் எடையாய்த் தாய்ப்பால் விட்டுத் தட்டி துணியில் கட்டி நாளொன்றுக்கு மூன்று வேளை மூன்று நாள்கள் கண்ணில் பிழிய நீங்கும்.
3. முசுமுசுக்கை இதழும், நற்சீரகமும் ஓர் எடையாய்த் தாய்ப்பால் விட்டு இடித்து வார்க்க நீங்கும்.
4. உத்தமநெருஞ்சில், முருங்கை இவைகளின் பூவும், வெள்ளைச் சாரணைக்கொழுந்தும், நாய்வேளைக்கொழுந்தும், ஈருள்ளியும் நற்சீரகமும் வகைக்கு ¼ வராகன் எடை வீதம் தாய்ப்பால் விட்டுச் சிதைத்துக் கண்ணில் பிழியத் தீரும்.
5. பூநாகம், வெள்ளைக்காக்கணான் வேர், வெள்ளைச்சாரணை வேர், துருசு, துத்தம், பவழம், முத்து, கொம்புப்பொடி, பொன் ஓர் எடையாக ஊமத்தைச்சாற்றாலரைத்து விழியில் போடத் தீரும் ஆணிப்பூவும் ஆறும்.
6. கணவாயோடு, துத்தம், துருசு ஓர் எடையாய், குப்பைமேனிச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து தேனில் அரைத்துப் போட்டு வந்தாலும் தீரும்.

7. வறட்பூலா, அந்திமல்லிகை (பத்திராட்சி), ஓரிலைத் தாமரை, நந்தியாவட்டம் இவைகளின் மலர், துத்தம், துருசு ஆமையோடு, வெந்ததலையோடு, பலகறை இவைகளை ஓர் எடையாக்கிப் பனைமட்டைச் சாற்றிலரைத்துக் கயிறு செய்து கொண்டு மேற்படி சாற்றிலரைத்து விழியில் தீட்டிவரத் தீரும்.

8. சீனக்காரத்தைப் பீங்கானிலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றில் இட்டுக் காயவைத்து அந்தச் சீனக்காரமும் பச்சைக் கற்பூரமும் ஓர் எடையாய்த் தாய்ப்பாலில் அரைத்து விழியில் தீட்டிவரத் தீரும்.

9. பூவிழுந்த கண்ணுக்கு 7 உத்தாமணிப் பூவைக்கசக்கி விழியில் பிழிந்தாலும் தீரும்.

பூ, வெள்ளெழுத்திற்கு மருந்து

பீதரோகணி, நற்பவழம், சாரணைவேர், இவைகளைச் சமமாய்த் தண்ணீரில் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் அரைத்துப்போட பூ மாறும். தண்ணீரில் உரைத்துப்போட வெள்ளெழுத்து நீங்கும்.

ஆணிப் பூவுக்கு மருத்துவம்

1. துத்தம், பலகறை, தேற்றாங்கொட்டை, மனோசிலை, தலையோடு, மிளகு, திப்பிலி, சேவலின் நெஞ்செலும்பு வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து காடியிலுரைத்து விழியில் போட்டுவந்தால் தீரும்.

2. கடல்நுரை, மிளகு, சீனக்காரம், அதிமதுரம், வெண்காரம், கடுக்காய், துருசு, துத்தம், மனோசிலை, அரிதாரம், திப்பிலி, செம்புப்பொடி ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் இழைத்துப் போட்டுவந்தாலும் தீரும்.

3. நத்தைக்கூடு, மிளகு, ஆமையோடு, முதலைப்பல், பன்றிக்கொம்பு, சேவல்நெஞ்செலும்பு, வெள்ளைவிந்தம்

(வெள்ளி) இவைகளை ஓர் எடையாய்த் தாய்ப்பால் விட்டு மைபோலரைத்துக் கயிறு செய்துகொண்டு தேனில் உரைத்து விழியிலிட ஆணிப்பூமுளை மாறும்.

பூ, படலம் அதிமாங்கிச வளர்ச்சிக்கு மருந்து

1. ஆமையோடு, முதலைப்பால், யானைத்தந்தம், தேற்றான் விதை, துத்தம், துருசு இவைகளை ஓர் எடையாய்க் காடியிலரைத்துக் கயிறுசெய்து மேற்படி நீரில் உரைத்துப் போட்டுவர நீங்கும்.
2. கடுக்காய், திப்பிலி, வெண்காரம், சந்தனம், கடல்நுரை, வெள்ளிலோத்திரம் வகைக்கு ஒரு கழஞ்சு, சங்கு, பவழம், துருசு வகைக்கு 4 கழஞ்சு இவைகளை முருங்கைப்பூ சாற்றிலரைத்துக் கயிறு செய்து விழியில் போட்டுவரத் தீரும்.

முளை ஆணிப் பூவுக்கு மருந்து

1. துத்தம், துருசு, சீனக்காரம், வெள்ளைக்காக்கணான்வேர், வளையலுப்பு இவைகளை ஓர் எடையாய்ப் பனைமட்டைச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்துகொண்டு தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணிலிட்டுவரத் தீரும்.
2. புளியிலையை எலுமிச்சம்பழச்சாறு விட்டு சிதைத்துப் பிழிந்து அதில் தேற்றான்விதையும் பச்சைக்கற்பூரமும் உரைத்துப் போட நீங்கும்.

பூ, படலம், காசத்திற்கு மருந்து

1. முத்து, பவழம், துத்தம், துருசு, பளிங்குக்கல், பீங்கானோடு, காரீயம், இரசம், சீனக்காரம், வெண்காரம், வெந்தயம், மண்டை ஓடு வகைக்கு 1 வராகன் எடை வீதம் எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டுவரத் தீரும்.

குந்தத்திற்கு மருந்து:

1. பச்சைக் கற்பூரம், காரீயம், இரசம், மஞ்சள், திப்பிலி, மிளகு, இவைகளை ஓர் எடையாய் நந்தியாவட்டப்பூச்

சாற்றிலரைத்துக் கயிறு செய்து கொண்டு தாய்ப்பாலில் உரைத்து விழியில் போட்டு வந்தால் தீரும்.

2. புளியங்கொழுந்தை இடித்துச் சாறுபிழிந்து குழம்பாய்க் காய்ச்சிக் கல்வத்திலிட்டு இந்துப்பு, துத்தம், துருசு வகைக்கு ஒரு வராகன் எடை வீதம் இவைகளைப் பொடித்துப்போட்டு அரைத்து உலர்த்திப் பின்பு தேன் விட்டுக் குழம்புபோல் அரைத்து விழியில் போட்டு வந்தால் தீரும்.

3. இலுப்பைப் புண்ணாக்கு 3 வராகன் எடை, துத்தம், துருசு வகைக்கு 2 வராகன் எடை வீதம் இவைகளைக் காடியில் அரைத்துக் கயிறு செய்துகொண்டு காடியில் உரைத்துப் போட்டு வந்தாலும் தீரும்.

குந்தம் அமரத்திற்கு மருந்து

1. சங்கு, இந்துப்பு, பளிங்குக்கல், மஞ்சள், சந்தனம், மனோசிலை, மிளகு இவைளை ஓர் எடையாய்ப் பசும்பால் விட்டரைத்துக் கயிறு செய்துகொண்டு தேனிலுரைத்து விழியில் தீட்டிவரத் தீரும்.

2. வெண்காரமும், மயிர்ச்சுட்ட சாம்பலும் ஓர் எடையாய் நெய்யில் அரைத்துக் களிம்புசெய்து விழியில் போட்டு வந்தால் தீரும்.

3. கல்வத்தில் சங்கிலைச்சாறு பிழிந்து குழவியால் களிம்பு போல் அரைத்து விழியில் போட்டுவந்தால் தீரும்.

4. சேராங்கொட்டைச் சுட்டகரியும், துருசும் ஓர் நிறையாய்ப் பொடித்துப் பசுவின் வெண்ணெய் கூட்டிக் களிம்பு போலரைத்து இமையின் பேரில் போட்டுவந்தால் இழிகண் மாறி உதிர்ந்த முடி வளரும்.

குந்தம் பூவிற்கு மருந்து

சிறுகீரை, பொன்னாங்காணி, சாரணை, வெள்ளைச் சாரணை இவைகளின் வேர், தேற்றான்விதை, மண்டைஓடு,

நாய்ப்பல், சேவல் மார்பெலும்பு, முத்து, பவழம் இவைகளை நந்தியாவட்டப் பூச்சாற்றில் மைபோல் அரைத்து உலர்த்தி விழியில் தீட்டிவர நீங்கும்.

அழிகண்ணிற்கு மருந்து

1. இந்துப்பு, கடுக்காய் விதை ஓர் எடையாய் வெண்ணெய் போல் அரைத்துச் செம்புப் பாண்டத்தில் அப்பி வைத்திருந்து களிம்பு ஊறிப் பசுமையான பின்பு எடுத்துக் கொண்டு கண்ணில் போட்டு வந்தாலும் தீரும்.

2. பூநாகத்தைச் சீலையில் முடிந்து உமிக்காந்தலில் புதைத்து எடுத்து அதற்குநிகர் நாவற்கொழுந்து சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து உலர்த்தி வெண்ணெய் கூட்டிக் களிம்புபோல் அரைத்துக்கண்ணில் தீட்டிவர அழிகண், வானம், சுக்கிரன் தீரும்.

கண் புண்ணுக்கு மருந்து

1. துத்தம், துருசு வகைக்கு 1 வராகன் எடை, மிளகு கால் வராகன் எடை வெற்றிலைச் சாற்றால் மைபோல் அரைத்து, உலர்த்திய பால், வெண்ணெய் கூட்டி மைபோல் அரைத்துக் கொண்டு கண் புண்ணில் போடத் தீரும்.

2. சேவல் பூவை (கோழிக்கெண்டை), அறுத்து அதில் வருகிற இரத்தத்தை மூன்றுநாள் இருபோது போடத் தீரும்.

நேத்திர வாயுவுக்கு மருந்து

துத்தம் (பால்துத்தம்), துருசு வகைக்கு 1 வராகன் எடை, படிகாரம் 2 வராகன் எடை, இரண்டு சேங்கொட்டையைச் சுட்டகரி இவைகளைப் பசுவின் வெண்ணெயால் அரைத்துக் களிம்பு செய்து கண்ணில் போட்டும், தாமரைக்கிழங்கு, நெல்லிக்காய், பொன்னாங்காணி இவைகளின் சாறு, சிற்றாமணக்கெண்ணெய், இளநீர் வகைக்கு அரைப்படி, நல்லெண்ணெய் 2 படி, இவைகளைக் கலந்ததில் விலாமிச்சம்

வேர், தாளிசபத்திரி, சண்பகப்பூ, சிறுநாகப்பூ, சந்தனம், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம் வகைக்கு 1 பலம் இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

நேத்திரவாயு, மண்டையிடிக்குத் தைலம்

1. பொன்னாங்காணி, கையாந்தகரை, காத்தொட்டி, கற்பூர வெற்றிலை இவைகளின் சாறு, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், பசுவின் நெய் வகைக்கு அரைப்படி, மேற்படி பால் 3 படி இவைகளைக் கலந்ததில் மிளகு, கத்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், நற்சீரகம், உள்ளி, ஏலம், கிராம்பு, சந்தனம், வாய்விளங்கம் வகைக்கு 4 வராகன் எடை மேற்படிச் சாற்றில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.
2. நல்லெண்ணெய் கால்படி, சீதா செங்கழுநீர்ச் சாறு கால்படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் பூண்டு கால் பலம், மிளகு 1 பலம், வெந்தயம் 1 பலம் இடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடிகட்டித் தலைமுழுகிவரத் தீரும்.

ஒளிமயக்கம், வெளிமயக்கத்திற்கு மருந்து

முயலின் புழுக்கையைச் சுட்ட சாம்பலைப் பசுவின் நெய் விட்டு மைபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவர நீங்கும்.

கண்ணில் நீரேத்தத்திற்கு மருந்து

பச்சைக்குடத்தை (சதுரக்கள்ளி)ப் பொன்னாங்காணி சாற்றில் அரைத்து நாசியில் நசியஞ் செய்து, ஆவாரங் கொட்டையைச் சட்டியில்வறுத்து பசுவின் பால் தெளித்து விழியில் ஆவி பிடித்து, அகிற்கட்டை, ஆயில்பட்டை, கருங் குங்கிலியம், சதகுப்பை, ஓமம், சுக்கு, மிளகு, வசம்பு, மஞ்சள் இவைகளைச் சம எடையாய்ப் பொடித்துத் துணியில் பாய்ச்சி உருட்டித் தீயில் கொளுத்தி நாசியில் புகை பிடிக்கச் சகல நீரேத்தமும் நீங்கும்.

சூடு வளர்த்திக்கு மருந்து

துத்தம், துருசு, சிவந்த செங்கல் பொடி இவைகளை ஓர் எடையாய் மருட்கிழங்கை வாட்டி இந்தச் சாற்றில் மைபோல் அரைத்து உலர்ந்த பின்பு பசுவின் வெண்ணெய் கூட்டி மைபோல் ஆட்டி சூட்டின் மேல் போட நீங்கும்

கண் கூச்சத்திற்கு மருந்து

வேப்பங்கொழுந்து, கற்றாழை மடல், கடுக்காய், தேற்றான் விதை இவைகளை ஓர் எடையாய்த் தாய்ப்பாலில் ஆட்டிக் கொதிக்க வைத்துப் புற வளையமிட்டு பொன்னாங்காணி வேர், அதிமதுரம் இவைகளைத் தாய்ப்பால் விட்டு நசுக்கி துணியில் கட்டி தாய்ப்பாலில் ஊற வைத்து, கண்ணில் நாளொன்றுக்கு 4 முறை விட்டு கரண்டியில் நெய்யை வெதுப்பி அதில் மேற்படி பொட்டணத்தை நனைத்து வெதுப்பி ஒற்றடம் போட்டுவர நீங்கும்

இமைத் தடிப்புக்குக் களிம்பு

அரப்பொடியைச் சங்கிலைச் சாற்றிலும், குமரிச் சாற்றிலும், சங்கம்பழச் சாற்றிலும் பதமாய் அரைத்து உலர்த்தி நல்லெண்ணெய் விட்டுக் களிம்புபோல் அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர நீங்கும்.

கண் சிவப்பு, கடுப்பு, படலத்திற்கு மருந்து

1. பருத்திவிதைப் பருப்பு, மரமஞ்சள், திரிபலாதி இவைகளை ஓர் எடையாய் மைபோல் பொடித்துக் கண்ணில் இட்டு வரத் தீரும்.

2. நந்தியாவட்டச்சாறு, சிப்பிநீர், பனைமட்டைச்சாறு, முருங்கைப்பட்டைச்சாறு, தாய்ப்பால், பசுவின் நெய் வகைக்கு கால்படி வீதம் ஒன்றாய்க் கலந்து அதில் சந்தனம், மரமஞ்சள், பனங்குருத்து வகைக்கு கால் கழஞ்சு வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து கண்ணில் விட்டுத்

தலையில் காலையில் 4 முறை தேய்த்து மாலையில் தலைமுழுக்குச் செய்து வரத் தீரும்.

3. தேற்றான் விதை, கடுக்காய்த்தோல், புளியன்விதைத் தோல் இவைகளை மைபோல் பொடித்துத் துணியில் வடிகட்டி தாய்ப்பாலில் ஊறினபின் கண்ணிலிட நீங்கும்.

விழிக்கண் குருடுக்கு மருந்து

1. நன்றாய் வெந்த செங்கல்லைப் பொடித்து வடிகட்டிக் கல்வத்தி லிட்டுப் பசுவின் வெண்ணெய், தேன், நல்லெண் ணெய் இவற்றை வகைக்கு ஒரு சாமம் அரைத்துக் களிம்பாகச் செய்து விழியிலிட்டாலும் தீரும்.

2. பேய்ப்புல் (சுணங்கன்புல்), எழிற்புல், ஒட்டுப்புல் இவை களில் தினையைப்போல் கதிருண்டாகி இருக்கும். அதைக் கசக்கித் துணியில் வைத்துக்கண்ணில் பிழிய விழிக்கண் குருடு தீரும்.

கண்வலி, மணிவளர், ஆணிக்கு மருந்து

சண்பகப்பூ 60, காரெள்ளுப்பூ 100, நந்தியாவட்டப்பூ 100, துளசி வேர், சங்கு, மண்டைஓடு வகைக்கு 1 கழஞ்சு, முத்தக்காசு 2 கழஞ்சு இவைகளைப் புளியம்பூ சாற்றிலும், எலுமிச்சை மலர்ச்சாற்றிலும் அரைத்துக் கயிறாக்கி தாய்ப்பாலில் உரைத்து விழியில் இட்டுவர நீங்கும்.

விழிகடுப்பு, குத்தல், அமரம், கண்வலிக்கு மருந்து

1. கழுவின கற்றாழஞ்சோறு விளாங்காய் அளவு, சீனக்காரம் ½ வராகன் எடை, ஈருள்ளி 3 வராகன் எடை, இருப்புச் சிட்டம் 6 வராகன் எடை இவைகளைச் சிதைத்து துணியில் முடிந்து கொஞ்சம் புளியை நீரில் கலக்கி அதை அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து அதில் மேற்படி முடிச்சை நனைத்து கண்ணில் விட்டு மேலுக்கும் ஒற்றடமிடத் தீரும். மேற்படி பொட்டணத்தைக் கொடுத்தவித்துச் சூட்டுடன் கண்ணில் ஒற்றடம் செய்து ஒரு துளி கண்ணில் பிழிந்து வந்தால் தீரும்.

2. சந்தனம், ஏலம், நெல்லிமுள்ளி, மிளகு, பொன்னாங்காணி, கழுவின கற்றாழஞ்சோறு இவற்றைச் சமன் கூட்டிப் பசுவெண்ணெயில் அரைத்துச் சிரசில் தளமிட்டு, உள்ளங்காலில் தீப்பரக்கத் தேய்த்து மாலையில் சுடுநீரில் தலைமுழுக்குச் செய்து வந்தால் தீரும்.

3. எலுமிச்சம்பழத்தைப் பொந்து செய்து அதில் அரப்பொடியும், சீனக்காரமும் ஓர் எடையாய் ஒன்றாய்ப் பொடித்துச் செலுத்தித் துணியில் பொட்டணமாய்க்கட்டி நெருப்பில் வாட்டி ஒரு சொட்டு விழியில் பிழிந்து ஒற்றடம் செய்து வந்தால் தீரும்.

4. சுவரில் வெண்ணெய் அப்பி, நீர்வாங்கினதின் பின் எடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாறும், கரிப்பான் சாறும் விட்டுக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டியும், கடுக்காயையாவது உப்பு மண்ணையாவது தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் புறவளையமிட்டு வர நீங்கும்.

கண்வலிக்கு மருந்து

கரியுப்பைப் பொடித்துப் பொட்டணங்கட்டி நீராகாரத்தில் தோய்த்து இரண்டு நாழிகைக்கு ஒரு முறை கண்ணில் பிழியக் கண்வலி உடனே தீரும்.

சுக்கிரப்படுவனுக்கு மருந்து

1. நாவற்பட்டையைத் தாய்ப்பால் விட்டுச் சிதைத்துக் கண்ணில் வார்த்து அப்பால் நத்தைச் சதையையும், ஆனை நெருஞ்சில் காயையும் சிதைத்துப் பிழிந்து ஆவாரை அரிசியைக் கோழிமுட்டை வெள்ளைக் கருவிட்டு அரைத்துப் புறவளையமிட்டாவது அல்லது கோவையிலைச்சாறும் கரிப்பான் சாறும் ஒன்றாய்க் கலந்து அதில் தேற்றான் விதை, களிப்பாக்கு, மிளகு இவைகளை ஓர் நிறையாய் வைத்துப் போட்டுக் கொதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது பொன்னாங்காணி, சிறுகீரை, ஆனை நெருஞ்சில், உத்தம தாளி, மயிர்மாணிக்கம் இவைகளின் சாறுகளைச் சமமாகக்

கலந்து தலையில் உலர உலரத் தேய்த்துக் கொண்டிருந்து மாலையில் தலைமுழுக்குச் செய்து வந்தால் தீரும்.

2. *நல்லெண்ணெய் ½ படி, வெள்ளுள்ளி, முருங்கைப் பட்டை, குப்பைமேனி, தும்பை இவைகளின் சாறு வகைக்குக் கால்படி ஒன்றாய்க் கலந்து அதில் கோட்டம் 3 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து மூன்று நாள் காலையில் தலையில் தேய்த்து மாலையில் தலைமுழுக்குச் செய்துவர நீங்கும்.*

இழிகண்ணுக்கும் புழுவெட்டுக்கும் மருந்து

குரவைமீன் முள், சிலாம்பு, குடல் நீக்கி அதன் பேரில் 7 விசை எருக்கம்பாலை உலர உலர ஊட்டிக் காயவைத்துப் பொடித்தும் துருசு, துத்தமும் ஓர் எடையாய்க் கூட்டி வேப் பெண்ணெய் விட்டு மைபோலரைத்துக் கொண்டு இமையில் போட்டுவர நீங்கும்.

கண்ணில் நெருப்புப்பட்ட புண்ணுக்கு மருத்துவம்

பசுநெய், மேற்படி இறைச்சி நீர், பனைமட்டைச் சாறு, நல்ல தண்ணீர் இவைகளை ஒன்றாய்க் கலந்து காய்ச்சி விழியில் கட்டி வர நீங்கும்.

அக்கரம் புழுவெட்டிற்கு மருந்து

வேப்பங்கொழுந்தைக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் விட்டுக் களிம்புபோல் அரைத்துப் புருவத்திலிட்டுவர நீங்கும்.

கண்பிரிதல், புழுவெட்டு, பூவிற்கு மருந்து

ஊமத்தங்காயை விதை நீக்கி அதற்குள் பாலில் தூய்மை செய்த பூநாகத்தை நிறையப்போட்டு மூடிச் சட்டியில் வைத்து எரித்துச் சாம்பலாக்கி அதற்கு நிகர் துத்தம், துருசு சேர்த்து பசுவின் வெண்ணெயால் மைபோல் அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர நீங்கும்.

நீர்வடிதலுக்கு மருந்து

வெள்ளைச்சாரணை வேரைத் தேனிலுரைத்து விழியில் தீட்டி வர நீங்கும்.

அந்தகக் (குருடு) கண்ணிற்கு மருந்து

கெந்தகம், தங்கம் வகைக்கு 1 பலம், அஞ்சனக்கல், காரீயம் வகைக்கு 3 பலம், வெள்ளி, செம்பு வகைக்கு 2 பலம் இவைகளை ஒன்றாய்க் குகையிலுருக்கி மயனமாய்ப் பொடித்து விழியில் தூவி வரநீங்கும்.

அமரம், பிரிதல் கண்ணிற்கு மருந்து

1. வேப்பங்கொழுந்தும், புளியங்கொழுந்தும் இடித்துக் குடிநீர் செய்து வடித்துக் குழம்பாய்க் காய்ச்சி அதில் துணியை இரண்டு மூன்று முறை நனைத்து உலர்த்தித் திரித்து விளக்கில் பசுநெய் விட்டுத் தீபமேற்றிச் சட்டியில் ஊமத்தையிலைச் சாறுபூசி மை பற்றவைத்து, திப்பிலி, கடுக்காய், நெல்லிப்பருப்பு இவைகளை மேற்படி குடிநீரில் அரைத்துச் சீலையில் தடவி முன்போல் தீபமேற்றி மைப்பற்ற வைத்து இருவகை நீரையும் ஒன்றாய்க் கலந்து பசுவின் வெண்ணெயைக் கூட்டியரைத்து கண்ணிலிட்டு வந்தால் தீரும்.
2. மேற்படி குடிநீரில் மிளகை அரைத்து உலர்த்தி பசு வெண்ணெய் கூட்டி மைபோல் அரைத்துக் கண்ணில் தீட்டி வந்தாலும் தீரும்.

வெளிறுக்கு மருத்துவம்

பலகரை சுட்ட சாம்பல், துத்தம், துருசு, மஞ்சள் இவைகளை ஓர் எடையாய் நல்லெண்ணெயில் அரைத்துச் சீலையில் பூசிக் கட்ட அற்று விழும். மூல முளையில் கட்டினாலும் அதுவும் அற்று விழும்.

வாரணம், சுக்கிலப்படலம், குந்தம்,
இரத்த செம்மைக்கு மருந்து

1. நந்தியாவட்டப்பூ, இச்சிப்பூ, முருங்கைப்பூ, கொடுப்பை வேர், இலவங்கம், துத்தம், கடல்நுரை, பவளம், முத்து இவைகளை ஓர் எடையாய் வெள்ளாட்டுப் பித்தால்

ஆட்டிக் கயிறு செய்து கொண்டு எலுமிச்சம் பழச்சாறும் பசுவின் நெய்யும் ஒன்றாய்க் கூட்டிக் காய்ச்சி அதில் உரைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும்.

2. சங்கு, புங்கவித்து, வெள்ளைக்காக்கணம்வித்து, துத்தம், துருசு இவைகளை ஓர் எடையாய்ப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறாக்கி தாய்ப்பாலில் உரைத்து நாள் ஒன்றுக்கு மூன்று நேரம் போட்டுவரத்தீரும்.

வெள்ளெழுத்திற்கு வெண்ணெய்

1. **கிராம்பு பழக்களிம்பு:-** ஓர் எலுமிச்சம்பழத்தைக் கயிற்றில் கோத்து அதன்மேல் நூற்றெட்டு கிராம்பை ஊன்றி விளாங்காய் அளவு பசுவின் வெண்ணெய்க்குள் பொதிந்து மூடி, அதைப் புதுச்சட்டி நீரில் அடியில் படாமல் தொங்க விட்டு தினமும் வெவ்வேறு தூய நீர் விட்டு வந்து நாற்பதாம் நாள் எடுத்து இலவங்கத்தை நீக்கி வெண்ணெயைச் செப்புச் சிமிழில் அடைத்துக்கொண்டு சத்திச்சாரணைச்சாற்றில் கொஞ்சம் வெண்ணெயைக் கலந்து 40 நாள் வரை போட்டுவர வெள்ளெழுத்தும், மற்ற கண்நோய்களும் தீரும்.

2. மேற்படி வெண்ணெய் 1 பலம், பீதரோகணி கால் பலம் இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றால் ஒரு நாள் அரைத்துச் செப்புச் சிமிழில் அடைத்துக்கொண்டு விழியில் போட்டுவர வெள்ளெழுத்து முதலாகிய கண் நோய்கள் நீங்கும்.

3. மேற்படி வெண்ணெய் 1 பலம், மிளகு அரை வராகன் எடை இவைகளைக் கல்வத்திலிட்டு மைபோல் அரைத்துக் கொண்டு கண்ணில் தீட்டிவர வெள்ளெழுத்து முதலான கண்நோய்கள் நீங்கும். பின்பு பசும்பாலில் 46 நாள் கண்ணில் போட்டுவரத் தீரும்.

4. தும்பை, நந்தியாவட்டம், கார் எள்ளு இவைகளின் பூவும் திப்பிலியும் தேன்விட்டு மைபோல் அரைத்துக்கொண்டு கண்ணில் போட்டு வந்தால் வெள்ளெழுத்து தீரும்.

5. ஓரிலைத் தாமரைவேர், சங்கு, தலைஓடு, துத்தம், துருசு, வெள்ளைக்கற்பொடி, இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச்சாற்றில் வகைக்கொரு நாள் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் நாற்பது நாள் போட்டுவர நீங்கும்.

மேல்நாட்டின் மருந்துகளில் ஒன்றை உபயோகப்படுத்தி இதன் அடியில் வருகிற தைலத்தையும் முழுகிவரக் கண்ணைச் சார்ந்த பிணிகள் நீங்கும்.

வெள்ளெழுத்து, குருட்டுக்கண் முதலான கண்ணோய்களுக்கும் உடம்புவலிக்கும் தைலம்

பொன்னாங்காணிச்சாறு, பொற்றலைக்கரிப்பான்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 10 படி, முசுமுசுக்கை, நெருஞ்சில், கண்டங்கத்திரிக்காய், முள்ளிக் கத்திரிக்காய், தென்னம்பூ, வாதநராயண இலை இவைகளின் சாறு, இளநீர் வகைக்கு 1 படி, இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் நன்னாரிவேர் 40 பலம், தாமரைப்பூ, மிளகு, அதிமதுரம், சந்தனம், அன்னாசிமொக்கு வகைக்கு 2 பலம், சீரகம், கொத்தமல்லி வகைக்கு 2 பலம், கஸ்தூரி மஞ்சள், வெட்டிவேர், சோம்பு, கல்லுப்பு, விலாமிச்சம்வேர், மல்லிகைப்பூ வகைக்கு 1 பலம் இவைகளை எட்டுபடி பசுவின் பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவர நீங்கும்.

மாலைக்கண், வெள்ளெழுத்து, புகைச்சலுக்கு மருந்து

1. மிளகு, திப்பிலி வகைக்கு 5 அல்லது 6 கழஞ்சு, கடுக்காய் விதை 3 கழஞ்சு அவைகளைத் தனித்தனியே மூன்று வெள்ளாட்டுப் பித்துக்குள் அடைத்துப் புகைபடுகிற இடத்தில் ஒரு மண்டலம் கட்டி வைத்திருந்தெடுத்துப் புளியம் பூச்சாற்றிலும் பனைமட்டைச்சாற்றிலும் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் அரைத்துக் கண்ணில் தீட்டி வர மாறும்.
2. சுழல்வண்டு, சுட்டசாம்பல், வெள்ளுள்ளி, மிளகு ஓர் எடையாய்க் கல்வத்தில் இட்டு வெற்றிலைச்சாற்றால்

அரைத்துக் காலை, மாலை மூன்று நாள் கண்ணில் தீட்டி விளக்கெண்ணெயைத் தேய்த்து நாலைந்து தலை முழுகினால் அருந்ததி கண்ணில் தோன்றும்.

நீலகாசம், பித்தகாசம், மந்தகாசப் படலம், பில்லம், முடிகுத்தல் புழுவெட்டு, மாலைக்கண், நீர்வடிதல், குந்தம், நேத்திரவாயு முதலியவற்றிற்கு மருந்து.

முத்து, வெள்ளி, தாம்பரம், சங்கு, துருசு, துத்தம், வெண்கலம், தலையோடு, பொன், பீதரோகணி, புங்கவிதை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலிலாவது நந்தியாவட்டம்பூச் சாற்றிலாவது உரைத்துக் கண்ணில் தீட்டி இதன் அடியில் சொல்லிய தைலத்தைத் தலைக்குத் தேய்த்து முழுகிவரத் தீரும்.

மேற்படி நோய்களுக்குத் தைலம்

பொன்னாங்காணி, சிறுகீரை, சீந்தில்கொடி, எலுமிச்சம் பழம், நார்த்தம்பழம் இவைகளின்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி, முத்தக்காசு, கோட்டம், அதிமதுரம், ஏலம், சண்பகப்பூ, இலவங்கம் வகைக்குக் கால் பலம் வீதம் அரைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர நீங்கும்.

கண்வலி, சிவப்பு, கடுப்பு, தினவு, நீர்வடிதலுக்கு மருந்து

1. *தான்றிக்காய், மாசிக்காய், கடுக்காய், காசிக்கட்டி வகைக்கு 1 வராகன் எடை, அபின், பொரித்த சீனக்காரம் வகைக்குக் கால் வராகன் எடை கரண்டியில் பொடித்துப் போட்டு அதில் வறட்பூலாவிலை. கருவேலிலை வகைக்கு ஒரு படி வீதம் இடித்துப் பிட்டவித்துச் சாறு பிழிந்து கொதிக்க வைத்து செப்புத் தடியால் மைபோல் அரைத்து விழியில் புறவளையமிட்டுப் புளி இலையை வேகவைத்த தண்ணீரால் கண்ணைக்கழுவி 2 – 3 முறை போடத் தீரும்.*
2. *புளியைக் கரைத்து கண்ணில் ஒரு நாளைக்கு 4 முறை பிழிந்து துளசி, புண்ணாக்கிலை, புளியிலை இவைகளை*

ஓர் எடையாய் இடித்துச் சீலையில் கட்டி விழியில் ஒற்றடம் செய்து ஆவாரம் பூவை அரைத்துச் சிற்றளமிட தீரும்.

3. இரும்புத் தகட்டை நெருப்பில் சிவக்கக் காய்ச்சி எடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாற்றையாவது புளியிலைச் சாற்றை யாவது விட்டுக் கரியபோளம், கடுக்காய்த் தோலும் சீனக்காரமும் பொடித்துப் போட்டு இரும்புக் குழவியால் களிம்புபோல் நன்றாய் அரைத்துப் புறவளையமிட்டுக் கருவேல், ஓரிலைத் தாமரை, பொன்னாங்காணி, சிறுகீரை, பஞ்சதிரவியம், கம்பிப்பிசின், மிளகு, கஸ்தூரி மஞ்சள் இவைகளை ஓர் எடையாய்க் காடிவிட்டரைத்துக் குழம்பாய்க் காய்ச்சித் தளமிடத் தீரும்.

4. கருக்கின் புழுங்கலரிசியும் அபினும் சமமாய் ஊமத்தம் சாற்றில் முன்போல் களிம்பாயரைத்து விழியில் புறவளைய மிட்டுக் கொடுப்பை, சிறுகீரை, வெண்பூலா, மிளகு இவை களை வகைக்கு எலுமிச்சங்காய் அளவு அரைத்துக் கால்படி பசும்பாலில் கரைத்துக் குழம்பாய்க் காய்ச்சி தலையில் தளமிட்டுவரத் தீரும்.

5. கோழிமுட்டையை உடைத்து வெள்ளைக் கருவைப் பீங்கானில் விட்டு அதில் கொஞ்சம் சீனக்காரத்தைப் போட்டு சிறுகீரை வேரால் கடைந்தால் வெண்ணெய் போல்வரும்; அதை விழியில் போட்டுக் கருவேலம் கொழுந்து, மாதுளங்கொழுந்து வகைக்கு ஒரு படி வீதம் குடித்துக் கால் படி பசும் பாலில் போட்டு வேகவைத்துப் பிழிந்து குழம்பாய்க் காய்ச்சி இரும்புத் தகட்டிலிருந்து இரும்புக் குழவியால் களிம்புபோல் அரைத்துக் கொண்டாவது அல்லது இருப்புத்தகட்டை நெருப்பில் காய்ச்சி அதில் சீனக்காரம், துத்தம், துருசு இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துப் போட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு மைபோலரைத்துக் கொண்டாவது விழியில் புறவளையமிட்டு மேற் சொல்லிய புகையைக் காட்டிவரத் தீரும்.

கண்வலி, கடுப்பு, நேத்திர வாயுவிற்கு மருந்து

1. களிம்புள்ள வெங்கலத் தகட்டில் தாய்ப்பாலாவது எருமைப்பாலாவது விட்டுச் செம்புக் குழவியாலரைத்துக் களிம்புண்டாக்கி அந்தக் களிம்பைப் பருத்திப் பஞ்சில் ஊட்டித் துட்டகலத்தில் மூன்று வில்லை செய்து ஒன்றின் மேல் ஒன்றை வைத்து ஓர் சட்டியில் புளியம்பொருக்குப் போட்டுத் தணலுண்டாக்கி அதில் அரைத்த வீசம்படி எள்ளைப் பொடித்துப் போட்டுப் புகை பஞ்சியேறும்படி வைத்து மூடிப் புகையடங்கினதின் பேரில் காலை, மாலை, மதியத்தில் ஒவ்வொரு வில்லையாக கண்ணில் பிழிந்து வரத்தீரும்.
2. கொடுப்பை, ஓரிலைத் தாமரை, வெள்ளைக்காக்கணான், சிறுகீரை இவைகளின் வேர்களை ஓர் நிறையாக எலுமிச்சம்பழச் சாற்றில் நன்றாக அரைத்து உலர்த்தி பின்பு வெண்ணெய் கூட்டிக் களிம்புபோல் அரைத்து கண்ணில் தீட்டிவரத் தீரும்.
3. சங்கு, புளிவெள்ளைச்சாரணை, பொன்னாங்காணி, சிறுகீரை, கரிப்பான் இவைகளின் இலைச்சாற்றை ஓர் எடையாய்க் கலந்து அதில் சீலையை 6–7 முறை நனைத்து உலர்த்தி நண்டு கொழுப்பில் தோய்த்து தீயில் கொளுத்திச் சாம்பலாக்கி அதில் வெண்ணெயைக் கூட்டிக் களிம்பு போல் அரைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும்.

விழிவேதனை படலத்துக்குப் புறவளையம்

சிற்றாமணக்கின் வேரும், ஆமணக்கின் வேரும் ஓர் எடையாய் வேலிப்பருத்திச் சாற்றில் மைபோலரைத்துக் கலக்கிக் குழம்பாய்க் காய்ச்சி விழியில் புறவளையமிட்டு உச்சியில் தளமிட்டுவர நீங்கும்.

விழிவீக்கம், எரிவு, தினவு, படல்சிவப்பு, கடுப்பு, நீர்வடிதலுக்குப் புறவளையம்

1. கடுக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, அதிமதுரம், தேற்றான் விதை, கருவேலிஇலை, புளியங்கொழுந்து இவைகளை

ஓர் எடையாய்க் கற்றாழை மடலுக்குள் பொதித்து உமிக் காந்தலில் புதைத்து வெந்த பதத்தில் மருந்தை எடுத்துத் தாய்ப்பால் விட்டு களிம்பு போல் அரைத்துக்கொண்டு கண்ணில் புறவளையமிட்டுவரத் தீரும்.

2. காயா, வறட்பூலா, புளி இவைகளின் இலைச்சாறுவகைக்குக் கால்படி ஒன்றாய்க்கலந்து அதில்நெல்லி, முள்ளி, சந்தனம், தேற்றான்விதை, ஆமையோடு இவைகளைப் பசும்பாலில் மைபோல் அரைத்துப் போட்டுக் குழம்பாய்க் காய்ச்சி தலையில் காலையில் தளமிட்டு மாலையில் சுடுநீரில் தலைமுழுக்குச் செய்துவர நீங்கும்.

மேற்படி நோய்களுக்கு ஒற்றடம்

1. காய்வேளை, கருவேலிலை, கடுக்காய், கற்றாழஞ்சோறு இவைகளை ஒன்றாய்ச் சிதைத்தாவது அல்லது மருதம் பட்டை, சீரகம், அதிமதுரம் இவைகளைச் சமமாய் சிதைத்து ஒற்றடமிடத் தீரும்.

2. சீலைகட்டி அதைக் கரண்டியில் நெய்விட்டு வெதுப்பியதில் வைத்து ஒற்றடம் செய்யத் தீரும். ஒரு படி பசும்பாலில் ஒரு படி புளியங்கொழுந்தும் நாலு கடுக்காயும் தட்டிப் போட்டு வேகவைத்து விழியிலாவி பிடித்து அதைச் சீலையில் முடிந்து ஒற்றடம் செய்து புறவளையம் தளமுதற் சலபிரயோகங்கள் செய்ய மிகுந்த நன்மை உண்டாகும்.

மேற்படி நோய்களுக்கு இமையின் மேலிடும் பஞ்சு

பசும்பாலில் உத்தாமணிவேர் அரைத்து மேற்படி நெய்யில் போட்டு வேகவைத்து வடித்து இமையைச் சுற்றிப் பூசி உலர்ந்த பின் சந்தனத்தைப் புறவளையமிட்டு மேற்படி நெய்யில் பஞ்சை ஊட்டி இமையின் மேல் போட்டு நித்திரை செய்யவும்.

மேற்படி நோய்களுக்குத் தாரைப்புறவளையம்

சிற்றாமணக்கின் வேர், கடுக்காய்த்தோல் வகைக்கு 6 கழஞ்சு இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டு அரைக்கால்

படியாய் வற்றவைத்து வடிகட்டி கண்ணில் அந்நீரை விட்டால் தீரும்.

முசுமுசுக்கை இலை ஒரு பிடி, அதிமதுரம், மஞ்சள் வகைக்கு 1 கழஞ்சு இவைகளைச் சிதைத்துப் பசும்பாலில் அரைத்து மேற்படி நெய்யில் போட்டு வேகவைத்து வடிகட்டி கண்ணில் தாரை இட்டு பொன்னாங்காணி வேர், சந்தனம், அதிமதுரம் இவைகளை ஓர் எடையாய்த் தாய்ப்பாலில் உரைத்துக் கலக்கி வெதுப்பி விழியில் புறவளையமிட்டு உச்சியில் தளமிட்டுவரத் தீரும்.

கண்ணில் சதை வளர்ச்சிக்கு மருந்து

ஈருள்ளியும், குறிஞ்சாவும் ஓர் எடையாய்ச் சிதைத்துச் சாறுபிழிந்து மூன்று நாள் கண்ணில் இட நீங்கும்.

கண் நோய்களுக்கு மாத்திரை

1. பச்சைக்கற்பூரம், இந்துப்பு வகைக்கு 1/8 வராகன் எடை, இரசம் ¼ வராகன் எடை, திப்பிலி, மிளகு, காரீயம் வகைக்கு ½ வராகன் எடை, பூநாகச்சத்து, கடுக்காய்ப் பருப்பு வகைக்கு 1 வராகன் எடை, அரிதாரம் 2 வராகன் எடை எலுமிச்சம் பழச்சாற்றில் 3 நாள் அரைத்துக் கயிறு செய்துகொண்டு தாய்ப்பாலில் இழைத்து விழியில் போட்டுவரப் படலம், பில்லம், சிவப்பு, நீர்ப்பாய்ச்சல், திமிர் முதலான கண் நோய்கள் தீரும்.

2. ஆமையோடு, அஞ்சனக்கல், மனிதர் தலையோடு, கல்மதம், குதிரைப் பல், யானைத் தந்தம், பன்றிக் கொம்பு, சேவல் நெஞ்செலும்பு, தேற்றான் விதை, துத்தம், துருசு, சங்கு, முத்து, காவிக்கல், கடலாமையோடு, பீதரோகணி, வெள்ளி லோத்திரம் இவற்றை ஓர் எடையாய் எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் கயிறாக்கித் தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டுவரப் படலம், பில்லம், கண் சிவப்பு, நீர்ப்பாய்ச்சல், திமிரம் முதலான கண் நோய்கள் தீரும்.

3. திரிகடுகு, திரிபலை, வாலுளுவையரிசி, வாய்விளங்கம், தாமரைக்கிழங்கு, அதிமதுரம், செம்புப்பொடி, இந்துப்பு,

செஞ்சந்தனம், முந்திரிப்பழம், மஞ்சள், நன்னாரி வேர், வெள்ளிலோத்திரம், துத்தம், பீதரோகணி, காரீயம், வெண்காரம் இவற்றை ஓர் எடையாய் சங்கம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறாக்கிக் கொண்டு தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டுவர திமிரம், படலம், கண்ணில் நீர்வடிதல், கண்காசம் முதலானவைகள் நீங்கும்.

4. திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், பீதரோகணி, காரீயம், பொன்மெழுகு, வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டை இவற்றை ஓர் எடையாய்க் கழுதைப்பாலிலும், பசும் பாலிலும், தாய்ப்பாலிலும் வகைக்கு ஒரு சாமமரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்துப் போட்டு வந்தால் தீரும்.

5. பச்சைக் கற்பூரம், காரீயம், திப்பிலி, மிளகு வகைக்கு ¼ கழஞ்சு, இரதம், வெங்காய விதை, பூநாகம் வகைக்கு ½ கழஞ்சு இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கயிறாக்கிச் சிறு நீரிலுரைத்துப் போட்டு வந்தால் திமிரம், படலம், காசம் முதலான நோய்கள் தீரும.

6. தாமிரம், துருசு, துத்தம், முத்து, பவழம், நீலம், கரு வளையல், வெண்காரம், கணவாயோடு இவற்றைச் சமமாய்ப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து கொண்டு புழுவெட்டு, செவ்வேர், தசை வளர்ச்சிகளுக்குப் பழச்சாற்றிலும், நீர்ப்பாய்ச்சல் கூச்சத்திற்குப் பனை மட்டைச் சாற்றிலும், பூச்சிக்கடிக்கு நெருஞ்சில்பூ சாற்றிலும் உரைத்துக் கண்ணில் போட்டுவரத் தீரும்.

7. செம்புப்பொடி, துத்தம், துருசு, வெண்கலம், வளையல், வெள்ளைக்கல், ஓரிலைத்தாமரை வேர், வெட்பூலா வேர் வகைக்கு ஒரு கழஞ்சு, இந்துப்பு கால் கழஞ்சு, எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்துக் கயிறாக்கிக் கொண்டு தாய்ப் பாலில் உரைத்துப்போடச் சகல கண்நோய்களும் தீரும்.

8. வெள்ளைக்காக்கணான் வேர், துத்தம், துருசு, பளிங்குக் கல், சங்கு, மஞ்சள், திப்பிலி, சந்தனம், பச்சைக்கற்பூரம், செப்புப் பொடி இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச்

சாற்றில் 5 நாள் மைபோல அரைத்துக் கயிறு செய்து தாய்ப் பாலில் உரைத்துக் கண்ணில் இட்டுவரச் சகல காசத்துக் குளைவு, அழற்சி, உள்குத்து, உளைவு முதலான சகல கண் நோய்களும் தீரும்.

9. வெண்காரம், செப்புப்பொடி, வெண்கலம், காரீயம், வளையலோடு, வெட்பூலா வேர்ப்பட்டை, ஓரிலைத் தாமரை வகைக்கு 1 வராகன் எடை, இந்துப்பு ¼ வராகன் எடை இவற்றை முருங்கை மலர்ச் சாற்றிலும், எலுமிச்சம்பழச் சாற்றிலும் அரைத்துக் கயிறாக்கிக் கொண்டு வாகன சுக்கிரனுக்கு நாயுருவிச் சாற்றிலும், கொடிய ஆணிப்பூ படலம், மந்தாரகாசம் ஆகியவற்றிற்கு மேற்படி உருண்டையும் படிகாரமும், வெண்காரமும், உத்தாமணிச் சாற்றில் உரைத்துப்போட நீங்கும்.

10. பொன்னாங்காணி, சிறுகீரை, பூலா இவைகளின் வேர் திப்பிலி, துத்தம், துருசு, புளியம்பூ இவையெல்லாம் ஓர் எடையாய் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றினால் உரைத்துப் போட சகல கண் நோய்களும் தீரும்.

கண் நோய்களுக்குப் பொடி

1. வெண்காரம் 1 வராகன் எடை, துத்தம் 2 வராகன் எடை, சீனக்காரம் 2 வராகன் எடை, முட்டைத்தோல் 4 வராகன் எடை, பலகறை 4 வராகன் எடை இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றிலும் சிறுகீரைச்சாற்றிலும் மைபோலரைத்து உருட்டிக் காயவைத்து மேற்படி வேரை அரைத்துக் கவசம்செய்து சட்டியில் வைத்து எரித்துப் பற்பமாக்கிப் பொடித்துக் கொண்டு அரிசியளவு கண்ணில் போட ஆணிப்பூ, நீர்க்குமிழி, குந்தம், சதைவளர்ச்சி, அதிமாங்கிச வளர்ச்சி, உருத்தல், நீர்ப்பாய்ச்சல், சூடுவளர்த்தி, அகரம் ஆகியவை நீங்கும்.

2. ஓரிலைத்தாமரைவேர், பொன்னாங்காணிவேர், துத்தம், துருசு, பவழம், முத்து, தலைஓடு, சங்கு இவைகளைச் சமமாய் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து வில்லை

தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து, மூடி சீலைமண் செய்து புளியம்பொருக்கில் புடம் போட்டு எடுத்து எள் அளவு கண்ணில் தூவிவர பற்பல நோய் பூசுப்படலம், இரணம், சுக்கிரன் முதலியவை நீங்கும்.

3. துருசு, சங்குப்பொடி, மண்டைஓடு, பூலாவேர், ஓரிலைத் தாமரைவேர், இவைகள் வகைக்கு 2 வராகன் எடை வீதம் எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாள் அரைத்து வில்லை தட்டி காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து முன்புபோல் புடமிட்டு அதை இரு கூறு செய்து ஒருகூறுக்கு நாலில் ஒன்று பீதரோகணியும் ஒரு பணவிடை பச்சை கற்பூரமும் கூட்டிப் பொடித்து எள் அளவு கண்ணில் தூவி வர பற்ப நோய், நீர்ப்பாய்ச்சல் தீரும்.

4. மற்றொரு பங்கைத் தெள்ளிக்கொண்டு அரைப்பண வெடை வீதம் கண்ணில் தூவிவர கண்படுவன், விழி கண், குருடு, தீத்தசை வளர்ச்சி, நீர்முட்டல், தில்லைநேத்திரவாயு, பித்தகாசம், கண்சிவத்தல், பீளை பாஞ்சணி, மந்தார காசம், இரத்தப்படலம், அடியினால் சம்பவிக்கும் கண் கலக்கம் தீரும்.

5. சீமைக் கல்நார், வெள்ளைக்கற்கண்டு, துருசு வகைக்கு ஒரு வராகன் எடை, வெந்த தலையோடு 2 வராகன் எடை இவைகளை மயனமாய்ப் பொடித்துக் கொண்டு நெல்லெடை கண்ணில் தூவிவரப் படலம், காசம், பூ முதலான சகல கண் நோய்களும் நீங்கும்.

6. சந்தனம், துத்தம், துருசு, காரம், பீதரோகணி, பச்சைக் கற்பூரம் இவைகளை ஓர் எடையாய் மைபோல் அரைத்து எள் அளவு கண்ணில் தூவிவர சகல கண் நோய்களும் தீரும்.

7. மஞ்சள், சந்தனம், துத்தம், துருசு, பச்சைச் சூடம், மனோசிலை, இந்துப்பு, வெட்டிவேர், பூலாவேர், பீத ரோகணி, வெள்ளிலோத்திரம் இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாள் அரைத்து உலர்த்திப் பொடித்து எள் அளவு கண்ணில் தூவிவர சகல நோய்களும் தீரும்.

கண் நோய்களுக்கு இளநீர் குழம்பு

1. குருணிச் செவ்விளநீரில் பொன்னாங்காணி, சிறுகீரை இவற்றின் வேர், திரிபலை வகைக்கு 1 பலம், கந்தம் (சந்தனம்), கோட்டம், இலவங்கம், மரமஞ்சள், ஏலம், அதிமதுரம், சிரகம், தேவதாரம், சண்பகப்பூ, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைவளையம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர் வகைக்கு 3 பலம் இவைகளைப் பொடித்துப்போட்டுக் குழம்பாய்க் காய்ச்சி இறுத்துக் கல்வத்தில் இட்டு அதில் துத்தம், கடல் நுரை, அஞ்சனக்கல், பீதரோகணி, படிகாரம் வகைக்கு 1 கழஞ்சு பொடித்து மைபோல் அரைத்து உலர்த்திப் பின்பு பச்சைச்சூடம் ஒரு பணவெடை கூட்டித் தேன் விட்டுக் குழம்புபோல் அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர நீர்ப்பாய்ச்சல், பில்லம், பற்ப நோய், படலம், வாதகாசம், பித்தகாசம், கண்பிரிதல் தீரும்.

2. துத்தம், துருசு, வெங்காரம், மிளகு, இந்துப்பு, திப்பிலி, சுக்கு, பச்சைக்கற்பூரம் வகைக்கு ஒரு கழஞ்சு இவைகளைப் பொடித்துத் தேனும் வெண்ணெயும் சேர்த்துக் குழம்பு போல் அரைத்துக் கண்ணில் தீட்டிவர விரணசுக்கிரன், காசம், படலம், பூளை, தினவு, சொறி, அன்ன கோபம், அழிகண், அமரம், திமிர், நீர்ப்பாய்ச்சல் தீரும்.

கண் நோய்களுக்கு மை

1. பீதரோகணி, மனோசிலை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பசுவின் நெய்யிலும், பாலிலும் அரைத்துப் புதுச் சட்டித் தூரிலப்பி சிற்றாமணக்கெண்ணெய் விட்டுத் தீபமேற்றி மைப்பற்ற வைத்ததற்கு நிகர் துணி சுட்டக் கரிசேர்த்து வெண்ணெயில் குழைத்து கண்ணீல் திட்ட சகல கண் நோய்களும் தீரும்.

2. வேம்பு, புளி, வெட்பூலா, முருக்கு, தேள்கொடுக்கு, கையாந்தகரை, வெள்ளைச்சாரணை, சங்கு இவைகளின் சாறுகளை ஒரளவாய்க்கலந்து துணியை 6–7 முறை நனைத்து உலர்த்தித் திரித்து விளக்கிட்டு நல்லெண்ணெய் விட்டுத்

தீபமேற்றிப் புதுச்சட்டித்தூரில் மேற்படி சாறுகளைப்பூசி மை பற்றவைத்து அதற்கு நிகர் துத்தம், அஞ்சனக்கல், புளியம்பூ, கடுக்காய், அரிசி, அதிமதுரம், இந்துப்பு, இரும்புப் பொடியும் கூட்டி பசுவின் வெண்ணெயால் அரைத்துக் கொண்டு விழியில் தீட்டிவர அழிகண், பில்லம், கடுப்பு, நீர்வடிதல், படலம் தீரும்.

3. வேம்பு, விளா, உப்பிலி, கையாந்தகரை, தேள்கொடுக்கு, சங்கு இவைகளினிலைச் சாறு ஓரளவாய்க் கலந்து முன்போல் துணியில் ஊட்டி மைபற்ற வைத்து அதற்கு நிகர் துத்தம், துருசு, வெங்கலப்பொடி, திப்பிலி, இந்துப்பு கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து உலர்த்திப் பின்பு பசுவின் வெண்ணெய் கூட்டி, அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர விழிசிவப்பு, படலம், எழுச்சி, கண் பிரிதல், புழுவெட்டு, புகைச்சல், இமைத்துடிப்பு, நீர் முட்டல் தீரும்.

4. சிறுகீரை, பொன்னாங்காணி, வேலிப்பருத்தி, கரிப்பான், மூவிலை, மின்னி (கருங்காக்கட்டான்), பாடா (ஆடு தின்னாப்பாளை), ஐந்துளசி, நல்லதுளசி, கருந்துளசி, நாய்த்துளசி, திருநீற்றுப்பச்சை (சிவதுளசி), எலுமிச்சைத் துளசி, என்பனவாம், தூதுளை, புளியாரை, விஷ்ணுகாந்தி, இவைகளின் சாறுகளைப் புதுச்சட்டித் தூரில் பத்துமுறை உலர உலரப்பூசி மேற்படி சாறுகளில் துணியை நனைத்து உலர்த்தி திரித்து நெய்விட்டுத் தீபமேற்றிச் சட்டித்தூரில் மை பற்றவைத்து துத்தம், துருசு, குன்றி அளவு கூட்டி பசுவின் வெண்ணெயால் அரைத்துக்கொண்டு விழியில் தீட்டிவர சகல கண்நோய்களும் தீரும்.

5. பொன்னாங்காணி, சிறுகீரை, கரிப்பான், பொடுதலை, குப்பைமேனி, ஊமத்தை, முருங்கை, அகத்தி, புளி, கீழ்க்காய்நெல்லி, வேம்பு, எருக்கிலை, கடுக்காய்ப் பருப்பு, நாயுருவி, வேலிப்பருத்தி, துளசி இவைகளின் சாறுகளை முன்போல் சட்டித்தூரிலும் துணியிலும் ஊட்டித் திரித்து நல்லெண்ணெய் விட்டுத் தீபமேற்றி மைபற்ற வைத்து

துத்தம், துருசு, படிகாரம் வகைக்கு 1 வராகன் எடை கூட்டி பொன்முசுட்டை, சென்னாயுருவி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றில் அரைத்து உலர்த்தி வெண்ணெய் சேர்த்து அரைத்துக் கொண்டு கண்ணில் விட்டுவரச் சகல கண் நோய்களும் தீரும்.

கண் நோய்களுக்கு விழியில்கட்ட நெய்

1. பசுநெய், பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் முடக்கொத்தான், சந்தனம், பூமிசர்க்கரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, அதிமதுரம், அலரி வேர், தாமரைக் கிழங்கு வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் போட்டு பாகமாய்க் காய்ச்சி வடித்து விழியில் கட்ட நீலகாசம், கண்வலி, வாணப் படலம் தீரும்.
2. நந்தியாவட்டைப்பூ, முருங்கைப்பூ, பனைமட்டை, பொன்னாங்காணி, சிறுகீரை, பச்சை மஞ்சள், எலுமிச்சம் பழம் இவற்றின் சாறும் கிளிஞ்சல் நீரும் வகைக்குக் கால் படி, பசுநெய் ½ படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம், கோட்டம். ஏலம், இலவங்கம், சண்பகப்பூ வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து மூன்று துளி வீதம் விழியில் கட்டிவர பூ இரத்தப்படுவன், சதைவளர்ச்சி தீரும்.
3. பசுவின் நெய்யில் பனைமட்டை, மருட்கிழங்கு இவைகளின் சாறும், கிளிஞ்சல் நீரும் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம் 1 பலம், பசும்பால் விட்டரைத்துக் காய்ச்சி வடித்து மூன்று துளிவீதம் விழியில் கட்டிவரக் கண்வேக்காடு, இரணம், சுக்கிரன், கண்ணோயின் பேரில் கண்ட வெள்ளை வாங்கும்.
4. பசுவின் நெய், தாய்ப்பால் வகைக்கு 1/8 படி கலந்து அதில் அதிமதுரம், பொன்னாங்காணிவேர், சிறுகீரைவேர் வகைக்கு ஒரு கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியிலிட்டுவரக் கண்ணெரிவு மாறிக் கண் குளிரும்.

5. நற்சீரகம், ஏலம், திப்பிலி, முத்து, பவழம், அதிமதுரம், அத்திப்பிஞ்சு இவைகளை ஓர் எடையாய் அரைத்துப் பசுநெய்யில் போட்டுக் காய்ச்சி மூன்றுநாள் விழியில் கட்டி அப்பால் நெருப்பைத் தாய்ப்பால் விட்டவித்து அதை ஜாடியில்விட்டு அரைத்துப் புறவளையமிடக் கண் விதனம் மாறும்.

6. கிளிஞ்சில் நீர், பனைமட்டைச்சாறு, இளநீர் வகைக்கு மாகாணி, பசும்பால், நெய் வகைக்கு 1 ½ ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து அதில் குங்குமப்பூ, தாமரைக்கிழங்கு, சந்தனம் வகைக்கு 2 பணவெடை, செங்கழுநீர்க்கிழங்கு 1 பணவெடை, நற்சீரகம் 3/8 பணவெடை, அதிமதுரம், கோரோசனை வகைக்கு ¼ பணவெடை இவற்றை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துக் கண்ணில் கட்டினால் பல கண் வியாதிகள் தீரும்.

7. பசுநெய்யும், பாலும் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் சிறுகீரைவேர், அதிமதுரம், செஞ்சந்தனம், நெய்தற்கிழங்கு இவற்றை வகைக்கு 1 பலம் மேற்படி பாலில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியில் கட்டினாலும் கண் சிவப்பு, காந்தல் முதலிய நோய்கள் தீரும்.

8. பசும்பால், நெய், முருங்கைப் பூச்சாறு, உத்தாமணிச் சாறு வகைக்கு ¼ படி, மஞ்சள், அதிமதுரம், சந்தனம், சீரகம் இவற்றை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியில் கட்டிவர சுக்கிரன் தீரும்.

9. முடக்கொத்தான் சமூலத்தில் பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்த சாறு 1 படி, மேற்படி நெய் ¼ படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம் 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கண்ணில் கட்டிவர படலம், காசம், திமிரம் அத்திக் கோபம் தீரும்.

10. இளநீர், பசுநெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் நன்னாரி, இருவேலி, நெய்தற்கிழங்கு, சந்தனம், மஞ்சிட்டி, வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப்போட்டுக் காய்ச்சி

வடித்துக் கண்ணில் கட்டினால் சகல கண் நோய்களும் தீரும்.

11. முருங்கைப்பூ, பசுமஞ்சள், எலுமிச்சம்பழம், பனை மட்டை, கோவைஇலை இவைகளின் சாறு, சிப்பி நீர் வகைக்குக் கால் படி, பசுநெய் 1 படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் சிறுகீரை வேர், பொன்னாங்காணி வேர், நந்தியாவட்டை வேர் இவற்றை ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியில் கட்டிவரக் கண்ணில் சீழ்வடிதல் மாறும்.

கண்நோய் உடையவர்களுக்குத் தலைக்குப் பற்றிட குங்குமப்பூத் தைலம்

குங்குமப்பூ, மஞ்சிட்டி, சந்தனம், அரத்தை, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், ஆலமுகிழ், அதிமதுரம், தாமரைக்கிழங்கு, நீர்வள்ளிக்கிழங்கு, பாசை வகைக்கு 2 பலம் இவற்றை இடித்து 8 படி தண்ணீரில்போட்டுக் காய்ச்சி ஒரு படியாய் வற்றவைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய் 1 படி விட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைக்குப் பதமிட்டுவர (பற்று) நலமுண்டாகும்.

கண்நோய் உடையவர்களுக்குக் காலில் தேய்க்கத் தைலம்

சின்னிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் நாபிக்கிழங்கு 1 வராகன் எடை சிதைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காலில் தேய்த்துவர நலமுண்டாகும்.

விழியில் நோய் வராதிருப்பதற்கும் குளிர்ச்சிக்கும் வெண்ணெய்

சிற்றாமணக்கின் வேரை அரைத்துப் பசுவின்பாலில் கலக்கிக் காய்ச்சிப் புரை குத்திக் கடைந்து வெண்ணெயெடுத்து விழியில் தீட்டிவர நலமுண்டாகும்.

விழிநோய்களுக்கு மருந்தரைக்கும் பாண்டம்

வெங்கலக் கல்வமும், செப்புக் குழவியும் இருக்கவேண்டும். அதில் அரைத்தால் உத்தமம்.

குறிப்பு:- முன்கூறப்பெற்ற விழிநோய் மருந்துகள் அனைத்தும் இக் கல்வத்தில் அரைக்கவேண்டுமே யல்லாமல் மற்றொன்றிலும் அரைக்கலாகாது.

காலையில் போடவேண்டிய மருந்தை இரவிலும், மாலையில் போடவேண்டிய மருந்தைக் காலையிலும் அதற்குரிய துணை மருந்துகளில் வெள்ளிக் கிண்ணத்தில் உரைத்து விழியில் தீட்டவும்.

கண்ணில் மருந்திடப் பொருந்தாக் காலம்

மேற்படி நோயாளிகள் நெடுந்தூரம் வெய்யிலில் நடந்து அலுத்திருக்கும் போதும், மது வகைகளைப் புசித்திருக்கும் போதும் தைலம் தலைமுழுக்குச் செய்துகொண்ட நாளிலும், கண் வலிக்கும் நாளிலும், இரவிலும் மருந்திடலாகாது.

கண்ணில் மருந்திட்டபின் நடக்கவேண்டிய ஒழுக்கமுறை

காற்று, வெய்யில், போதைப் பொருள்கள், குளிர்ந்த தண்ணீரில் கை, கால் கழுவல், நீராடல் முதலியன கைப்பு, புளிப்பு, கரப்பன் உணவுப் பண்டங்கள் நீக்கியும், வெந்நீர், பசும் பால், நெய், துவரை, பாசிப்பயறு, சிறுகீரை, பொன்னாங்காணி, முருங்கைக் கீரை, வாழைக்கச்சல் இவைகளை உட்கொண்டும் வந்தால் நலமுண்டாகும்.

பல்தூய்மை

ஆலின்விழுது, பூலாக்குச்சி, நாயுருவி, வெள்ளெருக்கு, உகா இவைகளின் வேர், வேம்பு, வேல் இக் குச்சிகளிலொன்றினால் பல்லைத் தூய்மை செய்து வெந்நீரில் முகம் கழுவிவந்தால் நன்று.

தைலம் (தலைமுழுக்கு நெய்) தேய்த்துக்கொள்ளும் முறை

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணியில் சூரிய உதயத்துக்குப் பின் ஒரு கடிகைவரையிலும் மார்கழி, தையில் 2 கடிகை வரையிலும் மாசி, பங்குனி மற்ற மாதங்களில் 3 கடிகை வரையிலும் தலையில் தைலம் ஊறினபின் வெந்நீரில் உசில் இலை, சிகைக்காய் முதலான அரப்பிட்டுத் தலை முழுக்குச் செய்து வருவது முறைமையாகும்.

கண் நோய்களுக்குத் தைலம்

1. *சிறுகீரை, பொன்னாங்காணி, எலுமிச்சை, நன்னாரி, நந்தியாவட்டம், வாதமடக்கி, சங்கங்குப்பி, முடக்கொத்தான், பொன்முசுட்டை, நொச்சி, கறுத்த காக்கணான், அமுக்கிரா, சீந்தில், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தாமரை, நெய்தல், கரந்தை, சவுரி, பேராமுட்டி, ஆல், இவைகளின் வேர்; வேப்பீர்க்கு அதிமதுரம், தேவதாரம், தான்றிக்காய், முத்தக்காசு வகைக்கு 3 பலம்; சந்தனம் 8 பலம், சிற்றாமுட்டிவேர் 15 பலம், மிளகு 5 பலம் இவற்றை இடித்து 12 படி தூயநீரில் போட்டு தீபம்போல் எரித்து எட்டில் ஒன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 6 படி, பசும்பால் 4 படி, மேற்படி நெய் 2 படி, செவ்விளநீர் 1 படி, முடக்கொத்தான், பொன்முசுட்டை, நொச்சி, பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி, சீந்திற்தண்டு, கற்றாழை, தண்ணீர்விட்டான், வாதமடக்கி இவைகளின் சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்விட்டுக் காக்கணம், பூலாக் கிழங்கு, இலவங்கப்பத்திரி, சந்தனம், தேவதாரம், மஞ்சிட்டி, வால்மிளகு, சடாமாஞ்சில், ஏலம், சாதிக்காய், கிராம்பு, கோட்டம், வெட்டிவேர், அஞ்சனக்கல், விலாமிச்சம் வேர், மரமஞ்சள், கொத்தமல்லி, குக்கில், அதிமதுரம், செவ்வியம், சண்பகப்பூ, இலவங்கப்பட்டை, தக்கோலம், சதகுப்பை, நெல்லிமுள்ளி, திப்பிலி, கடுகு ரோகணி, சிறுநாகப்பூ, தேசாவரம், பச்சை வகைக்கு 3 கழஞ்சு பசும் பாலில் அரைத்துப் போட்டுச் சிறு தீயா யெரித்து மெழுகு பதத்தில் வடித்து அதில் சூடாறுமுன்*

அபின், புனுகு, சவுக்காரம், கோரோசனை, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், வகைக்கு 1 கழஞ்சு பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு ஒன்றை விட்டொருநாள் தேய்த்து சிகைக்காய் அரப்பிட்டு முழுகிவர நயனகாசம், படலம், பில்லம், திமிரம், புழுவெட்டு, பித்தம் பூ, குருடு, நீர்ப்பாய்ச்சல், குந்தம், முதலான கண்ணோய் 96–ம் நீங்கும்.

2. நெல்லிக்காய், கையாந்தகரை இவற்றின் சாறு, பசுவின் பால் வகைக்கு 3 படி, நல்லெண்ணெய் 4 படி, அதிமதுரம், கோட்டம், ஏலம், இலவங்கம், சண்பகமலர், சந்தனம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர் வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவரக் கண்காசம், படலம், புகைச்சல், பித்தம் தரும்.

3, நெல்லிக்காய், கையாந்தகரை இவைகளின் சாறு வகைக்கு 2 படி, நல்லெண்ணெய், பசும்பால் வகைக்கு 1 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம் 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி தலைமுழுகக் கண்படலம், கண்ணெரிவு, கபால வறட்சி நீங்கும்.

4. நல்லெண்ணெய், கருஞ்செம்பையிலைச் சாறு வகைக்கு 1 படி, தாய்ப்பால் ¼ படி, ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு 1 பலம், வால்மிளகு ¼ பலம் உள்ளி, வசம்பு வகைக்கு 1 பலம் இவைகளை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து தலைமுழுக நேத்திர வாயு நீங்கும்.

5. கையாந்தகரை, பொன்னாங்காணி, முசுமுசுக்கை, தாழை விழுது இவற்றின் சாறு; நல்லெண்ணெய், தாய்ப்பால், செவ்விளநீர் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து மூன்று நாள் வெய்யிலில் வைத்து அதில் சந்தனம், அதிமதுரம், விலாமிச்சம் வேர், வெட்டிவேர், செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம் வகைக்கு 1 கழஞ்சு, கிராம்பு 5 பணவெடை, குங்குமப்பூ 2 பணவெடை, இவைகளை அரைத்துக் கலக்கிக் காய்ச்சித் தலைமுழுகக் கண் புகைச்சல், பித்தகாசம், தலை மயக்கம் நீங்கும்.

6. சிறுகீரை, கரிப்பான் இவைகளின் சாறு; நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி, எலுமிச்சம்பழச்சாறு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கோட்டம், நெல்லிமுள்ளி, அதிமதுரம், ஏலம், இலவங்கம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கிக் காய்ச்சித் தலைமுழுகப் பித்தகாசம், வறட்சி முதலியவை நீங்கும்.

7. சிறுகீரை, பொன்னாங்காணி, வல்லாரை, முசுமுசுக்கை, நெல்லிக்காய் இவைகளின் சாறு, நல்லெண்ணெய், பசும்பால், இளநீர் வகைக்கு 2 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் இஞ்சி 3 பலம், வெட்டிவேர், தண்ணீர் விட்டான் கிழங்கு வகைக்கு 1 பலம், தாமரைக்கிழங்கு 3 பலம், மல்லி 2 பலம், சீரகம், வாய் விளங்கம் வகைக்கு ¼ பலம் இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கலக்கிச் சூரியனில் இரண்டு நாள் வைத்துக்காய்ச்சி வடித்து அதில் பஞ்சதிரவியம் தினுசுக்கு 2 வராகன் எடை பொடித்துத் துணியில் முடிந்து போட்டுக்கொண்டு தலை முழுகிவர கண்குருடு, நீலகாசம், பித்தகாசம் நீங்கும்.

8. வெட்டிவேர், விலாமிச்சம் வேர், முத்தக்காசு, நன்னாரிவேர், நெல்லிமுள்ளி, மரமஞ்சள், சந்தனம், மகிழமலர் வகைக்கு 1 பலம் இவைகளை இடித்துப் பதக்குத் தண்ணீரில்போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி அதில் பச்சைக்கோலம், நன்னாரி, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், கோட்டம், சந்தனம், இலுப்பை மலர், சதகுப்பை, குங்குமப்பூ, சடா மஞ்சில், வெள்ளைக்குங்கிலியம், மகரமலர், புனுகு, நெய்தல்கிழங்கு, சாதிக்காய், ஏலம், முத்தக்காசு, அகில், விழலரிசி, தாமரைக்கிழங்கு, கடுகு, செவ்வியம், தான்றி, அஞ்சனக்கல், அதிவிடயம், அதிமதுரம், சண்பகப் பூ, மஞ் சிட்டி வகைக்கு 1 கழஞ்சு இவைகளை அரைத்துப்போட்டு நல்லெண்ணெய் நாழிக்கூடவிட்டுப் பதமாய்க் காய்ச்சி இறுத்து தலை முழுகிவர தலைமயக்கம், உடல் எரிவு, காமாலை, மதிமயக்கம், கண்திமிலம், எரிவுபடலம், காசம், இழிகண்பூ, சதைவளர்த்தி, நீலகாசம், நரை, திரைநீங்கும்.

9. சிற்றாமுட்டி வேர் 3 பலம், வில்வவேர், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், நன்னாரிவேர், சீந்தில்தண்டு, சந்தனம், அமுக்கறாக்கிழங்கு வகைக்கு 3 பலம் இவைகளை இடித்து 16 படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் குடிநீர் செய்து அதில் சிறுகீரை, கொடுப்பை, முசுமுசுக்கை, ஓரிலைத் தாமரை, தண்ணீர் விட்டான்கிழங்கு, வல்லாரை, சீதாசெங்கழுநீர், கற்றாழை, தாழை விழுது வகைக்கு ஒரு படிச் சாறு கூடவிட்டு பஞ்ச திரவியம், சிறு நாகமலர், சீரகம் கத்தூரிமஞ்சள், திரிகடுகு, திரிபலை, சடாமாஞ் சில், செவ்வள்ளிக்கொடி, வெட்பாலையரிசி, வாலுளுவை யரிசி, பெருங்குரும்பை, மல்லி, கற்பூரம், தேவதாரம், பச்சைக்கிளியூறல் பட்டை, கிச்சிலிக்கிழங்கு, பூஞ்சாந்துப் பட்டை வகைக்கு 2 வராகன் எடை இவற்றைப் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி குங்குமப்பூ 1 வராகன் எடை வடிகலசத்தில் பொடித்துப் போட்டுத் தலை முழுகிவர கண் நோய் தீரும்.

10. நெல்லிக்காய், முசுமுசுக்கை, இளநீர், கரிசலாங்கண்ணி, கற்றாழை, தண்ணீர்விட்டான் கிழங்கு, வல்லாரை இவைகளின் சாறு வகைக்கு 4 படி, பசுவின் பால், நல்லெண்ணெய் வகைக்கு 8 படி, சிற்றாமணக்கெண்ணெய், பசு நெய் வகைக்கு 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் ஏலம், அதிமதுரம், கோட்டம், மஞ்சிட்டி, நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், இலவங்கப்பட்டை, இலவங்கப்பூ, இலவங்கப்பத்திரி, சண்பகமலர் வகைக்கு ¼ பலம், தாளிசபத்திரி 1 ¼ பலம், சந்தனம் 2 பலம், கோரோசனை ¼ பலம், பச்சைக் கற்பூரம் 1/8 பலம் இவற்றை இளநீர் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துத் தானியப்புடம் வைத்து தலை முழுகிவர உட்சுரம், பித்தம், தினவு, கடிநஞ்சு, கை காலெரிவு, திமிர், கண்காசம், படலம், நேத்திரவாயு முதலானவைகளும் தீரும்.

11. நெல்லிக்காய்ச்சாறு, பசுவின்பால், நல்லெண்ணெய், இளநீர் வகைக்கு 2 படி, நன்னாரி, சீந்தில், முத்தக்காசு, சிற்றாமுட்டி, பொன்னாங்காணி, பேராமுட்டி, சீதா

செங்கழுநீர், இருவேலி, ஓரிலைத்தாமரை வகைக்கு 1 பலம் இவற்றை இடித்துப் பத்து படித் தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்றவைத்து பசுவின் பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி சேர்த்து அதில் நற்சீரகம், செஞ்சந்தனம், வசுவாசி (சாதிபத்திரி), திரிகடுகு, கிராம்பு, ஏலம், அதிமதுரம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், கோட்டம் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப்போட்டு ஒன்றாய்ச் சேர்த்துக் காய்ச்சி முழுக பித்தவறட்சி, பிரமேகம், அவயங்களின் எரிவு, உட்டிணக் கண்ணீர் பாய்ச்சல், தலைவலி தீரும்.

12. பத்து படித் தண்ணீரில் கால் விசை சந்தனத் தூளைப் போட்டு ஐந்து நாள்கள் ஊறவைத்துக் காய்ச்சி இரண்டு படியாய் வற்றவைத்து விலாமிச்சம்வேர், வெட்டிவேர், நன்னாரி, பொன்னாங்காணி, சிற்றாமுட்டி, சீந்தில், வில்வம் இவற்றின் வேர் வகைக்கு ஒரு பலமாக இடித்து இரு தூணி நீரில் போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து இருவகைக் குடிநீர்களையும் ஒன்றாய்க் கலந்ததில் பசுவின் பால், நெய், நல்லெண்ணெய், வகைக்கு 2 படி கலந்து மரமஞ்சள், மஞ்சிட்டி, சடாமாஞ்சில், மல்லி, செவ்வள்ளிக்கொடி, செவ்வியம், விழலரிசி, சதகுப்பை, வெட்பாலையரிசி, பச்சைத் திப்பிலி, கச்சோலம், தகரம், புனுகு, சந்தனம் வகைக்கு 4 கழஞ்சு இவற்றை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்கும் சாப்பிட்டுத் தலைக்கும் தேய்த்து முழுகிவர மேற்சொல்லிய நோய்கள் தீரும்.

13. தாமரைக்கிழங்கு, நெல்லிமுள்ளி, ஆம்பல்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, நெய்தல்கிழங்கு வகைக்கு 10 பலம் இவற்றை இடித்து உலர்த்திப் பத்துபடி தண்ணீரில் போட்டு நாலில் ஒன்றாய் வற்றவைத்து அதிலொருபடி நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவரக் கண்ணோய்கள் தீரும்.

14. நெல்லிக்காய், கரிப்பான், தாமரைக்கிழங்கு, பொன்னாங் காணி, பேய்ப்புடல், கோவையிலை, எலுமிச்சம்பழம்,

இவைகளின் சாறு, பசுவின் பால் வகைக்கு அரைப்படி, நல்லெண்ணெய் 1 படி, அதிமதுரம், தேவதாரம், நாகணம், கோட்டம், ஏலம், முந்திரிப் பழம், பேரீச்சம்பழம், சந்தனம், சாதிக்காய் வகைக்கு 2 வராகன் எடை இவற்றை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து மூன்று நாழிகைவரை தலையில் தேய்த்து உசிலையின் அரப்பிட்டுத் தலை முழுக்குச்செய்துவர எட்டுவகைக் காசமும் தீரும்.

15. கருவேலம்பட்டை 200 பலம், குமரி, சீந்தில் சிற்றாமுட்டி சிறுகீரை, பொன்னாங்காணி, சீதாசெங்கழுநீர், தாமரைக் கிழங்கு, நன்னாரி, விலாமிச்சம், சந்தனம் வகைக்கு 4 பலம், இவற்றை எல்லாம் இடித்துத் தூணி நீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி அதில் நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 4 படி, இளநீர் 2 படி விட்டுக் கலந்து அதிமதுரம், கோட்டம், சதகுப்பை, சன்னலவங்கப்பட்டை, சந்தனம், பச்சிலை, சாதிக்காய், வள்ளிக்கொடி, ஏலம், பச்சைத்திப்பிலிமூலம், மல்லி, அகில், வாலுளுவை, செஞ் சந்தனம், முத்தக்காசு, சடாமாஞ்சில், கோரோசனை வகைக்கு 2 கழஞ்சு இவற்றை அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சித் தலை முழுகிவர நேத்திரநோய் 96–ம், தலைவலியும் தீரும்.

16. பேய்வாழைக்கிழங்கு, வெள்ளருகு, பிரமி, பொன் முசுட்டை, பாதிரி, நாய்வேளை, தகரை, நெல்லிமுள்ளி வகைக்கு 1 பலம் வீதம் இடித்து எட்டுபடி தண்ணீரில் போட்டு வற்ற வைத்திறுத்த குடிநீர் 1 படி, பசுவின் நெய் 1 படி ஒன்றாய்க் கலந்ததில் மிளகு, சுக்கு, அரத்தை, சிறுதேக்கு, மலைதாங்கிவேர், மரமஞ்சள், தான்றிக்காய், மதுரம், பூமிசர்க்கரைக்கிழங்கு வகைக்கு 9 வராகன் எடை பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் திமிரம், காசம் தீரும்.

17. காத்தொட்டி, வெற்றிலை, மரமஞ்சள், பச்சை கஞ்சா, இவற்றின் சாறு வகைக்குக் கால் படி, பசுவின் பால், நல்லெண்ணெய், வகைக்கு 2 படி, மிளகு, கருஞ்சீரகம்,

கோட்டம் வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர விழியில் நீர் வடிதல், பில்லம், பீனசம் தீரும்.

18. சிற்றாமணக்கெண்ணெய், குமரிச்சாறு வகைக்கு 1 படி, தேவதாரம், சந்தனம், பச்சைக்கற்பூரம், சாதிபத்திரி, அதிமதுரம், கடுகுரோகணி, தக்கோலம், மஞ்சள், சாதிக்காய், கிராம்பு, ஏலம், புனுகுச்சட்டம், முத்தக்காசு, சடாமாஞ்சில், விலாமிச்சம்வேர், இலவங்கம், மஞ்சிட்டி, நன்னாரிவேர், தாமரைக்கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, சிறுநாகப்பூ, திரிபலை வகைக்கு 9 கழஞ்சு மேற்படி சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவர கண் நோய்கள், தலை நோய்கள்யாவும் தீரும்.

19. கற்றாழஞ்சாறு 2 படி, இளநீர் 1 படி, நல்லெண்ணெய் 3 படி, பசுவின் பால் 6 படி இவற்றைக் கலந்து மூன்று நாள் இரவில் வைத்து நான்கில் ஒன்றாய்க் காய்ச்சி அதில் செங்கழுநீர்க்கிழங்கு, ஏலம், இலவங்கம், பச்சைச் சந்தனம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், இலுப்பைப்பூ, கோட்டம், வெள்ளைக்குங்கிலியம், சிறுநாகப்பூ, நறும்பிசின், சடாமாஞ்சில், அதிமதுரம், அரேணுகம், மரமஞ்சள், தகரம், புன்னைத்தாது, தாமரைவளையம், ஞாழல்தாது, கொட்டிக்கிழங்கு, நன்னாரி, முத்தக்காசு வகைக்கு 3 கழஞ்சு இவற்றை அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர கண்ணழற்சி, நீர்ப்பாய்ச்சல், பற்ப நோய்களும் தீரும்.

20. சந்தனத்தூள் 6 பலம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், முத்தக்காசு வகைக்கு 3 கழஞ்சு இவற்றை அரைத்து நல்லெண்ணெய் 1 படியில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வர கண்ணில் சிவப்பு, நீர்ப் பாய்ச்சலும் பற்ப நோய்களும் தீரும்.

21. சந்தனத்தூள் 6 பலம், விலாமிச்சவேர், முத்தக்காசு, அதிமதுரம், ஏலம், இலவங்கம், இந்துப்பு, கார்கோலரிசி, அகில் வகைக்கு 1 பலம் இவற்றை இடித்து தூணிநீரில்

போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 3 படி, பசுவின் பால் 6 படி, பச்சைக் கச்சோலம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், அதிமதுரம், ஏலம், இலவங்கம் சிறுநாகப்பூ, அகில், சந்தனம், செவ்வள்ளிக்கொடி, கோட்டம் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் குங்குமப்பூ, புனுகு, பச்சைக்கற்பூரம், வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டுத் தலைமுழுகிவர பன்னகாசம், படலம், பற்ப நோய், புகைச்சல், நீர்ப்பாய்ச்சல், கூச்சம், தலைநோய், கன்னச்சூலை ஆகியவை தீரும்.

22. ஏலம், இலவங்கம், சாதிக்காய், நெல்லி, தான்றி, கோட்டம், கஸ்தூரிமஞ்சள், கருவாப்பட்டை, செஞ் சந்தனப் பொடி, கடுகுரோகணி, சிறுநாகப்பூ, அதிமதுரம், கடுக்காய், சதகுப்பை, சண்பகப்பூ, பச்சை, வெள்ளைக் குங்கிலியம், குழித்தொட்டிவேர் வகைக்கு 3 பலம் இவற்றை எல்லாம் இடித்து 24 படி தண்ணீரில் போட்டு ஒன்றாய் வற்றவைத்து பொன்னாங்காணி வேர், வெட்டிவேர், விலாமிச்சம்வேர் வகைக்கு 3 பலம் இவற்றை தனித்தனியே இடித்து 4 படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்துவிட்டு இளநீர், தாழைவிழுதுச் சாறு வகைக்கு 1 படி, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 3 படி ஒன்றாய்க் கலந்து மேற்படி 4 வகை மருந்தும் வகைக்கு 2 பலம் மேற்படிபால் விட்டு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர விழிநீர்ப் பாய்ச்சல், இமைத் தடிப்பு, பற்ப நோய்கள் முதலான விழி நோய்கள் தீரும்.

23. நல்லெண்ணெய், இளநீர், பசுவின் பால் வகைக்கு 1 படி சிறுகீரை, கையாந்தகரை, பொன்னாங்காணி, நெல்லிக்காய், இவற்றின் சாறு வகைக்கு 1 படி, வெட்பாலை அரிசி, கஸ்தூரிமஞ்சள் பஞ்சதிரவியம் வகைக்கு 1 பலம் இவற்றை அரைத்துக் காய்ச்சி தலைமுழுகிவர விழி எரிவு, இமைத்தடிப்பு, காசம் தீரும்.

உடல் உள்ளுறுப்பு எரிவு, பித்தத்திற்குத் தைலம்

சிற்றாமுட்டி, நன்னாரி, இருவேலி, முன்னை, நெய்தல் இவற்றின் வேர், சீந்தில்தண்டு, சீதாச்செங்கழுநீர், தாமரைக் கிழங்கு, தண்ணீர்விட்டான், சிறுகீரைவேர் வகைக்கு 1 பலம் இவற்றை இடித்து எட்டு படி தண்ணீரில் போட்டு ஒன்றாய்க் காய்ச்சி வடித்து அதில் தாழைவிழுது, தாமரைக்கிழங்கு, பொன்னாங்காணி, கையாந்தகரை, ஓரிலைத்தாமரை, நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், இவற்றின் சாறு வகைக்கு 2 படி, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 6 படி இவற்றை எல்லாம் ஒன்றாய்க் கலந்து பஞ்ச திரவியம், பச்சிலை, கத்தூரிமஞ்சள், சிறுநாகப்பூ, செவ்வியம், சடாமாஞ்சில் வகைக்கு ஒரு பலம் இளநீர் விட்டரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து அதில் புனுகும் பச்சைக்கற்பூரமும் பொடித்துப் போட்டுவைத்துக்கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

விழிகடுப்பு, தலைவலிக்குத் தைலம்
(தலைமுழுக்கு நெய்)

நல்லெண்ணெய் 1 படி, குப்பைமேனி, கையாந்தகரை, ஆதண்டை, நொச்சி, கழற்கொடி இவைகளின் சாறு வகைக்கு 1 படி, பின்னுங் கையாந்தகரைச் சாற்றில் சர்க்கரையைக் கரைத்து வெய்யிலில் வைத்து சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி அபின் 1 வராகன் எடை போட்டுக்கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

விழிநோய்களுக்கும் கபாலக் குட்டத்திற்கும் குமரித் தைலம்

எட்டுபடி குமரிச்சாற்றை ஒரு பாண்டத்தில் ஊற்றி ஒரு படியாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 1 படி, சிறுநாகப்பூ, செங்கழுநீர்க்கிழங்கு, அதிமதுரம், விலாமிச்சம்வேர், நன்னாரி, அஞ்சனக்கல், சந்தனம் வகைக்கு 3 கழஞ்சு, பசுவின் பால்விட்டு அரைத்துப்போட்டுக் கலக்கிக் காய்ச்சித் தலைமுழுகிவரத் தீரும்.

கபால வலி, கபால சன்னி, கண்ணோய்களுக்குச் சம்பீரத் தைலம்

தேங்காய்ப்பால், பசுவின் பால் வகைக்கு 2 படி, எலுமிச்சம் பழச்சாறு, தாய்ப்பால் வகைக்கு 3 படி ஒன்றாய்க் கலந்ததில் ஏலம், இலவங்கம், நற்சீரகம், சுக்கு, கோட்டம், சண்பகப்பூ வகைக்கு 1 கழஞ்சு அரைத்து மிளகு, அதிமதுரம், சதகுப்பை, மயிரோசனை, குருத்து, ஈசுரமூலி, முப்புரமெரித்தான், பெருங்குரும்பை வகைக்கு 2 கழஞ்சு இவற்றை அரைத்துப் போட்டு ஊசி காந்தத்தில் மூன்று நாள் வைத்திருந்து காய்ச்சித் தலைமுழுகிவரத் தீரும்.

கண்ணோய், செவிநோய், தலை நோய்களுக்குத் தைலம்

கையாந்தகரை, கற்றாழை, நெல்லிக்காய் இவற்றின் சாறு, தாய்ப்பால் வகைக்கு 1 படி, நல்லெண்ணெய் ½ படி, நன்னாரிவேர், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கோட்டம், அதிமதுரம், சந்தனம் வகைக்கு அரைப்பலம், மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

விழிநோய், தலைநோய், கற்பூரச்சந்தனாதித்தைலம்

நல்லெண்ணெய், பசுவின்பால், இளநீர், கற்றாழை, தாழை விழுது, முசுமுசுக்கை, கற்பூரவள்ளி, எலுமிச்சம்பழம் இவற்றின் சாறு வகைக்கு 1 படி, விலாமிச்சம் வேர், வெட்டி வேர், ஏலம், ஓமம், குங்குமப்பூ, கிராம்பு, சீரகம், மல்லி, தேவதாரம், அரத்தை, மரமஞ்சள், கிளியூறல்பட்டை, தான்றிக்காய், கற்கடக சிங்கி, சிறுநாகப்பூ, சண்பகப்பூ, கஸ்தூரி மஞ்சள், வெட்பாலைஅரிசி, விழலரிசி, சிறுதேக்கு, பூலாங்கிழங்கு பச்சைவாளுலுவையரிசி, மிளகு வகைக்கு 1 கழஞ்சு இவற்றை எல்லாம் எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்து தலை முழுகிவர மூக்கில் நீர் பாய்ச்சல், சீழ்வடிதல், நாசி கனத்து மண்டையைக் குத்துதல், ஒற்றைத் தலைவலி, கபால இடி முதலான தலை நோய் 40–ம் கண்நோய் 96–ம் தீரும்.

பித்தம், விழிகாசம், காதடைப்பு, மந்தத்திற்குத் தைலம்

கையாந்தகரை, நெல்லிக்காய், நொச்சி, ஆதண்டை இவற்றின் சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1¼ படி, அதிமதுரம் ½ கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி தலை முழுகிவரத் தீரும்.

கண் நோய் தொண்ணூற்றாறுக்குத் தைலம்

பொன்னாங்காணி, சிறுகீரை, ஆவாரை மொட்டுத்துளிர், இவற்றைப் பசுவின் பால்விட்டு, இடித்துப் பிழிந்தசாறு, சிற்றாமணக்கெண்ணெய், பசுவின்நெய், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி, பசுவின் பால் 1 படி, ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், கிராம்பு, அதிமதுரம், கோட்டம், செண்பகப்பூ, சாதிக்காய், மிளகு, ஏலக்காய், சந்தனம், செஞ்சந்தனம், மரமஞ்சள், அரத்தை, தேவதாரம், சாத்திரபேதி, வெட்டிவேர் வகைக்கு அரைக்கால் பலம் பொடித்துப போட்டுப் பதமாகக்காய்ச்சி வடித்து ஒன்றை விட்டொரு நாள் தலைக்குத் தேய்த்துச் சிகைக்காய் உசில் இலை அரப்பிட்டு தலை முழுக்குச் செய்துவர சகல கண் நோய்களும் தீரும்.

விழிநோய், தலைநோய்க்குத் தைலம்.

தாழைவிழுதுச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, கரிசலாங் கண்ணிச் சாறு, சீந்தில் சாறு வகைக்கு ஒரு படி, நல்லெண்ணெய் 16 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் இலுப்பைப்பூ, சந்தனம், அதிமதுரம், ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, நாகேசுரம் (சிறுநாகப்பூ) வெட்டிவேர், முத்தக்காசு, சாதிக்காய், பேரீச்சம்பழம், கொத்தமல்லி, தேவதாரம், விலாமிச்சுவேர், தாமரைக் கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, ஆலம்விழுது, வில்வவேர், கீழ்க்காய்நெல்லிவேர், மல்லி வகைக்கு 1 பலம் இவற்றை யெல்லாம் இடித்துப் போட்டுப் பதமாகக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

(கண் மருத்துவப்படலம் முற்றிற்று.)

பீனசப் படலம்

அதாவது தலையில் அனலெழுந்து சூலையால் நோய் அதிகரித்து மூக்கிலிருந்து சீழ்போலும், சிராய்போலும், ஒழுகியும் காணப்படும்.

திரைக்கட லுலகி லுள்ள
திரண்டநூல் யாவும் பார்த்து
வரைதொறும் பிணியின் கோவை
வகைப்படி யாராய்ந் தேதான்
குறையினைத் தீர்ப்ப தற்குக்
குறித்தவயித் தியதி காரம்
அறைமுனி பாதம் போற்றி
வழுத்தினேன் காப்பு தானே.

காப்பான வாதபீன சந்தா னாகும்
கருதியதோர் பித்தபீ னசமு மாகும்
வாய்ப்பான சிலேத்ம பீனச முமாகும்
வகுத்தநீர்ப் பீனசமாம் சீழ்ப்பீ னசம்
சேப்பான வுதிரபீ னசமு மாகும்
செழிப்பான சிராப்பீனச மூலபீ னசமாம்
ஆப்பான சுண்டைப்பீனச மூலபீ னசமாம்
அப்பனே யெட்டுவிதந் திண்ணமாமே.

வாதப்பீனசம், பித்தப்பீனசம், சிலேத்துமப்பீனசம், இரத்தப் பீனசம், சீழ்ப்பீனசம், சிராய்ப்பீனசம், சண்டைப்பீனசம், மூலப்பீனசம் ஆக பீனசவகை எட்டாகும்.

பீனசநோய் பொது இயல்பு

மூலத்தில் கனலேறி கபாலத்தில் நீரையேற்றி ஒரு மூக்கு அடைத்து ஒரு மூக்கில் நீர் வடியும்; அடிக்கடி தும்மல் வரும்; பிடரியும் தலையும் கனத்து வலிக்கும்; வாரந்தோறும் கபாலம் வறண்டு நீர்திரண்டு நாறும்; தேகத்தின் வெப்பு காணும்; நாவில் சுவையும் மூக்கில் மணமும் கெடும்; தலையின் நீர் நெஞ்சிலிறங்கிக் கட்டும்.

வாதப்பீனச இயல்பு

மூக்கு வறளும்; நீர்வடியும்; நீர்பழுத்து சளிபோலத் திரண்டு நாற்றமின்றி விழும்.

பித்தப்பீனச இயல்பு

மூக்குவழி மஞ்சள் நிறமாய் சளி வடியும்

சிலேத்துமப்பீனச இயல்பு

மூக்கு மாறி மாறி அடைத்து முத்துப்போல் நீர் வடிந்து நாறும்; துணுக்குப்போல் சளி விழும்; மூக்கில் ஊசிபோல் குத்தும்; கண்ணில் பீளை சாரும்.

நீர்ப்பீனச இயல்பு

விடபித்தமும் வெட்டையும் அதிகரித்துத் தலையில் ஏறி மூக்கு வழி நீர் வடிந்துகொண்டு இருக்கும்; மழையில் நனைந்தால் நீர் மிகுத்து பிரியும்; முகமும் பரபரத்தூறும்; நாசியரிக்கும்; அடிக்கடி தும்மல் வரும்; தலைகனத்து வலிக்கும்.

இரத்தப்பீனச இயல்பு

வெட்டையின் பேரில் அக்கினித்தவம் (சூடு) மிஞ்சி கபாலத்தில் ஏறி அதில் வட்டமாய்ப் புண்ணாகி மூக்கு வழி இரத்தம் விழும்; தலை வலிக்கும்.

சீழ்ப்பீனச இயல்பு

வெட்டையும் பித்தமும் கபாலத்தில் அதிகரித்துக் கபாலம் எரியும்; மூக்கு வரையில் புண்ணாகிச் சீழ்வடியும்; தலை வலிக்கும்.

சிராய்ப்பீனச இயல்பு

நாசிவழி சிராய்ப் போலும் ஈருள்ளி கூடுபோலும் சீழ்திரண்டு விழும்; பிணம் போல் நாறும். மணம் தெரியாது; விடாமல் தலை வலிக்கும்.

இவைகட்கு மருத்துவம்:-

1. கையாந்தகரை, ஆதண்டை, குறட்டைப்பழம், வெற்றிலை, நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், முசுமுசுக்கை, முடக்கொத்தான் இவற்றின் சாறு வகைக்கு கால்படி, நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு கால் பலம், அதிமதுரம், கோட்டம், செண்பகப்பூ, நற்சீரகம், வாய்விளங்கம், கொத்தமல்லி, வால் மிளகு, கத்தூரிமஞ்சள், ஏலம், இலவங்கம், தாளிச பத்திரி, இலவங்கப்பட்டை வகைக்கு 5 வராகன் எடை, கோரோசனை கால் வராகன் எடை இவற்றைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி பதமாயிறுத்து மூன்று நாளைக்கு ஒரு முறை முழுகியும் மிளகைக் கொட்டைப்பாக்கு அளவு வெற்றிலைச் சாற்றில் அரைத்து வெள்ளைத்துணியில் தடவி அப்பால் குறட்டைப்பழச் சாற்றில் 8 முறை நனைத்து நிழலில் உலர்த்தித் திரித்து நாசியில் புகை பிடித்துவரத் தீரும்.

2. நாரத்தம்பழம், எலுமிச்சம்பழம், புளியாரை, தண்ணீர் விட்டான்கிழங்கு, அறுகம்வேர், வல்லாரை, கரிப்பான், பொன்னாங்காணி இவற்றின் சாறு வகைக்கு 1 படி, ஆதண்டைச்சாறு, பிச்சைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 2 படி, சந்தனம், சதகுப்பை, மஞ்சிட்டி, யானைத் திப்பிலி, கிராம்பு, இலவங்கப்பத்திரி, தாளிசபத்திரி, இலவங்கப்பட்டை, சண்பகப்பூ வகைக்கு 4 பலம், செங்கழுநீர்க்கிழங்கு 2 பலம் இவற்றைப் பசும்பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து மூன்று நாளைக்கு ஒரு முறை தலையில் தேய்த்து உசிலிலை, பாசிப் பயறு, மருங்காரைவேர்ப்பட்டை முதலியவைகளின் அரைப்பிட்டுத் தலைமுழுக்குச் செய்து சாதிலிங்கம், பறங்கிப்பட்டை, மிளகு, கருஞ்சீரகம், துருசு, இவற்றை ஓர் எடையாய்ப் பொடித்துக் காகிதத்தில் சுருட்டி தீயில் கொளுத்தி மூக்கில் புகை பிடித்துவரத் தீரும்.

3. கரிசாலை, அவுரி, கஞ்சா, பொன்னாங்காணி, வெற்றிலை, முசுமுசுக்கை, அகில்கட்டை, எலுமிச்சம்பழம்,

குறட்டைப்பழம், அத்திப்பட்டை, இவற்றின் சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்து அதில் கருஞ்சீரகம், கடுகுரோகணி, கத்தூரி மஞ்சள், தான்றிக்காய், அதிவிடையம், அரத்தை, சுக்கு, கோட்டம், சதகுப்பை, குரோசாணி, சிறுநாகப்பூ, தாளிச பத்திரி, திப்பிலிமூலம், சித்திரமூலம், பெருங்காயம், நெல்லிமுள்ளி, பிச்சிவேர்ப்பட்டை, மிளகரணைப்பட்டை, சீயக்காய், நெல்லி வேர் வகைக்கு ஒரு கழஞ்சு இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துச் சூட்டுடன் அதில் ஒரு பிடி முருங்கைப்பூவைப் போட்டு வைத்துக்கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

4. கடுகெள்ளெண்ணெய் 1 படி, குறட்டைப்பழம், வெற்றிலை, ஆதண்டை, உசிலம்பட்டை இவைகளின் சாறு வகைக்குக் கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு, வால்மிளகு, சீரகம், சண்பகம் வகைக்கு 1 பலம் இவற்றைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

5. குப்பைமேனி, ஆடுதீண்டாப்பாளை, அழிஞ்சிவேர், முள்ளி இவைகளின் சாறு வகைக்கு ½ படி, நல்லெண்ணெய் கால் படி இவைகளை ஒன்றாய்க் கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி இறுத்துத் தலைமுழுகிவரத் தீரும்.

6. நல்லெண்ணெய் 1 படி, கரிப்பான் சாறு, கருநொச்சிச் சாறு வகைக்கு ½ படி ஒன்றாய்க் கலந்ததில் மிளகு 1½ பலம், சாம்பிராணி 1 பலம் பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு தலை முழுகிவரத் தீரும். அல்லது நல்ல அபின் கிடையாத பட்சத்தில் ½ பலம் சத குப்பையை அரைத்து முன் மருந்துகளுடன் சேர்த்துக் காய்ச்சிக்கொள்ளவும்.

7. வேங்கைக்கட்டை, சீந்தில் தண்டு,வில்வவேர், சிற்றாமுட்டி வேர் வகைக்கு 8 படி இவைகளை இடித்து 8 மரக்கால் தண்ணீரில் போட்டு 12 நாளில் எட்டில் ஒன்றாக வற்றும்படி தீபம் போல் எரித்து வடித்து அதில் நல்லெண்ணெய் 1 படிவிட்டு அமுக்குறா வேர்ப்பட்டை 3 பலம், சாதிக்காய்,

தக்கோலம், சண்பகப்பூ, விலாமிச்சம் வேர், வெட்டிவேர் வகைக்கு 1 வராகன் எடை பசும்பாலில் அரைத்துப் போட்டு அன்றாடம் ஒவ்வொரு தாழம்பூ மடலையும் போட்டு 5 நாள் வரையில் மத்தாமணியாய்க் காய்ச்சி வடித்து அதில் புனுகு, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப்போட்டு வைத்துக் கொண்டு நாசியில் நசியம்செய்து தலையில் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

மூலப் பீனசத்தின் இயல்பு

மூக்கில் கோழிச் சதை போலும் அதன் கொண்டை போலும் வளரும்.

சுண்டைப் பீனசத்தின் இயல்பு

மூக்கில் சுண்டைக்காய் போல் சதை வளர்ந்து அடைக்கும்; தலை நீர் நெஞ்சில் இறங்கிக் கபம் கட்டும்.

மருத்துவம்:- ஆயில்மரப்பட்டை, மிளகாய், சந்தனம் வகைக்கு 1½ வராகன் எடை, மிருதார்சிங்கி, சாதிலிங்கம், அரிதாரம் வகைக்கு 1 வராகன் எடை, இலுப்பைப் புண்ணாக்கு கால் வராகன் எடை, ஊமத்திலைச் சாற்றில் அரைத்து எருக்கம்பாலும், சதுரக்கள்ளிப்பாலும், ஒரு துணியில் ஊட்டி உலர்த்திய பாலில், மேற்படி மருந்தை அதில் பூசி ஒரு சாமம் வைத்துக் கொஞ்சம் கத்தரித்து சுங்கானில் வைத்துப் புகையை மூக்கில் ஏற்ற மூலப்பீனசம், சுண்டைப்பீனசம், சிராய்ப்பீனசம், கபாலச்சூலை, விரணம் முதலானவைகளும் தீரும்.

நீர்ப்பீனசத்திற்குத் தைலம்

1. நொச்சிச்சாறு, நல்லெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்கு 1 படி, செவ்வியம், திரிகடுகு, வாய்விளங்கம், கருஞ்சிரகம், அரத்தை, கத்தூரிமஞ்சள், திப்பிலிமூலம், நொச்சிப் பட்டை வகைக்கு 1 பலம் இவைகளை மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

2. நொச்சி, கரிசாலை, வெற்றிலை, ஆதண்டை, பச்சை மஞ்சள் இவற்றின் சாறு வகைக்குக் கால்படி; ஈருள்ளிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி; மிளகு கால் பலம் உடைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

3. நல்லெண்ணெய், பசுப்பால், இளநீர், கற்றாழை, முசுமுசுக்கை, கற்பூரவள்ளி, எலுமிச்சம்பழம் இவற்றின் சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் நாயுருவி, சந்தனம், விலாமிச்சவேர், வெட்டிவேர், ஏலம், ஓமம், அரத்தை, தேவதாரம், மஞ்சள், கிளியூறல்பட்டை, தான்றிக்காய், செண்பகப்பூ, சிறுநாகப்பூ, கஸ்தூரிமஞ்சள், மரமஞ்சள், விழலரிசி, சிறுதேக்கு, வாலுளுவையரிசி வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

4. பூவரசு, வெள்ளெருக்கு, மலைதாங்கி இவற்றின் வேர், கஸ்தூரி மஞ்சள், சிறுநாகப்பூ, வெடியுப்பு, புனுகு இவற்றை ஓர் எடையாய்த் துளசிச் சாற்றாலாட்டித் துணியில் ஊட்டித் திரித்துப் புகையை மூக்கிலேற்ற நீர்ப்பீனசம் முதலானதும் தீரும்.

பீனசம், நீர்வடிதல், எரிப்பு, தும்மலுக்குத் தைலம்

ஆயில்மரப்பட்டை 40 பலம், சங்கம்வேர், அரத்தை, மிளகு வகைக்கு 10 பலம், மஞ்சள் 5 பலம் இவற்றை இடித்துப் பதக்கு (2 மரக்கால்) நீரில்போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்திறுத்து அதில் நல்லெண்ணெய் 4 படி, நொச்சி, முசுமுசுக்கை, ஆயில், கரிசாலை இவற்றின் சாறு வகைக்கு ½ படி, பசும்பால் 1 படி கூட விட்டு அதிமதுரம், சதகுப்பை கால் பலம் இவற்றை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

இரத்தப்பீனசம், சிராய்ப் பீனசத்திற்குத் தைலம்

1. ஆதண்டை, ஆடாதோடை, கையாந்தகரை, நொச்சி, பசுமஞ்சள், நாரத்தம்பழம் இவற்றின் சாறு வகைக்கு ½ படி,

நல்லெண்ணெய் 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் கொத்தமல்லி, மிளகு, சுக்கு, சூடாகக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத்தீரும்.

2. அறுகுவேர், நெல்லிக்காய், பொன்னாங்காணி, சிறுகீரை, தாழைவிழுது இவற்றின் சாறு, பசும்பால், சிற்றாமணக் கெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் மிளகு 1 பலம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

3. பொன்னாங்காணி, கையாந்தகரை, முசுமுசுக்கை, வெற்றிலை, கஞ்சா, மிளகு, அதிமதுரம், நற்சீரகம், வால் மிளகு வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர சிராய்ப்பீனசம், கபாலச்சூலை, ஒற்றைத் தலைவலி தீரும்.

4. கண்டங்கத்திரிப்பழம், துளசி, வெற்றிலை இவற்றின் சாறு, நல்லெண்ணெய் வகைக்குக் கால் படி விட்டு ஒன்றாய்க் காய்ச்சி வடித்துத் தலை முழுகி வர மேற்படி நோய்கள் தீரும்.

5. திரிகடுகு, மஞ்சள் வகைக்கு 5 கழஞ்சு, இந்துப்பு 1 கழஞ்சு இவைகளைக் கண்டங்கத்திரிப் பழச்சாற்றில் அரைத்துத் துணியில் தடவித் திரியூட்டித் தீயில்கொளுத்தி ஆற்றி மூக்கில் புகை பிடிக்கச் சிராய்ப்பீனசம் தீரும்.

பீனசம், மண்டையிடி, கபாலச் சூட்டுக்குத் தைலம்

1. முற்றின ஆயில் கட்டை 50 பலம், சிற்றரத்தை 25 பலம், நிலக்குமிழ், வில்வம், தழுதாழை, காட்டாமணக்கு, பாதிரி, கோங்கிலவு, கூத்தன்குதம்பை, முன்னை, கண்டங்கத்திரி நெருஞ்சி, நொச்சி, கொடிவேலி, சங்கு, அமுக்குரா, சாரணை, முருங்கை, தூதுவளை, மூக்குரண்டி, வேலிப்பருத்தி, இவைகளின் வேர், சுக்கு, கருங்கொள்ளு, உளுந்து, கவுதும்பை வகைக்கு 1 பலம் இடித்து ஒரு மரக்கால் நீரில்போட்டு நான்கில் ஒரு பாகமாக வற்றவைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய் 8 படி, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு 1 படி, ஒன்றாய்விட்டு தேவதாரம்,

பொன்முசுட்டைவேர், இந்துப்பு, மாஞ்சில், அதிமதுரம், கோட்டம் நன்னாரிவேர், ஊமத்தம்வேர், மதானிக் கிழங்கு, சதகுப்பை, நெருஞ்சி, வித்துபந்தனம், மரமஞ்சள், மஞ்சள், குலப்பாலைவேர், விலாமிச்சம் வேர் வகைக்கு ½ பலம், குங்குமப்பூ ½ வராகன் எடை, கத்தூரி ½ வராகன் எடை, இவைகளை நாலுபடி பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர கண் தெளிவாகும். பித்தம் கீழ்நோக்கும்.

2. ஒரு துலாம் (100 பலம்) இஞ்சியை இடித்துச் சாறுபிழிந்து அதில் நல்லெண்ணெய் 1 படி, நொச்சிச்சாறு, பசுவின் பால் வகைக்கு ½ படியிட்டு ஒன்றாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத் தீரும்.

பீனசம், மண்டையிடி, வாதம், கடுப்புக்குத் தைலம்

ஆயில்பட்டை, புங்கம் பட்டை, சேவகன் கிழங்கு, செம்முள்ளி வேர் வகைக்கு 10 பலம் இடித்துப் பதக்கு (ஒரு மரக்கால்) நீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாக வற்றவைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய் 2 படி, செம்முள்ளிவேர், கொடிவேலிவேர், வாகைவேர், நிலக்குழிழ்வேர், கோட்டம், அதிமதுரம், வாய்விளங்கம், அரத்தை, இந்துப்பு, குங்கிலியம், சதகுப்பை வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி மூக்கிலுறிஞ்சச் செய்து தலைக்கும் தேய்த்து முழுக்குச்செய்துவர தீரும். உள்ளுக்கும் கொள்ளலாம்.

பீனசம், மண்டையிடி, நாசிகாபீடம், வறட்சிக்குத் தைலம்

சீந்தில்கொடி, சிற்றாமுட்டிவேர், வகைக்கு 10 பலம் இவைகளை இடித்து நான்கு மரக்கால் தண்ணீரில் போட்டு குறுணியாய்க் காய்ச்சி வடித்து அதில் நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி கலந்து திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், கோட்டம், ஏலம், சன்னலவங்கப்பட்டை, சண்பகப்பூ, சிற்றரத்தை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், சதகுப்பை, சடாமாஞ்சில், மரமஞ்சள், மஞ்சிட்டி, தேவதாரம், அகில், குங்கிலியம், சந்தனம், கொத்தமல்லி, வாய்விளங்கம்,

புனுகுச்சட்டம், நன்னாரி, முத்தக்காசு, சாதிக்காய், கிராம்பு வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத்தீரும்.

பீனசம், விடாதவலி, கபாலச்சூலை, நேத்திரவாய்வுக்குத் தைலம்

நொச்சிச்சாறு, நல்லெண்ணெய், வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் ஈருள்ளி இரண்டு சிரங்கை தட்டிப் போட்டுக் காய்ச்சி தலை முழுகிவரத் தீரும்.

கபால வலி, பீனசத்திற்குத் தைலம்

ஆதண்டை, செங்கொன்றை, சடைக்கஞ்சா, வேளை, வெற்றிலை, குறட்டைப்பழம், பச்சைமஞ்சள், இஞ்சி, முசுமுசுக்கை, கஞ்சாங்கோரை இவற்றின் சாறு வகைக்கு 1 படி, நல்லெண்ணெய் 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் எட்டிக்கொழுந்து, சதகுப்பை, சுக்கு, வசம்பு, உள்ளி, தேவதாரம், அரத்தை, கடுக்காய் வகைக்கு 2 கழஞ்சு வீதம் நொச்சிச்சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத் தீரும்

மண்டையிடி, கபாலச்சூலை, பீனசம், நாசி, புண்ணுக்குத் தைலம்

எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 பலம், நத்தைச் சூரிவேர் 1 பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத்தீரும்.

கபாலவலி, சூலை, பீனசம், நேத்திர நீர்க்கடுப்பு, மேகச் சூட்டுக்குத் தைலம்

சவுரிப்பழச்சாறு, நல்லெண்ணெய், பொடுதலைச்சாறு, பசுவின் பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் ஒரு பலம் மிளகை மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்துத் தலை முழுக்குச் செய்யத்தீரும்.

பீனசம், மண்டையிடி, தலைபாரத்திற்குத் தைலம்

1. அமுக்குராக்கிழங்கு 10 பலம் இடித்துப் பதக்கு நீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்து அதில் பழச் சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி, காடித்தண்ணீர், நொச்சிச்சாறு, எருக்கம்பூச்சாறு, வகைக்குக் கால்படி கூட விட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

2. தேங்காய்ப்பால், நல்லெண்ணெய், பசுவின் பால், எலுமிச்சம் பழச்சாறு வகைக்கு ¾ படி இவற்றை ஒன்றாய்க் கலந்து அதில் கார்க்கோலரிசி; சிற்றரத்தை, வலம்புரிக்காய் வகைக்கு 3 வராகன் எடை இவற்றைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர சகல பீனசமும் மண்டைக்குத்தும் நீங்கும்.

3. கையாந்தகரைச்சாறு, நல்லெண்ணெய், பசுவின்பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க்கலந்து அதில் திரிகடுகு, இந்துப்பு, வசம்பு, வாய்விளங்கம், அதிமதுரம் வகைக்கு 3 பலம் மேற்படி பாலில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வாரத்திற்கு இரண்டு முறை தலைமுழுகிவரத் தீரும்.

4. ஆடுதின்னாப்பாளைச்சாறு கால்படி, நல்லெண்ணெய் கால் படி ஒன்றாய்க் கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து வாரத்துக்கு இரண்டுமுறை தலையில் தேய்த்து மருக்காரைவேர் அரைப்பிட்டுத் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

5. அரைக்கீரைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கத்தூரி மஞ்சள், மிளகு, கருஞ் சீரகம் வகைக்குக் கால் பலம் மேற்படி சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி மேற்படி கடுகைப் புகைத் துணியில் வைத்துத் திரித்துப் புகை பிடித்துவரப் பீனசம், மண்டை வலிக்குத்து, தலைப்பாரம் முதலியன நீங்கும்.

பீனசம், இரத்த பீனசம், சிராய் அழுகல் பீனசம், பித்தப்பீனசத்திற்கு நசியம் (மூக்குறிஞ்சல்)

1. பசுவின் நெய் அரை நாழி, அறுகம்வேர்ச்சாறு,தாய்ப்பால் வகைக்குக் கால் நாழி இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம், கோட்டம், மஞ்சள், வாய்விளங்கம், குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு 1 வராகன் எடை, கத்தூரி, கிராம்பு, வகைக்குக் கால் வராகன் எடை கரிசாலைச் சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து மூக்கில் நசியம் செய்து உச்சியிலும் தேய்த்துவரத் தீரும்.

2. நான்கைந்து கொப்பரைத்தேங்காய்ப் பூவைச் சட்டியில் இட்டு அதில் புளியங்கொட்டைமேற்றோல் ஒரு சிறங்கை பொடித்துத்தூவிப் பிசைந்து வைத்து மூன்று நாழிகை சென்றபின்பு பிழிந்தால் நெய் வரும், அதைச் சீசாவில் அடைத்துக் கொண்டு நாசியில்பத்துநாள் நசியமிடத் தீரும். அல்லது மேற்படி நெய்யில் கால் படி, துருசு, வெளிச்சிப் பிசின் வகைக்கு 2வராகன் எடை பொடித்துப் போட்டுக்காய்ச்சி நசியம் செய்துவரத் தீரும்.

3. பசுவின் நெய், மாதளம்பூச் சாறு வகைக்கு 1/8 படி ஒன்றாய்க் கலந்ததில் கோட்டம், ஏலம், குங்குமப்பூ. இலவங்கப்பட்டை, அதிமதுரம், கருஞ்சீரகம், இலவங்கப் பத்திரி வகைக்கு 1 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து நாசியில் நசியமிட (மூக்கிலுறிஞ்ச) சகலப் பீனசமும் தீரும்.

பீனசம், நச்சுத்தலை இடிக்குப்பற்று

அரத்தை மிளகு வகைக்குக் கால் பலம், அபின் 1 வராகன் எடை இவைகளைக் கால் படி வெற்றிலைச்சாற்றில் அரைத்துக் கொதிக்க வைத்துத் தலையில் பற்றுப்போட்டு மறுநாள் சீயக்காய் அரைப்பிட்டு வெந்நீரில் தலைமுழுக்குச் செய்துவரத்தீரும்.

(பீனசப் படலம் முற்றிற்று.)

தலைநோய்ப் படலம்

அதாவது மூளையில் நீர் தங்கி தலைநோய் வருதலாம்.

சாருஞ் சிரநோய் மண்டையிடி சாற்றும் ஒத்தணம் பரிகாரம்
தேருந் தயிலங் கபாலவகை நிறைபுகையு மாக்கிராணம்
சேரு மூலி தனையறிந்து சிறக்கும் பாகம் வகுப்புடனே
பாருமுனிவர் பண்டிதர்க்குப் பகர்ந்தாராய்ந்து செந்தமிழில்.

தலையில் நீரேற்றம், மண்டை இடிக்கும் மருந்து

அரத்தை, சதகுப்பை, திரிகடுகு வகைக்கு 3 வராகன் எடை அரைப்படி நொச்சிச்சாற்றில் கலக்கி முறித்து வடிகட்டிக் கொடுத்து, அரத்தையைப் பொடித்து மூக்கில் நசியமிட்டு, மிளகு 1 ரூபாய் எடை, சாம்பிராணி ½ ரூபாய் எடை, கடுகு, புழுங்கல் அரிசி வகைக்குக் கால் ரூபாய் எடை இவைகளைத் தாய்ப்பால்விட்டு மைபோல் அரைத்து நெற்றியில் பற்று போடத்தீரும்.

மேற்படி நோய்க்கு ஆவி பிடித்தல்

வேப்பீர்க்கு, நொச்சி, உத்தாமணி, பேய்ப்பீர்க்கு தும்பை இவைகளின் இலை, எருக்கம்பழுப்பு, சிறுகீரைவேர், இவைகளை ஓர் எடையாய் இடித்துத் தண்ணீரில் போட்டு வேகவைத்து இறக்கி தலையில் முக்காடிட்டு ஆவிபிடித்து ஆவி அடங்கின பின் ஒரு செங்கல்லைப் பழுக்கக் காய்ச்சிஅதில் போட்டு மறுபடியும் முன்போல் ஆவிபிடித்தால் உடல் வியர்த்துத் தலைக்கனம் குறையும்.

மேற்படி நோய்களுக்கு ஒற்றடம்

மாவிலிங்கப்பட்டை 5 பலம், ஆயில்பட்டை 4 பலம், பெருமரத்துப்பட்டை 22 பலம், காயாப்பட்டை 41 பலம் இவைகளை இடித்து மூன்று பங்கு செய் நாளொன்றுக்கு மூன்று வீசை வறுத்து தலையிலும், பிடரியிலும் ஒற்றடம் செய்ய மாறும்.

மேற்படி நோய்க்குத் தைலம் (தலைமுழுக்கு நெய்)

நல்லெண்ணெய் 1 படி, பசுமஞ்சட்சாறு, ஆதண்டைச்சாறு, பசுவின் தயிர், தண்ணீர் வகைக்குக் கால்படி ஒன்றாய்க் கலந்து அதில் குருந்தொட்டி, முளரி, சுண்டை, வேளை, கீழ்க்காய் நெல்லி இலைகளின் வேர், கோட்டம், தேவதாரம், மிளகு, சுக்கு வகைக்கு 2 கழஞ்சு, குக்கில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத்தீரும்.

மேற்கண்ட நோய்களுக்குப் புகை

சுக்கு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், சதகுப்பை, மிளகு, சூடன் இவைகளை ஓர் நிறையாய்க் குன்றிமணிச்சாற்றால் மைபோலரைத்துத் துணியில் தடவி உருட்டி தீயில் கொளுத்தி மூக்கில் புகைகொள்ள மாறும்.

ஒரு தலைவலி, மண்டைவலி, கபாலவாயுவுக்குத் தைலம்

1. மலைவேம்பு, செவ்வலரி, ஆதண்டை, கருநொச்சி இவைகளின் சாறு வகைக்கு 1/8 நாழி, நல்லெண்ணெய் 1 நாழி இதை ஒன்றாய்க் கலந்து அதில் கருஞ்சீரகம், வால்மிளகு, ஒருதலை வெள்ளைப்பூண்டு வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி இறுத்துத் தலைமுழுகிவரத் தீரும்.
2. பசும்பால், கரிப்பான்சாறு, இளநீர், நல்லெண்ணெய் வகைக்கு 2 படி, சந்தனம் 1 பலம், அதிமதுரம் ½ பலம் இவைகளைப் பசும்பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி தலைமுழுகிவரத் தீரும்.
3. பொடுதலைச்சாறு, சவுரியிலைச் சாறு, பசும்பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க்கலந்து அதில் மிளகு 2 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.
4. நல்லெண்ணெய், குப்பைமேனிச்சாறு வகைக்கு 1 படி இதைக் கலந்து காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

5. நான்கு பலம் பச்சைக் கொடிவேலிப் பட்டையை குமரிச் சாற்றில் அரைத்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

6. ஒரு படி நல்லெண்ணெயில் அதிமதுரம், சுக்கு, வசம்பு வகைக்கு 2பலம் சிதைத்துப் போட்டு சிவக்கக் காய்ச்சி தலைமுழுகிவரத் தீரும்.

7. நல்லெண்ணெய் 1 படி, எருக்கம்பழுப்புச்சாறு 1/8 படி, சுக்கு, இந்துப்பு, அதிமதுரம், வசம்பு, திப்பிலி மூலம், வெள்ளுள்ளி வகைக்கு 4 பலம் இடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுக்குச் செய்யத் தீரும்.

8. கரிப்பான் சாறு, பசுவின்பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி, சிறு ஆமணக்கின் வேர், பெருஞ்சீரகம், விருட்சியிலை, விழலரிசி, அதிமதுரம், சுக்கு, இந்துப்பு வகைக்கு 1 பலம் மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத்தீரும்.

9. நல்லெண்ணெய், பசுவின் நெய், வெற்றிலைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு வகைக்கு ½ படி பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒன்றுவிட்டொருநாள் தலைமுழுக்குச் செய்ய தீரும்.

மேற்படி நோய்கட்கு நசியம் (மூக்குறிஞ்சல்)

1. ஒரு பலம் சுக்கை இடித்து எட்டுப் படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து அதில் தேங்காய் நெய் கால்படி, குங்குமப்பூ, 1 வராகன் எடை பொடித்துப்போட்டு ஒன்றாய்க் கலந்து காய்ச்சி மூக்கில் நசியமிட நீங்கும்.

2. கடல் நுரை, மஞ்சள், வெங்காரம், திரிகடுகு, மரமஞ்சள் இலுப்பைப்புண்ணாக்கு வகைக்கு 1 வராகன் எடை கால் படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து மூக்கில் நசியமிட நீங்கும்.

3. வாய்விளங்கம், மிளகு, செவ்வியம், இந்துப்பு, அரோசகம் (காட்டுச் சீரகம்), சுக்கு வகைக்கு 3 கழஞ்சு இவைகளை

கையாந்தகரைச்சாற்றில் அரைத்து 1/8 படி பசுவின் நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்து நசியமிட நீங்கும்.

4. குப்பைமேனிவேர், பூண்டு, வசம்பு, இவைகளை ஓர் எடையாய்த் தாய்ப்பால் விட்டு அரைத்து மூக்கில் நசிய மிட்டால் நோய் தீரும்.

5. தைவேளைவேரும், வெள்ளைப்பூண்டும் சிதைத்துக் காதில் பிழிந்தால் நோய் தீரும்.

6. வெற்றிலையும், பெருங்காயமும் ஓர் எடையாய்ச் சிதைத்து வெதுப்பிக் காதில் பிழிந்தாலும் நீங்கும்.

7. ஈருள்ளியையும் முருங்கையிலையையும் சிதைத்து வலது பக்கத்தில் தலை இடித்தால் இடது மூக்கிலும் இடது பக்கம் இடித்தால் வலது மூக்கிலும் பிழியத் தீரும்.

8. சந்தனம், விலாமிச்சம்வேர், பெருங்காயம் இவைகளைத் தாய்ப்பாலில் அரைத்துச் சீலையில் ஊட்டித் திரித்து நல்லெண்ணெயில் தோய்த்து தீயில் கொளுத்தி ஆற்றி மூக்கில் புகை பிடிக்கவும்.

9. நெல்லிக்காய்க்கெந்தகம் அரை வராகன் எடை, கருங் குங்கிலியம், எருக்கங்கரி, கொடிவேலிவேர் வகைக்கு 1 வராகன் எடை, கருஞ்சீரகம், அக்கிரகாரம், துத்தம் வகைக்குக் கால் வராகன் எடை இவைகள் எருக்கம்பழுப்புச் சாற்றாலும் குப்பைமேனிச்சாற்றாலும் அரைத்துத் துணியில் ஊட்டித் திரித்துத் தீயில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்கவும்.

10. மிளகும், தலைச்சுருளி (ஈச்சுரமூலி) வேரும் ஓர் எடையாய்ப் பொடித்துத் துணியில் வைத்துச் சுருட்டி அனலில் கொளுத்தி மூக்கில் புகை கொடுக்கவும்.

11. அரிதாரமும், எருக்கன்வேரும் சமமாய் எலுமிச்சம் பழச் சாற்றால் அரைத்துத் துணியில் தடவி திரியுருட்டிப் புகை பிடிக்கவும்.

12. செந்தொட்டிவேரைச் சீலையில் வைத்து சுருட்டி நெருப்பில் கொளுத்தி அவித்து மூக்கில் புகை பிடிக்கவும்.

13. கவுதும்பைவேரும், மஞ்சளும் சமமாகப் பொடி செய்து துணியில் சுருட்டிப் புகை கொடுக்கவும்.

14. கருஞ்சீரகம், கோழிமுட்டைத்தோல், கழற்சிப் பருப்பு சம அளவு எடுத்து நொச்சிச் சாற்றில் அரைத்துத் துணியில் தடவி திரியாக உருட்டிப் புகை கொடுக்க நீங்கும்.

மேற்படி நோய்கட்குப் பற்று

1. எலுமிச்சம்பழச் சாற்றைப் பிழிந்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி ஓர் எடையாய் அரைத்து நெற்றியிலும் உச்சியிலும் பூசவும்.

2. உளுந்து, கொள்ளு, சிவனார்வேம்பு, கற்பூரம், அதிமதுரம் நெற்பொரி, சந்தனம், வசம்பு, கோட்டம், முத்தக்காசு, இலவங்கப்பட்டை இவைகளை ஓர் எடையாய்ப் பச்சரிசி கழுநீரில் அரைத்துக் காய்ச்சி நெற்றியிலும் உச்சியிலும் பூச மாறும்.

(தலைநோய்ப்படலம் முற்றிற்று.)

சுரநோய்ப் படலம்

சொன்னோ மாந்த சுரவகுப்புத் தோற்றுங் குறியுஞ் செய்கைமுதல்
இன்னுஞ் சாத்தியம சாத்தியமும் பகரு மால்நூ லாராய்ந்து
மன்னம் வயித்தியந் தானறிய மகிழ்வா யுரைத்த உண்மையிது
துன்னும் வயித்திய சாரமெனத் தொகுத்தார் முனிவர் வகுத்தாரே.

வாதசுரத்தின் இயல்பு

உடல் கடுக்கும்; சந்து பொருத்துகளும், கீழ் முதுகும், இரு விலாவும் நோகும்; தலைவலிக்கும்; (இவை முற்குறிகள்) உடல் குளிர்ந்து நடுங்கி மயிர் சிலிர்த்து சுரந்தோன்றும்; (இவை சுரத்தின் குறிகள்) மலங்கட்டும்; பசிமந்திக்கும்; வாய் துவர்க்கும்; இளைக்கும்; இரண்டு காலும் குளிர்ந்திருக்கும்; முகம், வாய், கண், நா, மலம் கறுக்கும்; இரவும் பகலும் நித்திரைவராது; தாகம், அசதி, கொட்டாவி உண்டாகும். (இவை துணைக்குறி குணங்கள்)

மருத்துவம்:

1. *சிற்றாமுட்டி, நாயுருவி, நொச்சி, விலாமிச்சு, மூக்குரண்டி, தூதுவளை, கண்டங்கத்திரி, வில்வம், சிறுவழுதலை, சங்கு இவைகளின் வேர் வகைக்கு 2 பலம், நொச்சி, ஆடாதோடை, பிரமி, நிலவாகை இவைகளின் இலை வகைக்கு ஒரு பிடி இடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு 14 படி தண்ணீர் விட்டு ஒருபடியாய் வற்ற வைத்து திப்பிலி, தேசாவரம் வகைக்கு 1 பலம் இடித்துத் துணியில் சலித்து ஒரு வேளைக்கு 1/8 படி குடிநீரில் மேற்படிதூள் அல்லது திரிகடுகுத் தூள்போட்டு நான்கு நாட்கள் உட்கொள்ள நோய் நீங்கும்.*

2. *குருந்தொட்டி, நொச்சி, சீந்தில், கூத்தன்குதம்பை, தூதுவளை, கண்டங்கத்திரி, பற்பாடகம், நிலவேம்பு,*

வாதமடக்கி, சிறுநெருஞ்சி, கொடிவேலி இவைகளின் வேர்; ஆடாதோடை, நெல்லி, வேம்பு, மா, நாரத்தை இவைகளின் ஈர்க்கு, முத்தக்காசு இவைகளை எல்லாம் ஒரு வேளைக்கு முக்கழஞ்சு வீதம் சிதைத்து இரண்டு படி நீரில் போட்டு கால் படியாய் வற்ற வைத்துத் தேன் விட்டு ஆறு நாள்கள் கொடுக்கத் தீரும்.

3. மேற்படி சுரம் கண்டவுடன் திரிகடுகு, வெள்ளுள்ளி, சீரகம் இவைகளைச் சமமாய் அரைத்து எலுமிச்சங்காய் அளவு மூன்று பொழுது வெந்நீரில் கொடுத்து அப்பால் கடுகுரோகணி, கடுக்காய், கச்சந்திராய், சிவதை, கொன்றை வேர்ப்பட்டை வகைக்கு 3 வராகன் எடை இவைகளைச் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு 1 ஆழாக்காக வற்ற வைத்து அதில் ½ வராகன் எடை இந்துப்பைப் பொடித்துப் போட்டு மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

4. வாகை, குமிழ், பாதிரி, சதாவேரி (தண்ணீர்விட்டான் கிழங்கு), கூவிளை (வில்வம்), நன்னாரி, நெருஞ்சில், சிந்தில் பேராமுட்டி, சிற்றாமுட்டி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, விலாமிச்சு, அவுரி (நீலி), செங்கழுநீர், சிறுகுறிஞ்சான், சிறுகாஞ்சொறி, முக்காவேளை, சத்திச் சாரணை இவைகளின் வேர், பேய்ப்புடல், முத்தக்காசு, தேவதாரம், அரத்தை, வசம்பு, திரிகடுகு, கோட்டம் இவை களை ஓர் எடையாய் இடித்து ஒரு வேளைக்கு அரையே அரைக்கால் பலம் வீதம் இரு நாழி நீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து 6 பொழுது கொடுக்கத் தீரும்.

5. பாவட்டை, கொன்றை, சிற்றாமுட்டி, வேலிப்பருத்தி இவைகளில் ஓமம், மிளகு வகைக்கு கால் பலம் இடித்து 2 படித் தண்ணீரி போட்டு கால் படியாய் வற்றவைத்து இந்தக் குடிநீரை 6 வேளை கொடுக்கத் தீரும்.

6. சிற்றரத்தை, பேரரத்தை, சதகுப்பை, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, செவ்வியம், கோட்டம், திப்பிலி மூலம், சங்கு, வெள்ளெருக்கு, திராய், அப்பைக்கோவை, நிலவேம்பு, முருக்கு, கழற்சி, கண்டங்கத்திரி, பேராமுட்டி, மாவிலிங்கு,

சிறுகாஞ்சொறி, விஷ்ணுகாந்தி, தூதுவளை இவைகளின் வேர் வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து 2 பங்கு செய்து ஒரு வேளைக்கு ஒரு பங்கு மூன்றுபடி தண்ணீரில் போட்டு 30 நாழிகை ஊறவைத்துக் கால் படியாய் வற்றக்காய்ச்சி அதில் வாதராட்சதன் குளிகையில் இரண்டு பணவெடை உரைத்து தேன் ஒரு கழஞ்சுவிட்டு இரண்டு வேளை கொடுக்க நடுக்குவாரிக் காய்ச்சல் நான்கும், வாதசுரங்கள் முப்பத்திரண்டும் தீரும்.

7. பற்பாடகம், சீந்தில், மலைதாங்கி, உருத்திரசடை, கண்டங்கத்திரி, செம்முள்ளி, முன்னை இவைகளின் வேர், முத்தக்காசு, சங்கு வகைக்கு 6 கழஞ்சு இடித்து நாழி நீரில் போட்டு 1 ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கவும். இவ்விதம் 6 வேளை கொடுக்கத் தீரும்.

8. முள்ளி, கண்டங்கத்திரி, பேராமல்லி, சிற்றாமல்லி இவை களின் வேர், சுக்கு வகைக்கு 2 கழஞ்சு இடித்து 4 படி நீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அதில் கால் படி அரிசியை போட்டுக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

பித்த சுரத்தின் இயல்பு

கொடூரமாய்ச் சுரம் காயும்; பிலப்பங்காணும்; பிதற்றும்; நெஞ்செரிக்கும்; கிறுகிறுக்கும்; சத்திக்கும்; அசதி, ஆயாசம் காணும்; தேகம் புளகிக்கும்; வியாபிக்கும்; தலையசைக்கும்; தாகிக்கும்; முகம் நடுங்கும்; தொண்டை புண்ணாக்கும்; நாவுலரும்; கசக்கும்; முகம், கண்ணீர், மலம் மஞ்சளிக்கும்; கறுக்கும்; அடிக்கடி பசித்துத் துடிக்கும்; வயிற்றில் பித்தம் வற்றிக் குலை குளிர்ந்தால் சுரம் விட்டு நாள் சென்றால் இரத்தம் வற்றி தேகம் வெளத்து வீக்கங்கண்டு அடிக்கடி; குளிருண்டாய் மலங்கட்டி உயிர் பிரியும்.

மருத்துவம்:

1. ஏலம், அதிமதுரம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கலைக் கொம்பு, இலுப்பைப்பூ, நன்னாரிவேர், ஆடாதோடையிலை,

பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சீந்தில் தண்டு, பற்பாடகம், முன்னைவேர், வில்வவேர், மல்லி, நெல்லிமுள்ளி, இவைகளை ஓர் எடையாய் இடித்துப் பொடிசெய்து ஒரு வேளைக்கு கால் பலத்தூளை இருநாழி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து 6 வேளை கொடுக்கத் தீரும்.

2. நற்சீரகம், இந்துப்பு, திப்பலி, அசமதாகம், கருஞ்சீரகம், சுக்கு இவைகளை ஓர் அளவாய் இடித்து வடிகட்டி காலை, மாலை ஒன்றுக்குத் திரிகடி அளவு 6 பொழுது சாப்பிட்டு வெந்நீர் குடிக்கத் தீரும்.

3. பேய்ப்புடல், கோட்டம், மல்லி, சுக்கு, சீரகம், நெற்பொரி, வில்வவேர், சிற்றாமுட்டிவேர் இவைகளை ஓர் எடையாய் இடித்து ஒரு நாழிக்கு ஒரு பலம் தூள் இரண்டு நாழி தண்ணீரில் போட்டு கால் நாழியாய் வற்றவைத்து 6 வேளை கொடுக்கத் தீரும்.

4. விலாமிச்சு, சிறுகாஞ்சொறி, வில்வம், பாதிரி, தும்பை, செவ்வள்ளி, நன்னாரி இவைகளின் வேர், அதிமதுரம், கோட்டம், சீரகம், மல்லி, பேரீச்சங்காய், ஆனைதிப்பிலி, நெல்லிமுள்ளி, சுக்கு வகைக்கு 1 பலம் நசுக்கி அதை 12 பங்காகச் செய்து ஒரு பொழுதுக்கு ஒரு பங்கு வீதம் 3 நாழி தண்ணீர் விட்டுக் கால்படியாய் வற்றவைத்து அதில் கோரோசனைக் குளிகையொன்று உரைத்துத் தேன் ஒரு கழஞ்சுவிட்டு இருவேளை கொடுக்க 21 நோய்களும் நீங்கும்.

5. சீந்தில், கொடிவேலி, சிறுகாஞ்சொறி இவைகளின் வேர், பற்பாடகம், முத்தக்காசு, மல்லி, நிலவேம்பு இவைகளை ஓர் எடையாய் இடித்து 6 வேளை ஒரு பலம் பொடி வீதமாக இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்துக் கொடுக்க நீங்கும்.

6. புங்கம்பட்டை, சிறுகாஞ்சொறி இவைகளின் வேர், முத்தக்காசு (கோரைக்கிழங்கு) இவைகளை ஓர் எடையாய் நசுக்கி முன்போல் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

7. ஈச்சங்குருத்து, நெய்தற்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்ச வேர், அதிமதுரம், வில்வவேர், சிற்றாமுட்டிவேர், தாமரைக் கிழங்கு, சந்தனம், இலுப்பைப்பூ இவைகளைச் சரிபாகமாய் நசுக்கி முன்போல் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.
8. பேய்ப்புடல் 1 பலம், கிராம்பு, சுக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, மல்லி வகைக்குக் கால் பலம் இவைகளை நசுக்கிக் குடிநீர் செய்து கொஞ்சம் தேன் விட்டுக் கொடுக்க நீங்கும்.
9. தூதுவளைவேர், சீந்தில், சுக்கு, அதிமதுரம், சடா மாஞ்சில், பாசிப்பயறு, சிற்றாமுட்டி வகைக்கு 2 கழஞ்சு நசுக்கி ஒரு படித் தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து இவ்விதம் 6வேளை கொடுக்க நீங்கும்.
10. வில்வவேர், அதிமதுரம், சுக்கு, இலுப்பைவேர், சிற்றா முட்டி வகைக்கு 2 கழஞ்சு, நான்குபடி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து இறுத்து இதில் பொரியரிசி கால் படி போட்டுக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.
11. சிறுகாஞ்சொறி, வேலிப்பருத்தி, சீந்தில், ஆடாதோடை, வன்னி, சிறுவழுதலை, சுக்கு இவைகளின் வேர் ஒரு நாளைக்கு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து 2 படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவிட்டு 6 வேளை இவ்விதம் கொடுக்க நீங்கும்.
12. கையாந்தகரை, துளசி, தூதுவளை, நொச்சி, ஆடா தோடை வகைக்கு ஒரு படி இடித்துப் பிட்டவித்து அதில் 5 திப்பிலிகளை முடித்து வெந்தபின் சாற்றை இறுத்து அதில் மேற்படி திப்பிலியை அரைத்துக் கலக்கி இவ்விதம் 6 பொழுது கொடுக்க நீங்கும். இவைகளுக்கு எல்லாம் இச்சாபத்தியம்.

சிலேத்தும (ஐய) சுரத்தின் இயல்பு

உடலில் அனல் மிகுந்து திமிரேறி தலையில் நீர் கொண்டு தலைவலிக்கும்; உடம்பு களைத்து சலித்துச் சுரங்காயும்; மூக்கில்

நீர் வடியும்; சத்தம் பிறக்க இருமல் உண்டாகும்; கோழை வரும்; நெஞ்சு வலிக்கும்; தலைமயக்கம் காணும்; கண்ணும், நாசியுங் காந்தும்; விட்டுவிட்டுச் சுரங்காயும்; தலையில் வியர்வை பொழி யும்; கத்தபத்தின் (கழுதை) நீர் போலிறங்கும்; மலம் தீயும்; நாவு தடிக்கும்; வெளுக்கும்; இனிக்கும் கரிக்கும்; வாய் நீரூறும்; உடல், கண், கபம் வெளுக்கும்; மலம் வழுவழுத்திறங்கும்.

மருத்துவம்:

1. ஆடாதோடை, மலைதாங்கி, தூதுவளை, கண்டங்கத்திரி, நன்னாரி, சீந்தில், சிறுகாஞ்சொறி, சிறுவழுதலை, இவை களின் வேர், திரிபலை, சுக்கு, பேய்ப்புடல் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு மூன்று பங்கு செய்து ஒரு வேளைக்கு ஒரு பங்கு இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவிட்டு இறுத்து அதில் திரிகடுகு, இலவங்கப்பட்டை, அதிமதுரம், சிற்றரத்தை, மல்லி, திப்பிலிமூலம் சரிபாகமாய் வெதுப்பிப் பொடித்து வடிகட்டித் திரிகடி அளவு மேற்படி பொடியும் கொஞ்சம் தேனும் விட்டு 6 வேளை கொடுக்கத் தீரும்.
2. தூதுவளை, கண்டங்கத்திரி, துளசி, சிறுவழுதலை, முக்கா வேளை, வில்வம், சிறுகாஞ்சொறி, வேர்ப்பீர்க்கு, நெல்லியீர்க்கு, புளியீர்க்கு, வகைக்கு ஒரு படி இவைகளைச் சிதைத்து இரண்டு நாழி (1 படி) தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்து இறுத்து அதில் திப்பிலி, தேசாவரம், வாய்விளங்கம், மல்லி, கடுகுரோகணி, அரத்தை வகைக்கு 3 வராகன் எடை, கடுக்காய், பேய்ப்புடல் வகைக்கு 2 பலம் இவைகளை இடித்து வடிகட்டித் திரிகடி அளவுப்போட்டு இவ்விதம் நான்கு நாள்கள் கொடுக்கத் தீரும்.
3. தூதுவளை, சிறுவழுதலை, சிறுகாஞ்சொறி, கண்டங் கத்திரி, ஆடாதோடை இவைகளின்வேர், கற்றாழஞ்சருகு, இம்பூரல், சுக்கு, முத்தக்காசு இவைகளை ஒரு வேளைக்கு 5/8 பலம் வீதம் இடித்து 2 நாழி (1 படி) தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றச்செய்து திப்பிலி ஒரு வராகன் எடை வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கொஞ்சம் தேன்விட்டுக் கலந்து 6 வேளை கொடுக்க நீங்கும்.

4. பிரண்டை, கண்டங்கத்திரி, அரத்தை, சிறுகாஞ்சொறி, வெட்பூலா, பொன்முசுட்டை, முள்ளி இவைகளின்வேர், அரத்தை, சுக்கு இவைகளைச் சரி பாகமாய் ஒரு வேளைக்கு ½ பலம் வீதம் சிதைத்து இரண்டு படி தண்ணீரில் போட்டு முன்போல் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

5. சுக்கு, திப்பிலி, கிராம்பு, கடுக்காய்த்தோல், முந்திரிகை கச்சந்திராய், அப்பைக்கோவை, கறிமுள்ளி, கண்டங்கத்திரி, ஆடாதோடை, கற்பூரவள்ளி வகைக்கு 1 பலம் இடித்துத் தூள்செய்து 15 பங்கு செய்து ஒரு வேளைக்கு ஒரு பங்கு வீதம் இரண்டு படித் தண்ணீரில் போட்டு கால் படியாய் வற்றவைத்து அதில் சந்திரோதய மாத்திரையும், கோரோசனைக் குளிகை ஒன்றையும் உரைத்துத் தேன் ஒரு கழஞ்சு விட்டுக்கொடுக்க சிலேத்தும சுரம், மயக்கம் தீரும்.

6. தூதுவளை, கண்டங்கத்திரி, செம்முள்ளி, சுண்டை இவை களின் வேர், சுக்கு வகைக்கு 3 கழஞ்சு, ஒரு நாழி தண்ணீரில் போட்டு அரைக்கால்படியாய் குடிநீர் செய்து திப்பிலிப் பொடிபோட்டு ஆறுவேளை கொடுக்கத் தீரும்.

7. பாதிரி, வில்வம், பெருங்குமிழ்வேர் வகைக்கு ஒரு கழஞ்சு, 2 நாழி நீரில் போட்டுக் கஞ்சிக் காய்ச்சி உட்கொள்ளத் தீரும்.

வாத சிலேத்தும (வளி ஐய)ச் சுரத்தின் இயல்பு

1. சுரம் குளிர்காணும்; வாய் பிதற்றும்; பற்கடிக்கும்; காது அடைக்கும்; கண்ணொளி மங்கும்; நாவு தடிக்கும்; இருமல் எடுக்கும்; இரத்தம் விழும்; தொண்டை கம்மும்; மலங்கட்டும்; பசி மந்திக்கும்; மயக்கம், அசதி, இளைப்பு உண்டாகும்.

2. வெட்பாலையரிசி, விலாமிச்சவேர், வேம்பு, நெய்தல் கிழங்கு, பெருகுமிழ், அதிமதுரம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், கிராம்பு, வில்வப்பழத்தோடு, பொன் முசுட்டைவேர், நன்னாரிவேர் திரிகடுகு, அதிவிடயம்,

பற்பாடகம், முத்தக்காசு வகைக்கு 1 வராகன் எடை நசுக்கி இரண்டு நாழி நீரில் போட்டுக் கால்படியாய் வற்றக் காய்ச்சி திப்பிலித்தூள் 1 வராகன் எடை, கொஞ்சம் தேன் விட்டு கொடுக்கத் தீரும்.

சன்னிவாத சுரத்தின் இயல்பு

மார்பு, கழுத்து, நெற்றி வியர்க்கும்; விக்கல் எடுக்கும்; பிதற்றும்; கண் பதைக்கும்; மேல் மூச்சுண்டாகும்; வயிறு வலிக்கும்; கழிச்சல் காணும்.

மருத்துவம்: திப்பிலி, சிறுதேக்கு, முத்தக்காசு, பற்பாடகம், சுக்கு, செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், ஆடாதோடை, பேய்ப் பீர்க்கு, சீந்தில்தண்டு, சிறுகாஞ்சொறி, நிலவேம்பு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

உட்சுரத்தின் இயல்பு

இரவும் பகலும் இடைவிடாத சுரங்காயும்; உடல் வெளுத்து வற்றும்; பித்தத்தால் மயக்கம், தலைநோய் காணும்.

மருத்துவம்:-

1. வெந்தயம், மிளகு, வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு நாழிகை 1 படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து 3 நாள் உட்கொள்ளத் தீரும். கால் நாழிகை காய்ச்சின பசுவின் பாலில், சர்க்கரையும், சாத்திரபேதியும் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டு நான்கு நாள் உட்கொள்ளத் தீரும்.

2. பொன்னாங்காணி, முசுமுசுக்கை, பழம்பாசி, நீர்ப்பூலா, சிற்றாமுட்டி, சீதேவியார், செங்கழுநீர், தாழைவிழுது இவை களின் சாறு, இளநீர் வகைக்குக் கால்படி, பசுவின் நெய் 1 படி ஒன்றாய்க்கலந்து அதில் தான்றிக்காய், கோட்டம், அதிமதுரம், சீரகம், நெல்லிமுள்ளி, மல்லி, சண்பகப்பூ, சிறுநாகப்பூ, சடாமாஞ்சில், தேற்றான்விதை, நன்னாரி, முத்தக்காசு, விலாமிச்சவேர், வெட்டிவேர் வகைக்கு

மூன்று கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப் போட்டு சர்க்கரை 1 பலம் கலந்து காய்ச்சி வடித்துக் காலை, மாலை சாப்பிட்டுவரத் தீரும்.

மந்தசுரத்தின் இயல்பு

உடல்காயும்; வெளுக்கும்; நாவு வறண்டு துடித்து தித்திக்கும்; அடிக்கடி இருமல் காணும்.

மருத்துவம்:-

1. போராமுட்டிவேரும், சுக்கும் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.
2. சீந்தில் தண்டு, கடுக்காய், சிவதைவேர், களிப்பாக்கு, சுக்கு, கடுகுரோகணி, சிறுவழுதலைவேர் வகைக்குக் கால் பலம் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு 1 ஆழாக்காக வற்றச் செய்து உட்கொள்ளத் தீரும்.
3. சுக்கு, நறுக்குமூலம் (கண்டந்திப்பிலி) முசுமுசுக்கை வேர் வகைக்கு கால் பலம் இவைகளை இடித்து இரண்டு நாழி தண்ணீரில் போட்டு வற்றச் செய்து மூன்றுநாள்கள் உட்கொள்ளத் தீரும்.

செரியாமைக் காய்ச்சலின் இயல்பு

காய்ச்சல் காயும்; வயிறுபொருமிக் கழியும்; வலிக்கும்; வாயு மிகப் பிரியும்; அடிக்கடி புளித்தேப்பம், கொட்டாவி, விக்கல் காணும்; நாவு உலரும்; கைக்கும்; உடல் நோவும்; வியர்க்கும்; குரல் கம்மும்.

மருத்துவம்:

1. கற்றாழஞ்சருகு, ஆலம் சருகு, முக்காவேளைவேர், முருங்கை வேர்ப்பட்டை வகைக்கு 3 பலம், நொச்சிவேர் 4 பலம் இவைகளை இடித்து 4 நாழி தண்ணீரில் போட்டு ஒரு நாழியாய் வற்றச்செய்து வேளை ஒன்றுக்கு 1 ஆழாக்கு வீதம் மூன்று நாள்கள் உட்கொள்ளத் தீரும்.
2. திரிகடுகு, திரிபலை, திப்பிலிமூலம், சங்கம்வேர், சித்திர மூலம், வசம்பு, ஓமம் வகைக்குக் கால் பலம் இவைகளை முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத்தீரும்.

3. திரிபலை, பேய்ப்பால், பேய்ச்சொற்றி, கடுகுரோகணி, சுக்கு, பேராமுட்டி, வகைக்குக் கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத்தீரும்.

எலும்பைப் பற்றின காய்ச்சலின் இயல்பு

தாகம் மிகுந்துகாணும்; தேகம் வெளுக்கும்; குளிர்ச்சியாய் இருக்கும் ஒவ்வொரு நேரம் காய்ச்சல் அதிகமாய்க் காய்ந்து விட்டு விட்டு வரும்.

மருத்துவம்: பேய்ப்புடல், முத்தக்காசு, பற்பாடகம், பாடாவரை, கடுகுரோகணி, சுக்கு, பேய்ச்சொற்றி வகைக்குக் கால் பலம் இவைகளை இடித்து ஒரு நாழி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும். இவைகளுக்கு எல்லாம் இச்சாபத்தியம்.

இரத்தத்தைப் பற்றின சுரத்தின் இயல்பு

காய்ச்சல் அதிகமாய் அடிக்கும்; தகிக்கும்; பிளப்பு, வியர்வை, மூர்ச்சை காணும்; சித்தப்பிரமை கொள்ளும்; உடம்பு நோகும்.

மருத்துவம்: தாமரைவளையம், அமுக்கறாக்கிழங்கு, கொடிவேலி, பேராமுட்டி, வசம்பு, சுக்கு வகைக்கு 1 பலம் இவைகளை நசுக்கி இரண்டு நாழித் தண்ணீரில் போட்டுக் காய்ச்சிக் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

மாமிசத்தைப் பற்றிய சுரத்தின் இயல்பு

அதிகமாய்ச் சுரமடிக்கும்; சுவாசங்காணும்; உடலெல்லாம் நமைச்சல் எடுக்கும்; நோவும்; ஆயாச மூர்ச்சை காணும்; மயிர் கூச்செரியும்.

மருத்துவம்:- பேராமுட்டி, நாகமல்லி, சுக்கு, திரிபலை, கடுகுரோகணி, மருட்கிழங்கு, சிற்றாமுட்டி, பாலைவேர், பேய்ப் பாகல், பேய்ச்சொற்றி வகைக்குக் கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

சகல முறைச் சுரத்திற்கும் மருந்து

திப்பிலி, திப்பிலிமூலம் வகைக்கு 5 வராகன் எடை, செவ்வியம், வாய்விளங்கம், மல்லி வகைக்கு 3 வராகன் எடை, கடுக்காய், பேய்ப்புடல், நெல்லிமுள்ளி வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து ஆறுபங்கு செய்து ஒரு வேளை ஒன்றுக்கு ஒரு பங்கை இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றச் செய்து 6 நாள்கள் உட்கொள்ளத் தீரும். மணலை வறுத்து அதில் நொச்சிச்சாறு 1 ¼ படி விட்டு கொதிக்கும்போது வடித்து மேற்படி பொடியைப் போட்டாவது ஆறுவேளை கொடுக்க முறைச்சுரம் முதலான சகல சுரங்களும் நீங்கும்.

விடாச்சுரத்திற்கு மருந்து

ஒரு சுண்டைக்காய், அளவு அவுரிவேருடன் ஐந்து மிளகைக் கூட்டி வெந்நீரில் அரைத்துக் கலக்கி அதில் சுண்ணாம்பைக் குன்றிமணி அளவு கரைத்து 3 நாள்கள் உட்கொள்ள நோய் நீங்கும்.

மூன்றாம் முறை குளிர்சுரத்திற்கு மருந்து

சிறுதேக்கு, பற்பாடகம், முத்தக்காசு, சீந்தில் தண்டு, நன்னாரி, சிறுகாஞ்சொறிவேர், தேவதாரம், கோட்டம், பேய்ப்புடல், சுக்கு வகைக்கு 1 பலம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு வற்றக்காய்ச்சி ஆறுவேளை உட்கொள்ள நோய் நீங்கும்.

ஒன்றுவிட்டொருநாள் வரும் மாறல் சுரத்திற்கு மருந்து

1. பற்பாடகம், பேய்ப்புடல், அதிமதுரம், சீந்தில்தண்டு, அதன்வேர், கொடுப்பைவேர், முத்தக்காசு, மல்லி, சுக்கு வகைக்கு 3 வராகன் எடை இவைகளை இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு 1 ஆழாக்காய் வற்றச்செய்து அதில் தேன்விட்டு ஆறுநாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.
2. பேராமுட்டி, சிற்றாமுட்டி, சிறுகாஞ்சொறி, நன்னாரி, சிறுகீரை, பொன்னாங்காணி, ஆவாரை, நிலவேம்பு,

முத்தக்காசு, சிறுதேக்கு, மல்லி இவைகளை வகைக்குக் கால்படி வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து பகலிலும் இரவிலும் உட்கொள்ளத் தீரும்.

3. முந்திரிப்பழம், சிறுநாகப்பூ, அதிமதுரம், செங்கழுநீர்க் கிழங்கு, நன்னாரிவேர் இவைகளை வகைக்கு 1 கழஞ்சு வீதம் இடித்து ஒரு படி நீரில்போட்டுக் குடிநீர் செய்து 3 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

4. முத்தக்காசு, மாவீர்க்கு, மேற்படிவேர், விலாமிச்சவேர், பற்பாடகம், நெல்பொரி, சிறுபயறு, வகைக்கு 2 கழஞ்சு நான்கு படி தண்ணீரில் போட்டு கால் படியாய் வற்றச் செய்து அடையாளம் வைத்து கொண்டு ஒரு வேளைக்கு ஆழாக்கு வீதம் சந்தனம், பச்சைக் கற்பூரம், உருத்திராட்சம் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கி ஒரு நாள் உட்கொள்ளத் தீரும்.

5. கோட்டம், அதிமதுரம், நெல்லிமுள்ளி, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், முத்தக்காசு, சந்தனம், நெல்போரி வகைக்கு 2 கழஞ்சு நான்குபடி இளநீரில் போட்டு ஆழாக்காய் வற்றச்செய்து உட்கொள்ள நோய் தீரும்.

தாப சுரம், நாவறட்சிக்கு மருந்து

நெருஞ்சில், வீழி, குருந்தொட்டி, சிறுபீளை, அமுக்கரா, நன்னாரி, பெருங்குமிழ், சீந்தில், முன்னை, பாதிரி, சிறுவழுதலை, சிறுகாஞ்சொறி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, வெதுப்படக்கி, நீர்முள்ளி, இவைகளின் வேர், விலாமிச்சம் வேர், கற்றாழஞ்சோறு, பற்பாடகம், தாமரைவளையம், சன்னலவங்கப்பட்டை, அரத்தை, திரிகடுகு, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திரமூலம், கோட்டம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு வகைக்கு இரண்டு கழஞ்சு வீதம் இடித்து மூன்று பங்கு செய்து ஒரு பங்கு, இரண்டுபடி நீரில் போட்டுக் கால்படியாக வற்றவைத்து அதில் ஒரு கழஞ்சு வெங்காரத்தைப் பொடித்துப் போட்டுக் கொடுக்கவும். இப்படி ஆறுவேளை உட்கொள்ளத் தீரும்.

சுரத்தின்பேரில் உடல் வீக்கம் கண்டால் மருந்து

1. *சங்கு, நன்னாரி, தூதுவளை, துளசி, கஞ்சாங்கோரை, நீர் முள்ளி, வெதுப்படக்கி இவைகளின் வேர், பிரமி, கையாந்த கரை வகைக்கு ஒரு பிடி, 2 சுக்கு, 10 கடுக்காய் இவைகளை இடித்து 2 படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து மூன்று வேளை உட்கொள்ளத் தீரும்.*

2. *சுரைக்கொடி, அதன் பழுப்பு, கீழ்க்காய் நெல்லிவேர் வகைக்கு 2 பலம் தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.*

இரவில் காணும் சுரத்திற்கு மருந்து

1. *பேராமுட்டி, விஷ்ணுகரந்தை, பாலை, பேய்ப்பாகல், பேய்ச் சொற்றி, நாகமல்லிகை, சிற்றாமுட்டி இவைகளின் வேர், கடுகுரோகணி, சுக்கு இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து 6 நாள்கள் உட்கொள்ளத் தீரும்.*

2. *திப்பிலி, மருட்கிழங்கு, உலர்ந்த இஞ்சி, நிலவேம்பு, கடுகு ரோகணி, நெல்லி, பேய்ப்புடல், பாவட்டைவேர் இவை களை முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.*

நளிர்க்காய்ச்சல், நடுக்கல் காய்ச்சலுக்கு மருந்து

1. *மிளகைக் குடிநீர் செய்து சாப்பிட்டாலும் அல்லது தேவதாரம், பற்பாடகம், கடுக்காய், உலர்ந்த இஞ்சி, கண்டங் கத்திரி, கோட்டம், குமிழ்வேர், சிறுதேக்கு, வகைக்கு ஒரு பலம் வீதம் இரண்டுபடி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி உட்கொள்ள நோய் தீரும்.*

2. *சீந்தில், சிறுவழுதலை, நிலவேம்பு, குமிழ் இவைகளின்வேர், உலர்ந்த இஞ்சி, கடுக்காய், கடுகுரோகணி, கோட்டம், சிறுதேக்கு, தேவதாரம், பற்பாடகம், ஆடாதோடை வகைக்கு 1 பலம் இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வேளை ஒன்றுக்கு*

அரை ஆழாக்காய்த் தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

3. நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், முத்தக்காசு, திரிகடுகு, மல்லி, செந்தொட்டிவேர், பற்பாடகம், பேய்ப்புடல் வகைக்கு 2 கழஞ்சு இடித்து மூன்று பங்கு செய்து வேளை ஒன்றுக்கு ஒரு பங்கை இரண்டு படி தண்ணீரில் போட்டு வற்ற வைத்து இதில் தேனும் திப்பிலிப் பொடியும் போட்டு 6 பொழுது உட்கொள்ள நோய் தீரும்.
4. சிறுதேக்கு, சீந்தில்கொடி, பற்பாடகம், கோட்டம், திப்பிலி, நிலவேம்பு, உலர்ந்த இஞ்சி(சுக்கு) சிறுகாஞ்சொறி, முத்தக் காசு, ஆடாதோடை வகைக்கு கால்பலம், வீதம் 2 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

சத்திக் காய்ச்சல், நடுக்கல் தனத்திற்கு மருந்து

நெல்பொரி, வறுத்தப்பாசிப்பயறு, பற்பாடகம், பெரும் பூசணிவேர் வகைக்கு 6 கழஞ்சு இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து உட்கொள்ளவும். தாகம் அதிகமாய் இருந்தால் கால் பலம் அதிமதுரத்தைக் கலந்து குடிநீர் செய் உட்கொள்ள நோய் தீரும். (சத்திக்காய்ச்சலென்பது வாந்தி(சர்த்தி)யுடன் கூடிய காய்ச்சலென்பது பொருள்.)

சளி, காய்ச்சல், மந்தத்திற்கு மருந்து

பேய்ப்புடல், கடுக்காய், நெல்லிமுள்ளி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, மஞ்சள், கடுகுரோகணி, செம்முள்ளிவேர், சுட்டுக்கொடிவேர், சந்தனம், வேலிப்பருத்தி, திப்பிலி வகைக்கு 3 கழஞ்சு இடித்து மூன்று பங்கு செய்து வேளை ஒன்றுக்கு ஒரு பங்கை இரண்டு படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து உட்கொள்ள சளி, காய்ச்சல் மலபந்தம் நீங்கும்.

காய்ச்சலுக்குக் கொடுக்கும் கழிச்சல் மருந்து

கற்றாழஞ்சருகு, கடுக்காய், கருவேம்பின் பட்டை, கார்க் கோலரிசி வகைக்கு கால் பலம் இடித்துக் குடிநீர் செய்து கொடுக்க கழிச்சலாகும் (பேதி). காய்ச்சல் மட்டுப்படும்.

சுளுக்குக் காய்ச்சலுக்கு மருந்து

கொத்தமல்லி, திரிகடுகு, பேராமுட்டி, வகைக்கு 3 கழஞ்சு வீதம் இடித்து ஒரு நாழி நீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து 3 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

பெருங்கழிச்சலோடு காய்ச்சலுக்கு மருந்து

1. புங்கம்பாளை, உலர்ந்த இஞ்சி, முத்தக்காசு, சிறுகாஞ் சொறிவேர் இவைகளைச் சம எடையாய்க் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.
2. மாம்பட்டை, அதிவிடயம், முதியார் கூந்தல், உலர்ந்த இஞ்சி, முத்தக்காசு இவைகளை வேளை ஒன்றுக்குக் கால் பலம் இடித்து ஒரு நாழி நீரில் போட்டு அரைக்கால் நாழியாய் வற்ற வைத்து இலவம்பிசின் தூள்கால் வராகன் எடை சேர்த்து உட்கொள்ள நோய் தீரும்.
3. மின்னிச்சமூலம், பொன்னாங்காணிவேர், நன்னாரிவேர், பற்பாடகம், கோரைக்கிழங்கு, கஞ்சாங்கோரை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், மல்லி, சந்தனம், சுக்கு இவைகளைச் சம எடையாய்க் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.
4. கோவைக்கிழங்கு, மாம்பட்டை, வகைக்கு 2 பலம் தூள் செய்து பிட்டவித்து அரைக்கால் நாழி சாறு பிழிந்து அதில் இலவம்பிஞ்சு, அதிவிடயம், சுக்கு, முத்தக்காசு வகைக்கு கால் பலம் இடித்துக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.
5. பெருமரத்துப்பட்டை, வில்வப்பிஞ்சு, செந்தொட்டி, மாதுளம்பிஞ்சு, அதிவிடயம், சுக்கு, முத்தக்காசு வகைக்கு கால்பலம், இடித்துக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.
6. மாம்பட்டை, வில்வப்பழச்சதை, முத்தக்காசு, நிலவேம்பு, பெருமரத்துப்பட்டை சுக்கு வகைக்குக் கால் பலம் இவைகளைக் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.
7. மலராத மாதுளம்பூ, அதிவிடயம், பூநாகப்பட்டை, மாதுளம் ஓடு, வில்வப்பழச்சதை, குடசப்பாலை, சுக்கு, முத்தக்காசு,

ஆவாரம்பூ வகைக்குக் கால் பலம் இவைகளைக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

8 சிற்றாமுட்டிவேர், வில்வக்காய், சீந்தில்தண்டு, குடசப்பாலை, உலர்ந்த இஞ்சி, முத்தக்காசு, நிலவேம்பு, கஞ்சாவிதை வகைக்குக் கால்பலம் குடிநீர்செய்து உட்கொள்ள நோய் தீரும்.

அதிசாரக் காய்ச்சலுக்குக் குளிகை

திரிகடுகு, சாதிக்காய், கிராம்பு, இலவம்பிசின், விளாம் பிசின், வில்வப்பிசின், அதிவிடயம், கழற்சிப்பருப்பு, சீரகம், ஓமம், கற்கடகசிங்கி, சிறுதேக்கு, மாதுளம்பிஞ்சு, வில்வப் பழச்சதை, பொன்முசுட்டைவேர் இவைகளை ஓர் எடையாய் நல்லெண்ணெய் விட்டு இணக்க வறுத்துத் தயிர்த் தண்ணீரால் அரைத்து உருண்டைகள் செய்து வடித்த தயிரில் ஒரு உருண்டை கொடுக்க காய்ச்சல், கழிச்சல் முதலியவை தீரும். (ஒரு உருண்டை கழற்சிக்காய் அளவு இருக்க வேண்டும்.)

அசாத்தியக் காய்ச்சலுக்கு மருந்து

உலர்ந்த இஞ்சி(சுக்கு), கொத்துமல்லி, தேசாவரம் வகைக்குக் கால் பலம் இடித்து ஒரு நாழி நீரில்போட்டுக் குடிநீர் செய்து தேன் கலந்து மூன்று நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

தீராக் காய்ச்சலுக்கும் மாறல் காய்ச்சலுக்கும் மருந்து

பெருங்குமிழ்வேர், நன்னாரிவேர், தாமரைக்கிழங்கு, இலுப்பைப்பூ, முந்திரிகைப்பழம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், கோரைக்கிழங்கு, உலர்ந்த இஞ்சி, சிறுகாஞ்சொறிவேர், அதிமதுரம், நெல்லிப்பருப்பு வகைக்கு ஒரு கழஞ்சு இடித்துப் போட்டுக் குடிநீர் செய்து தேன் கலந்து மூன்று நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

நச்சுக் காய்ச்சலின் இயல்பு

ஒருபுறங்குளிரும்; ஒரு புறங்காயும்; உடலில் நஞ்சு ஏறுவது போல் தோன்றும். (இதனை விஷச்சுரம் என்பர்).

மருத்துவம்:

1. நெல்லி, தான்றி, வேப்பீர்க்கு, சீந்தில்தண்டு, மல்லி, முத்தக்காசு, இவைகளை வேளை ஒன்றுக்குக் கால் பலம் இடித்து இரண்டு நாழி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

2, சிறுவழுதலை, சீந்தில், தாமரை இவைகளின் வேர், முத்தக் காசு, உலர்ந்த இஞ்சி இவை எல்லாம் வகைக்கு 1 பலம் இடித்து இரண்டு நாழி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

3. கோழியவரைவேர், சித்திரமூலம், வேர்ப்பீர்க்கு, சிறுபுள்ளடி, பற்பாடகம், உலர்ந்த இஞ்சி, செவ்வியம் வகைக்குக் கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட் கொள்ள நோய் தீரும்.

4. உலர்ந்த இஞ்சி, கடுக்காய், நிலவேம்பு, சீந்தில், பேய்ப் புடல் வகைக்குக் கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

5. ஆடாதோடை, நிலவேம்பு, சீந்தில்தண்டு, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, வேர்ப்பட்டை, வெட்பாலை அரிசி வகைக்குக் கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

கருப்பக் காலத்தில் காணும் காய்ச்சலுக்கு மருந்து

1. கோட்டம், திப்பிலி, கண்டங்கத்திரி, சிறுதேக்கு, நிலக் குமிழ், உலர்ந்த இஞ்சி, நிலவேம்பு, முத்தக்காசு, சிறுகாஞ் சொறி, சீந்தில், பற்பாடகம் வகைக்கு 1 பலம் இடித்து இரண்டு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து 3 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. பெருந்தும்பையை இடித்துப் பிட்டவித்து மாகாணிப்படிச் சாறு பிழிந்து அதற்குச் சமமாய் தேன் கலந்து மூன்று வேளை உட்கொள்ள நோய் தீரும். (மாகாணி என்பது 1/8 பாகம்)

3. ஆடாதோடை, தூதுவளை, முத்தக்காசு, சிறுவழுதலை, பற்பாடகம், பங்கம்பாலை, சுக்கு, சந்தனம், நன்னாரிவேர் வகைக்கு 1 பலம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ளத் தீரும். இவை எல்லாவற்றிற்கும் இச்சாபத்தியம்.

4. சீந்தில், நிலவேம்பு, சிறுகாஞ்சொறி, மல்லி, வட்டத்திருப்பி, விலாமிச்சம்வேர், பருத்தி, வெட்டிவேர், பற்பாடகம், சுக்கு, திப்பிலி வகைக்கு 1 பலம் இடித்துப் போட்டு முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

5. பேய்ப்புடல், முத்தக்காசு, பற்பாடகம், சீந்தில் தண்டு வகைக்குக் கால் பலம் இடித்துப் போட்டு முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

6. தூதுவளைச் சமூலம், நன்னாரிவேர், முத்தக்காசு, திரிபலை, வீழிப்பட்டை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தாமரைக் கிழங்கு இவைகளை வேளை ஒன்றுக்கு கால் வராகன் எடை வீதம் இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ளத்தீரும்.

7. சுக்கு, செவ்வியம், மல்லி, கண்டுபரங்கி, பறங்கிப்பட்டை, பேய்ப்புடல், திப்பிலிமூலம், இலவங்கம், அதிமதுரம், முத்தக்காசு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கண்டங் கத்திரி, சீந்தில், பற்பாடகம், நன்னாரி, தூதுவளை, ஆடா தோடைஇலை வகைக்கு 3 வராகன் எடை வீதம் இடித்துப் போட்டு முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

8. சண்பகப்பூ, சாத்திரபேதி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தக்கோலம், நெல்பொரி, சுக்கு இவைகளை வகைக்கு 1 வராகன் எடை, கால் படி மாதுளம்பழச்சாற்றில் அரைத்துக் கலந்து உட்கொள்ளத் தீரும்.

9. சீரகமும், குருந்தொட்டிவேரும், வகைக்கு 1 பலம் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

10. மிளகாய் இலை 9, மிளகு 7, வெள்ளைப்பூண்டு 1 இவை களை அரைத்து 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

11. காராக்கரந்தை, துளசிவேர், சுக்கு வகைக்கு 1 பலம் இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து 9 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

விடாக் குளிர்சுரத்திற்கு மருந்து

கரிப்பான் ஒரு பிடி, வேப்பீர்க்கு ஒரு பிடி, மூன்றாய் நறுக்கிக் காய்ந்த சட்டியில் போட்டு, பொன்னிறமாக, வறுத்து அதில் ஒரு பிடி மிளகைப் போட்டு வறுத்து வெள்ளுள்ளி, ஒரு பூண்டு கிள்ளிப்போட்டுக் கரிப்பான் இலை, நொச்சி இலை வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்துப் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி கால் படியாய் வற்றவைத்து மூன்று நாள், இரண்டு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

திரிதோட (முப்பிணி) சுரத்திற்கு மருந்து

1. சந்தனம், அதிமதுரம், இலவங்கம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், மல்லி, சுக்கு, நிலவேம்பு, பற்பாடகம், சீந்தில் தண்டு, செவ்வியம் இவைகளைச் சமமாய் இடித்து வேளை ஒன்றுக்கு ஒரு பலம் தூளை இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து 9 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. வட்டத்திருப்பி, தூதுளம், நன்னாரி, சிறுவழுதலை, சிறுகாஞ்சொறி இவைகளை இடித்து 6வேளை, ஒரு வேளைக்கு அரைப்பலம் தூள் ஒரு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து வடிகட்டியதில் திப்பிலி 4 வராகன் எடை வறுத்துப் பொடித்துப் போட்டுக் கொஞ்சம் தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

3. தூதுளம், கண்டங்கத்திரி, நிலவேம்பு, சீந்தில், சிறுகாஞ்சொறி, நன்னாரி, முள்ளி, ஆடாதோடை, விஷ்ணுகரந்தை, இவைகளின் வேர், முத்தக்காசு, கொத்தமல்லி, சிற்றரத்தை, செவ்வியம், திரிகடுகு, திரிபலை, பேய்ப்புடல், கோட்டம், சன்னலவங்கப்பட்டை வகைக்கு 6 கழஞ்சு இடித்து ஆறு பங்கு செய்து ஒரு பங்கை இரண்டு படி தண்ணீரில்

போட்டுக் கால்படியாய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

4. கழற்சி, நன்னாரி, பேராமுட்டி, வில்வம் இவைகளின்வேர், முத்தக்காசு, பேய்ப்புடல், செவ்வல்லிக்கொடி, செங்கழுநீர்க் கிழங்கு இவற்றை ஒரு படிக்கு, அரைப்பலம் வீதம் இடித்து இரண்டு படி நீரில்போட்டு 1/8 படியாய் வற்றவைத்து அதற்குச் சமமாய் இஞ்சிச் சாறு கலந்து மூன்று வேளை உட்கொள்ள நோய் தீரும்.

5. சீந்தில், தூதுளை, சிறுகாஞ்சொறி, நன்னாரி, ஆடாதோடை, விஷ்ணுகாந்தி இவைகளின் வேர், கண்டங்கத்திரி, நிலவேம்பு, முத்தக்காசு, மல்லி, அரத்தை, செவ்வியம், திரிகடுகு, திரிபலை, பேய்ப்புடல், கோட்டம், சன்னலவங்கப்பட்டை, வகைக்கு 3வராகன் எடை இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து 6வேளை உட்கொள்ள நோய் தீரும்.

6. சந்தனம், பற்பாடகம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், சிறுகாஞ்சொறிவேர், இம்பூரல்வேர், இலவங்கம், நன்னாரிவேர், இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து உட்கொள்ள நோய் தீரும். இவைகளுக்கு எல்லாம் இச்சாபத்தியம், புளியைச் சுட்டுக் கொஞ்சமாய்ச் சேர்க்கவும்.

சன்னி சுரத்திற்கு மருந்து

தைவேளைச்சாறு, இஞ்சிச்சாறு வகைக்குக் கால் படி தனித்தனியாய் முறித்து வடிகட்டி ஒன்றாய்க் கலந்து அதில் திரிகடுகுப்பொடி, ஒரு பண எடை தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

சன்னிதோட சுரத்திற்கு மருந்து

வாலுளுவையரிசி, சிவன்வேம்பு, கண்டங்கத்திரி, அரத்தை, அவுரிவேர், திரிகடுகு, வசம்பு, வெள்ளுள்ளி, கொடிவேலி, கஞ்சாங்

கோரை, போஸ்தக்காய் ஓடு, மாசக்காய், மஞ்சிட்டி, ஏலம், இலவங்கம், பறங்கிப்பட்டை, வால்மிளகு, சங்கம்வேர்ப்பட்டை, புளியம்பட்டை, தூதுளைவித்து, சிறுகத்தாரி, பேய்ப்புடல், நாயுருவிவேர், ஓமம், கருஞ்சீரகம், மாவிலிங்கம் வேர், வகைக்குக் கால்பலம் வீதம் இடித்து இரண்டு படி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் ஒரு பண எடை கழுதைப் பால் கலந்து மூன்றுவேளை உட்கொள்ளத் தீரும்.

சகல சுரத்திற்கும் பொதுமருந்து

1. முத்தெருக்கஞ்செவி, திரிபலை, கோரைக்கிழங்கு, சுக்கு, கடுகுரோகணி, நிலவேம்பு, சித்திரமூலம், செவ்வியம், மூக்குரண்டி, சீந்தில், விஷ்ணுகாந்தி, வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து 4படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து ஆறு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. சிற்றாமுட்டி, பேராமுட்டி, நன்னாரி, விஷ்ணுகாந்தி, குழிமீட்டான், சிவதை இவைகளின் வேர், பற்பாடகம், கற்றாழஞ்சோறு, ஆடாதோடை, பேய்ப்பீர்க்கு, கண்டங் கத்திரி, சிறுசெருப்படை, வல்லாரை, வகைக்கு 1 பலம் மல்லி, நற்சீரகம், கடுகுரோகணி, திரிகடுகு, சிறுதேக்கு, திப்பிலிமூலம், செவ்வியம், கடுக்காய், தாளிசபத்திரி, நெல்லிப்பருப்பு வகைக்கு 2 வராகன் எடை இவைகளை இடித்துப் பத்துப்படி தண்ணீரில் போட்டு 3 படியாய் வற்றவைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்குக் கால்படி குடிநீராக 5 நாள்கள் கொடுத்து ஆறாம் நாள் தலைமுழுக்குச் செய்துவிட்டு புளி சேர்த்துக் கொள்ளவும்.

3. சித்திரமூலம், முத்தக்காசு, அக்கிராகாரம், அதிமதுரம், கோட்டம், ஏலம், இலவங்கம், திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, பொரித்தசீரகம், மிளகுபற்பம் வகைக்கு 3 வராகன் எடை இவைகளை இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஒரு ஆழாக்காய் வற்றவைத்து ஆறு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

4. சிற்றாமுட்டி, கொழுஞ்சி, விளா, நாயுருவி, மூக்குரண்டி, தூதுளை, கண்டங்கத்திரி, வில்வம், முள்ளி, கத்திரி, சங்கு இவைகளின் வேர் வகைக்கு இரண்டு பலம், நொச்சி, ஆடாதோடை, பிரமி, நிலவாகை, இவைகளின் இலை வகைக்கு ஒரு பிடி இடித்து 6படி தண்ணீரில் போட்டு மூன்று படியாய் வற்றவைத்துக் கொண்டு திப்பிலி, திப்பிலி மூலம், தேசாவரம், 1 பலம், இவைகளை இடித்துச் சூரணம் செய்து எட்டு வேளை உட்கொள்ள நோய் தீரும். (தேசாவரம் = மிளகுக்கொடி (செவ்வியம்) என்பாரும் உண்டு.)

சகல பழஞ்சுரத்திற்கும் நெய்

வெள்வேலிவேர், கழற்சிவேர், நாயுருவிவேர், சிறுபூளை வேர், விஷ்ணுகாந்திவேர், வசம்பு, பூண்டு வகைக்கு 1 கழஞ்சு, இவைகளை அரைத்து ஒரு படி பசுவின் நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

விடாச்சுரம், வயிற்றெரிவு, இருமல்,சொறி, சிரங்குக்கு நெய்

பசுவின் நெய், சுத்தநீர் இவை வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து முந்திரிகைப்பழம், வெட்பாலையரிசி, அரிசித் திப்பிலி, கெந்தகம், அதிவிடையம், நெல்லி, நிலவேம்பு, விலாமிச்சம்வேர், வில்வவேர் வகைக்கு 1கழஞ்சு இவைகளைத் தண்ணீர்விட்டு அரைத்துக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு மூன்று கழஞ்சு வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

சுரம், விக்கல், தாகம், சுவையின்மை, தலைநோய், பிரமேகத்திற்கு நெய்

பசுவின்நெய், தூய நீர் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் திப்பிலி, கடுகுரோகணி, வெட்பாலையரிசி, கீழ்க்காய்நெல்லி, வில்வவேர், வேப்பம்பட்டை, தான்றி, நெல்லிமுள்ளி,சந்தனம், ஆடாதோடை இலை, விலாமிச்சம்வேர், முந்திரிகைப்பழம், சிறுசண்பகப்பூ, அதிவிடயம் வகைக்கு 1 வராகன் எடை தண்ணீரில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு

நாள் ஒன்றுக்கு இரண்டு கழஞ்சு வீதம் தேன் கலந்து சாப்பிட்டுவர நோய் தீரும்.

சகல சுரத்திற்கும் கண் குளிர்ச்சிக்கும் நெய்

சிதாசெங்கழுநீர்ச்சாறு 4 படி, நெய் 1 படி ஒன்றாய்க் கலந்ததில் மஞ்சிட்டி, தாம்பரக்கிழங்கு, ஏலம், இலவங்கம், கடுகு ரோகணி, கோட்டம், நன்னாரிவேர், அதிமதுரம், சந்தனம், வகைக்கு ஒருவராகன் எடை அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து நாள் ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் உள்ளுக்குச் சாப்பிட்டு மேலிலும் பூச சகல சுரமும் நீங்கும். கண் குளிரும்.

மாந்த சுரம், முறைக்காய்ச்சல், கடுங்காய்ச்சல், பெருங்கழிச்சல் (அதிசாரச்சுரம்) செரியாமைச் சுரம் (அசீரண சுரம்) பூதச் சுரம் முதலானவைக்கு எண்ணெய்

வெருகன்கிழங்கு, சிற்றாமுட்டி, சிறுகாஞ்சொறி, அவுரி, சிதாசெங்கழுநீர், துளசி, நொச்சி, பெருகரந்தை வகைக்கு 5 பலம் தூள் செய்து ஆறு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து வடித்ததில் கொம்பரக்கு 1 பலம், ஒரு படி நீரில் போட்டு அரைப்படியாய் வற்றவைத்து வடித்து நல் லெண்ணெய் 2 படி, மோர் கலக்கிக் கூடவிட்டு, அரத்தை, அதிமதுரம், முத்தக்காசு, வெட்பாலையரிசி, கோட்டம், வாய்விளங்கம், மஞ்சிட்டி, திரிகடுகு, கொடிவேலி, ஓமம், மரமஞ்சள், கருவேப்பீர்க்கு, உரோகணி, சந்தனம், வால்மிளகு, மஞ்சள், இலவங்கப்பட்டை, சதகுப்பை, செவ்வியம், தக்கோலம், வெள்ளுள்ளி, திப்பிலிமூலம், புகையூரல், தேக்கு, வகைக்குக்கால் பலம் மைபோல் அரைத்தபின்பு நான்கு நாள்கள் சிறுத்தீயாயெரித்து 5 நாள்கள் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கழஞ்சு உள்ளுக்கு பருகச்செய்து உடம்பில் பூசி நசியமிடத்தீரும்.

சீதசுரம், குளிர்காய்ச்சலுக்கு உட்கொள்ளும் எண்ணெய்

வெருகிலைத்தண்டின் கிழங்கு, வில்வவேர், சாரணை வேர், சிற்றாமுட்டி, பேராமுட்டி, அமுக்கரா, விஷ்ணுகாந்தி

வகைக்கு 1 பலம் இடித்துப் பதக்கு (16 படி) நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து வடித்ததில் எண்ணெய் 1 படி சேர்த்து, பசுவின் பால், மோர் வகைக்கு 2 படி, மரமஞ்சள், அதிமதுரம், மஞ்சிட்டி, விலாமிச்சம்வேர், நன்னாரி வேர், அரைத்த சந்தனம், வில்வப்பழம், கோட்டம், திரிகடுகு, திரிபலை, தேவதாரம், அகில், சந்தனம், வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு மேலுக்கும் பூசி நசியமிடத் தீரும்.

சுரங்கட்கு முடித் தைலம்

1. வெருகன்கிழங்கு, சமூலம் வகைக்கு 10 பலம், குருந்தொட்டி, அமுக்கரா, சீந்தில், சத்திச்சாரணை இவைகளின் வேர் வகைக்கு 3 பலம் இடித்து 4 மரக்கால் தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்றவைத்து வடித்து அதில் பசுவின் பால், வெள்ளாட்டுப்பால், நல்லெண்ணெய், வகைக்கு 2 படி கலந்து நன்னாரி, சீந்தில், சிறுகீரை, சிற்றாமுட்டி, வில்வவேர், அமுக்கரா இவைகளின் வேர் சுக்கு, இலவங்கம், இந்துப்பு, அரத்தை, தேசாவரம் மஞ்சள், திப்பிலி, சந்தனம், விலாமிச்சம்வேர், மிளகு, இலவங்கப்பத்திரி, வகைக்கு 1 கழஞ்சு வெள்ளாட்டுப்பாலில் அரைத்துப் போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து ஒன்றுவிட்டு ஒரு நாள் தலைமுழுக்குச் செய்துவர விடாச்சுரம், வாதசுரம், பித்தசுரம், மூன்றாம் மாறல், இரண்டும் ஒன்றைவிட்டு மாறல் காய்ச்சலும் தீரும் (சமூலம் என்பது பஞ்சாங்கம் என்றுணர்க)

2. வெருகன்கிழங்கு 64 பலம், அமுக்கரா வேர் 3 பலம், சீந்தில், சிற்றாமுட்டி வகைக்கு 10 பலம் இவைகளை இடித்து நான்கு மரக்கால் காடித் தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவிட்டு வடித்து இதில் நல்லெண் ணெய் , பசுவின்பால் வகைக்கு 1 படி, சாதிக்காய், திப்பிலி, சிறுதேக்கு, தேசாவரம், முத்தக்காசு, கோட்டம், அதிமதுரம், சிறுநாகப்பூ, சடாமாஞ்சில், சந்தனம், விலாமிச்சம் வேர், சன்னலவங்கப்பட்டை, தாளிசபத்திரி, சீரகம்,

வகைக்குக் கால் பலம் இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர என்புக் காய்ச்சல், மேகக் காய்ச்சல், பாண்டுக் காய்ச்சல் முதலியவை தீரும்.

3. வெருகன்கிழங்கு 20 வராகன் எடை, அதன் தண்டு 1 வராகன் எடை இவைகளை இடித்து 5 படி காடித் தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து நல்லெண்ணெய் அரைப்படி கலந்து கொம்பரக்கு, சதகுப்பை, சிற்றரத்தை வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் காய்ச்சல் வருமுன் தைலத்தைத் தேய்த்துக் காய்ச்சல் வந்துவிட்டபின் அரைப்பிட்டு வெந்நீரில் தலைமுழுகத் தீரும். உப்பு, புளி, புகையிலை தள்ளவும்.

4. புளியின் இலைச்சாறும், நல்லெண்ணெயும், ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

5. கொம்பரக்கு 20 பலம், அமுக்கரா, வெண்தோன்றி, சிற்றாமுட்டி, நன்னாரி, வில்வம், வெருகன்கிழங்கு, விஷ்ணுகாந்தி, சீந்தில், செந்தொட்டி, தூதுளம் வகைக்கு 4 பலம் நசுக்கி தூணி (4 மரக்கால்) நீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 4 படி கலந்து முத்தக்காசு, சதகுப்பை, அரத்தை, சந்தனம், கடுகுரோகணி, மஞ்சள், சிறுகுரும்பை, தேவதாரம், சிறுநாகப்பூ, மஞ்சிட்டி, அதிமதுரம், கோட்டம், நன்னாரிவேர், விலாமிச்சம் வேர், சித்திரமூலம், கொன்றைப்பட்டை, முக்காவேளை வேர் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வர சுரம். வறட்சி தீரும்.

6. நல்லெண்ணெய், சீதாசெங்கழுநீர்ச்சாறு வகைக்கு 3 படி ஒன்றாய்க் கலந்து அதில் மதுரம், கோட்டம், இலவங்கப்பட்டை, ஏலம் மஞ்சிட்டி, கடுகுரோகணி, சண்பகப்பூ, சந்தனம், விலாமிச்சம் வேர், தண்ணீர் விட்டான்கிழங்கு, முத்தக்காசு, தாமரைவளையம், கத்தூரி மஞ்சள், செங்கழுநீர்க் கிழங்கு, நன்னாரிவேர், வெட்டிவேர்,

வகைக்கு 3 வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர விடாச்சுரம், வெப்பு, காசம், சண்டிக் காய்ச்சல் முதலான சகலசுரமும் தீரும்.

7. வெருகன் கிழங்கு, சிற்றாமுட்டிவேர், அசுவகெந்திக்கிழங்கு, சுக்கு, வில்வவேர், செங்கழுநீர்க்கிழங்கு, தேவதாரம், சந்தனக்கட்டை, விஷ்ணுகரந்தைவேர், சிறுதேக்கு, நாவிக்கிழங்கு, மருட்கிழங்கு, தாளிசபத்திரி, சடாமாஞ்சில், கடல்நுரை, ஓமம், குரோசாணி, சாதிபத்திரி, வளியம் பொருக்கு (விளாம்புறணி) இலுப்பைப் பொருக்கு (இலுப்பைப்புறணி) சிறுநாகப்பூ, சாதிக்காய், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, சிற்றாமணக்குவேர், செவ்வள்ளிக் கொடி, புளியம்பட்டை, நல்லெண்ணெய் 5 படி கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து அதில் பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கத்தூரி, புனுகுசட்டம் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப்போட்டு வைத்துக்கொண்டு உள்ளுக்கு ஒரு கரண்டி அளவு சாப்பிட்டுத் தலை முழுகியும் வர என்பு, சீதம் முதலிய காய்ச்சல்களும் தீரும்.

8. பொற்சீந்தில் 20 பலம் இடித்து இருபது படி தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்ற வைத்து அதில் நல்லெண்ணெய், பசுவின்பால், வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து வெருகன்கிழங்கு, அமுக்கராக்கிழங்கு வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர சன்னி, வாதசுரம், மாறல்சுரம்; நச்சுச்சுரம் முதலான காய்ச்சல்கள் தீரும்.

உட்காய்ச்சல் கால் எரிவிற்குத் தைலம்

கற்றாழஞ்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, முசுமுசுக்கன்சாறு, பசுவின்பால் வகைக்கு 1/8 படி, நல்லெண்ணெய் ஒரு படி ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம் 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

சுரத்திற்கு மேல்பூச்சுத் தைலம்

1. அமுக்கரா, சிற்றாமுட்டி, பேராமுட்டி இவைகளின் வேர்த்தூள், கொம்பரக்குத் தூள் வகைக்கு 1 படி, பதக்கு நீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்ற வைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய், நல்லமோர் வகைக்கு 1 படி, நன்னாரி, குமிழ், அரத்தை, கோட்டம், அதிமதுரம், சந்தனம், சிறுநாகப்பூ, வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப்போட்டு மூன்றுநாள்கள் சிறு தீயாக எரித்து நான்காம் நாள் காய்ச்சி இறுத்து உடம்பில் தேய்த்துப் பதம் இட்டுக் காது, மூக்கில் நசியம் செய்யத் தீராத காய்ச்சல் நோய்கள் எல்லாம் தீரும். உடல் முழுதும் பூசிக்கொள்ளவும். இச்சாபத்தியம், புளியைச் சுட்டுக் குறைவாகச் சேர்த்துக் கொள்ளவும்.

2. ஆடாதோடைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி கலந்ததில் அதிமதுரம், வேப்பம்பட்டை, விராலித்தோல், வேப்பம் வித்து, பிறம்புவேர், ஊமத்தம் வேர், குன்றி வேர், மேனிவேர், இந்துப்பு ஆகியவைகள் வகைக்கு 1 வராகன் எடை இவற்றை ஆடாதோடையிலைச் சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி இறுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூச, சன்னி சுரம் தீரும்.

3. பசுவின் மோர் 4 படி, நல்லெண்ணெய் 1 படி, சிற்றா முட்டி வேர்த்தோல், கோட்டம், சுக்கு, பொன்மெழுகு, முசுக்கட்டை வேர், அதிமதுரம், இந்துப்பு, மஞ்சள், தேவதாரம், நன்னாரி, மாகாளிக்கிழங்கு, பெருங்குரும்பை, தக்கோலம், சீந்தில்கொடி, விலாமிச்சம் வேர், சிறுகீரைவேர், தகரம், தக்கோலம், ஏலம், சாதிக்காய், இலவங்கப்பத்திரி, சாரணைவேர், திப்பிலி மூலம் வகைக்கு 1 வராகன் எடை மோரில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி இறுத்துக் கழுத்திற்குக் கீழ் உடம்பில் தேய்க்கக் குளிர்காய்ச்சல், பித்த ரூட்சை, தாபசுரம், சத்தரூட்சை, நச்சுச்சுரம் முதலிய பல சுரங்கள் தீரும்.

4. சீதாசெங்கழுநீர்ச்சாறு, சீந்தில் சாறு வகைக்கு 1 படி, நல்லெண்ணெய், தேவதாரம், மதனகாமப்பூ, கோட்டம்,

சந்தனம், மஞ்சிட்டி, சதகுப்பை, வெட்டிவேர், காட்டாத்திப்பூ, சடாமாஞ்சில், அகில், கொம்பரக்கு, விலாமிச்சம் வேர், தாமரைக் கிழங்கு, அதன்அரும்பு, செஞ்சந்தனம், ஏலம், நன்னாரி, கச்சோலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, காக்கணான்வேர்ப்பட்டை, நெய்தற்கிழங்கு, சிற்றாமுட்டி, கடுகுரோகணி, பெருங்குரும்பை, அரத்தை, திப்பிலி, வகைக்கு 1 வராகன் எடை இவைகளைப் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் தேய்க்கச் சகலசுரமும், மேல் எரிவும், தாகமும் தீரும்.

5. சீதாசெங்கழுநீர்ச்சாறு 1 படி, பசுவின்பால், நல்லெண்ணெய் வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து வெட்டிவேர், கடுகுரோகணி, சந்தனம், அதிமதுரம் வகைக்கு 3 வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்குக் கரண்டி நிறையக் கொடுத்து மேலிலும் பூசிவரக் கொடிய சுரம், நச்சுச் சுரம், நாட்பட்ட சுரம், வெட்டை ஆகியவை தீரும்.

6. மோர் 4 படி, பழங்காடி, 1 படி, நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்ததில் சிற்றாமுட்டிவேர் 4 பலம் இடித்து நான்குபடி தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய்க் காய்ச்சி வடித்து விட்டு சத்திச்சாரணை, நன்னாரி, குருந்தொட்டி, பொன்முசுட்டை, முத்தக்காசு, சீந்தில், விலாமிச்சம்வேர், சிறுகீரை வேர், அமுக்கறாவேர், கோட்டம், மஞ்சள், இந்துப்பு, அதிமதுரம், சுக்கு, செவ்வள்ளிக்கொடி, பொன் மெழுகு, கச்சோலம், ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சிற்றரத்தை, கிராம்பு, தேவதாரம், திப்பிலிமூலம், முந்திரிப்பழம், கடல்நுரை வகைக்கு 1 கழஞ்சு இவைகளை மோரில் அரைத்துப் போட்டு மூன்று நாள் வரை சிறு கொதிப்பாய் வைத்து நான்காம் நாள் பதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில் தேய்த்து அரைக்கடிகை சென்றபின் தலையில் தேய்த்து சீயக்காய் அரைப்பிட்டுத் தண்ணீரில் தலைமுழுக்குச் செய்ய, நச்சுக்காய்ச்சல், மாறல் சுரம், வாத சுரம், வெட்டை, பித்தம், காந்தல், என்பு சுரம் முதலான பற்பல காய்ச்சலும் தீரும்.

7. குறுந்தொட்டி வேர் 1 பலம் இடித்து ஐந்துபடி நீரில் போட்டு வற்றவைத்த குடிநீர், 12 ½ பலம் கொம்பரக்கு கிழிகட்டி மூன்றுபடி நீரில் போட்டு ½ படியாக வற்ற வைத்த குடிநீர், அமுக்குரா வேர் 5 பலம் இடித்து, மூன்றுபடி நீரில் போட்டு வற்ற வைத்த குடிநீர் ½ படி; பழைய மோர், நல்லெண்ணெய், வகைக்கு 1 படி இவைகளை எல்லாம் ஒன்றாய்க் கலந்து அதில் முள்ளி வேர், விலாமிச்சம் வேர், சீந்தில் கொடி, பொன்முசுட்டைவேர், குருந்தொட்டிவேர், நன்னாரிவேர், முருங்கைப் பட்டை, சத்திச்சாரணை வேர், சிறுகீரை வேர், கோட்டம், அதிமதுரம், சுக்கு, இந்துப்பு, மஞ்சள், கச்சோலம், ஏலம், இலவங்கம், சிற்றரத்தை, திப்பிலிமூலம், சாதிக்காய், செவ்வள்ளிக் கொடி, தேவதாரம், இலவங்கப்பத்திரி வகைக்கு 1 கழஞ்சு மோரில் அரைத்துப் போட்டு மூன்று நாள் சிறு தீயாய் எரித்து நான்காம் நாள் பதமாய்க் காய்ச்சி வடித்து நான்கு நாளைக்கு ஒரு முறை தலைமுழுகிவர பலசுரங்களும் வெட்டைச்சூடும் தீரும்.

8. கடல்நுரை , மஞ்சள், கோட்டம், சந்தனம், பொன்மெழுகு, விலாமிச்சம்வேர், சதகுப்பை, முத்தக்காசு, மஞ்சிட்டி, இலுப்பைப்பூ, கடுகுரோகணி, கம்பிப்பிசின், பெருங் குரும்பை, வெட்டிவேர், இந்துப்பு, சுக்கு வகைக்கு 1 கழஞ்சு மோரில் அரைத்து, ஒரு படி நல்லெண்ணெயில் போட்டு ஆறுபடி தண்ணீரை விட்டுக்காய்ச்சி உடம்பில் தேய்க்கச் சுரம், காந்தல் வாய்நீர், ஊறல், வறட்சி தீரும்.

9. வெருகன் கிழங்கு, தண்டு, இலை, சமூலம் 1 துலாம் (200 பலம்), சிற்றாமுட்டி, பேராமுட்டி, சீந்தில், வில்வவேர், அமுக்கரா வேர், விஷ்ணுகரந்தை, சாரணைவேர் வகைக்கு 5 பலம் இவைகளை இடித்து 4 மரக்கால் தண்ணீரில் போட்டுக் குறுணியாய் வற்றவிட்டு, வடித்து அதில் குறுணி (8 படி), நல்லெண்ணெய், தயிர்த்தண்ணீர் 4 படி கூடவிட்டு வெட்டிவேர், சந்தனம், தேவதாரம், முத்தக்காசு, குங்கிலியம், பிராயவேர், குக்கில், மஞ்சிட்டி, திரிகடுகு, வகைக்கு1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூச சீதச்சுரம், பூதக்

காய்ச்சல், ரூட்சை நீங்கும். இவற்றிற்கெல்லாம் இச்சா பத்தியம். புளி சுட்டுக் குறைவாய்க் கூட்டவும்.

காய்ச்சலுக்கு நசியம் (மூக்குறிஞ்சல்)

1. குளிர்க் காய்ச்சல் அடிக்கும்போது சிறு தும்பையிலையையும் மிளகையும் ஒன்றாய்ச் சிதைத்து மூக்கில் நசியம் செய்ய நீங்கும்.

2. திப்பிலியையும் வேலிப்பருத்தி இலையையும் ஒன்றாய்ச் சிதைத்து மூக்கில் நசியமிட்டாலும் அல்லது இந்துப்பு, உள்ளி, கொம்புப் பாகலிலை இவைகளை ஒன்றாய்ச் சிதைத்து மூக்கில் நசியமிட்டாலும் காய்ச்சல், தோடம் நீங்கும்.

காய்ச்சல் முதலியவற்றிற்கு ஏலாதி மாத்திரை

ஏலம், கிராம்பு, உலர்ந்த இஞ்சி, திப்பிலி, முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், தாளிசபத்திரி, அதிமதுரம், கோட்டம், விலாமிச்சவேர், மலாயா சந்தனம், இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி, கோரோசனை, இலுப்பைப்பூ, ஓரிலைத்தாமரை வேர் வகைக்கு 1 வராகன் எடை இவற்றிற்குச் சமமாய் கடுகு ரோகணி, கலந்து செவ்வியம் நீரால் இரண்டு சாமம் அரைத்துப் பருத்தி விதை அளவு உருண்டை செய்து உட் காய்ச்சல்; அதிசாரக் காய்ச்சல், ஆமக்காய்ச்சல்; வெப்பக் காய்ச்சல்; இவைகளுக்குத் தாய்ப்பாலிலும் தோடக் காய்ச்சலுக்குக் குதிரைவாலிச்சாற்றிலும் அல்லது குடிநீரிலும் கொடுக்க நோய் தீரும். காசம் (இருமல்), மூச்சு, காசம்; இரத்தக் காசத்திற்குத் தேனிலும் கொடுக்க நோய் தீரும்.

உட்டிணக் காய்ச்சலுக்குச் சீரக மாத்திரை

நற்சீரகம், பேரீச்சம்பழம், முந்திரிகைப்பழம், செங் கழுநீர்க்கிழங்கு, திரிகடுகு, கோட்டம், அதிமதுரம், சந்தனம், கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள், சூடன் வகைக்கு 2 கழஞ்சு இளநீரில் அரைத்துத் தூதுளங்காய்ப்போல் உருட்டிக் கொண்டு தாய்ப்பாலில் உரைத்து ஆறுவேளை உட்கொள்ள நோய் தீரும்.

காய்ச்சலுக்குக் குங்குமக் குளிகை

குங்குமப்பூ 1 பலம், திரிகடுகு, திரிபலை, சாதிக்காய், கிராம்பு, ஏலம், சந்தனம், கடுகுரோகணி வகைக்கு அரைப்பலம் ஆறு சாமம் எலுமிச்சம்பழச் சாற்றிலும், நான்கு சாமம் இஞ்சிச் சாற்றிலும், இரண்டு சாமம் கண்டங்கத்திரிப் பழச்சாற்றிலும், ஆட்டி, சிறுபயறு அளவு உருண்டை செய்து கொண்டு துணை மருந்துகளிலிடக் குளிர்க்காய்ச்சல் முதலான சன்னிக் காய்ச்சல் தீரும்.

காய்ச்சலுக்குக் கோரோசனைக்குளிகை

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், இரசச் செந்தூரம், இரசகற்பூரம், ஏலம், அப்பிரகச்செந்தூரம், கிராம்பு, கோட்டம், சாதிக்காய், அக்கிராகாரம் வகைக்கு 1 கழஞ்சு, சந்தனக் குடிநீரில் 4 சாமமும், சண்பகப்பூ குடிநீரில் 2 சாமமும், குங்குமப்பூக் குடிநீரில் 2 சாமமும் அரைத்துக் குன்றிமணிபோல் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி தாய்ப்பாலில் இடத் தொண்டைக்கட்டு, சிலேத்துமம் 6, சன்னி 13, மண்டைச்சூலை, நீர்க்குற்றம்; மயக்கம்; கபக்காய்ச்சல் வலிப்புகள் நீங்கும்.

காய்ச்சலுக்குச் சஞ்சீவி மாத்திரை

இரசச்செந்தூரம், இலிங்கம், அரிதாரம், வீரம், கெந்தி பற்பம், நாவிக்கிழங்கு, கிராம்பு, இலவங்கப்பத்திரி, ஏலம், திரிகடுகு, திரிபலை, வாளம் வகைக்கு அரைப்பலம், நிம்மக்காய்ச் சாற்றில் ஒரு சாமம், தாய்ப்பாலில் இரண்டு சாமம் குமரிச்சாற்றில் நான்கு சாமம், கொன்றைப்பூச் சாற்றில் நான்கு சாமம், ஆட்டிக் குன்றிமணி அளவு உருண்டை செய்து தாய்ப்பாலிலாவது, தேனிலாவது கொடுக்க சன்னி தோடக் காய்ச்சல் தீரும்.

காய்ச்சலுக்கு இரசகற்பூர மாத்திரை

தூய்மை செய்த இரசகற்பூரம், கால் பலம், வாளம் 1 பலம் அழிஞ்சிவேர்ப்பட்டை, கொடிவேலிப்பட்டை வகைக்கு, 1 பலம், கையாந்தகரைச் சாற்றிலும், தாய்ப்பாலிலும் வகைக்கு 2 சாமம் ஆட்டித் துவரை அளவு மாத்திரை செய்து கொண்டு தேனில் உட்கொள்ள சகல காய்ச்சல் தீரும்.

காய்ச்சலுக்கு இரசபற்ப மாத்திரை

1. உலர்ந்த இஞ்சி, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கடுகுரோகணி, இரசபற்பம் வகைக்கு 1 கழஞ்சு, வாளம் 7 கழஞ்சு, இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து மிளகளவு உருண்டை செய்து ஒரு உருண்டையை துணை மருந்திலிட கழிச்சலாகிக் குளிர்காய்ச்சல் நீங்கும். கழிச்சல் அதிகமானால் குளிர்ந்தஅன்னம் கொள்ளவும்.

2. வெள்ளைக்காக்கணான் விதை, திரிபலை, மிளகு, திப்பிலி, இரசம், கெந்தகம், வாய்விளங்கம், இவைகளைக் கரிப்பான் சாற்றில் ஒரு நாள் அரைத்து அழற்காய் (மிளகு), அளவு உருண்டை செய்து சாற்றில் இடக் காய்ச்சல் தீரும்.

3. கெந்தகமும், மிதிபாகலிலையும், ஓர் எடையாய் அரைத்து பாசிப்பயறு அளவு உருண்டை செய்து கால் பலம் மிளகை உடைத்துப் போட்டுக் குடிநீர் செய்து அதில் மேற்படி மாத்திரையை உரைத்துக் கொடுக்க குளிர்க்காய்ச்சல் தீரும்.

காய்ச்சலுக்கு இலிங்க மாத்திரை

1. இலிங்கம் 1 கழஞ்சு, திப்பிலி 2 கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப் பயறு அளவு உருண்டை செய்து கொண்டு உலர்ந்த இஞ்சி, குடிநீரிலிட சகல காய்ச்சலும் தீரும்.

2. சாதிலிங்கம், தாளகம், மனோசிலை வகைக்கு 1 வராகன் எடை, காட்டுக்கருணைக்கிழங்கிலாவது, கறிக்கருணைக் கிழங்கிலாவது பொதிந்து சீலைமண் செய்து இரண்டு படி உமிக்குள் புடம் போட்டு வேலிப்பருத்திச்சாற்றில் அரைத்துப் பாசிப்பயறு அளவு உருண்டை செய்து சுக்குக் குடிநீரில் ஒரு உருண்டை வீதம் ஐந்து வேளை உப்பு, புளி, தள்ளி, 9 நாள்கள் அல்லது 7– ம் நாளில் தலை முழுக்குச் செய்து உப்பு வறுத்துக் கலந்து 10–ம் நாள் தைலத் தலைமுழுக்குச் செய்து புளி கூட்டிக்கொள்ளவும். மருந்தின் வீறு அதிகரித்து நின்றால் சிறுகீரைவேரும், மிளகும் ஓர் எடையாய்க் குடிநீர் செய்து மூன்றுவேளை கொடுக்க மாறும்.

அருத்த நாரிசுவரம்

1. அப்பிரகம், நாகம், வெங்காரம், தாளகம், சாதிலிங்கம், கல்நார், பேரீச்சம்பழம் இவைகளை ஓர் எடையாய்க் கொம்புப் பாகல் இலைச்சாற்றில் ஒரு நாள் ஆட்டி வில்லை தட்டியுலர்த்திக் குகையிலிட்டு சில்லுப்போட்டு மூடிச்சீலைமண் செய்து மணல் மறைவில் புடமிட்டுக் கள்ளிப்பாலிலும், எருக்கம்பாலிலும் அரைத்து உலர்த்திப் பொடித்துச் சிமிழிலடைத்துக் கொண்டு பணவெடை பற்பம் சுடுநீரில் கொடுக்க வலதுபுறத்துச் சுரம் விடும். குளிர்ந்த தண்ணீரில் கொடுக்க இடதுபுறத்துச் சுரம் விடும்.

2. தாளகத்தைச் சிறு துண்டுகளாய் வெட்டி சுண்ணாம்புக்குள் பத்து முறை வைத்துத் தேசிநீர் (கழுதை மூத்திரம்) விட்டு நீற்றிய பின் துணியில் முடித்துச் சுண்ணாம்புத் தண்ணீருக்குள் தொங்க வைத்து இரண்டு சாமம் எரித்து தூய்மைசெய்த தாளகம் 3 வராகன் எடை இவைகளைத் தாய்ப்பாலில் இரண்டு சாமம் அரைத்துக் குன்றிமணி அளவு உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டையாக இரண்டு வேளை வெல்லத்தில் கொடுத்து ஆறுநாள் உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய் இருந்து எட்டாம் நாள் ஓமம், தேய்த்துத் தலை முழுக்கு செய்து உப்பை வறுத்துக் கூட்டவும். 94 வகையான சுரங்களும் தீரும்.

3. தூய்மை செய்த தாளகம், நேர்வாளம், காவிக்கல் வகைக்கு 1 பலம், இதை கவிழ்தும்பை, நல்லதும்பை, பெருந்தும்பை இவைகளின் சாற்றால் வகைக்கு ஒரு சாமம் ஆட்டி மிளகு போல் உருண்டை செய்துகொண்டு, குளிர்சுரத்திற்கு; அரைப்படி மோரை முறித்து அந்தத் தெளிவுத் தண்ணீரிலும், அதிசார சுரத்திற்கு; சுக்குக் குடிநீரிலும், பழஞ் சுரத்திற்கு; பேய்ப்புடல், சுக்கு சேர்ந்த குடிநீரிலும், சிலேத்தும சுர இருமலுக்குத்தேனும், திப்பிலிப் பொடியும் சேர்த்து, அதிலும் தாப சுரத்திற்கு; வில்வவேரும், சுக்கும் சேர்ந்த குடிநீரிலும், அத்திசுரத்திற்கு; பசுவின் நெய்யிலும்,

வாத சுரத்திற்கு; வாதமடக்கிக் குடிநீரிலும் ஒரு குளிகை கொடுக்கத் தீரும். மூன்று நாளுக்கு உப்பு, புளி தள்ளவும். கழிச்சல் அதிகரித்தால் மா, ஆல், இலுப்பை இவைகளின் கொழுந்தை வகைக்கு ஒரு பிடி அரிந்து இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால்படியாய்க் காய்ச்சிக் கொடுக்க இதில் கண்ட கழிச்சல் நோய் நீங்கும்.

4. தாளகம், கெந்தி, இரசம், கருநாபிக்கிழங்கு, வெண்காரம், திப்பிலி, வாளம், சுக்கு, கடுக்காய், நெல்லிமுள்ளி, வெள்ளைப் பூண்டு இவைகளைக் கையாந்தகரைச் சாற்றில் 4 சாமம் அரைத்து மிளகு அளவு உருண்டை செய்து ஒரு நாளைக்கு மூன்று வேளை மூன்று உருண்டை பசு நெய்யில் உட்கொள்ள சுரம், காசம் நீங்கும்.

5. மேற்படி தாளகம், கருநாவிக்கிழங்கு, காந்தம், கடுகு ரோகணி இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து உளுந்து அளவு உருண்டை செய்து கற்றாழை மடல் சாற்றிலாவது தாய்ப்பாலிலாவது ஒரு உருண்டை உட்கொள்ள நான்கு நாழிகையில் சுரம் நீங்கும்.

சுரக்கோடாலி

வெள்ளைப்பாடாணம், கௌரிப்பாடாணம் சூதம் வகைக்கு 1 வராகன் எடை இவைகளைக் கிழி கட்டி மிளகுக் குடிநீரில் 2 சாமம் எரித்து ஊமத்தன் சாற்றிலும், கொம்புப் பாகல் சாற்றிலும் வகைக்கு இரண்டு சாமம் அரைத்து உளுந்து எடைக்குக் குளிகை கட்டி இளநீர், வெந்நீர், காடியில் போட்டு வேளைக்கு ஒரு உருண்டை வீதம் 9 வேளை உட்கொள்ளச் சகல சுரமும் நீங்கும். 9 நாள்கள் வரையிலும் புளி தள்ளி உப்பு வறுத்துக் கூட்டவும். 8–ம் நாளில் தலைக்குத் தண்ணீர் விட்டுப்புளி சுட்டுச் சேர்த்துக் கொள்ளவும்.

நான்காம்முறை சுரத்திற்கு மனோசிலை மாத்திரை

மனோசிலை, மிளகு, திப்பிலிமூலம் வகைக்கு 1 பலம் துளசிச் சாறு, வெள்ளாட்டுக் கோமியம் இவைகளால் வகைக்கு

ஒரு சாமம் அரைத்து மிளகுபோல் உருண்டை செய்து சுரத்திற்கு வெந்நீரிலும், சன்னிக்குக் குப்பைமேனிச் சாற்றிலும், வாயுவுக்கும், கடுப்புக்கும் குளிர்ந்த தண்ணீரிலும் உட்கொள்ள நோய் தீரும்.

சுரத்திற்குப் பச்சைக் கற்பூர உருண்டை

இரசபற்பம், கெந்தகம், பச்சைக்கற்பூரம், இலவங்கம், சாதிக்காய், நேர்வாளம், இவைகளை ஓர் எடையாய் கற்றாழம் பால்விட்டு அரைத்து உளுந்து அளவு உருண்டை செய்து ஒரு உருண்டையைச் சர்க்கரையில் கலந்து சாப்பிடச் சகல சுரமும் உடனே நீங்கும்.

இரண்டாம்முறை, மூன்றாம்முறை, குளிர்ச்சுரம், முதலான சகல சுரத்திற்கும் கண் மை (அஞ்சனம்)

இரண்டு கழஞ்சு சீந்தில்பூவை, எலுமிச்சம்பழச் சாற்றினால் மைபோல் அரைத்து மண்வெட்டி பின்புறத்தில் அப்பி வைத்து விளக்கில் நல்லெண்ணெய் விட்டு தீபமேற்றி மைப்பற்ற வைத்து அதை வெங்கலத் தகட்டின் புறத்தில் இட்டுக் கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டு இரும்புக் குழவியால் களிம்புபோல் அரைத்துக் கொம்புச் சிமிழில் அடைத்துக்கொண்டு பணவெடை கண்ணில் தீட்டத் தீரும்.

சுரம், குளிர்ச்சுரம், வயிற்றுவலி, பொருமல் முதலான நோய்களுக்குக் கழிச்சல் மாத்திரை

திரிகடுகு, கடுக்காய், கடுகுரோகணி, இந்துப்பு, இரச பற்பம் வகைக்கு ஒரு கழஞ்சு, தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு 7 கழஞ்சு, எலுமிச்சம்பழச் சாற்றால் மைபோல் ஆட்டி சிறு சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து வெந்நீரில் உட்கொள்ளவும். கழிச்சல் அதிகரித்தால் சுர நோயாளர்களுக்குப் பால் அன்னமும் கொடுக்க கழிச்சல் நிற்கும்.

சுரநோயின் நட்சத்திரப் பலனறிய விவரம்

ஆதிரையும் திங்கட்கிழமையும் கூடின நாளிலாவது, திருவோணமும் அருக்கனும் (ஞாயிறு) கூடின தினத்திலாவது, சனியும் கார்த்திகையும் கூடின தினத்திலாவது, விசாகமும் வெள்ளியும் கூடின தினத்திலாவது, ரேவதியும் புதனும் கூடிய தினத்திலாவது, செவ்வாயும் சித்திரையும் சேர்ந்த தினத்திலாவது சுரம் கண்டால் இறப்பு நேருமாம்.

(சுரநோய்ப் படலம் முற்றிற்று.)

சன்னிநோய்ப் படலம்

அதாவது சீதள நோயை வருவித்தலாம்.

சன்னி (முக்குற்றம்) பதின்மூன்றின் பெயர்கள்

கூறுவேன் தாந்திரிகன் அந்த கன்தான்
குணமான சீதாங்கன் உருத்தி ராங்கன்
தேறுவேன் சித்தவிப் பிரமை கண்டன்
தெளிவான கண் டகுச்சன் அபினி யாசன்
மீறுவேன் விக்கநாதன் பொகுக்க நேத்திரன்
மிதமான பீர்த்தட்டி முருக்கி தாபம்
ஆறுவேன் பிரதாப சன்னிபதின் மூன்றும்
அப்பனே அகத்தியனா ரருளி னாரே.

தாந்திரிகன், அந்தகன், சீதாங்கன், உருத்திராங்கன், சித்தவிப் பிரமை, கண்ட குச்சன், அபினியாசன், விக்கநாதன், பொகுக்கநேத்திரன், பீர்த்தட்டி, முருக்கிதாபம், பிரதாபம் முதலான சன்னிகள் உடலில் உற்பத்தியாகிறது.

நலமாகா சன்னிகள்

மேற்படி சன்னிகள் அந்தகன், சீதாங்கன், கண்டகுச்சன், பொகுக்க நேத்திரன், அபினியாசன், உருத்திராங்கன், பீர்த்தட்டி இவைகள் அசாத்தியமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தகச் சன்னியின் இயல்பு

அகோரமாய்ச் சுரங்காயும்; மெய்விரைக்கும்; வாய்நீர் வடியும்; விக்கல், கக்கல், இருமல், தாகம், பிரமை; பிரதாபம், வீக்கம்; நடுக்கல், மாராட்டங்காணும்; தலைநடுங்கும்; சிமிட்டும்; வயிறு எரியும், பிதற்றும், பலசிந்தை உண்டாகும்; பத்துத் தினத்தில் கொல்லும்.

மருத்துவம்:

1. கொடுவேலி வேர் ½ பலம், வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்கு ½ பலம், இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய்க் குடிநீர் செய்து மூன்று பொழுது கொடுக்க அந்தகச் சன்னி முதலான 13 சன்னிகளும் நீங்கும்.
2. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கொத்தமல்லி, வாய் விளங்கம், குருந்தொட்டிவேர், முத்தக்காசு, தூதுவளை இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து இரண்டு படித் தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்துக் கொண்டு அடிக்கடி கொடுத்துக் கொண்டிருந்தால் தாகம், கக்கல், விக்கல் நீங்கும்.
3. நெரிஞ்சி, நொச்சி, சித்திரமூலம், சுக்கு, பேய்ப்புடல், மிளகு, திப்பிலி மூலம், செவ்வியம் வகைக்குக் கால் பலம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து கொடுக்க நீங்கும்.

சீதாங்கச் சன்னியின் இயல்பு

உடல் நொந்து குளிரும்; நடுங்கும், வியர்க்கும், வயிறு பொருமி இரைந்து கழியும்; தாகம், பிரதாபம், விக்கல், கக்கல், அயர்வு, சோபம், மூர்ச்சை உண்டாகும்; வலிமை கெடும்; குரல் கம்மும்; இருமும், இளைக்கும், பெருமூச்சுக்காணும்; எங்கும் நெஞ்சில் கபம் அடைக்கும்; எழுந்து விழுந்து தள்ளாடும். 15 நாட்களில் இறப்பு உண்டாகும்.

மருத்துவம்:

1. திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், மிளகு, சுக்கு, இலவம்வேர், கடுகுரோகணி, அவுரிவேர், பற்பாடகம், சிறுதேக்கு, பேய்ப்புடல் வகைக்குக் கால்பலம் வீதம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்துக் கொடுக்க நீங்கும்.
2. நன்னாரிவேர், வில்வவேர், முத்தக்காசு, கடலழிஞ்சில் பட்டை, பேய்ப்புடல், செங்கழுநீர்க்கிழங்கு, பற்பாடகம்,

பேராமுட்டி, சிறுதேக்கு, செவ்வியம் வகைக்கு 1 பலம் நான்கு படித் தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து ஒரு வேளைக்கு ஆழாக்கு வீதம் 9 பொழுது கொடுக்க நீங்கும்.

3. ஏலம், இலவங்கம், சந்தனம், பூசணித்தண்டு, கீரைத்தண்டு, தூதுவளைவேர், சுக்கு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்துக் கொடுக்க நீங்கும்.

கண்டகுச்ச சன்னியின் இயல்பு

சுரம் கொடூரமாய்க் காயும்; உடல் புண் போலுளையும்; நடுக்கும், தினவெடுக்கும்; தலைவலிக்கும்; நித்திரை கொள்ளும்; தொண்டை, நாவு உலர்ந்து முள்ளுண்டாகிப் புண்ணாகும்; பல்லீற்றில் இரத்தம் வடியும்; வயிறு கழிந்து பொருமும்; பொய் பிதற்றும்; தாபசோபம், பிரதாபம், கக்கல், விக்கல், சுரம், மூச்சு, இளைப்பும் காணும்; கண்ணுங் காணும்; கபமும் எழுந்து அழுது களைத்து விழும் 13 நாளில் கொல்லும்.

மருத்துவம்:

1. திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, கடுகுரோகணி, ஆடாதோடைவேர், மஞ்சள், மரமஞ்சள் இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி நீரில் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

2. கடுக்காய்ப்பூ, நாயுருவிவேர், முத்தக்காசு, நிலவேம்பு, சிறுதேக்கு, மஞ்சள், கடுகுரோகணி, கோட்டம், கொடிவேலி, செவ்வியம், திரிகடுகு, பெருங்குமிழ், நெல்லி முள்ளி, தான்றிக்காய், தேவதாரம், பிரமி, வசம்பு இவைகளை முன்போல் குடிநீர் செய்து கொடுத்து திப்பிலி யும், நாயுருவியிலையும் ஒன்றாய்ச் சிதைந்து மூக்கில் நசியமிடத் தீரும்.

3. நொச்சியிலை, சந்தனம், பற்பாடகம், கடுகுரோகணி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், மாசிப்பச்சை, காராக்

கரந்தை, பாவட்டை, நன்னாரி, கூவிளை, முன்னை இவைகளை ஒரு வேளைக்கு ½ பலம் வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்துக் கொடுக்க நீங்கும்.

4. சித்திரமூலம், அவுரிவேர், இலவம்வேர், திப்பிலி, சுக்கு, குங்கிலியம், செவ்வியம், திப்பிலிமூலம் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவிட்டு கொடுக்க நீங்கும்.

பொருக்கநேத்திர சன்னியின் இயல்பு

உடல்மிகக் காயும்; விழிபருத்துக் காணும்; அதில் பனித்துளி போல் நீர்வடியும்; பார்வை மயங்கும்; இரு காதும் அடைக்கும்; பொய் பிதற்றும்; பிரமை கொள்ளும்; விக்கல், தாகம், களைப்பு உண்டாகும், 8 நாளில் கொன்று விடும்.

மருத்துவம்:-

1. ஆடாதோடை, சந்தனம், தூதுவளை, சுக்கு, இலுப்பைப்பூ, சிற்றாமுட்டி, சிறுவழுதலை, முத்தக்காசு, பற்பாடகம் இவைகளை வகைக்கு ஒருபலம் வீதம் இடித்து நான்கு படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்து ஒரு வேளைக்குக் கால்படி வீதம் 6 பொழுது கொடுக்க நீங்கும்.

2. பாதிரி, சுக்கு, எருக்கம் வேர், பற்பாடகம், பேய்ப்புடல், சித்திரமூலம், திரிகடுகு வகைக்குக் கால்பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்க நீங்கும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

அபினியாசச் சன்னியின் இயல்பு

மூன்று நாடியும் படபடத்து நிற்கும்; அகோரமாய்ச்சுரம் காயும்; முகம் தெளிவாயும், மினுமினுப்பாயும் இருக்கும்; உடல் நோகும்; நித்திரை, தாகம், வியர்வை, புலம்பல் காணும்; கன்னம் வீங்கும்; காதடைக்கும்; மூக்குக் கறுக்கும்; வாய் பேசாது; மேல் மூச்சுண்டாகும்; தொண்டை கட்டும்; 15 நாளில் கொல்லும்.

மருத்துவம்:-

1. வாதமடக்கி, நிலவேம்பு, சுக்கு, வசம்பு, ஓமம், திப்பிலி, பேய்ப்புடல், பற்பாடகம் இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து 1 படி நீரில் போட்டு ஆழாக்காய்க் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

2. வாதமடக்கி வேர், பம்மந்திராய்வேர், தேசாவரம், கோட்டம், சடாமாஞ்சில், சீந்தில்கொடி, சிறுதேக்கு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர் இவைகளை முன்போல் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

உருத்திராங்கச் சன்னியின் இயல்பு

சுரம் காயும்; உதடு உலரும்; நாக்கும் விழியும் கறுக்கும்; அதில் முள்ளுபோலும் இருக்கும்; நெஞ்சில் கபம் கட்டி இருமும், இளைக்கும்; தொண்டை வலிக்கும்; ஆகம் நடுக்கும்; கழுத்தும், நெற்றியும் வியர்க்கும்; தாகம், விக்கல் காணும்; பிரமை கொள்ளும்; அபயமிடும்; சிரிப்புடன் போகம் செய்ய விரும்பும்; 10 நாள்களில் கொல்லும்.

மருத்துவம்:- இலந்தைஇலை, நன்னாரி, சீந்தில்தண்டு, வெட்டி வேர், விலாமிச்சம்வேர், பூநாகம், முசுறுமுட்டை, ஆடா தோடை, முத்தக்காசு, சுக்கு, பேய்ப்புடல் இவைகளை முன் போல் குடிநீர் செய்து கொண்டு மேற்படி குடிநீரும், இஞ்சிச் சாறும் ஓரளவாய்க் கலந்து அதில் கொஞ்சம் தாய்ப்பாலில் திப்பிலிப் பொடியும் சேர்த்துக் கொடுக்கத் தீரும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

பீர்த்தட்டிச் சன்னியின் இயல்பு

அகோரமாய்ச் சுரங்காயும்; உடல் சிலிர்க்கும்; தலை சுற்றும்; மது குடித்தால்போல் பிதற்றும்; வயிறு கழியும்; உப்புச மாகும்; உதடு, நாக்கு, உலரும்; சுருக்கு விரியும்; இரத்தம் வரும்; முகத்தைப் பார்க்கும்; பெருமூச்சு, இருமல், விக்கல், இளைப்பு, தாகம், கக்கலும் காணும்; 10 நாளில் கொல்லும்.

மருத்துவம்:

1. பூசணித்தண்டு, முத்தக்காசு, சுக்கு, கச்சந்திராய்வேர், தூதுளங்காய், கண்டங்கத்திரி, பற்பாடகம், மல்லி, சிறு வழுதலை இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒருபடித் தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து ஆறுவேளை கொடுக்கத் தீரும்.
2. அழிஞ்சிவேர், சுக்கு, சித்திரமூலம், பேய்ப்புடல், மர மஞ்சள், சீந்தில்தண்டு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்க நீங்கும்.

தாந்திரீகச் சன்னியின் இயல்பு

உடல் காயும்; பிதற்றும், தாகிக்கும், வாந்தியாகும்; உள் நாவு வறண்டு கனத்திருக்கும்; வயிறு கழியும்; மட்டறுத் தினவாகும்; காது கேளாது; கண்ணில் நீர் வடியும்; புகைத்து இருமும்; விழுந்தது சோரும்; 25 நாளில் தீரும்.

மருத்துவம்:

1. பிரமியிலை, முந்திரிகைப்பழம், முத்தக்காசு, வசம்பு, தண்ணீர்விட்டான் கிழங்கு, கொன்றைப்பட்டை, கடுக்காய், கடுகுரோகணி, நெல்லி, தான்றி, சிற்றாமுட்டி வேர்ப்பட்டை, பேய்ப்புடல், நிலவேம்பு, திரிகடுகு, கொடி வேலி, தேவதாரம் இவைகளை ஒரு படிக்குக் கால் பலம் வீதம் இடித்துப் படித்தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து ஆறுவேளை கொடுக்கத் தீரும்.
2. முத்தக்காசு, சந்தனம், உலர்ந்த இஞ்சி, பற்பாடகம், விலாமிச்சு, இருவேலி இவை வகைக்குக் கால் பலம் இடித்து 4 படித் தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து இறுத்தி அதில் கால் படி பொரித்த அரிசி போட்டுக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்து அதில் சந்தனம், குங்கிலியம், சாம்பிராணி, தேற்றான்விதை, தேவராயகற்பூரம், தேன் இவைகளை ஓர் எடையாய் நெருப்பில் போட்டுப் புகை பிடிக்கத் தீரும்.

3. நெல்லிப்பருப்பு, கடுக்காய், நிலவேம்பு, பற்பாடகம், கண்டங் கத்திரி, கடுகுரோகணி, கச்சோலம், உலர்ந்த இஞ்சி, திப்பிலி வகைக்குக் கால் பலம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து உட்கொள்ள நோய் தீரும்.

சித்தவிப்பிரமச் சன்னியின் இயல்பு

உடம்புமிக நொந்து சுரங்காயும்; வாதபித்தம் கோபித்துப் பிதற்றும்; மதிமயங்கும்; அழுது விம்மும்; மிகச் சிரிப்புண்டாகும்; ஆடும், கண்குழிக்கும்; அடிக்கடி எழுந்து விழும்; அழுதுபுரளும்; அயரும், விழிக்கும்; வந்தவர்களை வாஞ்சைபோல் தடவி மகிழும். நெடுமூச்செய்தும்; பல நாள்கள் சென்றால் தீரும்.

மருத்துவம்:

1. கடுக்காய், பற்பாடகம், கடுகுரோகணி, நிலவேம்பு, முந்திரிப்பழம், தேவதாரம், தண்ணீர்விட்டான் கிழங்கு, முத்தக்காசு, கொன்றைப்பட்டை, பேய்ப்புடல், தேசாவரம் இவைகள் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்து 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. முந்திரிப்பழம், பற்பாடகம், நன்னாரிவேர், முன்னைவேர், வில்வவேர், சந்தனம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், பேரீச்சம்பழம், சுக்கு, திப்பிலி இவைகளை வேளை ஒன்றுக்குக் கால் பலம் வீதம் இடித்து 2 படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து உட்கொள்ள நோய் தீரும்.

3. நொச்சி இலை, முள்ளி இலை, கஞ்சாகோரை இலை, வெள்ளுள்ளி, திரிகடுகு வகைக்குக் கால் பலம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்து உட்கொள்ள நோய் தீரும்.

தாந்திரீகச் சன்னியின் இயல்பு

உடல்சோர்ந்து நொந்து உளையும், குத்தும், காயும், வியர்க்கும்; தூக்கும், தலைவலிக்கும்; வாயில் நீர் வடியும்;

இருமல், கக்கல், மயக்கம், ஆராட்டம், உழத்திகாணும்; நித்திரை சற்றும் வராது; புத்தி கலங்கும்; புலன் கெடும்; ஏழு நாளில் கொன்றுவிடும்.

மருத்துவம்:

1. பாதிரிவேர், அவுரிவேர், நொச்சிவேர், சித்திரமூலம், கரிப்பான், செந்தொட்டிவேர், பேய்ப்புடல் வகைக்குக் கால் பலம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து உட்கொள்ள நோய்தீரும்.

2. திப்பிலி, முத்தக்காசு, பேய்ப்புடல், உலர்ந்த இஞ்சி, சீரகம், கொத்தமல்லி, கூவிளவேர், கொட்டைக்கரந்தை, சீந்தில் இவைகளை முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

3. பெருவாகை, பெருங்குமிழ், வில்வம், முன்னை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறுவழுதலை, கண்டங்கத்திரி, நெருஞ்சி, பாதிரி இவைகளின் வேர், திப்பிலி, இந்துப்பு, அரத்தை, சுக்கு, தூதுவளை, சீந்தில், மஞ்சள், கோட்டம், தேவதாரம். தண்ணீர் விட்டான் கிழங்கு, குக்கில் வகைக்கு வேளை ஒன்றுக்குக் கால் பலம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ளவும். நொச்சி, கருவேப்பிலை, குங்கிலியம் இவைகளைப் பொடித்துத் திரியாகத் திரட்டி மூக்கில் புகை பிடிக்க நோய் தீரும்.

4. சிறுதேக்கு, கடுக்காய், கோட்டம், சிறுவழுதலை, தேவதாரம், சீந்தில், திப்பிலி இவைகளை ஒரு வேளைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுத்துத் திப்பிலியை நொச்சிச் சாற்றில் உரைத்துக் கண்ணில் இட்டுத் திரிகடுகு, கோட்டம், சீரகம், மஞ்சள், மரமஞ்சள், வசம்பு இவைகளை ஓர் எடையாய் வெள்ளாட்டுச் சிறுநீர் விட்டுச் சிதைத்து மூக்கில் நசியமிடத் தீரும்.

5. செண்பகப்பூ, கடுகுரோகணி, சந்தனம், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், சுக்கு, விலாமிச்சம்வேர், வெட்டிவேர்,

நன்னாரிவேர், பற்பாடகம், மஞ்சிட்டி வகைக்குக் கால் பலம் ஒருபடித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து உள்ளுக்குக் கொடுக்க நீங்கும்.

பிரலாபச் சன்னியின் இயல்பு

உடல்நோகும்; சுரம் காயும்; குளிரும் நடுங்கும்; தாகிக்கும்; விக்கலெடுக்கும்; பிதற்றம்; பொய் பேசும்; நெஞ்சில் கபம் கட்டி இருமும்; இளைக்கும்; தலைசுழற்றும்; எழுந்துசோங்கி நிற்கும்; தள்ளாடும்; மாதர்மேல் ஆசை கொள்ளும்; ஐயோவென்ற பயமிடும்; 14 நாள் சென்றால் குணமாகிவிடும்.

மருத்துவம்:

1. நிலவேம்பு, வட்டத்திருப்பி, முத்தக்காசு, சிறுவழுதலை, காஞ்சொரி, கண்டங்கத்திரிவேர், சிறுதேக்கு, திப்பிலி இவைகளை ஒரு வேளைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்துக் கொடுக்கத்திரும்.

2. கோங்கிலவம்பட்டை, சங்கம்வேர், பேராமுட்டி, சிற்றா முட்டி, கொடிவேலிவேர், வெற்றிலைக்கொம்பு, செவ்வியம், திப்பிலி மூலம் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

கருநியாச் சன்னியின் இயல்பு

உடல் நோவும்; வெதும்பும்; தலைவலிக்கும்; தாகிக்கும்; பொய் பேசும்; தலைசுற்றும்; மூர்ச்சை; வாந்தி, விக்கல்; இருமல் காணும்; நெறிபிறழும்; திடுக்கிடச் செய்யும்; நித்திரை கொள்ளாது; 90 நாள்களில் தீரும்.

மருத்துவம்: அரத்தை, சிறுதேக்கு, திரிகடுகு, சிறுவழுதலை, முத்தக்காசு, கடுக்காய், கடுகுரோகணி, கோட்டம், வசம்பு, கடுக்காய்ப்பூ, தான்றிக்காய், நெல்லிப்பருப்பு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவிட்டுக் கொடுக்கத்திரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

சிங்கிச்சன்னியின் இயல்பு

உடல் வெதுப்பும்; நா வறளும்; தாகிக்கும்; இருமும், வயிறு பொருமும்; வாந்தி பண்ணும்; விக்கல் எடுக்கும்; இரு காதடைக்கும்; என்ன சொன்னாலும் பேசாது; பேச்சு பிதற்றும்; நித்திரை கொள்ளும்; அச்சப்பட்டு எழுந்திருக்கும்; அழும்; காதல் மீறும்; கோபமாகும்; 16 நாள்களில் குணமாகும்.

மருத்துவம்:- நிலவேம்பு, வெள்ளுள்ளி, சுக்கு, ரோகணி, பற் பாடகம், கலைக்கொம்பு, கடுக்காய், நன்னாரிவேர், தேவதாரம், இவைகளை ஒரு வேளைக்கு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒருபடித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவிட்டு இறுத்து அதில் இஞ்சிச் சுரசம், தாய்ப்பால், திப்பிலிப்பொடி கூட்டிக் கொடுக்கத் தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

விக்கநாத சன்னியின் இயல்பு

நாக்கு வெடிக்கும்; விக்கலெடுக்கும்; இருமும்; உடல் நடுங்கும்; பிதற்றும்; நாவு தடுக்கும்; காதலினால் அடிக்கடி எழுந்திருக்கும்; 12 நாள்கள் சென்றால் தீரும்.

மருத்துவம்:- நெருஞ்சில்வேர், எருக்கம்வேர், பற்பாடகம், முத்தக்காசு, திப்பலிமூலம், சுக்கு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்து கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வாதசன்னியின் இயல்பு

உடல்காயும்; வியர்க்கும்; புரளும்; பயம்தோன்றி வெளுக்கும், இருமும் உளைக்கும்; வயிறுபொறுமும்; கண் சிவக்கும்; நாவு கறுக்கும்; விழிசொருகும்; நீர் கடுக்கும்; மலம், சிறுநீர் கட்டி உடல் வலிக்கும்; இடுப்புளையும்; குளிர்ச்சி பிறக்கும்.

வாதத்தில் எடுத்த சகல சன்னி தோடத்திற்கும் வாதம் எண்பதற்கும் தைலம்

1. நத்தைச்சூரி, கிலுகிலுப்பை, வட்டத்துத்தி, வேலிப்பருத்தி, கொடிவேலி, தைவேளை, குப்பைமேனி, மாவிலிங்கு,

முருங்கை, காயா (காசாம்பு) இவைகளின் வேர்ப்பட்டை, பூநாகம், முசுறுமுட்டை, முத்தின வேப்பம்பட்டை, வசம்பு, வலம்புரிக்காய், காட்டுச்சீரகம், சிற்றரத்தை, இந்துப்பு, பெருங்காயம், பூண்டு, வாலுளுவை, சவ்வீரம், வெளிச்சிப் பிசின் வகைக்கு 4½ வராகன் எடை, மூன்று வருடம் சென்ற முற்றின கோழிக்குடல், தாம்பரக்காய், இரத்தம் இதெல்லாம் கூட்டி மைபோலரைத்து ஒரு படி வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி சிவந்த பதத்தில் வடித்து உள்ளுக்கு ஒரு பணவெடை கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

2. நூறு வருடம் சென்ற வேப்பம்பட்டை, சிவன் வேம்பு, பிரமி, துளசி, ஆடாதோடை, நொச்சி, சங்கு, கிலுகிலுப்பை, சித்திரமூலம், வேலிப்பருத்தி, நத்தைச்சூரி, மஞ்சள், சந்தனம், நன்னாரி, அதிமதுரம், கோட்டம், இந்துப்பு, வசம்பு, கடுகுரோகணி, முசுறுமுட்டை, மரமஞ்சள், சிறுதேக்கு, நல்லபாம்பு சட்டை, பூநாகம், கடுக்காய், திரிகடுகு வகைக்கு 1 கழஞ்சு இவைகளை இடித்து ஒரு படி நல்லெண்ணெயில் பதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில் தேய்த்து மாலையில் வேப்பம்பட்டைக் கொதிநீரில் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

3. வேப்பம்பட்டை, நொச்சி, ஆடாதோடை, துளசி, வேலிப் பருத்தி, பிரமி வகைக்கு 1 படிச்சாறு, பசுமூத்திரம், ½ படி, கோட்டம், அரத்தை, வசம்பு, இந்துப்பு, சிறுதேக்கு, மர மஞ்சள், திப்பிலி, கற்கடகசிங்கி, அதிமதுரம் இவைகளைத் தகரை இலைச் சாற்றில் அரைத்து ஒரு படி நல்லெண்ணெ யில் கூட்டிக் காய்ச்சி வடித்து உள்ளுக்குக் கொடுத்து உடம்பில் பூசி, நசியமிட வாதசன்னி, மகர சன்னி தீரும்.

பித்த சன்னியின் இயல்பு

ஐம்புலன்களும் நொந்து புண்போல் நோகும்; அயரும்; பதறி நடுக்கும்; மெய் சுழிக்கும்; புருவம் நெளிக்கும்; கண்ணும் வாயும் கோணும்; கண் சிறுத்து, மாதரை இச்சிக்கும்; பிதற்றும்;

புலம்பும்; நகைக்கும்; வயிறெரியும்; வாயும் இடறும்; புண்ணாகும்; குரல் கம்மும்; இச்சாபத்தியம்.

பயித்திய சன்னியின் இயல்பு

அடிக்கடி எழுந்து ஓடும்; உற்றுப் பார்க்கும்; தரையில் புரண்டு வாய்விட்டு அலறும், கொட்டாவி விடும்; சேலையை உரிந்து கிழித்து எரியும்; ஆடிப்பாடி கைகொட்டும்.

சுக சன்னியின் இயல்பு

துணியைத் துணுக்குத் துணுக்காய் கிழித்து எறியும்; உறுதி கேட்டால் வசை பேசும்; எதிர்த்தார் முகத்தில் துப்பும்; நீரையும் மலத்தையும் உண்ணும்.

பித்த பைத்தியம், சுகசன்னி, பித்தம், சுரம், வலி, பிடிப்புகட்கு முசுமுசுக்கை நெய்

முசுமுசுக்கைச்சாறு ஒரு குறுணி, பசுநெய் ஒரு படி வேப்பெண்ணெய் கால் படி, முசுறுமுட்டை, குமரி, சீந்தில்தண்டு இவைகளின் சாறு, தாய்ப்பால் வகைக்கு 1 படி, வாலுளுவை யரிசி, அதிமதுரம், தேவதாரம், சிற்றரத்தை, வெட்பாலையரிசி, மரமஞ்சள், சிறுதேக்கு, கச்சோலம், மிளகு, பூநாகம், வெளிச்சிப்பிசின், கம்பிப்பிசின், சிற்றாமுட்டி, விலாமிச்சு, வெட்டிவேர், சுக்கு, திப்பிலி வகைக்கு 2 கழஞ்சு இவைகளை வெள்ளாட்டுப்பாலில் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

சிலேத்தும சன்னியின் இயல்பு

நெஞ்சில் கபம்கட்டி இரையும்; வியர்க்கும் தோன்றாதது எல்லாம் தோன்றும்; துணை தேடும்; தண்ணீரையும் வெறுக்கும்; வற்புறுத்தும்; சோறும் மயங்கிடும்; நாவழுக்கும்; மலசலம் வெளுப்பெய்தும்.

மருத்துவம்:- அழிஞ்சில்பட்டை, செவ்வியம், பேராமுட்டி, அரத்தை, சுக்கு, கொடுவேலிவேர், பூசணிவேர் இவைகளை

வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

சகல சன்னிக்கும் பொதுமருந்து

எருக்கன், சிறுகீரை, குப்பைமேனி, பிராய் இவைகளின் வேர், முருங்கைப்பட்டை, வெள்ளைப்பூண்டு இவைகளை ஓர் எடையாய்த் தாய்ப்பாலில் அரைத்துக் குழப்பி வெய்யிலில் வைத்துச் சீலையில் ஊட்டிப் பிழிந்து உள்ளுக்குக் கொடுத்து மூக்கில் முகரத் தீரும்.

சன்னி 10-க்கும் தைலம் (பிடிநெய்)

வேப்பெண்ணெய் 1 படி, விளக்கெண்ணெய் ½ படி, நல்லெண்ணெய் கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் வெட்பூலா, துளசி, சன்னி நாயகம், வேலிப்பருத்தி, அமுக்கறா, நாய்க்கடுகு, தைவேளை, எருக்கு, சிவதை, நாரத்தை, ஆதண்டை, குப்பைமேனி, ஈசுரமூலி, பிரண்டை, நொச்சி, கொடிவேலி இவைகளின் வேர்ப்பட்டையை அரைத்து வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரிதாரம், வெங்காரம், திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், கொத்துமல்லி, கடுகு, மிளகு, வெள்ளுள்ளி, கிராம்பு, சாதிக்காய், வசம்பு, வெளிச்சிப்பிசின், பெருங்காயம், துருசு, நேர்வாளம், அக்கிராகாரம், நீரடிமுத்து, பூநாகம் வகைக்கு 1 கழஞ்சு, இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உடல் முழுதும் பூசத் தீரும்.

சந்தி சன்னியின் இயல்பு

உடல்வெம்பும்; தலைவலிக்கும்; மூர்ச்சை காணும்; அடிக்கடி எழுந்திருக்கும்; கண் சிவந்திருக்கும்; அறிவு மயங்கும்.

மருத்துவம்:- ஆடாதோடை இலை, சிறுவழுதலை, தூதுவளை, நன்னாரிவேர், சிற்றாமுட்டி, சுக்கு, பற்பாடகம், முத்தக்காசு, சந்தனம், இலுப்பைப்பூ வகைக்கு 1 பலம் இடித்து ஒருபடி நீரில் போட்டு உழக்காய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

மந்த சன்னியின் இயல்பு

உடல் காயும்; கைகால் குளிர்ந்திருக்கும்; நாவு கறுத்திருக்கும்; மலம் கட்டும்; நீர் இறங்கும்; மயக்கம் காணும்; தலை, முகம் வலிக்கும்.

மருத்துவம்:- வெட்டிவேர், விலாமிச்சு, சுக்கு, பற்பாடகம், சிறுதேக்கு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீ ரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

முகவாத சன்னியின் இயல்பு

கண்ணில், புருவத்தில், செவியில் குத்தலுண்டாகி முகத்தையும், வாயையும் ஒரு பக்கம் பற்றித் திருகிவிடும்.

மருத்துவம்:-

1. நொச்சிச்சாறு 2 படி, தழுதாழை, கழற்கொடி, முடக் கொத்தான், வீழி, வெற்றிலை, வேலிப்பருத்தி, சங்கு, கரிசாலை, மேனி, வேளை, இவைகளின் சாறு, வேப் பெண்ணெய், விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி, சிங்கி, அரத்தை, கச்சோலம், தேவதாரம், மாஞ்சில், சிறுநாகப்பூ, சதகுப்பை, கடுகுரோகணி, மஞ்சள், மஞ்சிட்டி, வசம்பு, இந்துப்பு, கடுக்காய், வெட்பாலையரிசி வகைக்கு 2 கழஞ்சு இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து ஒரு கழஞ்சு வீதம் உள்ளுக்குக் கொடுத்து உடம்பிலும் பூச முகவாத சன்னி, குடல்வாதம் தீரும்.
2. சந்தனம், மரமஞ்சள், நற்சீரகம், சுக்கு, மிளகு, வெள்ளைப் பூண்டு, மஞ்சள், இலுப்பைப் புண்ணாக்கு ஓர் எடையாய்ப் பொடித்து வெள்ளைத்துணியில் உருட்டித் திரித்து தீயில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்கத் தீரும்.
3. முற்றின தேங்காய்ப்பாலில் புளிய விதையின் மேற்றோலைப் பொடித்துப் போட்டுப் பிசைந்து ரவியில் வைத்துத் தைலத்தைப் பிழிந்து உள்ளுக்குக் கொடுத்து, மேலிலும் பூசத் தீரும்.

வெடி சன்னியின் இயல்பு

காதின் உள்ளே திரண்டெழுந்து கனத்துக் குத்தி வலி யுண்டாகிச் சேதப்படும்படி முகத்தைத் திருப்பும்; தடுமாறும்.

மருத்துவம்:- கடுக்காய், இந்துப்பு, திப்பிலி ஓர் எடையாய் வெதுப்பிப் பொடித்து திரிகடித் தூளைச் சதாவேரி கிழங்குச் சாற்றில் கொடுக்க மலம் கழியும்; அதன் பேரில் திப்பிலி, உள்ளி, அதிமதுரம் வெளிச்சிப்பிசின், செவ்வள்ளிக்கொடி, மால்தேவி, தூதுவளைவேர், நன்னாரி, நாயுருவி, பொன் னாவரை, நிலவேம்பு, மிளகு வகைக்கு 1 பலம் அரைத்து ஒரு படி வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொடுக்கத் தீரும்.

சுக சன்னியின் இயல்பு

தைலம் தேய்த்து தலைமுழுகி தயிரும் அன்னமும் புசித்திருக்கும்போதும்; வயிறு மந்தமாயிருக்கும்போதும், உடல் அலுத்திருக்கும் போதும் பெண்களுடன் உடலுறவு கொண்டாலும், கடும் உடலுறவினாலும் சுக சன்னி பிறக்கும். உடம்பு நோகும், காயும், கண் சிவக்கும், வியர்க்கும், நடுங்கும், சுருட்டி எழுந்திருக்கும், பிரமை உண்டாகும்.

மருத்துவம்:

1. கால்படி இஞ்சிச்சாற்றை முறித்து வடிகட்டி அதற்குச் சமமாகத் தாய்ப்பால் கூட்டி அதில் முசுறுமுட்டை, பூநாகம், திப்பிலி இவைகளைத் தனித்தனியே வெதுப்பிப் பொடித்த தூள் வகைக்கு ஒரு வராகன் எடை போட்டுக் கொடுக்கவும். இவ்விதம் 6 வேளை கொடுக்கத் தீரும்.
2. பூநாகம் ஒரு எலுமிச்சங்காய் அளவு, சீரகம் ஒரு வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் அரைத்து வெந்நீரில் கரைத்துக் கொடுக்கத் தீரும்.
3. பழம்புளி, மிளகு, சுக்கு, வெள்ளுள்ளி வகைக்கு 1 பலம் இவைகளை மைபோல் அரைத்து மூன்று உருண்டை செய்து 3 வேளை கொடுக்கத் தீரும்.

கபாலச் சன்னியின் இயல்பு

பிடரியைத் திருப்பக்கூடாத வலிகாணும்; தலையிலும் காதிலும் ஈட்டியால் குத்தினாற்போல் குத்தும்; தினவெடுக்கும்; புத்தியைக் கெடுக்கும்; திமிரேறும்; முகம், மூக்கு, கண் சிறுத்துக் காட்டும்; வியர்வை, வெப்பு, அயர்வு, சோர்வு, நடுக்கம், கைகளில் காந்தல் காணும்.

மருத்துவம்: அரைப்படி வேப்பெண்ணெயில் வெள்ளுள்ளி, வசம்பு, திப்பிலி இவைகளை அரைத்து வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு; கருநொச்சி, நாய்வேளை; ஊமத்தை, துராய்ச்சமூலம் இவைகளை மாங்காய் அளவு அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையில் தலையிலும், உடம்பிலும் தேய்த்து மாலையில் அரப்பிட்டு வெந்நீரில் தலைமுழுக்குச் செய்ய கபாலச் சன்னி தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

புறவீக்க நோயின் இயல்பு

அடுத்தடுத்து எடுத்துக் குத்தும்; அதிகமாய் விரைக்கும்; வியர்க்கும்; நாவு தடுமாறும்; பல் கிட்டும்; நெஞ்சடைக்கும்; தேகத்தைப் பிறகே வளைத்துத் தள்ளும்.

மருத்துவம்:-

1. இரசம், கெந்தகம், வெள்ளுள்ளி, மிளகு, சேராங்கொட்டை வகைக்குக் கால் பலம், பசுவின் வெண்ணெயில் பிசைந்துத் துணியில் ஊட்டித் திரித்துக் கதிரில் கோர்த்துக் தீயில் கொளுத்த தைலம் வடியும். அதில் ஒரு பணவெடை உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் தடவத் தீரும்.
2. இஞ்சிச்சாறு, தாய்ப்பால், தேன் இவைகளைச் சமமாய்க் கலந்து மேற்படி நோய்கண்டவுடன் கொடுக்க நீங்கும். மிஞ்சினால் கொஞ்சம் வேப்பெண்ணெயாவது அல்லது மேற்படி தைலத்தை விட்டுக் கொடுக்க நீங்கும்.
3. கீழ்க்காய்நெல்லிச்சாறு, இலுப்பைச்சாறு, தேன், தாய்ப் பால் இவைகள் வகைக்குக் கால் ஆழாக்கு வீதம் கலந்து

அதில் வெள்ளுள்ளி, காந்தம், சுக்கு, வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

4. அழிஞ்சில் இலை, நொச்சிப்பட்டை 10 பலம், இடித்து 4 படித் தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அதில் கையாந்தகரைச்சாறு ஒரு படி, நல்லெண்ணெய் ஒரு படி கூடவிட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து, மேலிலும் தடவ நீங்கும்.

சன்னி 13–க்கும் வலிப்பு, உட்குத்து, புறவீச்சுக்குத் தைலம்

1. சுக்கு, மிளகு, ஓமம் வகைக்கு 1 பலம், வசம்பு ½ பலம், திப்பிலி, சேராங்கொட்டை, வெளிச்சிப்பிசின் வகைக்கு 1 பலம், வெள்ளுள்ளி 1 பலம், மயிலிறகு 4 பலம், தேவதாரம் 3 கழஞ்சு இவைகளை நன்றாய்ப் பொடித்து 3 படி வேப்பெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி அளவு புளி தள்ளிக் கொடுக்க நீங்கும்.

2. புங்கு, புன்னை, எள், வேம்பு, இலுப்பை இவைகளின் எண்ணெயை ஒன்றாய்க்கலந்து இரசம், கெந்தகம், மனோசிலை, இலிங்கம், தாளகம் வகைக்கு 2 கழஞ்சு, பழங்காடியில் அரைத்துத் துணியில் ஊட்டி உலர்த்தித் திரித்துக் கதிரில் கோர்த்து மேற்படி எண்ணெய்களை விட்டு சுடர்த் தைலமிறக்கிப் பண எடை உள்ளுக்குக் கொடுத்து, மேலிலும் பூசத் தீரும்.

3. ஐம்பது கோழிமுட்டைத் தைலம், 10 பலம் வெள்ளுள்ளியில் எடுத்த தைலம், வேப்பெண்ணெய் 1 படி, பூநாகமும், சன்னிநாயகமும் சேர்ந்து இறக்கின குழித் தைலம் ஆழாக்கு, முருங்கைப்பட்டை, சிவன்வேம்பு, எருக்கம்வேர் இம்மூன்றும் சேர்ந்து இறக்கின குழித்தைலம் கால் படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் நல்லபாம்பு கண்டம், வசம்பு வகைக்கு 1 பலம் பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு பண எடை உள்ளுக்குக் கொடுத்து பதைப்புகளுக்கு மேலே பூசி ஒற்றடம் போட நீங்கும்.

உட்குத்து, புறவீச்சு, உடல் புகுந்து உடம்பு கடுப்புக்கும், சர்வாங்க வாதத்திற்கும் தைலம்

நல்லெண்ணெய், பசுவின்நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய் வகைக்கு 1 படி, பெருமரத்துவேர், நன்னாரிவேர், வெள்ளெருக்கம் வேர், அழிஞ்சில் வேர் இவைகளின் பட்டை, வெள்ளுள்ளி, வசம்பு, மிளகு, மஞ்சள் வகைக்கு 2 பலம் அரைத்துப் போட்டுப் பதத்தில் வடித்து ஒரு கரண்டி கொடுத்து மேற்படி கடுகைத் துணியில் சுருட்டிப் புகை பிடிக்க நீங்கும்.

சன்னி தோடம் வாதத்திற்குக் குடிநீர்

குறிஞ்சாவேர், முருங்கைப்பட்டை, உகாய்ப்பட்டை, தழுதாழை, நொச்சி, பேய்ப்புடல், குப்பைமேனி, பெருமரத்துப் பட்டை, தைவேளை, கவுதும்பை, தகரைவேர், சிற்றரத்தை, சுக்கு, சதகுப்பை, அக்கிராகாரம், வாய்விளங்கம், திப்பிலி, செவ்வியம், சிறுகாஞ்சொரி, வால்மிளகு, ஓமம் இவைகள் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து நான்கு படித் தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து இறுத்து அதில் இலிங்க மாத்திரையை உரைத்துக் கொடுக்கத் தீரும்.

தனுர்வாதம், புறவீச்சு, இசிவுவாதம், பல்கிட்டல், சன்னிக்கு மேல்பூசும் தைலம்

இரசம், அரிதாரம், எலிப்பல்பாடாணம், சாதிலிங்கம், சிங்கி, நாவிக்கிழங்கு, மனோசிலை, கெந்தகம் இவைகளை ஓர் எடையாய்க் காடியில் அரைத்துத் துணியில் ஊட்டி உலர்த்தி, வேப்பெண்ணெயில் சுடர்த்தைலமிறக்கி உடம்பில்பூசி, உள்ளுக்குச் சடாட்சர செந்தூரம் கொடுக்கத் தீரும்.

பிடரிவலி, புறவீச்சு நோயின் இயல்பு

தலை கனக்கும்; பிடரி வலிக்கும்; உடலில் குத்தும்; திமிர் மயக்கம்; உழலை காணும்.

மருத்துவம்:- நல்லெண்ணெய், பசுநெய், வேப்பெண்ணெய் சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு அரைப்படி கலந்து

இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் நத்தைச்சூரி, நாயுருவி, சத்திச்சாரணை, கொடிவேலி, வீழி, தண்டை, வெள்வேல், எருக்கு, தூதுவளை, முல்லை, ஈசுரமூலி, வில்வம், சேமங் கிழங்கு, நன்னாரி, ஓரிலைத்தாமரை இவைகளின்வேர், புங்கம் கொட்டை, உள்ளி, முத்தக்காசு வகைக்கு 1 பலம், மஞ்சள், வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, ஓமம், வெங்காரம், கெந்தகம், நேர்வாளம், கோட்டம், அதிமதுரம், சர்க்கரைவள்ளி, வெளிச்சிப்பிசின் வகைக்கு 1 கழஞ்சு இவைகளை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் பூசி, மாலையில் வேப்பம்பட்டைக் கொதிநீர் வைத்து வேது பிடிக்க மேற்கண்ட நோய்கள் தீரும்.

உட்குத்துநோயின் இயல்பு

உடம்பு காயும்; வியர்க்கும்; பல்கிட்டும்; உடல் விரைக்கும்; உள்ளே குத்தும்; நாவறட்சி காணும்; தாகிக்கும்; வாயுகீழ் நோக்கிச் சத்தத்துடன் பிரியும்; சாப்பாடு செல்லாது.

மருத்துவம்:– அரைப்படி கடுகை இடித்து ஒரு துணியில் கட்டி வேப்பெண்ணெயில் நனைத்து நெருப்பில் வெதுப்பித் தைலத்தைப் பிழிந்து உச்சி, பிடரி, கழுத்து, நாடி, பொருத்து முதலான இடங்களில் போட்டுக் காதிலும், மூக்கிலும் விட்டு மேற்படி பொட்டணத்தை மேற்படி உறுப்புகளில் ஒற்றடம் செய்ய உட்குத்து, புறவீச்சு, சுரம் தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

உட்புற வீச்சுக்கு மருந்து

குப்பைமேனி, பொன்னாவரை, சிறுபுள்ளடி இவைகளை ஓர் எடையாய், வேப்பிலையில் உப்பு போட்டு இடித்துப் பிழிந்த சாற்றால் அரைத்து ஒரு எலுமிச்சங்காய் அளவு ஒரு நாளைக்கு மூன்று முறை கொடுக்கத் தீரும்.

மேற்படி நோய்களுக்கு மேல்பூச்சுத் தைலம்

நாயுருவி, பேராமுட்டி, தைவேளை, குப்பைமேனி, வேலிப் பருத்தி, சரியிடை, அவுரி, கொடுவேலி, புனல் முருங்கை, சத்திச்சாரணை, வீழி, சிவன்வேம்பு, வாதமடக்கி, நொச்சி

இவைகளின் வேர், கரிப்பான், சன்னிநாயகம், முடக்கொத்தான் இவைகளின் சமூலம் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து, அரைப்படி வேப்பெண்ணெயில் போட்டுச் சுக்கு, மிளகு, ஓமம், திப்பிலி, வெளிச்சிப்பிசின், மரமஞ்சள், தேவதாரம், வசம்பு, வலம்புரிக்காய், மனோசிலை, அரிதாரம், கெந்தகம், ஊசிக்காந்தம் வகைக்கு 1 வராகன் எடை, வெள்ளுள்ளி 2 பலம், பூநாகம் ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில் தளமிட்டுக் காதில் விட்டு பஞ்சால் அடைத்து வைக்கத் தீரும்.

உட்குத்து, புறவீச்சு, அடைப்பு, இருமல், இளைப்புக்கு மருந்து

முருங்கை வேர்ப்பட்டைச்சாறு, உள்ளிச்சாறு, தேன் இவைகளை ஓர் எடையாய் ஒன்றாய்க் கலந்து அதில் திப்பிலியும் இந்துப்பும் வெதுப்பிப் பொடித்த தூள் வகைக்கு 1 வராகன் எடை போட்டுக் கலந்து கொடுக்கத் தீரும்.

சன்னி வலிப்பு, இழுப்புக்குத் தைலம்

1. தாளகம் 1 பலம், மனோசிலை, கௌரி வகைக்கு 1 பலம், சவ்வீரநீர், வெடியுப்பு, கல்லுப்பு, நவாச்சாரம் வகைக்கு அரைப்பலம் இவைகளைத் தூய்மைசெய்து முட்டை மஞ்சள் கருவாலாட்டி வில்லை தட்டி உலர்த்திக் கொடுக்க சன்னி வலிப்புத் தீரும்.
2. மாவிலிங்கக்காய், புனல்முருங்கைக்காய், விளாவேர், நொச்சிவேர், எருக்கம்வேர், சென்னகரப்பட்டை, வாத மடக்கி வேர், கருவாப்பட்டை வகைக்கு 1 பலம், மயில்பீலி 2 பலம், எட்டிப்பழம் குறுணி, இவைகளை எல்லாம் இடித்து ஒரு பாண்டத்தில் இட்டு அதில் வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், எள்ளெண்ணெய் வகைக்கு 1 படி விட்டு அரைத்துப் பிசறி மேல்மூடி வாயில் பத்துச் சீலைசெய்து பானைத்தூரில் 6, 7 தமரிட்டுக் கலசம் வைத்து புகை போகாமல் சந்துவாயில் முன்போல் சீலைமண் செய்து கெசபுடமாய்க் குழித் தைலமிறக்கி உடம்பில் பூசிவரத் தீரும்.

சன்னிக்கு மேல் பூச்சுமருந்து

1. வெள்ளைப்பூண்டு 2 பலம், வசம்பு 2 பலம், எலிப்பால் பாடாணம் 2 வராகன் எடை, கரியில் சேர்த்து வேப்பெண் ணெய் சுடர்த் தைலமிறக்கி உடலெங்கும் தடவத் தீரும்.

2. வசம்பு, உள்ளி, கடுக்காய், சாரணைவேர், பூநாகம் இவைகளை ஓர் எடையாய் வேப்பெண்ணெயில் காய்ச்சி கொஞ்சம் உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் தடவத் தீரும்.

சன்னி 13-க்கும், வாதம் 70-க்கும் மேல்தடவ விடமுட்டித் தைலம் (பிடிநெய்)

எட்டிப்பழச்சாறு, நல்லெண்ணெய், பால், நெய், சிற்றா மணக்கெண்ணெய் வகைக்கு ஒரு பதக்கு, அமுக்கரா, நொச்சி, சிவதை, புளி, மாவிலிங்கு, தழுதாழை, குன்றிமணி, கழற்கொடி, முன்னை, சிற்றாமணக்கு இவைகளின் இலை, எருக்கம்பூ, இஞ்சி, எலுமிச்சம்பழம், முருங்கைப்பட்டை, கொடிக்கள்ளி இவைகளின் சாறு வகைக்கு ஒரு குறுணி பாண்டத்தில் இட்டு ஏலம், சந்தனம், சதகுப்பை, தகரம், மதுரம், இந்துப்பு, கொடிவேலி, திப்பிலி, அரத்தை, இலவங்கம், தேவதாரம், திப்பிலிமூலம், சடாமாஞ்சில், எட்டிவிதை, விராலிவேர் வகைக்கு 6 பலம் இடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில் தடவத் தீரும்.

சன்னி, வலிப்பு, சயித்தியம், வாதசூலைக்கு ஐந்தெண்ணெய்த் தைலம்

வேப்பெண்ணெய் கால் படி, புங்கெண்ணெய், குருக் கெண்ணெய், புன்னையெண்ணெய், இலுப்பெண்ணெய் வகைக்கு ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து அதில், சவ்வீரம் 2 ½ வராகன் எடை, சூடன் 6 வராகன் எடை பொடித்துப் போட்டு ஒரு சாமம் மைபோல அரைத்துக் கொள்ளவும். 20 கோழி முட்டை, வெந்நீரில் போட்டு அவித்துத் தோல் வெடித்தவுடன் எடுத்து மஞ்சள் கருவை ஒரு சட்டியில்

போட்டுக் கருகும்படி இரும்புக்கரண்டியினால் கிண்டித் தைலத்தைப் பிழிந்துகொள்ளவும். அப்பால் மேற்படி கோழி முட்டைத் தோல்களையும், ஒரு படி நீர்மேல்நெருப்புச் சமூலத்தையும் அரைத்து எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். பிறகு, இம்மூவகைகளையும் ஒன்றாய்க் கலந்து பளிங்குக் குப்பியில் அடைத்து வைத்துக்கொண்டு ஒரு பணவெடை வீதம் ஆறு வேளை கொடுத்து மேற்படி எண்ணெயைக் கையில் தொட்டு நெருப்பில் வெதுப்பி உடம் பெங்கும் முறுக்கித் தடவி வரவும். புளி, புகையிலை, கரப்பான் உணவுப்பண்டங்களை நீக்கவும். மேலில்மட்டும் தடவினால் பத்தியமில்லை.

குறிப்பு:- குருக்கெண்ணெய் என்பது, குடியோட்டிப் பூண்டின் விதையிலிருந்து இறக்கும் எண்ணெயாகும்.

சன்னி, வலிப்புதோடம், பக்கவாதம், நரம்புத் திமிர்வாதம், வாய்வுக்கு விடமுட்டித் தைலம் (பிடிநெய்)

எட்டிப்பூச்சாறு 8 படி, முருங்கைவேர், வேலிப்பருத்தி, எலுமிச்சம், சிற்றாமணக்கிலை, வெதுப்படக்கிலை, புளியிலை, காயிலை, இஞ்சி, மருதோன்றி, சங்குங்குப்பி, வாதமடக்கி, முடக்கொத்தான், இவைகளின் சாறு வகைக்கு 4 படி, அதிமதுரம், கோட்டம், வெள்ளுள்ளி, தேவதாரம், வசம்பு, இந்துப்பு, கொடிவேலி வேர், சதகுப்பை, ஓமம், திரிகடுகு, கடுக்காய் வகைக்கு அரைப்பலம், இவைகளை மேற்படி சாற்றில் அரைத்துப்போட்டு 4 படி பசும்பால், 4 படி நெய், 4 படி சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் 8 படி ஒன்றாய்க் கலந்து எரித்துப் பதத்தில் வடித்து மேலில் பூசத்தீரும்.

சன்னி புறவீச்சுக்குத் தைலம்

கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள், வசம்பு, ஓமம், மனோசிலை, வெள்ளைப்பாடாணம், கெவுரிபாடாணம், கெந்தகம், வீரம் இவைகளை மடற்கள்ளிப்பால் விட்டு அரைத்துப் பின்பு வேப்பெண்ணெயில் அரைத்து வெள்ளைத் துணியில் ஊட்டிச் சுடர்த்தைலம் இறக்கி ஒரு பண எடை உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத்தீரும். புகையிலை தள்ளவும்.

சன்னி சுரத்திற்கு மதுராதித்த தைலம்

1. அதிமதுரம், வேப்பம்பட்டை, விராலித்தோல், வேப்பம்பிசின், திராய்வேர், ஊமத்தன் வேர், குன்றி வேர், மேனிவேர், இந்துப்பு வகைக்கு 1 வராகன் எடை, ஆடாதோடைச் சாற்றில் அரைத்து 1 படி நல்லெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சி இறுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

சன்னிநோய்கட்கு கண்ணிலிடும் மருந்துகள்

1. மருக்காரைப் பழத்தின் விதையில் இருக்கிற பிசின் ஒரு பயறு அளவு எடுத்து வெள்ளைச்சாரணை, வேளை, வெற்றிலை இவைகளை கசக்கிச்சாறு பிழிந்து இதில் அந்தப் பிசினை அரைத்துக் கண்ணில் போடத் தீரும்.
2. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், பெருங் காயம் சமமாய்க் கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துக் கயிறு செய்து வெந்நீரிலாவது நொச்சிச் சாற்றிலாவது உரைத்துக் கண்ணில் இடத் தீரும்.
3. இலிங்கம், பெருங்காயம், திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, இவைகளை ஓர் எடையாய் வெற்றிலைமேல் சத்திச் சாரணை, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றில் வகைக்கு ஒரு சாமம் ஆட்டிக் கயிறுசெய்து சன்னி சுர தோடத்திற்குத் தாய்ப்பாலிலாவது மேற்படி சாறுகளில் எதிலாவது உரைத்துக் கண்ணில் போடத்தீரும்.
4. திரிகடுகு, வெள்ளைக்காக்கணான் வேர் இவைகளைச் சமமாய்த் தாய்ப்பாலில் அரைத்துக் கயிறு செய்து வெற்றிலைச் சாற்றில் உரைத்துக் கண்ணில்தீட்ட சன்னி போய் நஞ்சும் ஓடும்.
5. சுக்கு, கடுக்காய், திப்பிலி, சாதிக்காய், வாய்விளங்கம், சாரணைவேர், காசிக்கட்டி, மனோசிலை, துத்தம், மிளகு, தேற்றாவேர் வகைக்கு 2 வராகன் எடை, மேற்படி இருவகை வேர்களையும், பாலில் அவித்துத் தூய்மை செய்து சேர்த்து எலுமிச்சம்பழம், குப்பைமேனி, கையாந்தரை இவைகளின் சாற்றில் மைபோல் அரைத்துக்

கயிறு செய்து கொண்டு சன்னிதோடம், நேத்திர வாயுவுக்கு எலுமிச்சம்பழச்சாற்றிலும் வெள்ளெழுத்திற்குத் தாய்ப்பாலிலும் உரைத்துப்போடத் தீரும்.

6. திப்பிலி, துருசு, துத்தம், கிராம்பு, சுக்கு, திப்பிலி மூலம் புறாவெச்சம், குக்கல் (நாய்) வெண்மலம், கோழி வெண்மலம், மேனிவேர், சாரணைவேர், சாதிலிங்கம் வகைக்கு 2 கழஞ்சு, தூய்மை செய்த செம்பு அரப்பொடு 12 கழஞ்சு இவைகளை எலுமிச்சம், மேனி, தும்பை, வெற்றிலை இவைகளின் சாற்றில் வகைக்கு ஒரு சாமம் ஆட்டிக் கயிறு செய்து 13 வித சன்னிக்கும், நஞ்சுகளுக்கும் மேனிச்சாற்றிலாவது, வெற்றிலைச்சாற்றிலாவது, முருங்கைப்பூச்சாற்றிலாவது, வலிப்புக்கு; இஞ்சிச்சாற்றிலாவது, பித்தப்பிதற்றலுக்கு; தும்பைச்சாற்றிலாவது, உரைத்துக் கண்ணில் தீட்டத் தீரும்.

7. புங்கு, சங்கு, புடல், அத்தி, அகத்தி, பேய்ப்பீர்க்கு, பேய்ச்சுரை, காரை, தில்லை, மகிழ், புல்லாமணக்கு, மிளகு, நேர்வாளம் இவைகளின் வித்துக்களை எலுமிச்சம்பழச் சாற்றிலும் வெள்ளாட்டுப் பாலிலும்ஆட்டிக் கயிறு செய்து வெற்றிலைச்சாற்றில் உரைத்துக் கண்ணிலிடச் சன்னி, குமரகண்டன் வலிப்பு, மயக்கம், நஞ்சு, பேய்ச்சுரம், பைத்தியம் நீங்கும்.

8. திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம் இவைகளைப் பசுவின் வெண்ணெயில் அரைத்துக் கண்ணிலிட நீங்கும்.

9. மேற்சொல்லிய கலிக்கங்களினால் கண் சிவந்து கடுப்புக் கண்டால் சீரகத்தைப் பொடித்துக் கற்றாழஞ் சோற்றில் போட்டுப் பிசைந்து துணியில் முடிந்து கண்ணில் பிழிய நீங்கும். கண்ணில் வேதனையானால் தயிருஞ் சோறும் வைத்துக் கட்டவும்.

சன்னி வலிப்புக்கு மூக்குறிஞ்சல் மருந்து (ஆக்கிராணம்)

ஒரு முட்டைச் (எருமுட்டை) சாம்பலில் எருக்கம்பாலை ஏழு தடவை பிசறி உலர்த்தி அதற்கு நான்கில் ஒரு பங்கு மிளகை வறுத்துப் பொடித்துக் கூட்டி மூக்கில் உறிஞ்ச நீங்கும்.

குறிப்பு:- முட்டை ஓட்டை அவித்துச் சவ்வு நீக்கி எரித்துச் சாம்பலாக்கி அச்சாம்பலைச் சேர்த்துச் செய்ய மேலான பயனைத் தரும்.

சன்னி வாதத்திற்கு ஒற்றடம்

மருத்துவம்:-

1. கொப்பரைத்தேங்காய் 5, வெள்ளைப்பூண்டு 2 பலம், வேப்பமுத்து அரைப்படி இவைகளை ஒன்றாய் இடித்துப் பொட்டலம் கட்டி வேப்பெண்ணெயைக் கொதிக்கவைத்து அதில் அந்தப் பொட்டலத்தைத் தைத்து வைத்து வெப்பத்துடன் உடல் முழுவதும் ஒற்றடம் செய்ய நீங்கும்.
2. இலுப்பைப் பிண்ணாக்கு, மஞ்சள், எருக்கம்பூ இவைகளை ஓர் எடையாய் வறுத்துத் துணியில் முடிந்த சூட்டுடன் ஒற்றடம் செய்ய நீங்கும்.

சன்னிக்குப் புகை

அரிதாரம், குங்கிலியம், சாதிலிங்கம், நவாச்சாரம், மிளகு, கருஞ்சீரகம், கார்க்கோலரிசி, சாம்பிராணி வகைக்கு 1 வராகன் எடை இவைகளைக் குப்பைமேனிச்சாற்றில் அரைத்துத் துணியில் ஊட்டித் திரித்து வெப்பெண்ணெயில் இறுத்து வைத்து தீயில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்க நீங்கும்.

சன்னி தலைவலிக்குப் புகை

பெருங்காயம், ஓமம், சுக்கு, சாம்பிராணி, மிளகு, காரம், சிற்றரத்தை, கழற்பருப்பு, சீரகம், இலிங்கம் இவைகளை ஓர் எடையாய் எருக்கம் பாலில் அரைத்துத் துணியில் தடவி திரியுருட்டி மூக்கில் புகை பிடிக்க நீங்கும்.

சன்னி பதின்மூன்றுக்கும், புறவீச்சு உட்குத்துக்கும் இலிங்க மாத்திரை

துருசு, பொரிகாரம், துத்தம் வகைக்கு 3 வராகன் எடை இவைகளை எருக்கம்பால் விட்டு அரைத்து எட்டு வராகன் எடை இலிங்கத்தைக் கவசஞ் செய்து அப்பால் புற்று மண்ணை அரைத்துக் கவசஞ் செய்து உலர்த்தி இரண்டு படி

மணலுக்கு மத்தியில் வைத்து எட்டெருவில் புடம்போடவும். இவ்விதம் மூன்று முறை புடம் போட்டுக் கவசம் நீக்கி இலிங்கத்தைப் பசு மூத்திரத்தில் கழுவி அதனுடனே தூய்மை செய்து பொரித்த வெங்காரம் 3 வராகன் எடை கூடக் கூட்டித் தாய்ப்பாலில் அரைத்து ஒரு சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து கொண்டு இஞ்சிச் சாற்றில் ஒரு உருண்டை வீதம் ஆறு வேளை கொடுக்க நீங்கும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

13–வித சன்னிகளுக்கும், நச்சு சன்னிக்கும், தோடத்திற்கும், கௌரி மாத்திரை

தூய்மை செய்த கௌரி, பூரம், கஞ்சாங்கோரைக் கிழங்கு, வெடியுப்பு, அதிமதுரம், அக்கிராகாரம், கற்கடகசிங்கி வகைக்கு ஒரு வராகன் எடை எலுமிச்சம்பழச் சாற்றில் ஒரு சாமமும், இஞ்சிச் சாற்றில் 4 சாமமும், தாய்ப்பாலில் 2 சாமமும் அரைத்துக் கொடுக்க 13 விதமான சன்னிகளும் நீங்கும். நச்சு சன்னி தோடத்திற்கு அதற்குரிய துணை மருந்துகளில் கொடுக்க நீங்கும்.

சீத சன்னிக்கு அறிவானந்த வயிர மாத்திரை

வெங்காரம், அயபற்பம், அரிதாரம், கருவங்கபற்பம், வெள்வங்கபற்பம், இரசம், சாதிலிங்கம், தாம்பிரபற்பம் இவைகளை ஓர் எடையாய்த் திரிபலைக்குடிநீரில் 4 சாமம் ஆட்டி உலர்த்திக் குப்பியில் போட்டுத் தீபம்போல் மூன்று சாமம் எரித்துக் கல்வத்தில் கொட்டி ஒரு சாமம் எலுமிச்சம்பழச் சாற்றிலாட்டிக் குன்றிபோல் உருண்டை செய்து துணைமருந்துடன் ஒரு உருண்டை வீதம் கொடுக்கத் தீரும். பத்தியம்: தினைக்கஞ்சி கொடுக்கவும்.

கண்டகச் சன்னிக்கு மாத்திரை

கெந்தகம், சூதபற்பம், வெங்காரம், வெள்வங்கபற்பம், கருவங்கபற்பம், லிங்கம் இவைகளை ஓர் எடையாய் திரிபலைக் குடிநீரில் அரைத்து உலர்த்திக் குப்பியில் அடைத்து ஒரு சாமம் எரித்து ஆறவைத்துக் கல்வத்தில் இட்டு வெள்ளாட்டுப் பித்தால் அரைத்துக் குன்றிபோல் உருண்டைசெய்து இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும்.

சன்னி முதலானதற்கு ஆனந்த வயிரவன்

நாவிக்கிழங்கு, சூதம், மனோசிலை, கெந்தகம், சாதிலிங்கம், வெங்காரம் இவைகளைச் சமமாய் நிம்பப்பழச் சாற்றில் அரைத்து சிறுபயறு அளவு உருண்டைசெய்து சன்னிக்குத் தாய்ப்பாலிலும், குளிர் சுரத்திற்கு இஞ்சிச் சாற்றிலும் கொடுக்க நிவர்த்தியாகும்.

நற்சீரகம், கருஞ்சீரகம், அசமதாகம், திப்பிலி, கிராம்பு, வசுவாசி, அதிவிடையம், மனோசிலை, பெருங்காயம், அதிமதுரம், வாய்விளங்கம், வேர்க்கொம்பு இவைகளை ஓர் எடையாய் கழற்சி இலைச்சாற்றில் மைபோல அரைத்துக் குன்றிபோல் உருண்டை செய்து மேற்படி சாற்றில் ஒரு உருண்டை கொடுக்கச் சன்னி நிவர்த்தியாகும். நொச்சிச் சாற்றில் இட தலைவலி தீரும்.

மிருத்துவாத சன்னி முதலான வாத சன்னிகளுக்கு மாத்திரை

முத்து, அதிமதுரம், பவழம், கலைக்கொம்பு, திரிகடுகு, முந்திரிப்பழம், தாம்பிரபற்பம், திரிபலை, வசம்பு, பூநாகம், லிங்கம், முசுறுமுட்டை, கோரோசனை, உருத்திராட்சம், நல்லபாம்புக் கண்டம், இரசபற்பம், கருநாவிக்கிழங்கு, கருங்குங்கிலியம், வெள்ளைக்குங்கிலியம், சூடன், பூலாவேர்ப் பட்டை, செஞ் சந்தனம், வெளிச்சிப்பிசின் வகைக்கு 1 கழஞ்சு, இவைகளை முட்டைத் தைலத்திலும், எலுமிச்சம் பழச்சாற்றிலும் அரைத்துக் குன்றிமணி அளவு உருண்டை செய்து தாய்ப்பாலிலாவது இஞ் சிச் சாற்றிலாவது ஓர் உருண்டையை உரைத்துக் கொடுக்கத் தீரும்.

13-வித சன்னிகளுக்கு காலனந்த வயிரவன்

இரசபற்பம், சொர்ணபற்பம் வகைக்கு 1 கழஞ்சு, சங்கு, கெந்தகம், முத்து வகைக்கு 2 கழஞ்சு, வெண்காரம் அரைக் கழஞ்சு, கொடிவேலி வேர்க்குடிநீரில் இரண்டு நாள் விடாமல் அரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி ஒரு பாண்டத்தில் குறுணி உப்பிட்டு அதன் மத்தியில் வைத்து மேலும் குறுணி

உப்புப் போட்டு நான்கு சாமம் எரித்து நன்றாய் ஆறின பின் எடுத்து நான்கு குன்றி எடை பற்பமும், பத்து மிளகையும் பத்து திப்பிலியையும் வெதுப்பிப் பொடித்த தூளும், ஆழாக்கு இஞ்சிச் சாற்றில் மூன்று நாள்கள் கொடுக்கத் தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

13 வித சன்னிகளுக்கு மாத்திரை

காந்தம், சூதம், கெந்தி, மனோசிலை, செம்பு பற்பம், லிங்கம் வகைக்கு 10 பலம், பெருங்காயம் 10 பலம், வெள்ளுள்ளி 1 பலம் இவைகளைக் குமரிச்சாற்றில் மூன்று நாள் ஆட்டி குப்பியில் அடைத்து வாயை மாக்கல்லால் மூடி வலுவாய்ச் சீலைமண் செய்து மணல்மேல் வைத்து முத்தீயும் மூன்று நாள் எரித்து ஆறவிட்டு எடுக்கச் செந்தூரமாயிருக்கும். அதில் திப்பிலிமூலம், சாதிபத்திரி, கடுகுரோகணி வகைக்குக் கால் பலம், சுத்தித்த வீரங்கூட்டி வெண் கருவாலாட்டிக் குன்றிபோல் குளிகை செய்து முள்ளிச்சாற்றில் கொடுக்க 13–வித சன்னிகளும் தீரும்.

சன்னி சுரதோடத்திற்கு இரச செந்தூரம்

வாலைரசம் 7 கழஞ்சு, கெந்தகம் 10 கழஞ்சு ஒன்றாய்த் தொந்தித்து, குப்பியில் அடைத்து ஏழு சீலைமண் செய்து ஒரு சட்டியில் 4 விரற்கடை மணல் கொட்டி, அதன் மேல் குப்பியை வைத்து, கழுத்துவரை மணல்கொட்டி மூடி முத்தீயும் 6 சாமம் எரித்து ஆற்றி எடுக்கச் செந்தூரமாகும். அதில் ஒரு பண எடை இஞ்சிச்சாற்றில் இடத் தீரும்.

சகல சன்னி சுரம், தோடம், வலிப்பு, இளைப்பு, ஈளைக்குப் பூபதி மாத்திரை

உலோகம், காந்தம், தாம்பிரம், அப்பிரகம், வெள்ளி, சொர்ணம், வங்கம், வெண்கலம், பித்தளை இவைகளின் பற்பங்கள் ஓர் எடையாய்க் குமரிச் சாற்றிலும் நான்கு சாமம் ஆட்டி நிழலில் உலர்த்தி முன்போல் குப்பிக்கேற்றி 12 சாமம் எரித்துத் தீயாற்றி எடுத்து வைத்துக்கொண்டு திரிகடுகுப் பொடியும், தேனும் கூட்டிக் கலந்து அதில் ஒரு பண எடை வைத்துக் கொடுக்கத் தீரும்.

மருத்துணவு:- *கரும்பு, இளநீர், சர்க்கரை, பால், தயிர், மோர் கூட்டிப் பத்தியம் கொள்ளலாம். உப்பு, புளி தள்ளவும்.*

காக்கை வலிப்பு நோயின் இயல்பு

பித்தம் உடம்பெங்கும் பாய்ந்து, சித்தம் கலங்கி உணர்வற்று மயங்கி நாக்கை, உதட்டை, மூக்கை, கண்ணை, புருவத்தைச் சேர்த்திழுத்து வலிப்புக்கண்டு உறுப்புகள் உதறி அலமலக்கக் கீழே தள்ளும்; வாயில் வெண்ணுரை தள்ளும்; மேல் சுவாசம் வாங்கும்.

மருத்துவம்:-

1. *காட்டாமணக்கு, பிரமி, நிலவாகை, நொச்சி, ஆடா தோடை, சங்கங்குப்பி, வெள்ளறுகு, அவுரி, சீந்தில், முடக்கொத்தான், முசுமுசுக்கை, பொடுதலை, புளியிலை, கருநொச்சி, இவைகளின் இலைச்சாறு, எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், இஞ்சி இவைகளின் சாறு வகைக்குக் கால் படி, மிளகு, திப்பிலி, செவ்வியம் சித்திரமூலம், தேசாவரம், நற்சீரகம், ஓமம், வாய்விளங்கம், கொத்தமல்லி, அதிமதுரம், கோட்டம், சுக்கு, காந்தம், கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள் வகைக்கு 5 வராகன் எடை, கிட்டம், அரப்பொடி, பூண்டு, கடுக்காய் வகைக்கு 1 பலம், பேய்ப்புடல், 2 பலம், சாதிக்காய், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை, சாதிபத்திரி 1 வராகன் எடை அரைத்துப்போட்டுக் காய்ச்சிக் குறுகி வருகிற சமயத்தில் சர்க்கரை 30 வராகன் எடை, தேன் கால் படி கூடவிட்டுக் கிண்டி இளகம் செய்து கொட்டைப்பாக்கு அளவு ஒரு மண்டலம் இருபொழுது தேனில் கலந்து கொடுக்க நீங்கும்.*

2. *நல்லெண்ணெய் 1 படி, எலுமிச்சம்பழச்சாறு 2 படி ஒரு பாண்டத்தில் இட்டு எரித்து நீர் வற்றி வரும்பொழுது பூநாகம் ஒரு தேங்காய் அளவுகூடப்போட்டு பதம் வரும்பொழுது வேப்பன் விதைப்பருப்பு, குங்கிலியம், மஞ் சள், கம்பிப்பிசின், கொன்றைப் பிசின் வகைக்கு 3 வராகன் எடை பொடித்துப்போட்டு உள்ளுக்கு ஒரு கரண்டி அளவு கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.*

3. தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, சிறுதேக்கு, கருஞ்சீரகம், கடுகுரோகணி, கடுகு, ஓமம், தேவதாரம், ஆனைத்திப்பிலி, அதிவிடயம் வகைக்கு 10 பலம் இவைகளைக் குழித் தைலம் இறக்கி உள்ளுக்கு ஒரு கரண்டி அளவு கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

4. முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், பொன்முசுட்டை வேர், முசுமுசுக்கைவேர், பேய்ப்புடல், இலுப்பைப்பூ இவைகளைச் சமமாகக் கூட்டி இதற்கு நான்கில் ஒரு பாகம் பவளம், கெந்தகம், அரிதாரம் ஓர் எடையாய் சேர்த்து வலியன் பித்திலும், எலுமிச்சம்பழச் சாற்றிலும் அரைத்துக் குன்றி எடை உருண்டை செய்து ஒரு வேளைக்கு ஒரு உருண்டை தேனிலாவது சர்க்கரையிலாவது கொடுக்கத் தீரும்.

5. காட்டுக் காகத்தை அறுத்து இறகு, ஈரல், குடல், தலை, கால் போக்கி வயிற்றைக்கீறி, சுக்கு, மிளகு, சீரகம், கல்லுப்பு, இந்துப்பு, பொட்டிலுப்பு இவைகளை வகைக்கு 2 வராகன் எடை பொடித்து மேற்படி காகத்தின் வயிற்றில் வைத்து தைத்து ஒரு படி சாராயத்தில் போட்டு வெந்தபின்பு மருந்தை எடுத்து மைபோல் அரைத்துப் பாக்களவு தினமும் சாப்பிட்டுவந்தால் நோய் குணமடையும். உப்பு, புளி, தள்ளவும்.

குதிரை வலிப்பின் இயல்பு

கண்ணும், புருவமும் கதித்திருக்கும், காலும் கையும் ஒரு பக்கம் இழுத்து வலிப்பு காணும்; வாயில் வெண்மையான நுரைதள்ளும்; விழிகண்ணைப் பார்த்து நிற்கும்; உறுப்புகள் தீப் போற் காந்தும்; உடல் படபடத்து நடுங்கும்; நெஞ்சில் கபம் கட்டும்.

மருத்துவம்:

1. வெங்காரம், உள்ளி, நேர்வாளம், மிளகு, சுக்கு, திப்பிலி, கடுகு, பெருங்காயம், நற்சீரகம், வெந்தயம், கெந்தகம், வசம்பு, வெளிச்சிப்பிசின், படிகாரம், ஓமம், துருசுச்

செந்தூரம், குதிரைவாலி, அவுரி, குருந்து, நொச்சி, ஆடாதோடை, குருந்தொட்டி, முருங்கை, தூதுவளை, வெள்வேல்,சாரடை, கொடிவேலி இவைகளின் வேர்ப் பட்டை வகைக்கு 1/4 பலம் (8 ¾ கிராம்) வீதம் இடித்து ஒரு படி வேப்பெண்ணெயில் போட்டு வடித்து உள்ளுக்கு ஒரு காசெடை கொடுத்து மேலிலும் பூச குணமாகும்.

2. சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, வெள்ளுள்ளி, நேர்வாளப்பருப்பு, வசம்பு, இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச்சாற்றில் ஊற வைத்து அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றில் அரைத்துக் கண்ணில்விட குதிரைவலிப்பு, சன்னிவாத வலிப்பு குணமாகும்.

குமரகண்ட வலிப்பின் இயல்பு

கண்ணும் வாயும் கோணும்; காலும் கையும் ஒரு பக்கம் விட்டுவிட்டு வலிப்பெடுக்கும்; சுரங்காயும்; தலை வலிக்கும்; எமக்கோட்டானைப் போல் வருத்தப்படுத்தும்; மூர்ச்சை காணும்.

பொன்முசுட்டைவேர், தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு, இரசம், கெந்தகம் இவைகளை ஒரு நிறையாய் வில்வ இலைச் சாற்றால் அரைத்து மிளகு அளவு உருட்டி நிழலில் உலர்த்திக்கொண்டு மிளகுதக்காளிச்சாற்றில் கொடுக்கத் தீரும்.

முயல்கண்ட வலிப்பின் இயல்பு

வாயால் மண்ணைக் கவ்வும்; நுரைதள்ளும்; விழிமட்டும் சோர்ந்து நட்டமாய் நிற்கும்; துள்ளத்துள்ளவலிக்கும்; தோள், மார்பு வலித்துக்கூட்டிச் சுருக்கு விளக்கும்; கோபம், துயரம் மிகும்.

மருத்துவம்:- முயல் இரத்தம், வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு அரைப்படி, பெருங்காயம், ஆனைத் திப்பிலி, கல்மதம், குரோசாணி ஓமம், புனலித்தண்டு, அழிஞ்சில், நொச்சிலிவேர், தித்திப்புத்திரிப்பழம் இவைகளை ஓர் எடையாய்ச் சிதைத்துப் போட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

உட்குத்து, புறவீச்சு, காக்கை வலிப்பு, குமரகண்டம், முயல்கண்டன், குதிரைவலிப்பு முதலான வலிப்புகளுக்கும் சன்னிகட்கும் தைலம்

1. சுக்கு 1 கழஞ்சு சிதைத்து நான்கு படித் தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்து அதில் இஞ்சிச் சாறு அரைப்படி, அண்டத்தைலம், வெள்ளுள்ளித் தைலம். வேப்பெண்ணெய் வகைக்கு ¼ படி, மயிற்பீலி, ஆகாசத்தூள், பூநாகம், கீழ்க்காய் நெல்லிவேர் வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்கும் கொடுத்து, மேலிலும் பூசி, காதில் அடைத்து, மூக்கிலும் முகர மேற்படி நோய்கள் தீரும்.

2. காயம், உள்ளி, வசம்பு, காரம், சவுக்காரம், கரியபோளம், மஞ்சள், சித்திரமூலம், மாவிலிங்கப்பட்டை, வாகைப்பட்டை, பெருமரத்துப்பட்டை, சிறுகுறிஞ்சாவேர், எருக்கம்வேர், புங்கம்வேர், மல்லிகை வேர், சதுரக்கள்ளிவேர், மரமஞ்சள், நெரியாசிப்பால் வகைக்கு ¼ பலம் வீதம் இடித்து 2 படி ஐந்து எண்ணெயில் போட்டு அண்டத்தைலம் அரைக்கால் படி கூட விட்டுக் காய்ச்சி வடித்து உடம்பிற் பூச மேற்படி நோய்கள் தீரும்.

மேற்படி நோய்கட்கு நசியம்

அவுரி, வசம்பு, உள்ளி இவைகளை ஒன்றாய்ச் சிதைத்து மூக்கில் முகரச் செய்ய மேற்படி நோய்கள் மாறும்.

முயல்கண்ட வலிப்பு, காக்கை வலிப்பு, குமரகண்ட வலிப்புக்கு மருந்து

ஒட்டடை 2 பலம் (70 கிராம்) கழற்சிப்பருப்பு 1 பலம் (35 கிராம்) கடுக்காய் அரைப்பலம் (17 ½ கிராம்), எள்ளு அரைப் பலம் (17 ½ கிராம்) இவைகளை அரைத்துக் கழற்சி அளவு வேப்பெண்ணெயிலாவது விளக்கெண்ணெயிலாவது கொடுக்க, பத்தியம் வெந்நீரும் அன்னமும் கொடுக்கத் தீரும்.

காக்கை வலிப்பு, முயல்வலிப்பு, குமரகண்ட வலிப்பு, முகவாத சன்னி, சன்னி தோடம், உட்குத்து, புறவீச்சு வாதம், வாயு, பாரிச வாயு, பக்கவாதம், இளம்பிள்ளை வாதம், அண்ட வாதம், மண்டைக்குத்துவடி, பீனசத்திற்கு மருந்து

நல்லெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், இலுப் பெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், வகைக்கு 8 படி தழுதாழை, காட்டாமணக்கு, நாயுருவி, தைவேளை, குப்பைமேனி, மாவிலங்கு, வேம்பு, புங்கு, வெண்ணொச்சி, தூதுவளை, கண்டங்கத்திரிக்காய், குருத்து, கருவாகை, சங்கு, கொடிவேலி, நிலக்கடம்பு, சடைச்சிரண்டு, அவுரி, மருக்காரை, எருக்கு, புன்முருங்கை, வெள்ளைச்சாரடை, மருதோன்றி, காட்டுமல்லிகை, ஊமத்து, உத்தாமணி, கழற்கொடி, மிளகரணை, திரிகள்ளி, குமிழ், அமுக்கரா, பிரப்பங்கிழங்கு, குன்றி, எட்டி, வெட்பாலை, கடம்பு, சிறுசின்னி, இலுப்பைவேர், புல்லுருவி, ஆயில் இவைகளின் வேர் வகைக்கு 10 பலம் (350 கிராம்) இடித்து 8 மரக்கால் தண்ணீரில் போட்டு வற்றவைத்த குடிநீர் 6 படி, பெரும்பூசணிக்காய்ச் சாறு 6 படி ஒன்றாய்க் கலந்து அதில் திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, ஓமம், அரத்தை, தாளிசபத்திரி, சுக்கு, கண்டந்திப்பிலி, குரோசாணி ஓமம், கருஞ்சீரகம், கிராம்பு, குக்கில் சதகுப்பை, கடலிராஞ்சிப்பழம், சிறுநாகப்பூ, சடாமாஞ்சில் வகைக்கு அரைப்பலம் (17 ½ கிராம்) வீதம் வெள்ளாட்டு நீரில் அரைத்துப்போட்டு மயிலிறகு அரைப்பலம் (17 ½ கிராம்) கூடப்போட்டு எடுத்துப் பதத்தில் வடித்து அதில் சாதிலிங்கம், கஸ்தூரி, புகையூரல் வகைக்கு 2 கழஞ்சு எடுத்துப் பொடித்து அண்டத்தைலம், வெள்ளுள்ளித் தைலம், முசுறுமுட்டைத் தைலம் வகைக்குக் கால்படி விட்டு விரலில் ஒரு பண எடை வீதம் உள்ளுக்கும் கொடுத்து மேலிலும் பூச நோய் தீரும். புளி, புகையிலை தள்ளவும். உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

குழந்தைகளுக்குக்காணும் வாயு, குமரகண்ட வலிப்புக்கு எண்ணெய்

ஒரு படி வேப்பெண்ணெயில் நெய்க்கொட்டான் பழம், மயிலிறகு, வெள்ளுள்ளி, வசம்பு வகைக்கு 1 பலம் (35 கிராம்) தட்டிப்போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்கும் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

(சன்னிப் படலம் முற்றும்.)

எருவாய் நோய்ப் படலம்

அதாவது எருவாய் வழியால் கனலேறி துவாரப்பட்டு ஒன்பதுவிதமான மூலத்தையும் பற்பல நோயையும் பிறப்பித்தலாம்.

எருவாய் நோய் வரும் (மூலம்) காரணம்

காயத்தில் மூலங்கண்ட விதங் கேளு
பாயொத்த தினமே பரிந்தே யடக்கினும்
மாயை மயக்க மலத்தை யடக்கினும்
ஒயிற்ற குண்டலிக்குட் புகும் வாயுவே.

எருவாய் நோயின் விவரம்

உள்எருவாய் நோய் (உள்மூலம்), புறஎருவாய் நோய் (புறமூலம்), குருதி எருவாய்நோய் (இரத்தமூலம்), சீழ் எருவாய் நோய் (சீழ் மூலம்), எருவாய்ப்பாண்டு (மூலப்பாண்டு), எருவாய் முளை (முளைமூலம்), வளி, அழல், ஐய எருவாய் நோய்கள் ஆகியனவாம்.

உள்எருவாய்நோயின் இயல்பு (உள்மூலம்)

அபானத்துள் தசைபோல் வளர்ந்திருக்கும்; மலத்தை இறுக்கும், மந்திக்கும்; இரத்தம் மலத்தில் விழும்; இடையில் வயிறு வலிக்கும்; பலங்கெடும்; உடல் வறளும்.

மருத்துவம்:-

1. *நன்னாரி, முக்காவேளை, சீதாசெங்கழுநீர், ஓரிலைத் தாமரை, மருள், காட்டுக்கரணை, வெருகன்கிழங்கு இவை களின் கிழங்கு வகைக்கு 3 பலம் (105 கிராம்) மிளகு, திப்பிலி, நற்சீரகம், அக்கிராகாரம், ஓமம், கருஞ்சீரகம், இலவங்கம், வாய்விளங்கம், கொத்தமல்லி, குரோசாணி, ஓமம், வகைக்கு 5 வராகன் எடை, சாதிக்காய், கிராம்பு*

வகைக்கு 2 வராகன் எடை, சாதிபத்திரி 1 வராகன் எடை, இலவங்கப் பட்டை 1 பலம் (35 கிராம்) இவைகளை இடித்துத் தூள் செய்துகொண்டு வேளை ஒன்றிற்கு திரிகடி அளவு இரண்டு வேளை, 12 நாள் உட்கொள்ள உள்மூலம், கிராணி, மூலக்கடுப்புத் தீரும். பத்தியம்; உப்பு, புளி தள்ளவும்.

2. திப்பிலி கால் பலம் (8 ¾ கிராம்) அரைத்து அரைக்கால்படி கோதுமைமாவில் கலந்து திருகுகள்ளியை நறுக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு வேடுகட்டி அதன்மேல், மேற்படி மாவை வைத்துப் பிட்டவித்து நல்லெண்ணெயும் வெல்லமும் கலந்து 7 நாள் சாப்பிட நோய் தீரும்.

3. முள்ளிவேர், பிரண்டைவேர், கற்றாழைவேர், கடுக்காய், சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு, இவைகளை ஓர் எடையாய் அரைத்துப் புளித்த மோரில் கரைத்துக் கொடுக்க நோய் தீரும்.

புறஎருவாய் நோயின் இயல்பு (புறமூலம்)

எலும்பில் அனலேறி அபானவாயிற் கத்திபோல் சதை வளர்ந்து உள்ளும் புறமுமாயிருக்கும்; அபானங் கடுக்கும்; தினவெடுக்கும்; இரத்தம் விழும்.

மருத்துவம்:- காட்டுக்கருணை, நிலப்பனை, புளியமடல், வெருகன்கிழங்கு, மணிப்பிரண்டை, அப்பைக்கோவை, அமுக்குரா, மருள் இவைகளின் கிழங்கு வகைக்கு 5 பலம் (175 கிராம்), சித்திரமூலம் 2 பலம் (70 கிராம்) மிளகு, திப்பிலி; தேசாவரம், ஓமம், கடுகுரோகணி, இந்துப்பு, கல்லுப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, கருஞ்சீரகம், காந்தம், அதிமதுரம், கோட்டம், வசம்பு, ஓமம் ஒவ்வொன்றும் வகைக்கு 5 வராகன் எடை, பெருங்காயம் 4 வராகன் எடை, சாதிக்காய், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை, சாதிபத்திரி 1 வராகன் எடை, வெள்ளைப் பூண்டு 1 பலம் (35 கிராம்), இவைகளை இடித்துத் தூள் செய்துகொண்டு வேளையொன்றுக்குத் திரிகடி அளவு

இருநேரமும் அரைமண்டலம் கொள்ள உட்புறமுலமுளை கரையும். சகல மூல வாயுவுந் தீரும். பத்தியம்: உப்பு, புளி தள்ளவும்

சீழ் எருவாய் நோயின் இயல்பு (சீழ்மூலம்)

உடம்பில் வெப்பம் அதிகரித்ததால் அடிவயிறு வலித்து நொந்து புண்ணாகிச் சீழ் தோன்றி மலத்துடன் சிறுத்து இறங்கும். அபானங்கடுக்கும், மயக்கம்காணும், வாயு அதிகரிக்கும்.

வேறு: மலம் கழியும்போது அபானமெரிந்து சீதமும், இரத்தமும் விழும். நாபியைச் சுற்றி வலிக்கும்.

மருத்துவம்:-

1. பசுவின் நெய் கால்படி, தென்னம்பூச்சாறு அரைப் படி ஒன்றாய்க் கலந்து மாதுளம் பழ ஓடு, மருட்கிழங்கு, காட்டுக்கரணைக்கிழங்கு, காறாக்கருணைகிழங்கு, செங்கத்தாரிப்பட்டை, ஆவாரம் வேர்ப்பட்டை, புளிய விதைத்தோல், ஆவாரையரிசி, பாக்கு ஒவ்வொன்றும் வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு, மிளகு, அதிமதுரம், கோட்டம், நற்சீரகம், விளாம்பிசின், காசுக்கட்டி, வால்மிளகு வகைக்கு 6 வராகன் எடை, ஏலம் 1 வராகன் எடை, இலவங்கப்பட்டை 1 பலம் (35 கிராம்), கிராம்பு, சாதிக்காய் வகைக்கு 2 வராகன் எடை, சாதிபத்திரி 1 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுச் சர்க்கரை 1 பலம் (35 கிராம்), ஆகிய இவைகளை ஒன்றாய்க் கலந்து இளகம் செய்து நாழிகை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு 28 நாள் உட்கொள்ள இரத்த மூலம், சீழ்மூலம், கடுப்புவாயு தீரும். பத்தியம்: உப்பு, புளிப்பு தள்ளவும்.
2. ஈருள்ளி 5 பலம் (175 கிராம்) சிறுக அரிந்து பன்றி நெய்யில் பொரித்து 5 நாள் கொடுக்கச் சீழ் மூலம் தீரும்.
3. காரெள்ளு, கடுகு, திப்பிலி, சுக்கு ஒவ்வொன்றும் வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவைகளை வெதுப்பித் தூள் செய்து திரிகடி அளவு வெந்நீரில் 21 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

குருதி எருவாய் (இரத்த மூலம்) நோய் இயல்பு

1. *பித்தம் உடம்பெங்கும் பாய்தலால் உடம்பு வெளுத்து ஊதும், மந்தமாகி இரத்தம் உருண்டு திரண்டு வயிற்றில் தங்கி பிதிர்போல் மிக வாழும்; தொப்புளைச் சுற்றி வலி காணும்; மேல்மூச்சு, இளைப்பு தோன்றும்; அடிவயிறு இரையும்; மலம் சிக்கும், அன்னம் செல்லாது; உப்பையும் புளிப்பையும் மிக விரும்பும்; இது இரத்த மூலபாண்டென்று சொல்லப்படும்.*

மருத்துவம்:

1. *கையாந்தகரை, பொடுதலை, புளியிலை, நீர்முள்ளி, நொச்சி, முசுமுசுக்கை, முடக்கொத்தான், சங்கங்குப்பி, பிரமி, நெல்லிக்காய், காட்டுமல்லிகை, எலுமிச்சம்பழம், இஞ்சி இவைகளின் சாறு வகைக்குக் கால்படி ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, செவ்வியம், தேவதாரம், ஓமம், வாய்விளங்கம், கொத்தமல்லி, நற்சீரகம், காந்தம், அரத்தை வகைக்கு 5 வராகன் எடை, அரப்பொடி, கிட்டம் வகைக்கு 1 வராகன் எடை, சாதிக்காய், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை, ஏலம், கோட்டம், குரோசாணி ஓமம், அதிமதுரம் வகைக்கு 3 வராகன் எடை, சாதிபத்திரி, கால் வராகன் எடை, இலவங்கப்பட்டை, கடுக்காய்த்தோல் வகைக்கு 1 பலம், அரைத்துப்போட்டு, குறுகிவரும்போது பசுவின் நெய், தேன் வகைக்குக் கால் படி, சர்க்கரை 3 பலம் இவைகளைக் கூட்டி இளகம் செய்துகொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு இரண்டு வேளையும் தேனில் குழைத்து உட்கொள்ள இரத்தமூலப்பாண்டு, பித்தப்பாண்டு, எச்சப்பாண்டு, மஞ்சள்நோய், சோகை, குன்மம், வாயு தீரும். கைப்பு, புளிப்பு தள்ளவும்.*

2. *ஈருள்ளிச்சாறு, பசுவின்பால் வகைக்கு அரைப்படி, பசுவின் நெய் கால் படி, அதிமதுரம் 1 பலம், இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் மேற்படி பால்விட்டு அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி நாழியொன்றுக்கு ஒரு கரண்டி வீதம்*

இரண்டுநாள் சாப்பிட சீழ்மூலம், இரத்தமூலம் தீரும். பத்தியம் உப்பு, புளி தள்ளவும்.

3. திரிகடுகு, கோட்டம் ஓர் எடையாய்த் தூள்செய்து அதற்கு நிகர் வெண்மைச் சக்கரையும், முந்திரிப்பழமும் கூட்டி பசுவின் நெய் விட்டு இளகம் செய்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு இரண்டு நாள் கொடுக்கத் தீரும்.

4. நாயுருவி இலையைக் கொட்டைப் பாக்களவு அரைத்து நல்லெண்ணெயில் குழைத்து 7 நாட்களுக்கு இரண்டு வேளை கொடுத்தால் நோய் குணமாகும். இவ்விரண்டும் இச்சாபத்தியம்.

5. வாழைப்பூவைச் சிதைத்து கால்படி சாறு பிழிந்து அதில் விலாமிச்சம் பாக்களவு அரைத்துப் போட்டுக் கொடுக்க இரத்தக் கடுப்பு உடனே தீரும்.

6. ஒரு பீங்கான் பாத்திரத்தில் வெள்ளைச் சர்க்கரை அரைப் பலம், பசுவின் நெய் 1 படி (மாகாணி) எலுமிச்சம் பழச்சாறு அரைபடி, வீதம் விட்டு மெழுகாகும் வரை அரைத்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட இரத்தம் விழுதல் தீரும்.

7. சுக்கு, திப்பிலி, ஓமம், தேசாவரம், அதிவிடையம், காயம், பொரிகாரம், கோட்டம், சாதிக்காய், கிராம்பு, இந்துப்பு, குரோசாணி, ஓமம், வெந்தயம், விலாமிச்சம், வசம்பு சுட்ட சாம்பல், அபின் வகைக்கு 2 வராகன் எடை, காட்டுக்கருணை, கறிக்கருணை, புளிக்கருணை, வெருகன்கிழங்கு, மருள், கொடிவேலி இவைகளின் கிழங்கு வகைக்கு 3 பலம், வெள்ளுள்ளி ஒரு பலம் இடித்துச் சூரணம் செய்து ஒரு சட்டியில் அரைப்படி பசுவின்பாலும், அரைப்படி ஈருள்ளிச் சாறும் கலந்து விட்டு வேடு கட்டி அதன்மேல் மேற்படி சூரணத்தை வைத்துப் பிட்டவித்து உலர்த்தி அதில் கருப்புக் கட்டி ஒரு பலம் கூட்டிவைத்துக் கொண்டு தேனில் திரிகடி அளவு சாப்பிட்டுவர நோய் நீங்கும்.

எருவாய் முளை நோய்க்கு மருந்து (மூலமுளை)

1. தூய்மை செய்த கருவங்கம் கால் பலம், இரதம் 2 வராகன் எடை இவற்றை ஒன்றாய் உருக்கி குஞ்சு பொரித்த அண்டத்தோலை சவ்வு நீக்கி 7 வராகன் எடை கூடச் சேர்த்துப் பொடித்து ஒரு குகையில் இட்டுச் சில்லுப்போட்டு மூடி, ஐந்து சீலைமண் செய்து உலையில் வைத்து அழுக ஊதி, ஆறவிட்டு எடுத்தால் சுண்ணமாகும். அந்தச் சுண்ணத்துடன் 1 வராகன் எடை, எருமைப் பச்சைப்பால் புரை குத்திக் கடைந்த வெண்ணெய் 3 வராகன் எடை கூட்டிக் களிம்புபோல் அரைத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு புறமூலத்தின் முளையில் இரண்டு நாழிகைக்கு ஒரு முறை தடவிவர கரைந்துவிடும். உள் மூலத்தை வெளியில் இழுத்துச் சற்றுக்கீறி மேற்படி களிம்பைச் சாடையாய் தடவ, முளை அற்று விழும். பிறகு தயிரும் சோறும் கட்டவும்.
2. மிருதார்சிங்கி 20 வராகன் எடை, சினக்காரம் 10 வராகன் எடை இவற்றை ஒன்றாய்ப் பொடித்து ஒரு திராவகப் பானையில் போட்டு சீலைமண் வலுவாய்ச்செய்து திராவகம் இறக்கி, கோழிஇறகில் தொட்டு, மூல முளையில் தடவி எருமைத் தயிரும், சோறும் வைத்துக்கட்ட 3 அல்லது 7 நாள்களில் விழுந்து போகும்.
3. கழுதை நீரில் பூநீரைக் கரைத்து அதில் வெள்ளைப் பாடாணத்தைத் துலாந்திரங்கட்டி எரித்து எடுத்து, இரும்புக் கரண்டியில் வைத்து வெள்ளெருக்கம் பாலை சுருக்குக் கொடுத்து இரண்டு ஓலைக் கனம் மேற்படி சாற்றில் வண்டல் கட்டியின் பேரில் பிடித்தபின் எடுத்துப் பழுத்து உதிர்ந்த பின் சுட்ட கொடிக்கள்ளிச்சாம்பலை 2 படி ஒரு சட்டியில் கொட்டி அதன் மத்தியில் மேற்படி கட்டியை வைத்து மேல்சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து காடாக்கினியாய் 2 சாமம் எரித்து ஆறவிட்டு எடுக்கப் பற்பமாகும். அதை 2 பாசிப்பயறு எடை பசுவின் வெண்ணெயில் மூன்று பொழுது உட்கொள்ள மூலமுளை, பவுத்திரம் தீரும். இச்சாபத்தியம்.

4. பூரம், தாளகம், மனோசிலை, வெங்காரம், கல்நார் வகைக்கு 1 பலம் இவைகளைக்கொடிகள்ளிப்பாலால் ஒருநாள் ஆட்டிக் குகையில் வைத்து சீலைமண்செய்து, குக்குடப்புடம் போட்டு, ஆறினபின் எடுத்துப் பசுவின்பால், கள்ளிப்பால், கற்றாழம்பால், எலுமிச்சம்பழச்சாறு, கரிசாலைச்சாறு இவைகளில் வகைக்கு ஒவ்வொரு சாமம் ஆட்டித் தூதுளங்காய்ப் போல் உருண்டை செய்து உலர்த்தி ஒரு நாழிகைக்கு ஓர் உருண்டை வீதம் சர்க்கரையில் வைத்து ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள சகல மூலமுளையும் அற்றுப்போகும்.

5. எருக்கம் பஞ்செடுத்துக் கயிறு திரித்து அதன்மேல் சேங் கொட்டைப் பாலைத்தடவி மூலமுளையில் கட்டிவைக்க வேர்அற்று விழுந்தவுடன் நொச்சிஇலையை வதக்கி ஒற்றடம் செய்து தயிரும், சோறும் வைத்துக்கட்டத் தீரும்.

6. எருமைக்கொம்பைச்செதுக்கி, குகையிலிட்டு ஊதிக் கரியாக்கி பசுவின் வெண்ணையில் அரைத்து மூலமுளையில் 3 நாள் பூசி வைக்க வேரற்று விழும். பிரண்டையும், மாவிலிங்கியும் வெதுப்பி ஒற்றடம் செய்யத் தீரும்.

7. புரசு மேல் புல்லுருவியை உலர்த்தித் தூள் செய்து திரிகடி அளவு 3 நாள் உட்கொள்ள மூலமுளை வெளியில் வரும். வந்தவுடன் நீர்போக்கின எருமைத் தயிரை மூலத்தில் ஆறு நாள் கட்ட வேர் இற்றுப்போகும்.

8. வேப்பமுத்தின் பருப்பு அரைத்தது ஒரு எலுமிச்சங்காய் அளவு சற்றே வெதுப்பி வில்லைதட்டி மூன்றுநாள் எரு வாயில் வைத்துக் கட்ட புழு விழும். வேர் (மூலம்) கரையும்.

9. பேய்ப்பீர்க்கன் விதை, துருசு, கொடிவேலி வேர்ப்பட்டை வகைக்கு ஒரு பண எடை எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து பசுவின் வெண்ணெயும் தேனும் சேர்த்துக் குழைத்து மூலமுளையில் 3 நாள் தடவி, வெந்நீரில் தலைமுழுக்குச் செய்ய வேர் கரையும்.

10. செங்கொடிவேலிவேர், மஞ்சள், பொன்னரிதாரம் இவைகளைச் சமமாய்ப் பொடிசெய்து வேரில் தடவக் கரையும்.

11. எருக்கம்பட்டை, வெள்ளுள்ளி வகைக்குக் கால் பலம் மை போல அரைத்து ஒரு நாழிக்கு ஒரு பாக்களவு எருமைத் தயிரில் 5 நாள் கொடுக்க மூலவேர் அடியோடு அற்று விழும்.

12. வெடிச்சுண்ணாம்பு, துருசு வகைக்கு 2 வராகன் எடை, இவற்றில் பசுநெய் விட்டரைத்துத் தேனில் குழைத்து 3 நாள் தடவி 4ஆம் நாள் ஆதண்டையிலையைக் காடியில் அரைத்துக் கழுவத் தீரும்.

13. பொரிகாரம், வெங்காரம், சவுக்காரம் இவைகளைச் சமமாய் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து அபான வேரில் தடவக் கரைந்துபோகும். சாமைத் தவிட்டை அனலில் தூவிப் புகை பிடிக்கவும்.

14. முள்ளங்கிக் கிழங்கும், பிண்ணாக்கு கீரையும் அவித்துத் தின்று வர அபானவேர் விழுந்து போகும்.

15. பழைய மாங்கொட்டைப் பருப்பு 4 பலம், மணத்தக்காளிச் சாற்றால் அரைத்து உலர்த்தித் தூள் செய்து பாக்களவு எருமைத்தயிர்த் தண்ணீரில் 6 நாள்கள் கொடுக்க அபானவேர் கரைந்து விழும். நீர்மேல் நெருப்பையும், பாம்புச் சட்டையையும் இடித்து நெருப்பில் தூவிப் புகை பிடிக்கவும்.

16. முத்தெருக்கஞ்செவி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், விலாமிச்சம் வகைக்கு 1 பலம் தூள் செய்து பாக்களவு இரண்டு வேளை 7 நாள்கள் வெந்நீரில் உள்ளுக்குக் கொடுத்து மேற்படி சரக்குகளை எருக்கம்பாலில் மைபோல் அரைத்து அபான வேரில் தடவ விழுந்து போகும்.

17. கௌரிபாடாணத்தையும், சுண்ணாம்பையும் ஓர் எடையாய்க் கலந்து ஒரு நாளைக்கு மூன்று தடவை வேரில் பூச வேர் கரைந்து போகும். விளக்கெண்ணெயில் துணியை

நனைத்துப் போட எரிச்சல், இரத்தம் வடிதல் மாறும். அதன் பேரில் வேப்பம்பட்டையையும், ஒதியம்பட்டையையும் தட்டி நல்லெண்ணெயில் அரைத்துப் புண்ணின்மேல் போட்டுவர புண் ஆறும்.

18. பெருங்காயம், படிகாரம், தேங்காய் கொட்டாங்குச்சிக் கரி ஓர் எடையாய் எலுமிச்சம்பழச்சாற்றில் மைபோல் அரைத்து உலர்த்தி அப்பால் மேற்படி கொட்டாங்குச்சித் தார் (கொட்டாங்குச்சித்தார் = கொட்டாங்குச்சிக் குழித் தைலம் என்றறிக) விட்டுக் குழம்புபோல் அரைத்து அபான வேரில் பூச 3 நாள்களில் கரைந்து போகும்.

19. மைக்கொன்றைக் கொழுந்தில் விளக்கெண்ணெய் தெளித்து வறுத்துத் துணியில் வைத்து ஒற்றடம்செய்து இளஞ் சூடாயிருக்கிற பதத்தில் வைத்துக்கட்ட வேர் கருக்கும்.

20. ஆவாரங்கொழுந்தையும் அதுபோல் செய்தால் வேர் கருகும். கடுப்பும் தீரும்.

21. ஆவாரங்கொழுந்து பூ, பட்டை, அறுகம்வேர் இவைகளை ஓர் எடையாய் நிழலில் உலர்த்தி, அதை இடித்துத்தூள் செய்து கொண்டு திரிகடி அளவு பசுவின் நெய்யில் ஒரு மண்டலம் உட்கொள்ள உள் அபானவேர் கரையும். இச்சாபத்தியம்.

22. ஆகாசத்தாமரை இலையை உலர்த்திப் பொடித்து வடி கட்டின தூளும், கருங்குருவையரிசி மாவும் ஒன்றாய்க் கலந்து பிட்டவித்து நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து உள்ளுக்குக் கொடுத்து மாதுளங்கொழுந்தைக் காடியில் அவித்துக் கட்டவேர் விழும்.

23. வட்ட துத்தியிலையைத் தண்ணீர்விட்டு நன்றாய்ப் பிசைந்து பிழிந்து அதில் நல்லெண்ணெயாவது, பசுவின் நெய்யாவது விட்டுக் கலக்கி மூன்றுநாள் கொடுக்க வேர் விழும்.

24. எருமைத் தயிரில் நீர்ப்பூலா இலையை அரைத்துக் கலக்கி 6 நாள் கொடுக்க மூலமுளை கரைந்து விழும்.

25. புளியங்கொட்டையின் மேல்தோலை எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் பாலில் ஐந்து நாள் கொடுக்கத் தீரும்.

26. கல்மதத்தைப் பசுவின் வெண்ணெயில் அரைத்து விரலில் தடவி ஆசன வாயில் தடவ மூலமுளை நீராய்க் கரைந்து விடும்.

சகல எருவாய் நோய்க்கும் பொதுமருந்து (மூலம்)

1. கொடுவேலி, மிளகரணை, கோங்கு, (கோங்கில என்னும் சரக்கொன்றை,) மா இவைகளின் வேர்ப்பட்டை, சுக்கு, முத்தக்காசு, கடுக்காய், கடுக்காய்ப்பூ, புளியாரை, சிற்றரத்தை, குங்குமப்பூ, சாதிக்காய் பிரண்டை இவை எல்லாவற்றையும் உலர்த்தி இடித்துத் தூள்செய்து அதற்குச் சமமாய் சர்க்கரை கூட்டி ஒரு மண்டலம் உட்கொள்ளத் தீரும்.

2. முப்பிரண்டை, கார்த்திகைக்கிழங்கு, காந்தன் கருணைக் கிழங்கு, காட்டுக்கருணைக்கிழங்கு, சித்திரமூலம், அமிர்த வள்ளிக் கிழங்கு, மாதுளைவேர், அப்பைக்கிழங்கு இவைகளைப் பாலில் அவித்த சத்து வகைக்கு அரைப்பலம், கோவை, முசுமுசுக்கை ஆல், அத்தி, அரசு, மணிப் பிரண்டை, அகத்தி, மணத்தக்காளி, மாதுளை இவைகளின் வித்து வகைக்கு அரைப்பலம், கிராம்பு, சாதிபத்திரி, காயம், தக்கோலம், மாசிக்காய், அதிவிடயம், ஓமம், திரிகடுகு, சீரகம், வாலுளுவையரிசி, அபின், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அரத்தை வகைக்கு அரை வராகன் எடை இவைகளை வெதுப்பிப் பொடித்துக் கொண்டு ஒரு சட்டியில் இரண்டு படி பால்விட்டு, சர்க்கரை, கற்கண்டு வகைக்கு 4 பலம் பொடித்துப் போட்டுப் பாகு செய்து அதில் மேற்படி தூளைக் கிண்டி கால் படி நெய்விட்டுக் கிண்டி இளகம் செய்து கொண்டு கொட்டைப்பாக்கு அளவு இளகத்தில் ஒரு வராகன்எடை, பவழ பற்பம், வைத்துச் சாப்பிட்டு சுடுநீர் குடித்து வரவும், இவ்விதம் 14 நாள் சாப்பிடத்தீரும்.

3. கற்றாழஞ்சருகு, முத்தக்காசு, கருணைக் கிழங்கு, வெருகன் கிழங்கு, சுக்கு, சித்திரமூலம், மருட்கிழங்கு, கடுக்காய், பிரண்டை, கொன்றைப்பட்டை, புளியமடத்திக் கிழங்கு, காட்டுக் கருணைக்கிழங்கு இவைகளை ஓர் எடையாய் பாலில் அவித்து உலர்த்தி இடித்துத் தூள் செய்து சர்க்கரை கலந்து ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள தீரும்.

4. கடம்பு, நொச்சி, பருத்தி, கள்ளி இவைகளின் இலைகளைச் சமமாய் இடித்து 4 படித் தண்ணீரில் போட்டு மூடி சீலைமண் செய்து மேல்சட்டியில் துவாரமிட்டுத் துணியால் அடைத்துப் பாதித் தண்ணீர் வற்றினபின் துவாரத்தின் அடைப்பை எடுத்து அதன் வழியாய் ஆவியை எருவாயில் பிடிக்க சகலசீலமும் தீரும்.

5. காட்டுக்கருணை, கறிக்கருணை, பிரண்டை, கொடுவேலி, எருக்கு, புளியமடல், மருள் இவைகளின் கிழங்கு வகைக்கு 4 பலம் உலர்த்தித் தூள் செய்து தேனில் பாக்களவு இரண்டு வேளை 7 நாள்கள் கொடுக்கத்தீரும்.

6. கருப்புக்கள்ளியைச் சுட்ட சாம்பல் ஒரு எலுமிச்சங்காய் அளவு, பெருங்காயம் கொட்டைப்பாக்களவு, முடக் கொத்தான் விதை கால்பலம் இவைகளை மேற்படி சாற்றில் அரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து பழச்சாற்றிலாவது மிளகுக் குடிநீரிலாவது 7 நாள் கொடுக்கத்தீரும். காரமான பொருள்கள் கூட்டலாகாது.

7. சதுரக்கள்ளியை நறுக்கிப் பானையில் போட்டு 4 படித் தண்ணீர் விட்டு வேடுகட்டி அதன்மேல் ஆழாக்குக் கருங் குருவை மாவைப் பிட்டவித்து 3 நாள் கொடுக்கத் தீரும்.

8. கொட்டைப்பாசி, ஆதண்டைப்பட்டை, கடுக்காய், மிளகு வகைக்கு 1 பலம் தூள் செய்து தேனில் பாக்களவு குழைத்து இரண்டு நேரமும் 5 நாள் கொடுக்கச் சகல மூலமும் தீரும்.

9. அவித்து எடுத்த நத்தைச் சதை 10 பலம், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம் வகைக்கு அரைப்பலம், அதிமதுரம், ஏலம், சீரகம், மிளகு வகைக்கு 1 பலம், 1 படி நெய்யில்

போட்டுக் காய்ச்சி கடுகுடன் இரண்டு வேளை சிறு கரண்டி வீதம் பத்து நாள்கள் கொடுக்கத் தீரும். காரம் குறைவாகக் கூட்டவும்.

10. நாயுருவியிலை, கருவேப்பிலை, கருணைக்கிழங்கு, பசுவின் வெண்ணெய், ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து இளகம் கிண்டிப் புன்னைக்காய் அளவு 5 நாள் சாப்பிடத் தீரும்.

11. சுக்கு, கடுக்காய் வகைக்கு 5 பலம், திப்பிலி, நற்சீரகம், மிளகு வகைக்கு 1 பலம், சித்திரமூலம் 10 பலம், செவ்வியம் 3 பலம், நவாச்சாரம், திப்பிலிமூலம் வகைக்கு 2 பலம் கருணைக்கிழங்கு வற்றல், கோட்டம் வகைக்கு 2 பலம், சூரணித்துப் பனைவெல்லம் 4 பலம்கூட்டி அரைத்து ஒரு வேளைக்குக் கடுக்காய் அளவு சாப்பிட்டு மோர் குடித்துவரத்தீரும்.

12. பிரண்டையை உலர்த்தித் தூள்செய்து அதற்குச் சமமாக சர்க்கரை கலந்து திரிகடி அளவு பசுவின் நெய்யில் குழைத்து 45 நாள் உண்ணத்தீரும்.

13. கடுக்காய், கொடிவேலிவேர் வகைக்கு 5 பலம், திப்பிலி மூலம், நவாச்சாரம் வகைக்கு 2 பலம், மிளகு, சீரகம், திப்பிலி வகைக்கு 1 பலம், தூய்மைசெய்த சேங்கொட்டை. கருணைக்கிழங்கு வகைக்கு 8 பலம், வெல்லம் 4 பலம் இவைகளை உரலில் இட்டு மெழுகுபோல் இடித்துக் கொண்டு ஒரு நாளைக்கு தான்றிக்காய் அளவு ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ளத் தீரும்.

14. சிவந்த நாயுருவிச்சமூலம் 16 பலம் இடித்து 32 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து இறுத்து அதில் பசுவின் நெய் 1 படி, விட்டுக் கலந்து கொடுவேலி வேர்ப்பட்டை, நற்சீரகம், சிவதைவேர், சேங்கொட்டை, ஆயில்யபட்டை, திரிகடுகு, முன்னைவேர்ப்பட்டை, தூய்மைசெய்த வாளம், இந்துப்பு, பூண்டு, சிறுகா சொறி வேர், கத்தூரி மஞ்சள், புளியமடற் கிழங்கு, பிரண்டைக்கிழங்கு, மருள்கிழங்கு வகைக்கு 3 வராகன் எடை வீதம் மேற்படிச் சாற்றில் அரைத்துப் போட்டுச் சிறுதீயாய் நான்கு நாளெரித்து 5ஆம் நாள் பதமாகக்

காய்ச்சி வடித்து திரிபலையை ஓர் எடையாய்ச் சுட்ட சாம்பல், திரிகடியில் இரண்டு பண எடை நெய்விட்டுக் கலந்து 10 நாள்கள் உதயத்தில் (அதிகாலையில்) கொடுக்கச் சகலமூலமும் தீரும்.

15. பெருந்தும்பை, நொச்சி, கருவேப்பீர்க்கு, முருங்கை ஈர்க்கு, சாரணைவேர், முத்தக்காசு, வகைக்கு ஒரு பலம், திப்பிலி, மலைதாங்கி வேர் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை ஓர் எடையாய் இடித்து 3 பங்கு செய்து ஒரு பங்கில் இரண்டு படி தண்ணீர்விட்டு அதில் மிளகு, திப்பிலி, சுக்கு, பூண்டு, ஓமம், வசம்பு இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் கிழிகட்டிப்போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து கிழிகட்டின மருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும். இவ்விதம் மூன்று நாள் ஆறுபொழுது செய்ய மூலம் கூட்டோடே விழுந்து போகும்.

16. சுக்கு, வேப்பீர்க்கு, வெள்ளுள்ளி, திப்பிலி வகைக்கு 3 வராகன் எடை இவைகளைக் கிழிகட்டி இரண்டு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து அதில் மேற்படி மருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். இவ்விதம் மூன்றுநாள் ஆறுவேளை கொடுக்கத் தீரும். அபான வேர் கரைந்து போகும்.

17. வெள்ளுள்ளி, கருவேப்பீர்க்கு, சுக்கு, திப்பிலி, வேப்பீர்க்கு வகைக்கு 2 பலம் தட்டி, 2 படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து ஒரு நாளைக்கு 2 வேளை சாப்பிடமூலவேர் அற்றுப்போகும்.

18. தூதுளை, மருள், கருணை, காட்டுக்கருணை, பிரண்டை, அறுகு, மிளகரணை, நீர்ப்பூண்டு இவைகளின் சமூலம், ஆவாரைச் சமூலம் இவைகளை ஓர் எடையாய் நசுக்கித் தூள்செய்து திரிகடி வீதம் தேனில் 40 நாள்கள் உட்கொள்ள சகல அபானவேரும் தீரும்.

19. பிரண்டை சமூலத்தை அவித்து உலர்த்தி இடித்து வேடு கட்டின தூள் கால் படி, கருங்குருவை மாவு கால்படி, மிளகு, சுக்கு, ஓமம், இவைகளை வெதுப்பிப் பொடித்த தூள் வகைக்குக் கால் பலம் ஒன்றாய்க் கலந்து திரிகடி

அளவு நல்லெண்ணெயிலாவது வெண்ணையிலாவது சாப்பிட்டுவரக் கடுப்பு, சீதரத்தம் முதலான சகலமூலமும் தீரும்.

20. உகாஇலைச்சாறு 1 படி, நெல்லிக்காய்ச் சாறு கால் படி ஒன்றாய்க் கலந்து சட்டியில் விட்டு அதில் முற்றின கருங்கோழியை ரோமம், கால், சிறகு, தலை, குடல் நீக்கி சட்டியில் போட்டு நன்றாய் வேக வைத்து எலும்பை உதறி உரலில் போட்டு சுக்கு 2 பலம், கடுக்காய், மிளகு வகைக்கு 3 பலம், உள்ளி, தான்றிக்காய், திப்பிலி வகைக்கு 1 பலம், ஓமம் அரைப்பலம், கருஞ்சீரகம், கடுகு வகைக்குக் கால் பலம் சவுக்காரம், பெருங்காயம், மாவிலிங்கு, சாரணை, நொச்சி, பிரண்டை, இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 1 வராகன் எடை, இந்துப்பு 2 வராகன் எடை இவைகளை வெதுப்பிக் கூடப்போட்டு ஒரு கழஞ்சு சதுரக்கள்ளிவேர்பால், கால்படி நல்லெண்ணெயும் கலந்து கடப்பாறையால் மெழுகுபோல் இடித்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட அபானவேர் அற்று விழுந்து போகும். சகல எருவாய் நோயும் தீரும்.

21. மாவிலிங்க இலையை அரைத்து ஒரு பாக்களவு எருமைத் தயிரில் கலக்கிக்கொடுக்க வேர் விழும்.

22. ஒரு மாதம் சென்றகோழிக்குஞ்சை இறகு, குடல், தலைகால் நீக்கி அதின் வயிற்றுக்குள் கால் பலம் வெள்ளைப்பூண்டை அரைத்துப்பூசி வாழைமட்டையில் வைத்துக் கட்டி உமிக்காந்தலில் புதைத்துக் காலையில் எடுத்துத் தின்னவும், இதன்படி மூன்று நாட்கள் உட்கொள்ள மூலம் முதலான மற்றுமுள்ள வியாதிகளும் தீரும்.

மூலமுளை, அபானக்கடுப்புக்கு புகையும் ஒற்றடமும்

1. முதலை மாமிசத்தை அனலில் போட்டு அபான வாயில் புகைபிடிக்கத் தீரும்.

2. வெள்ளுள்ளி 2 பலம் அரைத்து 6 உருண்டை செய்து வேளை ஓர் உருண்டையாகப் புளியம் தணலில் போட்டு ஆசனத்தில் புகைபிடிக்கத் தீரும்.

3. மரவட்டையை உலர்த்திப் பொடித்துக் கனலிட்டு மூன்று நாட்கள் அபானத்தில் புகைபிடிக்க கடுப்புத் தீரும். மூலமுளை கரையும்.

4. பால்சாம்பிராணியும், ஏலமும் சமமாய்ப் பொடித்து நெருப்பில் தூவி அபானத்தில் புகை பிடிக்கத் தீரும்.

5. மாதுளை, ஆவாரை, நீர்ப்பூலா இவைகளின் கொழுந்தும் குழித்தாமரை இலையும் வகைக்கு ஒரு படி, ஈருள்ளி 1 இவைகளை இடித்து நெல்லிக்காய் அளவு பசுவின் வெண்ணையில் கலந்து இரும்புக்கரண்டியில் வடித்து துணியில் முடிந்து ஒற்றடம் செய்ய எருவாய்க் கடுப்பு தீரும். வேர் கருகும்.

அபானவேருக்கும் அபானக் கடுப்புக்கும் மருந்து

மருதம்பட்டை கால் பலம் அரைத்து ஆழாக்குப் பசுவின் பாலில் கலக்கி மூன்று நாட்கள் உட்கொள்ள மூலமுளை கரையும். கடுப்பு தீரும். வேர் கருகும்.

இரத்த அபானத்திற்கும் அபானவேருக்கும் எண்ணெய்

பூநாகம் 4 பலம், நாராகரந்தைஇலை வில்வக்காய் அளவு இவைகளை அரைத்து அரைப்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து ஐந்து நாட்கள் ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

உள் அபானம், இரத்த அபானம், நிணக்கழிச்சலுக்கு மருந்து

1. ஒரு பிடி மூவிலைமின்னியை குருவைநெல்லரிசியுடன் கலந்து அரைத்து அடைதட்டி நல்லெண்ணெயில் வேக வைத்து 3 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

2. மருட்கிழங்கு, குருவை நெல்லரிசியுடன் சேர்த்து இடித்து சுக்கு, மிளகு, திப்பிலி, பூண்டு, ஓமம் வகைக்கு அரைப் பலம் இடித்துப்போட்டுப் பிசைந்து களிகிண்டியாவது பசுவின் நெய்யில் அடைசுட்டாவது 3 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

அபான நோய், மேற்படி முளைக்கு மருந்து

காட்டுக்கருணைக்கிழங்கு 86 கழஞ்சு, கொடுவேலிவேர், மிளகு வகைக்கு 2 கழஞ்சு இவைகளைத் தூள்செய்து கழல்காய் அளவு நல்லெண்ணெய் குழைத்து இருபத்தேழு நாட்கள் உட்கொள்ள நோய் தீரும். புளி தள்ளவும்.

உள் எருவாய் நோய், புற எருவாய் நோய்க்கு மருந்து (உள், புறமூலம்)

மூக்கிரட்டை இலையை எலுமிச்சங்காய் அளவு அரைத்து கருங்குருவை மாவில் பிசைந்து, வடைதட்டி நெய்யில் வேக வைத்து5 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

மூலக்கடுப்பு, இரத்த மூலத்திற்கு மருந்து

ஒரு ஆழாக்கு ஓமத்தை 7 தடவை வறுத்துத் தேய்த்து உமிநீக்கி, அதனுடன் இரண்டு வராகன் எடை வசம்பு சுட்ட சாம்பலையும் கூட்டித் தேனில் கலந்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ள நோய் தீரும்.

உள்மூலம், புறமூலம், விஷப்பாண்டு காமாலை, வீக்கங்களுக்கு மருந்து

வடக்கே ஓடியிருக்கிற சங்கம்வேர்ப்பட்டை, ஒரு நாரத்தங்காய் அளவு அரைத்து சோமநாதப் பெருங்காயம் 2 வராகன் எடை இடித்து ஒன்றாய்க் கலந்து ஒரு பீங்கானில் இட்டு மருந்து மறையும்படி எலுமிச்சம்பழச்சாறு விட்டுக் கிண்டி வெளியில் வைக்கப் பொங்கிவரும். அதை எடுத்து நாள் ஒன்றுக்கு முள்ளிக்காய் அளவு 6 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

உள்மூலம், புறமூலம், வெப்புப்பாவை முதலான நோய்களுக்குச் சூரணம் (கலப்புத்தூள்)

காட்டுக்கருணை, கறிக்கருணை, பிரண்டை, புளியமடல் இவைகளின் கிழங்கு வகைக்கு 5 பலம், கொடிவேலிவேர், திரிகடுகு, திப்பிலி, திப்பிலிமூலம், இந்துப்பு, வளையலுப்பு,

அட்டுப்பு, பெருங்காயம், வெட்பாலையரிசி, விளாவரிசி, உள்ளி, அதிவிடையம், சீரகம், கடுகுரோகணி, கருஞ்சீரகம், தேவதாரம் வகைக்கு 1 பலம் இடித்துத் தூள் செய்து மூன்று வருடம் சென்ற கருங்கோழியைக் கால், தலை, குடல், சிறகு, ரோமம் நீக்கி அதனை வயிற்றுக்குள் மேற்படி மருந்துகளை வைத்து தைத்து ஒரு பானையில் மூன்று படி பசுவின் பாலும் 3 படி காடியும் விட்டு வாயில் சீலையை வேடுகட்டி அதன் மேல் கோழியை வைத்து மூடி வெந்தபின் எலும்பை நீக்கி இடித்து உலர்த்தித் தூள் செய்து கொண்டு திரிகடி அளவு தேனிலாவது சுக்குக் குடிநீரிலாவது உட்கொள்ள நோய் தீரும். புளி, புகையிலை தள்ளவும்.

எருவாய்ப் பாண்டு, மந்தாக்கினிக்கு மருந்து

ஓமம், சுக்கு, கொடிவேலிவேர் வகைக்கு 1 பலம், கடுக்காய் 3 பலம், இவைகளை இடித்துக் கொண்டு திரிகடி அளவு மோரில் உட்கொள்ள நோய் தீரும்.

மூலவாயுவின் இயல்பு

பசியும் மந்திக்கும்; உடல் வெளுக்கும்; வயிறு சதாகாலமும் இரைந்து கொண்டிருக்கும்.

மருத்துவம்:

1. வெள்ளுள்ளி 5 பலம் அரைத்து அரைப்படி பசுவின் பாலில் கலக்கிக் காய்ச்சிப் புரை குத்தி உறைய வைத்த தயிர் எடுத்து காலை, மாலை இருவேளை மூன்று நாட்கள் சாப்பாட்டில் விட்டுச் சாப்பிட மூலவாயு, பொருமல் தீரும்.

2. விதைநீக்கிய கடுக்காய் 20, ஒரு தலைப்பூண்டு 20, பெருங் காயம் 2 கழஞ்சு, முடக்கொத்தான் கொழுந்து ஒரு பிடி இவைகளை நன்றாய்ப் பிசைந்து ஒரு படி விளக் கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் 15 நாட்கள் உட்கொள்ள சகல வாயுக்களும், மலக்கட்டும் தீரும்.

3. எருமைத் தயிரைத் துணியில் முடிந்து தொங்கவிட்டு தண்ணீர் வடிந்த பின்பு எடுத்து அதில் வெள்ளைப் பூண்டை அரைத்து ஒரு கொட்டைப் பாக்கு அளவு கலக்கி உட்கொள்ள மூலவாயு நோய் தீரும்.

4. சிவதைவேர் 1 பலம், திரிபலை, கொத்தமல்லி, இந்துப்பு, தேசாவரம், செவ்வியம், முத்தக்காசு, திரிகடுகு, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுநாகப்பூ, அன்னபேதி, விலாமிச்சு வகைக்கு 1 கழஞ்சு, தேவதாரம், இலவங்கப்பத்திரி, சாதிபத்திரி, சந்தனம், பொரிகாரம், கத்தூரிமஞ்சள், சடாமாஞ்சில், வாய்விளங்கம் வகைக்கு 1 ½ கழஞ்சு இவைகளை இடித்து வடிகட்டி அந்த எடைக்குச் சர்க்கரை கலந்து திரிகடி அளவு தேனிலாவது இஞ்சிச் சாற்றிலாவது உட்கொள்ள அபான வாயுவும், மலக்கட்டும், நீர்க்கட்டும் நிவர்த்தியாகும்.

5. கால்படி விளக்கெண்ணெயில், ஈருள்ளி ஒரு சிரங்கை, முடக்கொத்தான் இலை ஒரு பிடி, வெள்ளரிவிதை ஒரு பிடி, ஆழாக்கு சத்திச்சாரணைவேர் ஒரு பிடி இவைகளை மைபோல் அரைத்துப் போட்டு சிவக்கக் காய்ச்சி வடித்துக் கொண்டு மேற்படி கடுகும் எண்ணெயும், வேளைக்கு ஒரு கரண்டி வீதம் பத்தியமாய்ச் சாப்பிட்டு வர மலக்கட்டும் நீங்கும்.

மேற்படி நோயால் நீர் அடைத்தல்

மருத்துவம்:

1. ஊமத்தன் விதையை வெதுப்பி அதற்கு நிகர் ஏலரிசி கூட்டி தண்ணீர் விட்டு அரைத்து கீழ் வயிற்றில்பூச உடனே நீர் இறங்கும்.

2. திப்பிலி, கிராம்பு, இந்துப்பு, வெடியுப்பு 1 கழஞ்சு, சுக்கு, அதிமதுரம், அமுக்கிறா, ஏலம் வகைக்கு 2 கழஞ்சு தான்றிக்காய், சண்பகப்பூ, கோட்டம், குருந்தொட்டிவேர் வகைக்கு 3 கழஞ்சு, அதிவிடயம், சந்தனம், நெல்லிப்பருப்பு கல்நார், சீரகம், இலவங்கப்பத்திரி வகைக்கு ஒரு

கழஞ்சு, ஓமம் ஒரு கழஞ்சு, வால் மிளகு, விலாமிச்சவேர், சிவன்வேம்பு வகைக்கு ஒரு பிடி, 10 கடுக்காய் இவைகளைத் தூள் செய்து திரிகடி அளவு தேனில் கலந்து சாப்பிட்டு இதன் அடியில் வருகிற தைலத்தைத் தலை முழுகி வரத் தீரும்.

மேற்படி நோய்க்குத் தலை முழுகத் தைலம்

மருத்துவம்:

1. மேற்படி முறையில் கண்ட மருந்துகளில் இந்துப்பையும், வெடியுப்பையும் நீக்கி மற்ற மருந்துகளை இடித்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகி வரவும்.

2. கறிக்கருணை, காட்டுக்கருணை, சேமங்கிழங்கு, புளியம் பிரண்டைகிழங்கு, பேய்ப்பிரண்டை இவை வகைக்கு 1 பலம், திரிபலை, குரோசாணி ஓமம், ஓமம், தாளிச பத்திரி, சிறுநாகப்பூ, முத்தக்காசு, கருஞ்சீரகம், பொன் முசுட்டைவேர், சித்திரமூலம், இலவங்கப்பட்டை, அமுக்குராக்கிழங்கு வகைக்குக் கால் பலம் இவை எல்லாம் இடித்து வடிகட்டிக்கொண்டு சூரணங்கண்ட எடை பனங்கற்கண்டைப் பாலில் கலக்கிப் பாகுசெய்து சூரணத்தைப் போட்டுக் கிண்டி, கால் படி நெய்விட்டு இளகம் குறுகி வருகிற சமயத்தில் கூகை நீர், சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம் வகைக்கு 2 வராகன் எடை தூளைப் போட்டு, தேன் 4 படி விட்டுக் கலக்கி மெழுகு பதத்தில் இறக்கிக்கொண்டு ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள நோய்கள் தீரும்.

மூலவாயு, அக்கினிமந்தம், பத்திய வாயு ஆனந்தவாயுவுக்கு மருந்து

சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம், கோட்டம், திப்பிலி, மூலம், நவாச்சாரம், இந்துப்பு, அதிவிடையம், பெருங்காயம், ஓமம், நற்சீரகம், வாய்விளங்கம், வசம்பு சுட்ட சாம்பல், கறியுப்பு

வகைக்கு 4 கழஞ்சு இவைகளை இடித்துத் தூள் செய்து இதற்குச் சமமாய் கடுக்காய்த் தூள் சேர்த்து திரிகடி அளவு சாப்பிட நோய் தீரும்.

மூலவாயு, மூலம், செரியாமை, தொடர் கழிச்சலுக்கு இளகம்

நூறு கடுக்காயை வெள்ளாட்டு நீரில் அவித்து விதை போக்கி உலர்த்தி வறுத்து இடித்துக்கொண்டு சிவந்த சித்திரமூலம், மஞ்சள், சுக்கு, திப்பிலி, சேராங்கொட்டை, காரெள்ளு, நிலவாகை, கருணைக்கிழங்கு, பிரண்டை, புளிய மடல் கிழங்கு, வெண்தோன்றிக் கிழங்கு, சாரணைக்கிழங்கு இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்துப் பாலில் அவித்து எடுத்துக் கொண்டு இதனுடன் கடுகு 2 பலம் இடித்துத் தூள் செய்து இரண்டுபடி வெள்ளாட்டுப் பாலில் ஒரு பலம் சர்க்கரைகூட்டிப் பாகுசெய்து அதில் மேற்படி தூள்களைத் தூவிக்கிண்டி தேன் கால் படி, நெய் 1 படி கூடவிட்டு இளகம் செய்துகொண்டு நாழி ஒன்றுக்கு இரு கழஞ்சு வீதம் ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள மேற்படி நோய் தீரும். மலம் தாராளமாய்ப் போகும். பசி தீபனம் உண்டாகும் தாது பலப்படும். கிருமிகள் அற்றுப் போகும். இச்சாபத்தியம்.

மூலவாயு, எருவாய்நோய், உதரநோய், இழுப்பு, குன்மம், பயித்தியம், சன்னிவாயு, உடம்புவியர்வை, பசி மந்தத்திற்கு மருந்து

மருத்துவம்:

1. திப்பிலிமூலம் 6 பலம், சுக்கு, மிளகு, செவ்வியம், சித்திர மூலம், கடுகு, வாய்விளங்கம், கருஞ்சீரகம், அசமதாகம், இந்துப்பு, வெடியுப்பு, சவுக்காரம், கொத்தமல்லி, சதகுப்பை, அதிமதுரம், வெட்பாலையரிசி, சாதிபத்திரி, கிராம்பு, தாளிசபத்திரி, இலவங்கப்பத்திரி வகைக்கு 4 பலம் இவைகளை வெதுப்பித் தூள் செய்து அதற்குப் பாதி சர்க்கரையைக் கூட்டி திரிகடி அளவு தேனில் குழைத்து 10 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

2. மூன்று பலம் பனைவெல்லத்தைத் தண்ணீரில் போட்டுப் பாகு செய்து அதில் திரிகடுகு, ஓமம், தேசாவரம், குராசாணியோமம், கருஞ்சீரகம், சிற்றரத்தை, சதகுப்பை, வசம்பு, வெள்ளுள்ளி, அதிவிடையம், பெருங்காயம், ஏலம், கிராம்பு, வெங்காரம், பழம்புளி, சத்திச்சாரணை, வேர்ப்பட்டை, நாய்க்கடுகு வகைக்கு 3 வராகன் எடை அரைத்துப்போட்டுக் கிண்டி கொஞ்சம் பசுவின் நெய் விட்டு இளகம் செய்துக் கொண்டு நாழி ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ள நோய் தீரும்.

(எருவாய் நோய்ப்படலம் முற்றிற்று.)

அதிசார நோய்ப் படலம்

அதாவது சாதம் செரியாமல், அனல்மீறி, வாயு அதிகரித்து மூலத்தில் வாயு நின்று எப்பொழுதும் கழிச்சல் விளைத்தலாம்.

சொன்னார் தொகுப்பு அதிசாரம் தோன்றும் வாத பித்தமென
மன்னே சிலேத்ம வதிசாரம் வகுக்குஞ் சலத்தின் சாரம்
மின்னிய சாத்தி வதிசார மொழிந்தா ராயும்வே தமிது
பொன்னே மாந்தர் பிழைக்கவென்று புகன்றார் முனிவர் புகன்றாரே.

வாத அதிசாரத்தின் இயல்பு

வயிறு பொருமிக் கழியும்; தொப்புளின் கீழ் நோகும்; அங்கம் நொந்து வாடும்; அயரும்; மலம் கருமையாயிருக்கும்; நுரை விழும்; காற்று பரியும்.

பித்த அதிசாரத்தின் இயல்பு

மலம் ஒருக்கால் செம்மையாயும், பசுமையாயும் இறங்கும்; ஒரு நேரம் சீதம், இரத்தம் விழும்; அபானங் கடுத்து நோகும்; எரியும்; சுவையின்மை காணும்; அன்னம் செல்லாது; வாந்தி பண்ணும்; தாகம் அதிகரிக்கும்; வியர்க்கும்.

சிலேத்தும அதிசாரத்தின் இயல்பு

மலம் வெண்மையாய்க் கழியும்; சீதம், நுரைவிழும்; அபனாங்கடுக்கும்; வயிறு பொருமும்; இழுக்கும்; சுவையின்மை காணும்; அன்னம் செல்லாது, இருமல் காணும்.

அதிசார தோடத்தின் இயல்பு

இரத்தம் விழும்; பிதற்றும்; வாந்திக்கும்; விக்கலெடுக்கும்; உடல் நடுங்கும்; வயிறு பொருமும்; வியர்க்கும்; நசிக்கும்; அவயவமும் மிகுதியாய் குளிர்ந்திருக்கும்; நித்திரை, சோபம் அதிகரிக்கும்.

சுர அதிசாரத்தின் இயல்பு

சுரம் தீவிரமாய்க் காயும்; தாகமிகும்; பலவிதமாய் வயிறு கழியும்; சீதம், இரத்தம் விழும்; சுவையின்மை தோன்றும்; அன்னத்தைத் தள்ளும்.

அசாத்திய அதிசாரத்தின் இயல்பு

உமிபோலும், தேன்போலும், கரி போலும், தைலம் போலும், வெண்மையாயும் மிகுந்த நாற்றத்துடன் பலவிதமாய்க் கழிச்சல் காணும்; எடை வற்றும்; சுரம் நடுக்கும்; தேகம் வற்றும்; மயக்கம் காணும்; நினைவு தடுமாறும்; விக்கலெடுக்கும்; தொண்டை கமறும்; கைகால் சோர்ந்து நடுங்கும்; விழி விரிந்து வெளுக்கும்; கை, கால், மூக்கு, நெஞ்சு, தொப்புள் குளிர்ந்திருக்கும்; அவயங்களில் நரம்பு தோன்றும்.

இவைகளுக்கு மருத்துவம்:-

1. பெருமரத்துப்பட்டையை ஓர் அளவாய் அரைத்துத் தயிரிலாவது, காடியிலாவது கரைத்துக் கொடுக்க குணமாகும்.
2. மிளகு, அதிவிடையம், சாதிக்காய், சாதிபத்திரி, சாத்திர பேதி, இலவங்கப்பட்டை, முத்தக்காசு, இந்துப்பு, நற்சீரகம், காசுக்கட்டி, மாதுளம்பிஞ்சு, வில்வக்காய்ச்சதை, பெருமரத்துப்பட்டை, அத்திப்பூ, மாங்கொட்டைப்பருப்பு, வட்டத்திருப்பி வேர்ப்பட்டை இவைகளை வெதுப்பித் தூள் செய்து திரிகடி அளவு தேனிலும் மற்ற துணை மருந்துகளிலும் கொடுக்கத் தீரும்.
3. மாங்கொட்டைப் பருப்பு, அபின், கருநாவி, கஞ்சாவித்து, அதிவிடயம், சாதிக்காய் இவைகளை ஓர்அளவாய்க் கூட்டி, சீந்தில் குடிநீரில் ஆட்டி சிறுபயறு போல் உருண்டை செய்து துணை மருந்துகளில் கொடுக்க குணமாகும்.
4. கஞ்சா, பொரிகாரம், காரீயபற்பம், சுக்கு, கருநாவி, சீரகம், குடசப்பாலை, கழற்சிப்பருப்பு, அதிவிடையம் இவைகளைச் சம எடையாய் ஊமத்திலைச் சாற்றால் ஆட்டி கழற்சி அளவு உண்டை செய்து தேனில் கொடுக்க குணமாகும்.

5. குடசப்பாலை, அதிவிடையம், கோரைக்கிழங்கு, சாதிக்காய், சுக்கு, அபின், கஞ்சா, கழற்சிப்பருப்பு, இலவம்பிசின், சீரகம், மாங்கொட்டைப் பருப்பு, வில்வப்பழம் இவைகளைச் சம எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றாலாட்டி கழற்சி அளவு உருண்டை செய்து தேனில் கொடுக்கத் தீரும்.

6. கடுக்காய், கறிமிளகைச்சுட்டசாம்பல், விளாம்பிசின், இலவம் பிசின் இவைகளைச் சம எடையாய் எடுத்து அத்திப்பட்டைச் சாற்றில் அரைத்துத் தான்றிக்காய் அளவு உருண்டை செய்து தேனில் கொடுக்கத் தீரும்.

7. மலைதாங்கிவேர், கோரைக்கிழங்கு, அத்திவேர்ப்பட்டை, நீர்ப்பூலாவேர்ப்பட்டை, நாவல்வேர்ப்பட்டை, மாதுளம் பிஞ்சுத்தோல், அபின், அத்திப்பிஞ்சு, மாம்பருப்பு, அதிமதுரம், கோட்டம், சுக்கு, சீரகம், சாதிக்காய் இவை களைச் சமஎடையாய்த் தென்னம்பாளைச்சாற்றால் மூன்று நாள்கள் ஆட்டி தேற்றான் விதை அளவு உருண்டை செய்து வாழைப்பூச்சாற்றில் ஓர் உருண்டை கொடுக்கத் தீரும்.

8. மாதுளம் வேர்ப்பட்டை, கூவிளவேர்ப்பட்டை, மாங் கொட்டை பருப்பு, ஓமம், குரோசாணி ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிவிடையம், இலவங்கம், திரிகடுகு, கஞ்சா, வெட்பாலையரிசி, கடுக்காய், கரிகோட்டம், நற்சீரகம், சரக்கொன்றைவேர்ப்பட்டை, திப்பிலி மூலம், வெந்தயம், சித்திரமூலம், காட்டாத்திப்பூ, புளியவிதைத்தோல், ஊமத்தைவிதை, கழற்சிப்பருப்பு இவைகளைச் சமமாய்ப் பொடித்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள தீரும்.

9. ஓமத்தை வெதுப்பித் தேய்த்து உமிபோக்கி அதற்குச் சமமாய் காட்டாத்திப்பூக்கூட்டி திரிகடுகு இஞ்சிச் சாற்றில் உட்கொள்ளத் தீரும்.

10. சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கோட்டம், சீரகம், அதி மதுரம், அதிவிடையம், அபின், கோரோசனை வகைக்கு 2 வராகன் எடை தாய்ப்பாலில் அரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து கொண்டு ஒரு சட்டியில் சுக்கு,

ஓமம், மிளகு வகைக்கு 1 வராகன் எடை வறுத்துக்கொண்டு அந்தச் சட்டியில் இலந்தையிலை ஒரு பிடி போட்டு வதக்கி மறுபடியும் மூன்றுவகை மருந்துகளையும் தட்டிப்போட்டு ஒரு படி தண்ணீர்விட்டு ஆழாக்காய் வற்றவைத்து, அதில் மேற்படி மாத்திரை ஒன்றை உரைத்துக் கொடுக்கவும். இவ்விதம் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

11. ஆவாரை இலையை வதக்கி மேற்படி மூன்று வகை மருந்துகளையும், முன்போல் வெதுப்பிக் குடிநீர் செய்து மாத்திரை ஒன்று உரைத்துக் கொடுத்தாலும் அல்லது விடதாரி இலையையும் மேற்படி மருந்தையும் முன்போல் குடிநீர் செய்து ஒருமாத்திரை உரைத்துக் கொடுத்தாலும் வயிற்றுக் கடுப்பு தீரும்.

(அதிசார நோய்ப்படலம் முற்றிற்று.)

கிராணி நோய்ப் படலம்

அதாவது குடலில் வாயு அதிகரித்து அபானவாயில் கடுப்புண்டாகி பலவிதமான கழிச்சல் அதிகரித்தலாம்.

கூறு மூலக் கிராணியெனக்
குறிக்கும் வாதக் கிராணியென்றும்
தேறும் பித்தக் கிராணியென்றும்
தெளியும் சித்தமக் கிராணியென்றும்
கோறுஞ் சீழுக் கிராணியென்றும்
குறிக்கும் நீரின் கிராணியென்றும்
ஆறுங் கிராணி பிறந்தவிதம்
அறைந்தார் முனிவ ரறைந்தாரே.

மூலக்கிராணி, சீழ்க்கிராணி, நீலக்கிராணி, வாயுக்கிராணி, சூசிக்கிராணி அசீரணக்கிராணி, ஆகியவற்றின் இயல்பு

கீழ்வயிறு கடுந்துளைந்து குருதிவிழும்; அபானவாயு கீழ்நோக்கி உறுப்புத்தள்ளும்; மலங்கழியும்; நாளுக்கு நாள் உடல் வற்றும்; வயிறும் நோகும்; நாவறளும்; இளைப்பு, சோப, தாபமுண்டாகும்.

வாதமூலக்கிராணியின் இயல்பு

மலங்கழியும்; சீதம் இரத்தம் விழும்; தொப்புளில் சுருக்கென்று வலிக்கும்.

பித்தமூலக்கிராணியின் இயல்பு

மலம் சிறுத்துக் கழியும், பலவிதமாய் நாறும்.

சிலேத்தும மூலக்கிராணியின் இயல்பு

உதிரமாயும், வெண்மலமாயும் கழியும்; காற்றுப் பரியும்.

இவைகளுக்கு மருத்துவம்:

1. *திப்பிலி, சுக்கு, மிளகு, சாதிக்காய், கிராம்பு, இந்துப்பு, ஏலம், சீரகம், பெருங்காயம், வேலம்பிசின், இலவம்பிசின், முத்தக்காசு, புளியவிரைத்தோல், மாதுளம்தோல், அபின் வகைக்கு 1 வராகன் எடை இவைகளைப் பொடித்து இதற்குச் சமமாய் தூய்மைசெய்த கஞ்சாத்தூள் கூட்டி, ஒரு நாழிக்கு ஒரு வராகன் எடை வீதம் தேனில் உட்கொள்ள மூலக் கிராணி தீரும்.*

2. *மஞ்சள், பிரண்டை, வெள்ளைப்பூண்டு, சுக்கு, மிளகு வகைக்கு அரைப்பலம் மைபோல் பொடித்து ஒரு கோழி முட்டை கருவிற்பொரித்துச் சாப்பிடத் தீரும்.*

3. *அதிவிடையம், கிராம்பு, சுக்கு, திப்பிலி, சீரகம், ஓமம், யானைத்திப்பிலி, ஏலம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், அபின், இந்துப்பு, அத்திவிதை, கோட்டம், நெல்லி முள்ளி, மாம்பருப்பு, காசுக்கட்டி, கருங்குங்கிலியம், களிப்பாக்கு, வில்வப்பழச்சதை, விளாவிதை, பெரு மரத்துப்பட்டை, மலைதாங்கிவேர், சிறுகாஞ்சொரி வேர், கொடிவழுதலைவேர், சிறுவழுதலைவேர், புளியவிதைத்தோல், வில்வப்பிசின், விளாம்பிசின், வெளிச்சிப்பிசின், கம்பளிப்பிசின், மருதம்பிசின், ஓதியம்பிசின், கிளுவைப்பிசின், அத்திப்பிசின், செண்பகப்பூ வகைக்கு 1 பலம் பொடித்துக்கொண்டு, இலவம்பட்டை, மாம்பட்டை, வேலம்பட்டை, அத்திப் பட்டை, உதியம்பட்டை, மருதம்பட்டை, வகைக்கு 1 பலம் எடுத்து இடித்து 4 படித் தண்ணீரில் போட்டு அரைப்படியாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் ஆட்டி கழற்காய் அளவு உருண்டை செய்து 60 நாழிகை சென்ற எருமைத்தயிரை வடிகட்டி அதில் ஒரு உருண்டை கொடுக்க மூலக்கிராணி தீரும். ஒரு பிடி காரையில் ஒரு படி எருமை மோர்விட்டு உழக்காய்க் காய்ச்சி வடித்து அதில் ஓர் உருண்டையை அரைத்து நல்லெண்ணெய் ஒரு பணஎடை விட்டுக் கொடுக்க சகலக்கிராணியும் நீங்கும்.*

4. உப்பை அரைத்து ஒரு தலை வெள்ளைப் பூண்டின் மேல் பூசி உமிக்காந்தலில் வெதுப்பி உப்பையும் தோலையும் முளையையும் நீக்கி அரைத்துத் தயிரில் கலக்கி உட்கொள்ளத்தீரும். கடுப்பு நிற்கும்.

5. பிரண்டைவேற்பொடி, சுக்கு, மிளகு, கடுகு, வெள்ளைப் பூண்டு, ஓமம், கருஞ்சீரகம், கருவேப்பிலை, பெருங்காயம், இந்துப்பு, வகைக்கு 3 பலம் ஒரு கருங்கோழியை இறகு, குடல், தலை, கால் நீக்கிச் சற்றே வேகவைத்து எலும்பு களைந்த மாமிசம் இவைகளைத் தனித்தனியே பிரண்டைச்சாற்றால் மைபோல் அரைத்து ஒன்றாய்க் கலந்து வில்லை தட்டி நல்லெண்ணெயில் வேகவைத்துக் காலை, மாலை உட்கொள்ள நோய் தீரும்.

6. கொட்டைக்கரந்தையும் சீரகமும் ஓர் எடையாய் அரைத்து வில்லை தட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து உட்கொள்ளத் தீரும்.

7. அத்திப்பட்டை, ஆயில்பட்டை வறட்பூலா வேர்ப்பட்டை, நாவற்பட்டை, நெல்லிப்பட்டை ஆகியவற்றை ஒரே சமமாக இடித்துப் பிழிந்தசாறு கால்படி, சாதிக்காய், பலாசு, கிராம்பு, திப்பிலி வகைக்கு 1 வராகன் எடை, ஏலம் அரை வராகன் எடை, சுக்கு, மிளகு வகைக்குக் கால் பலம் விட்டு வேகவைத்து இளகமாய் வைத்துக்கொண்டு நாழிகை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ளத் தீரும். (நாழிகை என்பது ஒரு வேளை என்ற பொருளில் வந்துள்ளதென்றறிக)

8. பாவட்டைஇலை 9 பலம், வெள்ளைப்பூண்டு, சுக்கு வகைக்கு 3 பலம், மிளகு கால் பலம், வட்டத்திருப்பி, வெட்பாலை அரிசி, திப்பலி, தேசாவரம், அத்தி, கண்டந் திப்பிலி, கொடிவேலிவேர்ப்பட்டை, பெருங்காயம், கிராம்பு, சாதிக்காய், இந்துப்பு, வெடியுப்பு, பொட்டிலுப்பு, நவாச்சாரம் வகைக்கு அரைப்பலம், ஓமம் அரைக்கால் பலம் பாவட்டை இலையை நல்லெண்ணெயில் அரைத்தும் மற்ற சரக்குகளை மோர்விட்டு அரைத்தும் ஒன்றாய்க் கலந்து

கொதிக்க வைத்து அதில் நல்லெண்ணெய் அரைக்கால்படி கூடவிட்டு இளகம் செய்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவரத்தீரும்.

9. புளியாரைச்சாறு குறுணி, பசுவின்நெய் 2 படி, தயிர் ஒரு நாழி, அதிவிடையம், திரிகடுகு, இந்துப்பு, பெருங்காயம், நவாச்சாரம், சாதிக்காய், வெட்பாலையரிசி, திப்பிலி மூலம், கிராம்பு, மாதுளம்பூ, மரமஞ்சள், இலவங்கம் வகைக்கு 6 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள நோய் குணமாகும்.

மூலக்கிராணி, அதிசாரத்திற்கு மருந்து

பூனைக்காலிவித்து, ஈயபற்பம், அதிவிடையம், அத்திப்பூ, கழற்காய்ப்பருப்பு, சாதிக்காய், ஊமத்தம்வித்து, சுக்கு, நாவி, கஞ்சாவித்து, மாங்கொட்டைப்பருப்பு, அபின், வில்வப்பழச்சதை, கொன்றைவேர்ப்பட்டை இவைகளைச் சீந்திற்சாற்றாலாட்டிச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து தேனில் உட்கொள்ள நோய் தீரும் (அத்திப்பூ என்பது அதன் பிஞ்சு என்பதை அறிக)

வாயுக் கிராணியின் இயல்பு

உணவு செரியாது; வயிறுநோகும்; பொருமும்; இரைந்து கழியும், புளியேப்பம்விடும்; இருமும்; வாயுபரியும்; நாட்சென்றால் புறந்தாள் அதைத்து வற்றும்; அன்னஞ் செல்லாது; உடல் வறண்டு வற்றி வரும்; வாய்வறளும்; தாகம் அதிகமாகும்; கனவு காணும், வெருவும்.

மருத்துவம்:

1. மேல்தோல் சீவி உலர்த்திய இஞ்சி 10 பலம், ஏலம், இலவங்கம், அதிமதுரம், திரிகடுகு, திரிசாதம், இந்துப்பு, ஓமம், அதிவிடையம் வகைக்கு 4 கழஞ்சு, இவைகளைப் பசுவின் நெய்விட்டுப் பொன்னிறமாய் வெதுப்பித் தூள் செய்து அதில்பாதி வெள்ளைச்சர்க்கரை கூட்டித் திரிகடுகு அளவு சாப்பிடத் தீரும். கரப்பான் பதார்த்தம் தள்ளவும்.

2. சேங்கொட்டை, திரிபலை, கொடிவேலிவேர் வகைக்கு 2 கழஞ்சு, இந்துப்பு 10 கழஞ்சு இவைகளை இடித்து ஒரு சட்டியில் போட்டு மூடி, சீலைமண் செய்து குக்குடப் புடம் போட்டுப் பொடித்து ஒரு காசு எடை பசுவின் வெண்ணெயில் குழைத்து உட்கொள்ள நீங்கும். பத்தியமா யிருக்கவும்.

3. அதிவிடையம், பெருங்காயம், சிறுநாகப்பூ, திப்பிலி, சாதிபத்திரி வகைக்கு 3 கழஞ்சு, ஆனைத்திப்பிலி 4 கழஞ்சு, சுக்கு, கடுகு, வெள்ளுள்ளி வகைக்கு 1 கழஞ்சு, நாய்க்கடுகு, திப்பிலிமூலம் வகைக்கு 10 கழஞ்சு, அபின் 12 கழஞ்சு இவைகளை வெதுப்பித் தூள் செய்து வெள்ளைச் சர்க்கரை 5 பலம் கூட்டிக்கலந்து கொண்டு காலை, மாலை திரிகடி அளவு முத்தக்காசு, சுக்கு சேர்த்துச் செய்த குடிநீரிலாவது, இஞ்சிச் சாற்றிலாவது உட்கொள்ள ஆறுவகைக் கிராணி நோயும் தீரும்.

4. சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு, கத்தூரிமஞ்சள், சீரகம், ஓமம், சத்திச்சாரணைவேர், குப்பைமேனிவேர் வகைக்கு ஒரு பலம் பிரண்டைச்சாற்றாலாட்டி நல்லெண்ணெய் விட்டு இளகம்செய்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிடத் தீரும்.

5. சுக்கு 1 பலம், திப்பிலி கால் பலம், மிளகு அரைக்கால் பலம், ஓமம் 1 பலம், பூண்டு 1 பலம் ஆகிய இவை களை ஒன்றாய் வெதுப்பி இடித்து அவை கண்ட எடைக்குப்பாதி ஆடுதின்னாப்பாளைச் சூரணங்கூட்டி கழற்சிக்காய் அளவு இரண்டு நேரமும் சாப்பிட்டு வர நோய் குணமாகும்.

6. கொடிவேலி, திரிகடுகு, ஓமம், சிறுதேக்கு, ஆனைத் திப்பிலி, கோட்டம், இருவகை உப்பு வகைக்கு 1 பலம், பெருங்காயம், வசம்புசுட்டகரி வகைக்குக் கால் பலம், கடுகு அரைப்பலம், இவற்றை இள வறுப்பாய் வறுத்து அதற்குச் சமமாய் வெள்ளைச் சர்க்கரைக் கூட்டித் திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ளத் தீரும்.

7. சட்டியை நன்றாய்க் காய வைத்து ஒரு படி உப்பிட்டு கறுக வறுத்துத் கொட்டிப்போட்டு அதில் ஒரு பிரண்டைக் கொழுந்தை அரிந்து போட்டுக் கறுக வறுத்து ஒரு படி எருமை மோர் விட்டு வற்ற வைத்து இறுத்து அதிவிடையம், உள்ளி, திரிகடுகு, ஓமம், வசம்பு இவைகளை வகைக்கு 1 வராகன் எடை வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கொடுக்க நீங்கும்.

8. ஓமத்தைக் கறுக வறுத்துத் தேய்த்து உமி போக்கிப் பொடித்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நீங்கும்.

வாயுக்கிராணி, சூட்டுக் கழிச்சலுக்கு மருந்து

நூறுவருடம் சென்ற வேப்பம்பட்டை 40 வராகன் எடை, மிளகு 20 வராகன் எடை இவற்றை இடித்துத் தூள்செய்து, சர்க்கரை 30 வராகன் எடை இவைகளை ஒன்றாய்க் கலந்து வேளை ஒன்றுக்கு 2 வராகன் எடைவீதம் 7 நாள் உட்கொள்ள நோய் நீங்கும்.

சங்கிராணியின் இயல்பு

வயிறு ஊதும்; மேலும், சீதம் போலும், நெய்போலும் வெண்ணீர் (விந்து)போலும், புலால் கழுவின தண்ணீர்போலும் பலவிதமாகக் கழியும்; அபானம் கடுக்கும்.

மருத்துவம்:

1. அத்திப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, மல்லி, சீரகம், முத்தக்காசு, வில்வவேர், பேராமுட்டிவேர் இவைகளை ஓர் எடையாய் இடித்துக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும். வாதங்கதித் திருந்தால் சுக்கும், திப்பிலியும் மேற்படிக் குடிநீருடன் கூட்டிக் கொள்ள வேண்டும்.

2. திரிகடுகு, திரிபலை, வாய்விளங்கம், கடுகுரோகணி, அதி விடையம், ஓமம், குரோசாணிஓமம், நற்சீரகம், இந்துப்பு, ஏலம், செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், கிராம்பு, காசுக் கட்டி, வெள்ளுள்ளி, சாரணைவேர்ப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, (வசுவாசி) அதிமதுரம் வகைக்கு 6 வராகன்

எடை இவைகளை இளவறுப்பாக்கிச் சூரணித்து திரிகடி அளவு தேனில் 7 நாள் உட்கொள்ள, தீராக்கழிச்சலும் தீரும்.

இரத்தக்கிராணியின் இயல்பு

அடிவயிறு வலிக்கும், நெஞ்செரியும் ஏப்பம் பரியும், தாகிக்கும், சலமாயும், இரத்தமாயும், தண்ணீராயும் கழியும், உண்டி (அசனம்) சமியாது, அபானம் கடுக்கும், உடல் நடுக்கும் கால், கை நோவும்.

மருத்துவம்:- பெருமரத்துப்பட்டை, முத்தக்காசு வகைக்குக் கால்பலம் வீதம் இடித்து 2 படி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும். இதுபோல் ஆறுபொழுது கொடுக்க நோய் குணமாகும்.

சாதிக்காய், சாதிலிங்கம், சீரகம், சுக்கு, கிராம்பு, இலவம், [illegible]ர், அபின், இந்துப்பு, கழற்சிப்பருப்பு, ஊமத்தன்வித்து இ[illegible]வகளை ஓர் எடையாய் வெதுப்பி எலுமிச்சம்பழச் சாற்றாலாட்டி மாதுளங்காய்க்குள் வைத்து அவிபுடம் போட்டுத் தோலுடன் தயிர் வார்த்து அரைத்துக் குன்றிபோல் உருண்டை செய்து வாழைப்பூச்சாற்றில் இடத்தீரும்.

கிராணியின் பேரில் காணும் பாண்டு, விட பாகவீக்கத்திற்கு மருந்து

அரப்பொடி, இரும்புக் கிட்டம், காந்தம், கடுக்காய் மேல்தோல், நெல்லிமுள்ளி, கருஞ்சீரகம், நற்சீரகம், பூண்டு, பெருங்காயம், திரிகடுகு வகைக்கு 3 வராகன் எடை இவைகளை வறுத்துச் சூரணித்து திரிகடி அளவு காலை, மாலை 10 நாட்கள் சாப்பிடத்தீரும்.

செரியாமைக் கிராணிக்கு மருந்து

1. வேப்பன்ஈர்க்கு, ஒதி ஈர்க்கு, சுக்கு, சீரகம், ஓமம் இவைகள் வகைக்கு அரைப்பலம் வீதம் வெதுப்பி ஒரு படி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும். இதுபோல் ஆறுபொழுது கொடுக்கத் தீரும்.

2. திரிகடுகு, கருஞ்சீரகம், நற்சீரகம், நவாச்சாரம், அதி விடையம் இவைகளைச் சம எடையாய் வெதுப்பிக் கல்வத்திலிட்டுப் பொடித்து நல்லெண்ணெய் விட்டு இளகம் போல் அரைத்துக்கொண்டு நாழிகை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வர நோய் தீரும்.

3. வெள்ளறுகும், குப்பைமேனியும் (உலர்த்திய சமூலம்) சமமாய் தூள்செய்து திரிகடி அளவு பசுவின் நெய்யில் உட்கொள்ளத் தீரும்.

4. இந்துப்பு, காயம், வளையலுப்பு, வெள்ளுள்ளி, சுக்கு, திப்பிலி, ஓமம், மிளகு, சவுட்டுப்பு, சித்திரமூலம் ஆகிய இவைகளை பிரமிச்சாற்றிலாவது, எலுமிச்சம்பழச் சாற்றிலாவது அரைத்துக்கொண்டு ஓர் உடும்பைத் தலை, கால், குடல் நீக்கி அதன் வயிற்றுக்குள் வைத்து தைத்து மடக்கிக் கட்டிப் புட்டுபோல் அவித்து காயவைத்து இடித்துத் தூள் செய்து விதிப்படி உட்கொள்ளத்தீரும்.

5. கோவைத்தண்டை இடித்து மேல்தோல் நீக்கி, நீர் சுண்ட வறுத்துத் தூள்செய்து, ஓமத்தை வறுத்துச் சூரணித்து இரு வகையையும் ஓர் எடையாய் கலந்து நல்லெண்ணெயில் கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ளத் தீரும். பத்தியம்: பால் சோறு கொடுக்கவும்.

6. ஒரு வராகன் எடை காரீயத்துடன் 4 வராகன் எடை உக்கிரம் (இரசம்) சட்டியில் கூட்டித் தொந்தித்து கல்வத்தி லிட்டுக் காந்தம் 6 வராகன் எடை, கெந்தி 2 வராகன் எடை, வெள்ளைத்துத்தம் 4 வராகன் எடை சேர்த்து 4 சாமம் அரைத்து வைத்துக்கொண்டு பஞ்சமூலக் குடிநீருடனும் மற்ற துணை மருந்துகளுடனும் கொடுக்கத் தீரும்.

7. காந்தம், இலிங்கம், கல்மதம், சாதிக்காய், சாதிபத்திரி, கருவேலம்பிசின், மாதுளம்பிஞ்சு இவைகளை ஓர் எடையாய் அத்திப்பால்விட்டு அரைத்து இறுதியாக உருண்டை செய்து உலர்த்தி வெல்லத்தில் கொடுக்கத் தீரும்.

8. சாதிக்காய், சாத்திரபேதி, கல்மதம், அபின் இவைகளைச் சம எடையாய் அத்திப்பால்விட்டு அரைத்துக் குன்றி போல் உருண்டை செய்து வெந்நீரில் உரைத்துக் கொடுக்கத் தீரும்.

9. நாவற்பட்டை, அரசம்பட்டை, அத்திப்பட்டை, கருங்காலிப் பட்டை, ஒதியம்பட்டை வகைக்கு 10 பலம் இடித்து ஐந்து மரக்கால் தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து அதில் பனைவெல்லம் 10 பலம் தட்டிப்போட்டுப் பாகு செய்து சுக்கு, சீரகம், மிளகு, ஓமம், ஏலம், கோரோசனை, குரோசாணிஓமம், கற்கடகசிங்கி, கிராம்பு, மல்லி, திப்பிலி, சாதிபத்திரி, சாதிக்காய், அதிவிடையம் வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டுக் கிண்டி பசுவின் நெய், தேன்விட்டு இளகம் செய்துகொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத்தீரும்.

சீதம் விழுவது நிற்க மருந்து

அமுக்கராவேரும், இந்துப்பும் சமமாய்ப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்கத் தீரும்.

இரத்தக் கிராணி, நீர்க்கிராணி, அடித்தள்ளல், மூலச்சூடு, வயிறு இரைதல், வாயு, அன்னம் செரியாமை, பொருமல், நச்சுநீர், தொப்புளைச்சுற்றி வலித்தலுக்கும் மருந்து

திரிபலை, முத்தக்காசு, வெள்ளைக்குங்கிலியம், திரிகடுகு, கோட்டம், சீரகம், அதிமதுரம், சாதிக்காய், கிராம்பு, ஏலம், வெட்பாலையரிசி, அபின், தேவதாரம், கூகைநீர், வில்வப்பிஞ்சு, பருத்திவிதைப்பருப்பு அத்திப்பிஞ்சு, நவ்வல்விதைப் பருப்பு, புளியங்கொட்டை, மாதுளம் மேற்றோல், பொன்முசுட்டைவேர், ஆவாரைவித்து, கஞ்சாவித்து, கற்கடகசிங்கி, அதிவிடையம், இலவம்பிசின், விளாம்பிசின், நன்னாரிவேர்ப்பட்டை, நிலப்பனைக்கிழங்கு, கடலிராஞ்சிப்பட்டை, மரமஞ்சள் வகைக்குக் கழஞ்சு வறுத்து இடித்துக்கொண்டு வெள்ளாட்டுப்பால், எருமைத்தயிர் வகைக்கு

1 படி ஒன்றாய்க் கலந்து, கருப்புக்கட்டி 10 பலம் இடித்துப் போட்டுப் பாகுசெய்து மேற்படி பொடியைத் தூவிக்கிண்டி, ;ல்லெண்ணெய் அரைப்படி விட்டு இளகஞ்செய்து, சுண்டைக்காய் அளவு இளகத்தில் அயக்காந்த செந்தூரத்தை வைத்து 4நாள் உட்கொள்ள நோய்தீரும்.

மேற்படி கருப்புக்கட்டியைப்பாகு செய்யும்போது ஒரு படி கஞ்சாசாறு விட்டுக்கொள்ளலாம் என்றும் சொல்லப் பட்டிருக்கின்றது. அவசியமானால் விட்டுக்கொள்ளலாம்.

சகலக்கிராணி, கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, உளைவு, செரியாமை, பித்தம், நீர்ச்சுருக்கு, பிரமேகத்திற்கு மருந்து

செங்கழுநீர், கொட்டி, நெய்தல், அல்லி, தாமரை, நிலப்பனை, அமுக்கறா, நீர்வள்ளி, நன்னாரி, ஓரிலைத்தாமரை, வில்வம், மாதுளை, வாழை, கருணை, வெருகு, மலைதாங்கி, கற்றாழை, சங்கு, சித்திரமூலம், இவைகளின் சமூலம் முத்தக்காசு, அதிவிடையம், தக்கோலம், அதிமதுரம், கோட்டம், ஆவாரைப் பஞ்சாங்கம் வகைக்கு ஒரு பலமாக இவைகளை உலர்த்தி இடித்துத் தூள்செய்து, இரண்டு படி பசுவின் பாலில் கருப்புக்கட்டி 10 பலம் போட்டுப் பாகுசெய்து இதில் மேற்படி தூள்களைத் தூவிக்கிண்டி, நெய் 1 படி, தேன் அரைப்படி கூடவிட்டு இளகம் செய்து, வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வர நோய் தீரும்.

கிராணிக்கழிச்சல், அபானக்கடுப்பு எரிப்பு, இளைப்பு, ஈளை, தாகம், பிரமியம், எலும்புருக்கி, உள்ளுருக்கி, இவைகளுக்கு மருந்து.

கூவிளை, மாதுளை, அத்தி, ஆத்தி, மருது, ஆல், அரசு, இத்தி, பருத்தி, ஆவாரை, இலவு, இலந்தை, கொன்றை, முருங்கை, மா, கோவை, வேம்பு, முசுட்டை, கதலி, அழிஞ் சில், தகரை, அனிச்சை, ஆதளை, ஊமத்தை இவைகளின் வித்து ஒரு கழஞ்சு, சீரகம், அதிமதுரம் வகைக்கு 1 பலம் இவைகளை உலர்த்தி இடித்துத் தூள்செய்து இரண்டு படி

பசுவின் பாலில், சர்க்கரை, கற்கண்டு வகைக்கு அரைப்படி தேன் அரைப்படி விட்டு இளகம் செய்து வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர நோய் தீரும். தாது விருத்தி உண்டாகும்.

வெளுமைக்கழிச்சலுக்கு மருந்து

வெண்குன்றிப் பருப்பு, புளியன்விதைத் தோல் வகைக்கு 1 வராகன் எடை வீதம் மை போல் இடித்து எருமை வெண்ணெயில் குழைத்து 6வேளை உட்கொள்ள நோய் தீரும்.

நீர்க்கழிச்சலுக்கு மருந்து

சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, சாதிலிங்கம், ஊசிக்காந்தம், அபின் வகைக்கு 2 கழஞ்சு எடுத்து மூன்று நாட்கள் ஆட்டி செப்பில் அடைத்துக்கொண்டு, தக்க அனுபானங்களில் ஒரு நாழிகைக்கு ஒரு வராகன் எடை வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

சகல கழிச்சலுக்கும் மருந்து

மருத்துவம்:

1. ஆவாரம்பூ, ஆவாரை, அல்லி, ஆவாரையரிசி, ஆவாரைக் கொழுந்து, ஆவாரைவேர்ப்பட்டை வகைக்கு அரைப்பலம் இவைகளை இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு ஊறவைத்துக் காலையில் அரைக்கால் படியாய் வற்றவைத்து அதில் கல்நார், கல்மதம், கிராம்பு, சாதிபத்திரி வகைக்கு 1 கழஞ்சு அரைத்துக் கலக்கிக் கொடுக்க நோய் தீரும்.
2. அத்திப்பிஞ்சு, அதிமதுரம், ஓமம், இந்துப்பு, ஈருள்ளி, மிளகு, சுக்கு, சீரகம் ஓர் அளவாய்ப் பசுவின் நெய்யில் வேக, வைத்துப் பதத்தில் வடித்து உட்கொள்ளத்தீரும்.
3. விளாம்பிசின், இலவம்பிசின், கருவேலம்பிசின், தேற்றான் விதை, நெல்லிமுள்ளி, காசுக்கட்டி, புளியவிதைத்தோல், பாகல் விதை, அமிர்தசர்க்கரை, அல்லிவிதை வகைக்கு ஒரு கழஞ்சு, சந்தனம், 9 வராகன் எடை, ஆவாரை

விதை, சர்க்கரை வகைக்கு 12 வராகன் எடை இவைகளை இடித்துத் தாழைவிழுதுச்சாற்றிலும், வாழைப்பூச் சாற்றிலும் அரைத்து இலந்தக்கொட்டை அளவு உருண்டை செய்து தேனிலாவது எருமை மோரிலாவது உட்கொள்ள உட்காய்ச்சல், தாகம், மேகசலக்கழிச்சல் முதலிய நோய்கள் தீரும்.

வயிறு இரைந்து கழிதலுக்கு மருந்து

திரிகடி வெந்தயத்தை, நல்லெண்ணெய் விட்டு வறுத்துச் சிவந்து வருகிற பதத்தில் ஆவாரைஇலை ஒரு பிடி கூடப்போட்டு வறுத்துக் கருகி வருகிற பதத்தில் எருமை மோர் ஒரு படி விட்டுக் காய்ச்சி இறுத்து உட்கொள்ள நோய் தீரும்.

சலக்கழிச்சலுக்கு மருந்து

ஒருதலைவெள்ளைப்பூண்டும், கஞ்சாவிதையும், ஓர் அளவாய் வறுத்து நல்லெண்ணெயும், கொஞ்சம் தென்னங் கருப்புக்கட்டியும் சேர்த்து இளகம் போல் அரைத்து எலுமிச்சங் காய் அளவு மூன்று நாட்கள் காலையில் உட்கொள்ள நோய் தீரும்.

கழிச்சல் சுரத்திற்கு அபின் மாத்திரை

அபின் 6 வராகன் எடை, சுக்கு 7 வராகன் எடை, திப்பிலி 8 வராகன் எடை, சீரகம் 9 வராகன் எடை, மிளகு 1 வராகன் எடை இவைகளை விஷ்ணுகரந்தைக் குடிநீரில் நான்கு சாமம் அரைத்துக் குன்றி போல் உருண்டை செய்து கொண்டு, வில்வம், விஷ்ணுகரந்தை, சீரகம், வெற்றிலைக்காம்பு இவைகளை ஓர் எடையாய்க் குடிநீர் செய்து அதில் ஒரு குளிகை வீதம் ஆறுவேளை கொடுக்கக் கழிச்சல், தாபசுரம் நீங்கும். புளி தள்ளவும். இவை, சிறியோருக்கும், பெரியோருக்கும் உபயோகப்படும்.

கழிச்சலுக்கு மருந்து

விளாம்பிசினைப் பொடித்து எருமைத்தயிரில் மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

மந்தம், அதிசாரம், கிராணிக்கு மருந்து

இந்துப்பு, ஓமம், கிராம்பு, சுண்டைவற்றல், சாதிக்காய், சாதிபத்திரி, அபின், காந்தம், இலிங்கம், நற்சீரகம், ஏலம், திரிகடுகு, இலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், மாங்கொட்டைப்பருப்பு, அதிவிடயம் வகைக்கு ஒரு வராகன் எடை, கோரக்கர்மூலி 18 வராகன் எடை இவைகளில் காந்தம், இலிங்கம், கஞ்சா இம்மூன்றையும் தூய்மைசெய்து மற்ற மருந்துகளை வெதுப்பிப் பொடித்துச் சர்க்கரை 3பலம் கூட்டித் தேன் விட்டுப் பிசைந்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வெந்நீர் குடிக்கத் தீரும்.

சகல கழிச்சலுக்கும் காந்தச்செந்தூரம்

காந்தம் 3 பலம், ஆவாரைவேர்ப் பட்டை 4 பலம், இவைகளைப் பொடித்துக் கற்றாழை மடல் தண்ணீர் விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்துச் சட்டியில் இட்டுச் சீலைமண் செய்து நான்கு சாமம் எரித்து ஆற்றியெடுக்கச் செந்தூரமாகும் அதில் ஒரு பண எடை வீதம் தக்க அனுபானங்களில் கொடுக்கத் தீரும். பத்தியம்: எருமைப்பால், மோர் கூட்டிக் கொள்ளலாம்.

வயிற்றுக்கடுப்பின் இயல்பு

சீதம் மாத்திரம் முந்தி கழிந்து இடுப்பும், வயிறும் உளையும், மலம் வராது; அன்னஞ் செல்லாது; உடல் மெலிந்து வரும்.

மருத்துவம்:

1. விடத்தலை, வெட்பூலா, நீர்ப்பூலா இவைகளின் வேர்த் தோல், ஆலின் விழுதின் கொழுந்து வகைக்கு ஒரு பிடி வீதம் ஒன்றாய்ச் சிதைத்துக் குடிநீர் செய்து அல்லது இவைகளை அரைத்து எருமை மோரிலாவது தயிரிலாவது கலக்கிக் கொடுக்கவும்.
2. முத்தக்காசை இடித்து மாவாக்கிப் பிட்டவித்துப் பிழிந்த தண்ணீர் ஆழாக்கில், ஒரு வராகன் எடை ஓமத்தை வறுத்துப் பொடித்துப் போட்டுக் கொடுக்கத்தீரும்.

3. நற்சிரகம் 7 பலம், இளவறுப்பாகச் செய்து பொடித்து வடிகட்டி சர்க்கரை 1 பலம் கூட்டித் திரிகடி அளவு ஏரண்டத்தெண்ணெயிலாவது பசுவின் நெய்யிலாவது கலந்து உட்கொள்ளத் தீரும்.

4. இளநீரில் எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து கொடுத்தாலும், எலுமிச்சம் பழச்சாற்றில் சர்க்கரை கலந்து கொடுத்தாலும், வெந்தயமும், நெல்லிப்பருப்பும் வறுத்துப் பொடித்துத் திரிகடி அளவு புளித்த பழந்தயிரிலாவது, நல்லெண்ணெயிலாவது கொடுத்தாலும்; நெல்லிப் பருப்பை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துச் சர்க்கரை கூட்டிக் கொடுத்தாலும் தீரும்.

5. வில்வப்பிஞ்சு, திப்பிலி, சாதிக்காய், ஓமம், சுக்கு இவைகளை ஓர் எடையாய் வறுத்துப் பொடித்துச் சில்லுக் கருப்புக் கட்டியும், வெண்ணெயும் கூட்டி மெழுகுபோல் அரைத்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ளத் தீரும்.

6. மாதுளங்காயை வட்டமாக நறுக்கி விதைகளை எடுத்துப் போட்டு அதற்குள் வெந்தயம், ஓமம், சீரகம் வகைக்கு ஒரு வராகன் எடை வைத்து முடித்து சாணிக்குள் பொதித்து சாணி வெந்தபின் எடுத்துக் கவசம் நீக்கி ஒரு வராகன் எடை சிந்தில் சர்க்கரை கூட்டி அரைத்துத் தயிரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

7. திரிகடுகு, சாதிக்காய், சாதிபத்திரி, அதிவிடையம், அபின், களிப்பாக்கு, மாம்பருப்பு, முள்ளி, இலவம்பிசின் மேல் தோல், சீனி, சுக்கு, நெல்லி வற்றல், காட்டாத்திப்பூ, கருவேப்பிலை, மாதுளம்பூ, விளாம்பிசின், காசுக்கட்டி, புளிய விதையின் மேல்தோல், தான்றிக்காய்த்தோல் வகைக்கு 1 வராகன் எடை, நற்சிரகம் 16 வராகன் எடை இவைகளை வெதுப்பித் தூள் செய்து திரிகடி அளவு தேனிலாவது, தயிரிலாவது உட்கொள்ள நீங்கும்.

8. கற்கடகசிங்கி 1 வராகன் எடை, ஈருள்ளி 1 வராகன் எடை, நற்சிரகம் அரை வராகன் எடை இவைகளை வெதுப்பி அரைத்து எருமைத்தயிரில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

9. துத்தம், வரப்பூலா, முத்தக்காசு, சுக்கு, ஓமம், அதிவிடையம், பொன்முசுட்டை வேர், நற்சீரகம், குங்கிலியம் இவைகளை ஓர் அளவாய் அரைத்துப் பசுவின் நெய்யில் வேகவைத்துச் சாப்பிட நீங்கும்.

10. ஒரு கழஞ்சு மிளகைப் பசுவின் மோரில் 3 நாள்கள் ஊற வைத்து எடுத்து அதனுள் கீழ்க்காய்நெல்லி, வரப்பூலாக் கொழுந்து இவைகளை அரைத்து ஒரு பாக்களவு, மேற்படி மோரில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

11. துத்திவேரை ஓர் எலுமிச்சங்காய் அளவு அரைத்து எருமைத் தயிரில் கலந்து கொடுக்க நீங்கும்.

12. ஓர் எலுமிச்சம்பழத்தை எருமைத் தயிரில் பிழிந்து கொடுக்க நீங்கும்.

13. வெள்ளைக் குங்கிலியம் ஒரு வராகன் எடை பொடித்து மோரில்போட்டு மத்தால் கடைந்து வடிகட்டி கால் ஆழாக்குத் தேங்காய்ப்பாலில் கலந்து கொடுக்கத்திரும்.

14. வெள்ளைக்குங்கிலியம், மாதுளம்பூ, ஓமம், சாதிக்காய், நெல்லிமுள்ளி, திரிகடுகு ஆகியவை வகைக்கு 1 வராகன் எடை வெதுப்பிப் பொடித்துத் துணியில் வடிகட்டி சர்க்கரையும் கலந்து எருமைத் தயிரில் கொடுக்க நீங்கும்.

15. வெண்கிளுவை, அத்தி, நாவல் இவைகளின் பட்டையைச் சமமாய் இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தசாறு ஆழாக்கு, கொட்டைப்பாக்கு அளவு வெண்ணெயில் கலந்து கொடுக்கத் தீரும்.

16. சாதிக்காய், காசுக்கட்டி, வசுவாசி, ஓமம், இலவம்பிசின், இலவங்கம், அதிவிடையம், குங்கிலியம் வகைக்கு 1 கழஞ்சு அபின் 4 கழஞ்சு, பருத்தியிலைச் சாற்றாலரைத்துத் தேற்றான் விதை அளவு பருத்திக்காய் இவைகளை அரைத்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு வெண்ணெயில் குழைத்து உட்கொள்ள நோய் தீரும்.

17. வெந்தயம், பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, வகைக்கு 1 வராகன் எடை, முருங்கையீர்க்கு 10 வராகன் எடை

இவைகளைச் சிவக்க வறுத்து 1 படி தண்ணீர்விட்டு ஒரு சிரங்கை அளவாய் வற்றவைத்துக் கொடுக்க வாயு கழிச்சல் நீங்கும்.

18. காசுக்கட்டி, வசம்பு, வெள்ளுள்ளி, பெருமரத்துப்பட்டை, இவைகளை அரைத்து நல்லெண்ணெயில் பொரித்துக் கொடுக்க நீங்கும்.

19. சாதிக்காய், அபின், நீர்ப்பூலாவேர்பட்டை வகைக்கு ஒரு வராகன் எடை பொடித்து, கோழிமுட்டைக் கருவில் கலந்து அரைத்து வடை தட்டி ஆறு வேளை கொடுக்க நீங்கும்.

20. ஓமம், ஆழாக்கு (1/8 படி), நற்சிரகம் அரை ஆழாக்கு (1/16 படி), சுக்கு, மஞ்சள், அபின், சாதிக்காய் வகைக்கு 1 வராகன் எடை, கஞ்சா 2 வராகன் எடை, வறுத்துப் பொடித்துத் திரிகடி அளவு இளவெந்நீரில் கொடுக்க நீங்கும்.

21. வெட்பூலா, மருது, விடத்தலை, நீர்ப்பூலா இவைகளின் வேர்ப்பட்டை, அதிவிடையம், நெல்லிமுள்ளி, கூவிளம் பிஞ்சு, இவைகளை ஓர் அளவாய் உலர்த்திப் பொடித்து, பசுவின் தயிரில் திரிகடி அளவு கொடுக்க நீங்கும்.

22. கெந்தகம் 1 வராகன் எடை, நான்கு கடுக்காயை விதை நீக்கிப் பொடித்துக் கோழிமுட்டை வெள்ளைக்கருவில் போட்டுப் பொரித்துக் கொடுக்க நீங்கும்.

23. எலுமிச்சங்காய் அளவு நாவற்கொழுந்தை அரைத்து எருமைத் தயிரில் கலக்கி 3 நாள்கள் கொடுக்கத் தீரும். வெள்ளாட்டுப் பாலில் எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து 3 நாள்கள் அதிகாலையில் கொடுக்கத் தீரும்.

24. கோழிமுட்டையின் வெள்ளைக்கருவில் கடுக்காய்ப் பூவைப் பொடித்துப் போட்டுக் கொஞ்சம் நல்லெண் ணெய் விட்டுப் பொரித்துக் கொடுக்க நீங்கும்.

25. முற்றின தேங்காய்ப் பூவில் சர்க்கரைக்கூட்டி உட்கொள்ள நீங்கும்.

26. அனிச்சை, துத்தி, மலைதாங்கி, வரப்பூலா, இவைகளின் வேர், முத்தக்காசு, சுக்கு, அதிவிடையம், சீரகம், வெள்ளைக்குங்கிலியம், ஓமம், இந்துப்பு வகைக்கு 1 கழஞ்சு இவைகளைப் பசுவின் பாலில் வேகவைத்து உட்கொள்ள நீங்கும்.

27. ஆழாக்கு எருமை மோரில் ஒரு எலுமிச்சங்காய் அளவு இலவங்கப்பட்டையை அரைத்துக் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

28. ஆழாக்கு எருமைப் பாலைக் கறந்தவுடன் அதில் ஒரு துளி புளியிலைச்சாறுபிழிந்து கொடுக்கவும். இவ்விதம் 6 நாட்கள் கொடுக்க நீங்கும்.

29, நாவி, சூதம், கெந்தகம், சித்திரமூலம், சாதிக்காய், அதிவிடையம், தான்றிக்காய், கிராம்பு, பெருமரத்துப்பட்டை, முத்தக்காசு, பொரித்தவெங்காரம், காயம், பற்பாடகம், இலவம்பிசின், சுக்கு, நெல்லிவற்றல், சாதிபத்திரி, அபின், திப்பிலி, கஞ்சா இவற்றைச் சமமாய்க் கூட்டி கஞ்சாச் சாற்றால் ஆட்டிக் குன்றிமணி அளவு உண்டை செய்து உட்கொள்ள தலைவலி, வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

வயிற்றுக்கடுப்பு, மூலமுளை, குன்மம், கைகால் ஊறலுக்கு நாகபற்பம்

ஒரு பலம் நாகத்தைக் குகையில் வைத்து உருக்கி, அதில் கீழ்க்காய் நெல்லி சமூலத்தை உலர்த்திப் பொடித்த தூளை 1 பலம் தூவி வறுக்கப் பற்பமாகும். அந்தப் பற்பத்தெடைக்கு மேற்படி மூலிகையின் தூளைச் சேர்த்துப் பனைமட்டைச் சாற்றால் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்துக் குக்குடப் புடமிடக் கொடிய சுண்ணமாகும். அதை வெண்ணெயிலும் வியாதிக்குத் தக்க துணை மருந்துகளிலும் கொடுக்க மேற்படி நோய்கள் தீரும்.

வயிற்றுக்கடுப்பு, கழிச்சலுக்கு மருந்து

ஓமம், மிளகு வகைக்கு 1 பலம் ஓர் அளவாய் வெதுப்பிப் பொடித்து வெல்லம் 1 பலம் கூட்டி அரைத்துத் திரிகடி அளவு 10 நாள்கள் கொடுக்கத்திரும்.

வயிற்றுக்கடுப்பு, வாயுவுக்கு மருந்து

சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், உப்பு, கறிவேப்பிலை, பெருங்காயம், சுண்டைவற்றல் இவைகளை ஓர் அளவாய் வெதுப்பிப் பொடித்து சுடுசோற்றில் திரிகடி அளவு தூவி நெய் ஊற்றி உண்ண வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

ஆசனக்கடுப்புக்கு மருந்து

1. ஆமை ஓட்டைப் பொடித்துத் தணலில் தூவி அபான வாயில் புகை பிடிக்க கடுப்பு உடனே நீங்கும்,
2. 2 வராகன் எடை சுக்கை மோர்விட்டு மைபோல அரைத்து அரசிலையில் வைத்து மோரில் பதமாய் வேகவைத்து வடிகட்டி தயிரில் குழைத்து உட்கொள்ள நீங்கும்.

சுரத்தில் காணும் கடுப்புக்கு மருந்து

நெற்பொரிமா, பசுவின் வெண்ணெய், கற்கண்டு, நற்சீரகத் தூள் இவைகளை ஓர் எடையாய் எடுத்து ஒன்றாய்ப் பிசைந்து விளாங்காய் அளவு 6 நாழிகை சாப்பிட நீங்கும்.

சகலக் கிராணி, அதிசாரம், வயிற்று இரைச்சல், கழிச்சல், சீதம், இரத்தம் விழுதல், மூலக்கடுப்பு, வயிற்றுக்கடுப்புக்கு மருந்து.

1. சுண்டவற்றல், கறிவேப்பிலை, மாம்பருப்பு, ஓமம், மாதுளம், பழத்தோல், நெல்லிமுள்ளி, வெந்தயம் இவைகளைச் சமமாய் வெதுப்பிப் பொடித்து திரிகடி அளவு தயிரில் உட்கொள்ள நீங்கும்.
2. செவ்வியம், முத்தக்காசு, சுக்கு, திப்பிலிமூலம், மல்லி, வாய்விளங்கம், சீரகம், கருஞ்சீரகம், ஓமம், அரத்தை, பேரரத்தை, மிளகு, வெங்காயம், குரோசாணி ஓமம், மரக்கோலம், இலவங்கப்பட்டை, சன்னலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி வகைக்கு 1 வராகன் எடை, தூதுவேளை, கண்டங்கத்திரி, சிறுவழுதலை, வழுதலை, சித்திரமூலம்,

ஈசுரமூலி, முக்காவேளை, சிறுகாஞ்சொரி, நன்னாரி, சிற்றாமுட்டி, வட்டத்திருப்பி, சிறுகுறிஞ்சா, விலாமிச்சு, வில்வம், மாதுளம் இவைகளின் வேர், வில்வப்பிஞ்சு, மாதுளம்பிஞ்சு, கறிவேப்பீர்க்கு, நெற்பொரி வகைக்குக் கால்பலம் இவை எல்லாம் இடித்து 4 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வேளை ஒன்றுக்கு ஒரு ஆழாக்கு உட்கொள்ள நோய் தீரும்.

3. வெந்தயம், வால்மிளகு, கருஞ்சீரகம், அகில், சாதிபத்திரி, ஓமம், சாதிக்காய், கிராம்பு, இலவங்கப்பத்திரி, திரிகடுகு, திரிபலை, மாதுளம்பழத்தோல், அதிமதுரம், குரோசாணி ஓமம், அதிவிடையம், சிறுநாகப்பூ, வாய்விளங்கம், கோட்டம், சடாமாஞ்சில், கடுக்காய்ப்பிஞ்சு, சீரகம், மல்லி, தாளிசபத்திரி, முத்தக்காசு, சன்னலவங்கப்பட்டை, காட்டாத்திப்பூ, கற்கடகசிங்கி, கசகசா ஏழுமுறை ஊறப்போட்டுக் கழுவிய கஞ்சா, பெருமரத்துப்பட்டை கூவிளத்தின்பழம், புளியன் விதைத்தோல், மாங்கொட்டைப்பருப்பு வகைக்குக் கால் பலம், பெருங்காயம் 1 வராகன் எடை இவைகளை இளவறுப்புச் செய்து (தூள் செய்து) கல்வத்தில் இட்டு ஆல், அரசு, நாவல், அத்தி, நீர்ப்பூலா, ஒதி, ஆவாரை, விடத்தலை, நெல்லி, இலந்தை இவைகளின் இலை வகைக்கு 2 பலம் இடித்து எட்டுப்படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து வடித்து மேற்படி தூளில் சிறுக சிறுக வார்த்து இரண்டு நாட்கள் அரைத்துப் பின் எடுத்து மேற்படி குடி நீரில் கலக்கிக் குழம்பாய்க் காய்ச்சி மைபோல் ஆட்டி நாவல் இலையால் ஏழு தொன்னை தைத்து மூடி ஆவியில் வைத்து மூடி எரித்து இலை அவிந்த பதத்தில் மருந்தை எடுத்து அரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து கொண்டு அந்தந்த வியாதிக்குத் தகுந்தபடி பொன்னாங்காணிச்சாறு, கிராம்பு, ஆவாரம்பட்டைக் குடிநீர், கோரைக்கிழங்குச்சாறு, எருமைத்தயிர், மோர், தேன், பச்சரிசிக்கழுவின நீர் இவைகளில் ஒன்றில் ஓர் உருண்டை கொடுக்க வியாதி நீங்கும்.

4. பெருமரத்துப்பட்டைக் கொழுந்து, மருதம்பட்டை, உசிலம் பட்டை வகைக்கு ஒரு தேங்காய் அளவு இடித்து வெண் சோளக்கழுநீரில் போட்டுப்பிசைந்து வேளை ஒன்றுக்கு அரைப்படி வீதம் கொடுத்து மிளகுநீரும் அன்னமும் உட்கொள்ள நோய்தீரும்.

5. மாதுளம்பிஞ்சு, வில்வப்பிஞ்சு, விளாம்பிஞ்சு, மாம்பருப்பு, இலவம்பிசின், நெருஞ்சிக்காய், அத்திப்பிஞ்சு, பெரு மரத்துப்பட்டை, புளியம்விதைத்தோல், பொன்முசுட்டை வேர், நாவல்பட்டை, நாய்க்கடுகு, சாதிக்காய், சாதிபத்திரி, குரோசாணி, ஓமம், பெருங்காயம் இவைகளை வெய்யிலில் உலர்த்தித் தூள் செய்து எருமை மோரில் ஒரு படி வீதம் உட்கொண்டு வரக் குணமாகும்.

6. அகத்தி, அரசு, அத்தி, ஆவாரை இவைகளின் பிஞ்சு, மாதுளம்வேர், கோவைத்தண்டு, சுரைத்தண்டு, தான்றி, நெல்லிக்கடுக்காய், சாதிக்காய், கிராம்பு, பத்திரி, ஓமம், வெந்தயம், திரிகடுகு, ஏலம், இலவங்கம், சடாமாஞ்சில், குரோசாணி ஓமம், அதிமதுரம், வாய்விளங்கம், சீரகம், மல்லி, நறுக்கு மூலம் வகைக்கு 1 கழஞ்சு இவைகளை இடித்து மூன்றுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து வடிகட்டி அதில் கொட்டைப்பாக்கு அளவு பசுவின் வெண்ணெயைப் போட்டு உருகின பின் கொடுக்கவும் இவ்விதம் மூன்று நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

7. சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கிராம்பு, கோட்டம், அதிமதுரம், அதிவிடையம், இலவங்கப்பட்டை, இலவம் பிசின், விளாம்பிசின், இவைகள் ஒரு நிறையாய் அரைத்து மாதுளங்காய்க்குள் வைத்து வெள்ளைத் துணி சுற்றி அதன்மேல் சாணமப்பி காட்டு எருவில் புடம்போட்டு சாணி வெந்தபருவத்தில் எடுத்து, கவசம் நீக்கி கஞ்சாச் சாற்றால் ஆட்டிச் சிறு சுண்டைக்காய்ப் போல் உருண்டை செய்து வடிதண்ணீரில் கொடுத்தால் கடுப்பு சீதம், இரத்த

மூலம் தீரும். தேனிலிட அதிசாரம் நீங்கும். புளி, மிளகாய் தள்ளவும்.

8. சாதிக்காய், சாதிபத்திரி, பெருங்காயம், சீரகம், அதிவிடையம், கிராம்பு, அபின், கஞ்சா, வெந்தயம், கழற்சிவித்து, குரோசாணி ஓமம் இவைகள் ஒரு நிறையாய், கஞ்சா இலைச்சாற்றால் நான்கு சாமம் அரைத்து இலந்தைவிதை அளவு உருண்டை செய்து தயிரில் மூன்று நாட்கள் கொடுக்க நோய் தீரும்.

9. கிராம்பு, திரிகடுகு, ஓமம், சிற்றரத்தை, பொன்னாவரை வேர், அன்னபேதி, சமுத்திராப்பழம், சாதிக்காய், பெருங்காயம் வகைக்கு 1 வராகன் எடை வெள்ளுள்ளித்தோல் நீக்கி ஒன்றரைப் பலம், வெற்றிலைக்காம்பு 2 வராகன் எடை இவை எல்லாம் வறுத்து மைபோல் அரைத்து வெற்றிலையில் வைத்துக்கட்டி ஒரு சட்டியில் வைத்து எரித்து வெற்றிலை கருகி வருகிற சமயத்தில் எடுத்து அரைத்து மறுபடியும் வெற்றிலையில் வைத்துச் சுருட்டி முன்போல்வெதுப்பி எடுக்கவும். இவ்விதம் 7 முறை வேகவைத்து அரைத்து உருண்டை செய்து வெந்நீரில் உட்கொள்ள நோய் தீரும்.

10. திரிகடுகு, ஓமம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிவிடையம், கிராம்பு, அக்கிராகாரம் வகைக்கு 1 வராகன் எடை, அபின் 4 வராகன் எடை, எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டைசெய்து எருமைத் தயிரில் இட வியாதி நீங்கும்.

11. சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடையம், குரோசாணிஓமம், விளாம்பிசின், மாதுளம்பிஞ்சு, இலவம்பிசின் வகைக்கு 1 கழஞ்சு இவை கண்ட எடைக்கு அபின் கூட்டி கஞ்சா இலைச்சாற்றில் ஒரு சாமமும் ஊமத்திலைச்சாற்றில் ஒரு சாமமும் ஆட்டி, பருத்திவிதை அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எருமைத் தயிரில் வேளை ஒன்றிற்கு ஓர் உருண்டையாக 5 நாள் கொடுக்கவும்.

12. இரதம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடையம், குரோசாணிஓமம், சாதிலிங்கம், ஊமத்தன்விதை, விளாம்பிசின், மாதுளம்பிஞ்சு, வகைக்கு 1 வராகன் எடை, இவை கண்ட எடைக்கு அபின் கூட்டிக் கஞ்சா இலைச் சாற்றிலும், ஊமத்தன் இலைச் சாற்றிலும் வகைக்கு ஒரு சாமமாட்டி, பருத்தி விதை அளவு உருண்டை செய்துகொண்டு தேனிலாவது எருமைத் தயிரிலாவது உட்கொள்ள கிராணி; வயிற்றுக்கடுப்பு நோய் தீரும்.

13. சாதிபத்திரி, கிராம்பு, இலவங்கப்பத்திரி, ஆனைத்திப்பிலி, ஓமம், அதிவிடையம், கோட்டம், கசகசா, சீரகம், கருஞ் சீரகம், வால்மிளகு, குரோசாணி ஓமம், திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், வெந்தயம், கடுக்காய்மொக்கு, அபின், தூய்மை செய்த கஞ்சா, காட்டாத்திமொக்கு, தாமரைக்கிழங்கு, விளாவரிசி, நீர்முள்ளிவித்து, கார்க்கோலரிசி, முத்தக்காசு, தென்னைமொக்கு, மாதுளைவித்து, பூலாவேர்ப்பட்டை, கருவேலவித்து, பெருமரத்தின்வேர்பட்டை, காட்டுக்கருணை, புளியவிதைத் தோல், மாங்கொட்டைப்பருப்பு வகைக்கு 2 பலம் இவைகளை நிழலில் உலர்த்தித் தூள்செய்து ஆல், அரசு, நாவல், அத்தி, முள்ளி, ஓதியம்பட்டை, முடக்கொத்தான், வெட்பூலா இவைகளை ஓர் எடையாய் இடித்து 8 படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அதில் பசுவின் பால் 2 படி, பனைவெல்லம் 10 பலம் கூடச்சேர்த்து பாகுசெய்து இறக்கித் தேன் கால்படி கெந்தகச்செந்தூரம், லோகச்செந்தூரம் வகைக்கு ஒரு பலம் போட்டுக் கிண்டி வைத்துக்கொண்டு கழற்சிக்காய் அளவு காலை, மாலை 1 மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

14. மாதுளம்பழத்தோல், வில்வப்பிஞ்சு, காட்டாத்தி மொக்கு, கடுகு, பொன்முசுட்டைவேர், முத்தக்காசு, புளிய விதைத்தோல், இலவங்கம், இலவம்பிசின், ஓமம், திரிகடுகு, வெட்பாலையரிசி, ஆனைத்திப்பிலி, நாவல்பட்டை, இலவங்கப்பட்டை, மாம்பருப்பு, கழற்பருப்பு, கருங்காலி வைரம், வெள்ளிலோத்திரம், நீர்முள்ளி விதை,

அதிவிடையம், கருஞ்சீரகம், நற்சீரகம், காசுக்கட்டி இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்து நெல்லிக்காய்ச் சாற்றால் ஆட்டி கழற்காய் அளவு உருண்டை செய்து கொண்டு தயிரில் உட்கொள்ளத் தீரும். இவைகட்கெல்லாம் இச்சாபத்தியம்.

(கிராணிநோய்ப்படலம் முற்றுப்பெற்றது.)

இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை நூலகங்களில் விற்பனையாகும் நூல்களின் விலை விவரப்பட்டியல்

ஓலைச்சுவடிப் பதிப்புகள்			
வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
	தமிழ் மருத்துவ நூல் வெளியீட்டு வரிசை		
1.	கைமுறை வைத்தியம்	....	....
2.	அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி		
3.	பிள்ளைப்பிணி மருத்துவம் – பாகம் 1	500	78.25
4.	சித்த மருத்துவ அகராதி – பாகம் 1	....	....
5.	பிள்ளைப்பிணி மருத்துவம் – பாகம் 2	800	250.00
6.	வர்மத் தொகுப்பு	600	150.00
7.	பதார்த்த குண சிந்தாமணி	600	150.00
8.	சரக்கு – சுத்தி செய்முறைகள்	200	60.00
9.	மருந்து செய்முறைகள்	250	90.00
10.	புலிப்பாணி வைத்தியம்	100	30.00
11.	நோயும் மருந்தும்	150	35.00
12.	சித்த மருத்துவ சிந்தாமணி	200	70.00
13.	அரிய சித்த மருத்துவ முறைகள்	250	60.00
14.	மூலிகை விளக்கம்	200	60.00
15.	அகத்தியர் மருத்துவம்	300	75.00
16.	அகத்தியர் வைத்திய சிந்தாமணி	300	80.00
17.	சித்த மருத்துவ அகராதி – பாகம் 2	400	65.00
18.	சித்த மருத்துவ அகராதி – பாகம் 3	250	55.00
19.	அனுபவ வைத்தியம் கைமுறை		அச்சில்
20.	பலசாத்திரம்	--	அச்சில்
21.	கோரக்கர் மருத்துவம்	--	அச்சில்
22.	புலிப்பாணி கற்ப தீட்சை	--	அச்சில்
23.	தேரையர் வைத்திய காவியம்	--	அச்சில்
24.	சித்த வைத்தியம் கைமுறைப் பாடல்கள்	--	அச்சில்
25.	வைத்திய மூலிகை விரிவகராதி	450	50.00
26.	அகத்தியர் இரண நூல்	100	20.00

வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
	பாடநூல்களும் பார்வை நூல்களும்		
27.	குணபாடம் – மூலிகை	1000	300.00
28.	குணபாடம் – தாது சீவ வகுப்பு	850	250.00
29.	நோய்களுக்குச் சித்த பரிகாரம் – பாகம் 1		அச்சில்
30.	நோய்களுக்குச் சித்த பரிகாரம் – பாகம் 2	200	25.00
31.	நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு பாகம் 1	500	190.00
32.	நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு பாகம் 2	800	225.00
33.	சிறப்பு மருத்துவம்	500	220.00
34.	மகளிர் மருத்துவம்	350	160.00
35.	நோயில்லா நெறி	450	67.20
36.	சட்டம் சார்ந்த மருத்துவமும் நஞ்சு நூலும்	800	280.00
37.	சித்த வைத்திய திரட்டு	500	185.00
38.	சூல் மருத்துவம்	500	150.00
38.	அறுவை மருத்தவம்	400	150.00
40.	குழந்தை மருத்துவம் (பால வாகடம்)	300	100.00
41.	உடற்கூறு	1200	400.00
42.	நஞ்சு முறிவு நூல்		அச்சில்
43.	உடல் தத்துவம்	450	75.15
44.	சித்த மருத்துவம் (பொது)		அச்சில்
45.	யூகி வைத்திய சிந்தாமணி	350	150.00
46.	தேரையர் யமக வெண்பா – பாகம் 1	300	80.00
47.	கடுக்காய் வல்லாரையின் தனி மாண்பு	250	29.00
48.	நல்வாழ்விற்கு ஓர் நல மருத்துவம்	50	3.00
49.	பிணி உடல் பொருள் தேர்வக ஆய்வு முறைகள்	50	30.30
50.	தோற்றக் கிராம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும்	500	80.00
51.	சித்த மருத்துவாங்கச் சுருக்கம்	900	245.00
52.	சித்த மருத்துவத்தில் வர்மப் பரிகாரமும் சிகிச்சை முறைகளும்	100	25.00
53.	சித்த மருந்தாக்கியல் விதிகளும் செய்முறைகளும்	200	75.00
54.	ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம் பாகம் 1	--	
55.	ஆவியளிக்கும் அமுதமுறைச் சுருக்கம் பாகம் 2	--	

வ. எண்.	நூல்களின் பெயர்	எடை (கிராமில்)	விலை ரூ. பை.
	SIDDHA MEDICAL BOOKS IN ENGLISH		
1.	A Compendium of siddha Doctrine	550	200.00
2.	Introduction to siddha Medicine	100	11.35
3.	Simple Home Remedies	50	2.70
4.	Hospital of Siddha Pharmacopeia in Indian Medicine	260	39.00
5.	Histroy of Siddha Medicine		in Print
6.	Siddha Science of Longevity and Kalpa Medicine	200	25.00
7.	Siddha Toxicology	250	120.00
8.	Siddha Principles of Social & Preventive Medicine		in Print
9.	Siddha Materia Medica Part II (Mineral & Animal Division)	750	250.00
10.	Siddha Medicine - General - Part - I	400	150.00
11.	Special Medicines in Sidhha	300	120.00
12.	Theraiyar Maha Karisal	200	70.00
13.	Line of Treatment in Sidhha Part - I	550	210.00
14.	Anuboga Vaidya Navaneetham Part - I	200	70.00
15.	Anuboga Vaidya Navaneetham Part - II	250	90.00
16.	Principles of Diagnosis in Siddha Part - I	500	200.00
17.	Pathartha guna Chinthamani	600	200
	SIDDHA MEDICAL DICTIONARY		
18.	T.V. Sambasivam Pillai Dictionary - Vol I		
19.	T.V. Sambasivam Pillai Dictionary - Vol II	800	
20.	T.V. Sambasivam Pillai Dictionary Vol II-Part I	800	300.00
21.	T.V. Sambasivam Pillai Dictionary Vol II - Part II	650	200.00
22.	T.V. Sambasivam Pillai Dictionary Vol III	650	81.00
23.	T.V. Sambasivam Pillai Dictionary Vol IV - Part I	1200	156.00
24.	T.V. Sambasivam Pillai Dictionary Vol IV - Part II	1150	151.50
25.	T.V. Sambasivam Pillai Dictionary Vol V	1800	480.00

ஆயுர்வேத நூல்கள் (தமிழில்)			
1.	சரக சம்ஹிதை பாகம் – 1	---	
2.	சரக சம்ஹிதை பாகம் – 2		
3.	சரக சம்ஹிதை பாகம் – 3	1600	390.00
4.	சுசுருத சம்ஹிதை பாகம் – 1	1500	390.00
5.	சுசுருத சம்ஹிதை பாகம் – 2	1300	272.00
6.	பதார்த்த விஞ்ஞானம்	500	200.00
7.	ஆயுர்வேத மருத்துவ வரலாறு	550	250.00

மேற்குறிப்பிடப்பட்ட நூல்களை நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ பெற்றுக் கொள்ளலாம். பதிவுத் தபாலில் புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகங்களின் விலையோடு தபால் கட்டணத்தையும் சேர்த்து பண விடை (எம்.ஓ) அல்லது டி.டி. மூலம் அனுப்ப வேண்டும். வி.பி.பி.யில் அனுப்ப இயலாது. 2 கிலோவுக்கு மேல் எடையுள்ள புத்தகங்கள் தபாலில் அனுப்ப இயலாது. தபால் கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டவை.

தபால் கட்டணம்

முதல் 500 கிராமிற்குள் - ரூ. 36.00

500 கிராமிற்கு மேல் ஒவ்வொரு 50 கிராமிற்கும் - ரூ. 16.00

பணம் அனுப்ப வேண்டிய முகவரி

1. இயக்குநர்
   இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை
   அரும்பாக்கம், சென்னை - 600 106.
   தொலைபேசி : 044 - 2621 4844 / 2621 6244 / 2628 1563

2. முதல்வர்
   அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி - 627 002.
   தொலைபேசி : 0462 - 2572736 / 2572 737 / 2572 738